# பி.லிட். - முதலாமாண்டு

## *DJL14 :* தாள் 4 - இக்கால இலக்கியம்

## பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| 1 | பாரதியார்<br>பாரதி தாசன்<br>கவிமணி | குயில் பாட்டு<br>குடும்ப விளக்கு<br>ஆசிய ஜோதி |
| 2 | வேதநாயகம் பிள்ளை<br>கல்கி<br>தி.ஜானகிராமன் | பிரதாப முதலியார் சரித்திரம்<br>அலையோசை<br>அம்மா வந்தாள் |
| 3 | புதுமைப்பித்தன் கதைகள்<br>கி.ராஜ நாராயணன் கதைகள் | (13 கதைகள்)<br>கதவு சிறுகதைத் தொகுப்பு |
| 4 | சி.என். அண்ணாதுரை<br>சிற்பி<br>அ.ராமசாமி | வேலைக்காரி<br>ஆதிரை<br>ஒத்திகை |
| 5 | பெருஞ்சித்திரனார்<br>பாவலர் மணி.ஆ.பழநி | பள்ளிப்பறவைகள்<br>கானல் வரியா? கண்ணீர் வரியா? |

# அலகு - 1

# குயில் பாட்டு

# பாரதியார்

பாரதியாரின் கவிதைகள் அறிவுக்கும் உணர்வுக்கும் ஒருங்கே விருந்தளிப்பன. இருபதாம் நூற்றாண்டில் பாரதியை விஞ்சுமளவிற்கு இனி ஒரு கவிஞன் தோன்றுவான் என்று கூறமுடியாதவாறு உயர்ந்து விளங்குகிறார் அவர். அவர்தம் கவிதைகளுள் முப்பெரும் பாடல்கள் என்று அழைக்கப்படுவன கண்ணன் பாட்டு, குயில்பாட்டு, பஞ்சாலிசபதம் ஆகிய மூன்றுமேயாகும். பாரதியின் ஏனைய பாடல்களோடு ஒப்பு நோக்கும் போது இவை மூன்றும் சிறப்புமிக்கவை ஆகும். கண்ணன் பாட்டும் பாஞ்சாலி சபதமு் கண்ணபெருமானோடு தொடர்புடையன. பாரதியின் புதுமை நோக்கு இவற்றின் மூலம் வெளிப்படும். குயில்பாட்டு ஒரு கற்பனைப் படைப்பு. இதனை,

**"மாலை அழுகின் மயக்கத்தால் உள்ளத்தே**
**தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சி"** **(746 - 47)**
**என்ற பாடலடிகள் தெறிவுறுத்தும்.**
**"..................................நனவழியப்**
**பட்டப்பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்**
**நெட்டைக் கனவி னிகழ்ச்சி"** **(22 - 24)**

யாக இது தோன்றியதாகக் கவிஞர் கூறினாலும், அவ்வாறு தோன்றியதாகப் பாடியதும் அவர்தம் கற்பனையே ஆகும். கற்பனையின்றிக் கவிதை தோன்றாது. இவர்தம் கற்பனை பொருள் பொதிந்த கற்பனையாக இருத்தலே இதன் சிறப்பாகும். வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க வாய்ப்பளிப்பதாகவும் இது படைக்கப்பட்டுள்ளது.

பாரதியின் இப்படைப்பு, பல்வேறு நிலைகளில் நாம் பயின்று இன்புறத்தக்க நிலையில் அமைந்துள்ளதை நாம் உணரமுடிகிறது. அதன் கதைப்பெ பாருளை முதலில் அறிந்து கொண்டு, அது கூறும் செய்திகள் குறித்தப் பின்னர் சிந்திப்போம்.

## குயில்பாட்டின் கதைப் பொருள்கள்:

### காலை நேரம்:

காலை நேர இளஞ்சூரியன் கடலிடையே தன் கதிர்களை வீசி, அலைப்பரப்பை ஒளிமயமாக்கிக் கொண்டிருக்கிறது. கடலின் அலைகள்வேதப் பொருளைப் பாடிக் கொண்டு

கரையை வந்து தழுவுகின்றன. இத்தகைய காட்சிகள் நிறைந்த புதுவை நகரத்தின் மேற்கே, புட்கள் நிறைந்த ஒரு மாஞ்சோலை இருந்தது.

**மாஞ்சோலைக் குயில் கனவு:**

அந்தச் சேலைக்குச் சென்ற பாரதியார், இளமை மிக்க குயிலொன்று இன்னிசைத் தீம் பாடல் இசைந்திருக்கும் விந்தைகளைக் கண்டு, அந்தப் பாட்டிலே சிந்தனையைப் பறிகொடுத்தார். இது பாரதியின் கனவிலே நிகிழ்ந்த நிகழ்ச்சியாகும். இதனைப் பாரதியார்.

**"பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்**
**நெட்டைக் கனவின் நிகழ்ச்சியிலே கண்டேயான்"** (23 - 24)

என்று குறிப்பிடுகிறார். அவர்தம் கனவு தொடரக் கவிதை தொடர்கிறது. குயில்பாடும் பாட்டின் இசையினிமையிலே மயக்கங்கொண்டு குயிலைக் காதலிக்கலானார். தன்னுடைய மனித உருவம் நீங்கிக் குயிலுருவம் வரக் கூடாதோ? அதனைக் காதலித்து இன்பமுடன் வாழும் வாய்ப்புக் கிடைக்காதா? என்றெல்லாம் எண்ணி ஏங்கினார். அப்போது குயில் தன் துன்பங்கலந்த பாடலைப் பாடி முடித்தது.

## தனிக்குயிலின் துயர்:

சோலையிலிருந்த ஏனைய பறவைகள் அனைத்தும் பறந்திடவே, இந்தக் குயில் மட்டும் தனித்து வாடியிருக்கக் கண்ட பாரதியார், அதனருகே சென்று துன்பத்திற்கான காரணத்தை வினவ,

**"காதலை வேண்டிக் கரைகின்றேன், இல்லையெனில்**
**காதலை வேண்டித் தவிக்கின்றேன்"** (49 - 50)

என்று குயில் பதில் கூறியது.

## குயில் புலவரிடம் தன் காதலை வெளியிட்டது:

சிறந்த அறிவும், பறவைகளையெல்லாம் மையலுறப்பாடும் திறமும் உடைய உனக்கு, ஒரு காதலனா கிடைக்கவுமில்லை? என்று கவிஞர் கேட்டார். குயில் தன் துன்ப வாழ்வையும் வாழும் பொருட்டு அது துடிப்பதையும் எடுத்துக் கூறியது. அத்துடன், அவர் மீது தான் கொண்டிருந்த காதலையும் குறிப்பாகக் கூறியது.

குயிலின் காதலைப் பெற்ற மகிழ்ச்சியில் கவிஞர் திளைத்திருந்த போது சோலையிலுள்ள ஏனைய பறவைகள் வந்து சேர்ந்தன. அவர்களது பேச்சிற்கு இடையூறு ஏற்பட்டதால்,

**"அன்போடு நீரிங்கே அடுத்தநான் காநாளில்**

**வந்தருளல் வேண்டும், மறவாதீர், மேற்குலத்தீர்!**

**சிந்தை பறிகொண்டு செல்கின்றீர்! வாரீரேல்,**

**ஆவி தரியேன், அறிந்திடுவீர், நான்காம்நாள்**

**பாவியிருந்த நான்குநாள் பத்துயுக மாக்கழிப்பேன்;**

**சென்று வருவீர்"** **(134 - 139)**

என்று மிகக் துயரத்துடன் குயில் விடைகொடுத்து அனுப்பியது.

நான்கு தினங்கள் கழித்து வரும்படி குயில் கூறியனுப்பியபின் வீடு திரும்பிய கவிஞருக்கு அதனைப் பிரிந்திருப்பது இயலாததாயிற்று. ஒரு நாள் கழித்து மறுநாள் காலை வந்தது, அதற்குள் அவர் பட்ட துன்பம் விவரிக்க இயலாதது.

## குரங்கொடு காதல்:

காமனார் விந்தையினால் கவிஞருடைய சித்தம் செயலற்றுப் போயிற்று, கயிற்றின் வழியாகச் செல்லும் பொம்மையைப் போல, அவர் குயிலைக் காணச் சென்றார். குயிலிருக்கும் இடம் தேடி அலைந்து வருகையிலே, குயில் ஒரு ஆண் குரங்கின் மேன்மையினைப் புகழ்ந்து கூறி, அதன் காதலையும் வேண்டி நின்றது. அது கேட்ட குரங்கும் மகிழ்ச்சி தாங்கமாட்டாமல் கூத்தாடி நின்றது.

அந்தக் காட்சியைக் கண்ணுற்ற பாரதியார் மிகுந்த துயரம் கொண்டார். குயிலைக் கொல்லும்பொருட்டு வாளை வீசினார். ஆனால் குயிலும் குரங்கும் தப்பி ஓடிவிட்டன. சீற்றம் தனணியாத பாரதியார், சோலை எங்கும் தேடியும் அந்தக் குயில் அகப்படவில்லை. நாணமும் துயரமும் துன்புறுத்த அவர் வீட்டிற்கு வந்து மூர்ச்சையுற்று வீழ்ந்தார். மூர்ச்சை நிலைமாறிக் கண்விழித்துப் பார்த்தபோது நான்கு புறமும் நண்பர் சூழ்ந்து நின்று கேள்விக்கணைகளால் பாரதியை துறைத்து விட்டனர். நண்பர்களை அனுப்பிவிட்டு உறக்கம் கொண்டார் பாரதியார்.

## எருதினிடம் காதல்:

மறுநாள் காலையில் மீண்டும் சோலையே நோக்கிச் சொந்த உணர்வு இல்லாமல் நடந்து சென்றார். அவர் அப்பொழுது மாமரத்தின் மீதிருந்த குயில் தன் கதையினைச் சொல்ல, ஒரு கிழக்காளை மாடதனை ஆவலுறக் கேட்பதனைக் கண்டார். இறுதியில் குயில் மாட்டிடம், அதன் காதலை வேண்டி நின்றது. அதைக் காணச் சகியாத பாரதியார் குயிலின் மீது தன் வாளை எறிய, அதுவும் மாடும் தப்பி மறைந்தன. சோர்ந்த உள்ளத்துடன் வீடு திரும்பிய பாரதியார், தன்னுடைய நிலைமைக்கான காரணத்தை அறியாமல் கவலையுற்றுப் பின்னர் உறங்கிட்டார்.

குயில் அவரை வரக்கூறிய நான்காம்நாள் வந்தது. குயிலால் தான் அடைந்த துன்பத்தினை எல்லாம் நினைத்து உள்ளம் வருந்தினார். வீட்டின் மாடத்தில் தனிமையில் இருந்து அமைதி தேடிக் கொண்டு இருந்தார்.

## கவிஞரின் சினம்:

வானில் தாழ்வாகக் குயில் பறக்கக் கண்டு அதைப் பின் தொடர்ந்து சென்றார். பழைய சோலைக்கு இருவரும் வந்தனர். குயில் தன் காதல் பாட்டிடை மீண்டும் பாடத் தொடங்கியது. அது கேட்ட கவிஞர் கோபம் கொண்டு,

**"நீசக் குயிலே! நிலையறியாப் பொய்மையே!**
**ஆசைக் குரங்கினையும் அன்பார் எருதினையும்**
**எண்ணிநீ பாடும் இழிந்த புலைப்பாட்டை**
**நண்ணி இங்குக்கேட்க நடத்திவந்தாய் போலுமென்ன!"** (455 - 458)

எனக் கேட்டார்.

## சினத்தால் இறந்து விடுவேன்:

அது கேட்ட குயில், "ஐயனே! நீர் சினங் கொண்டால் நான் இறந்து விடுவேன், குரங்கிடம் மாட்டினிடமும் நான் காதல் கொண்டேன் என்று என்மீது குற்றம் கூறுகின்றீர்: உண்மையில் நான் குற்றம் அற்றவன்" என்று சொல்லித் தன் கதையைக் கூறத் தொடங்கியது.

## குயிலின் முற்பிறப்புக்கதை:

பொதிய மலைக்கு அருகேயுள்ள சோலையில் இருந்தது குயிலிடம், அங்கு வந்த முனிவர் உரைத்த குயிலின் முற்பிறப்புக் கதையினையே கயில் கவிஞரிடம் பின்வருமாறு கூறியது.

## சின்னக்குயிலின் கதை:

### மாமன் மகன் மாடன்

முந்தைய பிறவியில் முருகன் என்ற வேடர்குலத் தலைவன் மகளாகப் பிறந்தேன். சின்னக்குயிலி என்பது என்பெயர். என் மாமன் மகன் மாடன் என்பவன் என்னை மணக்க விரும்பினான். எனக்கு அவன் மீது விருப்பமில்லாமல் இருந்தும், அவன் வருத்தமுறக் கூடாது என்பதற்காக அவனை மணந்து கொள்ளச் சம்மதித்தேன்.

## நெட்டைக் குரங்கன்

ஆனால் வேடர்கலத் தலைவனான மொட்டைப்புலியன் மகன் நெட்டைக் குரங்கனுக்கு என்னை திருமணம் செய்து கொடுக்க என் தந்தை ஒப்புதல் அளித்து விட்டார். இதனை அறிந்ததும் என் மாமன் மகனான மாடன் ஓடோடி வந்து என்னைச் சினந்து சில வார்த்தைகள் சொன்னான். நானும் அவன்பால் கொண்ட கருணையினால் அவன் சினம் தணியும்படியாகப் பேசினேன்.

## சோலையில் சேர இளவரசன்

நாள்கள் சில சென்ற பின்னர், நான் என் தோழியருடன் காட்டில் ஒரு மாலைப்பொழுதில் விளையாடிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அங்கு வந்த சேர இளவரசர் என்னை நோக்கினார். நானும் அவரைப் பார்த்தேன். எங்கள் உள்ளமிரண்டும் தம்முள் கலந்தன. நாங்கள் இருவரும் ஒருவரையொருவர் ஆரத்தழுவி மகிழ்ந்திருந்தோம்.

## நெட்டைக்குரங்கனும், மாடனும் இளவரசனைக் கொன்றனர்

அந்தச் சமயத்தில் அங்குவந்த நெட்டைக்குரங்கனுக்கும் மாடனுக்கும் நாங்கள் தழுவி நின்ற காட்சி சினத்தை மூட்டிடவே இருவரும் மன்னன் முதுகில் தங்கள் வாளைப் பாய்ச்சினர். மன்னவரும் தம் வாளால் அவர்கள் இருவரையும் வெட்டி வீழ்த்தியபின் சோர்வுற்று மண்மீது விழுந்தார். அவரை வாரி எடுத்து மடியிலிட்டு அழுது புலம்பினேன். அப்போது அவர்,

## சாகும் வேளையில் கூறியவை

**"பெண்ணே! இனிநான் பிழைத்திடேன். சில்கணத்தே**
**ஆவி துறப்பேன். அழுதொர் பயனில்லை.**
**சாவிலே துன்பமில்லை. தையலே! இன்னமும் நாம்**
**பூமியிலே தோன்றிடுவோம், பொன்னே! நினைக்கண்டு**
**காமுறுவேன், நின்னைக் கலந்தினிது வாழ்ந்திடுவேன்**
**இன்றும் பிறவியுண்டு, மாதரசே இன்பமுண்டு,**
**நின்னுடன் வாழ்வினினி நேரும் பிறப்பினிலே"** **(649 - 655)**

என்று கூறி மடிந்தார்.

## இப்பிறப்பில் குயிலி

இப்பிறவியிலும் நான் விந்தைமலைச் சாரலில் வாழும் வேடர்குலத் தலைவன் மகளாகத்தான் பிறந்தேன். மாடன் செய்த மந்திரத்தினால் குயிலுருவம் வாய்க்கப்

பெற்றேன். மாடனும், நெட்டைக்குரங்கனும் நான் மன்னனைச் சேரக் கூடாது என்று என்னைச் சுற்றி வருகின்றனர்.

## இப்போது நடைபெறுவன

என்னுடைய காதலர் தொண்டை வள நாட்டில் பிறந்துள்ளாராம். என் பாட்டைக் கேட்டு என்மீது காதல் கொள்வாராம். அப்போது பேணிரண்டும் மாயச்செய்கை பலசெய்து என்னைச் சந்தேகித்துப் பிரியச் செய்ய முயலுமாம். அதற்கு மேலுள்ளவற்றை நீயே கண்டுகொள்வாய் என்று கூறிவிட்டு அந்த முனிவர் காற்றில் மறைந்துவிட்டார். ஐயனே! எனக்கு இரங்கிஅருள்புரிவீர்! இல்லையேல் உமது கையால் கொன்றிடுவீர்! என்று கூறிக் கவிஞர் கையில் வீழ்ந்தது.

## இனி நடைபெறப் போவன

குயிலின் சோகத்தை கேட்ட கவிஞருக்குக் குயிலைக் கொன்றுவிட மனம் வருமோ? அதன் மீது அளவிடற்கரிய அன்பு எழவே, ஆரத்தழுவி முத்தமிட்டார். குயில் மறைந்து அழகு பொருந்திய பெண் ஒருத்தி அங்கு நின்றாள், ”இவள் அழகை எப்படித் தமிழில் சொல்வேன்!” என்று கவிஞர் திகைக்கிறார்; சொல்ல முயல்கிறார். கவிதையாகிய பழத்தைப் பிழிந்து சாறு எடுத்து, இசைநாட்டியம் என்றும் கலைகளின் சாரத்தை அதனோடு சேர்த்து இனிய அமிழ்தத்தையும் கலந்து காதல் என்னும் வெயிலில் உலர்த்திக்கட்டியாக்கி அதனால் செய்யப்பட்டதே அந்தப் பெண்ணிஉன் மேனி என்கிறார். அவளைத் தழுவி முத்தமிட்டு, முத்தமிட்டு மேகப் பெருமயக்கத்தில் ஆழ்ந்திருந்தார்.

## கனவு கலைந்தது

அப்போது அந்தப் பெண்ணும் பக்கத்திலிருந்த சோலையும் கலைந்திடவே நிகழ்தனைத்தும் மாலையழகின் மயக்கத்தால் உள்ளத்தே தோன்றியதொரு கற்பனையின் சூழ்ச்சி என்பதனைக் கண்டு கொண்டார்.

இது குயில் பாட்டின் கதைப்பொருளாகும்.

## குயில்பாட்டு - ஒரு கற்பனைக் காவியம்:

குயில்பாட்டு பாரதியின் கற்பனைத்திறத்திற்குச் சிறந்ததோர் உதாரணமாகத் திகழ்வது. அதில் கற்பனையைத் தவிர வேறு ஒன்றுமில்லை என்ற கருத்தும், கற்பனையுடன் வேதாந்தப் பொருளும் கூறப்பட்டுள்ளது என்ற கருத்தும் அறிஞர்கள் மத்தில் இருக்கின்றன. ‘வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க யாதானுஞ் சற்றே இடமிருந்தாற் கூறீரோ’ என்று பாரதியே கூறியுள்ளமையால் இதனை அந்த நிலையிலும் விரித்துரைக்க வாய்ப்புண்டு என்று அவரே கருதியுள்ளமையால் அதனையும் உட்கொண்டே குயில்பாட்டைப் படைத்துள்ளமையும்

புலனாகின்றன. அவ்வாறு உணரும் வகையில் படைத்துள்ளமையும் அவரது கற்பனை ஆற்றலுக்கு ஒரு சான்றாகவே விளங்கக் காண்கின்றோம்.

## புலவர்களும் தனி ஆற்றலும்

ஒரு பொருளைச் சாதாரண மனிதன் காண்பதிலும் புலவன் காண்பதிலும் வேறுபாடு உண்டு. சாதாரண மனிதன் அப்பொருளை மட்டும் காணப் புலவனோ அப்பொருளை மட்டுமன்றி அதனுடன் தொடர்புடைய பலவற்றையும் காண்கிறான். சாதாரண மனிதன், அறிவின் வாயிலாக நுகரப் புலவனோ உணர்ச்சியின் மூலமாக அனுபவிக்கிறான். இதற்குக்காரணம் சாதாரண மனிதனிடம் இல்லாத ஆற்றல் புலவனைக் கவிதை படைக்கத் தூண்டுகிறது. இது கவிஞர்களுக்கேயுரிய தனி இயல்பாகவும் ஆற்றலாகவும் இருக்கிறது. ”கவிஞர்கள் அறிவில் சிறந்து விளங்குவதால் கவி பாடவில்லை. அவர்களிடம் ஒருவிதத் தனி இயல்பு, அற்புத ஆற்றல் அமைந்திருப்பதாலேயே பாடுகிறார்கள்” என்ற ஆபர்கிராம்பியின் கூற்று இங்கு எண்ணத்தக்கது.

## கற்பனை வெளிப்பாட்டு வகை

கவிஞனுக்கிருக்கும் அந்த ஆற்றலைத்தான் ‘கற்பனை ஆற்றல்’ என்கிறோம். ஒரு புலவனின் கற்பனை ஆற்றலே, அவனது புலமைத் திறத்தின் அளவுகோல் ஆகும். இந்த ஆற்றலை, அவனது படைப்புகளில் காணமுடியும். உவமைகளின் மூலமாக - வருணனைகளின் வழியாக - பாத்திரப்படைப்பின் வாயிலாக இக்கற்பனைத்திறன் காட்சி வழங்கிக் கொண்டிருக்கும். கற்பனைத்திறத்துடன் கருத்துவளமும் ஒருவனிடம் காணப்பட்டால், அவை சிறந்த கவிஞனாக மதிக்கப்படுவான். பாரதியார் அத்தகைய கவிஞர் என்பதைத்தான் குயில்பாட்டு உணர்த்துகிறது.

## திணை கடந்த காதல் கற்பனை

குயில்பாட்டு, அடிப்படையில் கவிஞர் உள்ளத்தில் தோன்றிய காதல் கவிதை ஆகும். இதில் பேசப்படும் காதல் மனிதப் பிறவிகளுக்கிடையே யானதும், மனிதனுக்கும் பறவைகளுக்குமிடையேயானதும், பறவைகளுக்கும் விலங்குகளுக்குமிடையேயானதுமாய்க் காட்டப்பட்டது. மனிதர்களுக்கிடையிலான காதல் இயல்பானது. பிறவகைக் காதலோ கற்பனையின் விளைவு, அகப்பாடல்களில் பாத்திரப் பெயர் சுட்டப்பெறாது என்னும் இலக்கணவிதிக்கு மாறாகப் பெயர்கள் சுட்டப்பட்டு வரும் நிலையானாலும் கற்பனை சார்ந்தது.

## கற்பனைப் பாத்திரங்கள்

குயில் அல்லது சின்னக்குயிலி, சேரன் மகன், மாடன், நெட்டைக் குரங்கன், முனிவர், வீரமுருகன், மொட்டைப்புலியன் முதலிய பாத்திரங்கள் கற்பனையாகவே படைக்கப்பட்டுள்ளன.

## முற்பிறப்புக் கற்பனை

பாட்டில் குயிலைக் குறித்த இரு பிறவிக்கதைகள் கூறப்பட்டுள்ளன. முதற்பிறப்பு மாயமிலா மக்கட்பிறப்பு, பின்னையது மாயமுடைய குயிற்பிறப்பு. இயல்பாய் முற்பிறப்பில் வீரமுருகன் என்னும் வேடன்மகள் சின்னக்குயிலி சேரவளநாட்டுத் தென்புறத்தே ஒரு மலையில் பிறந்து வளர, மாமன் மகன் மாடனம் வேடர் குலத் தலைவன் மகன் குரங்கனும் அவளை மணம்புரிய விரும்புகின்றனர். சேரன்மகனோ குயிலியை வனத்திடைக்கண்டு இன்புற்று ஆவி கலந்த பின், மாடன் குரங்கன் ஆகிய இருவராலும் வெட்டப்பட்டு இறந்து போனாள்.

## பிற்பிறப்பில் கற்பனை

பிற்பிறப்பில் விந்தமலைச் சாரலில் ஒரு வேடர் மகளாய்ப் பிறக்க, சேரன் மகன் வாளால் மடிந்த மாடனும் கரங்கனும் வன்பேயாய்ப்பல மாயங்கள் செய்தமையால் குயிலி குயிலாகவும் இவர்கள் இருவரும் மாடாகவம் குரங்காகவும் திரிய நேருகிறது. இறுதியில் தொண்டை வளநாட்டிலோர் பட்டினத்தில் மாறிப்பிறந்த சேரன் மகனை (கவிஞனை) ஒரு சோலையில் கண்டு குயிலுருவம் நீக்கப்பெற்று மானிடப் பெண் வடிவம் பெற்று மணம் பெறுகின்றனர்.

## குயில் தன் முற்பிறப்புக்கதை கூறுங்கற்பனை

கவிஞனே இந்தக்கற்பனைக் கவிதையைப் படைத்திருந்தாலும், குயில், தன் பூர்வஜன்மக் கதையை, முனிவர் தனக்கு உரைத்ததைக் கவிஞரிடம் கூறுவதாகக் கதையை அமைத்துள்ள கற்பனைத்திறமும் வியந்து போற்றுதற்குரியது. ‘குயில்பாட்டு’ என்ற தலைப்பிற்கேற்பக் குயில் அதிகமான இடங்களில் பேசுவதாக அமைத்திருக்கிறார் என்றும் எண்ணத் தோன்றுகிறது.

## கற்பனை கலந்த கற்பனை

குயில் தன் கதையை முனிவர் கூறியபடியாகவே கூறி ”காதலருள்வீர்! காதலில்லை என்றிடின் சாதலருளிக் கொன்றிடுவீர்!” என்று சொல்லிக் கவிஞர் கையில் வீழப்பெண்ணுருவாய் மாறி நின்றாள். யாவும் மறந்து சித்தம் மயங்கிச் சிலபோழ்திருந்தபின்,

கண்விழித்துப் பார்க்கையிலே தான் வீட்டில் இருப்பதாக உணர்ந்தார் கவிஞர் என்று பாரதி இதனை முடிக்கிறார்.

எலக வாழ்வில் காதல் என்பது இயல்பாக நிகழக்கூடிய ஒன்று. அது அனைவருக்கும் எளிதில் வெற்றியில் முடியக்கூடிய ஒன்று இல்லை. அதில் தடைகள் ஏற்படுவதும், அவை நீக்கப் பெற்றுக் காதலியை அடைவது பெரும் இன்பத்தைத் தருவதாக இருக்கும். இந்தக் கதையிலும் பாரதி இதனைத் தன் கற்பனையில் வடித்துத் தந்துள்ளார்.

## காதல் வெற்றிக்குக் கற்பனை

ஆறறிவு படைத்த மனிதன் ஐயறிவுடைய குயிலைக் காதலித்தததையும், குயில் மனிதனையும், மாட்டையும், குரங்கையும் காதலித்தததையும் பாட, அவருடைய கற்பனையே காரணமாகும். மனிதப் பிறவியிலான காதல் நிகழாதவாறு தடையாக மனிதர்கள் இருந்தததையும், அந்தத்தடையானது பிறவிகள் தோறும் தொடர்வது என்பதையும், உண்மையான காதல் இப்பிறப்பில் வெற்றி பெறாமல் போனாலும் மறுபிறப்பிலாவது கைக்கூடக்கூடியது என்பதனையும் காட்டும் பொருட்டாக இருபிறப்புகளின் கதைகளைக் கூறி, இரண்டாவது பிறப்பில் காதலனும் காதலியும் கூடுவதாகக் கற்பனை செய்து, பாடியுள்ளார் பாரதியார்.

## சேரன் மகனே இப்பிறப்பில் கவிஞன்

காதலுக்குத் தடை ஏற்பட்டு, அது நீங்கப் பெறல் சிறப்பு. குயிலியின் காதலுக்கு முற்பிறப்பில் மாடனும், குரங்கனும் தடையாக இருந்தனர். மறுபிறப்பில் பேயாகத் திரிந்த அவர்கள் மாடும் குரங்கும் மறைந்தொழியக் குயில் பெண்ணுருவம் பெற்றுக் கவிஞரைச் சார்கிறது. இப்பிறப்பில் சேரன்மகனே கவிஞனாகப் பிறப்பெடுத்ததாகப் பாடியுள்ளார். பாரதியார்.

## இருபுறக் காதல் கற்பனை

காதலுக்கு இருபுறமும் அன்பு செலுத்தும் தன்மை வேண்டும். ஒருதலைக் காமம் பெற்றிபெறுதல் இல்லை. குயிலிக்கு மாடனுடனும் குரங்கனுடனும் அன்பு இல்லை. ஆனால் அவர்கள் மட்டும் இவள்பால் அன்புடையவராய் இருந்தனர். குயிலிக்கும் சேரன் மகனுக்கும் இருபுறத்த அன்பு நிலவியது. ஊழ்வயத்தால் இருபுற அன்பால் ஆகவிலந்தனர். அதுவே மனமொன்றிய மணம் என்கிறார் பாரதியார். இதனைக் கருவாகக் கொண்டதே குயிலியின் கதைப்பாடல். இக்கருவினையே தம் கற்பனையால் குயில்பாட்டாகவும் வடித்துத் தந்துள்ளார் பாரதியார்.

## குயில் பாட்டில் வேதாந்தக் கருத்துக்கள்:

கவிதைச் சிறப்பாலும் பொருள் ஆழத்தாலும் சிறந்து விளங்கும் குயில்பாட்டு, அடிப்படையில் ஒரு காதல் பாட்டாகும். இதனைக் குறித்து அறிஞர் பெருமக்கள் மாறுபட்ட சிந்தனையுடையவராய் விளங்குகின்றனர். குயில்பாட்டில் வேதாந்தமாக விரித்து பொருளுரைக்க இடம் இல்லை என்றும், அது கவிதை பற்றிய புனைவியல் கவிதை என்றும் சி.கனகசபாபதி குறிப்பிட்டு, வேதாந்தம் என்ற சொல்லை. 'ஒரு கொள்கை' என்ற பொருளிலேயே பாரதியார் பயன்படுத்தியுள்ளார் என்றும், ஆன்ற தமிழ்ப் புலவர்களை விரித்து உரைக்குமாறு பாரதியார் பேண்டிக் கொண்டது வேதாந்த சமயக்கொள்கைகள் இல்லை; குயிலின் வாழ்க்கையில் உணரக்கூடிய ஒரு உயர்ந்த உண்மையையே ஆகும் என்றும் கு.சிவஞானம் குறிப்பிடுகிறார். குயில்பாட்டில் வேதாந்தப் பொருள் உள்ளது என்ற கருத்தினைச் சி.சுப்பிரமணியன் ஏற்றுக் கொண்டுள்ளார்.

## வேதாந்தப் பாடல்

பாரதியின் குயில்பாட்டு, கற்பனை வளமிக்க ஒரு காதற்பாட்டு என்பது உண்மையாக இருந்தாலும், காதலைக் கூறுவதற்காக மட்டுமே அவர் இதனைப் படைத்திருப்பாரா? என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. 'வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க யாதானும் சற்றே இடமிருந்தாற் கூறீரோ' என்று கூறி இக்கவிதையை அவர் முடித்திருத்தலின், அவ்வாறு நினைத்தற்கும் அதில் இடம் உண்டு என்று பொருள் கொள்ள வைக்கிறது.

## புலமை உச்சியில் எழுந்த பாடல்

பாரதி ஆரம்பத்தில் காதல் பாட்டுக்களையும், பிறகு அரசியல் பாட்டுக்களையும், அதன் பிறகு சக்திப்பாட்டுக்களையும், கடையில் உரை நடைத் திருப்பத்தில் சிலவற்றையும் படைத்துத் தந்திருக்கிறார். பாரதியாரின் படைப்புத்திறன் ஓங்கியிருந்த காலப்பகுதியில் அவர் எழுதிய பாடல்தான் குயில்பாட்டு. பாரதியாரின் முப்பெரும் பாடல்களுள் ஒன்றையொன்றும் விஞ்சும் அளிற்குப் படைக்கப்பட்டிருந்தாலும், ஒவ்வொன்றும் தன்னளவில் மாறுபட்டு விளங்கக் காண்கிறோம். கண்ணன் பாட்டு, கண்ணனைப் பலவாறு கற்பனை செய்து பாடிய பாட்டு. பாஞ்சாலி சபதம் பாரதமாதாவைக் கருத்திற் கொண்டு எழுந்த பாட்டு. குயில்பாட்டு, கற்பனையோ கருத் தாழமும் மிக்க பாட்டு.

## இருண்மைப் பண்பு

குயில் பாட்டில் வெளிளப்படையாகப் பேசப்படும் காதல் பற்றிய செய்தியும் உள்ளார்ந்த நிலையில் பாடப்படும் வேதாந்தக் கருத்துக்களும் இணையாக வைத்து எண்ணத்தக்கவை. பாரதியின் பாட்டில், அவர் வேதாந்தக் கருத்துக்களைப் பேசியுள்ளாரா?

ஏனபது குழப்பநிலையில் இருப்பதற்கு காரணம். அதில் காணப்படும் இருண்மைப்பண்பே ஆகும்.

உண்மையில் தெளிவின்மை வேறு; இருண்மை வேறு. தெளிவின்மை சிந்தனைத் தெளிவு அற்றவர்களாலும் வெளியீட்டுத்திறன் அற்றவர்களாலும் விளைகிறது. இருண்மை ஆழ்ந்த உணர்ச்சிகளையும் மிகச் சிறந்த தேர்ந்த தத்துவங்களையும் செறிவாக வெளியிடுபவர்களால் விளைகிறது. கவிஞன் கூறுகிற செய்தியை அப்படியே புரிந்து கொள்ளாத நிலை வாசகனுக்கு ஏற்படுவதுண்டு. அதனையே இருண்மை எனக் குறிக்கின்றனர்.

## குறியீட்டுக் காப்பியம்

இருண்மையுள்ள கவிதை, வாசகனையும் கவிதையில் பங்கு கொள்ளச் செய்யும் ஆற்றல் மிக்கது. பாரதியின் குயில்பாட்டிலும் இப்பண்பு இருப்பதாகவே தோன்றுகிறது. வேதாந்தக் கருத்தைத் தம் கவிதையில் புதைத்து வைத்திருப்பதால், வேதாந்தமாய் விரித்துரைக்க வேண்டிக் கொள்கிறார். பாரதியார் கேட்டுக் கொண்டபடியே நாமும் இப்பாடலில் புதைந்துள்ள வேதாந்தக் கருத்துக்களை அறிய முற்படுவோம்.

## குயில் பாட்டில் யோகம்

ஜீவாத்மா தனது சுய உருவத்தையும், தன்மையையும், உணரக்கூடிய ஏதுக்களின் உதவியால் நன்கு முயன்று செயல்பட்டால், தனக்கும் பரமாத்மாவுக்கும் உள்ள சிறப்பான இணைப்பை உணரமுடியும். உணர்ந்தபோது அந்த இணைப்பில் இன்பத்தை இடையறாது நுகர்ந்து நீடித்துக்கொண்டே இருக்கமுடியும். இப்படி இருந்த ஆன்றோர்கள் பலருண்டு. முழுமையாக உணரும் வரையில், இவ்வுலக இன்ப, துன்பங்களில் உழன்று, அறிவின் துணைகொண்டு, அன்பின் ஆழத்துடன் தளரா மனத்துடன் இன்ப துன்பங்களை ஒன்றாகப் பாவித்து, அவற்றால் பாதிக்கப்படாமல் மேல் நோக்கிச் செல்லுங்கால் பேரின்பத்தை அடையலாம் என்பதே சான்றோர்களின் வரலாறு காட்டும் உண்மையாகும். இத்தகைய சான்றோர்கள் செயற்பாடுகளைக் கவனத்துடன் பார்த்தால், அவர்கள் ஒரு முனைப்பாட்டுடன் நடத்திய மனவேள்வி வெளிப்படும். இதையே யோகம் எனலாம். இந்த யோகம் தான் குயில்பாட்டின் உள்ளார்ந்த கருத்து. ஜீவர்கள் பிறவிப்பயனாகிய பேரின்பப் பெருவீடென்னும் பேற்றை அடைய முயல வேண்டும் என்பதைக் கூறுவதே குயில்பாட்டு.

## பாரதியாரின் வேதாந்த அனுபவம் வடிவம் பெற்றது

கற்பனைக் கதையினூடனே, ஜீவான்மப்பரமான்மக் கல்வியின் இரகசியத்தையும் அதன் பலனாகிய ஜீவான்மபரமான்பப் பேரின்பத் திருமணம் என்கிற பேற்றையும் உணர்த்துதலே இக்கதைப்பாட்டின் நோக்கம் எனலாம். மாஞ்சோலைக்குள் புகுந்த

பாரதியாரின் செவிகள் குயிலின் சோககீதத்தைக் கேட்கவும் கண்கள் குயிலைப் பார்க்கவும் செய்தன. அவர்தம் வெளிமனத்திலே கற்பனை விரிந்தது. அதே நேரத்தில் அதுவரை அவர் பெற்ற வேதாந்தப் பயிற்சியின் தாக்கமுற்ற உள்மனம் இயங்கிக் கற்பனைக்கு உயிரூட்டவே கவிதை மலர்ந்தது. வேதாந்ததம் வடிவம் பெற்றது. குயில்பாட்டின் ஆரம்பத்திலேயே, இந்நூல் ஆன்மீகம் பொதிந்த கவிதைக் கனவாக உருவாகியுள்ளது என்பது புலப்படுகிறது.

குயில்பாட்டு பாரதியாரின் ஆன்மீக வாழ்வில் பெற்ற ஒரு நிறைவைக் காட்டுகிறது. பாரதியார் தம்முள்ளே ஆழ்ந்த பெருமாற்றம் நிகழ்ந்த, தம்மை மறந்த நிலையில் அடையாளமாகப் படைத்ததே குயில்பாட்டு.

## வேதாந்தப் பொருளின் நிறம்

மதத்தின் பிரிவுகள் கடந்து சனாதனமானது வேதாந்தம் சமயப்பிரிவுகள் போல் வரம்புக்கு உட்படாதது. அது வரம்பற்றது. நெடுங்காலப் பழமைமிக்க வேதாந்தம், பாரதநாட்டின் இதிகாச காலங்களுக்கும் பௌத்தத்திற்கும் முற்பட்டது. விருப்பு வெறுப்பற்ற மனம் பாழடைந்து, ஞான வைராக்கியத்தால் மாயையைவென்று பேதமடைந்த உயர்நிலையினின்றும் கவிதையுறுவாக்கிய பாரதியாரின் வளமார்ந்த படைப்பே குயில்பாட்டாயிற்று.

## வேதாந்தக் கருத்துக்கள்

**கடலைபாடும் வேதாந்தம்**

**"காலை இளம்பருதி வீசுங் கதிர்களிலே**
**நீலக் கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்**
**மோகனமாஞ் சோதி பொருந்தி முறைதவறா**
**வேகத் திரைகளினால் வேதப்பொருள் பாடி"** **(1 - 4)**

எனவரும் குயில் பாட்டின் இவ்வாரம்ப அடிகள், கடல்நீர் தன் அலையென்னும் நாவால் வேதப்பொருளாகிய இறைவனையே பாடிக் கொண்டிருக்கிறது என்பதனைக் கூறுகின்றன.

## இறைவனில் ஒடுங்கும் உயிர்

கதிரவனிலிருந்து கதிர்கள் உலகில் விரிந்து, பரந்து, பின் மீண்டும் கதிரவனிலேயே ஒடுங்கிக் கொள்வன போன்று அனைத்து உயிர்களும் பொருள்களும் இறையாகிய முதற்பொருளிலிருந்து தோன்றி மீண்டும் அவ்விறையாகிய முதற் பொருளிலேயே ஒடுங்கிக் கொள்கின்றன என்பதனை உணர்த்துகிறது. இதுவே வேதப்பொருளாகும்.

குயில்பாடும் பாட்டினிலே தொக்க பொருளெலாந் தோன்றிய தென் சிந்தனைக்கே என்பது பருப்பொருட்டாக அதன் காதல் நிலை அல்லது சாதல் என்பதற்காக இருப்பிளும் நுண் பொருட்டாக வேறொரு பொருள் குறித்தாகும்.

## இறைக்காதல் கூடாதது சாதல்

கவிஞருக்கு குயிலோடு உயர்ந்த காதல் ஏற்படுகின்றது. குரங்காலும் மாட்டாலும் ஐயம் ஏற்படச் சாதலாகின்றது. மக்கட் காதல் கூடாதாயின் சாதல் என்பதன்றி, இறைக்காதல் கூடாதாயின் வாழ்வு சாதலாகும். கூடுமாயின் அதுவே மரணமிலாப் பெருவாழ்வாகிய, மீண்டும் பிறப்பும் இறப்பும் இல்லாத பேரின்ப நிலையாகும்.

## இறையருளே மலவிருள் அகற்றும்

இறைவன் அருளைப் பெற்றால் மலவிருள் நீங்கப் பேரொளியாகும். அருள் இல்லையெனில் மலருவிருளால் மயக்கம் பெறும் என்பதே பொருளாகும்.

## இம்மை மறுமை வாழ்வு

குற்றமில்லாத இவ்வுலக வாழ்வும், குறைவில்லாத இறையுணரும் மறுவுலக வாழ்வும் வேண்ம்ு என்றார்.

இவ்வாறக இசைப்பாட்டால் குயில் காதலை, உலகியலை உணர்த்தியதாக இறையிலைத் தொக்க பொருளாக உணர்த்தினார்.

## இருபிறப்புக் கதைகளில் பாத்திரங்கள்

முற்பிறப்புக் கதையில் சின்னக் குயிலிருக்கும் சேரமன்னன் மகனுக்கும் இடையிலான காதல் நிறைவேறாவண்ணம் தடையாக மாடனும் குரங்கனும் இருக்கின்றனர்.

பிறப்பிறப்பாகிய மாயைக் கதையிலும் குயிலுக்கும் கவிஞருக்கும் இடையிலான காதலுக்கு இடையூறாக மாடும் குரங்கும் இருக்கின்றன.

அகநிலையில் காணும் கதையில் இடம் பெறும் பாத்திரங்கள் ஆன்மா, ஆண்டவன், கன்மம், மாயை என்பன.

## மெய்யறிவுப் பாத்திரம் முனிவர்

இம்மூன்று கதைகளிலும் வரும் மயக்கத்தைத் தெளியவைக்கும் பாத்திரம், முனிவரது பாத்திரமாகும். அப்பாத்திரமே மெய்யறிவாகும். மெய்யறிவே மலவிருளை நீக்கி, ஆண்டவனாகிய பேரொளியை உணர்த்திப் பேரின்பமடைய வைக்கிறது. இதற்காகவே முனிவன் (மெய்யறிவு) பாத்திரம் இக்கதைப்பாட்டில் படைக்கப்பட்டுள்ளது.

## மூடியிருந்த விழிகள் தேவசுகம்

சோலையில் சேரவேந்தன் மகனைக் கண்டு சின்னக்குயிலி காதலித்துச் சேர்ந்ததனை,

**‘தம்மையே இவ்விருவர் தாங்காண்டார் வேறறியார்**

**..................................................................................**

**காவலன்றன் மைந்தனுமக் கன்னிகையும் தானுமங்கு**

**தேவசுகங் கொண்டு வழியே திறக்கவில்லை**

**ஆவிக் கலப்பின் அமுத சுகத்தினிலே**

**மேனியங்கு மூடியிருந்த விழீ நான்கு’ (629 - 635)**

என்று குறிப்பிடினும், யோகத்தால் கடவுட்சிந்தனை உடையோரும் தம்மையே தாம் காண்பார்; வேற்றியார், விழி திறக்காத ஆன்மக் கலப்பில் தேவசுகமாகிய அமுதசுகமடைவர் என்பதனையும் குறிப்பிடுவதாகத் தெரிகிறது.

## பலபிறப்புக் கொள்கை

வெட்டுண்டு இறக்கும் வேந்தன் மகன், "சாவிலே துன்பமில்லை; இன்னும் பிறவியுண்டு" என்பது, வேதாந்தப் பொருளாகிய உடல் சாகும்; ஆன்மா அழியாது; அது மீண்டும் வேறொரு பிறப்பெடுக்கும்; ஆகவே சாவிலே துன்பமில்லை என்பதனைத் தருகின்றது.

## யோகம் பிறவிக் கடல் நீந்தும் நாவாய்

‘துன்பக்கடலில், நல்லுறுதி கொண்ட தோர் நாவாய் போல் வந்திட்டீர்’ என்று குயில் கவிஞரைக் கண்டு கூறியதாகக் குறிப்பினும், யோகத்தில் இருப்பார்க்கு இறைவன் பிறவிப் பெருங்கடலைக் கடக்கக் காணும் நாவாய்போல் காட்சியளிப்பார் என்பதே பொருளாகும்.

## ஆன்மக் காதலிலும் தடைகள் பல

ஆண் பெண் உறவே உலகியல். அதில் வரும் தடை பல என்பதனைக் காட்டும் குயிலின் கதை, ஆண் பெண் காதலுணர்வு போன்றதே ஆண்டவன் ஆன்மாக் காதலுணர்வுமாகும். இதனிடைவரும் தடையும் பல காதலில் பெண்படும் பாட்டினைப் போன்றதே, கடவுட் காதலில் ஆன்மா படும் துன்பமாகும்.

குறிப்பிட்ட காதல் கதையில் நீலக்குயில் கவிஞரை அடையத் துடிக்க இடையே மாடும் குரங்கம் தடையாக வருகின்றன. இதுபோன்றே கடவுட்காதலிலும் இடையே இரண்டு தடைகள் வந்து தொல்லை படுத்துகின்றன.

## மக்கள் காதலில் இறைக்காத்தல்

கவிஞர்களுக்கும், துறந்த தத்துவ ஞானிகளும் மக்கட் காதலைக் கடவுட் காதலைப்பாடுகின்றனர். பாரதியார் அவை இரண்டனையும் புறத்தும் அகத்தும் வைத்துப் பாடியுள்ளார்.

குயிலின் காதலில் மாடும் குரங்கும் எதிரிகளாக வந்தது போலவே கடவுட் காதலிலும் இரண்டு எதிரிகள் வந்தனர். மக்கட் பிறவியில் மக்கட் காதலைக் கூறும் பாரதியார் மாயப்பிறவியில் இக்காதலைக் கூறுகிறார்.

## மலங்களும், மலநீக்கமும்

குயில் கவிஞரை அடைய ஒட்டாமல் தடுப்பது குரங்கும் மாடுமாகிய மலங்கள். அவை இரண்டும் ஆன்மா இறைவனை அடைய முடியாதபடி தடுப்பன. ஆனால் குயில் (ஆன்மா) கவிஞனை (ஆண்டவனை) அடையும் போது மலங்கள் நீங்கப் பெற்று இன்பமடைகின்றது.

## மாயைக் கொள்கை

குயிலின் மாய வாழ்க்கையில், குரங்கன் மாடன் இருவரும் வன்பேயாகிக் குரங்காகவும் மாடாகவும் ஆகி, மாயையால் பெண்ணைக் குயிலாக்கிப் பேதைப்படுத்தித் துன்புறுத்துகின்றனர். அதாவது கன்மம், மாயை என்னும் இரண்டு மலங்களும் ஆன்மாவை மாசுபடுத்தித் துன்பப்படுத்துகின்றன என்பதாகும். குயில், முனிவனால் தன்னிலை உணர்ந்து, கவிஞனாகிய ஆண்டவனைச் சேர்ந்து, மலம் நீங்கப்பெற்று பெண்ணுருப் பெற்று இன்பமடைந்தது என்பது கதை.

## வேதாந்தச் சுருக்கம்

வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்கும் போது 'குயிலாகிய ஆன்மா, குரங்கு மாடு என்னும் மலங்கள் தரும் துன்பங்களிலிருந்து நீக்கப் பெற்று ஆண்டவனாகிய கவிஞனை அடைந்து பேரின்ப நிலை அடையப் பெற்றது' எனலாம்.

# குடும்ப விளக்கு

## பாரதிதாசன்

### காலை மலர்ந்தது:

**இளங்கதிர் கிழக்கில் இன்னும் எழவில்லை,**
**இரவு போர்த்த இருள்நீங்க வில்லை.**
**ஆயினும், கேள்வியால் அகலும் மடமைபோல்**
**நள்ளிரவு மெதுவாய் நடந்துகொண் டிருந்தது,**
**தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த**
**கலப்பென இருள்தன் கட்டுக் குலைந்தது,**
**புலர்ந்திடப் போகும் பொழுது, கட்டிலில்**
**மலர்ந்தன அந்த மங்கையின் விழிகள்.**

### அவள் எழுந்தாள்:

தூக்கத் தோடு தூங்கி யிருந்த
ஊக்கமும் சுறுசுறுப் புள்ளமும் மங்கை
எழுந்ததும் எழுந்தன இருகை வீசி;
தெளிவிலாக் கருக்கலில் ஒளிபடும் அவள்விழி
குளத்து நீரில் குதிக்கும் கெண்டைமீன்!

### கோலமிட்டாள்:

சின்னதாகச் செய்யப்பட்ட மூக்குத்திக்கு அதில் ஒரு சிறிய அளவு தங்கம் சேர்த்து ஒரு சின்ன முத்தை ஒட்ட வைத்தது போன்று மூக்குத்திக்கு முத்துத் தொங்கல் இருக்கின்ற ஒரு சிறு துணியினைப் போன்றதான சிறிய அளவில் எரிந்து கொண்டிருந்தது விளக்கு இரவிற்காக அந்த விளக்கினைத் தூண்டுகின்ற குச்சியினை எடுத்துத் தன்னுடைய செங்காந்தள் போன்ற கை விரல்களால் கொஞ்சம் பெரிய அளவில் எரிங்ச் செய்தாள். முகம் கழுவி தண்ணீர் முத்து முத்தாய் சிதறும்படி செய்தாள். பெருக்கி, தண்ணீர் தெளித்து அதனை மேலும் அழகாக்கி, அரிசி மாவினால் அந்த இடத்தில் அழகான கோலம் வரைந்தாள்.

## காலைப்பாட்டு:

வீட்னுள் சென்றாள் யாழினை எடுத்தாள், 'வாழிய வையம் வாழிய' என்ற பாடலை இனிய பழங்களின் சுவையினைப் போன்று பாட ஆரம்பித்தாள். குழந்தைகள் மற்றும் அவளுடைய கணவனின் காதுகளில் நுழைந்து அவர்களது நினைவில் கலந்ததனால், தூக்கம் கலைந்து எழுந்துவந்து பாடிக் கொண்டிருந்த அவள் எதிரில் உட்கார்ந்து கொண்டனர்.

## வீட்டு வேலைகள்:

அவன் வீட்.டுவேலைகளைச் செய்தான், பசுமாட்டின் பால் கறந்தாள்; வீட்டைச் சுத்தம் செய்தாள். பாத்திரங்களைத் தங்கம்போல் ஒளிவீசிடும்படியாகத் தேய்த்துக் கழுவினாள். தண்ணீர் கிணற்றிலிருந்து இறைத்து நிறைத்து வைத்தாள்; காலை உணவிற்கு வேண்டிய அப்பங்களைச் சுட்டு எடுத்து, உடன் குடிப்பதற்கு கொத்தமல்லித்தழையினைக் காய்ச்சி வடிகட்டிய நீரை பாலும் சர்க்கரையும் கலந்தாள்.

## கணவனுக்கு உதவி:

**வந்த கணவர் மகிழும் வண்ணம்**
**குளிர்புனல் காட்டிக் குளிக்கச் சொல்லித்**
**துளிதேன் சூழும் களிவண்டு போல**
**அன்பனின் அழகிய பொன்னுடல் சூழந்து,**
**பின்னிடை துவள, முன்னின் றுதவி,**
**வெள்ளுடை விரித்து மேனி துடைத்தபின்**

## குழந்தைகட்குத் தொண்டு:

அடுத்ததாக 'பிள்ளைகளே' என்று அவள்அழைத்தவுடன் கிளிகள் போன்ற அவளது குழந்தைகள் அவள் அருகில் வந்து சேர்ந்தார்கள். குளிக்கவைத்து அவர்களது பூப்போன்ற மெல்லய தன்மையுடைய அவர்களது உடல்மேல் பனித்துளிகளைப் போன்ற படர்ந்திருந்த நீர்த்துளிகளைத் துடைத்துவிட்டு, மனதில் அதிக அன்பு உண்டாகி அவர்களுக்கு முத்தமிட்டு 'பறந்து சென்றிடுங்கள் பசுமையான புறாக்களே' என்று அவள் கூறியதைக் கேட்டவுடன், பறந்து வந்த குழந்தைகள் அறையினுள் நுடைந்து ஆடை அணிகளை ஆட்டத்துடன் அணிந்து கொண்டிருந்தனர்.

**காலையுணவு:**

**அடுக்களைத் தந்தி அனுப்பினாள் மங்கை,**
**"வந்தேன்" என்று மணாளன் வந்தான்;**
**"வந்தோம்" என்று வந்தனர் பிள்ளைகள்,**
**பந்தியில் அனைவரும் குந்தினர் வரிசையாய்,**
**தழைத்த வாழைத் தளிரிலை தன்னில்,**
**பழத்தொடு படைத்த பண்டம் உண்டனர்,**
**காய்ச்சிய நறுநீர் கனிவாய்ப் பருகினர்.**

**பள்ளிக்குப் பிள்ளைகள்:**

**"எழுங்கள்" என்றனள், எழுந்தனர், சுவடியை**
**ஒழுங்குற அடுக்கி, உரைடஅணி வித்து,**
**புன்னை இலைபோல் புதையடிச் செருப்புகள்**
**சின்னர் காலிற் செருகிச், சிறுகுடை**
**கையில் தந்து, கையொடு கூட்டித்**
**தையல், தெருவரை தானும் நடந்து**
**பள்ளி நோக்கித் தள்ளாடி நடக்கும்**
**பிள்ளைகள் பின்னழகு வெள்ளம் பருகிக்**
**கிளைமா றும்பசுங் கிளிபோல் ஓடி**
**அளவ ளாவினாள் ஆள னிடத்தில்!**

**கடைக்குப் போகும் கணவன்:**

கணவன் கடை வைத்து மளிகை வியாபாரம் செய்யக் கூடியவன். ஆகவே காலைப்பணிமுடிந்தவுடன் அடைக்குச் செல்வதற்குத் தயாராக ஆரம்பித்தான். அழகான உடையினைத் தேர்ந்தெடுத்து அணி ஆரம்பித்தான். சட்டையினை அணிவதற்காக எடுத்தான். அந்தச் சட்டையில் ஓட்டையும், கிழிசலும் இருப்பதனை அப்போதுதான் அவன் மனைவியும் கண்டாள். உடனடியாக அதனை வாங்கி தையல் எந்திரத்தில் உட்கார்ந்து சடுகுடு என்று சத்தம் கேட்கும் படியாகத் தைத்துக் கொடுத்தாள்.

அடுத்ததாக அவனுக்காக சுட்டித் தயார் செய்து வைக்கப்பட்ட வெற்றிலைச் சுருளினை எடுத்து வந்தாள். மனைவியின் கையில் வெற்றிலைச் சுருளினைக் கண்டவுடன்

கணவன் ‘இதன் விலை என்ன? சொல்வாய்’ என்று கேட்டான் அவளோ, ‘பொருளுக்கு ஏற்றபடி கொடுங்கள் போதும்’ என்றாள்.

## அவளின் காதலுள்ளம்:

கணவனும் பிள்ளைகளும் கிளம்பிய பின்னர் தான் காலை உணவினை உண்பதற்குச் சென்றாள். அப்பத்துடன் சர்க்கரை சேர்த்து சாப்பிட்டாள்.

## பிள்ளைகள் நினைவு:

**பள்ளிக்குச் சென்றி ருக்கும்**
**பசங்களில் சிறிய பையன்,**
**துள்ளிக் குதித்து மான்போல்**
**தொடர்ந்தோடி வீழ்ந்தானோ, என்(று)**
**உள்ளத்தில் நினைத்தாள்; ஆனால்,**
**மூத்தவன் உண்டென் றெண்ணித்**
**தள்ளினாள் அச்சந் தன்னை!**
**தாழ்வாரம் சென்றாள் நங்கை!**

## வீட்டு வேலைகள்:

அடுத்ததாகக் தொடர்ந்து வீட்டுவேலைகளை கவனிக்க ஆரம்பித்தாள். ஒட்டடைக்கோலைக் கையில் எடுத்து கருத்தைச் செலுத்தி எங்கெல்லாம் ஒட்டடை உள்ளது என்று பார்த்தாள். சிலந்தி கட்டிவைத்த கூடுகள், கரையானின் கோட்டைகள் என்று எல்லாவற்றையும் அழகாகத் தட்டிப் பெருக்கித் தூய்மை என்கிற அரசன் மட்டும் ஆட்சி செய்யும் படியாக வீட்டை அழகு செய்தாள், தொடர்ந்து சட்டைகளைத் தைத்திடலாம் என்று தையல் எந்திரத்தைத் தொட்டாள் அந்தப் பெண்.

## தையல் வேலை:

**ஆடிக்கொண் டிருந்த தையற்**
**பொறியினை அசைக்கும் ஒர்கை;**
**ஓடிக்கொண் டிருக்கும் தைத்த**
**உடையினை வாங்கும் ஒர்கை;**
**பாடிக்கொண் டேயி ருக்கும்**
**பாவையின் தாம ரைவாய்;**

**நாடிக் கொண் டேயி ருக்கும்**

**குடித்தன நலத்தை நெஞ்சம்!**

### மரச்சாமான்கள் பழுது பார்த்தல்:

**முடிந்தது தையல் வேலை**

**முன் உள்ள மரச்சா மான்கள்**

**ஒடிந்தவை. பழுது பார்த்தாள்;**

**உளியினால் சீவிப் பூசிப்**

**படிந்துள்ள அழுக்கு நீக்கிப்**

**பளப்பளப் பாக்கி வைத்தாள்.**

### கொல்லூற்று வேலை:

**இடிந்துள்ள சுவர் எடுத்தாள்,**

**சுண்ணாம்பால் போரை பார்த்தாள்.**

அடுத்தாக வீட்டில் உள்ள சுவர்களில் இடிந்தும், துளையாகவும், சிதைந்தும் கிடந்த இடங்களை பூசிமெழுகி சுண்ணாம்பில் மறைத்து அழகு செய்தாள்.

### மாமன் மாமிக்கு வரவேற்பு:

வீட்டின் வேலைகளையெல்லாம் இவள் பார்த்துக் கொண்டிருந்தபோதே அவளுடைய மாமனாரும் மாமியாரும் வந்து சேர்ந்தார்கள். அவர்களைப் பார்த்தவுடன் மனத்தில் மகிழ்ச்சியுடன் வேகமாகப் பறப்பது போன்று ஓடிவந்து தெருவில் நின்று அவர்களுக்கு வணக்கம் கூறி வாழ்த்தி அவர்களை வரவேற்றாள். தொடர்ந்து ‘என்னுடைய நாத்தனார் நன்றாக இருக்கின்றார்களா மாமி?’ என்று தன்னுடைய மாமியாரைப் பார்த்துக் கேட்டாள். மாமனாரும், மாமியாரும் வண்டியிலிருந்து இறங்கி வந்தவுடன் கற்கண்டினைப் போன் இனிமையான தங்களுடைய மருமகளைப் பார்த்து அவளுக்கு இனிமையாகப் பதில் கூறி, வண்டியில் கொண்டுவந்த பொருட்களை எல்லாம் கவனமாகவும் சரியாகவும் இறக்கி வைத்திடும்படிக் கூறினார்கள். அவளும் உடனடியாக அனைத்துப் பொருட்களையும் பத்திரமாக இறக்கினாள்.

### மாமி மாமள் வாங்கி வந்தவை:

**கொஞ்சநாள் முன்வாங் கிட்ட**

**கும்பகோ ணத்துக் கூசா,**

**மஞ்சள், குங் குமம், கண் ணாடி,**

**மைவைத்த தகரப்பெட்டி,**

**செஞ்சாந்தின் சீசா, சொம்பு**

**வெற்றிலைச் சீவற் பெட்டி,**

**இஞ்சியின் மூட்டை ஒன்றே,**

**எலுமிச்சைச் சிறிய கோணி,**

புதிய தவலைகள் நான்கு, பொம்மைகள், இரும்புப் பெட்டி, செருப்புகள், குழந்தைகள் விளையாடும் மரச்சாமான்கள், எதற்கும் ஒன்றுக்கு இரண்டாய் வீட்டில் கிடக்கட்டும் என்று வாங்கி வந்த நெல்குத்தும் மரக்குந்தாணி (உரல்),

தலையணை, மெத்தைக்கட்டு, சல்லடை புதியமுறங்கள், எலியைப்பிடிக்கும் கருவி, தாழம் பாய்கள், இவர்கள் வசிக்கின்ற பகுதிகளில் கிடைக்காத இலுப்ப எண்ணெய் பொடுவாய்க் கத்தி, இட்டலித்தட்டு குண்டான், கலப்படமில்லாத நல்ல நல்லெண்ணெய், கைஊன்றும் தடி, செந்தாழம்பூ.

**திருமணம் வந்தால் வேண்டும்**

**செம்மரத் தினில்முக் காலி**

**ஒருகாசுச் கொன்று வீதம்**

**கிடைத்தபச் சரிசி மாங்காய்;**

**வரும்மாதம் பொங்கல் மாதம்**

**ஆதலால் விளக்கு மாறு,**

**பரிசாய்ச் சம்பந்தி தந்த**

**பாதாளச் சரடு, தேங்காய்;**

மூலைக்கு மூலை வட்டம் போட்டு மூடப்பட்ட மேல் உறையும், சுருக்குப் பையும், குடையும் கறுப்புநிறத்திலான தோல்பையில் காகிதத்தில் சுற்றப்பட்டு வைக்கப்பட்டிருந்த மூக்குக் கண்ணாடி என்று எடுத்துவைத்த எல்லாப் பொருள்களையும் மீனினைப் போன்ற கண்களை உடைய அவள் பார்த்து விட்டு அவர்களிடம் பேச ஆரம்பித்தாள்.

## மருமகள் வினா

**"இவையெல்லாம் வண்டிக் குளளே**

**இருந்தன என்றாள், அந்த**

**அவைக்களம் தனிலே நிவீர்**

**எங்குதான் அமர்ந்தி ருந்தீர்?**

சுவைப்புளி அடைத்து வைத்த

தோண்டின் உட்பு றத்தில்

கவர்ந்துண்ணும் பூச்சி கட்கும்

கால்வைக்க இடமி ராதே!”

**மாமி விடை:**

என்றனள். மாமி சொல்வாள்;

“இவைகளின் உச்சி மீதில்

குன்றுமேல் குரங்கு போல

என்றனைக் குந்த வைத்தார்;

என்தலை நிமிர, வண்டி

மூடிமேல் பொத்த லிட்டார்;

உன்மாமன் நடந்து வந்தார்

ஊரெல்லாம் சிரித்த” தென்றாள்.

**மாமன் பேச்சு:**

“ஊரெல்லம் சிரிக்க வைத்தேன்

என்றாளே உன்றன் மாமி!

‘யாரெல்லாம் சிரித்துவிட்டார்?’

எனஉன்றன் மாமியைக் கேள்.

பாரம்மா பழுத்த நல்ல

பச்சைவா ழைப்ப ழங்கள்!

நேரிலே இதனை யும்பார்.

பசுமாட்டு நெய்யின் மொந்தை.

வண்டியில் எவ்வி டத்தில்

வைப்பது? மேன்மை யான

பண்டத்தைக் காப்ப தற்குப்

பக்குவம் தெரிந்தி ருந்தால்

முண்டம்இப் படிச்சொல் வாளா?

என்னதான் முழுகிப் போகும்

அண்டையில் நடந்து வந்தால்”

என்றனன் அருமை மாமன்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே மாமனார் கொண்டு வந்த பொருட்களை எல்லாம் வரிசையாக எடுத்து வைத்தாள். சமையலறையில் சமைப்பதற்கு முன்னர் என்ன சமைப்பது என்று சிந்திக்க ஆரம்பித்தாள் கணவனுக்கு எது பிடிக்கும்? குழந்தைகள் எந்த காய்களை விரும்பி சாப்பிடுவார்கள்? கோல்கள் ஊன்றி நடக்கும் வயதான மாமனார் மாமியாருக்கும் உடம்பிற்கு ஏற்ற உணவு எது? உணவு வகைகளில் எது யார் உடம்பிற்கு ஒத்தக்கொள்ளாது என்றெல்லாம் சிந்தித்து எல்லாக் காய்கறிகளிலும் அவர்களையே பார்த்தாள். சமையல் முடிந்தது. பொரியல் வகையோ பூனையின் கண்ணைப் போன்று ஒளிவீசிடும் படியாக சுவையும், மணமும் கொண்டிருந்தது. பொருளை பெரிதாக நினைக்கமாட்டாள், அணிகலன்களை விரும்பமாட்டாள், தன்னை மணந்தவனுடைய அன்பினையே தன்னுடைய உயிர் என்று நினைக்கும்படியான அன்பு உடையவள்; வறுத்து இறக்கி வைத்திருந்த உருளைக்கிழங்கில் தன்னுடைய கணவனுக்கும் அதிகமான ஆசை என்பதனை எண்ணிய உடன் மெதுவாகச் சிரித்துக்கொண்டாள்.

## எதிர் கால நினைவுகள்:

இளிவாழும் நாள்நி னைத்தாள்

இளையவர் மாமன் மாமி;

நனிஇரங் கிடுதல் வேண்டும்;

நானவர்க் கன்னை போல்வேன்

எனதத்தான் தனையும் பெற்று

வாழ்ந்தநாள் எண்ணும் போதில்

தனிக்கடன் உடையேன், நானோர்

தவழ்பிள்ளை அவர்கட் கென்றாள்.

கிழங்கு வகையிலான உணவினை நன்றாக வேகவைத்தாள். கீரையினைக் கடைந்து வைத்தாள். கொழுத்த காய்களை எடுத்து பச்சடி வைத்தாள். தோட்டத்தில் இருந்த முருங்கைக் காயை தோலைச் சீவி பல்லிலும் உதட்டிலும் மென்று விழுங்கிடும் வகையில் சமைத்து வேண்டிய எல்லாவற்றையும் செய்து முடித்தாள்.

## முதியவருக்குத் துணை:

தூங்கி மாமன், “அம்மா

தூக்கென்னை” என்று சொல்ல

**ஏங்கியே ஓடி மாமன்**

**இருக்கின்ற நிலைமை கண்டு**

**வீங்கிய காலைப் பார்த்தாள்**

**"எழுந்திட வேண்டாம்!" என்றாள்;**

**தாங்கியே மருந்து பூசிச்**

**சரிக்கட்டிப் படுக்க வைத்தாள்;**

அவரது கைகளைத் தொட்டு நாடியினைப் பிடித்துப் பார்த்து கொஞ்சம் காய்ச்சல் (ஜுரம்) உள்ளது என்றுக் கூறி , அதற்கும் உள்ளே முழுங்கும் படியான மருந்து கொடுத்தாள். அதற்குள் அவளது மாமியாள் எனக்கும் தலைவலிக்கின்றது என்றவுடன், மருந்துக் கொடுத்து அவரது நோய் துன்பத்தையும் பற்று போட்டு ஒரே நொடியில் மறைந்திட செய்து விட்டாள்.

## அள்ளி அணைத்தாள் பிள்ளைகளை:

**குழந்தைகள் பள்ளி விட்டு**

**வந்தார்கள்; குருவிக் கூட்டம்**

**இழந்தநல் லுரிமை தன்னை**

**எய்தியே மகிழ்வ தைப்போல்,**

**வழந்தோடும் புதுவெள் ளத்தை**

**வரவேற்கும் உழவ ரைப்போல்,**

**எழுந்தோடி மக்கள் தம்மை**

**ஏந்தினாள் இருகை யாலும்!**

## தலைவி சொன்ன புதுச் செய்தி:

**அன்றைக்கு மணம்பு ரிந்த**

**அழகியோன் வீடு வந்தான்;**

**இன்றைக்கு மணம்பு ரிந்தாள்**

**எனும்படி நெஞ்சில் அன்பு**

**குன்றாத விழியால், அன்பன்**

**குளிர்விழி தன்னைக் கண்டாள்;**

**"ஒன்றுண்டு சேதி" என்றாள்;**

**"உரை" என்றான். "அம்மா, அப்பா"**

**தந்தைதாய் கண்டு "உங்கள்**

**தள்ளாத பருவந் தன்னில்**

**நைந்திடும் வண்ணம் நீங்கள்**

**நடந்திட லாமா?"**

## முதியோர்க்கு:

'நல்ல இனிமையான இளமைக் காலத்தை அடைந்து மகிழ்ந்து விட்டீர்கள். கல்வியும் நல்ல ஒழுக்கமும் அடைந்தீர்கள். மேலும் உண்மையான காதலுடைய இனிய திருமண வாழ்க்கையினையும் பெற்றீர்கள். இல்லறத்தினையும் நன்றாக நடத்தி வெற்றி கண்டுவிட்டீர்கள். மக்களையும் பெற்றீர்கள், உலகில் உள்ள வாழ்வின் இன்பங்களையும் அடைந்தீர்கள், என்னால் ஏதாவது குறை உங்களுக்கு இருக்கின்றதா? ஏன் இன்னும் இப்படிப்பட்டத் துன்பங்களை அடைந்தீர்கள்?'

இளமை அதிர்கின்ற காலங்களில் செய்ய வேண்டிய அறச் செயல்களைச் செய்து, இப்போது முதுமை வருகின்ற காலத்தில் மக்களிடம் ஆட்சிப் பொறுப்பினைப் போன்று எல்லாப் பொறுப்புகளையும் பிள்ளைகளிடம் கொடுத்து விட்டு, எந்த வகையான துன்பங்களும் எதிர்வந்து தொல்லை தராத படியாகவும் பிள்ளைகளையும், பேரக்குழந்தைகளையும் கண்டு மனதினால் மகிழ்ந்து வாழ்கின்ற இடமே வீடாகும், என்று கூறினாள்.

பிள்ளை கூறிய செய்திகளை எல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அவனது தந்தை உணவினை உண்பதற்குச் செல். குழந்தைகளையும் உண்ணச் சொல் என்றார் தந்தை. அவனும் அதனைக்கேட்டு நல்லது அப்பா என்று கூறி வந்து சாப்பிட அமர்ந்தான் அன்பு செய்து மகிழும்படியாக அனைவரையும் அமர்த்தி அவர்கள் மகிழும்படியாக விருந்து போல உணவினைத் தந்து உண்ணும்படியாகச் செய்தாள்.

## யாழ் எடுத்தாள்:

**குளிர்விழி இளந கைப், பூங்**

**குழலினாள் குந்தி னாள்; தன்**

**தளிருடல் யாழ்உ டம்பு**

**தழுவின; இரு குரல்கள்**

**ஒளியும்நல் வானும் ஆகி**

**உலவிடும் இசைத்தேர் ஏறித்**

**"தெளிதமிழ்" பவனி வந்தாள்,**

**செவிக்கெல்லாம் காட்சி தந்தாள்.**

தன் உள்ளத்தில் எழுதி வைத்திருந்த கவிதைக்கு உயிர் கொடுத்ததனைப் போன்று பாட ஆரம்பித்தாள். அவளது இனிய இசையினைக் கேட்டு அவளது கணவன் தன்னை மறந்து மகிழ்ந்து கொண்டிருந்தான்.

### கடையின் நடைமுறை:

**மல்லியை அளப்பார்; கொம்பு**
**மஞ்சளை நிறுப்பார்; நெய்க்குச்**
**சொல்லிய விலைகு  றைக்கச்**
**சொல்லுவார்; கொள்ச ரக்கின்**
**நல்லியல் தொகைகொ டுப்பார்;**
**சாதிக்காய் நிறுக்கச் சொல்வார்;**
**வெல்லம் என்றொரு குழந்தை**
**விரல்நீட்டும் கடைக்கு வந்தாள்.**

### கணவனிடம் கணக்கு ஒப்புவித்தாள்:

**கொண்டவள் வந்தான்; கண்கள்**
**குளிர்ந்திடக் கண்டாள்; "அத்தான்**
**கண்டுள்ள கணக்கின் வண்ணம்**
**சரக்குகள் கடன்தந் தார்க்குத்**
**தண்டலும் கொடுத்தேன்; விற்று**
**முதலினைத் தனியே வைத்தேன்;**
**உண்டங்கு வேலை" என்றே**
**உரைத்தனள்; வீடு சென்றாள்.**

### கடற்கரையில்:

**சிற்றுண வளித்தாள்; பின்பு**
**திரைகடற் கரையை நாடி,**
**பெற்ற தன் மக்கள் சூழப்**
**பெருவீதி ஓர மாகப்**
**பொற்கொடி படர்ந்தாள் தேனைப்**

**பொழிந்திடு பூக்க ளோடு!**

**வற்றாத வெள்ளக் காட்டின்**

**மணற்கரை ஓரம் வந்தாள்!**

## கடற் காற்று:

**கடலிடைப் புனலில் ஆடிக்**

**குளிரினிற் கனிந்த காற்றை**

**உடலி டைப்பூசு கின்ற**

**ஒளிகடற் கரையின் ஓரம்**

**அடர்கிற கன்னப் புட்கள்**

**அணிபோல அலைந டக்கும்**

**நடையொடு நடந்து வீடு**

**நண்ணினாள் மக்க ளோடு.**

## இரவுக்கு வரவேற்பு:

அந்த இரவுப் பெண்ணை வரவேற்க நம் இல்லத்திலிருந்த தலைவி விளக்கினை ஏற்றி வந்து தெருவினில் வைத்து வரவேற்றாள். மேலும் வீட்டின் உள்ளே சென்று அங்குள்ள எல்லா விளக்குகளையும் ஒளி வீசும் படியாக ஏற்றினாள். பின்னர் ஒரு பெரிய பானையில் நெருப்பிட்டு சாம்பிராணி போன்ற வாசம் வரும்படி புகை உண்டாக்கினாள். பெரியவர்கள் எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும் என்று எல்லாவற்றையும் எண்ணுவது போன்று அந்தப்புகை அந்த வீட்டின் எல்லாப் பகுதியிலும் நிறைந்தது.

## அத்தானை எதிர்பார்க்கின்றாள்:

**கட்டுக்குள் அடங்கா தாடிக்**

**கனிந்திடும் தனது செல்வச்**

**சிட்டுக்கள், சுவடிக் குள்ளே**

**செந்தமிழ்த் தீனி உண்ண**

**விட்டுப், பின் அடுக்க ளைக்கு**

**அமுதத்தை விளைவு செய்தாள்**

**எட்டுக்கு மணிஅ டிக்க**

**அத்தனை எதிர்பார்க் கின்றாள்.**

## கட்டில் அழகு:

சிங்கத்தின் கால்கள் நான்கு தாங்குவதனைப் போன்று கட்டில் அமைந்திருந்தது. அதன் மேல் உள்ள பஞ்சணை தலையணைக்ள எல்லாவற்றையும் தட்டி விரித்தாள். இரண்டு தெருக்களைத் தாண்டி மணம் வீசும் படியான சந்தனத்தின் வாசத்தினை பாத்திரத்தில் கரைத்து வைத்துள்ளதனை எடுத்து வருவதனைப் போன்று தென்றல் வருவதற்கு ஏற்ற வகையில் சன்னலைத் திறந்து வைத்தாள். மலையளவு செல்வம் போன்றத் தன்னுடைய கணவனின் வரவினைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

## குழந்தைகள் தூங்கியபின்:

இரவுப் பொழுதில் அல்லிகள் தன் இதழ்களை மூடிவிடும் இரவில் அத்தகைய மலர்களைப் போன்ற கண் இமைகளை மூடியபடி அவளுடைய குழந்தைகள் தூங்க ஆரம்பித்தார்கள்.

## கதவைத் தாழிட்டாள்:

**கண்டுபடுக் கைத்திருத்தி உடைதிருத்திக்,**

**காற்றில்லாப் போதினிலே விசிறி வீசி,**

**வண்டுவிழி திறக்குமொரு குழந்தை 'தண்ணீர்**

**வை' என்னும், ஒன்று தலை தூக்கிப் பார்க்கும்**

**பண்டிதர்கள் பழங்கதையின் ஓட்டைக் கெல்லாம்**

**பணிக்கையிடல் போல் அனைத்தும் தணிக்கைசெய்தே**

**ஒண்பசு, நற்கன்றுக்கு வைக்கோல் ஈந்தே**

**உட்கதவு, வெளிக்கதவின் தாழ்அ டைத்தாள்.**

## கட்டிலண்டை மங்கை:

விடியற்காலையிருந்து இந்த இரவு நேரம் வரையிலும் நாம் அடுக்கடுக்காய் தொடர்ந்து பலசெயல்கள் செய்கின்றோம். ஆனால் அவை எல்லாமே நம்முடைய நன்மைக்காக மட்டுமே செய்யப் பட்டவை ஆகும். இதுவரையிலும் நாம் பொதுநலத்துடன் என்ன செய்துள்ளோம்? செய்யவேண்டும் என்று கூட நாம் நினைத்துக்கூட பார்க்கவில்லை.

## தமிழ் படிக்கவேண்டும் எல்லாரும்:

**"அப்படியா! அறியாத படியால் சொன்னேன்,**

**நந்தமிழர் படிப்படியாய் முன்னேற் றத்தை**

**எப்படியா யினும்பெற்று விட்டால் மக்கள்**
**இப்படியே கீழ்ப்படியில் இரார்க ளன்றோ?**
**மெய்ப்படிநம் மறிஞரின் சொற் படிந டந்தால்,**
**மேற்படியால் செப்படி வித்தை பறக்கும்,**
**முற்படில் ஆகாததுண்டா? எப்ப டிக்கும்**
**முதற்படியாய்த் தமிழ்படிக்க வேண்டும்" என்றாள்.**

### தமிழ்நாடு தலைதூக்க உயிரையும் தருவேன்:

**"இழந்தபழம் புகழ்மீள வேண்டும் நாட்டில்**
**எல்லோரும் தமிழர்களாய் வாழ வேண்டும்,**
**வழிந்தொழுகும் சுவைத்தமிழே பெருக வேண்டும்,**
**மாற்றலர்கள் ஏமாற்றம் தொலைய வேண்டும்,**
**விழுந்தமிழ் நாடுதலை தூக்க என்றன்**
**உயிர்தனையே வேண்டிடினும் தருவேன்" என்றான்;**
**"பழம்இடுவேன் சர்க்கரைப்பால் வார்ப்பேன் உங்கள்**
**பண்பாடும் வாய்திறப்பீர் அத்தான்" என்றாள்.**

## விருந்தோம்பல்

### தலைவன் கடைக்குச் சென்றான்:

### தலைவி விருந்தினரை வரவேற்றாள்:

### விருந்தினர் வரவை மாமன் மாமிக்கு...

வந்த விருந்தினர்கள் அவளைப்பார்த்து தங்களுடைய மலர்போன்ற வாயின் இதழ்களை விரித்து 'என்னுடைய தாய் போன்றவளே. நாங்கள் வந்தவுடன், எங்களை உட்கார வைத்து வயிறு முட்டும் அளவிற்கு உணவுகளைக் கொடுத்தாய். பலாப்பழத்தினைப் போன்று எங்களுடைய வயிறு உன் உபசரிப்பால் பெருத்து விட்டது அதோடு மட்டுமின்றி நிலவினைப் போன்ற பலகாரங்களையும் கொடுத்தாய். அதனையும் நாங்கள் சாப்பிட்டு விட்டோம். இப்போது தான் அமைதியாக இருக்கின்றோம்' என்று கூறினார்கள். அதனைக் கேட்ட அவள் 'அப்படியா! என்று கூறியபடி கொஞ்சநேரம் எனக்கு அனுமதி கொடுங்கள். உங்களுடைய அருமையான தோழரைப் பெற்றெடுத்த என்னுடைய மாமனார் மாமியார் உள்ளே இருக்கின்றார்கள். அவர்களிடம் நீங்கள் வந்துள்ள செய்தியினைச் சொல்லி விட்டு வருகின்றேன்' என்று கூறினாள். அவரது மனைவி மலக்குழலி அம்மையாரும் அவர்களது

மகன் நாவரசும் மகள் நகைமுத்தும் அனைவரும் வந்துள்ளார்கள்' என்று மாமனார் கேட்கும் படியாகக் கூறினாள்.

## மாமன் மாமி மகிழ்ச்சி:

விருந்தினர் வந்த செய்தியைக் கேட்ட மாமனார் மகிழ்ச்சியுடன் வந்தார்களா? மிகுந்த மகிழ்ச்சிஅ ம்மா வந்தவர்களைப் பார்ப்பதற்கோ அல்லது அவர்களிடம் மகிழ்ச்சியாகப் பேசும் படியாகவோ நான் இல்லை. விருந்தினர்களிடம் நான் மன்னிப்புக் கேட்டதாய் சொல். வேண்டியதைச் செய்திடு. நல்ல தமிழர்களின் புகழுக்குக் காரணம் அவர்கள் வந்த விருந்தினரை தங்களுடைய உயிர் போன்று மகிழ்ந்து உபசரித்தல் பண்பே ஆகும்.

## மாமி மருமகளுக்கு:

**"முன்வைத்த முத்துத்**

**தயிரிருக்கும்,-பின்னறையில்**

**பண்ணியங்கள் மிக்கிருக்கும்**

**பழமை படாத**

**வெண்ணெய் விளங்காய்**

**அளவிருக்கும் -கண்ணே,**

**மறக்கினும் அம்மாவென் (று)**

**ஓதி மடிப்பால்**

**கறக்கப் பசுக்காத்**

**திருக்கும் -சிறக்கவே**

**சேலத்தின் அங்காடிச்**

**சேயிழையார் நாள்தோறும்**

**வேலைக் கிடையில்**

**மிகக்கருத்தாய் - தோலில்**

**கலந்த சுளைபிசைந்து**

**காயவைத்து விற்கும்**

**இலந்தைவடை வீட்டில்**

**இருக்கும் - மலிந்துநீர்**

**பாய்நகர் கோயில்**

**பலாச்சுளையின் வற்றலினைப்**

**போய்நீபார் பானையிலே**

**பொன்போலே! - தேய்பிறைபோல்**

**கொத்தவரை வற்றல்முதல்**

**கொட்டிவைத்தேன். கிள்ளியே**

**வைத்தவரை உண்டுபின்**

**வையாமைக்-குத்துன்பம்.**

பயிற்றம் பருப்பினால் செய்யப்பட்ட பாகுபோன்ற பாயாசம் வகையான உணவுக்கும் நெய்யினை ஊற்ற வேண்டும். காய்ச்சப் பெற்ற ரசத்தினுக்கும் பாயச உணவிற்கும் நல்ல தொன்னைகளை வைத்து அவர்கள் வாயில் அருந்தும் வகையில் பரிமாறிடவேண்டும். நன்கு சுத்தமாகத் துவைக்கப்பட்ட துண்டினையும் கொடுத்து 'ஈரத்தினைத் துடைத்துக் கொள்ளுங்கள்' என்று கூறவேண்டும். மேலும் அவர்கள் பூசிக்கொள்ள சந்தனம் கொடுத்து, வெற்றிலை - பாக்குகளையும் கொடுத்து, விசிறியால் வீசி விடவேண்டும் மென்மையானவளே என்று மாமியார் கூறிமுடித்தார்.

## தலைவி விருந்தினரிடம்:

**கால்வலியும் காணாக்**

**கனிமொழியாள் - வேல்விழியை**

**மிக்க மகிழ்ச்சி**

**தழுவ விடைபெற்றுத்**

**தக்க விருந்தினர்பால்**

**தான் சென்றே-**

**"ஒக்கும்என்**

**அன்புள்ள அம்மாவே,**

**ஐயாவே, அம்முதியோர்**

**என்பு மெலிந்தார்**

**எழுந்துவரும் - வன்மையிலார்**

**தாய்வந்தாள் தந்தைவந்தான்**

**என்றுரைக்கத் தான்கேட்டால்**

**சேய்வந்து காணும் அவாத்**

தீர்வானோ-வாயூறிப்

உங்களைக் காண்பதற்கு வர இயலாமையை எண்ணி வருந்தி - உங்களிடம் மன்னிப்புத் தரமுடியுமா? என்று கேட்டு வருந்தினார்கள் என்று கூறினாள் அந்த இல்லத்தின் தலைவி.

## தலைவிக்கு விருந்தினர்:

**"நன்றுரைத்தீர் நாங்கள் போய்க்**

**காணுகின்றோம்" - என்றுரைத்தனர்.**

தலைவி கூறியதனைக்கேட்ட விருந்தினர்கள், 'நன்றாக இயக்கின்றது நீங்கள் சொல்வது; நாங்களே போய் அந்த வயதானவர்களைப் பாக்கின்றோம்' என்று கூறினார்கள்.

## விருந்தினர் அமர்ந்திட அறையினைத் தயார் செய்தாள்:

**அன்பு விருந்தினர்கள்**

**அங்கு வருவதனைத்**

**தன்மாமன் மாமியார்பால்**

**சாற்றியே-பின்னர்**

**அறையை மிகத்தூய்மை**

**ஆக்கி, அமர**

**நிறையநாற் காலி**

**நெடும்பாய் - உறஅமைத்துச்**

**"செல்லுக! நீர்" என்றுரைத்தாள்**

**செல்வி; விருந்தினர்கள்**

**செல்லலுற்றார் சென்றே**

**வணக்கமென்று - சொல்லலுற்றார்.**

## தலைவி விருந்து வந்த பெண்ணாளிடம்:

**நின்றிருந்த வீட்டின்**

**நெடுந்தலைவி - நன்றே**

**விருந்துவந்த பெண்பால்**

**விரும்பிய வண்ணம்**

**இருந்தொருபால் பேசி**

**இருந்தாள் - பொருந்தவே**

அவர்கள் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த அந்த வீட்டின் தலைவி, தன்னுடைய வீட்டிற்கு வந்துள்ள விருந்தினரில் அந்தப் பெண்ணிடம் ஒருபக்கம் நல்லமுறையில் விரும்பிய செய்திகளைப் பேசிக் கொண்டிருந்தாள்.

## நாவரசும் நகைமுத்தும்:

**நாவரசும் முத்தாள்**

**நகைமுத்தும் வீதியிலே**

**பூவரச நீழலிலே**

**போய் அமர்ந்தார்**

நாவரசும் நகை முத்துவும் தெருவில் இருந்த பூவரசம் மரத்தின் நிழலில் போய் உட்கார்ந்தார்கள்.

**-மாவரசர்**

**தம்சேதி கூறிப்பின்**

**தங்களுடல் முன்னைவிடக்**

**கொஞ்சதம் இளைப்பென்று**

**கூறிடவே-**

நாவரசர் தன்னுடைய செய்திகளை எல்லாம் கூறிய பின்னர் தங்களுடைய உடல் முன்பை விடவும் கொஞ்சம் இளைத்துவிட்டது என்று கூறினார்.

## முதியவர்தம் பழைய நினைப்பு:

அதனைக் கேட்டவுடன், இன்னும் கூட மீதியாக நம்முடைய இளமைப்பருவம் இருக்குமா? என்று கிழவர் கூறினார். இப்போது உள்ள இந்த சட்டை முன்னர் தைத்த அளவில் மூன்றில் ஒன்றுதான் உள்ளது. மூங்கில் போன்று வளைந்து விட்டது என்னுடைய எலும்புகள். மின்னும் மாவிலையின் தளிர்போன்று மின்னக்கொண்டிருந்த என்னுடைய உடம்பு இப்போது தளதளவென்றுத் தளர்ந்து விட்டது. இளமையின் அழகினை எல்லாம் - நாம் இப்பொது நினைத்தாலும், நம்முடைய வலிமையாலன தோள்களா இப்படியெல்லாம் இருந்தது? செயல்புரிந்தது? என்று எனக்கே சந்தேகமாக இருக்கும். இளமைப்பருவம் என்பது காட்டாற்றினை போன்றது அல்லவா? அப்போது நடந்த சில நிகழ்ச்சிகளைக் கூறுகின்றேன் கேளுங்கள்; எனப் பல செய்திகளை கூறினார்.

## இல்லறமே நல்லறம்:

துறவு வாழ்க்கை பிடிக்காது என்று கூறிய முதியவர், அதற்குரிய காரணத்தினையும் சொல்ல ஆரம்பித்தார். ‘தான் மட்டும் தனியாக இருந்து இன்பம் அடைய முடியுமா? நல்லதேன் போன்ற இனிக்கும் இதழ்களை உடைய ஓர பெண்ணின் துணையில்லாமல் ஒரு குழந்தையின் இன்பத்தினையும் நாம் அடைய முடியாது. உலகில் உள்ள செயல்களின் மூலம் இன்பத்தினை அடைவதன்றி, உலகத்தைத் துறந்த துறவு வாழ்க்கையில் இன்பம் ஏற்படுமா?

உறவினர்கள் என்று சொல்பவர்களும் எனக்குத் தேவையில்லை. இந்த ஊரில் உள்ளவர்களும் தேவையில்லை. எந்த விதமான புகழும் எனக்கு வேண்டாம். கற்றறிந்தவர்களின் தொடர்பால் ஏற்படும் இன்பமும் எனக்கு வேண்டியதில்லை பார்த்துப் பார்த்து மகிழ்ந்திட விரும்பி என்னைப் பெற்றெடுத்த தாய் தந்தையர்களும் எனக்கு வேண்டியதில்லை. தமிழும் வேண்டாம் நம்முடை தாய் நாட்டினை ஓய்வின்றி உழைத்து உயர்ந்திடச் செய்திடும் வலிமையும் எனக்கு வேண்டியதில்லை.

கண், மூக்கு, வாய், உடம்பு, காது என்கிற ஐம்புலன்களும் தேய்ந்து தன்னுடைய செயல்பாடுகளை இழந்து இந்த உடல் தளர்ந்து போகின்ற நிலையில் கிடைக்கக் கூடிய பேரின்பம் தான் எனக்கு வேண்டும் என்று கூறுபவர்கள் சொல்வது இல்லாமல் வேறு எந்தப்பயனையும் அவர்கள் அடையவில்லை. அப்படியாராவது இருந்தால் அவர்களை எங்களுக்குக் காட்டிடுங்கள்; என்று கேட்டால் ‘வாழ்ந்தவர்கள் பார்க்கவில்லை, பார்த்தவர்கள் வாழவில்லை’ என்று கூறி ஒருபெரிய முழு பூசனிக்காயினை இலையில் உள்ள சோற்றில் நன்றாக மறைக்க முயல்கின்றார்கள்.

## நாட்டுக்குத் தொண்டு:

வழிமுறைகளால் யாருக்கு நன்மை உண்டாகும், உடுக்கின்ற உடைக்கும், உணவினுக்கும் உறங்குவதற்கும் தங்குவதற்கும் வேண்டிய இடத்தினையும் பெறுவதற்கு வேண்டியது பணம். அதனை அடைவதற்கு வேண்டியது ஒரு தொழில். ஆனால் அதற்கும் வழியில்லை. கல்வி அறிவினைப் பெறவேண்டும் என்று நினைக்கக் கூடிய யாவருக்கும் எல்லோரும் கல்வி பெறும் வகையிலான கல்விநிலையங்கள் இல்லை. கேட்டால் அதற்குவேண்டிய அளவிலான பொருள் இல்லை என்று கல்வித்துறையில் கூறுகின்றார்கள். செம்மையான தமிழினை உடைய இளைஞர்களுக்கு செய்யும் உரிமைகிடையாது. எல்லோரும் ஒரே வகையினர்தாம் என்ற எண்ணம் இன்னும் யாருக்கும் உயர்வான நிலையில் வளரவில்லை. ஒற்றுமைதான் நன்மையினைத் தரும் என்கிற எண்ணமும் செயல்படவில்லை. இன்றைக்கு இந்த உலகம் முழுவதும் நம் தமிழர்களின் வாழக்கையானது மற்றவர்களால் வெறுக்கும்படியான நிலையிலேயே உள்ளது. இதனைக் கண்ட பின்பும் கூட இன்றும் நம்

நாட்டில் சாய்பாபாவின் பெயரைச் சொல்லி பொருளை தட்டிப் பறிக்கின்ற நிலையும் பாபாவின் அருள் நிலைகள் என்றுச் சொல் ஏமாற்றுகின்ற வாய்வார்த்தைகளும் இவைபோல பல செயல்கள் நடைபெறுகின்றன.

இவைமட்டுமின்றி ஒழுக்கத்தினை பின்பற்ற வேண்டும். பொறாமைக் குணம் நம்மிடம் இருந்தால் அது நம் நாட்டினையே நாம் இழந்து விடுவதற்கு வகை செய்துவிடும். இதில் பொய்யில்லை. மக்களிடத்தில் உயர்வு தாழ்வு என்கிற மனப்பான்மை மாறவேண்டும்.

## காதல் வாழ்க்கை:

நிலையில்லாமல் அலைகின்ற தன்மையுடைய மனதினைக் கவர்ந்தவளின் உள்ளத்தினில் தானும் கவர்வது கலந்து வெள்ளம் வெள்ளத்துடன் கலந்ததனைப் போன்று உயர்ந்த நிலையில் பொங்கி வழியும்படியான அன்புநிலையில் இருவரும் கலந்து திருமணம் செய்திடுதல் வேண்டும். அத்தகைய திருமணமும் பழைய காலத்திலான திருமணமுறை என்றும் அந்தணர்களைக் கொண்டு செய்யப்படுகின்ற அனைத்து நிலைகளையும் கடந்து பதிவுத் திருமணம் நிகழ்த்துவதே சிறப்பாகும். இது நம்முடைய கடமையாகும்.

அந்த மணவாழ்க்கையில் அன்பால் அவளும் அவனும் இணைந்து வாழவேண்டும். அதில் அவளுக்கு எதாகிலும் துன்பம் ஏற்படுகின்றபோது அந்தத் துன்பம் அவனுக்கு வந்ததாக அவனும், அவனுக்கு ஏதாவது துன்பம் ஏற்படுகின்றபோது அந்தத் துன்பம் தனக்கு ஏற்பட்டதாக அவளும் எண்ணிடவேண்டும் அப்படிப்பட்ட இநித சுவையான இன்பம் தருகின்ற வாழ்வினைத்தான் நல்லவர்கள் - துன்பமில்லாத காதல் வாழ்க்கை என்று கூறியுள்ளார்கள். அப்படிப்பட்டதான காதல் தான் சாகின்ற வரைக்கும் தழைத்து ஓங்கி நிற்கும்.

காதல் கொண்டவர்களின் வாழ்க்கையில் ஏதாவது அவர்களுக்குள் துன்பம் ஏற்பட்டு மனதில் வேறுபாடுகள் தோன்றி அவர்களுக்கிடையே பிளவு ஏற்பட்டுவிட்டது. என்றாலும் அந்தப் பெண் வேறு ஒரு ஆடவனை மணந்திடுவதற்கு அனுமதி அளிக்க வேண்டும். அவ்வாறே ஆடவனும் வேறு ஒரு பெண்ணை மணந்து கொள்ளலாம். கூடிவாழ்கின்ற மணமக்களாக உள்ளவர்கள் மனதில் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டியது என்றென்றும் நிலைத்த இன்பத்துடன் கூடி இல்லறத்தில் வாழ்ந்திடுவதுதான் ஆகும்.

## மக்கட்பேறு:

நல்லமக்கள் செல்வத்தைப் பெற்றிடுவதைனப் பற்றியும் நான் ஒரு செய்தி கூறுகின்றேன். குழந்தைகளை அளவுக்கு அதிகமாகப் பெற்றிடாமல் அளவுடன் பெற்றுக் கொள்ள வேண்டும் அப்படி அளவிற்கு மேலாக பிள்ளை வேண்டாம் என்று நினைத்தால்

சேர்ந்த இன்பத்தைத் தவிர்த்திட வேண்டும். அதுவும் இயலாது என்றால் கருத்தடையாவது செய்து கொண்டுவிட வேண்டும். தேவையற்ற நிலையில் கரு என்பதான நோயினை அடைந்து பிள்ளை பெற்றால், அய்யோ! நினைத்துப் பார்க்கவே பயமாக உள்ளது. அந்தப் பிள்ளையால் இந்த உலகத்திற்கு எந்தவிதமான பயனும் இல்லை.

## பெண்கல்வியின் அவசியம்:

**பெண்கட்கு கல்வி வேண்டும்**

**குடித்தணம் பேணு தற்கே!**

**பெண்கட்குக் கல்வி வேண்டும்**

**மக்களைப் பேணு தற்கே!**

**பெண்கட்குக் கல்வி வேண்டும்**

**கல்வியைப் பேணு தற்கே!**

'பெண்களுக்கு கல்வியானது மிகவும் அவசியம். தன்னுடைய குடும்பத்தை நல்லமுறையல் கவனிப்பதற்கும் கல்வி உதவுகின்றது. குழந்தைகளை நல்ல முறையில் வளர்ப்பதற்கும் பெண்களுக்குக் கல்வியானது மிகவும் அவசியம் ஆகும். உலகினைக் காப்பதற்கும் பெண்களுக்குக் கல்விவேண்டும். பெண்களுக்குக் கல்வி மிகவும் அவசியம் கல்வியினை வளர்ப்பதற்கும்'.

இத்தகையதான பெருமைகளை உடைய கல்வி அறிவு இல்லாத பெண்கள் நல்ல விளைச்சலைத்தர முடியாத களர்நிலம் போன்றவர்கள் ஆவார்கள். அத்தகைய நிலத்தினில் புற்கள் வேண்டுமானால் முளைக்கும். ஆனால் நல்ல பயனுடைய விளைச்சல் கிடைக்காது அவ்வாறே கல்வி இல்லாத பெண்களின் வயிற்றில் நல்ல பண்புடைய பிள்ளைகள் பிறக்க மாட்டார்கள். ஆனால் கல்வி அறிவினை உடைய பெண்கள் என்பவர்கள் பண்படுத்தப்பட்ட வயலினைப்போன்றவர்கள். ஆகவே அங்கே நல்ல அறிவுடைய பிள்ளைகள் பிறந்திடுவார்கள் என்று நான் உறுதியாகக் கூறுகின்றேன்.

## இன்றைய பெண்களின் அடிமைநிலை:

வானில் பறக்கும் தன்மையுடைய ஆகாய விமானத்தை ஓட்டிடுதல், உலகினைச் சூழ்ந்துள்ள கடல் முழுவதனையும் அளந்து ஆராய்ந்து அறிதல் என்ற எல்லாச் செயலும் ஆண், பெண் வேறுபாடு இல்லாமல் செய்யக் கூடிய தாகும். ஆனால் இன்றைய நாட்களில் உலகில் உள்ள ஆடவர்கள் தங்களுடைய அடிமை முறையினால் பெண்களுக்குச் சுதந்திரம் இல்லாமல் போய்விட்டது.

இன்றைய நாட்களில் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள பணிகளைப் பற்றிய செய்திகளை எல்லாம் தங்கம் போன்ற ஒரு கையினாலும், அவர்களது விடுதலைக்காக எழுப்பப்பட்டுகின்ற செயல்களைப் பற்றி மலர் போன்ற மற்றும் ஒரு கையினாலும் எழுதத் தொடங்கிட வேண்டும். கல்வி அறிவு இல்லாத மின்னலைப் போன்ற பெண் வாழ்வில் என்றும் ஒளிவீசிட முடியாது என்பதனையும் நான் கூறுகின்றேன்.

சமையல் செய்வதும், வீட்டில் உள்ள மற்ற வேலையைச் செய்திடுதல் மட்டும் தான் சலிப்பில்லாமல் செய்தால் தான் பெண்களுக்குரியது என்று கூறுவது சரீயானதாக இல்லை. ஆண்கள் அந்த வேலைகளைத் தாய்களும் செய்வதில் எந்தவிதமான தப்பும் கிடையாது என்று நினைக்கின்ற நல்லநாளினை நாம் காண வேண்டும். சமையல் செய்வது என்பது இழிவான வேலையா என்ன? சயைல் செய்பவர்கள் உணவினை மட்டுமின்றி இன்பத்தினையும் சேர்த்தே நமக்கு சமைத்துத் தருகின்றார்கள்.

உணவினை உண்டாக்குவது என்பது மக்களின் உணிரினையே உண்டாக்குவதற்குச் சமமாகும். வாழ்வது என்பது நம் பணத்தினால் மட்டும் முடிவு ெய்யப் படுகின்ற செயல் இல்லை. வில், வாள் போன்ற படைக் கருவிகளாலும் கிடைப்பது இல்லை. நெருப்பை அடுப்பில் சேர்த்து சமைத்தவர்கள் அன்போடு நமக்குப் பரிமாறுகின்ற உணவினால் தான் நாம் உணிருடன் வாழ்கின்றோம்.

சமையல் செய்வது என்பது பெண்களுக்குத் தவிர்க்க முடியாத கடமை என்றும், சமையல் செய்யும் தொழிலானது நல்ல பெண்களுக்கு மட்டுமே ஏற்ற ஒரு வேலை என்றும் நம்முடைய தமிழ்த்திருநாட்டில் உள்ள சட்டத்தினை ஒரு நொடியினில் இங்கிருந்து விரட்டவேண்டும் என்றால் அதற்குப் பெண்கல்விதான் எல்லா இடங்களிலும் பரவவேண்டும்.

## கல்வி:

அம்மா! நீங்கள் சொன்னபடி அனைத்து வகையான முன்னேற்றங்களுக்கும் கல்விதான் அவசியம் தேவை! சிறந்த பொருள்கள் ஒவ்வொன்றின் பண்புகளையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்! இந்தமக்களிடத்திலிருந்து நான் உயர்ந்தவன்; அவன் தாழ்ந்தவன் என்ற எண்ண்ங்கள் என்றைக்குத்தான் ஒழிந்துபோகுமோ தெரியவில்லை? ஆனால் அது மறைந்து போனால்தான் நமக்கு நன்மை உண்டாகும்.

என்றெல்லாம் விருந்தினராக வந்த அந்த மலர்க்குழலி பேசினாள். அங்கே அழகிய பூவரசமரத்தின் நிழலின் நடுவினில் அமர்ந்தபடி சிரித்தமுகத்துடனும் நாவரசனான இளையவன் பேசிக் கொண்டிருந்தான். நாம் சென்று அந்த நகைமுத்துவிடம் உரையினைக் கேட்போம்.

## நாவரசன் நகைமுத்து உரையாடல்:

மனிதர்களே மனிதர்களை அமரவைத்து இழுத்துச் செல்லும் படியதான அழகிய வண்டிகள் இந்த ஊரில் இருக்கின்றது. ஆனால் நம் வில்லியனூரில் இப்படிப்பட்ட வண்டிகள் கிடையாது. அதற்கு என்ன காரணம் அக்கா என்று இளைவனான நாவரசன் கேட்டான்.

## நகைமுத்து:

நகைமுத்து என்பவளும் சிரித்தபடியே பதில் கூற ஆரம்பித்தாள். கல்வியானலும் செல்வத்தினாலும் இந்த உலகில் உள்ளவர்களிடம் இன்னும் தொலையாமல் இருக்கின்ற ஏற்றத்தாழ்வுதான் இதற்குக் காரணம் . வண்டியினை இழுக்கின்றவன் ஏழை. அதில் ஏறிர் அமர்ந்து வருபவன் பணம்படைத்தவன். இந்த இருவரும் ஒரே சமமான நிலையினை என்றைக்கு அடைகின்றோமோ அன்றுதான் மனிதர்களை மனிதர்களே வண்டிச் சுமைபோல இழுத்துச் செல்லும் நிலைமாறும். அத்தகையதான நிலைவருகின்ற நாளில் தானாகவே ஓடும் தன்மையுடைய விலங்குகள் இழுக்கும் வண்டிகளில் எவரையும் எற்றிச் செல்லும் முறை வந்துவிடும்.

## திராவிடரின் பெருமை:

திராவிட நாடு நம்முடைய நாடு - நல்ல திராவிட மொழியே நம்முடைய பேச்சு! திராவிட இனத்தைச் சேர்ந்தவர்கள் நாம் என்று மகிழ்ந்திருந்தோம்! திராவிடர்கள் என்று சொல்லியே நம்முடைய வாழ்க்கையினை வளர்த்துக் கொண்டிருக்கின்றோம். பேசும் உரைகளிலும் எழுத்தாக எழுதும்போதும், செயல்பாடுகளிலும் மற்றவர்கள் உருவத்தை மட்டும் காட்டிக் கொண்டிருந்த முறைகளை ஒழித்து விட்டோம்! புகழ்வேண்டும் எப்போதும் என்று நினைப்பவர்கள், இறந்த பின்பும் தன்புகழ் ஓங்கிட வேண்டுமானால் அனைவரும் ஒருவரே! அனைவருக்குள்ளும் அன்பு பாராட்டி ஒற்றுமையை வளர்த்திட வேண்டும் என்று எண்ணி செயல் செய்தலே உயர்ந்த திராவிடர்களின் இரத்தத்திலும் உள்ள நினைவாகும்.

வேடப்பன் அழகான தமிழ்ப்பாடலைப் பாடி நம்முடைய உள்ளமான மாடப்புறாவினை வளைத்துப் பிடித்துவிட்டதற்கு நன்றி என்று கூறினார் மாவரசர். அந்தத் தலைவியும் வேறு ஒன்று பாடும்படிக் கேட்டாள் மகிழ்ச்சியுடன்.

## பெண்களும் கலைகளும் நகைமுத்து:

‘கலையில் பெண்கள் பழகவேண்டும். பல வகையான கலைகளை பெண்கள் பழக வேண்டும். தங்களுடைய தாழ்ந்த நிலையிலிருந்து உயர்ந்திட வேண்டும் பெண்கள் உலகம்! மலையின்மீது ஏற்றிவைத்த விளக்கினைப் போன்று உயர்ந்திட வேண்டும். பெண்கள்

பல்வேறுவிதமான கலைகளைக் கற்றுத் தேர்ந்துவிட்டால் கீழாக நினைக்கின்ற இந்த உலகம் உன்னை உயர்ந்தநிலைக்கு அழைத்துச் செல்லும் தானாக' என்று நகைமுத்து பாடினாள். எவ்வளவு இன்பமாக உள்ளது? என்று அவளைப் பாடிடும்படிச் சொன்ன தலைவி மகிழ்ந்தாள். மற்ற குழந்தைகள் ஆளுக்கொன்று பாடினார்கள். பாடியதனைக் கேட்பதற்காகக் காதினைக் கொடுத்துவிட்டு அனைவரும் அங்கேயே அமர்ந்திருந்தார்கள்.

**நாவரசு:**

தலையை விரித்துக் கொண்டாய்; உடல் இளைத்திருந்தாய்; ஒரே காலில் நின்று கொண்டிருக்கின்றாய்! தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கு குலை தள்ளி, தேங்காயும், குளிர்ச்சியான இளநீரினையும், கூரை போடுவதற்கு வேண்டிய பொருளையும் தந்தாய்.

## வீட்டுப்பிள்ளை (முதல்வன்):

**ஊர்ஏரிக் கரைதனிலே என்னிளமைப்**
**பருவத்தில் இட்டம கொட்டை**
**நீரேதும் காப்பேதும் கேளாமல்**
**நீண்டுயர்ந்து பல்லாண் டின்பின்**
**வாராய்என் றெனைஓலை விசிறியினால்**
**வரவேற்று நுங்கும் சாறும்**
**சீராகத் தத்ததெனில், பனைபோலும்**
**நட்புமுறை தெரிந்தா ருண்டோ?**

## வீட்டுப்பிள்ளை (இரண்டாமவன்):

**காணிக்குப் புறத்தேழர் பதிவிட்ட**
**மாநட்டுக் கண்கா ணித்துக்**
**கேணித்தண் ணீர்விடுத்தேன் பின்நாளில்**
**அதன்நிழலின் கீழ்இ ருந்தேன்**
**மாணிக்க மாம்பழந்தான் மரகத்தின்**
**இலைக்காம்பில் ஊஞ்ச லாடச்**
**சேண்எட்டும் கோலெடுத்தேன் கைப்பிடித்தேன்**
**வாய்வைத்தேன் தேன் தேன் தேனே.**

இலையினைக் கிள்ளினால் பால் கொட்டும் தன்மையுடையதான பச்சை இலைகள் தங்கத்தினால் செய்யப்பட்ட காம்புகளின் இடையில் சுற்றப்பட்டக் கிளைகள் உணர்ந்து நின்றபடி அடர்ந்த தன்மையுடையதான பலாமரத்தினைப் பார்ப்பதற்கு சின்ன யானைக் குட்டியினைப் போன்று இருந்தது. அதில் மணம் வீசும் தன்மையுடைய பலாப்பழங்கள் பழுத்துக் கிடந்தன. நிமிர்ந்து பார்க்கின்ற போதினில் நம்மில் புதுமையான உணர்வுகள் தோன்றும்படிச் செய்திடும் வகையில் மேல் கிளைகளிலும் நடுவினிலும், வேரினிலும் மணம் வீசும்பலா நன்றாகப் பழுத்துக் கிடக்கும்.

## வேடப்பன்:

படிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் அறைக்குச் சென்ற வேடப்பன் அங்கே நூல்களைப் பிரித்துப் பார்த்தான். ஆனால் அவனுடைய விரிந்த கண்கள் அந்த நூலில் இருந்த செய்திகளில் பதியவில்லை. இதுவரையில் பிறந்த பெண்களிலும், இனி பிறக்கப் போகும் பெண்களிலும் அந்த அழகு முழுமையாக நிறைந்துள்ள நகைமுத்தினைப் போன்ற பெண்கள் யாரும் இல்லை என்று நினைத்தான். தன்னுடைய இனிய பேச்சினால் சிறப்பான நம்முடைய தமிழினிற்கு பெருமை ஏற்படும் விதமாகவே செயல்படுகின்றாள். சிற்பக் கலையில் புதியவகையான சிற்பம் இவள்தான் என்று போற்றி புரட்சியினை சிற்பக்கலையில் பரப்பிடும் வகையில் பிறந்தவள் இவள்.

அவளுடைய அடுக்கி வைக்கப்பட்டதனைப் போன்ற இரண்டு உதடுகளின் இடையில் சிரிப்பு தோன்றுகின்ற போதெல்லாம், நீதிநெறிகளுக்கும் ஒழுக்கத்திற்கும் கட்டுப்பட்டு வாழ்கின்ற அவளுடைய மனதினையும் நாம் வெளிப்படையாகக் காண முடிகின்றது. மடுவில் தேக்கி வைத்திருந்த தண்ணீரினை புன்செய் நிலத்தினை உடைய உழவன் ஆவலுடன் பார்ப்பதனைப்போன்று அந்த பெண்ணும் என்னைப் பார்க்கின்றாள். ஆனாலும் அதில் வேறு ஏதாவது எண்ணம் கலந்திருக்குமோ? என்னவோ? அய்யோ? எனக்கு அவள் கிடைப்பாளா? அல்லது அவள் கிடைக்காத காரணத்தினால் அந்தக் கவலையில் நான் துன்பம் அடைவேனா? அவள் ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து நடக்கின்ற போது அசைகின்ற இடையினை உடையவளான அந்தப் பெண் இன்பத்தினை ஒட்டுமொத்தமாகக் களஞ்சியத்தில் சேர்த்து வைத்ததனைப் போன்ற தன்மையினள். நல்ல அழகினால் கிடைக்கும் வெற்றியினைப் போன்றவள்.

இலக்கியத்தில் இதுவரையிலும் தன்னுடைய மனதினைச் செலுத்தியபடி இருந்தான் வேடப்பன். அந்த நேரத்தில் அவனுடைய தந்தை வீட்டிற்குள் வந்ததனையும் அவன் உணரவில்லை. அதோடு மட்டுமின்றி வேகமாக அதிர்வுகள் ஏற்படும்படியாக நடக்கக்கூடிய மாவரசும், அவருடைய மனையியும் கூட அங்கே வந்துவிட்டார்கள் என்பதனையும் அவன்

உணரவில்லை. அவனுடைய தாய், அவனுக்கு எதிரேவந்து, ‘வேடரப்பா’ என்று அழைத்தவுடன்தான் ‘அம்மா’ என்று எழுந்து சாப்பாடு பரிமாறப்பட்டிருப்பதனைப் பார்த்தான்.

நகைமுத்து பசியில்லையென்று கூறிவிட்டாள். நல்லது என்று மலர்க்குழலி சொல்லிவிட்டுப் போய்விட்டாள் முத்துக்கள் அதிகமாக் கொட்டிக் கிடந்தாலும், ஏதாவது ஒரு முத்து நம் மனதை கவர்ந்து விட்டால், அதிலிருந்து நம் மனதை மாற்றிக் கொள்ளுதல் என்பது முடியாததாகும். வீட்டிலிருந்தவர்களுடன் வந்த விருந்தினர்களும் சேர்ந்த அமர்ந்திருந்தார்கள். அனைவருக்கும் அன்புள்ளம் கொண்ட அந்த இல்லத்தின் தலைவி மிகுந்த மகிழ்ச்சியுடன் மலர்ந்த மலரினைப் போன்ற முகத்துடன் உணவு பரிமாறினாள். உணவு வேண்டாம் என்று கூறிவிட்ட நகைமுத்து முன்னால் இருந்த அறையில் சென்று உட்கார்ந்து கொண்டாள்.

## நகைமுத்து:

கையில் இருந்த புத்தகத்தில் முதல் பக்கத்திலேயே சில வரிகளை மட்டுமே மூன்றுமணி நேரமாக படித்துக் கொண்டிருந்தான் வேடப்பன். எங்கே இருந்தது அவனது நினைவு? என்று எண்ணியபடியே அழகான அந்த நகை முத்து தான் வரைந்த ஓவியத்தைக் கொண்டு வந்து அவன் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தின் மீது வைத்தாள். அவனை உற்றுப்பார்த்தாள். அவன் சிரித்தான்; அவளம் சிரித்தாள். பின்னர் அவனிடம் ‘அன்பானவரே? இதுவரையில் யாலைப்பற்றி நினைத்தபடி இங்கே உட்கார்ந்திருக்கின்றீர்கள்? என்று கேட்டாள். அவனோ ‘உன்னைத்தான்’ என்று கூறியதனைக் கேட்ட அவள் ‘நான் பெற்ற பாக்கியம்’ என்று கூறினாள்.

அவஅள் வேடப்பனிடம் ஏதேதோ கேட்டுக் கொண்டிருந்தான். அவனும் ஏதேதோ பதில் சொல்லிக் கொண்டிருந்தான் அவளுக்கு, மெதுவாக அவன் காதில் விழும்படியாக, உங்கள் பெற்றோரிடத்தில் நம்முடைய இந்த திருமண எண்ணத்திற்கு முடிவு என்ன? என்று கேளுங்கள் என்று கூறினாள். ‘அவர்கள் சொல்லிவிட்டார்கள் முடிவினை’ என்று கூறினான் வேடப்பன். அவளுடைய உள்ளத்தில் மகிழ்ச்சி பரவியது. அதனால் ஏற்பட்ட பதற்றத்தில் சத்தமாக ‘எப்போது திருமணம்’ என்றாள். அப்படி அவள் கேட்டது சாப்பிட்டவர்கள் கை கழுவ வந்தபோது அவர்கள் காதில் விழுந்துவிட்டது. அதனைக் கண்டு பயந்தாள்.

கையினையும் கழுவ வேண்டும் என்ற எண்ணம் இல்லை. வைக்கப்பட்ட உணவில் ஒரு கடுகளவும் சாப்பிடவில்லை. காதல் கருவியில் விழுந்துவிட்டான். கரைகாண முடியாத அளவில் தன் உடல் துடிக்கும் உணர்வினை அடைந்தான். நகைமுத்து அந்த இடத்தினை விட்டு நகர்ந்து வேறு ஒரு பக்கமாகச் சென்று அமர்ந்தபடி ‘என்றைக்கு வைகை ஆற்றின்

நீரில் குளித்து நம்முடைய உடலில் தோன்றியுள்ள இந்த சூட்டினைக் குறைத்துக் கொள்வது?' என்று எண்ணினாள். 'நாங்கள் ஊருக்குச் சென்று வருகின்றோம்' சொல்லிக் கொண்டிருந்தார் தந்தையார்.

தந்தையின் வார்த்தைகள் ஒரு பெரிய வெடிச்சத்தத்தினைப் போன்று அவள் காதில் விழுந்ததினால் துன்பத்தினை அடைந்தாள். வேடப்பன் ஒரு பக்கம் தவிக்க ஆரம்பித்தான். இதற்குள் அந்த வீட்டின் தலைவர், 'இந்த இருட்டு நேரத்தில் ஏன் கிளம்ப வேண்டும்?' தங்கியிருந்து நாளைக்குப் போகலாம்' என்று கூறினார். ஆனால் வந்திருந்த விருந்தினர்களோ, 'மன்னிக்க வேண்டும்!' இப்போதே கிளம்ப வேண்டும்' என்று கூறினார்கள். இதற்குள் அவர்கள் செல்ல வேண்டிய வண்டியும் வீட்டின் வாசலில் வந்து நின்றுவிட்டது. ஆனால் இரண்டு உள்ளங்கள் மட்டும் நெருப்பில் போடப்பட்டது போன்ற துன்பத்தில் இருந்தன. விருந்தினர் 'நன்றி' என்று சொல்லிவிட்டு வெளியே சென்றார். வீட்டில் இருந்தவர்களும் அவர்களுடன் வெளியே வந்தார்கள்.

### பிரிந்தாள்:

அவள் அவனை நூறு முறை திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவனும் அவளையே நூறு முறை பார்த்துக் கொண்டிருந்தான். இனிமை தரும்படியாகக் கிடைத்த செல்வத்தினை இழந்துவிட்டதனைப் போன்ற உணர்வுடன் வீட்டின் முன்பகுதியிலிருந்து நகர்ந்து கீழே உள்ள படியினில் கால்வைத்தாள். அதற்குள் மீண்டும் ஆறு முறை அவனைப் பார்த்தாள்! அவனும் அவளைப் பார்த்தான்! அவள் வண்டியின் படியின் மீது கால்வைத்தபடி மீண்டும் அவனைத் திரும்பிப் பார்த்தாள். வண்டியில் ஏறிவிட்டாள்! வந்திருந்த விருந்தினர்களும் ஏறிவிட்டார்கள்! விருந்தினரும் வீட்டில் இருந்தவர்களும் ஒருவருக்கொருவர் வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டார்கள்.

வண்டி நகர்ந்தது; மாடு வேகமாகச் செல்ல ஆரம்பித்தது. ஆனால் வண்டியிலிருந்த அந்தப் பெண் தலையினைச் சாய்த்து வேடப்பன் இருந்த இடத்தினைப் பார்த்து அங்கிருந்த அவனைத் தன்னுடைய கெண்டைமீன் போன்ற கண்களால் பார்த்தபடி அவள் மறைந்து போனாள். தன் மனதைப் பறித்துக் கொண்ட கிளிபோன்ற அந்தப் பெண் தன்னைவிட்டு மறைந்து போய்விட்டதனால், ஒரு மரத்தினைப் போலத் தனியாக நின்று, தன்னிகரில்லாத் தேன் போன்றத் தமிழின் சுவையினைப் படித்தவர்கள் அதன் பொருளை தனியாக அமர்ந்து சிந்தித்திருப்பதனைப் போன்று அவனும் அவளைப் பற்றி எண்ணியபடி அமர்ந்திருந்தான். மெலிந்த இடையினைக் கொண்டவளாக அவனுடைய தாய் உள்ளே சென்றாள். அங்கே நகைமுத்து வரைந்த ஓவியத்தில் தன் மகனான வேடப்பனின் உருவம் பதிந்திருப்பதனைக் கண்டாள்.

# திருமணம்

## வேடப்பனுக்கு மீண்டும் வாய்ப்பு:

வில்லியனூர் மாவரசு, மலர்க்குழல், நாவரசு, நகைமுத்து ஆகியோர் மண வழகன் வீட்டுக்கு விருந்தினராய் வந்தபோது மணவழகன் மகனான வேடப்பனின் உள்ளங் கவர்ந்து சென்றாளன்றோ நகைமுத்து?

திண்ணையில் மாவரசன் ஒரு சிறிய யானைக் குட்டியினைப் போன்று அமர்ந்து, கண்ணை மட்.டும் எதிரில் அனுப்பி அவர்கள் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். வண்ணங்களை உடைய பூவின் மலர்ச்சியோடு இருந்த மலர்க்குழலியோ வந்து வந்து வாசலைப் பார்த்துவிட்டு உள்ளே சென்று கொண்டிருந்தாள். மணமகளான நகைமுத்து எந்தவிதமான பேச்சும் இல்லாமல் உலவிக் கொண்டிருந்தாள்.

மணவழகன், அவரது மகள், சிறுவன், தாத்தா, அனைவரும் தாங்க முடியாததும் தவிர்க்க முடியாததுமான மகிழ்ச்சி தன் முகம் முழுவதும் அழகு செய்யும்படியாக வண்டியிலிருந்து இறங்கி வருவதனைக் கண்ட மாவரசர் பணிவுடன் அவர்களை வரவேற்றார். அம்மா வாருங்கள் என்று அன்பான மலர்களைக் கொடுத்து அன்புடன் வரவேற்றாள். பண்பான நகைமுத்துவும் எதிரில் சென்று, ‘வணக்கம்’ என்று கூறினாள். உண்மையும் மகிழ்ச்சியம் அன்பும் அந்த வீடு முழுவதும் நிறைந்து சத்தமிட்டது.

சுத்தமான தண்ணீரினைக் கொடுத்த வரவேற்பறையில் பாய் விரித்து, நல்ல பசும்பாலினை குடிப்பதற்குக் கொடுத்து, வெற்றிலைப் பாக்கினைத் தட்டில் வைத்துக் கொடுத்து வாய் மணக்கப் போடும்படிக் கூறி அமைதியாகவும் ஓய்வாகவும் அமர்ந்து நலன் பற்றிப் பேசி உள்ளம் மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். வேடப்பனுடைய உள்ளமோ நகைமுத்துவையே விரும்பியது. ஆடும் மயில் போன்ற அவளும் அவன் மீது உயிரையே வைத்திருந்தாள். நாடும் நகரமும் அறிந்து கொள்ளும்படியாக நல்ல நாள் ஒன்றினைப் பார்த்து, இவர்களை ‘நீண்டநாள் வாழ்வீர்களாக’ என்று வாழ்த்துவதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்றார் முழுமனதுடன் தாத்தா.

பெற்றவர்களின் கருத்து என்ன? இன்பமான இந்தத் திருமணத்தினை இன்னும் மூன்று நாட்கள் முடிந்தவுடன் முடித்துவிடலாம் என்று நினைக்கின்றேன். பெரியவர்களுக்கெல்லாம் அழைப்பு அனுப்ப வேண்டும் அல்லவா? உங்களுக்குத் தோன்றுகின்ற எண்ணங்களைச் சொல்லுங்கள் என்றார் தாத்தா. மகிழ்ச்சியுடன் நீங்கள் சொல்வதனை ஏற்றுக் கொள்கின்றேன் என்று கூறினார் மாவரசன். புகழுடன் ‘வேடப்பன்

விரும்புகின்ற பெண்ணை நான் இகழ்ந்தா பேசிடுவேன்?' என்று மாவரசரின் மனைவியும் கூறினாள். சிரித்தபடியே மணவழகர் 'நல்லது' என்று கூறினார்.

அன்புடைய நகைமுத்துவின் பக்கத்தில் அமர்ந்திருந்தத் தன்னுடைய மனைவியான அழகான தங்கத்தைப் பார்த்து 'உன் கருத்து என்ன? என்று கேட்டார் மணவழகர். இன்பத்தைத் தூண்டும் நகைமுத்து ஏக்கத்துடன் அவள் முகத்தைப் பார்த்தாள். 'நானா நகைமுத்தை வேண்டாம் என்று சொல்வேன். என் மகனை தேன் போன்ற இவளோ உயிர் என்று கூறியுள்ளாள். அவனும் இவள் மீது அன்பு வைத்துள்ளான். மான் போன்றவளே, மயில் போன்றவளே, என்வீட்டு மருமகளே. எங்கள் வானத்தில் நிலாவினைப் போன்று வந்தவளே மகிழ்ச்சியாக இருப்பாயாக' என்று கூறினாள் தங்கம்.

இன்பத்தைத் தூண்டும் நகைமுத்துவே உன் மனதில் நீ என்ன நினைக்கின்றாய் என்பது எனக்குத் தெரியும். என்றாலும்கூட இங்கே இருப்பவர்கள் அனைவரும் தெரிந்து கொள்ளும்படியாக நீதே அன்போடு சொல்லிவிடுவாய். நீ மட்டுமில்லை, ஆணழகனான வேடப்பனும் அப்படியே செல்லட்டும்' என்று தாத்தா கூறினார். 'கட்டான அழகுடைய வேடப்பனை மணந்து கொள்வதற்கு நான் தயாராகக் காத்துக் கொண்டிருக்கின்றேன். ஒரு குறையும் இல்லை என்றாலும் ஒரு முடிவாக எண்ணி சிக்கனமாகச் செலவு செய்து வாழ எங்களுக்கென்று தனியான வீட்டினை அமைத்துக் கொடுங்கள்' என்று நகைமுத்து கூறினாள்.

மேலும் அவளே தொடர்ந்து இன்னும் ஒரு வேண்டுகோளை வைத்தாள், 'எங்களால் முடிந்தவரை எங்கள் குடும்பத்தை நாங்களேப் பார்த்துக் கொள்கின்றோம். அப்படி ஒருவேளை ஏதாவது தேவை என்றாலும் என்னுடைய மாமியார் பார்த்துக் கொள்வார்கள்' என்று மீன் போன்ற இரண்டு கண்களை உடைய அவள் கூறினாள். நானும் அதை ஏற்றுக் கொள்கின்றேன். என்னுடைய எண்ணமும் அதுதான். நான் கடையில் அப்பாவுடன் இருந்து நன்றாக வேலை செய்வேன். அப்பாவாக பார்த்து ஏதாவது ஒரு நூறு ரூபாய் மாத மாதம் கொடுத்தால் தேன் ஓடையைப் போன்று எங்கள் வாழ்க்கை இனித்திடும் என்று கூறினான் வேடப்பன்.

மாமியார் கொடுமை என்று ஏதும் நடப்பதற்கு இதனால் வழியிருக்காது. மைத்துனர்கள் ஏதாவது சொல்வார்கள் என்ற பேச்சிற்கும் இடமில்லை. ஏமாற்றிவிட்டான் என்று சொல்கின்ற தீமையும் நடக்காது. இம்முறையே சரியானது என்று தாத்தா சொல்லி மகிழ்ந்தார். பெண் பிள்ளைகளுக்குக் சொத்தில் உரிமை இல்லையென்று சொல்லுவார்கள். ஆனால் நான் தருகின்றேன். கண்ணை இமைகள் இரண்டும் காப்பது போன்று என் மருமகன் நடத்துகின்ற குடித்தனத்தினை நானும் மேலிருந்து பார்த்துக் கொள்வேன் 'இது உண்மை' என்று மாவரசர் கூறினார். அவரது மனைவியும் அதனை ஏற்றுக் கொண்டாள்.

நகைமுத்துவின் எண்ணத்தினை நானும் ஏற்றுக் கொள்கின்றேன். மேலும் ஓர் 'குடும்ப விளக்கினை' ஏற்றி வைத்தால் அது நல்லதே ஆகும். இது சரியானதுதான் என்றாள் தங்கம்! மணவழகனும் தான் தன்னுடைய மகனுக்கு மாதம் ஒரு நூறு ரூபாய் தருவதற்கு ஒத்துக் கொண்டார். மூன்றாம் நாளில் நன்றாகத் திருமணத்தை முடித்து விடுவது என்று எல்லோரும் ஒத்துக் கொண்டார்கள். அதன் பின்னர் சாப்பிட்டார்கள். வானில் நிலா வருகின்ற இரவினில் வண்டிகளில் கிளம்புவதற்கு முன்னர் இனிமையாக 'சென்று வருகின்றோம்' என்று கூறிச் சென்றார்கள்.

விடிந்தால் திருமணம்! வானில் நிலா வருகின்ற இன்றிரவு மணமகள் வருகின்ற காரணத்தினால், அவளை வாழ்த்தி வரவேற்பதற்கும், காலையில் மணம் வீசும் மணவறையில் மாலை அணிந்துள்ள மணமக்களை வாழ்க என்று வாழ்த்திடவும், அதனைத் தொடர்ந்து நாம் தருகின்ற விருந்தினை உண்பதற்கும் வாருங்கள் அன்புடன் வாருங்கள்' என்று தங்கமும் மணவழகனாரும் வீடு வீடாகச் சென்று பணிவுடன் அழைத்தனர். வாழ்க! நல்ல பெண்ணான மணப்பெண் நகைமுத்து வாழ்க! என்று உலகம் முழுவதும் முழங்குவது போன்று அனைவரும் வாழ்த்தினார்கள். பாலும் பழமும் அவளுக்குக் கொடுத்தனர். மேலும் பலர் வாசமுடைய நீர் (பன்னீர்), வாசம் வீசும் மாலை, வெற்றிலைப்பாக்கு போன்ற பலவற்றையும் ஏந்திக்கொண்டு சென்றார்கள்.

திருமணத்திற்கான அந்த அரங்கம் முழுவதும் நல்ல வாசம் வீசிக் கொண்டிருந்தது. இனிய இசை பரவிக் கொண்டிருந்தது. சான்றோர்களும், பெண்களும், ஆண்களும் பெரிய கடலின் அகலத்தைப் போன்றே அங்கே கூடியிருந்தார்கள். உதிரியான புதிய மலர்களை அந்த திருமண அரங்கில் வந்திருந்தவர்கள் அனைவரின் வகையிலும் நிறையக் கொடுத்தனர். ஒரு பெரியவர், நகைமுத்துவிடம் 'பெண்ணே நகைமுத்து, எழுந்து அனைவரையும் வணங்கி, 'நான் வேடப்பனை விரும்பியே என்னுயை வாழ்க்கைத் துணையாகத் தேர்ந்தெடுத்தேன் என்று கூறினாள்.

பின்னர் அந்தப் பெரியவர், வேடப்பனிடமும் 'நீ நகைமுத்துவை மணந்து கொள்ள விரும்புகின்றாயா? அவளை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்ள விரும்புகின்றாயா? என்பதனை சொல்வாயாக!' என்று கேட்டார் வேடப்பன் எழுந்து, அனைவரையும் வணங்கி 'நான் மின்னலைப் போன்ற அழகுடன் மின்னும் நகைமுத்துவை விரும்புகின்றேன். ஆகவே அவளை நான் என்னுடைய வாழ்க்கைத் துணையாக ஏற்றுக்கொள்ள விரும்புகின்றேன்' என்று கூறினான்.

**'மணமகள் நகைமுத்து வாழ்க வாழ்கவே!**

**மணமகன் வேடப்பன் வாழ்க வாழ்கவே'**

என்றார் அனைவரும் எழில்மலர் வீசியே!

**நகைமுத்து வேடப்பன்**

**மகிழ்ச்சி யோடு**

**நாழிகையை வழியனுப்பிக்**

**காத்தி ருந்தார்**

**மிகநல்ல மணிப்பொறியும்**

**ஐந்த டிக்க**

**விசைவண்டி ஓட்டுபவன்**

**வந்து நின்று,**

**"வகை மிக்க அரசினரின்**

**பூங்கா விற்கு**

**வருகின்றீ ரோ?" என்று**

**வணங்கிக் கேட்டான்;**

**தகதகெனத் தனியறைக்கோர்**

**அழழகைச் செய்யும்**

**தையலினாள், வேடப்பன்**

**"ஆம் ஆம்" என்றார்.**

இரண்டு பேரும் அந்த வண்டியில் ஏறி அமர்ந்தார்கள். வேகமாக ஓடுகின்ற காவிரி ஆற்றின் வெள்ளத்தினைப் போன்று, அந்த வண்டியும் ஓசையினை எழுப்பியபடி அந்த பூங்காவினுள் ஓடிவந்து நின்றவுடன், புது மணத்தம்பதியர் இருவரும் இறங்கி, அங்கே நடக்க ஆரம்பித்தார்கள்.

கட்டிலில் மெத்தை, தலையணைகளைப் பிரித்தார்கள். கண்ணைக் கவரும்படியானத் தன்மையுடைய அழகான வெள்ளைத் துணியினையும் விரித்தார்கள். மேலே பட்டு வகையிலான போர்வையை மடித்து ஓரமாக வைத்தார்கள். எல்லா இடங்களிலும் மணம் வீசும்படியான பன்னீர் தெளித்தார்கள். உடலை உறுத்தாத வகையில் மலர்களில் உள்ள காம்புகளை அகற்றி இதழ்களை மட்டும் தூவி, சந்தனம், பன்னீர், வெற்றிலைப்பாக்குத் தட்டு இவைகளைத் வைத்ததுடன் மட்டுமின்றி, முக்கனிகளான மா, பலா, வாழை இவற்றுடன், பால், பலகாரங்கள் இவற்றினையும் வைத்து, வீடு முழுவதும் விளக்குகளை ஏற்றினார்கள்.

இப்படி அழகாக அலங்கரிக்கப்பட்டத் தனியான அறையின் வெளியில் உள்ள தாழ்வாரப் பகுதியில் அங்கிருந்த அனைவரும் கூடி நின்று சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அங்கே இருந்த குழந்தைகளில் ஒருவன் 'இது நாங்கள் விளையாடுவதற்கான அறையா?' என்று கேட்டான். உடனே அங்கிருந்த பெரியவர்கள், 'உள்ளே செல்ல வேண்டாம், இந்த அறை புதியதாகத் திருமணம் நடந்திட்ட புதுமாப்பிள்ளையும், பெண்ணும் உள்ளே சென்று வள்ளுவரின் திருக்குறளின் பொருளினை ஆராய்ந்து தெரிந்து கொள்ளுவதற்கு ஏற்ற வகையில் வசதி செய்யப்பட்டுள்ள அறையாகும். இது வாழ்க்கையின் இன்பத்தினைச் சுட்டும் இடமாகும். மணமக்கள் நன்றாக வாழட்டும்!' என்று வாழ்த்தினார்கள்.

**மக்கட்பேறு:**

**'நகைமுத்து வேடப் பன்தாம்'**

**நன்மக்கள்பெற்று வாழ்க!**

**நிகழுநாள் எல்லாம் இன்பம்**

**நிலைபெற! நிறைநாட் செல்வர்**

**புகழ்மிக்கு வாழ்க வாழ்க!"**

**எனத் தமிழ்ப் புலவர் வாழ்த்த**

**நகைமுத்து நல்வே டப்பன்**

**மணம்பெற்று வாழ்கின் றார்கள்.**

இனிக்க இனிக்கத் தங்களுடைய இல்லறத்தின் நலன் பெருகிடும் வகையில் அழகான நகை முத்துவுடன் தனியாக இல்லத்தில் குடியேறினான். அவனுடைய நினைவெல்லாம் இரண்டு நிலைகளில் இருந்தது. கடையில் வியாபாரத்தினைப் பெருக்க வேண்டும் என்ற எண்ணம் ஒன்று. இனிமையாக நல்ல மொழிகளைறப் பேசும் கிளிபோன்றத் தன்மையுடையவளாக உள்ள நகைமுத்துவுடன் வீட்டில் நல்ல முறையில் வாழவேண்டும் என்கிற எண்ணம் ஒன்றாகும்.

மூன்றாவது தெருவில் இருந்த பழைய வீட்டில் அன்பான பெற்றவர்கள். வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இடைஇடையே நேரம் கிடைக்கின்ற போதெல்லாம் அவர்கள் இருக்கின்ற இடம் தேடிச் சென்று தேன் போன்ற மொழியினையுடைய நகைமுத்துவும், செம்மையான பண்புடைய வேடப்பனும் அவர்களை வணங்கி வருவார்கள் அவர்களைப் பெற்றவர்களும் இங்கே இவர்களுடைய இல்லத்திற்கு வருகை புரிந்து இவர்கள் குடும்பம் நடத்துகின்ற அழகினைப் பார்த்துச் செல்வார்கள்.

**"நகைமுத்தாள்" என்று கூறி**

**நடுமூன்று விரலைக் காட்டித்**

**“துகள்போகத் துடைக்க வேண்டும்**

**தொட்டிலை” என்றாள் தங்கம்.**

**மகிழ்ந்தனன்! எனினும் “பிள்ளை**

**மருமகள் பெறவோ இன்னும்**

**தொகைஏழு திங்கள் வேண்டும்**

**இதற்குள்ஏன் தொட்டில்?” என்றான்.**

நகைமுத்து மூன்று மாதக் கருவினைச் சுமந்து கொண்டிருக்கின்றாள் என்ற நல்ல செய்தியினைப் பற்றி பலவகையாக இரவெல்லாம் பேசி க் கொண்டே இருந்தார்கள் இதற்குள் மறுநனாள் பகல் விடிந்துவிட்டது. மாமனாராகிய தங்கத்தின் கணவரும் நகைமுத்துவைப் போய் பார்த்துவிட்டு வந்தார். ஆனால் தங்கமோ அவளைவிட்டு வருவானா என்ன? அங்கேயே நகைமுத்துவுடனேயே இருந்தாள்.

அன்றைக்குக் காலை விடிந்தவுடன், வெந்நீர் சூடாகி விட்டதா? எடுத்துவா வேகமாக என்று வேடப்பன், நகைமுத்துவிடம் கூறினான். கூடத்தில் அமர்ந்திருந்த தங்கம், அதனைக் கேட்டவுடன், இப்படி இனி செய்க் கூடாது, அவள் வருந்தும்படியாக இனி அவளை வேலை வாங்கக் கூடாது. இந்தப் பெண் முன்புபோல இப்போது இல்லை.

‘கருஉண்டாகி மூன்று மாதங்கள் ஆகிவிட்டதா?’ என்று கேட்டபடியே வேடப்பன் அவள் அருகினில் ஓடிச் சென்று, அவளை அணைத்தபடி ‘பெண்ணே பதில் சொல்’ என்ற கேட்டான். அவளும், ‘ஆமாம், ஆமாம், இருநூறு தடைவ கேட்பீர்கள்!’ என்று கூறியபடி சயைல் அறையில் நுழைந்தாள் அவனுக்கு உணவு பரிமாறுவதற்காக. வேடப்பனோ மகிழ்ச்சியினால் என்ன செய்வது என்றே தெரியாதபடி திகைத்திருந்தான்.

நான் சின்ன பையன் இல்லை. நான் தந்தையாகி விட்டேன், என்னுடைய மனைவி தான் மூன்ற மாதமாகக் கருவுற்று இருக்கின்றாள். தாய்மையடைந்துவிட்டாள். வானம் பெற்றிருக்கின்ற நிலவினைப் போன்ற அழகான குழந்தை வந்து அழகான தேன் போன்ற இனிய குரலினால் என்னை அப்பா என்று அழைத்தபடி இன்னும் ஏழு மாதத்தில் என்னிடம் தாவி வரும்.

கறந்த பாலின் நிறத்தினைப் போன்று அழகான வெள்ளை ஆடை உடுத்திய மருத்துவச்சி நாள்தோறும் வருவாள். வந்து நகைமுத்துவின் உடல்நலத்தை ஆராய்ந்து, எப்போதும் தாழ்வாரத்தில் இருக்கக்கூடாது. நன்றாக நடக்க வேண்டும். என்று அறிவுரை கூறிவிட்டுச் செல்வாள். அவள் போகின்றபோது, வெளியில் நின்றிருந்தபடி, வேடப்பன், ‘நகைமுத்துவின் உடல்நலமாக உள்ளதா? கருவில் உள்ள உயிர் எந்தவிதமான குறைவும் இல்லாமல் இருக்கின்றதா? சொல்லுங்கள். அம்மா, சொல்லுங்கள் அம்மா!’ என்று

கேட்பான். அவளும் எந்தத் துன்பமும் இல்லை என்று நான்கு ஐந்து முறை சொல்லிவிட்டுச் செல்வாள்.

தன்னுடைய மகள் நகைமுத்துவிற்கு ஆண் குழந்தை பிறக்குமா? பெண் குழந்தை பிறக்குமா? என்பதனை அறிந்து கொள்ளும் விதமாக மலர்க்குழலி தனக்கு எதிரில் தெரிந்த தகுந்த நபர் ஒருவரிடம் வீட்டின் வெளியில் நின்றபடி 'என்ன குழந்தை பிறக்கும்' என்று மெதுவாகக் கேட்டாள். அந்தப் பெரியவர், 'பெண்குழந்தை பிறந்துவிட்டால் எங்கே போடுவீர்கள்?' என்று கேட்டார்.

மலர்க்குழலியோ 'அய்யா, மண்ணில் இருந்தால் தூசுபட்டு குழந்தைக்கு துன்பம் நேரும் என்பதனால், என்னுடைய கண்களில் வைத்து அந்தக் குழந்தையினைக் காத்திடுவேன்' என்று மலர்க்குழலி கூறினாள். 'ஆண் குழந்தை பிறந்தால், என்ன செய்வாய் என்று? இனிமையாகக் கேட்டார் அந்தப் பெரியவர். 'ஆண் குழந்தையினையும் அப்படியே காத்திடுவேன் அய்யா' என்று மலர்க்குழலி மகிழ்ச்சியுடன் கூறினாள்.

'பெண்குழந்தையோ அல்லது ஆண் குழந்தையோ பிறக்கப் போவது என்பது நிச்சயம்' என்றார் பெரியவர். இதற்குள் உள்ளே இருந்தவர்களும் வெளியே வந்து குறி கேட்டுக் கொண்டிருந்த மலர்க்குழலியின் கொள்கையினை மறுத்துப் பேசிச் சிரித்து பின்னர் மீண்டும் வீட்டினுள் சென்றார்கள். அங்கே நகைமுத்துவிற்கு இடுப்புவலி ஏற்பட்டு துன்பத்தினைக் கொடுத்துக் கொண்டிருந்தது.

நகைமுத்து இடுப்புவலியினால் துன்ப்படுவதனைப் பார்த்தவுடன் ஏற்கனவே பழக்கத்தில் உள்ள மருத்துவச்சியை அழைத்து வருவதற்காக பொறி வண்டி பறவையினைப் போல வேகமாகப் பறந்து சென்றது. உறவினர்களான பெண்கள் பலர் வந்து நகைமுத்து இருந்த அறையில் அவளைச் சுற்றிலும் இருந்தனர். ஆண்கள் தெருவில் உள்ள திண்ணையில் அமர்ந்திருந்தனர். நிலவினைப் போன்ற வெண்மையான உடை அணிந்த மருத்துவச்சி பொறி வண்டியில் வந்து இறங்கி வீட்டினுள் சென்றாள். அங்கே புதியதான ஒரு சூழல் அமைதியாக ஏற்பட்டது.

யாரும் பேசாமல் அமைதியாக இருந்த சூழ்நிலையில் உள்ளே இருந்து 'பெண்குழந்தை! ஆண்குழந்தை!' என்ற ஒரு பேச்சு சத்தம் வெளியில் இருக்கின்ற ஆண்களுக்குக் கேட்டது. உலகம் வளமும் நலமும் பெறும் வகையில் பொழிகின்ற வானைப்போல கீச்சென்ற சத்தத்துடன் குழந்தை அழுகின்ற ஓசை உள்ளே இருந்து கேட்டது. கிளியினைப் போன்ற இனிய மொழி பேசும் மலர்க்குழலி வெளியில் வந்து நல்ல நிலையில் மூச்சும், அழகும் பெற்றதான ஒரு பெண்குழந்தை முத்தினைப்போல பிறந்துள்ளது. தாயும் நலமாக இருக்கின்றாள்' என்று கூறினாள்.

பயம் என்கிற பெரிய கடலினைக் கடந்து அங்கிருந்த அனைவரும் மனம் முழுவதும் மகிழ்ச்சி பொங்க கரை சேர்ந்தவர்களைப் போன்று இருந்தனர். கடையிலிருந்து அதிக அளவிலான கற்கண்டுகளைக் கொண்டு வந்தார்கள். வெற்றிலைப் பாக்கும் சுமந்துகொண்டு வந்தார்கள், அனைவரும் விரும்பி போற்றும் தன்மையுடைய வாழைப்பழத்தினை குலையாகக் கொண்டுவந்தார்கள். எல்லாவற்றையும் மேலும் மேலும் வந்தவர்களுக்கு எல்லாம் வாரி வழங்கினார்கள். பெண்கள் அனைவரும் தாழ்வாரத்தில் கூடியிருந்து குழந்தைக்கும் தாயக்கும் வாழ்த்துப் பாடல்களைப் பாடினார்கள்.

சிலநாட்கள் செல்லச் செல்ல நகைமுத்துவினுடைய உடல் நோய்களும், குழந்தை பிறந்ததனால் ஏற்பட்ட உடல் வலியும் குறைய ஆரம்பித்தது. மலையின் மீது ஒளி படுகின்ற போது ஏற்படுகின்ற மின்னும் அழகினைப் போன்று நகைமுத்துவின் உடலிலும் ஒருவிதமான ஒளி தோன்றி மின்னிக் கொண்டிருந்தது. அவள் இப்போது கற்றுக் கொள்கின்ற நிலையில் உள்ள மாணவ நிலையில் மட்டுமின்றி கற்றதனை அடுத்தவர்க்கு பயன் தரும் முறையில் எடுத்துச் சொல்லும் ஆற்றல் படைத்த ஆசிரியை என்கிற நிலையினையும் அடைந்தாள். நேற்றைய நாட்களில் ஒரு மகளாகவே இருந்தவள், இன்று ஒரு தாய் என்கிற நிலையினை அடைந்துவிட்டாள்.

## குழந்தைக்கு பெயர் வைத்தனர்:

தமிழரினத்தில் உள்ள ஒரு குடும்பத்தில் பிறந்துள்ள இந்தக் குழந்தை தமிழ்க் குழந்தையாகும். எனவே இக்குழந்தைக்கு நல்ல தமிழ்ப் பெயரை வைத்திடுவதே சிறந்த செயல். மழையினால் ஏற்படுகின்ற நன்மையினைப் போன்று நன்மை செய்யும் வகையில் இந்நாளில் பிறந்துள்ளது இக்குழந்தை ஆகவே இக்குழந்தைக்கு 'அமிழ்தம்' என்று பெயர் வைத்திடுவோம். 'அமிழ்தம்மை' எந்நாளும் வாழ்க! தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க!' என்று வாழ்த்தினார்கள்.

## குழந்தைக்கு அனைவரும் தாலாட்டு பாடினார்கள் ஒரு வயது ஆனது:

## சோறூட்டல்:

நன்றாக உருக்கப்பட்ட நெய்யுடன் பருப்பு கலந்து, அதனுடன் சாதத்தினையும், கொஞ்கம் ரசத்தினையும் ஊற்றி நன்றாகப் பிசைந்து, சிறிய கிண்ணத்தில் ஏந்தியபடி, காக்கைகளை வேடிக்கை காட்டியபடி குழந்தையை சாப்பிடச் செய்தாள் நகைமுத்து.

## நிலாக் காட்டல்:

மேற்கு திசையிலிருந்து வீசுகின்ற ஒளியின் வெள்ளத்தில் போய் விழுந்துவிட்டது செம்மையான கதிர்களை உடைய சூரியன். அங்கு அழகான முத்துக்களை உடைய சோளத்தின் தோட்டத்தினைப் போன்ற வெண்மையான இடத்தில் அழகான முழுமையான நிலவினை அனைவருதும் பார்த்தார்கள். அப்போது வீசிய காற்றும் சில்லென்ற தன்மையுடன் குளிர்ச்சியை ஏற்படுத்துவதாக இருந்தது. வீட்டில் மேல் முற்றத்தில் நின்றபடி நிலாவின் அழகினை அமிழ்தம் என்ற நிலையினை உண்டவர்கள் போல உணர்ந்து குழந்தைக்கும் அக்காட்சியினை காட்டி மகிழ்கின்றனர்.

## குறளில் கோயில் இல்லை:

நகைமுத்து வேடப்பனிடம் சென்று, ‘மிக முக்கியமான ஒன்றிற்காக பத்து ரூபாய் தேவைப்படுகின்றது. கடனாகக் கொடுங்கள்’ என்று கேட்டாள். வேடப்பனும் கொடுக்கின்றேன் என்று கூறினான். அதற்குள், அமிழ்தம், திருக்குறள் புத்தகம் ஒன்று தன் கையில் தூக்கிக் கொண்டு வந்து பக்கத்தில் போட்டுவிட்டு, ‘இதில் கோவிலைக் காட்டுங்கள்’ என்றாள். வேடப்பனோ, ‘குறளில் கோவிலே இல்லையே அம்மா’ என்று கூறினான். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த நகைமுத்து கூறினாள், ‘தில்லை கோவிலுக்குப் போய்வர வேண்டும் என்று நினைத்துத்தான் நான் உங்களிடம் பத்து ரூபாய் பணம் கேட்டேன். கோயிலைப் பற்றியே திருக்குறள் பேசவில்லை என்றால் இனி என்னுடைய பணத்திற்கு அழிவில்லை’ என்று கூறினாள்.

நல்ல பண்புடைய வேடப்பனின் வீடு முழுவதும் நிறைந்திருந்தது உறவினர் வருகையினால். மாவரசரும், மலர்க்குழலியும் வந்திருந்தார்கள். மேலும் அவர்களுடைய பிள்ளைகளும் வந்திருந்தார்கள். வேடப்பன் ஒரு பக்கமாக அமர்ந்திருந்தான். அழகான நகைமுத்து பெற்றெடுத்த நீலவண்ணத்திலான பூவினைப் போன்ற விழிகளையும், சிவந்த இதழ்களையும் கொண்டதான புதிய இளம் ஆண் குழந்தையினை ‘இளஞ்சேரன்’ என்று பெயர்சூட்டி வா என்று அழைத்துத் தன்னுடை யகையில் ஏந்தி மயில்போல உலவிக் கொண்டிருந்தாள்.

நடுவில் இருந்த நாற்காலியில் நகைமுத்து தன்னுடைய கைகளில் குழந்தை இளஞ்சேரனையும், பக்கத்தில் அமிழ்தத்தினையும் வைத்துக் கொண்டு அமர்ந்தாள். பின்னர் பக்கத்தில் வேடப்பன் முதலியவர்கள் அழகாக அமர்ந்தனர். வெளியில் தெரிந்த இந்த அன்பான காட்சியினை புகைப்படம் எடுத்தார்கள். உள்ளே மனதில் இருந்த அனைவரிடமும் பரவிக் கிடந்த அழகை வானம் படம் எடுத்துக் கொண்டது.

## திராவிட மக்கள் வாழிய:

அமிழ்தம் ஆறு வயதினை அடைந்தாள். தமிழினைப் பாடமாகக் கொண்டு இயங்கக்கூடிய தனித்தமிழ்ப் பள்ளியில் சேர்க்கப்பட்டுப் பாடம் பயின்று வந்தாள். இதோ சுவடிகளைத் தூக்கிக் கொண்டு வந்துனொண்டிருக்கின்றான். வேடப்பனும் நகைமுத்துவும் அந்த நேரத்தில் வீட்டில் அமர்ந்தபடி, தன்னுடைய மகன் இளஞ்சேரனிடம், 'நீ யார்?' என்று கேட்டுவிட்டு அவனுடைய பதிலை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தனர். அவனோ தன்னுடைய மார்பில் தட்டி, 'நான் தம்பி' என்று கூறினான். ஆனால் அவனுடைய சகோதரி அமிழ்தமோ 'தமிழன் என்று சொல்லடா தம்பி' என்று கூறியபடி உள்ளே வந்தாள். வாழ்க தமிழ் மக்கள்! வாழிய நற்றமிழ்! வாழ்க உலகமும் இனிதாக!

## முதியோர் காதல்:

## மூத்த பிள்ளை முதியவரோடு

**வேடப்பன் தம்பி யான**

**வெற்றிவேல், மனைவி யோடு**

**வேடப்பன் வாழ்த்தி ருந்த**

**வீட்டினில் வாழு கின்றான்.**

**வேடப்ப னோ, தன் தந்தை**

**வீட்டினிற் குடும்பத் தோடு**

**பீடுற வாழு கின்றான்.**

**பெற்றவர் முதுமை பெற்றார்.**

வேடப்பனின் மனைவியான நகைமுத்து, வேடப்பனின் தாய் தந்தையை மிகவும் அன்புடன், கவனித்து, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை, உடனுக்குடன், எந்தவிதமான வருத்தமும் இன்றி தொண்டு செய்வதற்குக் கிடைத்த வாய்ப்பினை நன்றாகப் பயன்படுத்தி செயல்பட்டாள். பம்பரங்களைப் போன்று சுற்றித் திரிந்து செயல்பட்டவர்கள் அல்லவா அந்த முதியவர்கள். எனவே அவர்களை கவனத்துடனும் மரியாதையுடனும் நடத்தினாள் நகைமுத்து.

முன்பக்கத்தில் இருந்த கடைசி அறையில் உடல் தளர்ந்த நிலையில் இருந்த மணவழகர், இலக்கியங்களைப் படித்தபடி ஒரு பக்கமாக அமர்ந்திருப்பார். அவர் படித்துக் கொண்டிருக்கின்ற இலக்கியத்தின் இன்பத்தினை இன்னுமொரு பக்கமாக அமர்ந்தபடி அவருடைய மனைவியான தங்கம் கேட்டுக் கொண்டிருப்பார். உலர்ந்துவிட்ட பூங்கொடியினைப் போன்று வயது முதிர்ச்சியின் காரணமாக உடல் தளர்ந்து கிடந்த தங்கம்

அம்தையார் ஒரு பக்கமாக அமர்நதபடி எதைப் பற்றியாவது ஆராய்ந்து கொண்டிருப்பாள். அவருடைய கணவர் அவற்றைக் கேட்டுக் கொண்டிருப்பார். பின் தூங்குவார்கள். இவர்கள் பழைய காலத்தைச் சேர்ந்தவர்கள்.

இரண்டு பெரிய வயதில் முதிர்ந்தவர்களைச் சுமந்து கொண்டிருக்கின்ற பாக்கியம் பெற்றதனால் அந்த அறைக்க பெருமையே சேர்ந்தது. பிள்ளைகளும், அவர்களுடைய மனைவிகளும், இங்கே வருவார்கள், இவர்களிடத்தில் பலஅு றம்தொடர்பான செய்திகளைக் கேட்பார்கள் மேலும் அங்கே இவர்களுடைய பேரன் பேத்திகளும் வந்திருந்து தாத்தாபாட்டியுடன் பேசி மகிழ்ந்து பின் பள்ளிக்குச் செல்வார்கள் குறித்த நேரத்தில்.

## நாட்டுக்கு நலம் செய்தோம்:

இந்த நாட்டின் நலன் பெருக வேண்டும் என்பதற்காகப் பல நல்ல அறச் செயல்களை செய்துவந்தோம். எங்களால் என்றைக்கும் யாருக்கும் தீங்கு நடத்ததில்லை. சின்னதான தன்மை செய்தவர்களும் அதனை மறந்துவிடக் கூடாது. என்று இனிய இசையின் மூலம் பாடப்படுகின்ற செய்தியினை நினைத்து வாழ்ந்தவர்களாக இரண்டு வயதில் முதிர்ந்த உள்ளங்களான மணவழகரும், தங்கமும் நினைந்து இன்பம் அடைந்தார்கள்.

எலும்பும், தோலும் வற்றிவிட்டது. ஊன்று கோல் ஊன்றியபடியே, தன்னுடைய அழகான பழைய உடல் காலத்தினால் சிதைந்து, இப்போது குலைந்து கிடக்கின்றாள். என்னுடைய வயது முதிர்ந்த கண்களில் பார்வை சரியில்லாத நிலையில் அவளை சரியாகப் பார்க்கவும் முடியவில்லை. ஆனாலும் அவளுடைய அன்பான உள்ளத்தினை மட்டும் பார்த்து என்னுடைய மனதில் இன்பம் அடைகின்றேன்.

மகிழ்ச்சியினால் தன்னை அலங்கரித்துக் கொண்டிருக்கின்ற தருணங்களில் என்னை அத்தான் என்று அழைப்பாள். ஏதாவது ஒரு சில நல்ல வார்த்தைகளைப் பேசுவாள், நான் அவளுடைய குரலில் இனிமையான யாழின் இசையினைக் கேட்பது போல் உணர்வேன். இப்படி நடந்ததெல்லாம் அந்த நாட்களில் ஆகும். ஆனால் இன்றைய நாட்களில் அவளைப் பார்த்து அவளுடைய பிள்ளைகள் அம்மா என்று அழைக்கின்ற ஓசையினைக் கேட்டு நான் அதிகமான மகிழ்ச்சியினை அடைகின்றேன்.

உயிர் வாழ்வதற்கு மிகவும் முக்கியமானது நல்ல மழையாகும். உலகில் உள்ள நல்ல நூல்களை குறைவில்லாமல் துறந்தவர்கள் இயற்றித்தருவார்கள். அந்த நீதி இலக்கியங்களில் சொல்லப்பட்டது போன்ற முறையில் தன்னுடைய முயற்சியினால் மன்னர்கள் காப்பாற்றுவார்கள். இனிமேல் எனக்கென்ன கவலை? அந்த வயது முதிர்ந்தவளான என் மனைவி உயிர்வாழ்கின்ற காலம் வரையிலும் எனக்கு இந்த உலகம் மகிழ்ச்சியினைத் தரக் கூடியதாக இருக்கும்.

வாழ்வாங்கு வாழ்ந்து முதுமையினை அடைந்து விட்ட மணவழகரின் உள்ளம் இப்படித்தான் இருந்தது. மிகுந்த ஆழத்தினை உடைய கடலில் உள்ள நீர் அசைந்தபடியே இருக்கவும், அதில் ஏற்படுகின்ற ஆரவாரமான ஓசைகளையும் நினைந்து பார்க்காமல் அந்த அலைகளையும் வீழ்த்தி அதன் மேல் பயணம் செய்யும் கப்பல், ஓடங்களைப் போன்று மணவழகரின் மனம் தங்கத்தின் மீது வைத்திருந்த அதிகமான காதலால்தான் இன்னும் அவர் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்.

அறங்களைச் செய்து கொண்டிருக்கக் கூடிய கைகள் ஒருநாள் ஓய்ந்து போகக் கூடும், குழந்தைகளை அன்பின் காரணமாகத் தூக்கிக் கொண்டு திரிந்திடும் தன்மையுடையவர்களின் காலும் என்றாவது ஒருநாள் ஓய்ந்து போகும். சிறந்த தமிழ்ப் புலவர்கள் சொன்ன தமிழின் இனிமையினைக் கேட்கக் கூடிய காதுகளும் ஓய்ந்து போகும். பல நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடிய கண்ணும் ஒருநாள் ஓய்ந்து போகும். ஆனால் வீரம் நிறைந்த என் கணவரைச் சுமந்து கொண்டிருக்கின்ற என்னுடைய மனம் மட்டும் என்றும் ஓய்ந்துவிடவில்லை.

பாட்டி, இந்தா சின்னதான மலைப்பழங்கள் என்று, பேரன் தங்கத்திற்குக் கொண்டுவந்து கொடுத்தான். ஆனால் அவளோ அவனிடம் தம்பி, இந்தப் பழங்களை நீ உன்னுடைய தாத்தாவிற்குக் கொண்டுபோய் கொடு என்று கூறி அனுப்பி அவன் கொண்டு சென்று கொடுக்கிற நிகழ்ச்சியினை கவனமுடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வலது காலை குத்திட்டபடியும், இடது காலை மடித்தபடியும் உட்கார்ந்து இலக்கியத்தினை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த மணவழகர், தன்னுடைய மனைவி கணுக்காலில் கையை ஊன்றியபடியும், ஊன்றுகோலின் துணையுடனும் கொண்டு வந்து நினைவாகச் சாப்பிடும் படிச் சொல்லி தன்னுடைய தலையணையின் கீழே வைத்துவிட்டுச் சென்ற பொரிமாவு இருந்த பொட்டலத்தை எடுத்துக் கொண்டு வந்தார். மிகவும் கவனத்துடன், விழுந்துவிடாமல் நடந்து சென்றுத் தன்னுடைய மனைவி இருந்த இடத்தினை அடைந்தார். அப்போது மருமகளான நகைமுத்து ஓடிவந்து, மாமா என்ன வேண்டும்? ஏன் வெளியில் வந்துள்ளீர்கள்? என்னிடத்தில் என்னவேண்டும் என்று சொன்னால் நான் செய்வேன் அல்லவா? என்று கூறினாள். மாமானாரோ கையில் இருந்த பொரி மாவினை இடையில் மறைத்துக் கொண்டும், தன்னுடைய மனைவியின் மீது உள்ள அன்பினையும் மறைத்துக் கொண்டு, ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை என்று மருமகளிடம் சொல்லி முடிப்பதற்குள் அதிகமான துன்பத்தினை அடைந்தார். இதுவரையில் பொய் சொல்லி அறியாதவர் என்பதனால் துன்பம் அடைந்தார். மருமகள் நுகர்ந்து சென்று விட்டாள், பின்னர் அந்த வயது முதிர்ந்த கிழவர் தன் மனைவியின் பக்கத்தில் சென்று தான் கையில் கொண்டு வந்திருந்த அந்தப் பொரிமாவினை அவளிடம் நீட்டி சாப்பிடு என்று கூறினார்!

அவளும் எடுத்து சாப்பிட்டப் பிறகு, இருவரும் மகிழ்ச்சியும் வெட்கமும் கலந்த உணர்வுடன் மீண்டும் தத்தம் இடங்களைச் சேர்ந்தனர்.

ஒருநாள் மாலை நேரத்தில் அந்த வயது முதிர்ந்த நிலையில் உள்ள முதியவள், தன் மருமகளான நகைமுத்துவிடம், எப்போதோ ஒருநாள் நடந்த நிகழ்ச்சியினைப் பற்றி அதிகமான மகிழ்ச்சியுடன் சொல்ல ஆரம்பித்தாள். செம்பில் எண்ணையும், சீயக்காயும் எடுத்துக் கொண்டு, என்னுடைய கணவரை எழுந்திருங்கள் என்றேன். அவரோ உடனே உனக்கு எதற்குத் தொல்லை. நீ போய் வேலைக்காரியை அனுப்பு என்று கூறினார். நானோ, நான்தான் அந்த வேலையினை செய்வேன் என்று கூறினேன். ஆனால் அவரோ, மான்போன்றவளே, மென்மையான இடையினை உடையவளே, நீ போய் அங்கே கிளிகளுடன் கொஞ்சல் மொழி பேசியும், யாழினை இசைத்த படியும், மகிழ்ச்சியுடன் இரு. ஏன் கவலைப் படுகின்றாய்? என்று கேட்டார்.

அவர் சுத்தமாக நான் எண்ணெய் தேய்க்கக் கூடாது என்ற மறுத்து விட்டதால் நான் என்னுடைய அறைக்குப் போய்விட்டேன். பின்னர், ஒரு வேலைக்காரி என்னுடைய கணவருக்கு எண்ணெய் தேய்த்து, சீயக்காய் தேய்த்து, வெந்நீர் விட்டு தலையினைத் தேய்த்துக் கொண்டிருந்தாள். அப்போது திடீரென்று அங்கே என்னுடைய மாமியார் வந்து விட்டார். தன்னுடைய மகனைப் பார்த்து, என்னுடைய அன்பு மகனே, எப்படி உன்னுடைய மனைவி, இந்த வேலைக்காரியை உனக்கு தலை தேய்க்க சம்மதித்தாள்? என்று கேட்டார். அதற்கு என்னுடைய கணவரும், ஆமாம் அவள்தான் என்னை, எண்ணெய் தேய்த்தக் கொள்ள வேண்டும் எழுந்திருங்கள் என்றாள், நான் அதனை மறுத்துவிட்டதனால் அவள் உள்ளே சென்று இந்த வேலைக்காரியை அனுப்பி வைத்தாள்.

அப்படியா என்று அதனைக் கேட்டுக் கொண்ட என்னுடைய மாமியார், பின்னர் இந்தப் பக்கமாகத் திரும்பி, முகத்தினை முக்காடு போட்டு மறைத்தபடி நின்று கொண்டிருந்த வேலைக்காரியைப் பார்த்து, நீ போய், தங்கத்திடம், சந்தனம் கொடுத்து இங்கே அனுப்படி என்று கூறினார். அப்போது அந்த வேலைக்காரியின் முகத்தில் போட்டிருந்த முக்காடு திடீரென்ற நகர்ந்து விட்டது. அப்போதுதான் தெரிந்தது, அங்கே இதுவரை ஒருவலைக் காரியினைப் போன்று இருந்ததும் தங்கம்தான் என்பதனை மாமியாரும் என்னுடைய கணவரும் பார்த்தார்க்ள என்று கூறினாள்.

## மணிமொழியாரிடம் மணவழகர்:

மனதாலும் எந்தவிதமான குற்றங்களும் ஏற்படாமலும், நினைக்காமலும் இருப்பதுதான் அறம் என்று வள்ளுவர் கூறியுள்ள செய்தியினை நான் மறக்கவில்லை. அறம் என்பது இல்லறம், துறவறம் என்ற இரண்டுவகையில் உள்ளது என்பதனையும் நான் ஒரு

போதும் எற்றுக் கொள்ள மாட்டேன். வள்ளுவர் அறத்துடன் கூடியதுதான் இல்வாழ்க்கை என்ற கூறுகின்றார். அதனால், என்னுடைய மனதைக் கவர்ந்த ஒருத்தியினையே என்னுடைய மனைவி என்னும் உரிமையுடைய பொருளாக நான் மாற்றிக் கொண்டேன். இதுதான் திருமணம், என்று கூறிய பெரியவர்கள் அனைவரும் கூடியிருந்து, எங்களை புதிய வாழ்க்கையைத் தொடங்குங்கள் என்று கூறி வாழ்த்தினர் என்னுடைய துன்பங்களை எல்லாம் தீர்த்து விட்டவள் என்னுடைய மனைவியே! அவள் என்னுடைய குடும்பவிளக்கு இதைத்தவிர அவளைப் பற்றி நான் வேறு என்ன சொல்ல முடியும்?

என்மீது அதிகமான அன்பினைக் கொண்ட என்னைத் தன் கணவனாக ஏற்றுக் கொண்டவள். நல்ல பிள்ளைகளையும் பெற்று, அவர்களையும் நல்ல வகையில் காத்து வந்தாள். பிள்ளைகளுக்கு நல்ல கல்வியினை அளித்து அவர்களை சபையில் முதல்நிலையில் வரக்கூடியவர்களாக நான் செய்தேன். நேர்மையான முறையினில், அதிகமான பொருளையும் சேர்த்தேன். மனதில் இருக்கின்ற நேர்மை நிலைகள் மாறிவிட்டால் ஒவ்வொரு நிமிடமும் பயத்தின் காரணமாக நாம் நூறு நூறாயிரம் தடவைகள் பிறந்து இறப்பது போன்று பயந்து நடுங்கவேண்டும் அல்லவா? அப்போது இன்பம் வருவதும் போவதுமாக இருக்கின்ற நிலை ஏற்படும் அல்லவா?

ஆனாலும் இந்த அலைகளை உடைய கடல் சூழப்பட்ட இந்த உலகத்தில் இன்றைய நாள்வரையிலும் நிலையான இன்பம் அடைந்தது என்னுடைய மனம் என்று கூறினார் என் கணவர் சொல்லிய அளவில் ஏதாவது இன்பமான நிகழ்ச்சிகள் இருந்தால் அதனைப் பற்றி சொல்லுங்கள் என்ற மணிபோன்று இனிய மொழியினைப் பேசும் அவரது மனைவி தங்கம் கேட்டாள். நல்லது சொல்கிறேன் என்று மணவழகரும் சொல்ல ஆரம்பித்தார்.

படிப்பது, கேட்பது, பாடுவது, ஆடுவது என்று எல்லாவற்றிலும் கூட இருந்த என்னுடைய நண்பன் பிரிந்துவிட்ட பிறகு, நான் என்னுடைய அறையில் தனியாக இருந்தேன். அப்போது நிலாவினைப் போன்ற முகத்தினை உடைய அவள் மனதினை நினைத்தாள். என்னுடைய தனிமையை என் மனம் தாங்கவில்லை.

உண்பதற்கு நாழியளவும், உடுப்பதற்கு நான்கு முழமும் போதும் என்றாலும், மனிதமனம் எண்பதுகோடி அளவிலான ஆசைகளுடன்தான் உள்ளது என்று வயதில் முதிர்ந்தவளான மூத்த அவரை சொன்னதுபோல மக்களின் எண்ணம் பலவகையினதாக உள்ளது. அந்த எண்ணங்களில் தோற்கக் கூடியதும் உண்டு. நிறைவேறக் கூடியதும் உண்டு ஆகையினால், உள்ளத்தில் நல்ல எண்ணங்களும் தோன்றும், தீய எண்ணங்களும் தோன்றும். இந்த நிலையினையே ஆயிரம் ஆயிரம் பிறப்பின் ஏற்படுத்துகின்றது ஒரு நொடி நேரத்தில் நம் உள்ளம் என்று கூறுகின்றீர்கள் இவையெல்லாம் நிலையில்லாத இன்ப துன்பங்கள் ஆகும்.

அப்படியானால் நிலைத்த இன்பம் எது என்று கூறுங்கள் என்று கேட்டார் மணியினைப் போன்ற மொழியினைப் பேசும் மனைவி. அதனைக் கேட்ட மணவழகரும், நல்ல மலர்களை பறிப்பதற்காகவும் நான் போவதில்லை. அதனால் அங்கே சேரினைப் பூசிக் கொண்டு திரும்பி அதனால் அங்கே சேரினைப் பூசிக் கொண்டு திரும்பி வருவதும் இல்லை. எனக்கு ஆசைகள் இல்லை. அதனால் எந்தவிதமான துன்பத்தினையும் நான் அடைந்ததும் இல்லை. தீமைகள் இல்லாத என்னிடத்தில் மீதமாக உள்ளது என்றால், அது ஒன்றே ஒன்றுதான்! அதன் பெயர் உயிர் ஆனால் அந்த உயிரோ அன்பிருப்பதனால் தான் வாழ்கின்றது என்று கூறுகிறார் வள்ளுவர். இதனை அன்பின் வழியது உயிர் நிலை என்று கூறுகின்றார் என்பதனைத் தெரிந்து கொள்வாயாக. என்னுடைய அன்பிற்கு உரியவர்கள் யாரெனில் மனைவி, மக்கள், பேரர், உறவினர்கள் ஆனாலும் என்னுடைய அருகில் இருந்து அன்பு செய்து என்மீது அன்பு வைத்து வாழ்ந்து கொண்டிருப்பவள் என்னுடைய மனைவிதான் என்று கூறினார் மணவழகர்.

## மணவழகர் இரவு நன்றாகத் தூங்கினையோ என்றார்:

சேவல் கூவியது, வானம் சிரித்தது, நூறு வயதினைத் தாண்டிவிட்ட நிலையில் உள்ள மணவழகர் மெதுவாகக் கண்களைத் திறந்தார். அவ்வாறே அவரது மனைவியான கிழவியும் தன் கண்களைத் திற்ந்தாள். அவளைப் பார்த்த கணவர் பெண்ணே நீ நன்றாக தூக்கம் என்கிற பொய்கையைப் படித்தாயா இரவில் என்று கேட்டார்.

பாலின் கஞ்சியினைக் குடித்தோம். திருக்குறளில் இரண்டு செய்யும் படித்தோம். அதற்குரிய உரைகளையும் ஆராய்ந்த முடித்தோம். அப்போது கடிகாரமும் பத்து மணியினை சரியாக அடித்தது பார்த்து விட்டுப் படுத்தோம், தூங்கிவிட்டேன். இப்போது நீங்கள் அழைக்கும் போதுதான் நானும் விழித்தேன் என்று கூறினாள்.

நூறு ஆண்டுகளை நிறைவு செய்யப் பெற்று மிகவும் வயது முதிர்ந்தவளான மனைவி இப்படிக் கூறியதனைக் கேட்டவுடன் அதிகமான மகிழ்ச்சி அடைந்த மணவழகரும் அவளுக்கு பதில் கூற ஆரம்பித்தார். நாம் நம்முடைய நீண்ட பேச்சை நிறுத்தியவுடன் கடிகாரம் மணி பத்தினை அடித்தது. உடனே நானும் தூங்க ஆரம்பித்தேன். சேவல் கூவிய போதுதான் எழுந்தேன் என்று மணவழகர் கூறினார்.

காலை விடிந்து புதிய நாள் துவங்கியது. இந்த குளிர்ந்த விடியற்காலை நேரத்தினிலே உன்னுடைய பக்கத்தில் இருந்து, இப்படிப் பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தது என்றார் அந்த வயதான மணவழகர். ஆனால் அந்த மனைவியோ, எதிரில் வந்து நிற்கின்ற அமிழ்தாம் போன்றவரே, என்னுடைய அன்பானவே, நான் பெற்ற இன்பம் போதும், அதோ

நகைமுத்து வருகின்றாள், நம்மைப் பார்ப்பதற்குள்ளாக நீங்கள் தூரமாகச் செல்லுங்கள் என்று கூறினாள்.

மற்றொரு நாள் காலையிலேயே மணிமொழியார் அந்தத் தம்பதிகள் இருந்த அறைக்கு வந்தார். அவரைப் பார்த்த மணவழகர், அவரை அன்புடன் வரவேற்றார். வநன்தவாரோ மணவழகரைப் பார்த்து, இன்றைக்கு 105 ஆண்டுகள் ஆகிவிட்டது உங்களுக்க இத்தனை நாட்கள் எப்படி உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள்? கூறுங்கள் என்று கேட்டார். என்ன காரணம் என்று கேட்டவருக்க என்னுடைய தாய் தந்தையர்கள் நல்ல ஒழுக்கமுடையவர்கள் அவர்கள் என்னைப் படித்தவர்களில் ஒருவனாக இருக்கும்படிச் செய்தார்கள். அதோடுமட்டுமின்றி, நானும் என்னுடைய எண்ணத்தினாலும் செயலினாலும் எந்தவிதமான தீய ஒழுங்கங்களையும் பார்த்ததும், செயல்படுத்தியதும் இல்லை.

இந்த உலகத்தில் அமைதியினை நிலைநிறுத்த வேண்டும் என்றால் எளிமையான வழிமுறை ஒன்று உள்ளது. பெண்களை ஆண்கள் எந்தவகையிலும் தாழ்வாக நடத்துவதனைவிட்டு ஒழிக்க வேண்டும். அவ்வாறே தாய்மையை இழிவாகப் பேசுகின்ற இலக்கியம் ஒரு நல்ல இலக்கியமாக முடியுமா? சிறப்புடைய பெண்கள் மேலும் சிறப்பு பெற வேண்டுமானால் அவர்களுக்கு கல்வியினைப் பெறுவதற்கு வழிவகை செய்திட வேண்டும். அதுவே நாம் செய்ய வேண்டிய செயல்கள் எல்லாவற்றிலும் முதலானதாகும்! அறிவுடைய மனைவியினால் அமைதியான உலகம் உண்டாகும். இதில் எந்த விதமான சந்தேகத்திற்கும் இடமில்லை.

## மகளிர் ஒழுக்கம் பூண்டால் மருத்துவ நிலையமே வேண்டா:

பெண்கள் அனைவரும் கல்வி அறிவு உடையவராகவும் ஒழுக்கமுடைய வாழ்வினையும் மேற்கொள்ளவார்களே ஆனால் அவர்களுக்கு மருத்துவ உதவிகளே தேவைப்படாது. நோய்களும், முதுமைநிலையம் வராது. பெண்கள் அனைவரும் அரசியலுக்கு வந்துவிட்டால் மாநிலங்களில் போர் என்கிற நிலையே ஏற்படடாது. மேலும் சாதல் என்கிற நிலையும் ஏற்படாது. பேதங்களும் பிரிவுகளும் இல்லாத ஒரு சின்ன உலகம் இருக்கின்றது. அதனைக் கேளுங்கள். தொல்லைகள் எதுவும் இல்லாத அந்த உலகம். நான் வாழுகின்ற என்னுடைய வீடு ஆகும். அங்கு எந்தவிதமான பகை உணர்வுகளும் இல்லை. இல்லை என்கிற வறுமையின் குரல் இல்லை. நோய்த் துன்பம் இல்லை. பழி உணர்வுகள் இல்லை. இப்படி ஒரு இல்லம் இருந்ததற்குக் காரணம் என்னுடைய மனைவி இந்தக் குடும்பத்தினை அரசாட்சி செய்தாள் என்பதுதான் உண்மை.

என்று மேற்சொன்ன செய்திகளை எல்லாம் சொல்லி முடித்தார் மணவழகர். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த மணிமொழியார், ‘ உங்களைத் தொடர்ந்து இந்தக்

குடும்பத்தினை யார் நன்றாக இப்படிப் பெருமையுடன் நடத்தப் போகின்றார்கள்? என்று கேட்டார். அதற்கும், 'நான் நல்லவன், என்னுடைய மனைவி மிகவும் நல்லவன்; நாங்கள் என்றைக்கும் நல்ல மனநலம் உடையவர்களாக இருக்கின்றோம். ஆகையினால் என்னுடைய பிள்ளைகளும் மிகவும் நல்லவர்களாக இருக்கின்றார்கள். என்னுடைய பிள்ளைகளுக்கு பெண் கொடுத்துள்ள குடும்பத்தினை சேர்ந்தவர்களும் மிகவும் நல்லவர்கள், ஆகவே எங்களுடைய 'குடும்பம் மேலும் சிறப்படையும்' என்று கூறினார் மணவழகர்.

'கைகளில் எதனையும் எடுப்பதற்குரிய சக்தி இல்லை. அவ்வாறே கால்களிலும் எந்தவிதமான சக்தியும் இல்லை. கண்களிலும் பார்வை குறைந்துவிட்டது. நாக்கினிலும் சுவைக்கின்றதர் திறன் குறைந்துவிட்டது. உடலிலும் அசைத்திடுவதற்கு ஏதும் சக்தி இல்லை. காதுகளும் கேட்கும் திறனை இழந்துவிட்டது. விலா எலும்புகள் மேலே போர்த்திக் கொள்வதற்கு தோல்கூட இல்லாமல் இருக்கின்றது. நீங்கள் செய்யக் கூடிய செயல் எதுவும் இல்லை. இப்படி இருக்கின்றபோது எப்டி இன்பம் கிடைக்கும். சொல்லுங்கள்' என்று மணிமொழியார் கேட்டதும், மணவழகர் சிரித்தபடி சொல்ல ஆரம்பித்தார். அப்போது முதியவளான தங்கமும் வந்து உட்கார்ந்தாள்.

## இன்புறும் இரண்டு மனப்பறவைகள்:

வாயும், மூக்கும், கண்ணும், காதும், உடலும் வாடிவிட்டாலும் எனக்கும் என்னுடைய மனைவிக்கும் மனமிருக்கின்றது பாருங்கள் சுத்தமான அந்த இரண்டு மனங்களும் அடைகின்ற இன்பம் என்பதனை, துக்குத்தனமுடைய இளைஞர்களாலும் அடைந்திட இயலாது. நம்முடைய மனதின் சிறகுகள் என்றும் ஓய்வடைவதில்லை. வானத்தில் ஏறி, நிலா என்கிற அமிழ்தத்தினை உண்டு, பழகுகின்ற தமிழினில் பாடி சாய்தலும் சறுக்குதலும் இல்லாமல் ஒன்றிற்கு ஒன்று ஆதரவாகக் கைப்பிடித்து சலிப்படைந்திடாது பங்கு.

## இருமணம் இரு மயில்கள்:

பொதிகை மலையில் கொட்டிக் கொண்டிருக்கின்ற அருவிகளின் ஓசை தெம்மாங்குப் பாடலாக ஒலித்துக் கொண்டிருக்கின்றது. அப்படிப்பட்ட மலையின் ஓரத்தில் தென்றல் அசைந்து வந்து, குளிர்ந்த சந்தன மரங்கள் நிறைந்த சோலையில் புகுந்து வீசுகின்ற காற்றினில் திரிந்து கொண்டிருக்கின்ற சோடி மயில்களைப் போன்றவர்கள் நாங்கள் இருவரும். என்றும் சலிப்படைந்திடாது தேனை உண்ணுகின்றதான காதல் சிட்டுகள் நாங்கள் பெரிய தென்னை மரங்களில் உள்ள கீற்றுகளில் ஆடுகின்ற கிளிகளைப் போன்றவர்கள் நாங்கள். நாங்கள், இவள் பெண், நான் ஆண் என்று பிரித்துணர முடியாத அளவில் கலந்து கிடக்கின்ற கூட்டமிழ்தம் போன்றவர்கள்' என்று மணவழகர் கூறினார். அவரது வயதான மனைவி தங்கமோ, கூச்சத்தினால் நெளிந்தாள்.

‘தன் கணவன் தூங்கிவிட்டானா? என்ற சந்தேகத்துடன் தான் இன்னும் தூங்காமல் இருக்கின்ற தன்மையுடை மனைவியை எங்கும் நாம் பார்க்கவில்லை இவளைத்தவிர, துவண்டுகிடக்கக்கூடிய உடலினை உடையவள், தன் கையினை மெதுவாகத் துடுப்புபோல தரையிலேயே துழாவித் தவழ்ந்தபடியே தன்னுடைய கணவன் இருந்த படுக்கையினைத் தாவி அடைந்தாள்.

## இருவர் களிப்பும் இயம்புமாறில்லை:

அறையிலிருந்நத விளக்கு ஒளியினை வீசிக் கொண்டிருந்தது. ஆனால் இந்த இருவரின் வாழ்க்கையும் ஒளியினைத் தாண்டி வாழ்ந்து கொண்டிருந்தது. வெளியில் உள்ள உலகினை இருள் வந்து சூழ்கின்றது. ஆனால் இவர்கள் இருளைத் தாண்டி ஒளிவீசி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். மெதுவாகத் தென்றல் வீசிக் கொண்டிருந்தது. ஆனாலும் எந்தவிதமான பயனும் இல்லை. அவர்கள் இங்கே இல்லை. அவர்களுடைய மனம் இரண்டும் மகிழ்ச்சியில் இருந்தது. அந்த நிலையிலிருந்து மாறவே இல்லை.

## மனவுலகில் இருவர் பேச்சுக்கள்:

இருவரின் மனமும் அறிவு என்கிற வானத்தில் பறக்கத் தொடங்கியபடியே பேச ஆரம்பித்தன. ‘வயது முதிர்ந்தவளானவளே நீ என்னுடைய நினைவினால் தூங்காமல் இருக்கின்ற தவறினைச் செய்கின்றாய். அவளும் அவனைப் பார்த்து, ‘உரிமையுடையவனே, நீங்களும் என்னைப் பற்றியே சிந்தத்தபடி தூங்காமல் வருந்துகின்றீர்கள்’ பெரிய தொல்லையானது தூக்கமில்லாமல் இருப்பதுதான். நல்ல தூக்கம் மிகுந்த இன்பத்தினைத் தரும்.

ஒரு நாளில் பாதி நேரம் மட்டுமே தூங்குகின்றத் தூக்கமே இத்தகைய இன்பத்தினைத் தரும் என்றால், ஒரு நாள் முழுவதும் தூங்குகின்ற தூக்கம், இணையில்லாத இன்பத்தினைக் கொடுக்கும் அல்லவா? ‘பெண்ணே, எந்தன் மனதைக் கவராமல் தூங்குவாயாக’ என்றான் கணவன், அவளும் ‘உரிமை உடையவனே நீங்களும் என்னுடைய மனதினைப் பறித்திடாமல் தூங்கிடுங்கள்’ என்று கூறினாள்.

கனவுகள் இல்லாத தூக்கமாகிய நல்ல உலகத்தில் தூங்க ஆரம்பித்தார்கள் இருவரும்! பின்னர் விழிந்திருந்ததை நினைத்து ஏங்க ஆரம்பித்தார்கள்! இன்பத்தையே விரும்பினார்கள். அதனால் ‘தூங்குவோம்! அதனால்தான் நினைத்த இன்பத்தினை அடைய முடியும் நாம் என்று கூறினர். பிறகு நன்றாகத் தூங்க ஆரம்பித்தார்கள். அதன்மூலம் இன்பத்தினையம் அடைய ஆரம்பித்தார்கள். அவ்வாறே வாழ்கின்றவர்களின் உள்ளங்களில் நிறைந்திருக்கின்றார்கள்.

# ஆசிய ஜோதி

# கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

## முன்னுரை:

மனிதனாய்ப் பிறந்து கடவுளான உயர்ந்த மனிதனின் உருவத்தை நம் மனதில் மாறாத சுவடாக தேசிக விநாயகம் ஆசிய ஜோதியை தந்துள்ளார். இந்தியாவில் பிறந்திருந்தாலும் புத்தரின் கொள்கைகள் சீனா, ஜப்பான், இலங்கை மற்றும் பிற அயல்நாடுகளில் விழுது பரப்பியிருப்பது வியக்கத்தக்கது. மண் பயனுற வேண்டும் என்பதற்காகத் தன் அரச வாழ்வைத் துறந்தார் புத்தர். இந்து மற்றும் சமண சமங்களின் நெருக்கடியின் காரணமாக சித்தார்த்தனின் போதிமரம் தேடத்தொடங்கினர். இத்தகைய சிறப்பு வாய்ந்த புத்தரின் வாழ்வை வாசிக்கி தருணத்தில், அந்த வாழக்கையிலும் காதல் பொதிந்திருக்கிறதைப் புரிந்துகொள்ள முடிகிறது. புத்தரின் துறவு வாழ்வுக்கு முன்பு யசோதரைக்கும் புத்தருக்கும் இடையிலிருந்த புனிதமான காதல் நம்மை வியக்க வைக்கிறது! மனிதனுக்கு மனிதன் பல்வேறு வகையாகச் சிதைந்து கிடப்பதற்கு காரணம் ஆசைதான் என்பதை உணர்ந்த அவர் லேளகீக வாழ்வைத் துறந்து, இந்த உயிர்கள் இப்படியெல்லாம் வதைபடுகின்றனவே, இதற்கெல்லாம் உண்மையான காரணம் என்ன என்ற உண்மையைத் தேட கிளம்பினர். அந்த தேடலில் வெற்றியும் பெற்றார். இன்று உலகமே பௌத்தக் கொள்கைகளைக் கண்டு வியக்கிறது, நேசிக்கிறது.

## புத்தர் அவதாரம்:

வையகத்தில் உள்ள உயிர்கள் எல்லாம் வாடியது அவை வழியறியாது வருத்தமுற்றது உண்மை கூறுபவர் எவரும் இவ்வுலகில் இல்லை.

**எண்ணரிய செனமங்கள் எடுத்து முன்னம்**

**எவ்வுடம்பின் எவ்வுயிர்க்கும் இடர்களைந்தேன்**

**மண்ணுலகம் ஈடேற இன்னும் ஓர்கால்**

**மனித உடல் தாங்கமனத்து ஆசை கொண்டேன்.**

இப்பிறப்பு இன்றி வேறுபிறப்பு எனக்கு இங்கு இல்லை என்னை வழிபட்டு வாழும் ஒப்பரிய அடியவர்கள் எவர்க்கும் இல்லை. இதுவே உண்மை ஆகும்.

**“வானெழுந்து வளர் இமய மலையின் தென்பால்**

**வாழும்உயர் சாக்கியர்தம் மன்ன னுக்கு**

**யானுமொரு மகனாகச் செல்வேன்” என்றான்.**

**இமையவரை நோக்கிஅருள் இறைவன் மாதோ!**

சுத்தோதனன் மனைவி அலர்மங்கை கனவு ஒன்று கண்டாள். எந்நாடும் எவ்வுயிரும் இன்புறுகின்ற அளவில் கனவு கண்டாள். அக்கனவு என்னவென்றால் கண்ணுக்கு அழகிய காட்சியளித்து கதிரொளி போன்று ஒளி வீசி திசை எட்டும் அவ்வொளி பரவி, காம தேனுவின் பால்நிறம் பெற்ற அவ்வொளி,

**'மன்னனும் மதவேழம் போன்றிடுமீன் - இந்த**

**வையம் ஒளிர ஒளிவிடுமீன்'**

என்றளவில் ஒளியினை வீசிக்கொண்டு விண்னை விட்டு விரைந்து கீழிறங்கி வீதியெலாம் ஒளி வீசி வந்து மண்ணகம் வந்து தேவி மாயை வயிற்றில் புகுந்தது. வலமருங்கில் விண்மீன் வயிற்றில் பாய மாதேவி துயில் எழுந்து மகிழ்ச்சியுற்றாள். உலகறியா திருவருளை வியந்து நின்றாள். ஒரு தாயும் கண்டறியா இன்பம் கண்டாள்.

**காலைக் கதிரோன் உதிக்குமுன் - ஆசிய**

**கண்ட மெலாம் ஒளி கண்டதுவே;**

**வேலைத் திரைகள் அடங்கினவே - திசை**

**வெற்புகள் நின்றுகூத் தாடினவே.**

**பட்ட மரங்கள் தளிர்த்தனவே - எங்கும்**

**பாழ்ங்கிண றும்ஊறிப் பொங்கினவே;**

**திட்டுத் திடர்மணற் காடும் - சுடுகாடும்**

**சில்லென்று பூத்துச் சிலிர்த்தனவே.**

**சீரிய ஓடை குளங்களிலே - நல்ல**

**செந்தா மரைகள் மலர்ந்தனவே;**

**பாரிலே அவ்விராக் கண்ட - புதுமையைப்**

**பாடிட வல்லவர் யாரேயம்மா!**

வெண்மையான சுடர் உலகில் தோன்ற, சோலைகள் எல்லாம் பொன்னிறமாக தெரிந்தது. தேவி மாயை மகிழ்ச்சியுடன் இருந்தாள். மறுநாள் மன்னவன் தேவிக் கண்ட கனவின் பயனைப்பற்றி பெரியோரிடம் கேட்டான். அதற்கு அவர்கள் தேவி கண்ட கனவு நற்கனவு சீரான அழகான ஆண்மகனை தேவி பெறுவாள். அந்தச் செல்வ மகன் தெய்வமகனாவான். ஞான குருவாகி உண்மை உபதேசங்கள் செய்வான். இந்தப் புவி முழுவதும் ஆள்வான். அவனுடைய மகிமையை எடுத்துரைப்பது அவ்வளவு எளிதல்ல என்றார்.

**ஒருநாள் பகலில் உச்சியம் பொழுதில்**

**அரண்மனை யருகில் அணிமலர் மலர்ந்து**

**நறுமணம் வீசுமோர் நந்த வனத்தில்**

**தழையும் பூவும் தலையில் தாங்கிக்**

**கோயிலில் நட்டஓர் கொடிமரம் போல**

**வளருமோர் அசோக மரத்தின் நிழலில்**

**மாயாதேவி வந்து நின்றனள்.**

**நிற்கவே,**

**உரிய காலம் உறுவதை உணர்மரம்,**

**உணராப் பொருளெதும் உலகினில் இல்லை;**

**மலர்முடி வணங்கி வளைந்து கவிந்தொரு**

**தழைவீ டாகச் சமைந்து நின்றது.**

**பாரிடம்,**

**பன்மலர் மலாந்தொரு பஞ்சணை யாயது;**

**பக்கத் தொழுமொரு பாறையும் பிளந்து,**

**மதலையை ஆட்ட மஞ்சனை நீரை**

**ஓடும் அருவியாய் ஒழுக விட்டது.**

**தேவி,**

**நோவு நொம்பலம் நோக்கா டின்றியோர்**

**மகவினைப் பெற்று மகிழ்ச்சி யுற்றனள்.**

அழகான மகனொரு தேவி அரண்மனைக்கு வர சுத்தோதனன் காவலர்களுக்கு ஆணையிட்டான். நான்கு திசையையும் காக்கும் காவலர்கள் நின்று வணங்கினர். வெள்ளியில் அங்கி அணிந்து கொண்டு வெண்முத்தை பரிசாக கொண்டு வந்தார் உம்பர்கோன். நீலக்குதிரையில் ஏறி நீலமணி கொண்டு வந்தார் எமன். சிவந்த குதிரை மேல் ஏறி உயர்ந்த செம்மணிக் கேடகத்தை நாகர்கள் படைசூழ கொண்டு வந்தார் வருணன். பொன்னிறமான குதிரையேறி பொன்னில் செய்த கிடுகு மேந்தி யக்ஷர்களோடு குபேரன் வந்தார் தெய்வ மகனை கண்டு இவர்கள் யாவரும் வணங்கினர்.

**ஆண்ட விருதுகள் யாவும் கரந்துலகு**

**ஐயுறா தங்குவந்தார் - அவர்**

**பூண்ட வடிவால் உடையால் அப்பல்லக்குப்**

**போகியர் தாமேயானார்**

**தேவர் இவரென யாவருங் கண்டு**

**தெளிந்திடா வாறுவந்து - திசைக்**

**காவலர் கூடிச் சிவிகையைத் தோளிலே**

**காவியெ டுத்தனவே.**

**உம்பரும் அன்று மனிதராய் மாறி**

**உலாவிக் களித்துநின்றார் - என்றும்**

**அம்புவி வாழ இறைவனும் வந்தங்கு**

**அவதரித் தான் எனவே.**

பின்னர், மன்னர் சுத்தோனனிடம் கற்றறிந்த பெரியோர்கள் மன்னனை வணங்கி இவ்வாறு கூறினர்.

**"உலகம் முழுதும் ஒருகுடைக்கீழ் ஆளுமன்னன்,**

**அலகில் புகழுடையான், ஆண்மைத் திருவுடையான்,**

**ஓரா யிரமாண்டுக்கு ஒருமுறை தோன்றுவமவன்.**

**சீரார் பெருமான், உன் செல்வமக னாய்வந்தான்;**

**எண்ணற் கரியபேறு ஏழுபெரும் பேறுஇந்த**

**மண்ணில் அவனுக்கு வாய்த்திருப்ப துண்டு ஐயா!**

**தெய்வீக மான திருவாழி ஒன்றாகும்;**

**எய்தற் கரிய இரத்தினம் ஒன்றாகும்;**

**ஆகாய வீதிசெலும் அசுவமும் ஒன்றாகும்;**

**மதயிற் சிறந்தவொரு மந்திரி தானுண்டு;**

**சதுரில் தளராவோர் தளகர்த்தன் தானுண்டு;**

**காலை திருவின் கவினிற் சிறந்தநங்கை**

**சேலொத்த கண்ணியொரு தேவியும் உண்டு" என்றார்.**

இவற்றையெல்லாம் கேட்ட மன்னன் மகிழ்ச்சிக் கொண்டு விழா எடுக்க ஏற்பாடு செய்தான். வீதி எங்கும் குலை வாழை கட்டினர் தோரணம் நட்டனர், கோலமிட்டனர், கோயில்களில் தீபம் ஏற்றினர், வீதிகளில் மலர்களால் பந்தல் செய்தனர், பெண்கள் விளக்குகள் ஏற்றினர்,

குழல் ஊதினர், பல்வேறு வித்தைகள் செய்தனர் பட்டுச் சேலைகளால் அலங்காரம் செய்தனர். இவ்வாறு நகரெங்கும் விழாக் கோலம் பூண்டது வந்த பலநாட்டு மன்னர்களும் வணங்கினர். அரசன் சுத்தோதன் தன் மகனுக்கு சித்தார்த்தன் எனப் பெயரிட்டார். இவனைக் காண அசிதமா முனிவன் வந்தார். தேவி மாயையை வணங்கினார். வணங்கிய முனிவர் இவ்வாறு கூறினார்.

**அவனே நீயாம் ஐயம் அதற்கில்லை!**
**பகவன் நீயே! பரமன் நீயே!**
**புனிதன் நீயே! புராணன் நீயே!**
**தருமன் நீயே! தலைவன் நீயே!**
**ஆதி நீயே! அறவோன் நீயே!**

**ஆயிர வாரத் தாழியான் நீயே!**
**உண்மை ஒளியால் உள்ளிருள போக்கி**
**நன்மை விளைக்கும் ஞாயிறு நீயே!**
**யானும் இன்றுஉன் இணையடி பணிந்து,**
**பாரிற் பிறந்த பயனெலாம் பெற்றேன்.**

**மன்னர் மன்னவ! மானிடத் தருவில்**
**ஆயிரம் ஆயிரம் ஆண்டுகட்கு அப்பால்**
**மலரிதன் மணமே அறிவின் மணமாய்**
**ஒருமுறை மலரும் ஒண்மலர் இதுவாம்.**
**மலரிதன் மணமே அறிவின் மணமாய்**

**மனத்தின் மாசு மாற்றிடும், ஐயா!**
**மலரிதன் மதுவே அருளின் மதுவாய்**
**மன்னுயிர்க்கு இன்பம் வளர்த்திடும், ஐயா!**
**இம்மா மகனை ஈன்றவர் போல**
**மாதவஞ் செய்தோர் மாநிலத்து உண்டோ?**

மேலும், முனிவர் மன்னனை பார்த்து ‘அரிவாள் போல் உன் நெஞ்சினை அறுக்கும் நெடுந்துயர் ஒன்று இம்மகவால் உனக்கு வரும். மங்கையர்க்கரசி மாயாதேவி! வாழ்க்கை உனக்கு துன்பம். அதனால் ஏந்திய முத்தினை ஈன்றபின் சிப்பி மறைவது போல,

இன்றிலிருந்து ஏழாம் நாள் இறவா இன்ப வீடு எய்துவது உண்மை என்று முனிவர் உரைத்தார்.

**அருள் உரிமை:**

உலகம் முழுதும் ஒரு குடையின் கீழ் ஆளும் அண்ணல் அரண்மனையருகில் உள்ள மலர்ந்த மலர்கள் நிறைந்த இடத்திற்கு வந்தார். அப்போது தேவதத்தன் என்பான் அன்னப் பறவை ஒன்றை அம்பால் எய்த அது சித்தார்த்தன் காலடியில் இரத்தம் வழிய வீழ்ந்தது. அதனைக் கண்ட சித்தார்த்தன் அன்னப்பறவையை தழுவி அதன் வேதனை நீக்க முற்பட்டார் அப்போது சேவகன் ஒருவன் வந்து என் அரச குமரன் ஓர் அன்னப்பறவையை வீழ்த்தினர் வீழ்ந்த இடம் இது எனவே, அன்னப்பறவையை அனுப்புங்கள் என்றார். அதற்கு சித்தார்த்தன் பதிலுரையாக,

**"எய்த அம்பினால் - பறவை**

**இறந்து வீழ்ந்திடுமேல்,**

**எய்த வர்க்காகும் - உரிமை;**

**யாதும் ஐயமில்லை.**

**நீண்ட சிறகினிலே - விசைதான்**

**நின்றி ருப்பதல்லால்,**

**மாண்ட தில்லைஅன்னம் - உயிர்த்து**

**வாழு கின்றதப்பா!**

**சந்தேகம் வேண்டாம் - அதனைத்**

**தரமு டியாதப்பா!**

**எந்த உயிரையும் - காப்பது!**

**என் கடமையப்பா!**

**சாற்றும் உரைகேட்டுத் - தேவ**

**தத்தனம் ஓடிவந்து,**

**சீற்றம் எழுந்தவனாய் - நின்று**

**செப்பும் மொழியிதுவாம்;**

என்று கூற தேவதத்தன், சித்தார்த்தனிடம் வாதிட்டான். இருவரும் பெரியோரிடம் சென்று நீதி கேட்டனர். அப்போது புரோகிதன் ஒருவன் தன் நீதியைக் கூறினான்.

"உயிரைக் கொன்றிடவே - முயலும்

ஒருவ னுக்குஅந்த

உயிரின் மேலேதும் - உரிமை

உண்டோ? கூறும் ஐயா!

உயிரைக் காப்பவனே - என்றும்

உயிர்க்கு உடையவனாம்;

அயர்வு வேண்டாம், ஐயா! - இதுவே

அறநூல் விதி ஐயா!

இன்னும் வீண்வாதம் - பேசி

இருப்பதேன்? ஐயா!

அன்னம் சித்தார்த்தன் - பொருளாம்

ஐய மில்லை, ஐயா!"

என்று நீதி எடுத்துண ரச் செய்து

மன்றி லிருந்து மாய மாக

மறைந்து போயினன்; மறையும் அந்நேரம்,

பையர வொன்று பதுங்கி அவ்வழி

ஊர்ந்து செல்வதை ஒருவன் கண்டனன்;

சிற்சில காலை தேவரும் இந்த

வடிவந் தாங்கி வருவதுண்டு என்பரால்!

யாதோ உண்மை? யாவரே அறிவார்?

என்றான்.

## காதல் பிறந்த கதை:

அசிதா மா முனியும், கனா நூல் கற்றவரும் கணித்து சொன்னதும் நிகழும் அரண்மனை செல்வத்தில் அவனுக்கு ஆசை இல்லை எனவே நீள் நிலம் புரக்கும் நெறியின் மீது அவன் ஆசை கொள்ள உபாயம் செய்ய வேண்டும் என்கின்றனர். அறமுது கிழவன் அமைச்சன் ஒரு உபாயம் கூறுகிறான். விழா ஒன்று எடுத்து அவ்விழாக் கூட்டத்திற்கு அழகிய கன்னியர்களுக்கு அழைப்பு விடுப்போம் என்கின்றனர். சாக்கிய நாட்டு ஆடல் பாடல் அனைத்திலும் கற்ற திறம் வெளிப்படுத்த சிறந்தவர்க்கு பரிசு வழங்க வேண்டும்.

அழகி எவளால் அவனது திருமுகம் வாட்டம் நீங்கி மலர்ச்சி பெறுமோ, அவள் அரசிளங்குமரன் வாழ்க்கைக்குரிய மனைவியாவாள் என்கின்றனர். அழகிகள் வந்தனர். சித்தார்த்தன் அனைவருக்கும் பரிசுகளை வழங்கினான் பரிசுகள் மீதம் இல்லை அப்போ,

**அங்கையற் கண்ணி அழகின் செல்வி**

**தீங்களைப் பழிக்கும் திருமுக விலாசினி**

**பங்கய மீதெழாப் பாக்கியலெட்சுமி**

**யசோதரை என்னும் யௌவன குமாரி**

எழுந்து வந்து நேரேதிரே நின்று "எனக்க பரிசேதும் ஈவதற்கு இல்லையோ?" என்று கேட்க.

**"இருந்த பரிசுகள் யாவும் போயின;**

**ஆயினும்,**

**மாநகர் போற்றும் மங்கையர் மணியே!**

**இதனைப் பரிசாய் ஏற்றுக் கொள்" எனத்**

**தன், மார்பிற் கிடந்த மரகத மாலையைக்**

**கழற்றி யசோதரைக் கன்னியின் அழகிய**

**திருவரை சுற்றிச் சேர்ந்து கட்டினன்.**

**கட்டவே,**

**கண்களும் கண்களும் கவந்து பேசின,**

**கண்களும் கண்களும் கலந்து**

**பேசின பேச்சில் பிறந்தது காதலே!**

சித்தார்த்தனுக்கும், யசோதரைக்கும் காதல் பிறந்தது.

## சித்தார்த்தன் கேட்ட தேவ கீதம்:

ஒரு நாள் சித்தார்த்தன் யசோதரையின் அந்தப் புரத்தில் அமர்ந்திருக்கிறான். அழகிய வீணையொன்று ஒரு புறத்தில் இருக்கிறது. காற்று வீசும் பொழுது அந்த வீணையிலிருந்து ஒலி உண்டாகிறது. அந்த ஒலியில் கலந்திருக்கும் தேவகீதம் சித்தார்த்தனுடைய செவிக்கு மட்டுமே கேட்கிறது. தேவகீதத்தில் பொதிந்துள்ள பொருள் தேடும் இடங்களெல்லாம் ஓய்வு தேடியும் இல்லை. ஓடி அலையும் காற்று நாங்கள் உயிர்கள் எல்லாம் பிறக்கும் இடம் எது? இந்த உயிர்கள் மீண்டும் செல்லும் இடம் எது? எங்கிருந்து நாங்கள் வந்தோம் எதற்காக வந்தோம் இந்த உண்மையை அறிவார் யார்? நாங்க சுத்த

சூனியத்தில் நின்று தோன்றிய ஆவிகள் மாறிவரும் துயரால் இன்ப வாழ்வு எங்களுக்கு இல்லை. நித்திய ஆனந்தத்தை அடையும் வழி பற்றி சிந்தனை செய்வாய்.

**அன்பு இருக்குமெனில் - அதிலும்**
**அளவ றியவொண்ணா**
**இன்பம் எய்திடலாம் - ஐயம்**
**யாது மேயில்லை;**
**கண்ட வாழ்விதுதான் - நிலையாக்**
**காற்றின் வாழ்வேயாம்;**
**கொண்ட தந்தியின்மேல் - எழும்**
**குரலே போன்றதுவாம்.**

**சாலவேஉலகம் - துயரால்**
**தளர்ந்து வாடுதையா**!
**மாலை மாலையாக் - கண்ணீர்**
**வடிய விடுகுதையா**!

**வாழ்வு மாயமெனும் - உண்மை**
**மனத்திற் கொள்ளாமல்,**
**நாளும் நைந்திடுதல் - எமக்கு**
**நகைப்பே தருகுதய்யா**!

**நீல மேகந்தான் - ஆணையால்**
**நிலையில் நின்றிடுமோ?**
**தாலத் தோடும்நதி - கையால்**
**தடுக்க மாறிடுமோ?**

**துன்பச் சுழியிலே - விழுந்து**
**சுழலும் உலகத்தை**
**இன்பக் கரையேற்ற - நீயும்**
**இரங்கிட வேண்டும்.**

இந்த வையம் முழுவதையும் ஆளவந்த அவதரித்த ஐயனே! மாயப் பொய்மைகளைக் கண்டு மயங்கிடாதே என யசோதரை வீணை இசைத்து தேவகீதம் பாடுகின்றாள்.

## சித்தார்த்தன் துறவு:

பள்ளியறையில் யாசோதரை கனாக்கண்டு ”காலம் வந்தது” என்று வாய் புலம்புகிறாள். சித்தார்த்தன் அதைக் கேட்டுக் கவலையிலிறங்கி, வானில் நட்சத்திரங்களைப் பார்க்கிறான். உரிய காலம் வந்தது என்றறிந்ததும் துறவு பூணத் துணிகிறான். விரைவில் எழுந்து மன்னர் குமரன் வெளியில் இறங்கி வானை நோக்கினான். கோள்கள் எல்லாம் உரிய காலம் இதுவென கூறின.

**நன்மை தரும்வழி நாடுகின் றனையோ?**

**மணிமுடி தாங்கி மன்னர் மன்னனாய்**

**நீள்நிலம் புரக்க நினைக்கின் றனையோ?**

**உலகி லுள்ள உயிரெலாம் உய்ய**

**நாடும் இழந்து நகரும் இழந்து**

**வீடும் குடியும் விட்டவ னாகி**

**தன்னந்தனியே தரணியின் மீதுஓர்**

**ஆண்டி யாக அலைந்து திரியா**

**எண்ணுகின்றனையோ? யாதுஉன் விருப்பம்?**

**தெரிந்துநீ உள்ளம் தேறு வாய்” எனக்**

**கூறின; அவனும் குறிப்பின் உணர்ந்தனன்,**

**எங்கும் மூடி இருண்ட இருளில்**

**காற்றொடு முன்னம் கலந்து வந்த**

**தெய்வ கீதமும் செவியுறக் கேட்டனன்.**

**ஐயமில்லை, நம்ஐயன் தங்கிய**

நித்திரை கொள்ளும் தன் மனைவியை விடுத்து முடிமீது ஆசை முழுதும் விட்டேன் என்றார் சித்தார்த்தன் போர்க்களம் சென்று உதிரப்பெருக்கில் வெள்ளி எனக்கூறும் தீவினை இனி நான் புரியேன். பாலையை வாழிடமாக்குவேன். ஏழைகள் எதனொடும் அன்பு செய்வேன். தோழமையோடு அனைவர் துணியையும் அரையில் அற்றுவேன். தெருத் தெருவாய் திரிந்து பருக்கையை உண்டு பட்டினி போக்குவேன் பாரில் உயிர்கள் படும் துயரெல்லாம் புகுந்து என் உள்ளம் புண்படுகின்றது.

ஆதலின்,

இன்ப வாழ்வை இகழ்ந்து நீக்கினேன்:

துன்ப வாழ்வைத் துணிந்து போற்றினேன்,

சிறிய பெரிய தேவர் தம்முள்

எல்லாம் வல்லார் எவரும் உளரோ?

இரக்கமுள்ளார் இருக்கின் றனரோ?

கண்ணால் அவரைக் கண்டவர் உண்டோ?

வணங்கி நித்தம் வழிபடு வோர்க்குஅவர்

செய்திடும் நன்மை சிறிதும் உளதோ?

எத்தனை எத்தனை எத்தனை மனிதர் -

அன்ன சாலையில் அந்தணர் நிதமும்

உண்டு களிக்க உணவிடு கின்றனர்?

அன்னியர்க்கு அல்ல அடியவர்க்கு எனினும்

இவ்வுல கதனில் யாதும் ஒருநலம்

செய்தறி யாத தேவரை நோக்கிக்

'கங்கா தரனே, கண்ண பிரானே!

காப்பாய் காப்பாய் காப்பாய்' என்ன,

(அன்பின் மிகுதியோ? அச்சமோ அறியேம்)

தொழுது போற்றும் தோத்திரப் பாக்கள்

வானில் முழங்கும் வல்லிடி போல

உயிர்கள் அடையும் ஓயாத் துயரோ-

யாதும் ஒருதுயர் இம்மி யளவும்

நீங்கி, எவரும் நித்தியா னந்த

வாழ்வடைந்து இங்கு வாழ்வதும் உண்டோ?

அருமை மங்கையர் அன்பு நிறைந்து

சிக்கிச் சுழந்று திகைப்புவோரே,

**உலகில் வாழும் உயிரின் பிறப்பிடம்**

**அறிவிற் கெட்டா தாயினும், அவ்வுயிர்,**

**படிப்படி யாய் இப் படியின் மீதுஓர்**

**அணுவாய்க் கொசுவாய் அரிக்கும் புழவாய்**

**பாம்பாய் மீனாய்ப் பறவையாய் மருகமாய்**

**மனிதனாய்ப் பூதமாய் வானுறை தேவனாய்த்**

**தெய்வமாய்த் தோன்றித் திரும்பவும் அவ்வழி**

**மண்ணாய் அணுவாய் மாறுதல் இயல்பாம்**

**ஆதலின்,**

மக்கள் வருந்தி வாழ்கின்றனர் ஊமைகள் போல உளருகின்றனர். உடலின் உறுதியும், ஊக்கமும் உடையோன் காசினி ஆள நினைப்பானே ஆனால் நன்மை தீமை எந்நாளும் ஒன்றாய்க் கலந்து தங்கும் இக்காசினி மீது வாழ்வதில் மிக்க மகிழ்ச்சியுடையோன் என்றார். மேலும் என்குடி, என்கிளை, என்வாழ்வு, என்சுகம், என் இளம் பருவம், என் சிங்காசனம், நான் வாழும் அரண்மனை யாவும் வெறுத்தேன் என் அன்பின் உருவம் யசோதரையையும் மறந்து, காதலில் மலர்ந்த வயிற்றில் வளரும் மகவினை மறந்து, உண்மை ஞானம் இவ்வுலகெலாம் ஒளிரச் செய்வது என் கடன் சிறிது காலம் பிரிகிறேன் எனக் கூறி வாடி வருந்தும் மன்னுயிரெல்லாம் அடையும் துன்பம் அனைத்தும் ஒழிக்க இரவில் ஞானி சித்தார்த்தன் சென்றார்.

## புத்தரும் ஏழைச் சிறுவனும்:

அரண்மனையிலிருந்து வெளிப்பட்டுச் சென்ற புத்தர் வழி நடந்த களைப்பால் சோர்ந்து கிடந்தார். அவரைக் கண்ட ஓர் இடைச் சிறுவன், தான் தாழ்ந்த குலத்தினனாதல் பற்றி, தன் கலயத்தில் பால் கறந்து அவருக்குக் கொடுக்கத் தயங்கினான். பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் பாரட்டலாகாது என்று புத்தர் அவனுக்கு போதித்த வரலாறு.

ஆடுகள் மேய்த்து வந்த ஆயர் சிறுவன் வாடிக்கிடந்த சித்தார்த்தன் மயக்கம் தெளிய தழைகள் வெட்டி நிழல் தர நட்டான் பின் வெள்ளாடு ஒன்றை அழைத்து வந்து வள்ளல் மயக்கம் தெளிய வாயில் மடுவை வைத்து பாலைக் கறந்து விட்டான். மயக்கம் தெளிந்த சித்தார்த்தன் கலத்தில் பாலைக் கேட்டான். ஆனால் சிறுவன் தீண்டத்தகாதவன் என்று கூற வள்ளல் இவ்வாறு கூறினார்.

**ஓடும் உதிரத்தில் - வடிந்து**

**ஒழுகும் கண்ணீரில்,**

**தேடிப் பார்த்தாலும் - சாதி**

**தெரிவ துண்டோ அப்பா!**

**எவர் உடம்பினிலும் - சிவப்பே**

**இரத்த நிறமப்பா!**

**எவர்விழி நீர்க்கும் - உவர்ப்பே**

**இயற்கைக் குணமப்பா!**

**நெற்றியில் நீறும் - மார்பில்**

**நீண்ட பூணூலும்**

**பெற்றுஇவ் உலகுதனில் - எவரும்**

**பிற்நத துண்டோ அப்பா!**

**பிறப்பினால் எவர்க்கும் - உலகில்**

**பெருமை வாராதப்பா!**

**சிறப்பு வேண்டுமெனில் - நல்ல**

**செய்கை வேண்டும், அப்பா!**

**நன்மை செய்பவரே - உலகம்**

**நாடும் மேற்குலத்தார்;**

**தின்மை செய்பவரே - அண்டித்**

**தீண்ட ஒண்ணாதார்."**

சித்தார்த்தன் கூறிய மொழிக் கேட்டு ஆயர் சிறுவன் கலத்தில் பாலைக் கறந்து கொடுத்தான். சித்தார்த்தன் தளர்ச்சி நீங்கினான்.

## கருணைக்கடல்:

அரச வாழ்வைத் துறந்து நள்ளிரவில் வெளிப்பட்டுச் சென்ற புத்தர், பிம்பிசார மன்னனுடைய யாகத்துக்காக கொண்டு செல்லப்பட்ட ஆட்டு மந்தையிலன் மத்தியில், துன்புற்றிருந்த ஒரு நொண்டி ஆட்டு குட்டியை தம் தோளில் சுமந்து கொண்டு சென்று, யாகசாலையை அடைந்து, மன்னனுக்கு அறவுரை போதித்து நாடெங்கும் உயிர்க் கொலையை நிறுத்திய வரலாறு.

இத்தனையும் கண்டுமனம் இரங்கி, நொண்டும்

இளமறியை இருகரத்தின் எடுத்து. வையம்

அத்தனையும் தாங்குபுயம் அணிய ஏந்தி,

அருளுருவாம் அண்ணலும் அத்தாயை நோக்கி;

வள்ளலும் உள்ளம் வருந்தி, யானும் - அந்த

மாமகம் காண வருவேனென்று,

துள்ளும் மறியுஞ் சுமந்துகொண்டு - தாயும்

சேர்ந்து தொடர வழி நடந்தார்.

மானேந்தும் ஈசனுளம் நாண, ஆட்டின்

மறியேந்து பெருங்கருணைப் புனித வள்ளல்,

வானேந்து மதில்மீது கொடிகள் ஆடும்

மாநகரின் திருவாயில் வந்தபோது;

பிம்பிசாரன் யாசசாலை நடுவினில் வந்தார். மந்திரம் ஓதினர் பண்டங்கள் வாரி இறைத்தனர். ஆடுகள் வெட்டிய இடம் உதிர ஆறாக ஓடியது. இதனைக் கண்ட சித்தார்த்தன் பிம்பிசாரன் முன் தோன்றி,

"வாழும் உயிரினை வாங்கிவிடல் - இந்த

மண்ணில் எவர்க்கும் எளிதாகும்;

வீழும் உடலை எழுப்புதலோ - ஒரு

வேந்தன் நினைக்கினும் ஆகாதையா!

ஆட்டின் கழுத்தை அறுத்துப் பொசுக்கிநீர்

ஆக்கிய யாகத்து அவியுணவை

ஈட்டும் கருணை இறவைர் கைகளில்

ஏந்திப் புசிப்பரோ? கூறுமையா!

மைந்தருள் ஊமை மகனை ஒருமகன்

வாளால் அரிந்து கறிசமைத்தால்

தந்தையும் கண்டு களிப்பதுண்டோ? - இதைச்

சற்றுநீர் யோசித்துப் பாருமையா!

**பிள்ளையைக் கொன்று கறி சமைத்தீர் - அதன்**

**பெற்றோரை உண்ண அழைத்துநின்றீர்;**

**வள்ளளே உள்ளந் தெளிந்தவரே**

**மன்னுயி ரெல்லாம் உலகிலவ் - ஒருதாயின்**

**மக்களென் றுண்மை அறிந்திலீரோ?**

**தன்னுயிர் போற்றிப் பெரும்பழி செய்வது**

**சண்டாளர் கண்ட நெறியலவோ?**

**பாரில் உதிரம் குளிப்பதனால் - ஒரு**

**பாவமும் நீங்குவ தில்லைஐயா!**

**தாயென நம்பி வரும்உயிரை - யாக**

**சாலை நடுவில் கிடத்திஒரு**

**பேயெனக் கீறிப் பிளப்பதனால் - என்ன**

இதனைக் கேட்ட மன்னன் பிம்பிசாரன் மனம் திரும்பினான் அன்று முதல் மாதம் மும்மாரி பொழிந்தது, நாடு செழித்தது, நகரம் சிறந்தது, செம்மை வளர்ந்தது, தீமை தேய்ந்தது. புத்தன் உரை பொன்னுரையானது.

## புத்தரும் சுஜாதையும்:

பரமதயாளன், சுஜாதை இருவரும் சேனானியில் வசித்து வந்தனர். உண்மையும், அறிவுமன் உடையவர். எளிமையும், பொறுமையும், இரக்கமும் உடையவர்கள் இருவரும் இல்லறம் இனிது நடத்தி வருகின்றனர். அவர்களுக்கு மைந்தன் இல்லாக் குறை இருந்தது. தேவி சுஜாதை தினம் தினம் அரசு சுற்றினாள் நோன்பு பல நோற்றாள்.

**பொற்றா வங்கள் பொலிவுற எடுத்து**

**வனத்தின் தெய்வம் வாழ்மரத் தடியில்**

**வைத்து நின்று வணங்குவேன் என்றொரு**

**நேர்த்திக் கடனும் நேர்ந்தி திருந்தனர்.**

**அப்பால்,**

**திருவரு ளாலொரு செல்வக் குமரனைப்**

**பெண்மணி யவளும் பெற்றனள்னு; பெற்று**

**மூன்று மாதம் முற்றிய பின்னர்,**

**ஒருகை,**

**மைந்தனை யேந்தி மார்போடு அணைக்க,**

**ஒருகை,**

**தேவினுக் குரிய தீஞ்சுவைய முது**

**தாங்கிய கலசத்தைத் தாங்க, ஒருநாள்**

**அடவியில் அமைந்த ஆலயம் நோக்கி**

**அன்ன மெனஅவள் அசைந்து சென்றனள்.**

மரத்தின் அடியில் வையகம் வாழ மாதவம் செய்யும் வள்ளலைக் கண்டனள்.

**வேண்டி நின்றனன்**

**வேண்டுதல் கேட்டவள்**

**மதலையின் மீதுகண் வைத்த வண்ணமே,**

**'சிந்தையில் எண்ணம் சித்தி யாகுக'**

**என்று வாழ்த்தினள். ஏந்திய மதலை,**

**(அறச்சிறு மதலைகள் அறிஞரும் அறியொணா**

**அரிய உண்மைகள் அறிந்திடும் என்பர்)**

**கடவுள் முனிவனைக் கண்டுதன் கரங்களை**

**நீட்டிய அதிசயம் நினைத்தற்கு அரியதாம்!**

**ஐயனும்,**

**உண்ட உணவாலவ் உடல்வலி யுற்றுச்**

**சிந்தை முற்றும் தெளிந்தவனாகி,**

**வாடா மலர்கள் மலர்ந்து சொரியும்**

**போதி விருட்சம் பொலிபூங் காவினை**

**நாடிச் சென்றனன் ஞானம் பெறவே.**

**புத்தரும் மகனிழந்த தாயும்:**

சிறிது காலஞ் செல்ல, சுஜாதையின் மகவு இறந்து விடுகிறது. அப்போது புத்தர் அவ்வூர் வர அவள் தன் மகவை உயிர்ப்பிக்குமாறு அவரை வேண்டுகிறாள். அவர் அவளுக்கு அறிவுரை கூறி, ‘பிறப்புளதேல் இறப்பு முண்டு’ என்பதைப் போதிக்கிறார்.

**தலைநாளில் நீ கண்ட சிறுமகனும் இன்று**

**தள்ளாடும் உயிரோடு கிடக்கின்றான் ஐயா!**

**தொலையாத கொடும்பாவி யானும்இனி இந்தத்**

**தொல்லுலகில் வாழ்வதிலோர் பயனுண்டோ ஐயா?**

பால்மணம் மாறாத சிறு பாலகன் அறியாமல் பட அரவை பண்டமெனக் கொண்டு விளையாடி விட்டான். அன்பாக அரவிட்ட சிறுமுத்தம் அவன் உயிரை மாய்த்து விட்டது. பெற்ற வயிறு துடிக்குது பிள்ளை வேறு எனக்கு இல்லை உள்ளம் இரங்க வேண்டும் ஐயா என்கிறாள் சுஜாதை. அதனைக் கேட்ட புத்தன் இவ்வாறு கூறுகிறார்.

**“தாயே! நின் மனக்கவலை - ஒழிந்திடத்**

**தக்கநல் மருந்தளிப்பேன்;**

**சேயினை எழுப்பிடுவேன் - விளையாடித்**

**திரியவும் செய்திடுவேன்.**

**நாவிய கடுகுவேண்டும் - அதுவுமோர்**

**நாவுரி தானும் வேண்டும்**

**சாவினை அறியாத - வீட்டினில்**

**தந்ததா யிருக்கவேண்டும்!**

**பக்கமாம் பதிகளிலே - சென்றுநீ**

**பார்த்திது வாங்கிவந் தால்,**

**துக்கமும் அகலும்மா! - குழந்தையும்**

**சுகமாக வாழுமம்மா!”**

**என்றுரைத்த மொழிகேட்டு, அவ்வேழை மார்பில்**

**ஏந்தியணைத் திடுமகனோடு ஊரில் எங்கும்**

**சென்றுகடு கிரந்துவெறுங் கைய ளாகித்**

**திரும்பிமுனி திருவடியைச் சிரமேற்கொண்டு,**

நாவிக்கொழித்த நாவுரிக்கடுகு அளந்து என் மடியில் அளித்திட வந்தவனிடம் உன் வீடு சாவறியாத தனி மனையா எனக்கேட்டேன். என் உரைக் கேட்டு கணவனை இழந்த கைம்பெண், தந்தையை இழந்த தமியன், மைந்தனை இழந்த வறியவன், தமையனை இழந்த தங்கை, மாமனை இழந்த மருகி, அன்னையை இழந்த அகதி என்ப பிறந்தவர் இறப்பதும் இறந்தவர் பிறப்பதும் உலகின் இயற்கை என ஆறுதல் மொழிக் கூறினர்.

**'ஐயமிடு மனைகளிலே மரண மென்றும்**

**அறியாத மனையெதும்இல்லை யில்லை;**

**வையகத்தில் பிறப்புளதேல் இறப்பு முண்டு;**

**மாற்றரிய விதியிதுவென் றுணர்ந்து கொண்டேன்;**

**கையமர்ந்த மகவினையும் கானி லிட்டேன்;**

**கண்விழியாப் பிணம்வைத்துக் காப்ப துண்டோ?**

**செய்யதிரு வடிபணிந்து போற்றி இந்தச்**

**செய்தியினைத் தெரிவிக்க வந்தேன்" என்றாள்.**

எங்கும் இல்லாத பொருள் தேடச் சென்ற நீ தான் நினைத்த பொருளை பெற்று வந்தாய். இந்தப் பெரிய நிலத்தில் உண்மையெல்லாம் நான் அறிய செல்கிறேன். அம்மா உன் மகனை அடக்கம் செய்ய 'போ' என்று புத்தன் உரைத்தான்.

## பயிற்சி வினாக்கள்

### கட்டுரை வினா

1. சின்னக் குயிலின் கதைக் கூறுக?
2. குயில் பாட்டில் கூறப்படும் கதையினை எழுதுக.
3. குயில் பாட்டில் அமையும் கற்பனையை விளக்குக.
4. குயில் பாட்டில் கூறப்படும் வேதாந்தக் கருத்தினை எடுத்துக்காட்டுக.
5. குயில் பாட்டில் கற்பனைப் பாத்திரங்களை விவரி.
6. சித்தார்த்தனின் பிறப்பு குறித்து எழுதுக.
7. சித்தார்த்தன் கேட்ட தேவகீதம் யாது?
8. சுஜாதையின் கதையினை விவரி?
9. புத்தன், ஏழைச்சிறுவனின் கதைக் குறித்து கட்டுரை வரைக.

# அலகு - 2

## பிரதாப முதலியார் சரித்திரம்

## வேதநாயகம் பிள்ளை

‘பிரதாப முதலியார் சரித்திரம் மயூரம் வேதநாயகம் பிள்ளை (1826 - 1889) எழுதிய தமிழ் புதினமாகும். இந்தக் கதைக்கு நிலைக்களம் தென் இந்தியா. கதா நாயகன் இப் பக்கத்தவர்; நன்கு கல்வி பயின்றவர்; மகா புத்திசாலி; நகைச்சுவையுடனும் அறிவுச் சுடர் வீசும் வகையிலும் பேச வல்லவர். அவர் தனது பிறப்பு வளர்ப்பு, பெற்றோர், கல்வி பயின்றது, திருமணம் செய்து கொண்டது போன்ற தனது வாழ்க்கையில் முக்கியமான சம்பவங்களை விவரிக்கிறார். கதையில் இடையிடையே சுவாராஸ்ய சம்பவங்களும் தமாஷான பேச்சுக்களும் பின்னப்பட்டிருக்கின்றன. அறத்துறை சம்பந்த கருத்துக்களும் இடம் பெற்றிருக்கின்றன.

இப்புதினத்தில் முக்கியமான பங்கு கொள்பவர்கள் கதா நாயகனின் அன்னை ‘சுந்தர அண்ணி’ யும், அவருடைய மனைவி ‘ஞானம்பாளும்’. இவ்விருவரும் உயர்குடியில் செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர்கள்; எல்லா விதமான நற்பண்புகளும் உடையவர்கள்; பெண் குலத்திற்கு அணிகலனான எல்லா லட்சணங்களும் பொருந்தியவர்கள். வாழ்க்கையில் பல நெருக்கடியான சந்தர்ப்பங்களில் அவர்களுடைய உயர் குணங்கள் பிரகாசிக்கின்றன. தங்களுக்கு நேரக்கூடிய கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல், அவர்கள் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நீதியையும், மனித தர்மத்தையும் காக்க முன்வருகின்றனர். தன்னால் கட்டுப்படுத்த முடியாத பல சந்தர்ப்பங்களில் எதிர்பாராத சேர்க்கையினால் ‘ஞானம்பாள்’. ஆண்வேடம் பூண்டு மகோன்னத சக்தி பெற்று, புத்தி சாதுரியத்துடனும், திறமையுடனும் ஆட்சி புரிகிறாள்.

ராஜா ராணிகள் பற்றிப் படிப்பதில் மிகுந்த ஆசையுண்டு. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டால் அலைந்து திரிவதில் மிகுந்த உற்சாகம் உண்டு. பொன்னால் ஆக்கப்பட்ட அரச மாளிகையைப் பார்த்துக்கொண்டேயிருப்பதிலும், பூங்கா வனத்தருகில் உள்ள நீர்வீழ்ச்சியைப் பார்த்துக்கொண்டு படுத்திருப்பதிலும் அவர்களுக்கு மிகுந்த பிரியம் உண்டு. இம்மாதிரி மனப் பாங்குள்ள வாசகர்களின் சுவையைத் திருப்தி செய்வதற்காக ஞானாம்பாளை மனிதர் அடையக் கூடிய மகோன்னத பதவிக்கு ஆசிரியர் உயர்த்தியிருக்கிறார்.

கதநாயகனின் தந்தையும், மாமனாரும் உயர் குடும்பத்தில் பிறந்தவர்கள்; ஆனால் கல்விப் பேறு பெறாத நாட்டு மக்கள்; வச்சிரப் போக்குடையவர்கள்; விசித்திர குணம் படைத்தவர்கள். ஆனால் சுந்தர அண்ணியும், ஞானம்பாளும் கையாளும் பண்பு மிக்க தந்திரங்களால் அவர்களிடம் மயங்கிக் கிடந்த நற்பண்புகள் பிரகாசித்து, அவர்களும் புகழத்தக்க செயல்புரிகின்றனர். பல்வேறு காட்சிகளில் பல உப பாத்திரங்கள் பல்வேறு வகைகளில் தங்கள் பாகங்களில் சிறப்புற நடித்திருக்கின்றனர். அவர்களுடைய செயல்களில் பெற்றோரிடம் பாசம், சகோதர வாஞ்சை, கணவன், மனைவி அன்பு, கற்பு, எல்லோருக்கும் நலம் புரிதல், நாணயம், நன்றி முதலிய நற்பண்புகளுக்கு உதாரணங்களைக் காண்கிறோம். சமயம் போதிப்பதும், அனுபவம் உணர்த்துவதுமான நற்குணமின்றி இந்த வாழ்க்கையில் கூட இன்ப வாழ்வு வாழ முடியாது என்னும் மூரைக்கும் கதையில் உதாரணங்கள் காணப்படுகின்றன.

தேசியப் பண்பு, இல்வாழ்க்கை, தென்னிந்திய மக்களின் பழக்க வழக்கங்கள் சித்தரிக்கப்பட்டிருக்கின்றன. இடையிடையே நகைச்சுவை மிக்க சம்பவங்களும், சுவை மிக்க கதைகளும் இடம் பெற்றிருக்கின்றன. உலகத்தோரிடம் பொதுவாகக் காணப்படும் பலகீனங்களும் குறைபாடுகளும் ஆங்காங்கே கேலி செய்யப்பட்டிருக்கின்றன. கடவுள் பக்தி புகட்டப்பட்டிருக்கின்றது. குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் யாவரும் செய்யவேண்டிய கடமைகளையும் வற்புறுத்தியிருக்கிறது. நல்வழியின் இயல்பான சிறப்பையும், தீய வழியில் உள்ள கொடூரங்களையும் விவரிக்க முயற்சித்திருக்கும் முறையில் நல்லதை விரும்பித் தீயதை வெறுக்க முன்வரும் விதத்தில் கதை பின்னப்பட்டிருக்கிறது. பல்வேறு பாத்திரங்களையும், சம்பவங்களையும் விவரிப்பதில் இயற்கையை ஒட்டியே எழுதியிருக்கிறார். ஆசிரியர். அற்புதங்களையோ உணர்ச்சி வசப்பட்டோ எழுதுவதைத் ஆசிரியர் தவிர்த்திருக்கிறார். எந்த மதத்தினர் சமயப் பற்றையும் புண்படுத்தாபமல் கதை எழுதப்பட்டுள்ளது.

## பிரதாப முதலியார் சரித்திரம் - ஒரு பார்வை:

தமிழில் முதல் நாவல் என்று பேசப்படும் இந்நாவலில் நகைச்சுவை துணுக்குள் பலதமிழ் சினிமாவில் நகைச்சுவையாக இடம் பெற்றிருக்கின்றன. உதாரணத்திற்கு, கண்களை மூடிக்கொண்டு மணலை கண்களில் போட்டுக்கொள்வது, போர்களத்தில் எதிரியின் தலையை கொய்யாமல் காலை கொய்ததற்கான காரணமாக அவன் முன்னறே இறந்து விட்ட செய்தியை கூறுவது போன்றவற்றை குறிப்பிடலாம். குறிப்பாக, கனகசபை உட்பட நால்வரின் திருமணத்தின் போது ஒருவருக்கு தாலி எடுத்துக் கொடுக்க மறந்து விட்ட புரோகிதர், பின்னர் அதை தெரிந்து கொண்டு இரவு மணப்பெண்கள் தூங்கும்

அரைக்கு வந்து தாலி இல்லாத ஒரு பெண்ணிற்கு தாலி கட்டி விட முயற்சிக்கும் செயல் நல்ல நகைச்சுவை.

## கருத்துக்கள்:

கல்வி செல்வம் படைத்தவருக்கு தேவை இல்லை என்று பிரதாப முதலியார் குறிப்பிடும் பொழுது, அவரது அண்ணை, கல்வியின் சிறப்பை அழகாக விளக்குகிறார் பிரதாப முதலியார் கல்வி கற்று முடித்த உடன், அவரது ஆசிரியர், "ஏட்டுக்கல்வி தான் முடிந்ததே அன்றி கல்வி அஸ்திவாரத்திற்கு பலனே இல்லை." என்று அழகாக கூறுகிறார். மேலும் பெண்களை உயர் பண்புள்ள கதாபத்திரங்களாக உலவவிட்டிருக்கிறார். பிரதாப முதலியாரின் தாயார் மற்றும், அவரது மனைவி ஞானம்பாள் இருவரின் உயர் பண்புகளும் பல இடங்களில் தெரிகின்றன. வீட்டை விட்டு ஓடிச்சென்று திருமணம் செய்யலாம் என்ற பிரதாப முதலியாரின் யோசனையை நிராகரித்து, ஞானாம்பாள் சொல்லும் பதில், அழகாக இருக்கிறது.

மற்றொரு பொழுதில் தங்களது கணவன்மார்கள் அனைவருக்கும் தவறான தீர்ப்பு வழங்கப்பட்டதைக் கண்டு அவர்களின் மனைவியர் அழுது புலம்ப, பிரதாப முதலியாரின் தாயார் மட்டும் சிந்தித்து செயல் பட்டு அவர்களை அந்த இக்கட்டிலிருந்து மீட்டெடுக்கிறார். தையற்காரனிடன் ஒரு ரூபாய் திருடி அகப்பட்டு கொண்ட திருடன் தனது பக்க நியாயத்தை தேவராஜ பிள்ளையிடம் அழகாக விளக்குகிறான். தான் ஒரு ரூபாய் திருடியதற்கு தண்டனை என்றால், அரசர்கள் பலரும் பல நாடுகளுக்கு படை எடுத்து சென்று அங்கே கொள்ளையடிக்கின்றனறே அதற்கு என்ன தண்டனை என்று கேட்கிறான்.

மேலும் தான் கடன் வாங்கிய சொற்ப பணத்தை திருப்பி தர இயலாத நிலையில் வழக்கை சந்திக்கும் ஒரு கடனாளி, "வறுமையின் காரணமாக சொற்ப பணத்தை திருப்பி தராத எனக்கு கடும் தண்டனை என்றால், வங்கிகளில் பல ஆயிரம் கடன் வாங்கி திருப்பி தராதவர்களுக்கு என்ன தண்டனை?", என்று வினவுகிறான்.

1. லஞ்ச ஊழல்
2. பொய் சாட்சியம் உரைத்தல்
3. பொய் சான்றிதழ் அளித்தல்
4. பிறர் மனைவியை பெண்டாடுதல்
5. அரசாங்க சொத்தை அபகரித்தல்.

போன்ற பல குற்றங்களை அக்காலத்திலும் அரசு பதவியில் இருந்தோர் செய்து வந்தனர் என்று ஒருவர் குறிப்பிடுகிறார். பிரிட்டிஷார் ஆண்டிருந்தால் இந்த தேசம் நன்றாக

இருந்திருக்கும் என்றும் நினைத்துக் கொண்டிருக்க, அவர்கள் ஆட்சியிலும் அரசியல் மற்றும் சமூக சீர்கேடுகள் பல இருந்தன என்பது தெளிவாகிறது.

வேட்டைக்கு சென்ற கணவனை தேடிச் சென்ற ஞானம்பாள் தற்செயலாக ஒரு நாட்டின் அரசியாகி விட, அதை அவள் மறுத்தளிக்கும் காரணம் அழகாக சொல்லப்பட்டிருக்கின்றது. இராஜ்ய பாரம் எத்தகையது என்றும், அரசனானவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் அழகாக ஞானம்பாள் குறிப்பிடுகிறாள். பிற ஸ்த்ரிகள் காணாத மார்புடையவனாகவும், எதிரிகள் காணாத முதுகுடையவனாகவும் இருக்க வேண்டும் என்கிறார்.

அதே போன்று, வக்கீல்கள் தமக்கு வரும் வழக்குகளை எவ்வாறு ஆராய்ந்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், அவர்கள் தமிழிலேயே வழக்கு விசாரணையின் போது பேச வேண்டிய அவசியத்தையும் அழகாக விளக்குகிறார். இவ்வாறு பாராட்டத்தக்க விஷயங்கள் பல இருக்கும் இந்த நாவலில் அக்காலத்து வாழ்க்கை முறை தெளிவாக கூறப்பட்டுள்ளது. குறிப்பாக அக்காலத்தில் இருந்த குல ஏற்றத்தாழ்வுகள் பேசப்பட்டுள்ளன.

## தீண்டாமையும், பெண்ணடிமையும்:

பிரதாப முதலியார் நகைச்சுவையாக இவ்வாறு குறிப்பிடுகிறார். "எல்லோருக்கும் மரியாதை தர வேண்டும் என்று என் தாயார் குறிப்பிட்டதால் நான் என் வீட்டிற்கு வரும் வண்ணானுக்கும் தோட்டிக்கும் கூட மரியாதை குடுத்தேன்" மேலும் பிரதாப முதலியாரின் தந்தையும், சம்பந்தி முதலியாரும் சண்டை போடும் பொழுது, "நீ வண்ணான் பரம்பரை அல்லவா?" என்றும், "நீ அம்பட்டன் பரம்பரை அல்லவா?" என்றும் திட்டிக் கொள்கிறார்கள். அதாவது முடிதிருத்தும் தொழிலோ அல்லது துணி துவைக்கும் தொழிலோ செய்வதே பாவம் என்றும், அவர்களுக்கு மரியாதை கொடுப்பதும் நகைப்புக் குறிய செயலென்றும் குறிப்பிடுகிறார்.

மேலும் ஆங்காங்கே அக்காலத்தில் இருந்த பெண்ணடிமைத்தனம் நன்றாகவே தெரிகிறது. உதாரணத்திற்கு, பிரதாப முதலியார், தனது மனைவியான ஞானாம்பாளிடம் பெண்களை உயர்த்தி பேசும் பொழுது, "இந்நாட்டில் தனது கணவர் இறந்த உடன் தானும் உடன்கட்டை ஏறிய பதிவிரதைகள் பலர் உள்ளனர்." என்கிறார் மேலும் பொல்லாத கணவன், மனைவி பற்றி அவர்கள் பேசும் பொழுது, பொல்லாத கணவனை (விபச்சாரிகளுடன் சென்ற கணவனை) பொருமை காட்டி மனைவி திருத்தினாள் என்றும், பொல்லாத னைவியை (பிடிவாத குணம் உள்ள மனைவியை) பிறம்பால் அடித்து கணவன் திருத்தினாள் என்றும் கூறுகிறார். இதில், ஒழுக்கம் இல்லாத கணவனை திருத்த மனைவிக்கு வழியாக கூறியது

பொருமை, ஆனால் பிடிவாத குணம் கொண்ட மனைவியை திருத்த கணவனுக்கு வழியாக கூறியது தண்ட உபாயம், மேலும் உடன்கட்டை ஏறியவர்களே பதிவிரதைகள் என்கிறார். புலி துரத்திக் கொண்டு வரும் பொழுது தங்களுடைய மனைவிகளை விட்டு விட்டு ஓடி ஒளிந்த கணவர்களை பார்த்து அவர்களது மனைவியர் ஓடிய பொழுது அவர்களது கால்களில் முட்கள் குத்தி இருக்குமே என்று கவலை கொள்கிறார்கள்.

பிரதாப முதலியாரின் தாயார் அவரது கணவரையும், பிரதாப முதலியாரையும் மற்றும் பலரையும் ஒரு இக்கட்டிலிருந்து காப்பாற்றிய உடன் அவரை பாராட்ட பலர் வருகிறார்கள். அவ்வாறு வந்தவர்களில் அநேகம் பேர் பறி புருஷர்கள் ஆகையால் அவர்களை பிரதாப முதலியாரின் தாயாரை பார்க்க அனுமதிக்கவில்லை. அதாவது உறவினர்கள் அல்லாத வேற்று ஆண்கள் தம் வீட்டு பெண்களை பார்க்க கூட அனுமதி இல்லை என்ற நிலைதான் அக்காலத்தில் இருந்தது.

இதன் உச்ச கட்டமாக கலாச்சார சீரழிவு என்று ஒரு உதாரணம் குறிப்பிடுகிறார். அது என்னவென்றால், ஒரு ஆண் பிற புருஷர்கள் பங்கு கொள்ளும் பல விசேஷங்களுக்கு தன்னுடைய மனைவியை கூட்டி செல்கிறான். இதனால் அவன் கெட்டு சீரழிந்தான் என்று கூறுகிறார். இதை எல்லாம் பார்க்கும் பொழுது தீண்டாமையும், பெண்ணடிமையும் அக்காலத்தில் (1850 களில்) படித்த மக்களிடையே கூட தலை விரித்து ஆடியது என்பது தெளிவாகிறது. ஆனாலும் இத்தகைய முகம் சுளிக்கும் கருத்துக்கள் அனைத்தும் ஆசிரியரின் கருத்தாக கொள்ளாமல் அக்காலத்து வாழ்க்கை முறை இவ்வாறு தான் இருந்தது என்பதை உணர்ந்து பார்க்கும் பொழுது இது ஒரு நல்ல நவீனம் என்று கூறலாம். தமிழ் இலக்கிய உலகில் இது முதல் நவீனம் என்ற ஒரு உண்மையை சேர்த்து பார்த்தோமானால், இது ஒரு சிறந்த படைப்பு.

## அலை ஓசை

## கல்கி

இதிகாசங்கள் தொடங்கி இந்நாளைய நவீனம் வரை உலகில் எழுதப்பட்டுள்ள இலக்கியங்கள் பலவற்றிலும் ஒரு மும்முனைப் போராட்டத்தைக் காணலாம். ஒரு கதாநாயகன், ஒரு கதாநாயகி, ஒரு வில்லன் என்ற ரீதியில் அமைந்திருக்கும், வில்லன் ஆண்பாலாகவோ, பெண்பாலாகவோ இருக்கலாம். எனினும் அடிப்படையில் இந்த மும்முனைப் போராட்டத்தைத் தான் பார்க்கிறோம். நிகழ்ச்சிகள், சந்தர்ப்பங்கள், மனோபாவங்கள், சமூகப் பிரக்ஞை அல்லது சரித்திர நோக்கு போன்ற பல அம்சங்கள் நாவலுக்கு நாவல் வேறுபட்டாலும் இந்த அடிப்படை மும்முனைப் போராட்டம் எதிலும் காணப்படுகிறது.

அலை ஓசையின் ஒரு தனிச்சிறப்பு இந்த மும்முனைப் போக்கினை கல்கி இந்த நாவலில் உடைத்தெறிந்திருக்கிறார் என்பது.

‘இந்த நாவலின் கதாநாயகன் சூரியராகவன் என்பது சிலசமயம் புரியாது, ராகவனே பிரதான கதாநாயகன் என்று கொள்வோமேயானால் அவனே பல சந்தர்ப்பங்களில் வில்லன்போல் நடந்து கொள்கிறான். அதே போல சூரியாவைப் பல இடங்களில் வில்லன் என்று நினைக்கத் தோன்றும். ஆனால் அவனே ஒரு கதாநாயகனை விடவும் சிறந்த முறையில் தியாகங்கள் புரிகின்றான். தாரிணி, சீதா ஆகிய இருவரில் யார் பிரதான கதாநாயகி, யார் இரண்டாம் பட்சம் என்றே நிர்ணயிக்க முடியாது. இதனைக் கல்கி அவர்களே குறிப்பிட்டு எழுதியிருக்கிறார்.

மனிதர்களாகப் பிறப்பவர்கள் எல்லோருமே வடிக்கட்டின வில்லன்களாகவோ அல்லது பரிபூரண கதாநாயகர்களாகவோ உலகில் தோன்றுவதில்லை. அவரவரும் குண இயல்புகளுக்கு ஏற்ப ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு மாதிரி நடந்து கொள்கிறார்கள். இந்தக் கதையகைக் கதாபாத்திரங்களேதான் எழுதியிருக்கிறார்கள். ஆசிரியன் செய்திருப்பதெல்லாம் பதினெட்டு வருஷத்து இந்திய தேசீய இயக்கத்தின் வரலாற்றை இந்தக் கதைக்குப் பின்னணியாக அமைத்து கொடுத்திருப்பது தான். 1930 - ம் ஆண்டிலிருந்து 1947 - ம் ஆண்டுவரையில் நமது தாய்த் திருநாட்டின் சரித்திரத்தில் பல அற்புத சம்பவங்கள் நிகழ்ந்தன.

காந்தி மகாத்மாவினுடைய ஆத்மசக்தி கோடானு கோடி மக்களின் உள்ளங்களில் ஆட்சி புரிந்தது. மக்களின் வெளி வாழ்க்கையிலும் உள்ளப் போக்கிலும் எத்தனை எத்தனையோ புரட்சிகள் நடந்தன. அவையெல்லாம் “அலை ஓசை”க்குப் பின்னணி சங்கீதமாகத் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதை இந்நூலில் காணலாம். கோடானு கோடி மக்களின் கனவு நிறைவேறிப் பாரத நாடு சுதந்திரம் அடையும் காலம் நெருங்கியபோது, காந்தி மகானின் ஆத்மசக்திக்கு எதிராக நாசகார சக்திகள் கிளம்பிக் கர்ண கொடூரமான கூச்சலுடன் கோர பயங்கரத் தாண்டவமாடின. ஆயினும் இந்த நாசகார சக்திகளையெல்லாம் மகாத்மாவின் ஆத்மசக்தி முறியடித்து வெற்றிச் சங்கம் முழங்கியது அந்த அற்புத வரலாறும் இந்தக் கதைக்குப் பின்னணியாக அமைந்துள்ளது.

“உலகத்தில் ஏன் தீமைகளும் துன்பங்களும் நிகழுகின்றன. உலகிலே பிறந்த சிலர் எப்போதும் சுகமாக இருந்து காலங் கழித்து விட்டுப் போவதேன்? மற்றும் பலர் துன்பத்திலேயே சுழந்று கிடந்து விட்டு இன்பம் என்பதையே அறியாமல் உயிரை விடுவதேன்? கடவுள் இத்தகைய பட்சபாதம் ஏன் காட்டுகிறார்? இவ்வளவு கொடூரமான துன்பங்களை மக்களுக்கு ஏன் அறிக்கிறார்?” என்னும் கேள்விகள் பகுத்தறிவு சிறிதேனுமுடைய ஒவ்வொரு வருடைய உள்ளத்திலும் எழும் இந்தக் கேள்விகள் பல

சமயங்களில் அலைத்ததுண்டு. லலிதாவும் சீதாவும் தாரிணியும் சூரியாவும் மேற்கூறிய கேள்விகளுக்கு இந்நூலில் பின் வருமாறு விடை அளித்திருக்கிறார்கள்.

"அன்னை ஒருத்திக்கு நாலு குழந்தைகள் இருக்கின்றன. மூன்று குழந்தைகள் சுகமாயிருக்கின்றன. ஒரு குழந்தை மட்டும் நோய்ப்பட்டு மெலிந்து போயிருக்கிறது. அதன் ஜீரண சக்தி குன்றியிருக்கிறது. எழுந்து நடப்பதற்கு முடியாமல் அந்தக் குழந்தை படுத்த படுக்கையாயிருக்கிறது. தாயார் மற்ற மூன்று குழந்தைகளுக்கும் நல்ல வளமான உணவு கொடுக்கிறார். சோறும் கறிவகைகளும் பட்சணங்களும் பாலும் பழமும் அக்குழந்தைகளுக்கு ஊட்டுகிறாள்.

மெலிந்த நோயாளிக் குழந்தைக்கு அத்தகைய நல்ல உணவு கொடுக்காமல் வெறும் கஞ்சி கொடுக்கிறாள். நோயாளிக் குழந்தை என்ன நினைக்கிறது? 'பார் நம்முடை தாயாருக்குத்தான் எத்தனை பட்சபாதம்? நான் மெலிந்தவன்; எனக்கு நல்ல போஷாக்கு வேண்டும்; ஆயினும் எனக்கு வெறும் கஞ்சியைக் கொடுக்கிறாள். என்னுடைய அண்ணன்மார் நல்ல தடியர்களாயிருக்கிறார்கள். அவர்களுக்கு என் அன்னை நல்ல புஷ்டியான உணவைக் கொடுக்கிறாள்! இது என்ன அநியாயம்? இது என்ன பட்சபாதம்!' என்று எண்ணமிடுகிறது.

குழந்தை சிற்றறிவு படைத்தது. அதனால் அதற்குத் தன் தாயின் செயல் அர்த்தமாகவில்லை. தன் பேரில் உள்ள அன்பினாலேதான் அன்னை அவ்விதம் தனக்குப் பத்தியமாகக் கஞ்சி கொடுக்கிறாள் என்பதை அக்குழந்தை அறிந்து கொள்ள முடியவில்லை. உண்மையில் தன் தாயார் மற்றும் மூன்று குழந்தைகளையும் விடத் தன்னைப் பற்றியே ஓயாக் கவலை கொண்டிருக்கிறாள் என்பதை அக்குழந்தை அறியவில்லை.

கடவுளைப் பற்றிப் புகார் கூறும் மாந்தர்கள் அந்தக் குழந்தையின் நிலையில் உள்ளவர்களே! கடவுளரின் கருணையையோ அக் கருணையை அடிப்படையாகக் கொண்ட அவருடைய செயல்களையோ அறிந்து கொள்ளும் சக்தி நம்முடைய சிற்றறிவுக்குக் கிடையாது. ஆகையினாலேயே குறைப்படுகிறோம்; குற்றம் கூறுகிறோம். அது காரணமாகவே நம் துன்பத்தையும் அதிகப்படுத்திக் கொள்கிறோம்.

நோய்ப்பட்ட குழந்தைக்கு தன் அன்னையிடம் பூரண நம்பிக்கையிருந்தால், அது மேற்சொன்னபடியெல்லாம் எண்ணி மனம் வெம்ப வேண்டியதில்லை. குழந்தையின் உடல் நோய்ப் பட்டிருந்தாலும் அதன் மனமாவது நிம்மதியாயிருக்கும். அதுபோலவே கடவுளுடைய செயல்களின் காரண காரியங்களை அறிந்து கொள்ளுவதற்கு வேண்டிய அறிவு நமக்கில்லாவிட்டால் பாதகம் இல்லை. கடவுளிடம் நம்பிக்கையிருந்தால் போதும், அந்த நம்பிக்கை யானது வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் எல்லாவிதமான துன்பங்களையும்

சகித்துக் கொள்ளும் ஆற்றலைக் கொடுக்கிறது. எவ்வளவு கஷ்டங்கள் சூழ்ந்திருக்கும் போதும் மன நிம்மதியுடன் வாழ்வதற்கு வேண்டிய தைரியத்தை அளிக்கிறது. மன நிம்மதியைக் காட்டிலும் ஒரு மனிதன் இந்த உலகத்தில் வேண்டி பெறக்கூடிய பேறு வேறு என்ன இருக்கிறது...?"

மேலே எடுத்துக் காட்டியிருக்கும் பகுதியை கதாபாத்திரங்கள் தங்கள் வாழ்க்கை அனுபவங்களைக் கொண்டு முடிவு கட்டிக் கூறும் தத்துவமாகவே உள்ளது.

## கதையின் தொடக்கம்:

சாலையின் இரு புறத்திலும் ஆலமரங்கள் சோலையாக வளர்ந்திருந்தன. ஆதியும் அந்தமும் இல்லாத பரம்பொருளைப் போல் அந்தச் சாலை எங்கே ஆரம்பமாகிற, எங்கே முடிவாகிறது என்று தெரிந்துகொள்ள முடியாததாயிருந்தது. சாலை வடதிசை நோக்கித் திரும்பிய முடுக்கிலே ராஜம்பேட்டைக் கிராமத்தில் தபால் சாவடி எழுந்தருயிருந்தது.

சாவக்கு எதிரே சாலையின் மறுபக்கத்தில் ஒரு மிட்டாய்க் கடை. அந்தக் கடையின் வாசலில் அப்போது ஆள் யாரும் இல்லை. கடைக்குள்ளிருந்து வந்த வெங்காயத்தின் வாசனையும் சேர்ந்து மிட்டாய்கடை அய்யர் மசால் வடை போட்டுக் கொண்டிருந்தார் என்பதை விளம்பரப்படுத்தின். பாதக் குறட்டின் சத்தம் கேட்டுகிறது. வருகிறவர் ஸ்ரீமான் கே.பி. பங்காரு நாயுடு பி.பி.எம்.அவர்கள்தான். பி.பி.எம். (B.P.M.) என்றால் சாதாரணமாக நினைத்து விட வேண்டாம். பிராஞ்சு போஸ்டு மாஸ்டர் என்று அர்த்தம். இன்னொருவருக்கு வந்த கடிதத்தைக் கொடு என்று கவர்னர் கேட்டாலும், 'மாட்டேன்' என்று சொல்லும் அதிகாரம் உண்டு!" நாயுடுக்கு பங்காரு நாயுடு அவருடைய சாம்ராஜ்யத்துக்குள் பிவேசிக்கிறார். ஆனால், வாசற் படியைத் தாண்டியதும் மேலே அடி வைக்க முடியாமல் பிரமித்துப் போய் நிற்கிறார்.

தபால்கார பாலகிருஷ்ணன் உள்ளே சாவதானமாக உட்கார்ந்து நேற்று வந்த தபால்களை வரிசைப்படுத்தி வைத்துக் கொண்டிருக்கிறான். ...எப்படி அப்பா நீ உள்ளே புகுந்தாய்?" "போஸ்டாபீஸ் கதவு பூட்டியிக்கும் போது எப்படி உள்ளே வந்தாய்?" நாதாங்கியை இழுத்து மாட்டாமல் பூட்டை மட்டும் பூட்டிக்கிட்டுப் போட்விட்டிங்க!"

போஸ்டு மாஸ்டர் சற்றுத் திகைத்திருந்துவிட்டு "பாலகிருஷ்ணா! கடவுள காப்பாற்றினார், பாாத்தாயா? நீ புகுந்தது போலத் திருடன் புகுந்திருந்தால் என்ன கதி ஆகிறது!" என்று சொல்லி உச்சிமேட்டை நோக்கிக் கும்பிட்டார். "கதி என்ன கதி? அந்தத்

திருட்டுப் பயலின் தலைவிதி வெறுங்கையோடே திரும்பிப் போயிருப்பான் ! இங்கே என்ன இருக்கிறது, திருட்டுப் பசங்களுக்கு? தபால் பெட்டியின் சாவியை கொடுங்க!"

சாவியை வாங்கிக் கொண்டு பாலகிருஷ்ணன் தபால் பெட்டியைத் திறந்து அதிலிருந்த தபால்களை எடுத்துக் கொண்டு வந்தான். சாலையில் பெட்டி வண்டி ஒன்று இரு பெரும் காளைகளால் இழுக்கப்பட்டு ஜம் ஜம் என்று சென்றது. "பட்டாமிணயம் கிட்டாவய்யரின் வண்டி போகிறது, வர வர அந்தச் சத்தம் தபாலாபீசை நெருங்கியது.

ராஜம்பேட்டை கிட்டாவய்யர் அவருடைய தந்தைக்கு ஒரே புதல்வர். தகப்பனார் அகண்ட காவேரிக் கரையில் தேடி வைத்திருந்த பல ஏக்கரா நன்செய் நிலத்துக்கும் கிராம முனிசீப் வேலைக்கும் உரிமை உடையவர். அவளுடைய லலிதாவுக்கு மட்டும் வருஷத்துக்கு ஒரு வயது வீதம் கூடிக்கொண்டேயிருந்தது. சென்ற. வருஷமே கலியாணம் செய்திருக்க வேண்டும். மனைவி சரஸ்வதி அம்மாள். கிட்டாவய்யரின் சகோதரிகளில் ஒருத்தி அவருக்கு மூத்தவள். தங்கை ராஜம் பம்பாயில் இருந்தாள்.

ராஜத்தின் அதிர்ஷ்டம் அவ்வளவு சரியாக இல்லை. ராஜத்தின் இல்வாழ்க்கை சரியாக இல்லை மான உணர்ச்சி அதிக உள்ளவளான ராஜம்மாள் தன்னுடைய கஷ்டங்களைப் பகிரங்கப் படுத்திக் கொள்ள விரும்பவில்லை. இந்த நிலையில், ஒரு வருஷத்துக்கு முன்னால் ராஜத்திடமிருந்து கடிதம் பார்த்து கிட்டாவய்யர் குடும்பம் பம்பாய் கிளம்பியது.

பம்பாயில் தங்கியிருந்த நாட்களில் துரைசாமி அபூர்வமாகவே வீட்டுக்கு வந்தார். வந்தபோதெல்லாம் முக மலர்ச்சியோடு மரியாதையாகவே பேசினார். இரவு நேரங்களில் பெரும்பாலும் 'டியுடி' இருக்கிறதென்பதாய்ச் சொல்லி அவர் வீட்டிற்கு வருகிறதில்லை. ராஜத்தின் கஷ்டங்களைக் கிட்டாவய்யர் அறிந்து கொள்ள முயன்றார். ராஜத்தின் கஷ்டங்களைக் கிட்டாவய்யர் அறிந்து கொள்ள முயன்றார். ராஜத்தின் சிற்சிலவார்த்தைகளிலிருந்து கிட்டாவய்யர் ஊகித்தார்.

துன்பப்பட்டிருந்த ராஜத்தினிடம் கிட்டாவய்யர் காட்டிய பிரியத்தையும் அனுதாபத்தையும் பார்க்க, சரஸ்வதி அம்மாளின் உள்ளத்தில் குரோதப் பகை கிளம்பத் தொடங்கியது. இந்த நிலைமையை ராஜம் ஒருவாறு அறிந்கொண்டு தன்னுடைய இனிய பேச்சினாலும் உபசாரத்தினாலும் மன்னியைக் கூடுமான வரையில் சாந்தப்படுத்தி வந்தாள்.

லலிதா சீதா இவர்களின் தோற்றத்தை அவளுடைய உள்ளம் அடிக்கடி ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருந்தது. லலிதா மாநிறமானவள்; சீதாவின் மேனியோ

வெண்பட்டினையொத்த சந்தன வர்ணங்கொண்டது. சாமுத்திரிகா இலட்சணம் அறிந்தவர்கள் ஒரு வேளை சீதாவைவிட லலிதாதான் அழகுடையவள் என்று சொல்லக்கூடும். ஆனால் மேலெழுந்த வாரியாகப் பார்ப்பவர்களுக்கு இருவரில் சீதாதான் அழகி எனத் தோன்றும். லலிதாவின் கண்கள் நீண்டு சாந்தம் குடிகொண்டு தாமரை இதழின் வடிவை ஒத்திருந்தன. சீதாவின் கண்களோ அகன்று வட்ட வடிவமாய்க் குமுத மலரையொத்திருந்தன. அவளுடைண கண்ணிமைக்குள்ளே கருவிழிகள் அங்குமிங்கும் சுழன்று சஞ்சல புத்தியைக் காட்டின என்றாலும், பார்ப்பவர்களை உடனே பிரமிக்கச் செய்யும் தன்மை வாய்ந்திருந்தன.

ராஜம்பேட்டை போஸ்டுமாஸ்டர் பங்காருநாயுடு சரஸ்வதி அம்மாளைப்பற்றிக் கொடுத்த அபிப்பிராயம் ஒரு வருஷத்துக்கு முன்னால் வரையில் உண்மையாயிருந்தது. பம்பாய்க்குப் போய்த் திரும்பியதிலிருந்து சரஸ்வதி அம்மாளின் கோபதாபங்கள் அதிகமாகிக் கொண்டிருந்தன.

கிட்டாவய்யரின் மனைவி சிறிது நேரம் வாசலில் கால்கடுக்க நின்று லலிதாவை எதிர்ப்பார்த்தாள். லலிதா கையில் கடிதத்துடன் கண்ணில் கண்ணீருடன் வ்தாள். சரஸ்வதி அம்மாளுக்குக் கோபம் வந்துவிட்டது. "யாராவது செத்துக்கித்துத் போய்விட்டார்களா மனைவியின் கோபத்தைக் கிட்டாவய்யர் சிறிதும் பொருட்படுத்தாதவராய் என்னவென்று கேட்டார்.

கிட்டாவய்யர் தம் குழந்தையை அன்புடன் லலிதாவை தடவிக் கொடுத்துவிட்டு, கடிதத்தில் அப்படி என்ன எழுதியிருக்கிறது, அம்மா?" என்று கேட்டார். லலிதா விம்மலையம் தேம்பலையும் பிரயத்தனப்பட்டு அடக்கிக் கொண்டு, "அப்பா! அத்தைக்கு உடம்பு ரொம்ப சரிப்படவில்லையாம், சீதா எழுதியிருக்கிறாள். அவருடைய கண்களிலும் நீர் பெருகத் தொடங்கியது. உள்ளே சென்று சாய்மான நாற்காலியில் சாய்ந்தார்.

கடிதத்தில் என்ன சரஸ்வதி அம்மாள் மீண்டும் கேட்டாள். ராஜத்துக்கு ரொம்ப உடம்பு சரி இல்லையாம், 'டைபாய்டு சுரமாம், பிழைப்பதே...." "பிழைப்பதே புனர் ஜன்மந்தான். உங்களுக்கு நானூறு ஐந்நூறு ரூபாய் செலவு வைப்பதில் அவர்களுக்குத் திருப்தி போலிருக்கிறது." என்றார் சரஸ்.

லலிதா மானைப்போல் துள்ளி போஸ்ட் ஆபீஸ்க்கு ஓட்டம் பிடித்தாள். சரஸ்வதி அம்மாள் முணுமுணுத்தாள். மாப்பிள்ளை மட்டும் பெரிய படிப்புப் படித்தவனாய் வேண்டும் என்கிறாயே; அதற்குத் தகுந்தபடி பெண்ணைப் பழக்க வேண்டாமா என்றார் கிட்டாவய்யர்.

கிட்டாவய்யரின் நெருங்கிய நண்பரும் உறவினருமான சீமாச்சு அய்யர். "பீஹார் மாகாணத்தில் பூகம்பமாம் !" என்றார்.

கிட்டாவய்யர் பட்டணத்து நாகரிகத்தைக் கிராமங்களுக்குக் கொண்டுவர ஆசைப்பட்டார். அந்த ஆசையின் அறிகுறியாகச் சில காலமாய் அவர் தமது மனைவியைப் பெயர் சொல்லி நாலு பேருக்கு முன்னால் கூப்பிடவும் அவளுடன் சங்கோசமின்றிச் சம்பாஷிக்கவும் ஆரம்பித்திருந்தார். பீஹார் பூகம்பதிதையும் லலிதா தபால் ஆபீஸ் சென்றதையும் சம்பந்தப்படுத்திய தமது மனைவியின் பேதமையை எண்ணியபோது அவர் முகம் புன்னகை பூத்து மலர்ந்தது.

'பூவரசை மரத்தைத் தேள் கொட்டிற்று - புளியமரத்துக்கு நெறி கட்டியது' என்ற கதையாக, பீஹாரில் பூகம்பம் என்றால், அதற்காக நாம் பயப்பட்டுச் சாக வேண்டும் என்கிறாள். பெண்கல்வி வேண்டும் என்று இதற்காகத்தான் சொல்கிறது." லலிதா தபால் ஆபீஸ்க்கு சென்று தன் அத்தை மகள் அனுப்பும் கடிதங்களை வாங்கி வருவதும் அதனை பிரித்து படிப்பதுமாக கதை செல்கின்றது. பிறகு லலிதாவிற்கு திருமணம் ஆகின்றது அவளது தம்பி சூரியா சியாம சுந்தர் ஆவர். சூரியா பாமா என்ற பெண்ணை திருமணம் செய்கின்றான். சுதந்திர போராட்ட காலத்தில் கிஸான் இயக்கதில் சேருகிறான். லலிதாவின் அத்தை மகளான சீதா வாழ்க்கையெல்லாம், கஷ்டப்படுவதாக கல்கி கதையை அமைக்கின்றார். சீதாவை சௌந்தர ராகவன் திருமணம் செய்கின்றார். சீதா தன் வாழ் நாள் எல்லாம் சௌந்தரராகவனோடு கஷ்டப்பட்டு உயிர் இழக்கின்றாள். பின்னர் சௌந்தரராகவன் தாரணியை திருமணம் செய்கின்றான். அலை ஓசையில் இடம்பெறும் கதா மாந்தர்களை ஆசிரியர் சுதந்திரப் போராட்டத்தோடு ஈடுபடுத்திக் காட்டுகின்றார். ராகவன் தாரணியை தன் மனதால் நேசிப்பதாகவும், ஆசிரியர் கதையில் பேசியுள்ளார். இவ்வாறாக செல்லும் அலை ஓசையினுடைய கதைப்பகுதி பல பகுதிகளாக பிரிக்கப்படுகின்றது. அவை, 1. தபால் சாவடி, 2. தாயின் உள்ளம், 3. பம்பாய்க்கடிதம், 4. வாசலில் ரகளை, 5. கிட்டாவய்யர் குடும்பம், 6. மந்திராலோசனை, 7. பத்மாபுரம், 8. சௌந்தர ராகவன், 9. கதவு திறந்தது, 10. காமாட்சிஅம்மாள், 11. என்னைக் கேட்டாள், 12. கராச்சியில் நடந்தது, 13. வானம் இடிந்தது, 14. வண்டி வந்தது, 15. ராஜத்தின் ரகசியம், 16. தேவி பராசக்தி, 17. துரைச்சாமியின் இல்லறம், 18. மூன்று நண்பர்கள், 19. மோட்டார் விபத்து, 20. அம்மாஞ்சி அறிமுகம், 21. சீதாவின் காதலன், 22. கன்னத்தில் அறை, 23. இது என்ன ஓசை, 24. நெஞ்சி விம்மியது, 25. கண்கள் பேசின, 26. மலர் பொழிந்தது, 27. இடி விழுந்தது, 28. நிச்சயதார்த்தம், 29. பீகார் கடிதம், 30. இதுவா உன்கதி, 31. மதகடிச்சண்டை, 32. காதலர் உலகம், 33. அத்தையும் மருமகளும், 34. கல்யாணமும், கண்ணீரும், என கல்கியின் அலையோசை முதல் பாகம் பகுக்கப் பெற்றுள்ளது. அதனை தொடர்ந்து

இரண்டாம் பாகத்தில் 1. டெல்லி பிராயணம், 2. ரயில்வே சந்திப்பு, 3. துயரத்தின் வித்து, 4. சாலை முனையில், 5. ஹரிபுரா காங்கிரஸ், 6. பாதிக்கல்யாணனம், 7. லலிதாவின் கடிதம், 8. சீதாவின் பதில், 9. மல்லிகை மாடம், 10. பகற் கனவு, 11. தாஜ்மகால், 12. சரித்திர நிபுணர், 13. ரஜனிப்பூர் ஏரி, 14. பயங்கர நினைவு, 15. புனர்ஜென்ம், 16. தேவபட்டணம் தேர்தல், 17. லலிதா பயமா இருக்கிறது, 18. யார் அங்கே, 19. ஹாலோ போலீஸ், 20. பாரம் நீங்கிற்று, 21. ரஜனிப்பூர் பைத்தியக்காரி, 22. கதவு திறந்தது, 23. தாரிணியின் கதை, 24. நல்ல மாமியார், 25. சுட்டுவிடுவேன், 26. பேச்சு யுத்தம், 27. பிராயண காரணம், 28. கடல் பொங்கிற்று, என இரண்டாம் பாகம் பிரிக்கப்பெற்றுள்ளது. அலையோசையின் மூன்றாம் பாகத்தில் 1. ஓதுவத்தி வியாபாரி, 2. ஜப்பான் வரட்டும், 3. ஆண்டு நிறைவில் அடி தடி, 4. பால சந்நியாசி, 5. வெற்றி ரகசியம், 6. கல்யாணம் அவசியமா, 7. வெள்ளிவீதியில், 8. மரத்தடியில், 9. இதயம் நின்றது, 10. ஒரே வழிதான், 11. ராகவன் மனக்கவலை, 12. சூரியா போய்விடு, 13. பதிவிரதையானாள், 14. இருண்ட மண்டபம், 15. இன்னொருவர் ரகசியம், 16. சீதா பஹரணம், 17. யமுனை தடுத்தது, 18. மண்டை உடைந்தது, 19. இது என்ன உலகம், 20. சிங்கார பூங்காவில், 21. குற்றச்சாட்டு, 22. உல்லாச வேலை, 23. வெடித்த எரிமலை, 24. லலிதாவின் கடிதம், 25. கவலைத் தீர்ந்தது என கல்கியின் அலையோசை மூன்றாம் பாகம் பிரிக்கப்பட்டுள்ளது. நான்காம் பாகத்தில் 1. தாயின் மனக்குறை, 2. சீதா வருகிறாள், 3. டாக்டரின் உத்தரவு, 4. காதல் என்னும் மாயை, 5. மாயமோகினி, 6. நீர்மேல் குமிழி, 7. நித்தய வாழ்வு, 8. மாமழை போற்றுதும், 9. பட்டாபியின் புனர் ஜென்ம், 10. எலக்ஷன் சனியன், 11. பட்டாபியின் பதவி மோகம், 12. சீதாவின் பெருமிதம், 13. ராகவன் பகற்கனவு, 14. ரஜனிப்பூர் ராஜகுமாரி, 15. கங்காபாயின் கதை, 16. ரமா மணியின் தோல்வி, 17. படிகள் பிழைத்தன, 18. பட்டாபியின் வெற்றி, 19. பாம்புக்கு வார்த்த பால், 20. அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி, 21. கண்கண்ட தெய்வம், 22. டைரக்டர் சியாமசுந்தர், 23. சீதாவின் பிராத்தனை, 24. என் சொர்க்கம், 25. அடுத்த ஆண்டு, 26. தந்தியின் மர்மம், 27. இருளில் ஒரு குறள், 28. நரக வாசல்திறந்தது, 29. சீமாந்த புத்திரி, 30. மரணமே வா, 31. பிழைத்த அகதி, 32. துயரம், 33. ராகவன் கோபம். 34. சீதாவின் ஆவி, 35. பானிபத்து முகாம், 36. ஜனவரி 31, 37. ராகவனும் தாரணியும், 38. மணி அடித்தது, 39. கடவுளின் கருணை, 40. பாக்கியசாலி சீதா, 41. சூரியாவின் இதயம். 42. லலிதாவின் மன்னி, 43. பாமா விஜயம் என நான்காம் பகுதி நாற்பத்து மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டு, கதை செல்கின்றது. அலையோசையின் இறுதி பகுதியான பாமா விஜயம் என்ற பகுதியில் ஆசிரியர் கதையை இவ்வாறு நிறைவு செய்கின்றார்.

## கதையின் நிறைவுப்பகுதி:

ராஜம்பேட்டை கிராமச்சாலை முன்போலவே இருபுறமும் மரம் அடர்ந்து நிழல் படர்ந்து விளங்கியது. தபால் சாவடியும் பதினைந்து வருஷத்துக்கு முன்னால் அளித்த

தோற்றத்துக்கு அதிக மாறுபாடில்லாமல் காட்சி அளித்தது. ராஜம்பேட்டை அக்கிரகாரம் அன்றிருந்த மேனிக்கு அழிவில்லாமல் இருந்தது.

ராஜம்பேட்டை முன்னைப்போல அவ்வளவு கலகலப்பாயில்லை என்பது மட்டும் உண்மை. ஏனெனில், இப்போது அங்கே பட்டாமணியம் கிட்டாவய்யர் இல்லை. அவர் பார்த்த பரம்பரைக் கிராம முனிசீப் உத்தியோகத்தைச் 'சுண்டு' என்கிற சியாமசுந்தர் பார்த்து வந்தான். ஸினிமா டைரக்டர் ஆகும் ஆசையையெல்லாம் அவன் விட்டு விட்டான். 'படம் எடுத்தால் சீதாவைக் கதாநாயகியாக வைத்து எடுக்க வேண்டும்; இல்லாவிடில் என்ன பியோஜனம்?' என்பது அவன் கருத்து. கொஞ்சநாள் முன்பு வரையில்கூட அந்த ஆசை அவனுக்குச் சிறிது இருந்தது. சீதா இறந்த செய்தி வந்தபின் அடியோடு போய்விட்டது. பின்னர் நிம்மதியாக கிராம முனிசீப் வேலையைப் பார்த்து வந்தான்.

கிட்டாவய்யர் வீட்டுக் கூடத்தில் லலிதா உட்கார்ந்து குழந்தை பட்டுவின் தலையை வாரிப் பின்னிக் கொண்டிருந்தாள். சரஸ்வதி அம்மாள் ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்திருந்தாள். குழந்தை பாலசுப்பிரமணியன் எதோ வாரப் பத்திரிக்கையில் வந்திருந்த காந்தி மகான் கதையை எழுத்துக்கூட்டி இரைந்து படித்துக் கொண்டிருந்தான்.

"லலிதா! பட்டுவின் வயதில் நீ தபால் கட்டு வரும் சத்தம் கேட்டதும் எழுந்து தபாலாபீஸுக்குப் போய் ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா என்று பார்த்துவிட்டு வரத் தோன்றுகிறது!" என்று சரஸ்வதி அம்மாள் கேட்டாள். "ஞாபகம் இல்லாமல் என்ன? நன்றாய் இருக்கிறது. இப்போது கூட தபாலாபீஸுக்குப் போய் ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா என்று பார்த்துவிட்.டு வரத் தோன்றுகிறது!" என்றாள் லலிதா.

அரைமணி நேரத்திற்குப் பிறகு வாசலில் "தபால்!" என்ற சத்தம் கேட்டதும் லலிதா விழுந்தடித்து ஓடினாள் ஒரு கணம் ஒரு வேளை தபால்கார பாலகிருஷ்ணனாயிருக்குமோ என்று எண்ணினாள், பார்த்தால், உண்மையிலேயே அந்தப் பழைய பாலகிருஷ்ணன்தான்! "இந்தாருங்கள் தபால்!" என்று ஒரு கடிதத்தை லலிதாவிடம் கொடுத்துவிட்டுப் போனான்.

லலிதா கடிதத்தைப் பிரித்து பார்த்தாள். அவளுடைய கணவனிடமிருந்து வந்திருக்கிறது. அதில் அவர் குழந்தைகளின் க்ஷேமம் லாபங்களை விசாரித்த பிறகு எழுதியிருந்ததாவது: சரஸ்வதி அம்மாளிடம் லலிதா மாப்பிள்ளையிடமிருந்து கடிதம் வந்தது பற்றி முதலில் சொன்னாள். சூரியாவையும் அவர் அழைத்து வருவது பற்றிப் பிறகு சொன்னாள். சூரியா கல்யாணம் செய்து கொண்டு மனைவியையும் தன்னுடன் அழைத்து வருவதைப் பற்றிக் கடைசியாக கூறினாள். சரஸ்வதி அம்மாள் வியப்படைந்தாள்; மகிழ்ச்சியடைந்தாள்; பிறகு திடுக்கிட்டுப் போனாள்.

"கல்யாணமா? அது என்ன? நம் ஒருவருக்கும் சொல்லாமலா? இப்படியும் உண்டா? பெண் யாரோ, என்னமோ தெரியவில்லையே?" என்று புலம்பி அங்கலாய்த்தாள். "சூரியா கல்யாணம் செய்து கொண்டிருக்கும் பெண்ணுக்கு ஏதோ அங்கஹீனம் என்று கேள்வி, சிலர் 'ஒரு கண்ணில்லை' என்கிறார்கள். சிலர் 'ஒரு கையில்லை' என்கிறார்கள். சூரியாவின் காரியமே இப்படித்தான். என்னமோ, போ, அம்மா! ரொம்ப விசாரமாயிருக்கிறது!"

"இதென்னடி அநியாயம்? இப்படியும் ஒரு பிள்ளை செய்வானா? அது நிஜமாயிருக்குமாடி? நிஜமாயிருந்தால் நாலுபேர் முகத்தில் எப்படி 'விழிப்பேன்!" என்று சரஸ்வதி அம்மாள் புலம்பினாள். பட்டாபிராமனும் சூரியாவும், சூரியாவின் மனைவியும் இறங்கினார்கள், பிறகு ஒரு ஸ்திரீ இறங்கினாள். இது என்ன விந்தை? எதிர்பார்த்தபடி இல்லையே! இரண்டு கையிலும் கைப்பெட்டியுடன் இறங்குகிறாளே, கண்களிலும் ஊனம் இல்லையே? கொஞ்சம் நவநாகரிகத்தில் அதிகம் மூழ்கினவளாகக் காணப்பட்டாள். மற்றபடி அங்கஹீனம் ஒன்றும் தெரியவில்லை. பின்னால் ஒருவேளை தாரிணி இறங்குகிறாளோ என்று பாத்தாள் அப்புறம் யாரும் இறங்கவில்லை. வந்தவர்களை முகமன் கூறி க்ஷேமம் விசாரித்து உள்ளே அழைத்துப் போனாள்.

"நான் எழுதியிருந்தது வேறு. இந்தப் பெண்ணரசிதான் என்னை மணக்க முன்வந்த என் மனைவி திவான் ஆதிவராகாச்சாரியார் மகள். இவள் பெயர் பாமா. எங்களுக்கு கல்யாணம் ஆகி இரண்டு வாரம் ஆகிறது. என்றாள் சூரியா. லலிதாவின் மனம் நிம்மதி அடைந்தது லலிதாவின் தாயாரும் தன் மாட்டுபெண் பார்ப்பதற்கு ஒரு மாதிரி பரட்டைத்தலைப் பிசாசு மாதிரி இருந்தாலும் லலிதா சொன்னதுபோல் அங்கஹீனமாயில்லை என்பது குறித்து மனத்திற்குள்ளே திருப்தி அடைந்தாள்.

லலிதா, சூரியாவிடம் "இந்தப் பெண்ணை எப்படிப் பிடித்துக் கல்யாணம் செய்து கொண்டாய்?" என்று கேட்டாள். "முதலில் இவள் பேரில் எனக்கு மிக்க வெறுப்பு இருந்தது. இவளுடைய குணாதிசயங்களைப் பற்றி மிகவும் தப்பான அபிப்பிராயம் கொண்டிருந்தேன். தாரிணிதான் இவளைப்பற்றி எனக்குச் சொன்னாள். முதன் முதலில் என்னைப் பார்த்ததிலிருந்து இவளுக்கு என் பேரில் பிரியம் என்றும் சொன்னாள். அது மட்டுமல்ல; 1942 - இயக்கத்தின் போது இவள் சார்க்கார் உத்தியோக கோஷ்டியுடனே வெளிப்படையாகப் பழகிக் கொண்டே உள்ளுக்குள் இயக்கத்துக்கு மிக்க உதிவ செய்தாளாம். தாரிணியைப் போலீஸார் கைது செய்யாமல் இவள்தான் ரொம்ப நாள் பாதுகாத்து வந்தாளாம். என்னைப் போலீஸ் பாதுகாப்பிலிருந்து தப்புவிப்பதற்கும் இவள்தான் உதவி புரிந்தாளாம். இவ்வளவுக்கும் மேலே, இவள் பஞ்சாபுக்கு முன்னதாகவே போய்ச் சீதாவைக் காப்பாற்றிக்கொண்டு வர முயன்றாளாம். இதையெல்லாம் கேட்டதும் என் மனம் அடியோடு மாறிவிட்டது. பேசிப் பார்த்ததில் என்னுடைய இலட்சியமும் இவளுடைய

இலட்சியமும் ஏறக்குறைய ஒன்று என்று தெரிந்தது. இவளுடைய வெளித் தோற்றத்தைப் பார்த்து ஒன்றும் முடிவு செய்யாதே, லலிதா! உன் மன்னியுடன் பழகிப் பார்த்து விட்டுப் பிறகு சொல்லு!”

வெளியே சென்றிருந்த சியாமசுந்தர் திரும்பிவந்து அண்ணாவையும் மன்னியையும் பார்த்து மகிழ்ச்சியடைந்தான். தேசம் சுதந்திரம் அடைந்துவிட்டது. காந்தி மகாத்மா இறுதியாக ஆத்மத் தியாகம் செய்து நாட்டிலி அமைதியையும் நிலைநாட்டிவிட்டார். இனிமேல் தேசத்தில் செய்யவேண்டியதெல்லாம் பொருள் உற்பத்தியும் உணவு உற்பத்திம்தான். முதலில் நம்முடைய சொந்த கிராமத்திலிருந்து ஆரம்பிக்க உத்தேசித்திருக்கிறேன். உழுது பாடுபடுகிறவர்களுக்கு உற்சாகம் ஊட்டவேண்டும்...”

“இப்போது இங்கேயெல்லாம் அவ்வளவு கிஸான் தொந்தரவு இல்லை. கிளர்ச்சிக்குத் தலைமை வசித்தவன், கிஸான் சங்கத்தின் பணம் ஐயாயிரத்தைச் சூறையிட்டுக் கொண்டுபோய் விட்டான். அதிலிருந்து இயக்கம் படுத்துவிட்டது. இனிமேல், நீ ஆரம்பித்தால்தான் உண்டு!”

“கிஸான் இயக்கம் இல்லை என்று திருப்திப்படுவதில் பயனில்லை. கண்டு! உழவர்கள் மனத்திருப்தியும் உற்சாகமும் அடைய வேண்டும். தாங்கள் உற்பத்தி செய்வதில் தங்களுக்கு நியாயமான பங்கு கிடைக்கிறது என்று அவர்கள் உணரவேண்டும். இல்லாவிட்டால் என்றைக்கிருந்தாலும் கலகமும் குழப்பமும்தான். உணவு உற்பத்தியும் தடைப்படும். ஆகையால் முதலில் உழைப்பாளிகளைச் சரிக்கட்டிக் கொள்ளப்போகிறேன். பிறகு விவசாயத்தில் நவீன முறைகளைக் கையாண்டு காட்டப் போகிறேன். என்னுடைய மனைவி பாமாவும் எனக்கு உதவி செய்வதாகச் சொல்லகிறாள். நீ என்ன சொல்லுகிறாய், சுண்டு?”

“சொல்லுவதென்ன அண்ணா? நம்முடைய நிலம் முழுவதையும் பிரித்து, உழவர்களுக்குக் கொடுத்துவிட்டாலும் எனக்குச் சம்மதந்தான். நீ உர் ஊராக அலையாமல் இந்த உரிலேயே இருந்தால் போதும்! நான் எங்கேயாவது போய் ஏதாவது தொழில் செய்து பிழைத்துக் கொள்வேன்!” என்றான் சுண்டு. “அப்படி நிலத்தைப் பிரித்துக் கொடுக்கவேண்டிய காலமும் வரும். அதற்கும் நாம் தயாராகத்தானிருக்க வேண்டும். வேறு வேறு தொழில்கள் செய்து பிழைக்க இப்போதிருந்தே நாம் எல்லோரும் கற்றுக்கொள்ள வேண்டும்!” என்றான் சூரியா.

அவர்களுடைய தாயார் சரஸ்வதி அம்மாள் அங்கு வந்து, “நான் கண் மூடும் வரையில் பொறுத்திருங்கள். அப்புறம் எது வேணுமானாலும் செய்யுங்கள்” என்றாள். “நாங்கள் காத்திருக்கலாம், அம்மா! ஆனால் பூகம்பமும் புயலும் எரிமலையும் பிரளயமும்

காத்திருக்குமா?" என்றான் சூரியா. லலிதா, "பூகம்பம் பிரளயம் என்றெல்லாம் நீ சொல்லும் போது, அத்தையும் சீதாவும் அடிக்கடி 'காதில் அலை ஓசை கேட்கிறது' என்று சொல்லிக்கொண்டிருந்தது ஞாபகம் வருகிறது. அவர்களுக்கு என்ன சித்தப் பிரமையா அல்லது அவர்களுடைய காதில் ஏதாவது கோளாறா?" என்று கேட்டாள்.

"பிரமையா, காதில் ஏதேனும் கோளாறா என்று எனக்குத் தெரியாது; அல்லது ஏதேனும் ஒரு தெய்வீகச் சக்தியினால், வரப்போகும் பயங்கர விபத்துக்களின் அறிகுறி அவர்களுடைய மனத்தில் தோன்றியதா என்றும் தெரியாது. பஞ்சாபிலிருந்து தப்பி ஓடி வந்து நதியில் முழுகியபோது சீதாவின் காது அடியோ செவிடாகி ஒன்றுமே கேட்காமல் போய்விட்டது. உரத்த பயங்கரமான அலை ஓசை போன்ற சத்தம் மட்டும் ஓயாமல் கேட்டுக் கொண்டிருந்ததாம். ஆனால் காந்திஜியின் புனித உடல் தகனமான அன்று சீதாவின் காது கேட்கத் தொடங்கியது. 'ஹரீ! மக்களின் துன்பத்தைப் போக்குவாயாக' என்ற மகாத்மாவின் மனதுக்கு உகந்த கீதங்கள் முதலில் அவள் காதில் கேட்டதாம். இது ஒரு சுப சூசகம் என்று எனக்குத் தோன்றுகிறது. மகாத்மாவின் மகா தியாகத்துக்குப் பிறகு இந்தப் பெரிய தேசத்துக்குப் பெரும் விபத்து ஒன்றும் கிடையாது! இனிமேல் சுபிட்சமும் முன்னேற்றமுந்தான்!" என்றாள் சூரியா.

அந்த தேசபக்தத் தியாகியின் விருப்பம் நிறைவேறுமாக!

## அம்மா வந்தாள்

### தி.ஜானகிராமனின்

### முன்னுரை:

தமிழில் புனைகதை இலக்கியம், பரவலான கவனத்திற்கும் தீவிரமான வாசிப்புக்கும் உரியதாக வளர்ச்சி பெற்றுவந்த ஒரு காலகட்டத்தில் எழுதியவர். தி.ஜானகிராமன் (1921 - 82). நவீன எழுத்துக்களாய் இன்றைத் தமிழ் இலக்கியம் வடிவம்கொள்ளுவதற்கு முக்கியமான பங்களிப்புச் செய்தவர்களில் ஒருவர் தி.ஜானகிராமன். 27 சிறுகதைத் தொகுப்புகளும் 9 நாவல்களும், 7 குறுநாவல்களும், 3 நாடகநூல்களும் இவையன்றியும் 3 பயண நூல்களும், 2 மொழிபெயர்ப்புகளும் மற்றும் சில கவிதைகளும், சங்கீதம் தொடர்பான சிலகட்டுரைகளும், விமர்சனக்கட்டுரைகளும் எழுதியர், தி.ஜானகிராமன். பலவும் எழுதினாலும், புனைகதைப்படைப்பாளியாகவே தடங்கள் பதித்தவர்.

அமிர்தம் (1944), மேகமுள் (1955), மலர்மஞ்சம் (6)), அன்பே ஆரமுதே (62), அம்மா வந்தாள் (66), உயர்த்தேன் (66), செம்பருத்தி (67), மரப்பசு (72), நளபாகம் (82) ஆகிய ஒன்பது நாவல்கள் அவர் எழுதியவை. இவற்றுள் அம்மா வந்தாள் தவிர, ஏனையவை முதலில் இதழ்களில் தொடர்கதைகளாக வெளி வந்தவை. இவற்றுள் அம்மாவந்தாள்,

மேகமுள் என்ற இரண்டும் பலராலும் பாராட்டப்பட்டவை. மற்றும் மரப்பசுவும் செம்பருத்தியும், நளபாகமும், தம்முள் பல சிறப்பு அம்சங்களைக் கொண்டவை.

நடப்பியலும், அற்புதநவிற்சியும் உளவியலும் கலந்த புனைதிறனும், நெகிழ்வும் பாய்ச்சலும் எள்ளலும் வருணிப்பும் கொண்ட எடுத்துரைப்பு முறையும், வண்ணத்தூரிகையின் லாவகமும், தனிமனித உணர்வுகளும் சமூகஉணர்வும் தமக்குள் சமரசப்பட்டுக்கொள்ளும் போக்கும், பரிசீலனைக்கும் விமரிசனத்துக்கும் மறுவாசிப்புக்கும் இடம் தரும் விசாலமான வெளியும் தி.ஜானகிராமனின் படைப்பு அடையாளங்கள்.

தி.ஜானகிராமனின் நாவல்களிலே தஞ்சைம ண்ணின் வாசனையடிப்பதாகச் சொல்லி அதற்காக அவர்கள் காட்டுபவை, தஞ்சையின் சில இடங்களும், பிரத்தியேக மொழிநடையும் சில பழக்க வழக்கங்களும் தான். இவர்கள் இதனோடு நில்லாது இதனை வைத்துக்கொண்டே இவரது நாவல்களை வட்டார நாவல்கள் என்று பகுக்கின்றனர்.

தி.ஜானகிராமனின் நாவல்களைப் பிராந்திய நாவல்கள் என்று முத்திரையிடுவது அவருடைய எழுத்துக்களைக் குறிப்பிட்ட சிறு எல்லைக்குள் அடைக்க முற்படுவதே ஆகும். அவர் எழுப்பும் பிரச்சினைகள், அவற்றின் தீர்வுகள், அவரது நோக்கம், செய்தி, சிந்தனைகள் முதலியவற்றின் வீச்சினை இது மிகவும் கோரமாக மட்டுப்படுத்தவே செய்யும். உண்மையில், தி.ஜானகிராமன் இந்த நாட்டின் பண்பாட்டில் பொதுவாக உள்ள சில பிரச்சினைகளைத் தனக்குரிய பாணியில் தேர்ந்தெடுத்துச் சித்திரித்துக் காட்டுகிறார். சில வட்டாரங்களில் இந்தப் பிரச்சினைகள், தூக்கலாக இருக்கலாம். சிலபோது, சிலவற்றில் சிலமாறுபாடுகள் இருக்கலாம். இருந்தாலும், ஒட்டுமொத்தமான நிலையிலே இந்தப் பிரச்சினைகள் பொதுவானவையே ஆகும். ஒரு பொதுவான நிலையை மையமிட்டுத் தான் எழுப்பிக்காட்ட விருக்கும் பிரச்சினைகளுக்கு ஒரு பின் புலமாகவே தஞ்சைச்சீமையை தி.ஜானகிராமன் சித்திரிக்கிறார். சமுதாயத்தை அதனுடைய பிடிப்பு, நம்பிக்கை, முரண்பாடு, சிதைவு மரபுமாற்றம் முதலியவற்றோடு தி.ஜானகிராமன் தன் நாவல்களில் உயிரோட்டமாகவும் தூலமாகவும் சித்திரித்துக் காட்டுகிறார்.

சுதந்திர காலத்திற்கு முன்னும் சற்றுப்பின்னுமுள்ள காலகட்டத்தின் நிலவுடைமைச் சமுதாயத்தினுடைய சிலபோக்குகளை வரைந்துகாட்டுகிறார் தி.ஜானகிராமன் இந்நிலவுடைமைச் சமுதாயம், இருபதாம் நூற்றாண்டின் திருப்பத்தில் நவீன தொழில் முறைகளின் தாக்கத்தினால் பெரிதும் ஸ்தம்பித்து நின்றது. மரபுகளோடு மோதிய புதிய நாகரிகத்தின் தாக்கம் காரணமாக, வேறு எந்தக் காலங்களையும் விட இக்காலத்தில்தான் இதன் பத்தாம் பசலித்தனம், வறட்டுக் கவுரவம், போலித்தனம் முதலியவை மிகப் பரிதாபகரமாகத் தம்மை வெளிப்படுத்திக் கொண்டன. பழைய மதிப்புகளுக்கெதிராக, நவீன

காலத்தை ஒட்டிய புதிய மதிப்புகள் வளரத் தொடங்கின. பழைய மரபுகளின் மீதான பிடிப்புக்கள், நம்பிக்கைகள் முதலியவை தளரவும் சிதிலமடையவும் தொடங்கின.

புதிய சமூக பொருளாதார நிலைப்பாடுகளின் சூழலில், பழைய நியாயங்களுக்கும் புதிய உறவுகளுக்கும் இடையே தோன்றிய முரண்பாடுகளினாலும், மோதலினாலும், குடும்ப உறவுகளிலே - ஆண்பெண் உறவுகளிலே - உடைவுகள் ஏற்பட்டன; விரிசல்கள் ஏற்பட்டன; பொருமல்களும் பூசல்களும் ஏற்பட்டன. இவை இந்தச் சமுதாயதவாழ்வின் முக்கிய அம்சங்களாக, நெருக்கடிகளாக விளங்கின. ஆனால் இந்த முரண்பாடுகள் தமக்குள் தீர்க்கமாக மோதிக்கொள்ளாவிட்டாலும், அழுத்தமாக வேரூன்றி வளரத் தொடங்கிவிட்டன. நிலவுடைமைச் சமுதாயத்தின் அடித்தளம் அப்படியே கிடந்தாலும், மரபுகள், மதிப்புக்கள், நம்பிக்கைகள், புனிதங்கள் உள்ளிட்ட அதனுடைய கிளைகளும் விழுதுகளும் ஆட்டம் காணத் தொடங்கின. இந்தச் சமூக வரலாற்று நிலை ஒருபக்கம், சுதந்திர காலத்திற்குச் சற்று முன்னும்பின்னுமாகிய காலப்பகுதிகளில் காலனித்துவ ஆதிக்கத்தின் காரணமாக அமைந்த வேறுபட்ட ஒரு பொது மனநிலை இன்னொரு பக்கம். இந்த சமுதாயத்தைத்தான் தி.ஜானகிராமனின் நாவல்களில் பார்க்கலாம்.

'அம்மாவந்தாளில்' அலங்காரத்தம்மாள் நீண்ட நாட்களாகச் சிவசு என்ற என்ற 'வேற்று' ஆளுடன் தொடர்பு கொண்டிருக்கிறாள். பணத்துக்காகவா, உடல்நமைச்சலைத் தீர்த்துக் கொள்வதற்காகவா? அல்லது, இரண்டுக்குமா? இரண்டுமே கிடைக்கிறது. ஆனால், அந்த வீட்டிலுள்ள அனைவரும் அதனைச் சகித்துக் கொள்கின்றனர். இதெல்லாம் சொற்களை விரயமாக்காமல் ஈநசூக்காகச் சொல்லப்படுகிறது. கணவரும் கூடக், கண்டும் காணாதது மாதிரி இருக்கிறார். ஆனால் அதே நாவலில், பள்ளி ஆசிரியர் சேஷராமனின் மனைவி, பள்ளி முதலாளயியான சேட் ஒருவருடன் சோரம் போக, சேஷராமன் இந்தப் போக்கினைச் சகிக்க முடியாமல் சில ஆண்டுகளில் மாண்டு போகிறார். இது ஒருநிலை, இருவேறு பக்கங்கள், இப்படி, இந்த உறவுகளில். எந்த நேரத்திலும் யாருடனும் தன் விருப்பப்படி இருப்பாள். அவளுக்கு எதுவும் தன்னிச்சைதான், எதுவும் அவளைக் கட்டுப்படுத்தாது. ஆனால் அவள் உள்ளம் ஸ்படிகம் ஆனது. அவள் ரிஷிபோன்றவள் என்று எல்லாப் பாத்திரங்களும் புகழ்கின்றன; தி.ஜானகிராமன் அப்படி எழுதுகிறார்.

## சுதந்திரக் காதல்:

தி.ஜானகிராமனின் பெண்கள் பலவகைப்பட்ட பரிமாணங்களின் பிரதிநிதிகள். பெண்ணடிமைத்தனத்தின் வெவ்வேறு அடையாளங்கள் என்ற முறையிலும், உணர்ச்சிகளின் வண்ணங்களுக்கு உகந்த பிம்பங்கள் தருபவர்கள் என்ற முறையிலும் ஒரு சமூக மாற்றத்தின் திசை வழியில் அடையாளங்களாக நிற்பவர்கள் என்ற முறையிலும், இப்படிப் பெண்

கதைமாந்தர்கள் பல்வேறு கோணங்களில், அசைவுகளில், சித்திரிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். தி.ஜானகிராமன் இதன் மேல் சிறப்பான கவனம் கொண்டிருக்கிறார். அவருடைய சிறப்புக்களில் இது முக்கியமான ஒன்றாக விளங்குகிறது.

## அலங்காரத்தம்மாள், அப்பு:

நம்பிக்கைகளைச் சுமந்துகொண்டு, ஒரு பாதையில் போய்க் கொண்டிருந்த அல்லது அத்தகைய வழிபாதையை வரித்துக் கொண்ட வாழ்க்கைமுறையை, நடப்பியலின் வன்மை அல்லது குரூரம் வேகமாக வந்து முட்டி மோதுகிறது. இது, அம்மாவந்தாள் நாவலில். அம்மாவந்தாளின் மையப் பாத்திரங்கள், அம்மா அலங்காரமும் மகன் அப்புவும். இவர்கள் இருவருமே ஒருவர் மற்றவரிடம் நிறைய எதிர்பார்ப்புகளைக் கொண்டவர்கள். இதிலே பெரிய கீறல் விழுகிறது. இவ்விருவரது எதிர்பார்ப்புக்களையும் ஏமாற்றங்களையும் தான், இந்த நாவல் கருப்பொருளாக வைத்துக்கொண்டு சுழல்கிறது. எதிர்பார்ப்புக்கும் ஏமாற்றத்திற்கும் காரணமான சூழ்நிலைகள், மிகவும் இயல்பாகவும் நேர்த்தியாகவும் உருவாக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன. இதற்கு நிலைக்களனாக ஆசிரியர் எடுத்துக் கொண்டது, ஒரு வைதீகப் பிராமணக் குடும்பம்.

பிராமணர்கள், நிலவுடைமைச்சமுதாய அமைப்பு முறையில் மேல்தட்டுக்காரர்களின் சுகஜீவனங்களுக்கு வசதியாகச் சமயச்சடங்குகள் செய்பவர்கள். அதற்குரிய கல்வி பெற்று அவ்வக்காலத்து அறிவுஜீவிகளின் இடத்தைப் பெற்றிருந்தார்கள். தங்களுக்கென ஒரு பாரம்பரியத்தை வகுத்துக் கொண்ட இவர்கள், வேதரிஷிகளைத் தங்கள் மூல புருசர்களாக எண்ணிக்கொண்டதாலும், வேதங்களைப் புனிதம் என்றுமன், வேதம் ஓதுவதை இறைவனுக்கும் லோகத்திற்கம் செய்யும் கைங்கரியங்கள் என்றும் இவர்கள் கருதினார்கள். வேதம், பரமாத்மா போன்றது என்றும், அது, தன்னை அணுகுவோரின் குற்றங்களைச் சுட்டெரித்துத், தன்னோடு இணைத்துக் கொண்டுவிடும் என்றும் இவர்கள் நம்பினார்கள். அம்மா அலங்காரம், அப்பா தண்டபாணி, வேதத்திற்கெனப் பாடசாலை நடத்தும் பவானி அத்தை, அங்கே பதினாறு ஆண்டுகள் படித்த அப்பு, அங்கேயே வசிக்கும் இந்து முதலிய யாவரும் இந்த மரபுவழி வந்தவர்கள்தான்.

நிலவுடைமைச் சமுதாயம் ஆட்டங்கொண்டு சிதறத் தொடங்கிய காலத்தில், நவீன விஞ்ஞானமுறைகளின் செல்வாக்கினால் ஐரோப்பாவின் பல பகுதிகளில் தொழில் புரட்சி ஏற்பட்ட நேரத்தில், இந்தியாவில் ஆங்கிலேயப் பேரரசின் ஆட்சியின் விளைவாகப் புதிய சமூக, பொருளாதார உறவுகள் தோன்றி வளரத்தொடங்கியபோது பிராமணர்கள் தங்கள் நிலைமைகளை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. புதிய நவீன அறிவுஜீவழ வர்க்கத்தினராக, மத்தியதரவர்க்கத்தினராக இவர்கள் மாறத் தொடங்கினார்கள். இதனால் இவர்களுடைய வைதீகக் கேட்பாடுகள் ஆட்டங்கண்டன. வைதீகங்களின் மிச்சம்

மீதிகளுக்குக் கூட வேதம் என்னும் நம்பிக்கை, புளியங்கொம்பாக இல்லாமல் நடைமுறைச் சிக்கல்களுக்கு முன்னால், வெறும் முருங்கைக் கொம்பாக வலுவிழந்து விட்டது. இந்த வரலாற்று நிர்ப்பந்தத்தை, பழைய மதிப்புகளுக்கெதிராகப் புதிய மதிப்புக்கள் எழுச்சிபெறுதலை - முரண்பாட்டை - அம்மாவந்தாள் ஆழமாகவும், நேர்த்தியாகவும் சித்திரிக்கிறது. செறிவானதொரு எடுத்துரைப்போடுகூடிய அதன் கட்டமைப்பு, வாசிப்பின் தளங்களை விரிவுப்படுத்துகின்றது.

## அப்புவை ரிஷியாக்க நினைத்தல்:

தண்டபாணி சென்னையில் புரூ.்.ப்ரீடர் வேலை பார்ப்பவர் ஓய்வு நேரத்தில் வேதம் சொல்லித்தருவார். அழகும் கம்பீரமும் கொண்ட அலங்காரம் அவருடைய மனைவி. ஆறு பிள்ளைகளுக்குத் தாய் அவள. சிவசு என்ற நிலப்பிரவுவோடு 20 ஆண்டுக் காலமாக அவளுக்குத் தொடர்புண்டு, இதில் கவனிக்கத் தக்கது என்னவென்றால் அந்தத் தொடர்பு ஆரம்பித்த நாளிலிருந்தே அதனை அவள் தப்பு என்றே நினைத்து வருகிறாளாம். ஆனால், அதுநாள்வரை அதிலிருந்து அவள் வெளியேறிவரவும் இல்லை. அதுபோல யாரும் அவளை அதிலிருந்து தடுக்கவும் இல்லை. அதேபோது, கையோடு கையாக பிராயச்சித்தமும் தேட ஆரம்பித்துவிடுகிறாளாம். தன் பிரிய மகன் அப்புவை இதற்காகவே வேத பாடசாலையில் படிக்கப் போடுகிறாள். அப்புவிடம் அவள், "வேதம் படிச்சா வயசேது? அவாள்ளாம் ரிஷியாயிடுவா, நெருப்பா ஆயிடுவா, அப்படி நீ வருவே. அப்ப உன்னைப் பார்த்து உன் கால்லே விழுந்து எல்லாத்தையும் எரிச்சுடலாம்னு தீர்மானம் பண்ணிண்டேன்" என்று சொல்கிறாள். இத்தகைய பெரிய எதிர்பார்ப்பை, நம்பிக்கையை, நீண்ட நெடுநாட்களாக அவள் அடைகாத்து வருகிறாள். அவனும் பதினாறாண்டுகள் படித்து வேதவித்தாகத் திரும்பி வருகிறான். ஆனால் அந்த வேத நெருப்பில் அம்மாவால்தான் எதையும் எரித்துக்கொள்ள முடியவில்லை. அதேபோது, அழகும் கம்பீரமும் உடைய தன் அம்மாவிடமிருந்து அவன், தான் எதிர்பார்த்திராத ஒழுக்கக் கேட்டினைக் கண்டவுடன், அந்த வேதவித்துவினால் அதனைச் சகித்துக் கொள்ளமுடியவில்லை. சரி, வேதத்துக்கு என்ன ஆயிற்று? மீண்டும் வேதபாடசாலைக்கே ஓடிவிடுகிறான். அங்கு பவானியத்தையோடும் இளம் விதவையாகிய இந்துவோடும் தன்னை ஐக்கியப்படுத்திக் கொள்கிறான். தன்னுடைய எதிர்பார்ப்புப் பாழானதைக் கண்டு நொந்துபோன அம்மா, அப்பு இருக்கும் வேதபாடசாலைக்கு வருகிறாள். அவன் தன்னிடம் திரும்பி வரமாட்டான் என்பதை அங்கே தெரிந்து கொள்கிறாள். தெரிந்துகொண்ட அவள், காசிக்குப் போவதாகச் சொல்லிவிட்டுப் போய்விடுகிறாள்.

## வேதத்தின் நிலை:

வேதப்பிழம்பில் தனது பாவங்களை எல்லாம் போட்டுச் சுட்டெரித்துக் கொள்ளலாம் என்னும் அலங்காரத்தின் நம்பிக்கை, அவளுடைய வைதீகப்பாரம்பரியத்தினால் தரப்பட்டது. ஆனால் சர்வ வல்லமை படைத்த வேதம் அவளைக் காப்பாற்றவில்லை. நடைமுறை வாழ்வில் நேரே சந்திக்கின்ற அப்பிராங்களுக்கு முன்னிற்கமாட்டாமல் அது வலுவிழந்துவிடுகிறது. ஒழுக்கக்கேட்டிற்குக் காரணகாரியங் காணவோ, அதனைத் தவிர்த்துத் திருத்தவோ, பிராயச்சித்தம் தரவோ அந்த வேதப் படிப்பு தயாராகவில்லை. அம்மாவின் ஆசையையும் எதிர் பார்ப்பையும் தெரிந்திருந்தும் கூட, அவளிடமிருந்து விடுபட்டு ஓடும் அப்புவின் செயல், இந்த முடிவினையே நமக்குக்காட்டுகிறது. தவிரவும் சமூகப் பொருளாதார மாற்றங்களின் வலிமைக்கு முன்னால், வெறுமனே புனிதங்களாக நினைக்கின்றவை காலப்போக்கில் பொருளற்றனவாக ஆகிவிடுகின்றன என்பது வரலாற்று உண்மை. இந்த உண்மையைத்தான், வேதம் என்பதனைப் பிரச்சினையாக ஆக்கி அந்த நம்பிக்கையைக் கவிழ்த்துவிட்டு இந்த நாவலை உயிர்ப்பிழம்புடன் வடித்துத் தருகிறார் ஆசிரியர். அப்புவின் செயல்கள் மூலமாக மட்டுமல்லாது, பவானியம்மாள், இந்து, ஆகியோர் மூலமும் இக்கருத்தே வலியுறுத்தப்படுகிறது. முப்பதாண்டுக் காலமாகத் தன்னையும் தன் சொத்துக்களையும் அர்ப்பணித்துப் புனிதப் பணியாக வேதபாடசாலை நடத்தும் பவானியம்மாளே, வரலாற்று நிர்ப்பந்தங்களுக்கு அடிபணிந்து, வேதபாடசாலையை அன்னசத்திரமாக மாற்றுவதற்கு யோசனை சொல்லுகிறாள். "வேதம் படிச்சா என்ன, வாதம் படிச்சா என்ன? இல்லாததுகள் வயித்திலே ரெண்டு சாதம் விழணும். பசிதான் ஸ்வாமி. அதுக்கு நைவேத்தியம் பண்ணிணாப் போதும்" என்கிறாள் அவள். சமூகவுணர்வும் அக்கறையும் கொண்ட ஒரு பார்வை, இது. 'நான் வந்து படிச்சதோட பலன், வில்வமரத்தையெல்லாம் வெட்டியெறிஞ்சு, முருங்க மரமா நட்டுவிடுவேன் போலிருக்கு' என்று அப்பு வருந்துகிறான். அந்த வேதபாடசாலையிலேயே வாழும் இந்து இதற்குப் பதில் சொல்கிறாள். "வில்வமரத்தை வச்சுண்டு பூஜை தான் பண்ணலாம். முருங்கை மரம்னா சாப்பிடலாம்". நடைமுறை யதார்த்தம் இவ்வாறு பழைய மதிப்புக்களைத் தூக்கி எறிந்து விடுகிறது. ஆனானப்பட்ட வேதத்திற்கே இந்தக் கதி ஏற்பட்டுவிடுகிறது. அதுவும், இந்தக் குரல்கள், எங்கிருந்து வருகின்றன?

அப்புவின் செயல், அலங்காரத்தம்மாளை ஒரு அவலப் பாத்திரமாக ஆக்கிவிடுகிறது. பிறர் பிரமிக்கின்ற அழகும், கம்பீரமும் உடையவள், அவள். 'ராணி' போன்று காட்சியளிப்பவள். கணவனிருக்க வேறொரு ஆளுடன் நீண்டநாள் தொடர்பு கொண்டிருந்தபோதும்கூட அவள் தலைகுனிந்துததில்லை. பழைய கம்பீரத்துடன்தான் இருக்கிறாள். வேதம் தன் பாவங்களைப் போக்கிவிடும் என்ற நம்பிக்கை அவளுக்கு அப்பு ஒண்ணுதான் தன்பிள்ளை; அவன் 'ரிஷி' யாயிடுவான். தனக்குப் 'பாவவிமோசனம்'

கிடைக்கும் என்று நம்பிக் கொண்டிருந்தவள் அவள். சரி, இந்த அப்புவுக்குத் தந்தை யார்? தண்டபாணியா? சிவசுவா? ஆனால் வேதமெல்லாம் படித்தும் அவன், ‘அம்மா பிள்ளை’ யாக இருப்பதைப் பார்த்து கதிகலங்கி விடுகிறாள். அதுகாறும் அவனுக்காப் பழைய வாழ்வு நிலையிலேயே, அதைக் கத்திரிக்கமுடியாமல் காத்துக் கொண்டிருந்தவள், இப்போது ”காசிக்குப்போய் இருக்கப் போகிறேன். எத்தனை பாட்டிகள் அங்கே செத்துப் போறதுக்காப் போய்க் காத்துண்டேயிருக்கா, நானும் போய்க் காத்துண்டிருக்கப் போறேன்” என்ற தீர்மானமான முடிவுக்கு வந்துவிடுகிறாள்.

## தண்டபாணி:

அலங்காரம் ஒருவகையில் அனுதாபத்திற்கு உரியவள் என்றால் தண்டபாணி வேறொரு வகையில் பரிதாப்படுதற்குரியவராவர். தன்மனைவியைத் தன் வீட்டுக்குள்ளேயே, தனக்குத்தெரிய, சோரம் போகவிட்டுவிட்டுக் கண்டும் காணாதவராக இருக்கிறார் அவர். அவருடைய இந்தச் ‘சகிப்பு’ பிரச்சினைக்குரிய ஒன்று. ‘துணியைக் கிழிச்சுக் கோவணம் கட்டிண்டு சன்னியாசியாகப் போகாமல் அல்லது ஆத்திரத்தையோ, கோபத்தையோ காட்டாமல், ஒண்ணையும் புரிஞ்சுக்க சிரமப்படாது பேசாமல் பார்த்துண்டேயிருக்கணும்’ என்று கிடக்கிறார் அவர். ஆனால் அதே நேரத்தில் வேதம் சொல்லித்தருபவரான அவர், ஹைகோர்ட் ஜட்ஜ்களையும், பிரின்ஸ்பால்களையும், விரட்டு விரட்டு என்று விரட்டுபவராக இருக்கிறார். மனைவியால் ஞானசூரியன் என்று சொல்லத் தகுந்தவராக இருக்கிறார். அவருடைய இந்தப் போக்குகள் வித்தியாசமானவை. இவற்றைத் தொடர்புபடுத்திக் கண்டால், சாதாரணமாகத் தண்டபாணி தன்னுடைய எரிச்சல்களை - உணர்ச்சிகளைக் - கடலுக்குள் போட்ட கல்லாக இறுக்கிக் கொண்டுார் என்றும் அந்த அமுத்தலின் காரணமாகவே அவர் பெரிய பெரிய ஆட்களையெல்லாம் அதட்டக்கூடியவராகவும், ஞானசூரியனாகவும் விளங்கினார் என்றும் கொள்ளத் தோன்றும்.

தண்டபாணியைப் பொறுத்த அளவில், ஓய்வு நேரத்தில் வேதம் சொல்லித்தரும் போது ஜட்ஜ்களையும், பிற பெரிய மனிதர்களையும் திட்டுகின்ற தைரியத்தைப் பெற்றிருப்பது ஒன்றும் அதீத வெற்றியையோ, புகழையோ குறிப்பதாகாது. அந்தச் சூழ்நிலைக்கு அவருக்குச் சாதகமாக இருந்த, மற்றவர்களிடம் இல்லாத அவருடைய வேதஞானமும், அந்தப் பெரிய மனிதர்களுக்கு முதமைக் காலத்தில் வேதம் கேட்டு மோட்சம் தேட வேண்டும் என்ற தேவையும் வேதம் கேட்பது பிராமணர்கள் மத்தியில் ஒரு கௌரவமாக நினைக்கப்படுவதும்தான். அவர்களை, அவர் விரட்டுகிறார் என்றால் சாதகமான இந்தச் சூழ்நிலையில்தான். தவிரவும் வீட்டில் தன் மனைவியை ஆளமுடியாத தன்னுடைய எரிச்சல்களைத்தான் சீடர்களிடம் அவ்வப்போது இவ்வாறு அவர் கொட்டித் தீர்த்துக்கொள்ளுகின்றார்.

இனி, ஞானசூரியன் என்று அவர் ஒருமுறை, கூறப்படுகிறார். ஒரே ஒரு இடத்தில் மட்டும் கூறப்படுகிற இந்தப்பட்டத்தை வழங்குவது அவருடைய மனைவியைத் தவிர வேறுயாருமில்லை. வேத ஞானம் எதுவுமில்லாத அந்தமனைவி கொடுக்கும் இந்தப் பட்டம் அவருடைய மேதைமைக்கு ஒரு சான்று அல்ல. தவிரவும், அவள் அவரைப் புகழ்வதற்கு இயல்பான வேறு காரணங்கள் உண்டு. வேறொரு ஆணுடனான தனது நடத்தை குறித்துக் கணவரான அவர் சகித்துக் கொண்டதால் அவளுக்கு ஏற்பட்ட வியப்பையும், பெருமிதத்தையும் நன்றியையும் இது குறிக்கிறதாகக் கொள்ளலாம். மேலும் தண்டபாணியின் இந்தச் சகிப்புத் தன்மையை வாசகர்கள் மோசமாக எடைபோட்டு விடக் கூடாதே என்று அவருடைய மனைவியின் மூலமே அவரைப் புகழச் செய்கிறார் ஆசிரியர். கணவனைப் புகழ்வது மூலம் அவளும் தன் பண்பில் உயர்ந்து கொள்கிறாள். தவிரவும் அவள் ஞானசூரியன் என்று அவரை எப்போது குறிப்பிடுகிறாள்? அப்புவிடமிருந்து ரொம்பவும் எதிர்பார்க்கும் அம்மா ஏமாறுகிற போது, மேலும், அவன் அவளுடைய நடத்தையைக் கண்டு சகிக்கமுடியாமல் ஓடி விடுகிறபோது - பல ஆண்டுகள் படித்த அவனுடைய வேத அறிவெல்லாம் கண் மூடிக்கொள்கிறது. ஆனால் அதே நேரத்தில், வேதத்தை ஓரளவுக்கே தெரிந்த அவள் கணவரோ, அவள் நடத்தையைச் ‘சகித்துக்’ கொள்ளுகின்றார். அவருடைய வேதஅறிவு குறுக்கே நிற்கவில்லை. இந்த இரண்டு நிலைகளையும் அவள் மனம், ஒத்துப் பார்த்திருக்கவேண்டும். எனவே அப்பு திரும்பிவரமாட்டான் என்றவுடன் அப்பாவும் காசிக்கு வருகிறாரா என்று அவன் கேட்கும்போது, ‘அவர் ஞானசூரியன், கருணாமூர்த்தி, அவர் ஏன் வரவேண்டும்?’ என்பதாக அவள் சொல்லுகிறாள். இது அப்புவுக்கு அவள் தரும் ‘அடி’ மேலும், அவரைத் தவிர்க்க வேண்டும் என்றும் அவள் கருதியிருக்கலாம்.

தன்னுடைய நிலை குறித்துத், தண்டபாணிக்கு வெளிப்படையாக உணர்வுநிலை இருக்கிறது. ஒருநாள் அவர் பிரார்த்தனை செய்ய அமர்ந்திருக்கும் போது, வீட்டுக்குள் நுழைந்த சிவசுவைக் கண்டவுடன் அவனுடைய தொடர்பு பற்றியே நினைத்து அசைபோட்டுக் கொண்டிருக்கிறார். மேலும் அப்புவிடம் கடற்கரையில் தனது எரிச்சல்களை உள்ளடக்கிக் கொண்டு சொல்வது போல, சிவசு வந்தானா? என்று கேள்வி கேட்டுக் கொண்டு, அவரே, ‘அவன் அம்மாவைப் பார்க்கத்தானே வரான்’ என்று பதிலும் சொல்கிறார். தன் மகனிடம் இவ்வாறு அவர், இந்த உறவு பற்றி வெளிப்படையாகச் சொல்கிறார். தவிரவும், ஒரு தடைவ அவர் தன் மனதுக்குள்ளேயே அலங்காரத்தைத் தேவடியாள் என்று திட்டிக்கொள்வும் செய்கிறார். எனவே அவருடைய நினைவுகள், எரிச்சல்கள், நினைவிலிநிலையில், உள்ளே படிந்துவிட்டிருக்கின்றன என்பதை விடத், தண்டபாணி, எல்லாவற்றையும் சகித்துக் கொள்கிறார் என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. இந்தச் சகிப்புகுக், காரண காரியத்தொடர்பு இருக்கிறது. தண்டபாணியின் குடும்பம், பெரிய குடும்பம். மேலும் புருஃப்

ரீடராக இருக்கிற அவரது பொருளாதார நிலையும், நிலச்சுவான் தாராக இருக்கிற சிவசுவின் நிலையும் இங்கு நினைவு கொள்ளத்தக்கவை. இந்தப் பொருளாதார நிலைகள் நாவலின் போக்கிலே, பலவிடங்களில் பலநிலைகளில் வைத்துப் பேசப்படுவதைப் பார்க்கலாம். தவிரவும் எப்படியிருந்தாலும் தன் மனைவிமேல் தண்டபாணிக்குத் தீராத காதலும், மரியாதையும் உண்டு. 'அம்மாவை விட்டுவிட்டு அவரால் இருக்க முடியாது. இத்தனையும் சகிச்சுண்டு அவளைப் பார்த்துண்டு இருப்பாரே தவிர, விட்டுவிட்டு பரமாட்டார். பிராணன் போற வரைக்கும் இப்படித்தான் இருக்கப்போகிறார். ஆனால் அவரை இந்தண்டை இழுத்துண்டு வந்துட்டா, சீக்கிரம் அவர் பிராணன் போயிடும்.' இவ்வாறு அவருடைய பிணைப்பு மிகவும் வலுவானதாக இருப்பதால்தான், அவர் எல்லாவற்றையும் சகித்துக்கொண்டு இருக்கிறார். மேலும் வெளிப்படையாகக் கீறல்கள் ஏற்பட்டால6, குடும்ப கௌரவம் பாதிக்கப்படுமே. அந்த எண்ணமும் கூட அந்த பிராமண குடும்பஸ்தருக்கு இருந்திருக்கக் கூடும். எனவே, அவருடைய சகிப்புக்குக் காரணகாரியத் தொடர்புகள் உண்டு. மேலும், பிரமிக்கத்தக்க உடல்வாகு கொண்ட அவளை தனது இயலாமை காரணமாக அவளை அவர் பிரமிக்கத்தக்கவளாக எடுத்துக் கொள்கிறார். என்றும் சொல்லலாம். முழுதாக 'ஆளமுடியாத' அவருடைய பாலியல் இயலாபமை, முக்கியமானதொரு காரணமாகும்.

யார் சகித்துக்கொண்டாலும், எப்படிச் சகித்துக்கொண்டாலும் தொடர்ந்து அம்மாவால6 அங்கே இருக்க முடியாது. அங்கே அவளுக்கு என்ன இருக்கிறது? புறப்பட்டு விடுகிறாள். இறுதியாக அவளுக்கு விடிவு எங்கே இருக்கிறது? வைதீகப் பிராமணப் பெண்மணியாகிய அம்மாவைப் பொறுத்து அளவில் அது கங்கைக்கரையில் காசியில் இருக்கிறது. அங்கே முக்தியை நோக்கி அவள் காத்திருக்கப் போகிறாள்.

### பாத்திரப்படைப்பு:

இனிப் பாத்திரப்படைப்புகளைப் பொறுத்த அளவில் எல்லாப் பாத்திரங்களுமே, பொதுவாக ஜீவன் நிறைந்தவைகளாக அமைந்திருக்கின்றன. பெரும்பாலும் தி.ஜானகிராமன் பிராமணக்குடும்பங்களிலிருந்தே தன்னுடைய கதை மாந்தர்களைத் தெரிவு செய்கின்றார். பழைமையையும், சம்பிரதாயங்களையும் அதே சமயத்தில் மாற்றங்களையும் புதுமையையும், மேலும், சமரசப்பட்டுக் கொள்ளுகின்ற நிலைமைகளையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப், பிறரினும் அவர்களே ஏற்புடையவர்கள் என்று கருதி பாத்திரங்களை படைக்கிறார்.

தி.ஜானகிராமனின் பாத்திரங்களில் பெரும்பாலும் பெண்களே, அறிவும், ஆற்றலும், சுறுசுறுப்பும் உடையவர்களாகவும் முன்முயற்சி எடுப்பவர்களாகவும் இருக்கிறார்கள். மேலும், விசாலமான குணங்களிலும் பன்முகப்பட்ட பரிமாணங்களிலும் வைத்துப் பேப்படுபவர்களும்

இவர்களே. ஆண்கள் பெரும்பாலும் அடங்கி அல்லது தாழ்ந்து போகக்கூடியவர்கள். (submissive characters) பெண்களுடைய பண்புநிலைகள், செயல்பாட்டுநிலைகள் முதலியவற்றைத் துலக்கிக்காட்டுவதற்குப் பின்புலங்களாகப். பலசமயங்களில் இந்த ஆண்கள் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறார்கள். குறிப்பாகச், சமுதாய நிர்ப்பந்தங்களினால் பாதிக்கப்படுகின்ற பாத்திரங்களின்மேல் பரிபூரண அனுதாபம் விழுகிறது. இந்தப் பாத்திரங்கள் பெரும்பாலும் சாதாரண குடும்பங்களிலிருந்து தோன்றியவர்கள்.

பொதுவாகப், பெரும்பாலான பாத்திரங்கள் குறிப்பிட்ட சூழமைவுகளின் வகைநிலைப் பாத்திரங்களாக அமைகின்றன. அவை, ஏதாவது ஒன்றைப் பிரிதிநிதித்துவப் படுத்துகின்றன. குறிப்பாக அம்மாவந்தாளில் இதனைக் காணலாம். இந்துவம், பவானியம்மாவும் இந்த வகையில் பழைய மதிப்புக்களைக் கத்தரித்துக்கொண்டு, புதிய மதிப்புக்களைப் புரிந்துகொள்ளக் கூடியவர்களாகத் தோன்றுகிறார்கள். இந்துதான் அப்புவை முதன்முதலில் வேதத்திலிருந்து நடைமுறை யதார்த்தத்தை எட்டிப்பார்க்கச் செய்கிறாள். ‘அம்மா என்பது அப்படியொன்றும் கேள்வி கேட்பாரற்ற புனிதப் பொருளல்ல’ என்று அப்புவுக்கு உணர்த்துகிறாள். இளம் விதவையாகிய அவள், அப்புவோடு காதல் கொள்ளக் கூச்சமோ, தயக்கமோ கொள்ளவில்லை. இந்து வெளிப்படையான, நேரிடையான துணிச்சலான ஒரு பாத்திரம் தன் அம்மாவிடமிருந்து கத்திரித்துக்கொண்டு வருவதற்கு இந்துவின் இந்த ஆளுமை அப்புவுக்கு ஒரு தூண்டுதலாக அமைகிறது. பவானி அத்தையும் புதிய மதிப்புக்களை ஏற்றுக் கொள்ளக் கூடியவளாகவே வருகிறாள். அதனால் தான், அப்புவும் இந்துவும் ஒன்றாக வாழ்வதற்கு ஏற்பாடுகள் பண்ணுகிறாள். இந்துவைப்போல்தான் மலர் மஞ்சத்தில் வரும் பாலியும், மரணப் படுக்கையில் அம்மா சொன்னளென்பதற்காக எதுவும் புனிதமாகி விடாது என்று அவர் சொல்லுவது குறிப்பிடத்தக்கது.

## உடல்மொழி:

அம்மா வந்தாளின் இறுதி வரி, "அவள் தலைக்கருகில் தாழ்வாரத்துச் சுவரில் ஒரு சிட்டுக்குருவி வாலைத் தூக்கிக் கத்திக்கொண்டே இருந்தது. கால் துவள, கீழே உட்கார்ந்து கொண்டாள் அவள்" என்று முடிகிறது. இது ஒரு வகையில் இயற்கை வருணனை. இன்னொரு வகையில் கதையின் உணர்ச்சியை, தன்மையை, காட்டும் படிமம். அதுவரை குடும்பத்துக்குள்ளேயே அடைபட்டுக் கிடக்கும் அம்மா, வெளியே வருகிறாள்; எல்லாவற்றையும் விட்டுவிட்டுக் காசிக்குப் போகவிருக்கிறாள். இதனைக் கூடுவைத்த சிட்டு, அது வாலைத்தூக்கிக் கத்துதல், ஆகிய படிவங்கள், குறிப்பால் நமக்கு உணர்த்துகின்றன. சிட்டுக்குருவியென விட்டுச் செல்லும் அலங்காரத்தின் அவலம் நிறைந்த மனநிலையையும், அதே சமயம், அப்புவின் துயரத்தையும் இவை ஒருசேர

உணர்த்துகின்றன. இது போலவே பல இடங்களிலும் இயற்கைப் பொருட்கள், கதைநிகழ்ச்சிகளுக்கும், பண்புகளுக்கும், உரிண படிமங்களாகவே அமைந்துள்ளன. இயற்கைப் பொருட்களில் தி.ஜானகிராமனனை அதிகம் கவருவன கரிச்சான்குருவி, சிட்டுக்குருவி போன்ற சிறுசிறு பறவைகள்தான். இதற்கு மாறாக - கதைமாந்தர்களின் உருவவருணனைகள் தி.ஜானகிராமனின் எல்லா நாவல்களிலுமே இடம்பெறுகின்றன.

பயிற்சி வினாக்கள்:

1. பிரதாப முதலியார் சரித்திரத்தின் பாத்திரப் படைப்புகளை தொகுத்து எழுதுக.
2. பெண்ணடிமைத்தனம் குறித்த பிரதாப முதலியார் சரித்திரம் கூறுவது யாது?
3. கிட்டவய்யர் - பாத்திரபடைப்பை விவரி?
4. பெண்கல்வியின் முக்கியத்துவம் குறித்து அலையோசை கூறுவது யாது?
5. அம்மா வந்தாள் - அலங்காரத்தம்மாள் அப்பு பாத்திரப்படைப்பினை விவரி?
6. வேதத்தின் நிலைக் குறித்து அம்மா வந்தாள் கதை கூறுவதினை எடுத்துரைக்க.
7. உடல்மொழி குறித்து தி.ஜானகிராமன் குறிப்பிடுவது யாது?

# அலகு - 3

## புதுமைப்பித்தனின் சிறுகதைகள்

### ஆசிரியர் அறிமுகம்:

புதுமைப்பித்தன் 1906-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருப்பாதிரிப் புலியூரில் தோன்றினார். இவரது இயற்பெயர் விருத்தாசலம், தந்தையார் சொக்கலிங்கம் பிள்ளை; தாயார் பர்வதத்தம்மாள். திருநெல்வேலியில் பள்ளிப் படிப்பையும், கல்லூரிக் கல்வியையும் முடித்தார். நெல்லையில் வழங்கும் நல்ல தமில் அவர் கருத்தைக் கவர்ந்தது. புதிய கோணத்தில் சமுதாயத்தையும், அதன் சீர் கேடுகளையும் அலசிப் பார்த்து, நகைச்சுவை உணர்வுடன், புதிய உத்தி முறைகளை அறிமுகப்படுத்திப் பல சிறுகதைகளை எழுதினார்.

மணிக்கொடி, ஊழியன், தினமணி, தினசரி ஆகிய இதழ்களில் பணிபுரிந்த அவர் 'தமிழ்ச் சிறுகதை உலகின் மாப்பஸான் என்றும்' தமிழ்ச் சிறுகதையின் வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தவர்' என்றும் போற்றப்படுகிறார். 'கலை கலைக்காகவே' என்ற கொள்கையைக் கொண்ட புதுமைப்பித்தன் கலப்படமற்ற கலை வடிவாகவே சிறுகதையை நோக்கினார். சொந்த வாழ்வில் அல்லலுற்ற இவர் சமுதாயத்தின் இருளடைந்த பகுதிகளை - இழிநிலைகளை வாழ்க்கை அனுபவம் தோன்றத் தீட்டிடும் திறமையுடையவர். தமது சிறுகதைகளில் மூடப்பழக்க வழக்கங்களையும் 'நம்பிக்கைகளையும் எள்ளி நகையாடும் தன்மையர். இவரது ஒவ்வொரு படைப்பும் ஒரு தத்துவத்தையோ, ஒப்பரிய கருத்தையோ உள்ளடக்கியிருக்கும்.

இவருடைய கதைகள் பலதரப்பட்டவை. இயல்பு நவிற்சிப் பாங்கனாவை. புராண இதிகாச அடிப்படையில் புது விளக்கத்துடன் எழுந்தவை. அகநிலை உணர்வுடையவை. கனவுலகப் புனைவு சான்றவை. குறியீடுகளும் கொண்டவை. நையாண்டிக் கதைகள், ஒட்டுவமைக் கதைகள், பேய் பிசாசு பற்றியவை என அவற்றைப் பிரிக்கலாம். மேலை இலக்கிய மரபும், கீழை இலக்கிய மரபும் பின்னிக் கிடக்கும் தன்மை பொருந்தியவை அக்கதைகள்.

இத்தொகுப்பில் உள்ள "கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்" கதை உயர்ந்த தத்துவத்தை உள்ளடக்கியது. "சாபவிமோசனம்", "அன்றிரவு", இரண்டு கதைகளும் புராணக் கதைகளின் அடிப்படையில் எழுந்த புதிய விளக்கங்களாகும். "ஒரு நாள் கழிந்தது" என்ற கதை எழுத்தாளர்களின் வறுமையைச் சித்தரிப்பது. வறுமையின் காரணமாக பெண்கள் தம் கற்பையும் விற்கத் துணியும் அவலத்தைப் பொன்னகரம் காட்டி நிற்கிறது. இவை இரண்டும் யாதார்த்தத் தன்மை மிக்கவை. "சிற்பியின் நகரம்", "கயிற்றரவு",

"உபதேசம்", "ஞானக்குகை", ஆகியன தத்துவப் பார்வையுடன் கூடிய கதைகள். "நினைவுப் பாதை" மனிதனின் மரணத்தைப் பற்றி எடுத்துரைப்பது.

புதுமைப்பித்தனுடைய சிறுகதைகளில் ஆழமும், சிந்தனைத் துடிப்பும் காணப்படும். இவருடைய நடை சம்மட்டியின் அடியைப் போலவும், சாட்டையின் வீச்சைப் போலவும் வேகமாக இருக்கும். ஆனால் புரிந்து கொள்வது சற்றுக் கடினமாகும். கதைகளில் இடம் பெறும் புராண, இதிகாசக் குறிப்புகள் இக்கால உலகை எடுத்துக்காட்டவே பயன்படுத்தப்படும். இக்காரணங்களால் ஓரளவு இலக்கியப் பயிற்சியும், பக்கவமும், சிந்தனைப் பழக்கமும் உள்ளவர்களே புதுமைப்பித்தனின் கதைகளைப் புரிந்து கொள்ள முடிகிறது. இது புதுமைப்பித்தனின் குறையென்று சிலர் கூறுகின்றனர்.

## சாபவிமோசனம்

### கதைச்சுருக்கம்

சொல்லில் அகப்படாத சோகம் மிதந்து அகலிகை சாலையிலே கல்லாகக் கிடக்கிறாள். சாபத்தின் விளைவு அது. கோதமன் புற்றாகத் தவங் கிடக்கிறான். அவதார சிசுக்களான ராமலஷ்மணர்கள் வருகின்றனர். அவர்கள் ஓட்டத்தால் எழுந்த புழுதிப்படலம் சிலை மேல்படுகிறது. அகலிகைக்குப் பிரக்ஞை தெளிகிறது. சாபவிமோசனம் பெறுகிறாள்.

அன்று இந்திரனுடைய மாயத்துக்குப் பலியான பேதை, கணவன் மேல் கொண்ட பாசத்தின் காரணமாகத் தன்னுடலை மாசுபடுத்திக் கொண்ட அவள் இப்போதைய தன் நிலை என்னவாகும் என அறியாது மனம் மிரள்கிறான். "நெடுஞ்சினால் பிழை செய்யாதவளை நீ ஏற்றுக் கொள்ளுவதுதான் பொருந்தும்" எனத் தவங் கலைந்த கோதமனிடம் விசுவாமித்திரர் கூற, கோதமன் அகலிகையை ஏற்றுக் கொள்கிறான். கோதமனுக்குத் தான் ஏற்றவளா என்று அகலிகையும், கோதமனும் கவலைப்பட்டனரே அன்றி ஒருவரை ஒருவர் வெறுக்கவில்லை.

சரயூ நதிக்கரையில் மீண்டும் கோதமருடன் அகலிகையின் வாழ்வு தழைக்கிறது. உள்ளத்தால் அளக்க முடியாத ஓர் அன்பால் அவனைத் தழைக்க வைக்கிறாள் அவள். அவர்கள் அளவில் ஒருவரையொருவர் ஏற்றுக் கொண்டாலும், அவர்கள் வாழும் சமுதாயம், அதன் பார்வைக் கோளாறுகள் அவளைச் சுட்டெரிக்கின்றன. ரிஷிபத்தினிகள் அவளைக் கண்டதும் ஓடி விலகி, விறைத்துப் பார்த்துவிட்டுச் செல்கிறார்கள். அங்கு வரும் முன்புங்கவர்களுக்கோ அதிதி உபசாரம் (விருந்தோம்பல்) முறைப்படி செய்ய இயலாமல் குன்றிப் போகிறாள் அகலிகை. அவளுக்கு மகன் சதானந்தனும் கூட அன்னியனாகி விட்டது போன்ற உணர்வு ஏற்படுகிறது. கணவனிடம் தீர்த்த யாத்திரை செல்லலாம் எனக் கூறக் கோதமனும் அதை ஏற்றுப் புறப்படுகிறான்.

பதினான்கு வருடங்கள் கால வெள்ளத்தில் கரைய, அகலிகையும் கோதமனும் அயோத்தியை நோக்கி வருகின்றனர். தம் குடிசை இற்றுக் கிடந்த இடத்தை அடைந்து

அதனைச் செப்பனிட்டு, இராமனும், சீதையும் வரும் நாளை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

சீதையும், ராமனும் வருகின்றனர். ராமன் கோதமனுடன் வெளியே உலாவச் செல்ல, சீதை ராவணன் தன்னைத் தூக்கிச் சென்றது. துன்பம் மீட்பு எல்லாவற்றையும் துன்பக் கறைபடியாமல் அகலிகையிடம் கூறுகிறாள். தொடர்ந்து, அக்கினிப் பிரவேசத்தைப் பற்றிச் சீதை கூற அகலிகை துடிக்கிறாள். "அவர் கேட்டாரா? நீ ஏன் செய்தாய்?" என்ற அகலிகை கேட்க, "அவர் கேட்டார்; நான் செய்தேன்" என்கிறாள் சீதை அமைதியாக, "அவன் கேட்டானா?" என்று கத்துகிறாள் அகலிகை. எவன் அவளுக்குச் சாபவிமோசனம் அளித்து அவளை உயிர்ப்பித்தானோ, அவனே அவளை அக்கினிப் பிரவேசத்திற்கு ஆளாக்கினான் என்றால் அவள் மனத்தில் கண்ணகியின் வெறி தாண்டவமாடுகிறது. அகலிகைக்கு ஒரு நீதி? அவனுக்கு ஒரு நீதியா?

சீதையும், ராமனும் அரண்மனைக்குச் செல்ல, அகலிகையோ அவர்களை வழியனுப்பக் கூடக் குடிலை விட்டு வெளியே வரவில்லை. ராமன் மனம் அவனைச் சுடுகிறது. கோதமனோ மனச்சுமையை நீக்கக் குழந்தை ஒன்றைப் பெற வேண்டிய அகலிகையைத் தழுவுகிறான் அகலிகையின் மனத்திரையில் அவள் மறக்க வேண்டிய இந்திர நாடகம் நடந்து கொண்டிருந்தபடியால், கோதமன் உருவில் வந்த இந்திரனாகவே கோதமன் தோன்றுகிறான். அவள் நெஞ்சு கல்லாய் இறுகக் கோதமன் கைக்குள் ஒரு கற்சிலை சிக்கிக் கிடக்கிறது. அகலிகை மீண்டும் கல்லாகி விடுகிறாள். கோதமன் துறவியாகிக் கைலயங்கிரியை நாடிச் செல்கிறான்.

முன்பு சாபமிட்ட கணவரும், பின்பு சாபம் நீங்கிய மனைவியும் புதுவாழ்வு வாழ முயற்சி செய்யும்போது, அவர்கள் வாழும் சமுதாயமே அவர்களுக்குப் பகையாக நிற்கின்றது. அவர்களுடைய அக உணர்வும் அவர்களுக்குப் பகையாக நிற்கின்றது. இந்நிலையில் சாபம் நீங்கக் காரணமானவன் தன் சொந்த வாழ்க்கையில் மனைவி மேல் ஐயங்கொண்டு, அவளை அக்கினிப் பிரவேசம் செய்யச் சொன்ன செய்தியைக் கேட்டச் சாபம் நீங்கப் பெற்றவள் உளந்துடிக்கிறாள். "ஆணுக்கொரு நீதி? பெண்ணுக்கு ஒரு நீதியா?" என்னும் கேள்வி அவள் உள்ளத்துள் எழுகிறது. அந்த வினா, உண்மையை உலகத்துக்கு நிரூபிக்க முடியுமா? உள்ளத்துக்குத் தெரிந்தால் போதாதா? என்ற சொற்களாக வெளிப்படுகின்றன. அவையே இக்கதையின்கருவாகவும் அமைந்து விடுகின்றன. கல்லை இதயத்தில் சுமப்பதைவிட இதயத்தைக் கல் சுமக்கட்டுமே என்றெண்ணி மீண்டும் அவள் கல்லாகி விடுகிறாள்.

## பாத்திரப் படைப்பு

சாபவிமோசனத்தில் கதை மாந்தர்கள் மக்கள் இயல்பினர் அல்லர். அகலிகையும் கோமரும் "இப்படியாக ஊழி பல கடந்தன, தம்பதிகளுக்கு" என்றும் வாழ்வினர். கோதமர்

"முக்கணான் அனைய ஆற்றல் முனிவர்" தவமும், நிஷ்டையும் கைரவப் பெற்றவர்" சாபம் இடவும் சாபம் நீக்கவும் நல்லவர். அவர் உருவத்தை தாங்கி வந்த இந்திரனோ அமரர்களின் தலைவன்; அமிழ்தம் உண்பவன்; அதனால் சாவை வென்றவன். தன் அளப்பரிய ஆற்றலால் சித்திகள் புரிபவள். இவர் தம் வாழ்வில் கோட்பாடுகள் மனித வாழ்வில் உள்ளது போன்று அமைவதில்லை.

கோதமர் "அகலிகை கல்லாகட்டும்" எனச் சபிக்க, இராமன் வரவால் கற்சிலை மீண்டும் அகலிகை ஆகின்றது. கோதமர் அவளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்த போதுங் கூட, இந்திரன் செய்த பங்கை அகலிகையால் மறக்க முடியவில்ல. "அகலிகைக்குப் பயம் நெஞ்சில் உறையேறிவிட்டது. வாழ்வே அவளுக்கு நரக வேதனையாயிற்று" எனப் புதுமைப்பித்தன் அகலிகையின் மனநிலையை வடித்துக் காட்டுகிறார்.

சரயூ நதிக்கரையின் குடிலமைத்து வாழத் தொடங்கும் அகலிகை சீதையைச் சந்திக்கின்றாள். சீதை கூறிய அக்கினிப் பிரவேசச் செய்தி கொடுமையாக அகலிகைக்குப் படுகிறது. இராமர் 'இராமன்' ஆகிறார். தன் வரலாறு சீதை வரலாறும் ஆடவர் பெண்டிர்க்கு இழைக்கும் பெருங்கொடுமையாகப்படுகிறது. அவளுக்கு அவருள்ளத்தில் 'நம்பிக்கை' அடியோடு வறண்டு விடுகிறது. சீதையிடம் உள்ளத்துக்குத் தெரிந்தால் போதாதா?

உண்மையை உலகுக்கு நிரூபிக்க முடியுமா? நிரூபித்துவிட்டால் மட்டும் அது உண்மையாகி விடப் போகிறதா? உள்ளத்தைத் தொடவில்லையானால்? நிற்கட்டும் உலகம் எது, எனச் சீற்றத்துடன் அகலிகை கேட்டது அவள் நெஞ்சத் துணிவையும், உள்ளத் தெளிவையும் ஒருங்கே புலப்படுத்துகின்றன. நெஞ்சுரத்துடன் திகழும், நெஞ்சில் பிழையற்றவளான அகலிகை, அயலார் அறியாது தன்னைப் பற்றிப் பேசும் பழிச் சொற்களுக்கு நாணுகிறான். கோதமன் அவளை நாடி வந்து தழுவ, அவளே மீண்டும் கல்லாகி விடுகிறாள்.

"தவபலங் கொண்ட கோதமன் சாபத் தீயை எழுப்பிய கோபமோ தன்னை மாசுபடுத்தி விட்டதே" என எண்ணிப் புழுங்குகின்றான். அகலிகை மீது பரிபூரண நம்பிக்கை கொண்ட கோமனாகவே கதையின் முதலிலிருந்து முடிவு வரை வருகின்றான்.

## பால்வண்ணம் பிள்ளை

### கதைச் சுருக்கம்

பால்வண்ணம் பிள்ளை கலெக்டர் ஆபீஸ் குமாஸ்தாவாக வேலை பார்ப்பவர். அவருடைய வாழ்க்கையே தஸ்தாவேஜிக் கட்டுகளாகவும் அதன் இயக்கமும் இருந்து வந்தது. சித்த உறுதி, கொள்கையை விடாமை ஆகியன அவரது தனிப்பட்ட இயல்புகளாய் அமைந்திருந்தன. ஆபிஸில் பசுவாகத் திகழும் அவர், வீட்டிலோ ஹிட்லரைப் போன்று ஆதிக்கமுடையவர்.

நான்கு குழந்தைகளுக்குத் தாயார் அவர் மனைவி, தாய்மைக்கே உரிண பரிவுடன் குழந்தைகளின் நலத்தை முன்னிட்டுப் பசும்பால் விலைக்கு வாங்குவதைவிட, ஒரு பசுமாட்டை வாங்கினால் வீட்டுத் தேவையையும் தீர்த்துக்கொண்டு, பால் வியாபாரமும் செய்யலாமென எண்ணுகிறாள். தன் எண்ணத்தைக் கணவரிடம் சொல்ல, அவரோ ஆபிஸ் விவசாரத்தினால் மனைவி கூறியதை மனதில் கொள்வில்லை. ஆனால் மனைவியோ தன் கையில் கடைந்த இரண்டு கெட்டிக் காப்புகளை விற்று மயிலைப் பசுவொன்றைக் கன்றுகுட்டியுடன் வாங்கி விடுகிறாள்.

தன்னை மீறித் தன் மனைவி பசுமாடு வாங்கிறது பிள்ளைக்குப் பிடிக்கவில்லை. முற்றத்தில் கட்டப்பட்ட மாட்டைக் கண்டு முகம் சுளிக்கிறார். புதுப்பாலில் காப்பி போட்ட மனைவி அவரைத் தேடிய போது அவர் அங்கு இல்லை. அன்றிலிருந்து பிள்ளையவர்கள் வீட்டில் காப்பியும் மோரும் சாப்பிடுவதில்லை. அவர் மனைவிக்கு மிகுந்த வருத்தம். ஒரு பக்கம் குழந்தைகள், மற்றொரு பக்கம் புருஷன். குழந்தை வம்சவிருத்தை என்ற இயற்கை வீதி அவளை வெல்கிறது.

பதினைந்து நாட்கள் இங்ஙனம் கழிய, அன்று இரவு எட்டு மணிக்குச் சுப்புக் கோனாரை அழைத்துப் பசுவை முப்பது ரூபாய்க்கு விலைபேசி, இரவிலேயே ஓட்டிச் சென்றுவிடுமாறு கூறினார். மனைவி "பசுவின் விலை எழுபது ரூபாய்", மேலும் குழந்தைகளுக்குப் பாலாயிற்றே என்று கூறித் தடுக்க; "என் பிள்ளைகள் நீத்தண்ணி குடிச்சு வளர்ந்துக்கிடும்" என்று அவளை அடக்கும் பிள்ளை, கன்றுக்குட்டிக்காக அழும் மூத்த மகனை "சும்மா கெட சவமே" என்று அதட்டி அடக்குகிறார்.

## கருப்பொருள்

பால்வண்ணம் பிள்ளை என்பவரின் அகப்புற நிலைகளைத் துல்லியமாகக் காட்டும் இக்கதை ஆண்மகனின் தன்முனைப்பு (Ego) நிலையைப் படிப்பவர்க்கு உணர்த்தி நிற்கிறது. அலுவலகத்தில் பயமும், அதனால் பணிவும் கொண்டு வாழும் ஆண்மகன் வீட்டில் அவன் மனைவியை அடக்கவும், குழந்தைகளை அதட்டவும் செய்கிறான். ஆபீஸில் பசுவாகத் திகழும் அவன் ஹிட்லராகச் சர்வதிகாரம் புரிகின்றான் என்பதே இக்கதை உணர்த்தும் கருப்பொருளாகும்.

## பாத்திர படைப்பு

படைவீரனுக்கு வேண்டிய சித்த உறுதியையும் கொள்கைப் பிடிப்பையும் கொண்ட பால்வண்ணம் பிள்ளை கலெக்டர் குமாஸ்தாவகத் தொழில் புரிபவர். அவரது இயல்புகள் அவருக்கு அசட்டுத்தனமான பிடிவாதம் கொண்டவர் என்று மற்றவர்களிடம் பெயர் வாங்கித் தந்தன என்று ஆசிரியர் கூறும்போது "பால்வண்ணம் பிள்ளையின்" பாத்திரப் படைப்பின் யதார்த்தத் தன்மை புரிகிறது.

"பால்வண்ணம் பிள்ளை" ஆபீஸில் பசு. வீட்டிலோ ஹிட்லர் என்ற வரிகள் அவரது சர்வதிகார மன்பாபன்மையினைக் கோடிட்டுக் காட்டுகின்றன. கர்ப்பத் தடையில் நம்பிக்கையற்ற அவருக்கு நான்கு குழந்தைகள் என்று ஆசிரியர் கூறுவது அவர் பழமை மீது பற்றுக் கொண்டவர் என்பதைத் தெளிவுறுத்துகிறது. மனைவி குழந்தை நலனை மனதில் கொள்ள, இவரோ தன் கோபமான மனநிலையில் அதை ஏற்றுக் கொள்ளாமல், "எம்புள்ளையே நீத்தண்ணி குடிச்சி வளரும்" என்று பதிலுரைக்கிறார். தன்னை மதிக்காமல் மனைவி பசுவை வாங்கி விட்டாளென்றறிந்த பின், காப்பியும், மோரும் சாப்பிடாத அவர் மனப்பாங்கு அவரது "தான்" என்ற உணர்வை வெட்ட வெளிச்சமாக்குகின்றது. பாதி விலைக்கும் குறைவாகப் பசுவை விலைபேசி, இரவோடு இரவாக அதை அவிழ்த்துச் செல்லும்படி கூறுவது, "ஆண்வர்க்கத்தின் பிரதிநிதி" யாக அவர் செல்படுவதைச் சித்தரிக்கிறது.

அவரைப் பொறுத்தவரை "அவர் தாம் எல்லாம்" மனைவி, மக்கள் அனைவரும் "சும்மா கிடக்க வேண்டிய சவங்கள்".

## கயிற்றரவு

புதுமைப்பித்தன் கதைகளில் புதுமை வாய்ந்தது கயிற்றரவு என்னும் கதை. பலரும் இக்கதையைப் பாரட்டியுள்ளார். தம் அறிவு முதிர்ந்த பருவத்தில் புதுமைப்பித்தன் இக்கதையை எழுதியுள்ளார். இதுவே அவர் எழுதிய கடைசிக் கதையாக இருத்தல் கூடும் என்று கருத்து நிலவுகிறது.

இது கட்டுரை வடிவில் அமைந்துள்ளதால், கதைச் சுவையை எதிர்ப்பார்க்க முடியவில்லை. இந்தக் கதையும் கூட ஒரு கயிற்றரவாகத் தென்படுகிறது.

வாழ்க்கையின் தத்துவத்திற்குப் புதுமைப்பித்தன் தந்த உருவமே கயிற்றவு எனலாம். வாழ்க்கையின் நோக்கம் என்ன? அதைச் சராசரி மனிதன் அறிந்த கொள்கிறானா? அறிந்து கெண்டபின் அவனால் வாழ்க்கையை உருவாக்க முடிகிறதா? என்ற கேள்விகளுக்கு ஆராய்ச்சிப் போக்கில் விடை காண முயற்சி செய்கிறது கயிற்றரவு.

"கள்ளிப் பட்டியானால் என்ன? நாகரிக விலாசமிருந்தோங்கும் கைலாசபுரம் ஆனால் என்ன? கங்கையின் வெள்ளம் போல காலம் என்ற ஜீவநதி இடைவிடாமல் ஓடிக் கொண்டிருக்கிறது" எனத் தொடங்கும் இக்கதை "காலத்தின்" ஓட்டத்தையே மையப் பொருளாகக் கொண்டுள்ளது.

நெல்லை மாவட்டத்திலுள்ள சிற்றூரான கைலாசபுரத்தில் வாழும் பரமசிவம் பிள்ளை தம் நினைவுகளினுடை பின்னோக்கிச் சென்று, அண்டங்களின் இயல்புகளையும், இயக்கங்களையும் ஆராய்கிறார். சிற்றூரின் ஓட்டத்திலும், மருத மரத்தின் தோற்றத்திலும் பனைவிடலியின் மறைவிலும் மாயப் பிரபஞ்சத்தின் தன்மை இணைந்து கிடக்கும் அதிசயத்தைக் கண்டு வியப்படைகிறார்.

பரமசிவம் பிள்ளையைப் போன்று இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் உலகில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து இன்பதுன்பமுற்றுத் தளர்ந்து மறைகின்றனர். அவர்களைப் போன்றே பனைமரங்களும், மருத மரங்களும் தோன்றி மறைகின்றன. கால வெள்ளம் தேங்கிநல்லாது ஓடிக்கொண்டே இருக்கிறது. மனிதன் இருக்கும் வரைத்தான் காலமும், அது அற்றுப் போனால் காலமும் அற்றுப் போகும்" என்ற கருத்தை, "காலம் ஒரு கயிற்றரவு" என்னும் தத்துவத்தை விளக்கப் பரமசிவம் பிள்ளை பாத்திரமும். "கயிற்றரவு புதுமைப்பித்தனால் படைக்கப்பட்டுள்ளன.

## உபதேசம்

### கதைச்சுருக்கம்

மேலை நாட்டு மருத்துவம் படித்துப் பல சர்வகலா சாலைகளின் பட்டங்களைப் பெயருக்கும் பின்னால் ஏற்றுக் கொண்டுள்ள விசுவநாத் ரண சிகிச்சை நிபுணர், டாக்டர் வில்க்கின்ஸன் இவர் சகா. இருவரும் நாஸ்திர்களாதலால் நிற்பதேங்கடந்து நண்பர்களாய் இருந்தனர். ஒரு நாள் ஹடயோகி ஒருவன் இவர்களிடம் சிகிச்சை பெற வருகிறான். இருவரும் அவன் திறமையை, விஷயத்தையும், கண்ணாடிச் சில்லுகளையும் தின்றும் கூட சாகாத இயல்பினை நேரில் ஏற்னவே கண்டவர்கள். எனவே ஹடயோகியின் வயிற்றின் உட்புறம் எப்படியிருக்கிறது என்பதைப் பார்க்கும் ஆர்வத்துடன் அறுவை சிகிச்சையைத் தொடங்குகின்றனர். குடல் சதையின் கண்ணாடிச் சில்லொன்று குத்தி, குடலின் ஒரு பகுதி அழுகி விட்டதை அறிந்து அறுவை சிகிச்சை செய்கின்றனர்.

மறுநாள் காலையில் சிகிச்சை செய்யப்பட்ட ஹடயோகி ஆஸ்பத்திரியை விட்டுக் காணாமல் போய்விடுகிறார். அதைவிட அதர்ச்சி தரத்தக்க செய்தி நேற்று வரை நாஸ்திகம் பேசி வந்த டாக்டர் விசுவநாத் காஷாயம் வாங்கி கட்டி கொண்டு துறவியாகி விட்டாரென்பது வில்க்கின்ஸன் நேரில் பார்ப்பதற்காக விசுவநாத்தைத் தாண்டி ஓடுகிறார். அவர் வீட்டில், 'தலை மொட்டை'; இடையில் ஒரு காவி வேஷ்டி காலில் குப்பிப் பூண்பாதக் குறடு" என்ற நிலையில் விசுவநாத்தைக் காண்கிறார்.

ஐந்து வருடங்கள் கழிந்த பின் இமயமலைக்குச் செல்லும் பாதை பாத யாத்திரைக் குழுவில் விலக்கின்ஸன் இணைந்து உரைபனிப் பாலைவனத்தின் வழியே செல்லும் போது, பனிச் சிகரத்தின் மேலே ஹடயோகி (சித்தாந்தச் சாமியார்) யின் அடையாளங்களுடன் ஒருவர் நிற்பதைக் காண்கிறார். அவனைப் பார்க்க வேண்டும் என்ற வெறியுடன் பாதாளங்களையும் ஒரே தாவாகத் தாவி பனிப்பாறைகள் நடுவே நுழைந்து செல்கிறார். அவருடன் அக்குழுவில் உள்ள ஜேக் என்பவரும் வருகிறார். இருவரும் பனிக்கட்டிக் கிடையில் செங்குத்தாகக் கருங்கல் லிங்கம் போல் செதுக்கியிருந்த ஒன்றையும், அதன் தலையில் காஷாய வஸ்திய மூட்டையையும் காண்கின்றனர். மூட்டைக்குள் உள்ள டைரியில் வில்க்கின்ஸனுக்கு எழுதப்பட்ட ஒரு கடிதம் இருக்கிறது. பனிக் கட்டிக்குள் இருக்கும் மனித

உருவம் டாக்டர் விஸ்வநாத் என்றிருந்தது. வில்க்கின்ஸன் அவரை இறந்தவராகக் குனிந்து வணங்கி விட்டு, மூட்டையாய் பழையப்படி கட்டி வைத்து விட்டுத் திரும்புகிறார்.

## கருப்பொருள்

அறிவியல் வல்லுநர்களும், ஆன்மீக வல்லுநர்களும் இறைவனைக் காணும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். அறிவியல் வல்லுநர்கள் ஒரு காலக் கட்டத்தில் மனிதனே சகலமும் என்ற முடிவுக்கு வந்த நாஸ்திகர்களாகின்றனர். ஆன்மீகவாதிகளோ காலம் முழுவதையும் செலவு செய்து தேடிக்கொண்டே இருக்கின்றனர். அத்தேடலில் தங்களையே கரைத்துக் கொள்ளவும் தயாராக உள்ளனர். இச்சமூகம் அவர்களைப் பைத்தியம் என்று எள்ளிப் நகையாடினாலும் அவர்கள் அதற்காக வருந்துவதில்லை என்பதே இக்கதையின் கருப்பொருளாகும்.

## பாத்திரப் படைப்பு

இக்கதையில் டாக்டர் விஸ்வநாத், டாக்டர் வில்க்கின்ஸன், சித்தாந்த சாமியாராகிய ஜேக் ஆர்பர்டஸன் ஆகிய நான்கு பாத்தீரங்கள் இடம் பெற்றுள்ளன.

இவர்களுள் ‘விஸ்வநாத்’ தை மையமாக்கியே கதை சொல்கிறது. மருத்துவத் துறையில் உலகப் புகழ் பெற்ற விஸ்வநாத் நாஸ்திகர். யமனோடு போராடும் நோயாளிகளைத் தம் சிகிச்சையால் மீட்டுவரும் திறமை வாய்ந்தவர். சித்தாந்தச் சாமீயாருக்குச் சிகிச்சை அளித்தவுடன் அவர் வாழ்வில் ஒரு திருப்பம் ஏற்படுகிறது. தாம் வாழ்ந்த வாழ்க்கையை உதறியெறிந்து விட்டு, காவியுடை அணிந்து சாமியாராகி விடுகிறார். அவர் தம் நண்பரான வில்க்கின்ஸனிடம், ‘இனி ஒரு புதிய பரிசீலனை, எனது சித்தாந்தம் ஒரு முடிவு கட்டப்படவில்லை. பரிசீலனை செய்தது தான் பார்க்க வேண்டும்” என்றுரைப்பது. மற்றவர்களைப் பரிசோதனைக்குட் படுத்தும் மருத்துவரான அவர், தம்மைத் தாமே சோதனைக்குட் படுத்துகிறார். அச்சோதனையின் விளைவாகத் தியானத்தில் ஆழ்ந்து விடுகிறார். நண்பன் அங்கு வருவான் என்ற நம்பிக்கையில் அவனுக்கு, “நான் சாகவில்லை”. நமது உயிர் சாஸ்திரங்களைக் கிழித்தெறிந்துவிட்டு வேறு மாதிரி’ யாக எழுத வேண்டும். அஸ்திவாரமே தப்பு” என்று தாம் கண்ட உண்மையை எழுதி வைக்கிறார். விஸ்வநாத்தின் உண்மையைக் கண்டறிய முனையும் ஆர்வத்தையே அவரது கடிதம் காட்டுகிறது.

இக்கதையில் வரும் வில்க்கின்ஸன் நாத்திகம் பேசுபவர் மட்டுமல்லர். விஸ்வநாத் மீது அவநம்பிக்கை கொண்டவரும் கூட, அதனால் தான், பத்மாசானம் போட்டு தியானம் செய்யும் விஸ்வநாத் உயிருடன் இருக்கிறார் என்பதை நம்பாமல், கடிதத்தை வூட்டை கட்டித் திரும்ப வைத்துவிட்டு வந்த வழியே செல்லுகிறார். சித்தாந்தபச் சாமியாரின் கொள்கைகளை அடியொற்றித், தாமே அதைக் கண்டறிய முற்படும் விஸ்வநாத்தும்,

சாமியாரை முதலிலிருந்து முடிவுவரை நம்பாமல் அலட்சியப்படுத்தும் வில்க்கின்ஸனும் மொழியால், இனத்தால் கொள்கையால் முரண்பட்ட பாத்திரங்கள்.

## ஞானக்குகை

### கதைச்சுருக்கம்

மதுரைச் சீமையிலே, குறுமலைக்கு அடுத்த சிற்றூரின் தலைமைக் காரத் தேவரின் மகன் ஒரு ஆசட்டுப் பிள்ளை, பத்து வயதாகியும் அம்மா அப்பா என்ற இரண்டு சொற்களையும் தவிர, அவனுக்கு வேறேதுவும் சொல்ல வராது. அவன் பிறந்தவுடனே அவனுடைய தாயார் இறந்துவிட்டதால், சித்தியாக வந்த பெண் அவன் மீது அன்புடன் நடந்து கொள்ளாததால், தாயன்பு என்றால் இன்னதென்று தெரியாதவனாகவே வளர்ந்து வளர்ந்து வருகிறான்.

அவன் நிலை கண்டு கவலையுற்ற அவன் தந்தை, அவனைப் பள்ளிக்குக் கூட்டிச் செல்ல, அங்குள்ள ஆசிரியரோ அவனை மாடு மேய்ப்பதற்கு மற்ற பிள்ளைகளுடன் அனுப்புமாறு கூறுகிறார். மாடுமேய்க்கச் சென்ற இடத்தில், அங்குள்ள பறவைகளும், வண்டுகளும் அவன் கவனத்தைக் கவர வீட்டிற்குத் திரும்புவதையே அவன் வெறுக்கத் தொடங்கினான். அவன் மனதை மாற்றுவதற்காகத் தந்தை அவனுக்கு ஏழை பெண்ணான "கருப்பாயி" யைத் திருமணம் செய்து வைக்கிறார். பதினைந்து வயதில் அவன் திருமணம் நடைபெற அதன்பின் அவன் "கருப்பாயி" என்ற வார்த்தையையும் சொல்லத் தொடங்குகிறான்.

ஒரு நாள் மாடுமேய்க்கச் சென்றவனுக்கு, உச்சி வெய்யிற் பொழுதில் தாகம் அதிகரிக்க, குறுமலையில் உள்ள சுனையிலே தண்ணீர் கடிக்கச் செல்கிறான். இருண்ட குகைக்குள் சென்று, தண்ணீரைக் குடித்த அவன், நீால் நீந்திக் குளித்துவிட்டுத் தனியாக அமர்ந்திருந்தவன் முன்பு ஒரு வெளிச்சம் தோன்றி, இனிமையான நறுமணத்துடன் முன்நோக்கி வர ஆரம்பித்தது. குகையின் உள்மூலையில் ஒரு உருவம் அசைவுடன் வர, அவ்வுருவத்தை தன் குழந்தை முகம் அசட்டு பையனை ஈர்த்தது. "வா" என அசட்டுப் பையனை அழைத்துக் கொண்டு உள்ளே சென்ற உருவம் "தேவியைப் பார்" என்று கூறி அறிவுப் பிழம்பை அவனுக்குக் காட்டிற்று. ஆனால் அசட்டுப் பையனுக்கோ அவ்வொளிப் பிழம்பு ஆசையைத் தூண்ட "கருப்பாயி" என்று அவன் வாய் கூவ, ஒரு பேரிடி எங்கிருந்தோ விழுந்து அசட்டுப் பையனைச் சுருக்கி விடுகிறது.

### கருப்பொருள்

அறிவற்ற நிலையில் உள்ள ஒரு மனிதன் அறிவுப் பிழம்பாக ஒளி வடிவைக் கண்ணுற்றால் அதனுற் தானும் கரைந்திடுவான். "கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்"; என்பதற்கேற்பத் தான் கண்ட சக்தி வடிவத்தைப் பற்றிக் கூறு முன்னரே தேவரின் மகன் மாண்டுவிடுகிறான்.

## கதைமாந்தர்

இக்கதையின் தலைமைப் பாத்திரமாக வருகின்றவன் தேவரின் குழந்தையான அசட்டுப் பையன். அவன் ஓர் அதிசயப் பிறவி, பிறந்து பத்து வருஷங்கள் வரை ஊமையாகவே இருந்தான். மன்மதரூபனாக இருந்து என்ன பயன்? என்று அவனை அறிமுகப்படுத்துகிறார் ஆசிரியர். அவனுடை தந்தை, வாத்தியார், நண்பர்கள், குகையினுள்ளிருந்து வந்த உருவம் ஆகிய அனைவரும் அவனைப் பேசவைக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். மற்றவர்களைவிடக் குகை உருவம் அவனை அழைத்துச் சென்று "ஒளிப்பிழம்பை" காட்ட அவன் அதிசயிக்கின்றான். மீண்டும் இருளுக்கு வரத் தேவியைக் காணும் அவன் முகத்தில் மருட்சி. தேவியின் தரிசனம் அவனது அறிவைத் தூண்டவில்லை. மாறாக உணர்வுகளைத் தூண்டிற்று. தன் மனைவியின் பெயரை அவன் உச்சரிக்க, அவனைப் பேரிடி தாக்கி அழிக்கிறது. அவன் குகையினுள் பெறும் புதிய அனுபவங்கள் அவனைப் புதியவனாக மாற்றப் போகும் நிலையில் அவன் கருகிவிடுகிறான்.

அவனைத் தவிர, கதையில் இடம் பெறும் அவன் தந்தை, பள்ளிகூட வாத்தியார், குகையிலிருந்து வரும் தவ உருவம் ஆகியவை மிகச் சிறிறய பங்கினையே இக்கதையில் பெறுகின்றனர்.

# அன்றிரவு

## கதைச்சுருக்கம்

நான் மாட கூடலில் அன்றிரவு மூவர் உறங்கவில்லை. அவர்களுள் ஒருவன் சொக்கேசன்; அடுத்தவன் அரசன் - பாண்டிய அரசன். அவன் மனதில் அன்று பிற்பகலில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக வருகின்றன. அரசனிடம் குதிரை வாங்கப் பணம் வாங்கிய அமர்த்தியன் திருவாதவூரன். பணத்தை செலவழித்து விட்டுக் குதிரையின்றித் திரும்பியதற்குத் தண்டனையாகக் கசையடிகள் கொடுக்கப்பட்டன. ஆனால் பகல் முழுவதிலும் கால்கடுக்க நடுவெயிலில் நின்று கல்சுமந்து கசையடிப்பட்ட சோர்வு சிறிதுமின்றிப் பூத்து அலர்ந்த புன்சிரிப்போடு நிற்கின்றான் திருவாதவூரன். "குதிரை எங்கே" என்று அரசன் மட்டுமல்லன்; சபையிலுள்ள ஒவ்வொரு அரசு அதிகாரியும் வாதவூரனை விட, அவன் வாய் "குதிரைகள் குதிரைகள்" என முணுமுணுக்கிறது. திடீரென்று பத்து அக்குரோணிக் குதிரைகள், அத்தனையும் உயர்ந்த சாதிக் குதிரைகள் எங்கிருந்தோ ஓடிவருகின்றன. குதிரைகளை அதன் இருப்பிடத்தில் கட்டுகின்றனர்.

மன்னனின் மனக்குதீரைகள் நடுச்சாமத்தை உணர்த்தும் சங்கொல்யால் சட்டென ஓட்டத்தைவிட்டு நிற்கிறது. லாயத்தில் கட்டப்பட்ட குதிரைகளோ நரிகளைப்போல் ஊளையிடுகின்றன.

வாதவூரன் விலங்கிடப்பட்டான். வேதனையுற்றான். ஆலவாயானான சொக்கன் வேதனை சுமந்த கழுத்துடன் கர்ப்பக் கிருகத்திலிருந்து வெளிவருகின்றான். வாதவூரனின்

வேதனையைத் தானே சுமக்க எண்ணுகிறான். ஆனால் மதுரை மூதுரை அறிய முடியாதபடி எங்கும் வெள்ளம் சூழ்ந்துவிடுகிறது.

உழைத்து உழைத்துச் சோர்வடைகிறவர்களுக்குப் பிட்டு அவித்துத் தரும் கிழவி, தன் பங்குக்கு வெள்ள அணைப்பிற்கு மண்சுமக்க ஆளின்றித் தவிக்கின்றாள். ஈசன் பிட்டுவிற்கு கிழவியிடம் பேரம் பேசித், தான் மண் சுமப்பதாகவும் அவள் அவ்வேலைக்குக் கூலியாகப் பிட்டு தர வேண்டும் என்றும் கூறிவிட்டு மண் சுமக்கத் செல்கிறான். ஒரு சுமை மண் அவன் போடுகிறான். பாதி வெள்ளம் படக்கென வற்றுகிறது. அவன் உடனே பிட்டு உண்ண வந்து விடுகிறான். பிட்டின் ருசி அவனைப் பேரின்பத்தில் ஆழ்த்துகிறது. ஒரே ஓட்டமாக ஓடி, வேலையை விட்டுவிட்டு வெள்ளத்தில் குதித்து விளையாடத் தொடங்குகிறான்.

விடிகிறது மன்னன் வெள்ளத் தடுக்கப்பட்டதா என்பதை காணவரும் போதில் நீரில் கும்மாளவிடும் ஈசனைக் கண்டு சினமடைகிறான். தன் கையில் பொற்பிரம்பை எடுத்து ஈசனுக்கு ஓர் அடி கொடுக்கிறான். ஈசன் அசட்டுச் சிரிப்புடன் நீரில் பாய, அரசனும் உடன் நீரினுள் குதிக்கிறான்.

வெள்ளம் வற்றி விடுகிறது; ஈரச் சகதியிலே பாண்டி மன்னனின் உயிரற்ற உடல் கிடக்கிறது. அவன் கைக்குள் ஈசனுக்கு குதிரைகள் கொண்டதாக அவன் எழுதித் தந்த முறிசீட்டு இருக்கின்றது. அவனோ, மதுரை மூதூரின் கோயில் கர்ப்பக்கிருகத்திலேயே ஆலவாய் அம்மையின் மடியிலே சின்னஞ்சிறு சிசுவைப் போலக் கவலையின்றி அமாந்திருக்கின்றான்.

## கருப்பொருள்

அகலிகை வரலாற்றைப் பதிய கோலகமாகப் போட்டு 'சாபவிமோசனமாகக்' காட்டியது போன்ற திருவாசகர் வரலாற்றையம், புதுமைப்பித்தன் புதிய கோலம் போட்டுக் காட்டுகிறார். புராண மரபில் வழங்கிய அகலிகை வரலாற்றில் தம் சிந்தனைக்குப் பொருந்தாவற்றை மாற்றியமைத்தது போன்று, மாணிக்கவாசகர் வரலாற்றிலும் மாற்றி அமைக்கின்றனர். இருபத்தாறு பக்கங்களில் அடங்கிய இக்கதையில் ஆசிரியர் கூற்று, கதைமாந்தர் கூற்று, இடைவெட்டுக்கள், உரையாடல்கள் ஆகியன அமைந்துள்ளன. ஓரிரவில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகள் 'அன்றிரவு' கதையாக மலர்கின்றது. புதுமைப்பித்தன் இக்கதையில் புகுத்தியுள்ள ஒரு முக்கிய மாற்றம் வாதவூராரின் வேதனை குறித்ததேயாம். குதிரை வாங்கச் சென்றவன், வறிதே திரும்ப மன்னன் கொண்ட சினத்திற்கு ஆளாக நேரிடுகின்றது. தன் துயரை இறைவனிடம் வாதவூரார் முறையிடப் பரிசுகள் வருகின்றன. அன்னிரவு கதையில் தன் பொய்யை நிலைநாட்ட வந்த பரமனின் பேரன்பை எண்ணி வாதவூரார் அவ்வன்பிற்குத் தன் தகுதியின்மை குறித்து வேதனைப் படுவதாக அமைத்துள்ளார். புதுமைப்பித்தன் தன் அருள் நோக்கு வாதவூராரை மேலும்

துன்புறுத்துவதைக் கண்ட ஆலவாய்ச் சொக்கன் ‘தானும் அவர் துயரத்தைச் சுமக்க எண்ணிப் பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி படுகிறார்’. அடியவர் அன்புக்குக் கட்டப்பட்ட இறைவனின் பேருருளை ‘அன்றிரவு’ கதை புதிய கோணத்தில் உணர்த்தி நிற்கின்றது.

## பாத்திரப் படைப்பு

‘அன்றிரவில்’ வரும் வாதவூரர் தம் துயர் துடைக்கத் தெய்வத்திடம் முறையிடவில்லை. இறைவன் கருணையைத் தாங்கம் அளவிற்குத் தாம் தகுதியுடையவர்தானா என்ற கேள்வியே அவரை வேதனைப்படுத்துகிறது. இங்கே தன்னலமோ, தன் துயரமோ அவரது நோக்கமாக இல்லாதது குறிப்பிடத்தக்கது. இறைப்பணியில் ஈடுபட்ட அவர் உள்ளம் தண்டனையால் பெற்ற கசையடிகளை, கனல் தெறிக்கும் வெயிலை முறுவலுடன் ஏற்றுக் கொள்கிறது. ‘மெய்த் திருப்பம் மேவென்ற போதினும்’ இத் திருத் துறந்து ஏகென்ற போதினும்’ சித்திரச் செந்தாமரையாக மலர்ந்த இராமன் முகம் புதுமைப்பித்தனின் நினைவில் பளிச்சிட்டிருக்க வேண்டும். எனவேதான் வாதவூராரை ‘கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்’ எனும் அடியவர் பண்பிற்கேற்பப் படைத்துள்ளார்.

இக்கதையில் வரம் அரிமர்த்தன பாண்டிய மன்னன் மனதில் மாசற்றவன். குணக்குன்று, கோபத்தை அடக்கக் கற்றுக் கொண்டவன் என்ற நிலையிலேயே புதுமைப்பித்தனால் படைக்கப்படுகின்றான் என்னை எப்படியாவது நீதியின் ஆதிக்கத்திலிருந்து பாதுகாப்பிற்காக என்ன என்ன பாடுபட்டான் அரசன் என அவனால் தண்டிக்கப்படும் வாதவூரரே அவன் கருணையைப் போற்றுகிறார். இதனால்தான் கதையின் இறுதியில் வேந்தன் பரமனுக்குப் பிரம்படி கொடுத்தும் பரமனடி பெறுகின்றான்; அங்கயற்கண்ணியின் மடிமீது அமர்கின்ற பெரும்பேறு அடைகின்றான்.

‘சொக்கன்’ படைப்பைப் பொறுத்தவரை அவரை விளையாட்டுத் தன்மை மிக்கவராக, அடியவர் வேதனை கண்டு தாமும் வேதனைப் படுபவராகப் புதுமைப்பித்தன் படைக்கின்றார் எனலாம். அடியவர் வேதனையுறுவதைக் கண்டு கர்ப்பக்கிருகத்தினின்று வெளிப்பட்டு சொக்கன் பிட்டுக்கு மண் சுமக்கச் சென்றபோது நிகழ்த்திய விளையாட்டு விபரீதமாகி விடுகிறது.

‘அன்றிரவு’ என்ற இக்கதை உத்தியமைப்பிற்காகப் புதுமைப்பித்தன் செய்த சோதனை முயற்சியாக இருக்கக்கூடும் என்ற கருத்தைத் திறனாய்வாளர் கூறியுள்ளார்.

# வாடா மல்லிகை

## கதைச்சுருக்கம்

பதினேழு வயதிற்குள்ளே கணவனை இழந்த இளம் விதவை ஸஸைூ அவள் ஓர் உலாவும் கவிதை. பருவமோ இயற்கையின் பரிபூரணக் கிருபையில் மலரும் பருவம். அவள் ஓர் இந்துப்பெண். வாயில்லாப் பூச்சியூங்கூட மூன்று வருடங்கள் அவள் ஏக்கத்தைச் சுமந்தவாறே கழிகின்றன.

தம்பி துரைசாமியின் திருமண இரவன்று அவள் நினைவு பினோக்கிச் செல்ல தன் விதியை எண்ணித் தேம்பி அழுகிறாள். அவள் மேல் பரிதாபம் கொண்ட ஒருவன் 'நான் உன்னை மணம் செய்து கொள்கிறேன்' என்று ஆறுதல் கூறுகின்றான். ஆனால், அவளோ, போகத் கருவியாகத் தான் பயன்படவில்லை என்று பதில் கூறித் தான் வேண்டுவது பாசம் மட்டுமே என்கிறாள். அவனோ அவளைப் 'பரத்தை' எனக் கூறித் முடித்துவிட்டு வெளியேறி விடுகிறான். மறுநாள் அவன் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொள்கிறான்.

## கருப்பொருள்

விதவைப் பெண்ணைச் சமூகம் உரிமையிழந்தவளாய்க் கருதுவதும், உணர்வற்றவள் என அவளைப் புறக்கணிப்பதுமான கொடுமைகளைக் கூறுகிறது இக்கதை.

## பாத்திரப் படைப்பு

பெற்றோரையும், புருஷனையும், முன்னோரையும் நம்பி உயிர் வாழும் சராசரி இந்துப் பெண்களில் ஒருத்தி ஸரஸூ, பதினேழு வயதிலேயே வெள்ளை உடையை அவளுக்கு வழங்கிய சமூகத்தின் நடுவே அவள் சிரிக்கத்தான் செய்கிறாள். குதூகலமாகப் பேசத்தான் செய்கிறாள். ஆனால் அவள் கண்களிலே நிரந்தமான துயரமும், போக்க வழியில்லா துன்பமும் குடி கொண்டிருக்கின்றன. கட்டாயத்தின் கன்னிகையாகக் காலங்கழிக்க வேண்டிய கொடுமைக்கு அவள் ஆளாகி இருக்கிறாள். இயற்கையின் தேவையைப் பூர்த்தி செய்ய ஆண்மகன் ஒருவனின் பாசத்தை நாடும் ஸரஸூ திருணமத்தை விரும்பாத நிலையில் ஒரு புதிராகவே தென்படுகிறாள். அதனால்தான் அவளை 'வாடா மல்லிகை' என்கிறார் ஆசிரியர்.

# கருச்சிதைவு

## கதைச்சுருக்கம்

ஸ்ரீமான் சுந்தரம்பிள்ளை அச்சகம் ஒன்றில் வேலை பார்ப்பவர். மொழிபெயர்ப்புக் கலையில் வல்லவராகத் தம்மைக் கருதிக்கொண்டு அவர் மொழிபெயர்க்கும் அரசினர் அறிக்கைகள் பெரும்பாலும் குப்பைக் கூடைக்குத்தான் செல்வது வழக்கம். அவரிடம் பத்திரிகை ஆசிரியர் ஒருவர் கதை எழுதித் தரும்படி கேட்கிறார். இதோ எழுதித் தருகிறேன்

என்று சொல்லிவிட்டு, எதை எழுதுவது என்று தெரியாமல், எதை எதையோ கதை என்ற பெயரி எழுதுகிறார் சுந்தரம்பிள்ளை. பாதியிலேயே கதையை வாங்கிப் போவதற்கு வந்த பத்திரிகை ஆசிரியர் சுந்தரம்பிள்ளை எழுதிய கதையைப் படித்துவிட்டு இதை குப்பைக் கூடைக்குள் எறிந்து விடுகிறார் சுந்தரம்பிள்ளை. அவருடைய கதை பாதிலேயே சிதைந்து விடுகிறது.

### கருப்பொருள்

ஒவ்வொரு எழுத்தாளனும் தன் கதைக்குரிய கருவைப் பலகாலம் மனதில் தேக்கி வைத்து, அது உருக்கொண்ட பின்னரே கதையாக வெளியிடுகின்றனர். ஏறக்குறைய ஒரு குழந்தையைப் பெற்றெடுக்கும் தாயின் நிலையை ஒத்தே ஒரு எழுத்தாளனின் நிலையும் உள்ளது. அவன் நினைவில் போற்றி வைத்த கரு, உருவாகி கதைக்குரிய வடிவை முழுமையாகப் பெறாவிடின் அது குறைப்பிரசவமாகி விடும். இங்குச் சுந்தரம் பிள்ளை தம் கதைக்குரிய கருவைத் தம் சிந்தனை மூலம் ஒழுங்கு படுத்தாமல் சிதைத்து விடுகிறார் என்ற நிகழ்ச்சியை மையப் பொருளாக்கி இக்கதை எழுதப்பட்டிருக்கிறது எனலாம்.

### பாத்திரப் படைப்பு

நட்புலகில் நாம் சிந்திக்கின்ற எத்தனையோ மனிதர்களில் ஒருவராகவே காட்சி தரும் சுந்தரம் பிள்ளையின் ஒவ்வொரு அசைவையும் இக்கதை எழுத்தில் வடிக்கிறது. வெற்றிலை போடுவதை மகாவேள்வியாகக் கொண்டாடும் அவர் ‘எழுத்து’ என்பதையும் ஒரு வேள்வியாகக் கருதாமல், அலட்சியப்படுத்துகிறார். எனவே அவர் உள்ளத்தில் துளிர் விட்ட கலை. முளையிலேயே சிதைந்து விட, அவர் படைப்புத் திறன் காணாமல் போய்விடுகிறது.

## ஒருநாள் கழிந்தது

### கதைச்சுருக்கம்

முருகதாசர் ஒரு விளம்பரக் கம்பெனியில் பொருட்களுக்கு ஏற்ற முறையில் கற்பனைத் திறமையுடன், காவியமியற்றுவது போல் விளம்பரம் எழுதும் ஓர் எழுத்தாளர். மாதம் முப்பது ரூபாய் இதற்காக வருமானமாய்ப் பெறும் அவருக்கு ஒருநாள் கழிவது என்பது ஒரு யுகம் கழிவது போல என்பதை இக்கதை சித்திரிக்கின்றது. சென்னையில் ஒட்டுக் குடித்தனத்தில் அவர் வாழ்வது, கிழிந்த கோரைப்பாயை அவர் விரிப்பது. மனைவியுடனும், குழந்தையுடனும் பேசுவது ஆகிய நிகழ்ச்சிகள் அவரது வறுமை நிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. முருகதாசரைச் சந்திக்க அவர் நண்பர்களான சுந்தரமும், சுப்பிரமணிய பிள்ளையும் வருகின்றனர். சுப்பிரமணியத்திடம் மூன்று ரூபாய் கடனாக முருகதாசர் கேட்க, அவரோ தம்மிடம் ‘எட்டணா தான் இருக்கிறது’ என்று கூறி எட்டணாவைத் தருகிறார். அது கடைக்காரனுக்குக் கொடுப்பதற்கான கடனுக்காகும் என்று அவர் நினைக்க, அவருடைய

மனைவியோ மறுநாளைக்கான காப்பிப் பொடி வாங்குமாறு கூறுகிறாள். திங்கட்கிழமை கொடுப்பதற்காகச் சொன்ன கடைக்காரனுக்குத் திங்கட்கிழமை பார்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் காப்பிப் பொடி வாங்கச் செல்கிறார்.

## கருப்பொருள்

எழுத்தாளர் ஒருவரின் வறுமை நிலையைக் காட்ட, அவர் ஒருநாளைக் கழிக்கப்படும் பாடு நகைச்சுவை உணர்வுடன் கூறப்படுகிறது.

## பாத்திரப் படைப்பு

முருகதாசர், கமலம், குழந்தை அமலு, நண்பர்கள் சுப்பிரமணியம், சுந்தரம், ரிக்ஷாக்காரன், கடைக்காரன் உணர்வுடன் கூறப்படுகிறது.

முருகதாசரின் படைப்பும் அவரது குடும்பச் சூழ்நிலையும் மிக யதார்த்தமாகப் படைக்கப்பட்டுள்ளன. நகையும், அவலமும், ஒருங்கே தோன் முருகதாசரின் பாத்திர வார்ப்பு அமைந்துள்ளது. வானத்தை அளக்கும் கதைகளைக் கட்டுவதில் மிகவும் சமர்த்தவர், சாகா வரம் பெற்ற கதைகளும் எழுதுவார் என்று முருகதாசரின் திறமையைப் பற்றிக் குறிப்பிடும் ஆசிரியர், அவரது கற்பனைத் திறமை மாதம் முப்பது ரூபாய்க்கு ஒரு விளம்பரக் கம்பெனியிடம் குத்தகைக்கு ஆட்பட்டத்தை அவல உணர்வுடன் சுட்டிக் காட்டுகிறார்.

'பணம்' என்ற மூன்றெழுத்தில் தீவிர சிந்தனை செலுத்தும் முருகதாசரால் எத்தனையோ வித்தைகளைச் செய்து பார்த்தும், குடும்பத்தின் வரவு செலவுத் திட்டத்தைச் சமன் செய்யப் போதிய அளவு பணம் சம்பாதிக்க இயலவில்லை. ஒரு பெரிய நாவல் மட்டிலும் எழுதிவிட்டால், அது ஒரு பொன் காய்க்கும் மரமாகிவிடும் என்று அவர் நெஞ்சமுழுத்தத்துடன் நினைத்த காலங்களும் உண்டு. இப்பொழுது அது ஒரு நெடுந்தூர இலட்சியமாகவே அவருக்க மாறிவிட்டது.

முருகதாசரின் மனைவி கமலம் சராசரி குடும்பப் பெண்ணாகவே கதையில் இடம் பெறுகிறாள். வீட்டில் இல்லாத பொருளை வாங்கி வரச் சொல்லும்போது கணவனிடம் சிணுங்குவது அவருக்குப் பிரியமான அப்பளத்தை வாங்கிக் கணவர் மேல் உள்ள அன்பை வெளிப்படுத்துகிறது. செல்லமாக அவருடன் கோபித்துக் கொள்வது என்று மிக இயல்பாக படைக்கப்பட்டுள்ள பாத்திரமாக வருகிறார். 'சின்னக்குரங்கு' என்று கமலாவால் அழைக்கப்படும் குழந்தை அலமு படு சுட்டித்தனமான குழந்தையாக வருகிறது. தானும் எதிர்வீட்டுக் குழந்தையைப் போல் ரிக்ஷாவில் பள்ளிக்குப் போக வேண்டும் என்று தந்தையிடம் கேட்பதும், தந்தையின் நண்பர் வறுமையை உச்சஸ்தாயில் அறிவிப்பதும், அவர் மேல் உட்கார்ந்து கொஞ்சுவதும் இயல்பாக அமைந்துள்ளன. நண்பர்களாக வரும் இருவரும் கடைக்காரரும் முருகதாசரின் பாத்திரப்படைப்பை நாம் உணர்ந்து கொள்ளத் துணை நிற்கின்றனர்.

# பொன்னகரம்

## கதைச்சுருக்கம்

பொன்னகரத்தில் வசிக்கும் முருகேசன் குதிரை வண்டி ஓட்டிப் பிழைப்பவன். அவன் மனைவி அம்மாளு ஒரு மில்லில் வேலை பார்ப்பவள். முருகேசன், அம்மாளு இருவரையும் தவிர முருகேசனின் தாயார், தம்பி முருகேசனின் குதிரை ஆக ஐந்து பேர் கொண்ட குடும்பம் இவருடைய வருமானத்தில் வாழ்ந்து கொண்டிருந்தது. ஒருநாள் முருகேசன் நன்றாகக் குடித்துவிட்டு வண்டியோட்டக் கீழே விழுந்து ஊமையடி பட்டுவிடுகிறது. பேச்சு மூச்சின்றிப் படுத்துக் கிடக்கும் அவனுக்குப் பால் கஞ்சி வார்க்கப் போகிறாள்.

## கருப்பொருள்

பொன்னகரத்தைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? என்று தொடங்கும் இக்கதை. பெயரில் மட்டுமே பொன்னகரமாக விளங்குவதையும், அங்கு வாழ்பவர்கள் வறுமையில் வாடுவதையும் விளக்கும் இக்கதையில், வயிற்றுப் பசிக்காகத் தன்னையே விற்கும் ஒரு பெண்ணின் நிலை சித்திரிக்கப்படுகிறது. காலங்காலமாய் சமுதாயத்தில் பெண்களுக்கு வலியுறுத்தப்பட்டு வரும் கற்பு, பொன்னகரத்தில் முக்கால் ரூபாய்க்கு சிலை போவதை இக்கதை சுட்டிக் காட்டுகிறது. காலணா கையிலில்லாத வேளையில் கற்புங்கூட விற்பனைக்கு வந்துவிடும் என்பதே இக்கதையின் கரு. ‘என்னமோ கற்பு, கற்பு என்ற கதைக்கிறீர்களே? இதுதான் ஐயா, பொன்னகரம்!’ என்று கதை முடிவில் காணப்படும் வரிகள் இக்கூற்றிற்கு அரண் செய்கின்றன.

## பாத்திரப் படைப்பு

இக்கதையில் அம்மாளு, அவள் கணவன், முருகேசன் இருவர் தவிர, அம்மாளுவின் மேல் நெடுநாட்களாகக் கண் வைத்திருக்கும் சந்திரன் ஆக மொத்தம் மூன்று கதாபாத்திரங்கள் இடம் பெறுகின்றன.

கதையின் பெரும்பகுதி கதைகளை வருணையாக்கி விட்டதால், கதைமாந்தர்கள் பற்றிய விளக்கம் அதிகம் இடம் பெறவில்லை. முருகேசன் சாராயம் குடித்ததால் கீழே விழுந்து அடிபட்டுக் கொள்கிறான். அவன் பசி தீர்க்க என்ன செய்வது என்று பதைபதைக்கும் அம்மாளு, வேறு வழியின்றித் தன் மானத்திற்கு விலை பேசி முக்கால் ரூபாயை வாங்கி வருகிறாள். கணவனின் பசயிா? தன் மானமா? என்று சிக்கல் எழும்போது, முன்னதற்காகப் பின்னதை இழக்கத் துணிகிறாள் அவள்.

கழுத்தில் ஒரு கறுப்புச் கயிற்றைக் கட்டி கொண்டு, தொழுவில் மாடுகள் வாழ்வது போல், பொன்னகரத்தின் இருட்டுப் பகுதியில் வாழும் மனிதர்களிடையே தர்மங்கள் வேறு - அந்தத் தர்மங்களுக்கும் நியாயங்களுக்கும் ஏற்ப அம்மாளு நடந்து கொள்கிறாள். அவள் செய்தது சரியா? தவறா என விவாதிக்க விரும்பவில்லை ஆசிரியர்.

அவள் எங்ஙனம் நடந்து கொண்டாள் என்பதைக் கதையில் கூறிவிட்டு, ‘என்னமோ கற்பு. கற்பு என்ற கதைக்கிறீர்களே? இதுதான் ஐயா, பொன்னகரம்’ என்று புதுமைப்பித்தன் இக்கதையை முடிக்கும்போது, பொன்னகரத்தின் வறுமையான சூழலிலே ஒரு அம்மாள அல்ல அவளைப் போன்ற பலர் அங்கு உள்ளனர் என்பதை உய்த்துணர முடிகிறது. ‘கற்புடைய மங்கை கணவனைக் காப்பாற்றுவாள், அவன் நலம் பேணுவாள்’ என்பதற்கேற்ப அம்மாளும் தன் உடலை விற்றாவது அவன் பசி தீர்க்க முற்படுகிறாள்.

## நினைவுப்பாதை

### கதைச்சுருக்கம்

தன் மனைவி வள்ளியம்மை ஆச்சியைப் பறிகொடுத்து மேலச்சேவல் வைரவன் பிள்ளையின் நினைவில் வள்ளியம்மை ஆச்சியை அவள் பதினாறு வயதில் மணக்கோலத்துடன் நின்ற நிலை பளிச்சிடுகிறது. இன்றோ, தாயை இழந்த மகள்களும், மரணச் சடங்குகள் செய்யும் மகனும் கவலை ஏதுமின்றி, வள்ளியம்மை ஆச்சியை இரண்டாம் நாள் காலையிலேயே மறந்துவிட்டு நகையைப் பங்கு போட ரகசியமாகப் பேசிக்கொள்கின்றனர். வைரவன் பிள்ளைக்கு நடப்பு எரிச்சலூட்டுகிறது. வெறுப்பைத் தருகின்றது. அவர் மனதில் மூண்டெழும் வெறுப்பைப் பேரன் அருகிருப்பும், மனைவியின் நினைவும் மாற்றுகின்றன.

### கருப்பொருள்

வள்ளியம்மை ஆச்சியின் இறப்பைத் தொடர்ந்து இரண்டாம் நாள் சடங்கைச் செய் மயானத்திற்கு உறவினர் செல்ல அவர்களோடு கைத்தடியை ஊன்றிக் கொண்டு நடந்த வைரவம் பிள்ளையின் நினைவோ நினைவுப் பாதையில் பின்னோக்கிச் சென்று வள்ளியம்மை ஆச்சியின் மணக் கோலத்தைக் கண்டு களித்தது. மனிதனின் நினைவிற்கு வயது, நேரம் என்பவை எல்லாம் தடைகளாக, புறச் சூழ்நிலை எவ்வாறு அமைந்தாலும், அக உணர்வுகளை அசைபோடும் மனிதன் நினைவில் நிலைபெற்று விட்ட காட்சிகளைத் தன் நினைவுப் பாதை வழியாகச் சென்று அடிக்கடி காண முடியும் என்ற கருத்தே இக்கதையின் மையப் பொருளாக அமைகிறது.

### பாத்திரப் படைப்பு

அரை நூற்றாண்டுகளுக்கு மேல் வள்ளியம்மை ஆச்சியுடன் வாழ்ந்த வைரவன் பிள்ளைக்கு மனைவி உயிரோடு இருந்தவரை, அவள் அருமை தெரியவில்லை. அவளை இழந்த பின்னர். ஒருநாள் முடிவதற்குள் அவள் நினைவு அவரை வாட்டுகிறது. அவள் பிரிவினால் அவர் கவலை கொள்கிறார். தாயின் நகைக்காக வாதாடும் மகளும், கவலையின்றிச் சடங்கைச் செய்யும் மகனும் அவருக்கு யாதார்த்த உலகை நினைவூட்ட,

அவரோ தன் மனைவியைப் பார்க்க நினைவுப் பாதையளில் சென்று விடுகிறார். ஒருவர் மேல் ஒருவர் கொண்ட அன்பு அவர்களைப் பிரிந்த பின்னரே முழுமையாக வெளிப்படுத்துகிறது என்பதை வைரவன் பிள்ளை நிரூபிக்கிறார். 'அவர் மனது, அண்ட சராசரங்கள் எல்லாவற்றையும் பார்வையிட்டுவிட்டு, மறுபடியும் வள்ளியம்மையாச்சியின் கிடத்தப்பட்ட கற்பனைப் பிரவேசத்தின் மீது வந்து கவிகிறது' என்ற வரிகள் மனைவியின் நினைவினின்று மீளமுடியாத அவர் நிலையைத் தெளிவாகச் சித்திரிக்கின்றது.

## நியாயம்

### கதைச்சுருக்கம்

தேவ இரக்கம் நாடார் ஒரு மாஜிஸ்திரேட்டு. மதபக்தி உடையவர். நாள்தோறும் தம் சமய முறைப்படி பிரார்த்தனை செய்வது அவருடைய வழக்கம். ஓய்வு நாளில் கோயிலுக்குச் செல்வதும், அங்கு நடைபெறும் சமயப் பிரசங்கங்களைக் கேட்டு உருக்கமாக மன்றாடுவதும் அவருடைய வாழ்க்கை. பைபிளை மிகவும் மதித்துப் போற்றும் அவர், வண்டிக்காரன் ஒருவனை அவன் தகுதிக்கு மீறி 5 ரூபாய் அபராதம் கட்டும்படியோ ஒரு மாதம் காவலில் இருக்கும்படியோ தண்டிக்கிறார். வண்டிக்காரனோ அவரது கால்களைப் பிடித்து, மன்னித்துவிடுமாறு கெஞ்சுகிறான். ஆனால் அவர் படுக்கைக்கு போகுமுன் 'நாங்கள் எங்களுக்குக் கடன் பட்டவர்களுக்கு மன்னிக்கிறோமே' என்று ஜபம் செய்கிறார். அவருக்கு அந்த அஞ்ஞானி வண்டிக்காரனை ஞாபகமே இல்லை.

### கருப்பொருள்

இன்றைய மனிதர்களின் போலத்தனத்தை, முரண்பாடான கொள்கைகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது இக்கதை, தன்னை இறைவன் மன்னிப்பது போன்று, தான் மற்றவர்களை மன்னிக்க வேண்டும் என ஜெபம் கூறுகிறது. ஆனால் நடப்பில் அத்தகைய நிலையை நாம் காணவே முடியாது. பெரிய மனிதர்களின் வாழ்வில் கொள்கை ஒன்று, செயல் ஒன்றாக இருக்கும் என்பதை இக்கதையின் கருப்பொருளாக அமைகிறது.

## சிற்பியின் நரகம்

### கதைச்சுருக்கம்

எண்பது வயது நிறைந்த தொண்டு கிழவனான சாத்தன் ஒரு சிற்பி. அவன் வடிக்கும் சிலையின் ஒவ்வொரு வளைவிலும், ஒவ்வொரு அங்கத்திலும் உயிர்த்துடிப்பு ததும்பி வழியம், தன் கலையாற்றலால் சிலையொன்றை வடித்து, அதனைத் தன் நண்பர்களான பைலார்க்ஸ் என்ற யவனனுக்கும், பரதேசி ஒருவனுக்கும் காண்பிக்கிறான் சாத்தன். சிலையில் இறைவனைக் கண்டு, தன்னையும் மறியாமல் பாடி மகிழ்கிறான்

பரதேசி. சிலையின் கலைத்தன்மையைக் கண்டு மனம் மகிழ்கிறான் பைலார்க்ஸ். சிலையைப் பிரதிஷ்டை செய்கின்றனர். மக்கள் அதை ஒரு விழாவாகவே கொண்டாடி மகிழ்கின்றனர். சாத்தன் தன் இலட்சியம் நிறைவேறிய உணர்வுடன், வயதின் முதிர்ச்சியால், உடல் தளர்வுடன் ஓய்வு கொள்கிறான். ஓய்வின் இடையே அவன் காணும் கனவு அவனைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறது. அவன் நரக வேதனை எப்படியிருக்கும் என்பதை அந்தக் கணத்தில் அனுபவிக்கிறான். அவன் கண்ட கனவு அவனுக்கு மகிழ்ச்சியை தருவதற்குப் பதில் நிகழ்வை உணர்த்தி அவனுக்கு நரகத்தில் இருக்கும் உணர்வைத் தருகிறது.

## கருப்பொருள்

கதையில் சிற்பியாக வரும் சாத்தனின் கலையாற்றல் மக்களால் போற்றப்படவில்லை எனும் உண்மையையும், மக்கள் வறுமை இன்பத்தை எதிர்நோக்கியே இறைவனை (சிலைவடிவில்) வணங்குகின்றனர். இறையன்பினைப் பெறும் நோக்கிலல்ல எனும் உண்மையுமே இக்கதை உணர்த்தும் செய்திகளாக அமைந்து, கதையின் கருவை வாசகர்களுக்கு உணர்த்துகின்றன. படைப்பாளியின் மனநிறைவு அவன் படைப்புத் தன்மையைப் பிறர் உணர்ந்து போற்றுவதில்தான்; அங்ஙனம் நிகழாவிடின் அவன் இவ்வுலகிலேயே நரகத்தைக் காண நேரிடும். பிரம்மனைப் போன்ற சிருஷ்டித் தொழில் செய்யும் சாத்தன் செய்த சிலை மற்றவர்களுக்கு இறைவடிவமாகக் காட்சி தந்து, மோட்சம் செல்ல வழிபாட்டிற்குரியதாக இருந்தாலும் அவனைப் பொறுத்தவரை அது வேதனையைக் கிளறிற்று. எனவேதான் தான் வடித்த சிலையை, அதன் நோக்கம் நிறைவேறாத நிலையில் "உயிரற்ற மோட்சச் சிலையே! உன்னை உடைக்கிறேன் போடு! உடை! ஐயோ, தெய்வமே உடைய மாட்டாயா, உடைந்துவிடு! நீ உடைந்து போ! அல்லது உன் முழு என்னைக் கொல்லட்டும் அர்த்தமற்ற கூத்து" என்று கத்துகிறான்.

## பாத்திரப் படைப்பு

இக்கதையில் வரும் பரதேசி ஆத்திகன். சாத்தனால் செய்யப்பட்ட சிலையில் இறைத்தன்மையைக் கண்டு கைகூப்பி, மெய்மறந்து, இசைபாடி வணங்குகின்றான். யவனனாக வரும் பைலார்க் ஒரு நாத்திகன், சாத்தனின் சிலையில் உள்ள உயிர்த்துடிப்பு அவனை ஈர்க்கின்றது. அரசன் கட்டியுள்ள கோயிலுக்கு அதை அளிக்கப் போகிறான் என்று சாத்தன் கூறக் கேட்ட பைலார்க்ஸ் அது அசட்டுத்தன்மை என்றும், அரசனுடைய அந்தப்புரத்தில் இருந்தாலும் கூட அச்சிலைக்கு மதிப்பு உண்டு. உடைத்துத் துண்டாகக் குன்றின்மேல் எறிந்தாலும் கூட அந்தத் துண்டுகளுக்கு அர்த்தம் உண்டு எனக் கூறிச் சீற்றம் கொள்கிறான். சாத்தனின் கலைத்திறனை உணர்ந்தவனாய், "நீதான் சாதித்தாய்! நீ தான் பிரம்மா! உன் சாதனை அது. சிருஷ்டி! மயங்காதே! பயப்படாதே! நீதான் பிரம்மா! சிருஷ்டித் தெய்வம்" என்று சாத்தனைப் புகழ்கிறான். தன் சொற்களைச் சாத்தன் கேட்காத

நிலையில் கோபித்துக் கொண்டு வெளியேறுகிறான். கலையாற்றலை உணராத மக்கள் முன்னிலையில் சிலையை வைப்பதைவிட (கலைஞனின் நோக்கம் நிறைவேறக் கூடிய இடத்தில் அதை வைக்க முடியாவிட்டால்) உடைத்தெறிந்தாலும் பரவாயில்லை என்று பைலார்க்ஸின் அனல் தெறிக்கும் பேச்சு அவனை ஒரு பகுத்தறிவுவாதி என்பதை நமக்குக் காட்டுகின்றது.

சாத்தன் அபூர்வத் திறமை வாய்க்கப் பெற்ற சிற்பி, அவன் முதுமை அடைந்தாலும், அவனுள் இருந்த கலை முதுமை எய்தவில்லை. பைலார்க்ஸ் தன்னைப் பிரம்மாவுடன் ஒப்பிட்டுப் பேசும்போ, தன் அனுபவங்களை எடுத்துரைக்கின்றன. பைலார்க்ஸ் உனது பேச்சு, எனது பெருமையைச் சாந்தி செய்யலாம். நான் எத்தனை நாள் கஷ்டப்பட்டேன்? அது உணக்குத் தெரியுமா? நீ நேற்றுப் பிறந்தவன். கூத்து, அதில் எவ்வளவு அர்த்தம்! மனிதனுக்குத் தெரிந்ததெல்லாம், தெரிய வேண்டுவதெல்லாம் இந்தப் பிரபஞ்சமே. நீ நினைப்பது போல் வெறும் பார் வெளியன்று. அர்த்தமற்ற பேய்க் குழப்பமும் அன்று. தெய்வன் ஒன்று உண்டு. அதன் அர்த்தத்தை என் சிலை உணர்த்த முடிந்தது எனது பூர்வ ஜென்மப் பலன். இந்தக் கைகளால், பின்னாலிருந்து ஓர் அர்த்தமுள்ள வஸ்து தூண்டாவிட்டால் எதைச் சாதிக்க முடியும்? என்று கூறும்போது படைப்பாற்றலை இறைவன் தந்த வரம் என எண்ணும் அவனுடைய மனப்பாங்கு வெளிப்படுத்துகிறது. ஆனால் தன் படைப்பின் உட்பொருளை பிறர் உணர்ந்து கொள்ளவில்லையே என அவன் வருத்தம் கொள்வது கதை முடிவில் காட்டப்படுகிறது. எந்த தெய்வீகச் சிலை பிறருக்கு மோட்சத்திற்குச் செல்ல வழிபாட்டுப் பொருளாக இருந்ததோ, அதே சிலை அதைப்படைத்த சிற்பியான சாத்தனுக்கு, இந்த உலகிலேயே நரக வேதனையைத் தருகின்றது.

## காஞ்சனை

### கதைச்சுருக்கம்

மக்களிடையே பேய் பற்றி வழங்கும் நம்பிக்கைகளைக் கொண்டு புதுமைப்பித்தன் பல கதைகளைப் பின்னியிருக்கிறார். அவற்றுள் ஒன்று காஞ்சனை. மக்களின் பேய் பற்றிய நம்பிக்கைகளைக் கதையாக்குவது மட்டுந்தான் இங்கு அவருக்கு நோக்கமாக இருந்திருக்கிறது. அவற்றை ஒட்டியோ வெட்டியோ தன் கருத்தாக ஏதொன்றையும் அவர் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

எழுத்தாளர் ஒருவரின் இல்லத்தில் நள்ளிரவில் காற்றும், சுடுநாற்றமும் வீசுகின்றன. மறுநாள் காஞ்சனை என்னும் பிச்சைக்காரி வீட்டு வேலைக்காரியாகிறாள். அந்த வேலைக்காரி, எழுத்தாளர் பார்வையில் போரமாகக் காட்சியளிக்கிறான். மனைவி பார்வையில் மாசுமருவற்றவளாகக் காட்சி தருகிறாள். பகலில் ஒருவித வேறுபாடும் இன்றி, காஞ்சனை இயங்குகிறாள். இரண்டாம் நள்ளிரவில் எழுத்தாளர் படுத்துக் கிடக்கிறார். அப்போது அவர் மீது ஒரு மிருகம் கூறிய நகத்தோடு குந்தியிருக்கிறது. பின்னர் நடந்து

போனதாகப் பிரமை ஏற்படகிறது. அவர் விழித்து காஞ்சனை இருக்கிறாளா என்று பார்க்கிறார். ஆனால் அங்குக் காஞ்சனை இல்லை. மூன்றாம் நாள் இரவு மனைவி தூக்கத்தில் இருந்து வீறிட்டு அலறிக் கொண்டே எழுகிறாள். ஏதோ ஒன்று என் கழுத்தைக் கடித்து ரத்தத்தை உறிஞ்சின மாதிரி இருந்தது என்று முறையிடுகிறாள் அவள். அந்த நேரத்தில் தெருவில் சேமக்கலத்துடன் வரும் ஒருவன் எழுத்தாளருக்குத் திருநீறு தந்து 'மனைவியின் நெற்றியில் பூசுமாறு' கூறிவிட்டுக் காஞ்சனையைக் கூவியழைத்துப் போகிறான்.

## கருப்பொருள்

இக்கதையின் நோக்கம் என்ன? என கேள்விக்குப் புதுமைப்பித்தன் முன்னுழைரயிலே தம் கருத்தைக் கூறியுள்ளாள். பேயும் பிசாசும் இல்லை என்றுதான் நம்புகிறேன். ஆனால் பயமாக இருக்கிறதே என்பதை இது. அந்த பயத்தையே இக்கதையின் மையமாக்கி 'காஞ்சனை' யைப் படைத்துள்ளார் என்று தோன்றுகிறது.

## பாத்திரப் படைப்பு

எழுத்தாளன் ஒருவனே இக்கதையின் தலைமைப் பாத்திரமாக இடம் பெறுகிறான். அவனைத் தவிர அவன் மனைவி, வேலைக்காரி காஞ்சனை, இரவில் சேமக்கல ஒலி எழுப்பிக் கொண்டு வருபவன் என மூன்று பேர் கதை இடையே வருகின்றனர்.

புதுமைப்பித்தனுக்கு எழுத்தாளர்களைப் பற்றி மிக உயர்ந்த கருத்துக்கள் உண்டு. அக்கருத்தை இந்தக்கதையில் வரும் பாத்திரத்தின் வாயிலாகப் பெருமித உணர்வு பொங்கக் கூறுகிறார்.

"...எல்லாரையும் போலாத்தான் நானும், ஆனால் என்னுடைய தொழில் எல்லோருடையதும் போல் அல்ல, நான் கதை எழுதுகிறேன். அதாவது சரடுவிட்டு அதைச் சகிக்கும் பத்திரிகை ஸ்தாபனங்களிலிருந்து பிழைக்கிறவன். என்னுடையது அங்கீகரிக்கப்படும் பொய். இந்த மாதிரியாகப் பொய் சொல்லுகிறவர்களையே இரண்டாவது பிரம்மா என்பார்கள். இந்த நகல் பிரம்மா பரம்பரையில் நான் கடைக்குட்டி இதையெல்லாம் நினைக்கப் பெருமையாகத்தான் இருக்கிறது."

எழுத்தாளர் தம் பிரமையுணர்வையே கதையாக வடித்துள்ளார் என்ற உணர்வு கதையை முடிக்கும்போது படிப்பவர்களுக்கு தோன்றுகிறது.

# கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்

## கதைச்சுருக்கம்

மேலகரம் மே.கா.ரா.கந்தசாமிப் பிள்ளை அவர்கள் சென்னை மாநகரத்தில் வாழும் ஒரு சித்த வைத்தியர். அவர் முன்பு சிற்றம்பலத்துறையும் சிவபெருமான் திடீரெனத்

தோன்றுகிறார். இருவரும் ஓர் உணவு விடுதியில் காப்பி குடித்துவிட்டு ரிக்ஷாவில் ஏறி வீடு செல்கின்றனர். சிவனார் சித்துக்கள் சில புரிகிறார். தாமறிந்த கூத்துத் தொழிலை நடத்திக் கொண்டு இவ்வுலகிலேயே வாழ்க்கை நடத்த விரும்புகிறார். தேவியையும் பூலோகத்திற்கு வரவழைக்கிறார். ஒரு நாட்டிய சபாவின் தலைவர் வீட்.டிலே இருவரும் ஆடிக் காட்டுகின்றனர். பாராட்டுக்கள் கிடைக்கவில்லை மாறாக அவமானப்பட்டு அங்கிருந்து ஓடிவருகின்றனர். கடவுளுக்கு பூலோக வாழ்க்கை புளித்துவிட, வந்தவாறே மறைந்து விடுகிறார்.

## கருப்பொருள்

உலகியல்பு சாராதாவை பற்றிக் கதையெழுதும் போது புதுமைப்பித்தன் மனிதனுடைய போலித்தனங்களையும், அறியாமையையும், மூட நம்பிக்கைகளையும் சுட்டிக் காட்டிக் குத்திப் பேசுகிறார். வரம் தரும் தெய்வம் வருவதும் போவதும் தவிர, இக்கதையில் வேறொன்றும் இல்லை. ஆயினும் அதனைத் தமக்கேயுரிய நகைச்சுவை உணர்வோடு ஆசிரியர் எழுதியுள்ளவை இக்கதையின் சிறப்பாகம். காட்சியளிப்பது குறித்துப் பெரிய புராணம் போன்ற நூல்கள் ஏற்கனவே குறிப்பிடுகின்றன.

## பாத்திரப் படைப்பு

கந்தசாமிப் பிள்ளை, புதுமைப்பித்தனின் கதை மாந்தர் படைப்புத் திறனுக்குத் தக்க சான்றாகத் திகழ்கிறார். கருத்துக்கும் காட்சிக்கும் எட்டாத கடவுளை இக்கலியுகத்தில் நடமாறும் மனிதராக நம்மை இழுத்து வருவதே புதுமைப்பித்தன் கற்பனை ஆற்றலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு எனலாம்.

"மேலகரம் ராமசாமிப்பிள்ளையின் வாரிசுக்கு நாற்பத்தைந்து வயது; நாற்பத்தைந்து வருஷங்களாக அன்ன ஆகாரமில்லாமல் வளர்ந்தவர் போன்ற தேகக் கட்டு" என்று கந்தசாமிப்பிள்ளையின் புறத் தோற்றத்தை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தும் புதுமைப்பித்தன் கடவுளை வருணிக்கும் திறம் நயமுடையது. "வயசை நிர்ணமாகக் சொல்ல முடியவில்லை. அறுபது இருக்கலாம். அறுபதினாயிரமும் இருக்கலாம். ஆனால் அத்தனை வருஷம் சாப்பிட்டுக் கவலையே இல்லாமல் கொழு கொழு என்று வளர்ந்த மேனி வளப்பம்" என மங்கை பங்கர் மானிடராக வந்த தோற்றத்தை விளக்குகிறார். ஆண்டவனுக்கு ஆயுளும், வறுமையும் எது? இவற்றைச் சுட்டும் முறையிலே அமைந்துள்ளது இவ்வருணணை.

காப்பிக் கடையினரையும், கல்விக் கழகத்தினரையும் தம் குத்துப் பேச்சினால்கேலி செய்யும் கந்தசாமிப் பிள்ளையும், உலக நடைமுறையை ஒவ்வொன்றாகக் கேட்டு அறிந்து வியப்படையும் கடவும் பேசும்போது இடம் பெறும் உரையாடல்கள் அவர்கள் இருவரது பாத்திரங்களின் இயல்புகளைத் தெளிவுற உணர்த்துகின்றன. உங்களுக்கெல்லாம் எட்டி

நின்று வரங்கொடுக்கலாம்; உடனிருந்து வாழ முடியாது என்று கடவுள் உரைத்து விட்டு மறைகிறார் என்று தமக்கேயுரிய கிண்டலுடன் கதையை முடிக்கிறார் புதுமைப்பித்தன்.

## கதவு

## (கி.ராஜநாராயணன்)

கதவு ஆட்டம் ஆரம்பமாகியது. பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் ஆரவாரத்தோடு கலந்து கொண்டார்கள். "எல்லோரும் டிக்கட்டு வாங்கிக்கிடுங்க" என்றான் சீனிவாசன். உடனே "என்கொரு டிக்கட், உனக்கொரு டிக்கட்" என்று சத்தம் போட்டார்கள். "எந்த ஊருக்கு வேணும்? குழந்தைகள் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக் கொண்டார்கள். ஒருவன் "திருநெல்வேலிக்கு" என்று சொன்னான். "திருநெல்வேலிக்கு, திருநெல்வேலிக்கு" என்று கூப்பாடு போட்டுச் சொன்னார்கள் எல்லோரும்.

டிக்கட் கிழித்துக் கொடுத்து முடித்ததும், கதவில் பிடித்துத் தொத்திக் கொண்டார்கள். சிலர் கதவை முன்னும் பின்னும் ஆட்டினார்கள். தன்மீது ஏறி நிற்கும் அக்குழந்தைகளை, அந்த பாரமான பெரிய கதவு, பொங்கிப் பூரித்துப் போய் இருக்கும் அக்குழந்தைகளை, வேகமாக ஆடி மகிழ்வித்தது. "திருநெல்வேலி வந்தாச்சி" என்றான் சீனிவாசன் எல்லோரும் இறங்கினார்கள். கதவைத் தள்ளியவர்கள் டிக்கட் வாங்கிக் கொண்டார்கள். ஏறினவர்கள் தள்ளினார்கள்; மீண்டும் கதவாட்டம் தொடங்கியது.

அது பழைய காலத்துக் காரை வீடு, பெரிய ஒரே கதவாகப் போட்டிருந்தது. அதில் வசித்து வந்தவர்கள் முன்பு வசதி உள்ளவர்களாக வாழ்ந்தவர்கள். இப்பொழுது ரொம்பவும் நொடித்துப் போய் விட்டார்கள். அந்த வீட்டிலுள்ள பெண் குழந்தைகளில் மூத்ததற்கு எட்டு வயது இருக்கும்; இன்னொன்று கைக்குழந்தை. அம்மா காட்டுக்கு வேலை செய்யப் போய்விடுவாள். அப்பா மணிமுத்தாறில் கூலிவேலை செய்யப் போய்விட்டார். லட்சுமியும் சீனிவாசனும் கைக்குழந்தையை அம்மா காட்டிலிருந்து வரும்வரை வைத்துக் கொண்டு கதவோடு விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

ஒரு நாள் தெருவில் ஒரு தீப்பெட்டிப் படம் ஒன்றை லட்சுமி கண்டெடுத்தாள். படத்தில் ஒரு நாய் இருந்தது. லட்சுமி வீட்டுக்கு வந்தபோது சீனிவாசன் நாடியைக் கையில் தாங்கிக் கொண்டு வபாசல் படிக்கட்டில் உட்கார்ந்திருந்தான். லட்சுமி தூரத்தில் இருந்தவாறே படத்தைக் காண்பித்தாள். படத்தை மேலே தூக்கிப் பிடித்தாள். சீனிவாசன் அவளைச் சுற்றிச்சுற்றி வந்தான். சீனிவாசன் படத்தை வாங்கிப் பார்த்தான். சந்தோஷத்தினால் அவன் முகம் மலர்ந்தது. இரண்டு பேருமாகச் சேர்ந்து கதவில் ஒட்டினார்கள். படத்தைப் பார்த்து சந்தோஷத்தினால் கைதட்டிக் கொண்டு குதித்தார்கள்.

இதைக் கேட்டுப் பக்கத்துவீட்டிக் குழந்தைகளும் ஓடிவந்தன. மீண்டும் கதவு ஆட்டம் தொடங்கியது!

அந்தக் கதவைக் கொஞ்சம் கவனமாகப் பார்க்கிறவர்களுக்கு, இந்தக் குழந்தைகள் ஒட்டிய படத்துக்குச் சற்று மேலே இதே மாதிரி வேறு ஒரு படம் ஒன்றை ஒட்டி இருப்பது தெரியவரும். அந்தப் படம் ஒட்டி எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டதால், அழுக்கும் புகையும் பட்டு மங்கிப்போய் இருந்தது. ஒருவேளை அது லட்சுமியின் தகப்பனார் குழந்தையாக இருக்கும்போது ஒட்டியதாக இருக்கலாம். குழந்தைகள் இப்படி விளையாடிக் கொண்டிருக்கும் போது கிராமத்துத் தலையாரி அங்கே வந்தான்.

தீர்வையை வந்து போடச்சொல்லு என தலையாரி கூறிவிட்டு சென்றார். மறுநாள் தலையாரி, லட்சுமியின் அம்மா இருக்கும்போதே வந்து தீர்வைப் பாக்கியைக் கேட்டான். "ஐயா, அவரு ஊரிலே இல்லை. மணிமுத்தாறு போயி அஞ்சி மாசமாச்சி, ஒரு தகவலையும் காணோம். மூணு வருசமா மழை தண்ணி இல்லையே. நாங்க என்னத்தை வச்சு உங்களுக்குத் தீர்வைப் பாக்கியைக் கொடுப்போம் என்றாள். இந்த வார்த்தைகள் தலையாரியின் மனசைத் தொடவில்லை.

"நாங்கள் என்ன செய்ய முடியும்மா இதுக்கு; இந்த வருசம் எப்படியாவது கண்ப்பா தீர்வை போட்டறணும். அப்புறம் எங்க மேலே சடைச்சிப் புண்ணியம் இல்லை" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான். ஒரு நாள் காலை, வீட்டின் முன்னுள்ள மைதானத்தில் குழந்தைகள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். தலையாரி, நான்குபேர் சகிதம் வீட்டை நோக்கி வந்தான். வந்தவர்கள் அந்தக் கதவைத் தூக்கித் தூக்கிக் கழற்ற முயன்றார்கள்.

தலையாரியும் சேர்ந்து பிடித்து ஒருமாதிரி கழற்றி, நான்குபேரும் கதவைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு புறப்பட்டார்கள். கதவைத் தூக்கிக் கொண்டு செல்கிறவர்களின் பின்னே ஊர்வலமாக குழந்தைகள் புறப்பட்டார்கள். அவர்கள் வீட்டுக்குத் திரும்பி வரும்போது லட்சுமி வாசல் படியில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தாள். எல்லோரும் அரவம் செய்யாமல் அவளுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டனர். ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. சீனிவாசனும் முகத்தை வருத்தமாக வைத்துக்கொண்டான்.

கைக்குழந்தை அழும் குரல் கேட்கவே லட்சுமி உள்ளே திரும்பினாள். இதற்குள் சீனிவாசன் அக்குழந்தையை எடுத்துக் கொள்ளப் போனான். குழந்தையைத் தொட்டதும் கையைப் பின்னுக்கு இழுத்தான். அக்காவைப் பார்த்தான். லட்சுமியும் பார்த்தாள். குழந்தைக்கு உடம்பு சுட்டது சாநய்திரம் வெகுநேரம் கழித்து அம்மா தலையில் விறகுச் சுள்ளிகளுடன் வந்தாள். குழந்தைகள் காலையில் நடந்த சேதியை அம்மாவிடம்

சொன்னார்கள். செய்தியைக் கேட்டதும் ரங்கம்மாவுக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது; "என்னைப் பெத்த தாயே" என்று அலறி விட்டாள். பயத்தினால் குழந்தைகள் அவள் பக்கத்திலிருந்து விலகிக் கொண்டார்கள். இம் தெரியாத பயத்தின் காரணத்தினால் அவர்களும் அழ ஆரம்பித்தனர்.

மணிமுத்தாறிலிருந்து ஒரு தகவலும் வரவில்லை. நாட்கள் சென்றுகொண்டே இருந்தன. இரவு வந்துவிட்டால் குளிர் தாங்கமுடியாமல் குழந்தைகள் நடுங்குவார்கள். கதவு இல்லாததால், வீடு இருந்தும் பிரயோஜனமில்லாமல் இருந்தது. கார்த்திகை மாசத்து வாடை, விஷக் காற்றைப்போல் வீட்டினுள் வந்து அலைமோதிக்கொண்டே இருந்தது. கைக்குழந்தையின் ஆரோக்கியம் கெட்டுக்கொண்டே வந்தது. ஒரு நாள் இரவு வாடை தாங்காமல் அது அந்த வீட்டைவிட்டு அவர்களையும் விட்டுப் பிரிந்து சென்றுவிட்டது. ரங்கம்மாளின் துயரத்தை அளவிட்டுச் சொல்லமுடியாது. லட்சுமிக்காகவும் சினிவாசனுக்காகவுமே அவள் உயிர் தரித்திருந்தாள்.

சீனிவாசன் பள்ளிக்கூடம் போகிறான். ஒருநாள் அவன் மத்தியானம் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பும்போது ஒரு தீப்பெட்டிப் படம் கிடைத்தது. கொண்டுவந்து தன் அக்காவிடம் காண்பித்தான். லட்சுமீ அதில் ஆர்வம் கொள்ளவில்லை. "அக்கா எனக்கு சீக்கிரம் கஞ்சி ஊத்து, கஞ்சி இல்லை" நாய் வந்து எல்லாக் கஞ்சியையும் குடித்துவிட்டுப் போய்விட்டது தம்பி... கதவு இலவ்லையே" என்றாள் துக்கமும் ஏக்கமும் தொனிக்க. தன்னுடைய தாய் பசியோடு காட்டிலிருந்து வருவாளே என்று நினைத்து உருகினாள் லட்சுமி.

சீனிவாசன் அங்கே சிதறிக்கிடந்த கம்மம் பருக்கைகளை எடுத்துப் படத்தின் பின்புறம் தேய்த்து ஒட்டுவதற்கு வந்தான். கதவு இல்லை. என்ன செய்வதென்றே தெரியவில்லை. சுவரின் ஒட்டினான். படம் கீழே விழுந்துவிட்டது. அடுத்த இடத்தில் அடுத்த சுவரில், எல்லாம் ஒட்டிப்பார்த்தான்; ஒன்றும் பிரயோசனம் இல்லை. ஏமாற்றத்தாலும் பசியாலும் அவன் அழ ஆரம்பித்தான்.

சாநய்திரதம் லட்சுமி சட்டிபானைகளைத் தேய்த்துக் கழுவிக் கொண்டிருந்தாள். சீனிவாசன் முகத்தில் ஆவல் துடிக்க, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடி வந்தான். "அக்கா அக்கா நம்ம பள்ளிக் கூடத்துக்குப் பக்கத்திலே சாவடி இருக்கு பாரு. அதுக்குப் பின்புறம் நம்ம வீட்டுக் கதவு இருக்கக்கா! கண்ணாலே நான் பார்த்தேன்" என்றான்.

உண்மைதான். அதே தகவு சாத்தப்பட்டு இருந்தது. தூரத்தலிருந்தே தங்கள் நண்பனை இனம் கண்டு கொண்டார்கள் அச்சிறுவர்கள். பக்கத்தில் யாராவது இருக்கிறார்களா எனச் சுற்றும்முற்றும் பார்த்தார்கள். ஒருவரும் இல்லை. அதிவேகமாய்

அந்தக் கதவின் பக்கம் பாய்ந்தார்கள். அருகில் போய் அதைத் தொட்டார்கள், தடவினார்கள், அதில் பற்றி இருந்த கரையான் மண்ணை லட்சுமி தன் பாவாடையால் தட்டித் துடைத்தாள்.

கதவோடு தன் முகத்தை ஒட்டவைத்துக் கொண்டாள். அழ வேண்டும்போல் இருந்தது அவளுக்கு! சீனிவாசனைக் கட்டிப் பிடித்துக்கொண்டாள். முத்தமிட்டாள், சிரித்தாள், கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. சீனிவாசனும் லட்சுமியைப் பார்த்துச் சிரித்தான். அவர்கள் இருவரின் கைகளும் கதவைப் பலமாகப் பற்றி இருந்தன.

## குடும்பத்தில் ஒரு நபர்

பள்ளிக்கூடத்திலிருந்து தம்மா, வீட்டுக்கு வந்தான். வீட்டுக்குள் நுழையும்போதே தொழு முற்றத்தில் பார்த்த காட்சி அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆறே வயசுதான் ஆகிறது என்றாலும் தம்மா புத்திசாலி, யோசித்துக் கொண்டே போய் ‘பைகட்டை’ ஆணியில் தொங்கவிட்டான். திரும்பி முற்றத்துக்கு வந்தான். தகப்பனார் தொட்டணக் கவுண்டர் கவலையோடு உட்கார்ந்திருந்தார். தாயார் அயிரக்கா, முந்தானையால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டிருந்தாள். தங்கள் தொழுவிலுள்ள ஒரே மாடான புல்லை படுத்திருந்தது. அதன் கண்களில் ஒளி இல்லை. மூக்கில் ஈரம் உலர்ந்து ரோயிருந்தது. அசைபோடுவதை நிறுத்தி வெகுநேரமாகி விட்டது. சாணி போடவில்லை. நீர் பிரியவில்லை. மூச்சு விடுவதற்கு சிரமப்பட்டது. தன்னை மொய்த்துத் துன்பப்படுத்தும் ஈக்களைக்கூட அதனால் விரட்ட முடியவில்லை. அது படும் துயரம் பார்க்கிறவர்களுக்கே சகித்துக்கொள்ள முடியாததாய் இருந்தது.

உள்ளூர் கிட்ணப்ப நாயக்கர், கையிலுள்ள வாகடம் புஸ்தகத்திலிருக்கும் பாட்டை திரும்பவும் ராகம் போட்டுப் படித்தார். அதில் சொல்லப்பட்டுள்ள ஒரு பச்சிலை, மாறுபெயரில் இருந்தது. இன்ன பச்சிலைதான் என்று அவர்களுக்குத் தெரியவில்லை. இருந்தாலும் வெளியூரிலிருந்து வந்திருக்கும் சம்மந்தகார நாயக்கர் தன்னை மிதமாக நினைத்துவிடக்கூடாதே என்று நினைத்து, ‘இந்தப் பச்சிலைக்கு இப்படியும் ஒரு பெயருண்டு’ என்று தெரிந்தமாதிரி சொன்னார்.

இரண்டு நாயக்கர்களும் வெளியேபோய் பச்சிலை பிடுங்கிக் கொண்டு வருவது என்று தீர்மானித்து, மீண்டும் ஒருதடவை வெற்றிலை போட்டுக்கொள்ள ஆரம்பித்தார்கள். அயிரக்கா தன் மாட்டையே சோகமாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த சந்தனப் புல்லை, அயிரக்காவுக்கு தன் தகப்பனார் சீதனமாகக் கொடுத்தது. அது அவர்கள் வீட்டிலேயே பிறந்த கன்று.

அயிரக்காவின் தகப்பனாரான சோலைமலைக் கவுண்டன் மரணப்படுக்கையில் கிடந்தார். பக்கத்தில் உட்கார்ந்திருந்த அயிரக்காவையே பார்த்துக் கொண்டிருந்தார். கொஞ்சம் கழித்து, அவர் தன்னுடைய தொழுவத்தைக் காட்டி, "நம் வீட்டுக் கண்ணுக்குட்டி புல்லையை, நீயே வளர்த்து, சீதனமாக வைத்துக்கொள். அதுரு ரொம்ப உயர்ந்த அம்சம். உனக்கு குறையும் வராது" என்றார்.

தகப்பனார் இறந்தபின், அயரக்காவுக்கு சகலமும் தன்னுடைய புல்லைதான். சாய்ந்திரம் அவளுடைய தம்பி அயிரணன் புல்லையை நடை பிடிப்பான். தேவலோகத்திலிருந்து இப்போதுதான் ஒரு காளை இறங்கி நடந்து வந்தமாதிரி இருக்கும். விவசாயிகள் அதை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டே இருப்பார்கள். 'என்ன அருமையான சந்தனப் புல்லை' என்று தங்களுக்குள் சொல்லிக்கொள்ளுவார்கள். கல்குளம்பு, அதிலும் குத்துக் குளம்பு, குறுங்கால், சன்னமான ஏறுவால். ரெட்டைக் குருத்து முதுகு, ஒட்டுத்தாடி, ரெட்டைநாடி மார்பு, பொய்க்கண் திரட்சி, உடும்புத்தலை, கிலாக் கொம்பு, பட்டு நிறத்திலிருக்கும் அதன் உடம்புமேல் வெளிச்சம் மினுமினுக்கும். இத்தனை அழகுகள் அமையப் பெற்றிருக்கும் புல்லை.

தொட்டணன் வீட்டுக்கு அயிரக்கா வரும்போது காளையோடு வந்தாள். காளையையும் தன் புதுமனைவியையும் பார்த்துப் பார்த்து பூரித்துப்போனான் தொட்டணன். தன் வீட்டு வேலைக்கும், காட்டு வேலைக்கும் ஒத்தாசை செய்ய ஒரு மனைவி வருவாள் என்று மட்டும்தான் தெரியும். நிலத்தை உழ ஒரு காளை, இப்படி ஒரு அருமையான காளையும் வரும் என்று தொட்டணன் கனவிலும் நினைக்கவில்லை.

அவன் தன் சக விவசாயி ஒருவனோடு கூட்டுமாடு சேர்ந்து கொண்டான். நிலத்தை மாறிமாறி உழுது பண்படுத்தினான். ஆழமாக உழுதான். விதைப்புக் காலம் வந்துவிட்டது. தூரத்தில் எங்கோ மழை பெய்து மண்வாடை காற்றில் மிதந்து வந்தது. தொட்டணன் இழுத்து சுவாசித்தான். ஆனந்தத்தால் அவன் கண்கள் நீர் கோர்த்தது. இரவு நல்ல மழை.

அந்த வருஷம் விதைப்பு சமயத்தில், மாடுகளுக்கு காணை நோய் பரவியது. தொட்டணனுக்கு பாதி விதைப்புத்தான் முடிந்தது. பாக்கி விதைப்பை முடிக்க, ஒரு பக்கத்துக்கு தன் புல்லைக்குப் பதிலாக அவனே கலப்பை இழுக்க வேண்டியிருந்தது. இதனால் நெஞ்சில் இரத்தம் கட்டி இரண்டு மாசம் இருமல் நோயால் வேதனைப் பட்டான். அந்த வருஷம் நல்ல மகசூல், கைமாத்து வாங்காமலே நிலத்தீர்வை போட முடிந்தது.

தொட்டணனும் அயிரக்காவும் தங்கள் குடும்ப விவசாய விஷயங்களைப் பற்றிப் பேசினார்கள். அவர்களுடைய கிராமத்தில் நடக்கும் கால்நடை தொத்துநோயைப் பற்றிப் பேசினார்கள். கிராம மக்களில் சிலர் , கடவுள் நம்பிக்கையை விட்டுவிட்டு கால் நடைகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி போட்டுக் கொள்வதைக் கேலி செய்து பேசினார்கள்,

சிரித்தார்கள், இவர்கள் சிரிக்கும் போதெல்லாம் ரம்பக்காவும் சிரிப்பாள். அவள் தன் தகப்பனின் முதுகில் சாய்ந்து கொண்டு முன்னும் பின்னும் ஆடினாள், தொட்டணன் தன் இடது கையால் கழுத்தைச் சுற்றியுள்ள மகளின் இரு கைகளையும் பிடித்துக் கொண்டு சூடான கம்மஞ்சோற்றின் மேல் வைக்கப்பட்டுள்ள மணம் நிறைந்த காணத் துவையலை தொட்டுத் தொட்டு, தன் மகளின் இசைவுக்கு ஏற்ப முன் குனிந்தும் நிமிர்ந்தும் ஆடிக்கொண்டே விழுங்கினான். ஆட்டத்தின் சுகத்தில் லயித்து ரம்பக்கா அப்படியே தூங்கிப் போனாள்.

மகளை பக்குவமாக முதுகிலிருந்து மடிக்குக் கொண்டு வந்து கிடத்தி பழைய கோணிச் சாக்குகளை விரித்து, அழுக்குத் துணி மூட்டைகளையும் பலகைகளையும் தலையணைகளாக வைத்துக்கொண்டு அவர்கள் படுத்துக் கொண்டார்கள்.

தலைக்கோழி கூப்பிட எழுந்திருந்து தொட்டணன் தொழுவைத் தூத்து சாணியைக் குப்பையில் கொண்டு போய்ப் போட்டுவிட்டு, பருத்திக்கொட்டை ஆட்ட ஆரம்பித்தான். ஆட்டிக் கொண்டிருக்கும் போது தற்செயலாய்ப் புல்லையைப் பார்த்தான். கவனித்துப் பார்த்தான்; புல்லை கூளம் தின்னாமல் நின்று கொண்டிருந்தது. அந்த நேரத்தில் அது அப்படி நின்று கொண்டிருக்க அவன் பார்த்ததில்லை; ஆட்டுகிறதை நிறுத்திவிட்டுப் புல்லையின் கிட்டப்போய் அதைத் தடவி, தட்டிக்கொடுத்தான். கொஞ்ச நேரம் அப்படியே நின்று பார்த்துக் கொண்டிருந்தான், அசை போடக்காணோம்.

பச்சிலை பறிக்கப் போயிருந்த நாயக்கர்கள் கட்டுடன் திரும்பி வந்தார்கள். ஒரு பச்சிலை விஷயத்தில் மேலும் ஒரு சந்தேகம் வந்து விட்டதால் ஒன்றுக்குப் பதிலாக, அவரவர்களுடைய இஷ்டத்துக்கு விட்டுக் கொடுத்து, ஆளுக்கு ஒன்றாக இரண்டு பச்சிலைகள் கொண்டு வந்திருந்தார்கள். அரைத்து, கவாளம் கொடுத்தார்கள். கிட்ணப்ப நாயக்கர் தான் போன இடங்களிளெல்லாம் 'ஒரே தேரத்து' மருந்தில் எப்படி மாடுகளுக்கு குணம் கண்டது என்பதையெல்லாம் விவரித்து "அயிரக்கா, ஒண்ணுஞ் செய்யாது பயப்படாதே. இப்போ ஒரு நிமிட்டில் மாடு அசைபோட ஆரம்பிக்கும் பார்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள்.

பொழுதூர, மாட்டுக்கு நிலைமை ரொம்பவும் மோசமாகி விட்டது. நாலு கால்களையும் நீட்டி அடிக்கொருதரம் தரையில் இழுக்க ஆரம்பித்தது. சொங்கு வடிவது நிற்கவில்லை. மூச்சுத் திணறி கிருட் கிருட் என்ற சத்தம் விட்டுவிட்டு கேட்டுக் கொண்டே இருந்தது. தொட்டணனும் அயிரக்காவும் ஏதும் செய்ய இயலாதவர்களாய் பார்த்துக்கொண்டே இருந்தார்கள். அவர்கள் செய்யமுடிந்தெல்லாம் அதன் மீது மொய்த்த ஈக்களை விரட்ட முடிந்ததுதான்.

திடீரென்று புல்லை வாய்பிளந்து ‘அம்மா’ என்று பயங்கரமான நீண்ட ஒரு கத்தல் இட்டது. அவர்கள் தங்கள் வாழ்நாளிலேயே இப்படி மனசைப் பிழியும் ஒரு குரல் அதன் கண்டத்திலிருந்து வெளிவந்து கேட்டதில்லை. அந்த ஒலி அவர்களுடைய உடம்புக்குள் மாத்திரமல்ல, எலும்புக் குருத்துகளுக்குள்ளெல்லாம் குத்திப் புகுந்தது. உலர்ந்த உதடுகளுடனும், பீதிநிறைந்த கண்களுடனும் ஒருவரை ஒருவர் பார்த்தார்கள். முதல் தடவையாக தொட்டணனுடைய கண்களிலிருந்து இரண்டு பெரிய சூடான கண்ணீர்த்துளிகள் புல்லையின் மீது விழுந்தன. அயிரக்கா எழுந்து நின்றாள்.

பின் அவன் வீட்டினுள் சென்று மஞ்சல் அரைத்து சிறு துணியில் நனைத்து, அஞ்சறைப் பெட்டியிலிருந்த இரண்டு வெள்ளி ரூபாய்களை எடுத்துத் துடைத்து மஞ்சள் துணியில் முடிந்து, தொட்டேரம்மா குலதெய்வ கோயில் இருக்கும் திசைநோக்கி வைத்து, மண்டியிட்டு வணங்கிப் பிராத்தித்தாள். பின்பு தரையில் ஒரு சிட்டிகை மண்ணைக் கிள்ளித் தன் நெற்றியில் பூசிக்கொண்டு புல்லையின் நெற்றியிலும் கொண்டு போய்ப் பூசினாள். பிறகு அந்த மஞ்சள் காணிக்கையை அரங்கு வீட்டினுள் கொண்டு போய், சுத்தமான புது அடுக்குப் பானைக்குள் வைத்து மூடி அந்தப் பானையைத் தொட்டு ஈரம்படிந்த தன் கண்களில் ஒத்திக்கொண்டாள்.

பக்கத்து வீட்டு மத்தையா கோவில்பட்டியிலிருந்து வந்திருந்தான். வீட்டுக்காரரின் மாட்டுக்கு உடம்பு சௌகரியமில்லை என்று கேள்விப்பட்டுப் பார்க்க வந்தான். உடனே கோவில்பட்டி போய் வெட்னெரி டாக்டரை கையோடு கூட்டிக்கொண்டு வரச்சொல்லி தொட்டணனை வற்புறுத்தினான். கொஞ்ம் தாமதித்தாலும் மோசக்கேடு வந்து சேரும் என்று எச்சரித்தான். மந்திரத்தால் ஒன்றும் மாங்காய் விழாது என்று எடுத்துச் சொன்னான். நோய்த்தடுப்பு ஊசிபோட மறுத்த அவளுடைய மூடத்தனத்தை எள்ளி நகையாடினான்.

முத்தையா அவர்களுக்குப் பண உதவி செய்தான். கால்நடை ஆஸ்பத்திரி பற்றிய விவரங்களையெல்லாம் தொட்டணனின் மனசில் பதியும்படி எடுத்து விவரமாகச் சொன்னான். தொட்டணன் சரசரவென்று கொடியில் முறுக்கிச் சுருட்டியிருந்த வேட்டியை உதறிக் கட்டிக்கொண்டு துண்டை உதறி மேலே போட்டுக் கொண்டான். முட்டைக்கோல் நிறைய எண்ணெயை எடுத்து தலைகுளுர தேய்த்துக் கொண்டான். கால், கை முகமெல்லாம் தேய்த்து முடிந்ததும், வேட்டியின் சொருகு நுனியில் பணத்தை முடிந்து, கோவில்பட்டி நோக்கி புறப்பட்டான்.

தொட்டணன் இப்பொழுது வெட்னரி டாக்டர் மேஜைக்கு முன்னால் போய் நின்றான். இடுப்பில் துண்டைக் கட்டிக்கொண்டு ஒரு கும்பிடு போட்டான். தலை அசைப்பாலேயே அதை ஏற்றுக் கொண்டார் டாக்டர். முதலில் ஊர், அப்புறம் மாட்டுக்கு என்ன செய்கிறது, இரண்டொரு அறிகுறிகளைச் சொன்னவுடனே ‘சரி நிறுத்து’ என்ற பாவனையில் கையை

அசைத்தார். "சரி பீடிஒ இடம் போய்ச் சொல்லிவிட்டு வா" என்று கை காண்பித்து அனுப்பினார். இந்த டாக்டருக்கும் 'பீடிஒ' வுக்கும் சதா தகராறு. அவசரக் கேஸ்களுக்கு ஜீப் கொடுத்து உதவ மாட்டார். தொட்டணன் விஷயத்திலும் அப்படியே ஆயிற்று.

இப்பொழுது ஜீப் மாத்திரம் இருந்தால் கிராமத்துக்குப் போய் ஒரு விவசாயினுடைய மாட்டின் உயிரைக் காப்பாற்றிவிடலாம் என்று நினைத்துக் கொண்டே நடந்தார் டாக்டர். அவர்கள் பஸ்ஸிலிருந்து இறங்கி நடந்து, ஊர் வந்து, வீட்டின் வாசலை மதிப்பதற்கும், வீட்டினுள்ளிருந்து அழுகைச் சத்தம் கேட்பதற்கும் சரியாக இருந்தது. தொட்டணனும் அயிரக்காவும் சோகமே உருவெடுத்த மாதிரி உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய துயரத்தை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. சுற்றத்தார் எல்லோரும் ஒவ்வொருவராக துக்கம் விசாரிக்க வந்து கொண்டே இருந்தார்கள்.

பிரேதத்தை அவர்கள் சக்கிலியரிடம் ஒப்படைக்க மறுத்துவிட்டார்கள். "பெற்ற பிள்ளையைப் போல் வளர்த்து சக்கிலியர்கள் கையில் தூக்கிகொடுக்கவா, முடியாது" என்று அயிரக்கா சொல்லிவிட்டாள். அதோடு அன்று செவ்வாய்க்கிழமை வீட்டுக்குப் பின்புறமுள்ள தங்கள் காலிமனையிலேயே புதைத்து, பால் வார்த்தார்கள். கிராமத்துப் பெரியவர்கள் வந்து விசாரித்து ஆறுதல் சொன்னார்கள். கிராம முன்சீப் ஐயர் சொன்னார், "தொட்டணா, மனசைத் தேத்திக்கோ, மாடு, மனைவி, மக்கள், கழனி இதெல்லாம் வாய்க்கிறது, ஒருவனுக்கு அவன் பூர்வ ஜென்மத்தில் செய்த பாக்கியம்னு பெரியவா சொல்லுவா, இந்த மாதிரி ஒரு காளை யாருக்கு இனி வாய்க்கப்போறது. ரிஷபவாகனம் மாதிரி இருந்தது.

தொட்டணன் புல்லை நினைத்து குமறினான் கூட்டு மாட்டுக்காரன் வந்து நின்றுவிட்டான். அயிரக்காவும் தொட்டணனும் உட்கார்ந்திருந்தார்கள். தொட்டணன் மௌனமாய் எழுந்தான். யாருடனும் ஒன்றும் பேசவில்லை. நுகக்காலை எடுத்து தோளில் வைத்துக்கொண்டான். தலையைக் கவிழ்த்துக் கொண்டே அவன் பின்னால் நடந்தான். அயிரக்கா இவைகளை ஒன்றுவிடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். தன் புருஷன் நுகக்காலோடு தலை கவிழ்ந்து போவதையே பார்த்துக் கொண்டிருந்த அவள், முகத்தை தன் இரண்டு கைகளிலும் புதைத்துக் கொண்டாள்.

## மின்னல்

பஸ்ஸின் உள்ளே இருந்தவர்கள் வெந்து மடிந்து கொண்டிருந்தனர். அந்த பஸ்ஸில் நாற்பத்தைந்து பிரயாணிகள் இருந்தனர். நாற்பத்திரண்டு ஆண்கள்; மூன்று கிழவிகள். பஸ்ஸாடாண்டில் மர நிழல் இருந்தது. பஸ்ஸை நிறுத்துவதற்கென்றே போட்டிருந்த கொட்டகையும் இருந்தது; அங்கெல்லாம் பஸ்ஸை நிறுத்தியிருக்கலாம். ஆனால் எதற்காக அப்படி நிறுத்தவேண்டும்? நிறுத்த வேண்டுமென்று என்ன ஆத்திரம்?

உட்கார்ந்த பிரயாணிகளில் ஒரு தடியான ஆசாமி, பாவம்! ‘கேஸ் பூஸ்’ என்று மூச்சு வாங்கி இளைத்துக் கொண்டிருந்தார்; ஆஸ்துமா காரணமாகவோ, அல்லது திட்டம் இல்லாமல் தின்று கொழுத்து விட்டதனாலோ, யாருக்குத் தெரியும்? ஒரு போலீஸ்காரர், துப்பாக்கியைத் தோளில் சாத்திக்கொண்டு, பெரிய சட்டிவடிவமுள்ள தம் முகத்தை அஷ்டகோணலாக வைத்துக் கொண்டு தூங்கி வழிந்து கொண்டிருந்தார். கேலிச் சித்திரக்காரன், எவனாவது அப்போது அவரைக் கண்டிருந்தால் விடவேமாட்டான்.

இன்னொருவர் பல் டாக்டர், வாரம் ஒரு தடைவ அந்த ஊருக்கு வந்து போவார். ஒரு காலத்தில் அவர் முகம் பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கும்! இப்பொழுது அவருக்கு நல்ல வரும்படி. நோயாளிகளின் ஊத்தை நிறைந்த பற்களைப் பார்த்துப் பார்த்து, துர்வாடையையும் அனுபவித்து அவருடைய முகத்தில் அருவருப்புத் தங்கி, அதுவே நிரந்தரமாகிவிட்டது.

அவருக்கு எதிரில் நீண்ட பற்களையுடைய ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவனுக்கு நீண்ட பற்கள் மாத்திரம் அல்ல; ஒவ்வொரு பல் இருக்க வேண்டிய இடத்திலும் இரண்டு பற்களும், சில இடங்களில் மும்மூன்று பற்களும் முளைத்திருந்தன. டாக்டர் அவனையே வைத்த கண்கள் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

கிழவிகள் மூன்று பேரும் ஒரே இருக்கையில் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அதில் ஒரு கிழவி மட்டும் தூங்கிக் கொண்டிருந்தாள். தன் பொக்கைவாய் நிறைய கருப்பட்டிப் புகையிலையைக் குதப்பிக் கொண்டு ஒரு கண்ணை மூடியும் இன்னொரு கண்ணைப் பாதி மூடியும் தூங்கிக் கொண்டிருந்தாள். அவளது வாய்க்கோடியில் புகையிலை எச்சில் ததும்பி நின்று கீழே உதிர முகூர்த்தம் பார்த்துக் கொண்டிருந்தது. பக்கத்தில் இருந்த கிழவி அவளை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அது விழுந்தால் தன்மீதுதான் விழும் என்ற பயம் அவளுக்கு பஸ் புறப்பட இன்னும் சில நிமிஷங்களே இருந்தன. மரங்களில் இலைகூட அசையவில்லை.

பிரயாணிகள் முணுமுணுத்தார்கள். கொட்டாவி விட்டார்கள். தங்களையே நொந்து கொண்டார்கள். சில பிரயாணிகள் தைரியமாகக் கண்டக்டரையும் டிரைவரையும் பஸ் கம்பெனியையும் வாய்விட்டுச் சபித்தார்கள். மரத்தின் நிழலடியில் கண்டக்டர்களும் டிரைவர்களும் ஏதோ ஒரு விவகாரத்தில் உற்சாகமாக ஈடுபட்டிருந்தனர். ரோடு வழியாக, ஒரு வாத்தியார் இந்த வேனாவெளியில் சின்னஞ்சிறு குழந்தைகள் பலரை வரிசைப்படுத்தி அழைத்துக் கொண்டு போனார். ஒரு வேளை அவர்கள் உல்லாசப் பிரயாணம் போகிறார்களோ என்னவோ?

மூட்டை தூக்கிப் பிழைக்கும் கூலிச் சிறுவர்கள் ஒருவரோடு ஒருவர் ஆபாசமாகப் பேசிக்கொண்டும் வைதுகொண்டும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பஸ் புறப்படும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. இரண்டு பிரயாணிகள் பஸ்ஸினுள் நின்று கொண்டிருந்தனர். தாங்கள் எங்கே உட்காருவது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. ஒரு வழியாக வந்து சேர்ந்தார் கண்டக்டர். கடவுளைக் கண்டது போலிருந்தது; சிலர் கொலைப் பார்வை பார்த்தனர் கண்டக்டரை.

கண்டக்டர் டிரைவரை நோக்கிக் குரல் கொடுத்தார். நம்பர் எளநூத்தி நாப்பத்தி ரெண்டு ஆலம்பட்டி ஒரு இறக்கம். "ரைட்". ஆலம்பட்டி இறக்கத்தில் பஸ் வந்து ஓர் அசைப்பு அசைந்து நின்றது. தூங்கிக்கொண்டிருந்த பிரயாணிகள் எல்லோரும் தங்கள் தலைகளை உடம்போடு ஓர் அசைப்பு அசைத்து மெதுவாகக் கண்களைத் திறந்தும் திறக்க இஷ்டப்படாமலும் இருந்தார்கள். மூன்றாவது கிழவி மெதுவாக எழுந்து பனைநார்ப் பெட்டியில் இருந்த தன் சாமான்களோடு இறங்கினாள்.

கிராமப் பெண்ணொருத்தி, இடுப்பில் குழந்தையுடன் உள்ளே வந்தாள். போலீஸ்காரரைக் கண்டதும் அந்தக் குழந்தை சிரித்தான். போலீஸ்காரர் விழித்துப் பார்த்தார்; அவர் முகத்தில் இருந்த கோணல் மறைந்து குதூகலம் படர ஆரம்பித்தது. ஒரு கிழவி குழந்தையை, 'வா ராசா' என்றாள். இன்னொரு கிழவி "என் செல்லக் கனியில்லே" என்று அழைத்தாள்.

குழந்தை சிரித்தபடியே தலையை ஆட்டி ஆட்சேபம் தெரிவித்தது. டிக்கெட் கிழித்து கண்டக்டர் அந்தக் குழந்தையிடம் கொண்டு வந்து கொடுத்தார். அதை வாங்கி ஜன்னல் வழியே காற்றோடு விட்டது குழந்தை. கண்டக்டர் பிரமிப்புத் தட்டியதுபோல் நடித்தார். மீண்டும் அந்தப் பெண் கலகலவென்று சிரித்தாள். என்ன அற்புதமான சிரிப்பு! "போக்கிரிப் பயலே!" என்று போலீஸ்காரர் கொஞ்சினார். பஸ் வேகமாகச் சென்று கொண்டிருந்தது. கிழவிகள் இருவரும் அந்தப் பெண்ணோடு பேசிக்கொண்டே வந்தார்கள். மலர்ந்த முகத்தோடு அந்தப்பெண் பதில் சொல்லிக் கொண்டே வந்தாள்.

பல் டாக்டரும் அந்தப் பெண்ணின் சிரித்த முகத்தையே பார்த்துக் கொண்டு வந்தார். என்ன அழகான பற்கள்!, என்ன ஆரோக்கியமான பிரகாசம் பொருந்திய பற்கள்! இப்படிப் பற்களைப் பார்த்து எத்தனை நாள் ஆகின்றன? அந்த டாக்டருக்கு தாம் பிறந்த பூமியின் ஞாபகங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் வந்தன. அவருடைய முகத்தின் பழைய அழகு வந்து குடி புகுந்தது.

நாலாவது மைலில் வந்து பஸ் நின்றது. பெண்ணும் குழந்தையும் இறங்கினார்கள். கிழவிகள் இருவரும் குழந்தையின் கன்னத்தைத் தடவி, தடவிய தங்கள் கையை

முத்தமிட்டார்கள். "போயிட்டு வாடா கண்ணு" எல்லாருமே மானசிகமாக அவர்களுக்குப் பிரியா விடை கொடுத்து அனுப்பினார்கள். பஸ் மெதுவாக, சகிக்கமுடியாத பெருத்த இரைச்சலுடன் நகர்ந்தது.

தடியான ஆசாமி சோம்பல் முறித்து எரிச்சலுடன் பெரிய நீண்ட கொட்டாவி ஒன்றை விட்டார். மீண்டும் அவருக்கு இளப்பு ஆரம்பமாகிவிட்டது. அவரைத் தொடர்ந்து இன்னொருவர் துணைக் கொட்டாவி விட்டார். போலீஸ்காரரும் அந்தக் கிழவியும் தூங்க ஆரம்பித்தார்கள். டாக்டர் தம் எதிரே உட்கார்ந்து கொண்டிருந்தவளைப் பார்த்துக் கொண்டே இருந்தார். அவர் முகத்தில் கொஞ்சங் கொஞ்சமாக அருவருப்பு வளர்ந்து கொண்டே வந்தது. "உஸ்! அப்பப்பா! என்ன வேக்காடு, என்ன வேக்காடு, கொஞ்சம் தள்ளி உட்காரும், ஐயா! எத்தனை தடைவ சொல்லுவது?" கண்டக்டர் அவர்களை நோக்கிக் கையை நீட்டி ஏதோ கோபமாகக் கத்தினார். பஸ்ஸின் ஹாரன் சப்தத்தில் அது ஒருவர் காதிலும் விழவில்லை.

## ஜெயில்

ராமசாமிக்கு நாலைந்து பெயர்கள் உண்டு. நெட்டைக்கொக்கு ராமசாமி, வளர்ந்த பனை ராமசாமி, பீச்சாங்கை ராமசாமி, இன்னும் சுருக்கமாக ஒட்டகம், ஏணி, மண்டு... இப்படி! பயல் ஓசரமாய், ஒல்லியாய் இருப்பான். இப்போ நேரம் என்ன இருக்கும்; பள்ளிக்கூடம் விடுகிறநேரம் இருக்குமா? ராமசாமி வேப்பமரத்து நிழலைப் பார்த்தான். மரத்தில் ஏறினான். பள்ளிக்கூடத்து மணி 'கணகண' என்று ஒலித்தது, ஆனந்த மிகுதியால் சிரித்துக்கொண்டான்.

பைக்கட்டை இடத்தோளில் போட்டுக்கொண்டு, வலக்கையில் தொங்குகிற தூக்குவாளியை முன்பக்கத்துக்குக் கொண்டு வந்து, நடக்கும்போது இரண்டு முட்டுகளிலும் தட்டும்படி ஓசை எழுப்பிக் கொண்டே நடந்து வந்தான். நடுவில் வருகிறவன் சுப்யைா. வலு குட்டையன், நடந்துகொண்டே வரும்போது திடீரென்று 'சடன் பிரேக்' போட்டு நின்று விடுவான். பின்னால் வருகிற பையன்களெல்லாம் அவன் மீது மோதுவார்கள். இப்படி அடிக்கடி செய்கிறதில் அவனுக்கு ஒரு குஷி. கடைசியில் வருகிறது, டி.முருகன், கடை திருப்பதி செட்டியாரின் மகன். பயல்கள் அவனை சர்வ கேலி பண்ணுவார்கள். பள்ளிக்கூடத்தில் அவன்தான் முதல் மார்க். முன்பல் இரண்டு நீளமாக இருப்பதால் வாயைக் கையால் மூடிக்கொண்டு சிரிப்பான்.

ராமசாமி கிளையோடு கிளையாய்ச் சேர்ந்து மரநாய் போல் ஒட்டிக் கொண்டான். பையன்கள் கொஞ்சம் தொலை கடந்து போன பிறகு, மெள்ள இறங்கி வந்து தன் ஊருக்கு புறப்பட்டான். காலையில் எழுந்ததும் ராமசாமி கால்கை கழுவிக்கொண்டு ஒரு லோட்டாப

நீத்து தண்ணீர் குடித்துவிட்டு, எருமை மாட்டை அவிழ்ப்பாள். ராமசாமி, தொழுவில் மாட்டைக் கட்டினான். செங்கமுட்டியை உரசிப் பல் தேய்த்துவிட்டு, கம்மஞ்சோற்றில் மோர்விட்டுக் கரைத்துச் சாப்பிடுவாள். தாயார் தூக்குச் சட்டியில் சோறு வைத்துக் கொடுப்பாள். பக்கத்து ஊருக்கு படிக்கப் புறப்படுவான். தாயார் புத்தி சொல்லி அனுப்புவாள்.

ஆனால், இராமசாமி பைக்கட்டையும் தூக்குவாளியையும் வேப்ப மரத்தின் உச்சியில் உள்ள ஒரு கௌளியில் தொங்க விட்டுவிட்டு, கீழே இறங்கி வந்து அந்த ஓடையில் தனிமையில் நீண்ட நேரம் விளையாடிக் கொண்டிருப்பான். அப்புறம் வேப்பமரத்தின் மேலே ஏறிக்கொண்டு மூன்று கிளைகள் நெருக்கமாய்ப் பிரிகிற ஓர் இடத்தில் சொகமாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு மணிக்கணக்காய்க் கீழே விழாமல் தூங்குவான். முழிப்புத் தட்டியபின் கண்களை வெறித்து வானத்தையே பார்த்துக் கொண்டிருப்பான் மனது வெறிச்சோடிப் போய்கிடக்கும். ராமசாமிக்கு மேகங்கள் படம் போட்டுக் கொண்டிருந்தன. அப்படியே லயித்து, அசந்து, மீண்டும் ஒரு சின்னத் தூக்கம் போடுவாள்.

கண் விழித்தவுடன் அவனுக்குத் தாகமும் கள்ளப் பசியும் வரும். கடைக்குப்போய் என்னதாவது வாங்கித் திங்கணும் போலிருந்தது. பருத்தியை எடுத்துக் கொண்டு கீழே இறங்கி ஊருக்கு வந்தான். ஒரு வீட்டில் தண்ணீர் வாங்கி ஆசைதீரக் குடிக்க நினைத்தான். அந்த வீட்டில் ஒரு கிழவனார் எந்தப் பள்ளிக்கூடப் பையன்களைக் கண்டாலும் கூப்பிட்டு, ‘எத்தனாவது வகுப்பு படிக்கிறாய்’ என்று கேட்டுவிட்டு உடனே ஒரு மனக்கணக்குப் போடுவார். அந்தச் சமயத்தில் அவரைக் கொல்லணும் போல இருக்கும். நல்லவேளை அவர் பார்க்கவில்லை. ஊர்க்கிணற்றில் ஒரு பெண் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தாள். வாளி நிறையத் தண்ணீர் வாங்கி, இரண்டு கைகளையும் சேர்த்து ‘கோரிக் கோரி’, குடித்தான். அப்புறம் அந்தக் கிராமத்தினுள் மூலையிலிருந்த ஒரு கடைக்குப் போனான். பருத்தியைப் போட்டு பக்கடா வேணுமென்று கேட்டான். கிராமாந்தரக் கடைகளுக்கே உண்டான ஒருவகை வாசைன அந்தக் கடையிலிருந்து அடித்துக் கொண்டிருந்தது; பக்கடாவை மடிநிறையக் கட்டிக்கொண்டு புறப்பட்டான். எங்கே போகிறது என்று தெரியவில்லை. அப்படியே பக்கடாவைத் தின்று கொண்டே லாத்தலாய் நடந்தான். ஊருக்குத் தெற்கேயுள்ள கொட்டாரங்களொன்றில் சுற்றி முள்கம்பியால் கோட்டை வளைத்திருந்தார்கள்.

அதில் வடமேற்கு மூலையில் ஒரு சாளை. அந்தச் சாளையின் குளிர்ச்சியான சுவர் நிழலில் உட்கார்ந்து கொண்டு ராமசாமி பக்கடாவை ருஜித்துத் தின்று கொண்டிருக்கும் போது, திடீரென்று ஒரு சின்னக் குழந்தையின் சிரிப்புச் சத்தம் கேட்டு அவன் திடுக்கிட்டான். சுற்றும் முற்றும் பார்த்தான். சாளையை ஒரு சுற்றுச் சுற்றி வந்தான்.

ஒருவரையும் காணவில்லை. மறுக்கி வேகமாக ஒரு சுற்றுளு வந்தான். அப்பவும் இல்லை, பழையபடியும் அந்த இடத்தில் வந்து உட்கார்ந்து மெதுவாக உஷராக, சுற்றுப் புறங்களைக் கண்களால் பார்த்துக் கொண்டே இருந்தான். இப்பொழுது திரும்பவும் அந்தச் சிரிப்பு சத்தம் கேட்கவும், கண்டுபிடித்துக் கொண்டான். சாளையின் மேல் சுவரில், உயரத்திலே ஒரு சின்ன சதுர ஜனஉ்னல் இருந்தது. கற்களில் உவர் தள்ளிய இடைகளில் கால் பெருவிரல்களைக் கொடுத்துப் பக்குவமாக ஏறி ஜன்னலைப் பிடித்து முகத்தை அதில் பதித்தான். உள்ளேயிருந்து ஏதோ வாடை 'குப்' பென்று அடித்தது. உள்ளே சூழ்நிலையைக் கண்கள் பழக சில விநாடிகள் பிடித்தன. கூரை முகட்டிலிருந்து ஒரு தூளி தொங்கிக் கொண்டிருந்தது. கறுப்பு மண் சட்டிப் பானைகள் மூலைக்கு ஒன்றாகக் கிடந்தன. நெளிந்துபோன அலுமினியத் தம்ளர், வாலொடிந்த அகப்பை, பிய்ந்துபோன கோரைப்பாய், துரப்பிடித்த தகர மண்ணெணண்ணெய் விளக்கு, கிழிசல் துணிகள் இவையெல்லாம் தெரிந்தன.

மூன்று வயது ஆண்குழந்தை பிறந்த மேனியாக வாசல் தகவின் இடுக்கு வழியாக வெளியே பார்த்துக் கொண்டிருந்தது. பார்த்துக்கொண்டே இருக்க அந்தக் குழந்தை, திரும்பவும் சந்தோஷத்தால் சிரித்து ஆர்ப்பரித்தது. அந்த இடுக்கு வழியாக எதைக் கண்டு சிரிக்கிறது என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்று ராமசாமிக்கு ஆவலாக இருந்தது. இறங்கி, சுற்றி அந்தப் பக்கம் போய் பார்த்தான். வேறொன்றுமில்லை; அங்கே நாலைந்து குஞ்சுகளுடன் ஒரு கோழி மேய்ந்து கொண்டிருந்தது. அந்தச் சின்னக் குஞ்சுகளைக் கண்டுதான் அந்தக் குழந்தைக்கு தாங்க முடியாத ஆனந்தம்.

ராமசாமி திரும்பவும் ஜன்னல் மீது ஏறிப்பார்த்தான். அந்தக் குழந்தை வைத்த கண் வாங்காமல் கதவு இடுக்கு வழியே பார்த்துக் கொண்டிருந்தது. அவனுக்கு, அந்தக் குழந்தையைப் பயமுறுத்திப் பார்க்கவேண்டும் போல் இருந்தது. தொண்டைக் குழியையும் வாயையும் கோரமாக வைத்துக்கொண்டு, ஒரு பயங்கரமான சத்தம் கொடுத்தான். தனிமையில் இருந்த அந்தக் குழந்தை உண்மையிலே பயந்து துள்ளி விழுந்தது. ராமசாமி மீண்டும் அதே குரலில் ஒரு சத்தம் கொடுத்தான். பீதி நிறைந்த கண்களால் குழந்தை ஜன்னலைப் பார்த்தது. வீல் என்று கத்திக் கொண்டே சுவரின் மறைவுக்குள் போய் ஒளிந்து கொண்டது.

அந்த ஜன்னல் வழியாக இதுவரை இவ்வளவு பயங்கரமான ஒரு பூச்சாண்டியைப் பார்த்ததில்லை. இந்த ஜன்னல் வழியே சில சமயம் அம்புலி மாமாவைப் பார்த்ததுண்டு. எப்பவாவது சில சமயம் ஒன்றிரண்டு ஊர்க்குருவிகள் உள்ளே வந்துமெல்ல எட்டிப்பார்க்கும். பார்த்தால் விருட்டென்று பறந்து போய்விடும். குழந்தையின் விசும்பல் ஒலி அவன் உள்ளத்தில் கருணை சுரக்கச் செய்தது. "பாப்பா, இந்தா பாரு நான் பூச்சாண்டி இல்லை

அண்ணன் வந்திருக்கிறேன் அண்ணன்". மறைந்துகொண்ட குழந்தை நகரவேயில்லை. அவன் தன் மடியிலிருந்த பக்கடாவில் கொஞ்சம் எடுத்து உள்ளே போட்டான். இப்பொழுதுதான் குழந்தை அவனை நம்பியது. ஆனால் பக்கடாவை எடுத்துக் கொண்டு திரும்பவும் மறைந்து கொண்டது. மீண்டும் ஒரு பக்கடாவைப் போட்டான். எடுத்துக்கொண்டு ஒளிந்து கொண்டது. இப்பொழுது ராமசாமி ஜன்னலைப் பிடித்துக்கொண்டு தலையை மட்டும் மறைத்துக் கொண்டான். மெல்ல எட்டிப் பார்த்தான். குழந்தை தலையை பின்வாங்கியது. அவனும் தலையை மறைத்துக் கொண்டான். திரும்பவும் தலையை நீட்டிப் பார்த்தது. இப்படியாக ஒரு சின்ன விளையாட்டின் மூலம், அவர்களுடைய சிநேகம் ஆரம்பமாகியது.

ஒரு நாள் ராமசாமியின் ஊரைச் சேர்ந்த ஆட்டுக்காரன் இவன் இருந்த வேப்பமரத்துக்கு தழை ஒடிக்க வந்தபோது, இவனைப் பார்த்துவிட்டுப் போய்ப் பெற்றோர்களிடம் விஷயத்தைச் சொல்லி விட்டான். ராமசாமி அந்த வருஷம் வழக்கம்போல் பெயில் ஆனான், யாரோ 'துர்ஆத்மா'வின் யோசனைப்படி, ராமசாமியைப் பாளையங்கோட்டையிலுள்ள ஒரு கான்வென்டில் சேர்த்து விட்டார்கள். கவலை என்பதே இன்னதென்று அறியாத ராமசாமிக்கு இப்பொழுது பெருங்கவலை வந்து சூழ்ந்துகொண்டது. இந்தப் பள்ளிக்கூடத்துக் கோட்டைச் சுவருக்குள்ளேயே சுற்றி வந்தான். சில நாட்களுக்குள்ளாகவே அவன் தன்னுடைய, தான் பிறந்த கரிசல் மண்ணை நினைத்து நினைத்து ஏங்க ஆரம்பித்தான்.

வகுப்பில் ராமசாமி மிகவும் சோர்ந்துபோய் உட்கார்ந்திருந்தான். இடது முழங்கையை, டெஸ்கின் மேல் ஊன்றி அந்தக் கையால் முகத்தைத் தாங்கிக் கொண்டு ஜன்னலுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். கண்கள் அவனையறியாமல் சொருகின. கழுத்தடியில் வேர்வை துளிர்க்க ஆரம்பித்தது. அணில்கள் எழுப்பிய ஒலிகளுக்கு ஏற்ப, அவன் உட்கார்ந்து தூங்கிக்கொண்டே ஒரு கனவு கண்டான்.

ஊர் குளக்கரையில் வைத்து பண்டிதன் அவனுக்கு முடி வெட்டுகிறான். குளக்கரை இப்பொழுது கொக்கரக் குளத்திலுள்ள வெயில் முகமே பாராத மரத்தடியாக மாறுகிறது. ராமசாமியை ஒரு பையன் தலையைத் தொட்டு எழுப்பினான். ராமசாமி திடுக்கிட்டு விழித்தான். வகுப்பில் சிரிப்பு இன்னும் ஓயவில்லை. வாத்தியார் அவனைப் பெயர் சொல்லி மேஜைக்கு பக்கத்தில் அழைத்தார். "உன் உடம்புக்கு என்ன?" என்று ஆதரவோடு கேட்டார். "காய்ச்சல் சார்" அவனை அறியாமலேயே அவனுடைய வாய் சொல்லி விட்டது. கிட்ட அழைத்து அவனுடைய உடம்பைத் தொட்டுப்பார்த்தார் வாத்தியார். 'ஜில்' லென்று இருந்தது உடம்பு. "நிஜமாகவே எனக்கு வயிற்றை வலிக்கிறது சார்" என்றான் பரிதாபமாக. வாத்தியார் அன்பான மனிதர். மனோதத்துவம் தெரிந்தவர். சிரித்துக்கொண்டே சரி

போய்ப் படுத்துக்கொள் என்று சொல்லி அனுப்பினார். அவமானம் தாளாமல் வகுப்பிலிருந்து ஓடினான் ராமசாமி அன்று நாளெல்லாம் யோசித்தான். இங்கிருந்து எப்படியாவது தப்பி ஓடிப்போய்விடுவது என்று முடிவு செய்தான்.

இரவு சாப்பாட்டு மணி அடித்தது. எல்லாப் பையன்களும் புறப்பட்டுப் போய்விட்டார்கள். தப்பித்துப் போக இதுதான் சரியான சமயம். ஒரு மரத்தின் மீது ஏறி, வெளியே கைநீட்டிக் கொண்டிருந்த அதன் கிளைவழியாக வந்து, கோட்டைச் சுவருக்கு வெளியே குதித்தான். முழங்காலில் வந்த ரத்தத்தைத் துடைத்துக் கல்லில் தேய்த்தான். பிள்ளையைப் போட்டு பலாப்பழம் எடுத்த ஓடை வழியாக இறங்கி ஆற்றின் குறுக்கே கடந்து சிந்துபூந்துறை வந்தடைந்தான். இப்பொழுதுதான் மனசில் கொஞ்சம் நிம்மதி பிறந்தது அவனுக்கு. பஸ் நிலையத்திலுள்ள மிட்டாய்க் கடையில் மிட்டாய் வாங்கிக் கொண்டான். பழங்கள் வாங்கி உண்டான். ராவெல்லாம் பரபரப்போடு பொழுதைக் கழித்துவிட்டு, அதிகாலையில் கோவில்பட்டி போகும் முதல் பஸ்ஸில் ஏறி ஊர் வந்து சேர்ந்தான். நேராக சுப்புராஜ் இருந்த சாளையை நோக்கிப் போனான். போகும்போதே சரியான நீளமான 'சீனிக்கல்' ஒன்றைத் தேடித் தேடிக் கையோடு எடுத்துக்கொண்டு போனான். போனதும் முதல் ஜோலியாக அந்த 'நாறப்பூட்டை' இடது கையினால் உடைத்து, சுப்புராஜ்ஜை, விடுதலை செய்தான்.

"நீ இத்தனை நாள் எங்கே போயிருந்தே, என்னை விட்டுட்டு?" என்று கேட்டது. இந்தக் கேள்வியை, பரிசுத்தமான அன்பை ராமசாமியால் தாங்க முடியவில்லை. கண்களில் நீர் முட்டி விட்டது. 'நான் இனி எங்கையும் போகமாட்டேன் உன்னை விட்டுவிட்டு. உன் பக்கத்திலேதான் இருப்பேன்' என்று சொன்னான்.

மதியம் திரும்புகிற வரைக்கும் அவர்கள் விளையாடினார்கள். கதை பேசினார்கள். ஆனந்தமாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று சுப்புராஜ் தொலைவில் சுட்டிக்காட்டி "அதோ எங்க அம்மா வந்திட்டாளே" என்று பாடிக்கொண்டே குதித்தான். ராமசாமியின் முகத்தில் அருளில்லை. உடைத்து எறியப்பட்ட பூட்டைப் பார்த்தான். சுப்புராஜைப் பார்த்தான். ராமசாமி எழுந்திருந்து ஓட்டம் பிடித்தான். எங்கே ஓடுகிறோம் என்றே அவனுக்குத் தெரியவில்லை. கால்கள் போகிற போக்கில் திரும்பிப் பார்க்காமல் ஓடிக்கொண்டே இருந்தான்.

## சாவு

ஜக்குவும் ராமானுஜநாயக்கரும் எழுந்து அவசர அவசரமாக "கால்" கழுவிக்கொள்கிறார்கள். 'ஒருத்தரையும் காணமே' இப்பொத்தானே மழை பெய்து

வெரித்திருந்தது; ‘மாட்டுக் குளம்பின் காலடிதான் தரையில் பதிந்திருக்கிறது;’ எவ்வளவு பெரிய காலடி!

‘தட்டியது யாராக இருக்கலாம்? ம்.... யாரோ’ திடீரென்று கோழிகள் பட படவென்று இறக்கைகளைத் தட்டிக்கொண்டு கலைந்து கொக்கரிக்கின்றன. தாயக் கோழிகளின் இறக்கைகளுக்குள் குஞ்சுகள் பாய்ந்து ஓடி பயத்தால் ஒளிந்து கொள்கின்றன. பசுவின் கன்று தும்பு அறுந்து போவதுபோல் தாயின் பக்கம் வெட்டி வெட்டி இழுத்து “அம்மா” வென்று குரல் கொடுக்கிறது. தொழுவத்திலுள்ள மாடுகள் மிரண்டு நோக்கி காதுகளை விடைத்து வைத்துக்கொள்கின்றன. வீட்டின் நாய் ஐயோ... என்று ஊளையிடுகிறது.

“ஏன் என்ன செய்கிறது உடம்புக்கு; ஏன் அப்படி என்னைப் பார்க்கிறீர்கள்; எனக்கு பயமாக இருக்கிறதே” ஜக்கம்மா தன் ஒரு கையால் பருஷனின் மார்பைத் தடவிக் கொடுத்துக் கொண்டே மறுகையின் புறங்கையால் தன் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள். துடைக்கத் துடைக்க ஊறி ஊறிக் கண்ணீர் பார்வையை மறைக்கிறது.

ராமனுஜ நாயக்கருக்கு மூச்சுவிட முடியவில்லை. வாயை அகலத் திறந்து திறந்து மூடுகிறார், மார்பு மேலே உன்னிப்புடைக்கும் போதேல்லாம் வயிற்றில் ஆழமான பள்ளம் விழுகிறது. இப்படி இரண்டு மூன்று தடவைதான்; கொம்பை ஒடித்து உருவியவுடன் அதைச் சுற்றியுள்ள கொடி தொங்குவது போல் தலை தொங்கிவிடுகிறது.

நேத்து சும்மா இருந்தானேம்மா! நேத்தென்ன, இண்ணக்கிக் காலையிலே இளவட்டங்களெல்லாம் சேந்து கிளித்தட்டு விளையாட இந்தக் கண்ணாலே பாத்தேனே. ராமானுஜ நாயக்கரின் மகன் மூணு வயது நிரம்பிய சிறுவன், கையில் ஒரு சின்ன சாட்டைக்கம்பை சொடுக்கிக்கொண்டே பிறந்த மேனியாய் வீட்டுக்குள் நுழைகிறான். வீட்டினுள் ஒரே ஆட்கள் இருப்பது கண்டு திரும்பி வெளியில் போய்விடுவமா என்று தயங்குகிறான். இந்தச்சமயம் ஒரு வெள்ளைச் சீலைப் பெண் ஓடிவந்து அவனைத் தூக்கிக் கொண்டு உள்ளே வருகிறாள். சிறுவன் ஒன்றும் புரியாது திகைத்து அழுகிறான். அவன் அழுவது கண்டு எல்லோருமே அழுகிறார்கள். பலர் இதைக் காண சகிக்காமல் வெளியே போகிறார்கள்.

சர்வ அலங்காரங்களும் பண்ணி ஜக்கம்மாவை வீட்டினுள்ளிருந்து முற்றத்துக்கு அழைத்துக் கொண்டு வருகிறார்கள். தரையில் வட்டமான பெரிய சொளகு (முறம்) அதன் மேல் எருமைத்தோலினால் முறுக்கப்பட்ட உழவு வடங்கள் இரண்டு வைத்திருக்கிறது. அதன்மேல் ஜக்கம்மாவை ஏற்றி நிற்க வைக்கிறார்கள். கைகள் நிறைய புதுவளையல்கள், மஞ்சள் பூசிக்கழுவிய முகத்தின் நெற்றியில் துலாம்பரமாகத் தெரியும் சிவப்புக் குங்குமம். கண்களிலிருந்து மாலைமாலையாய்க் கண்ணீர் வழிந்து கொண்டே இருக்கிறது. அவளை

எவ்வளவு அழகுபடுத்த முடியுமோ அவ்வளவு செய்திருக்கிறார்கள். அது அவளுடைய சுமங்கலியின் கடேசிக்கோலம். விடை பெற்றுப் போக சுமங்கலியின் அதிதேவதையே வந்து நிற்கிறாள்.

இந்தச் சமயத்தில், தும்பைப்பூவைப்போல் தலைநரைத்த ஒரு வயசான கிழவி, சாப்பிடும் வெண்கலத்தாலத்தைக் கொண்டு வந்து கூட்டத்தை நோக்கி ஒரு மரக்கழியினால் ‘கண் கண் கண்’ என்று தட்டி ஓசை எழுப்புகிறாள். இப்பொழுது தாலி அறுக்கப்போகும் இந்த சுமங்கலி முழுகாமல் இருக்கிறாள் என்பது இதற்கு அர்த்தம். இந்த ஒலியைக் கேட்ட ஜக்குவின் தந்தை மயக்கமுற்று விழுகிறார். தொடர்ந்து பெண்களின் அழு ஓசை கேட்கிறது.

குத்துவிளக்கின் மங்கிய வெளிச்சத்தின் முன் தனிமையாக உட்கார்ந்து கொண்டு தலைமுடி அவிழ்ந்து கிடக்க ராமானுஜ நாயக்கரின் மனைவி சொல்லி அழுகிறாள்; அப்பொழுதுதான் மழை பெய்து வெரித்திருக்கிறது முற்றத்தில், மூன்று வயசும் பத்துமாதமும் நிரம்பிய ஜக்குவின் மகன் மண் அளைந்து வியைாடிக் கொண்டிருக்கிறான்; விளையாட்டின் சுவாரஸ்யத்தில் தானே பேசிக்கொள்கிறளான்; தலையை ஆட்டி ஏதோ நீட்டிப் பாடுகிறான். உள்ளே அப்பொழுதுதான் பிறந்த குழந்தையின் அழுகுரல் கேட்கிறது.

## மாயமான்

அப்பாவு செட்டியார் சைக்கிளில் வந்து ‘ஜம்’ என்று இறங்கினார். அவர் வருகைக்காக காத்துக் கொண்டிருந்த கிராமத்து இளைஞர்கள் சைக்கிளின் பக்கம் நெருங்கி, ‘ஹேன்ட்பாரில்’ சொருகி இருந்த தினப் பத்திரிகையை உரிமையோடு எடுத்து, உலகவிஷயங்களில் மூழ்க ஆரம்பித்தார்கள். செட்டியார், சைக்கிளை ‘ஸ்டாண்டு’ போட்டு நிறுத்திவிட்டு இந்தப் பக்கம் திரும்பினார். அவருடைய தர்மபத்தினி உலகம்மாள் தண்ணீரும் செம்புமாய் தயாராக நின்று கொண்டிருந்தாள். செம்பைக் கையில் வாங்கி முகம் கைகால் சுத்தி செய்தார். இதற்குள் அவருடைய மகன் சிவக்கொழுந்து கடையில் இருந்து இறங்கி வந்து சைக்கிளில் உள்ள சாமான்களை ஒவ்வொன்றாய் இறக்கி கடைக்குள் கொண்டு போனான். இந்தக் காரியத்துக்கு அவனுடைய தாயாரும் உதவி செய்தாள். செட்டியார் செம்பை வாசல்படியில் வைத்துவிட்டு, முகத்தைத் துடைத்துக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்தார்.

இதற்குள் பேப்பரைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு இளைஞர் தொண்டையைக் கனைத்துவிட்டு பலமாகச் சத்தம்போட்டு ஒரு செய்தியை வாசிக்க ஆரம்பித்தார். எல்லோரும் தங்கள் பேச்சுக்களை நிறுத்திவிட்டு கவனமாய்க் கேட்க ஆரம்பித்தார்கள். "மழை இல்லியே என்று இனி விவசாயிகள் கவலைப்பட வேண்டாம். புஞ்சைப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு சர்க்கார் கிணறு தோண்ட ஒரு கிணற்றுக்கு நானூறு ரூபாய்

இனாமாகக் கொடுக்கிறார்கள். புஞ்சை நிலங்களை வளமான தோட்டங்களாக்கி, உற்பத்தியைப் பெருக்கி, விவசாயிகள் லாபம் அடையக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்" என்பதுதான் செய்தியின் சாரம். இந்தச் செய்தி அங்கிருந்தவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. இனம் புரியாத சந்தோஷம் உண்டானது. ஆனால் அவர்களுக்கு நம்பச் சிரமமாக இருந்தது. செட்டியாரை தவிர ஒருவரும் நம்பவில்லை.

செட்டியார் பார்த்தார், "ராமசாமி அதை இப்படிக் கொண்டா" என்று வாங்கி அதைத் தானே உரக்கப்படித்தார். என்ன இருந்தாலும் விவசாயிகளால் நம்ப முடியவில்லை. அவர்களுடைய பேதமையை நினைத்துச் செட்டியார் மனதுக்குள் சிரித்துக் கொண்டார்.

அந்தக் கிராமத்திலேயே கொஞ்சம் சௌகரியமாக உட்கார்ந்து சாப்பிடக்கூடிய புள்ளிகளில் நம்முடைய செட்டியாரும் ஒருவர். அவருக்கு, செழிப்பான மந்தை நிலம் நாலரை ஏக்கர் உண்டு. மேலும் ஒரு சின்ன கடை ஒன்று அந்த ஊருக்குத் தகுந்தமாதிரி வைத்திருந்தார். நிலத்திலிருந்து வருகிற தானியம் சாப்பாட்டுக்கும் கடையிலிருந்து வருகிற வருமானம் குடும்பச் செலவுக்குமாக வண்டி ஒருமாதிரி ஓடிக் கொண்டிருந்தது.

இனாமாகக் கிணறு வெட்ட சர்க்காரால் கொடுக்கும் அந்த நானூறு ரூபாயையும் வாங்கி நம்முடைய நிலத்தில் ஒரு கிணறு வெட்டி, அதை நல்ல ஒரு தோட்டமாக ஆக்கிட்டால் என்ன? நிறைய வருமானமும் கிடைக்கும், ஏதோ நம்முடைய குழந்தை குட்டிகளுக்கு பிற்காலத்தில் ஒரு சௌகரியம் செய்து வைத்த மாதிரியாகவும் இருக்கும், என்று நினைக்கலானார் செட்டியார். தகப்பனார் குளித்து முடித்து வந்து கட்டிலில் உட்கார்ந்தார்.

கிணறு வெட்டவேண்டும் என்று செட்டியார் கூறினார். சர்க்கார் ரூபாய் நானூறு கொடுக்கிறது என்றதும், இரண்டாயிரம் கடன் கொடுத்த நல்லா இருக்கும். செட்டியார் சிரித்தார் கிணறு தோன்ற ஆரம்பித்தார். கிணறு தோண்ட ஆரம்பித்த செட்டியாருக்கு ரூபாய் முந்நூறும் போன மூலை தெரியவில்லை. ‘சரி, ஒரு ஐந்நூறு கடன் வாங்க வேண்டியதுதான்’ என்று தீர்மானித்தார். ரூபாய்க்குப் பக்கத்து ஊரிலுள்ள முதலாளி அய்யவார் நாயக்கரிடம் போவது என்று முடிவு செய்தார்.

கடன் வாங்கியது வீண்போகவில்லை என்று செட்டியார் நினைத்தார். தண்ணீரைக் கிணற்றில் கண்டு கொள்வதற்கும் வாங்கிய கடன் செலவாகி முடிவதற்கும் சரியாக இருந்தது. கிணற்றுக்கு மேல் பக்கம் உட்கார்ந்து செட்டியார் யோசனையில் ஆழ்ந்த வண்ணம் இருந்தார். கடையைச் சரியாகக் கவனித்து பல நாட்கள் ஆகிவிட்டது. நேரடியான கவனம் இல்லாததால் வியாபாரம் மந்தமாகி விட்டது; விற்பனையும் குறைந்து போய் விட்டதே, என்ற யோசனையில் பலமாக ஆழ்ந்திருந்தார்.

கிணற்றுக்குள் இருந்து, "நல்ல தண்ணீர், நல்ல தண்ணீர்" என்ற குரல் கேட்டுத் திரும்பினார் செட்டியார். சப்தங்கள் எல்லாம் நின்றன. செட்டியார் வேகமாகக் கிணற்றுக்குள் இறங்கினார். ஒருவாய்த் தண்ணீர் கையினால் அள்ளிக் குடித்தார். அவருக்கு உண்டான சந்தோஷத்துக்கு அளவே இல்லை. நம்மைப் பிடித்த பீடையெல்லாம் இன்றோடு ஒழிந்தது, என்று நினைத்தார். ஊறிய தண்ணீர் நல்லதாக இருந்ததே தவிர, அரை ஏக்கர் மகசூல் வைக்ககாணாது.

வீட்டிற்குச் சென்ற செட்டியார் தன்மகன் சிவக்கொழுந்தை அனுப்பி தன் கிணற்றிலிருந்து ஒரு குடம் தண்ணீரை எடுத்து வரச் சொன்னார். வீட்டிலுள்ளவர்கள் எல்லாம் தண்ணீரைச் சாப்பிட்டு "நன்றாக இருக்கிறதே" என்று வியந்தார்கள். நல்லசிவம் செட்டியாருக்கு மாத்திரம் தண்ணீர் ருசிக்கவில்லை! இதற்குள் இந்த நல்ல தண்ணீர் விஷயம் தீ போல் ஊருக்குள் பரவிற்று, ஆண்கள் செட்டியாரின் யோகத்தைப் பற்றிப் பேசினார்கள். பெண்கள் தண்ணீர் எடுக்க கிணற்றின்மேல் படையெடுத்தார்கள்.

செட்டியாருக்கு இப்பொழுது இரண்டு பிரச்சனைகள் எழுந்தன. புதிதாக ஒரு ஜோடி காளைகள் வாங்க வேண்டும்; கிணற்றை இன்னும் ஆழப்படுத்த வேண்டும். தகப்பனாரிடம் கலந்தார். "மாப்பிள்ளே, குடிதண்ணீருக்கு கஷ்டப்படுகிற ஒரு ஊரில் ஒரு நல்ல தண்ணீர் கிணஞு கிடைத்ததே பெரிய தருமம்.

கழுகுமலை சந்தையில், செட்டியார் இரண்டு செவலைக் காளைகள் பிடித்தார். விலை அறுநூறு ரூபாய், செலவு வேறு. கமலைக்கு வேண்டிய சாமான்கள், கூனை, வடம், வால் கயிறு, மண்வெட்டி முதலிய சாமான்கள் வாங்கி ஆயிற்று. இனி கூனைவால் தைக்கத் தோல் வாங்கவேண்டும். கூட வந்த விவசாயிகளோடு தோல் கடைக்குப் போனார் செட்டியார். தோலின் விலை ஐம்பது ரூபாய் என்று சொன்னான் கடைக்காரன். "என்ன, தோலின் விலை ஐம்பது ரூபாயா! என்னய்யா அநியாயமாக இருக்கிறதே. ஒரு கூனைக்கு வேண்டிய தோல் ஐம்பது ரூபாய் என்றால்.....", கூடவந்த விவசாயிகள் செட்டியாரைப் பார்த்துச் சிரித்தார்கள். அதில் ஒரு வயசான விவசாயி "அட பயித்தியக்காரச் செட்டியாரே, விவசாயம் செய்கிறதென்றால் என்னவென்று நினைத்துக்கொண்டீர்? 'விவசாயி கணக்குப் பார்த்தால் தார்க்குச்சிதான் மிச்சம்' என்று சொன்னவன் பயித்தியக்காரனா" என்று கேட்டார். கடேசியில் நாற்பது ரூபாய் என்று பேசி சுமாரான தோல் ஒன்று எடுத்துக் கொண்டு ஊருக்கு வந்தார்.

தோட்டத்தில் மிளகு செடி நட ஏற்பாடு நடந்தது. அந்த சமயம் மிளகு வத்தலுக்கு ஏகப்பட்ட கிராக்கி, பொதி ஒன்றுக்கு முந்நூறு ரூபாய் விற்றது. ஒரு ஏக்கரில் சுமாராக விளைந்தாலும் ஐந்து பொதி விளையும். செட்டியார் தோட்டத்துக்கு வேண்டிய உரங்களைப் பக்கத்து ஊர்களிலெல்லாம் சென்று விலைக்கு வாங்கினார். வாடகை கொடுத்து

வண்டிகளில் கொண்டு வந்து சோர்த்தார். மேற்கே ஒரு ஊரில் மிளகு நாற்று வாங்க முப்பது ரூபாய் கொடுத்து ஒரு ஆளை அனுப்பினார். இப்படியாக காரியங்கள் வெகு தடபுடலாக நடந்து கொண்டிருந்தது.

அந்த வேளையில் செட்டியாருக்கு ஒரு சமாச்சாரம் வந்தது. அது உண்மை என்றும் தெரியவந்தது. சர்க்காரில் "இனாமாகப் பணம் வாங்கிக் கிணறு வெட்டியவர்கள் மூன்று வருஷத்துக்கு மிளகு, பருத்தி போன்ற பணப் பயிர்கள் சாகுபடி செய்யக்கூடாது. உணவுப் பொருள் தான் சாகுபடி செய்ய வேண்டும்" இப்படி சர்க்கார் அதிகாரிகள் சொன்னார்கள். 'ஆஹா மோசம் போச்சே' என்று செட்டியார் தலையில் கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டார். இந்தப் பேரிடியிலிருந்து மீள அவருக்கு பல நாட்கள் ஆகியது. தகப்பனார் நல்லசிவம் செட்டியாரோ படுத்த படுக்கையாகி விட்டார்.

கேப்பைப் பயிர் 'கன்னங்கரே' என்று செழித்து வளர்ந்திருந்தது. பார்ப்பவர்கள் கண்திருஷ்டி போடாமல் இருப்பதற்காக, ஒரு மண் கலயத்தின் மீது சுண்ணாம்பு அடித்து அதன்மேல் கறுப்புப் புள்ளிகள் குத்தித் தோட்டத்தின் நடுமையத்தில் ஒரு கம்பை ஊன்றி அந்தக் கலயத்தை அதன்மேலில் கவிழ்த்தி வைத்தார் செட்டியார். பயிர் பொதிவுக்கு வந்த சமயத்தில் கிணற்றில் தண்ணீர் இல்லை. மழை பெய்வதாகக் காணோம். ஊரிலுள்ள தோட்டப்பயிர்களும் மானாவாரி புஞ்சைப் பயிர்களும் வாடின; கருகின.

ஊரார் எல்லோரும் சேர்ந்து மழைக்கஞ்சி எடுத்தார்கள்; கொடும்பாவி கட்டி இழுத்தார்கள். ஊர்தேவதைகளுக்கும் வன தேவதைகளுக்கும் கிடாய் வெட்டிப் பொங்கலிட்டார்கள். விராட பர்வம் வாசித்தார்கள். தினப்பத்திரிகைகளில் போட்டிருக்கும் காலநிலையை ஊன்றிப் படித்தார்கள். சாதாரண ஜோஸியர்களிடம் கூட "மழை எப்பொழுது பெய்யும்?" என்று கேட்டார்கள். மழை பெய்வதாக இல்லை. வெள்ளைவெயில் அடித்தது. என்றாவது ஒரு நாள் கருமேகங்கள் கூடி சூரியனை பலமாகப் பந்தல்போட்டு மறைக்கும். சூல்மேகங்கள் கனம் தாங்காது இப்போது பூமியில் இறங்கிவிடும் போலிருக்கும். திடீரென்று எங்கிருந்தோ பெருங்காற்று வந்து மேகங்களையெல்லாம் பாய் சுருட்டுவது போல் சுருட்டிக்கொண்டு போய்விடும்.

செட்டியாரின் முகத்திலிருந்து கவலை மாறி பீதிபடர்ந்தது. பயிர்கள் எல்லாம் கருகிச் சருகாக மாறின. துட்டு இருப்பவர்கள் மொச்சக்கொட்டை வாங்கிச் சாப்பிட்டார்கள். கையில் துட்டு இல்லாதவர்கள் காடுகளில் முளைத்துள்ள சாணைக்கிழங்குகளைத் தோண்டி எடுத்து வேகவைத்துத் தின்றார்கள். சாவு வடிவம்மாளுக்கு வந்தது. அப்பாவு செட்டியார் கிழே விழுந்து புரண்டார்.

வடிவம்மாளை செட்டியாரின் தோட்டத்திலேயே அடக்கம் செய்தார்கள். அமரக்கிரியைகள் எல்லாம் முடிந்த சிலநாட்கள் கழித்து செட்டியாரை வரச்சொல்லி ஆள் அனுப்பினார் நாயக்கர். செட்டியார் போனார். தாயார் இறந்த விஷயங்களையெல்லாம் துக்கம் விசாரித்துவிட்டு "ஏதோ ரொம்பவும் கஷ்டப்பட்டு வீட்டீர்கள் ரூபாயில் கொஞ்சமாவது கொடுக்க முடியவில்லை என்றாலும் இந்த வருஷ வட்டியாவது கொடுத்தால் நன்றாக இருக்கும்" என்றார். செட்டியார் ஒன்றும் பேசவில்லை.

ஊரிலிருந்து ஏழை விவசாயிகள் எல்லாம் தஞ்சாவூர் என்றும் ஆந்திரதேசம் என்றும் பஞ்சம் பிழைக்கச் சென்றார்கள். செட்டியார் வீட்டையும் நிலத்தையும் தவிர அவர்களிடம் என்ன இருக்கிறது? இரண்டையுமே நாயக்கருக்கு தாரை வார்த்துவிட்டார்கள். வளர்ந்த அந்தக் கிராமத்தைவிட்டு, தவழ்ந்து விளையாடிய அந்த மண்ணைவிட்டுப் புறப்பட்டார். அவருடைய தோட்டத்தின் வழியாகத்தான் பாதை, தன்னுடைய நிலத்தின் மேல் கால் பட்டதும் செட்டியாருக்கு உடம்பு புல்லரித்தது. கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது. தாயாரை அடக்கம் செய்த இடத்துக்கு வந்ததும் அப்படியே தரையில் மரம் போல் சாய்ந்தார். செட்டியார் குடும்பத்தாருடன் ரயிலேறி சென்றார்.

மதுரையில் செட்டியார் பிளாட்பாரத்திலுள்ள கடைகளில் குழந்தைகள் தின்பதற்கு பலகாரம் வாங்கினார். பத்திரிகை ஒன்று வாங்கினார். ஒருவர் செட்டியாரின் பக்கத்தில் கிடந்த பத்திரிகையை எடுத்துப் படித்துக் கொண்டிருந்தார். "கிணறு வெட்ட சர்க்காரால் இனாமாக ரூபாய் வழங்கப்படும் திட்டத்தை, விவசாயிகளின் நன்மையை உத்தேசித்து நீடித்திருக்கிறார்கள். இந்த வருஷம் கிணறு ஒன்றுக்கு ஐநூறு ரூபாய் இனாமாகக் கிடைக்கும். விவசாயிகள் இத்திட்டத்தைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கி தேச சுபிட்சத்துக்குப் பாடுபடும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்".

செய்தியைக் கேட்ட மற்றவர்கள் சந்தோஷப்பட்டார்கள். செட்டியாரின் ரோமங்கள் குத்திட்டு நின்றன. கண்கள் கோவைப்பழம் போல் 'ஜிவ்' என்று சிவந்தன. வேகமாகப் பாய்ந்து பத்திரிகையை 'டபக்' என்று பிடுங்கிசுக்குநூறாகக் கிழித்தார். எல்லோரும் திகைத்தார்கள், என்ன காரணம் என்று ஒருவருக்கும் ஒன்றும் விளங்கவில்லை! நல்லசிவம் செட்டியார் மாத்திரம் ஒரு கோணல் புன்னகை செய்தார்.

## கோமதி

கோமதி செட்டியாருக்கு வயசு முப்பது. அவனது பெற்றோர்கள் அவனுக்கு பெண்குழந்தை என்று நினைத்துத்தான் கோமதி என்று பெயர் வைத்தார்கள். அவனுக்குமுன் பிறந்த ஏழும் அசல் பெண்கள். இவனுக்கு சிறு பிராயத்திலிருந்தே ஜடைபோட்டு பூ வைத்துக் கொள்வதிலும், வளை அணிந்து கொள்வதிலும் கொள்ளை

ஆசை, உருவம் ஆணாக இருந்தாலும், இயல்பு அச்சு அசல் பெண்ணாகவே வளர்ந்து வந்தான். நீட்டி, நீட்டி தலை அசைத்துப் பேசுவது அவனுக்கு குழந்தையாக இருக்கும்போதுதான் பொருத்தமாக இருந்தது. பெண் குழந்தைகளோடுதான் விருப்பமாக விளையாடப் போவான். ஆண்களோடு விளையாட வேண்டியது ஏற்பட்டுவிட்டால் வீடுகட்டி, கல்யாணம் பண்ணி விளையாடும் விளையாட்டில் தான் பிரியம் அதிகம். அதிலும் மணப்பெண்ணாக தன்னை வைப்பதென்றால்தான், விளையாட வரச் சம்மதிப்பான்.

வயசு ஆக ஆக அவன் ஆண்களோடு சேர்ந்து பழகுவதையே விட்டு விட்டான். பெண்கள் இருக்கும் இடங்களில்தான் சதா அவனைப் பார்க்கலாம். ஏதாவது அதிசயமான சங்கதியைக் கேள்விப்பட்டால் பட்டென்று கையைத்தட்டி இடது கை மணிக்கட்டின் மேல் வலது முழங்கையை ஊன்றி ஆள்காட்டி விரலைக் கொக்கிபோல் வளைத்துத் தன் மூக்கின்மேல் ஒட்டவைத்துக் கொள்வான். அகலமான கருஞ் சாந்துப் பொட்டை வைத்து வெற்றிலை போட்டுக் கொண்டு கீழ் உதட்டைத் துருத்தியும், நாக்கை நாக்கை நீட்டியும் சிகப்பாகப் பிடித்திருக்கிறதா என்று அடிக்கடி பார்த்துக் கொள்வான். தலைமுடியை அள்ளிச் சொருகி ‘கொப்பு’ வைத்து பூ வைத்து க் கொள்ளுவான்.

துண்டை அடிக்கடி மாராப்பை சரி பண்ணுவதுபோல் இழுத்து இழுத்து விட்டுக்கொண்டு இடுப்பை இடதும் வலதும் ஆட்டி அசல் பெண்களைப் போல் கையை ஒய்யாரமா வீசி நடப்பான். பெண்கள் இவனை விதியாசமாகவே நினைப்பது இல்லை. நடத்துவதும் இல்லை. இவன் எங்க சென்றாலும் இவனைப் பிரியமாக வைத்துக் கொள்வார்கள். ஆண் பெண் சம்பந்தமான பால் உணர்ச்சி கதைகளைச் சொல்லி அவர்களை மகிழ்விப்பான்.

இவனுக்கு ஒரே ஒரு கலை அற்புதமாகக் கைவந்திருந்தது. சமையல் பண்ணுவதில் இவனுக்கு நிகர் இவனேதான். விருந்து நாட்களில் கோமதி கோமதி என்று இவனுக்கு ஏகப்பட்ட கிராக்கி. ஒரு தடைவ, தூரத்து ஊரிலுள்ள தனது பந்துக்கள் வீட்டுக் கல்யாணத்திற்குப் போகும்படி நேர்ந்தது இவனுக்கு. கல்யாண வீட்டுக்கு வந்திருந்த பெண்களில், பிரசித்தி பெற்ற ரகுபதி நாயக்கரின் வீட்டுப் பெண்களும் வந்திருந்தார்கள். அவர்களுடைய அழகையும் நகை ஆபரணங்களையும் உடைகளையும் உல்லாசமான பேச்சுக்களையும் கண்டு கோமதி அப்படியே சொக்கிப் போய் விட்டான்.

ரகுபதி நாயக்கரின் இளையபேத்தி குமாரி சுலோ இவனைக் கண்டதும், இவனுடைய அங்க அசைவுகளையும் தளுக்கையும் கண்டு தன் வைர வளையல் குலுங்கக் கைகொட்டிக் கலகலவெனச் சிரித்தாள். ரகுதி நாயக்கரின் வீட்டுப் பெண்களுக்கு, இவனைப் பற்றி அங்கிருந்த ஒருத்தி விஸ்தாரமாகச் சொல்லி அறிமுகம் செய்துவைத்தாள்.

பெண்கள் விலகி உட்கார்ந்து அவனைத் தங்கள் அருகே உட்கார வைத்துக்கொண்டார்கள். கோமதி ஏதோ வாய்திறந்து பேச ஆரம்பித்தபோது சுலோ குனிந்து தன் காதை அவன் வாய் அருகே நீட்டினாள். ரகுபதி நாயக்கரின் வீட்டுப்பெண்கள் எல்லோருமே ஒரு கையில் வைர வளையல்களும் ஒரு கையில் கருவளையல்களும் அணிந்திருப்பார்கள். அந்த வீட்டுப் பெண்களை நினைத்தாலே சிவந்த உதடுகளும் வெண்மையான பற்களுமே ஞாபகத்துக்கு வரும்.

ரகுபதி நாயக்கரின் பேரனாரான ரகுபதி நாயக்கர் தன் குடும்பத்திலுள்ள அழகை மேலும் மேலும் வளர்த்துச் செழுமைப்படுத்தினார். அழகுமிகுந்த நான்கு புத்திரர்களுக்கும் ஆந்திர தேசத்துக்குச் சென்று தங்கவிக்ரகங்களைப் போலுள்ள எட்டு ஸ்திரி ரத்தினங்களைக் கொண்டு வந்து ஆளுக்கு இரண்டு பேதை கல்யாணம் பண்ணி வைத்தார். அழகுமிகுந்த மாப்பிள்ளைகளையே தேர்ந்தெடுப்பார். இந்த மாப்பிள்ளைகளுக்கு சொத்து இருக்கவேண்டும் என்று அவசியமில்லை. அழகுமிகுந்த பெண்ணையும் கொடுத்து அவனுக்கு வேண்டிய சொத்தையும் எழுதி வைப்பார்.

இப்பேர்ப்பட்ட ஒரு இடத்துக்குத்தான் கோமதி சமையல் உத்தியோகத்துக்குப் பெட்டி படுக்கையுடன் போய்ச் சேர்ந்தான். எல்லோருக்கும் ஒரு பெரிய விருந்தே நடந்தது. அவன் படைத்த உணவை ருசிபார்த்தபின்தான் பெண்களுக்கு அவன் மீதுள்ள இளப்பம் ஓரளவு நீங்கியது. அவனை பரிவாகவும் இரங்கத்தக்க ஒரு ஜீவனாகவும், தங்களோடு, தங்கள் இனத்தோடு சேர்ந்த ஒரு ஆத்மாவாகவும் நடத்தினார்கள். சாப்பிட்டு முடித்த ரகுபதி நாயக்கர், இந்தப் புது சமையல்காரனை பார்க்கவேண்டுமென்று சொல்லி மாடியிலுள்ள தன் பகுதிக்கு வரவழைத்தார். அவனுடைய பயத்தைக் கண்டு ரகுபதி நாயக்கர் இன்னும் உரக்கச் சிரித்தார். வீட்டுப் பெண்கள் எல்லாரும் சிறிதுரு தள்ளி நின்று இதை வேடிக்கை பார்த்தார்கள்.

பின்பு எழுந்து தன் பீரோவைத் திறந்து ஒரு ஜோடி பட்டுக்கரை வேஷ்டியை எடுத்து "இந்தா, பிடி" என்று கொடுத்தனுப்பினார். கோமதி அந்த வேஷ்டிகளை கடைசி வரையும் உடுத்தவே இல்லை. அதிகாலையில் பரபரப்பாகவும் உற்சாகமாகவும் கோமதி வேலை செய்துகொண்டு இருந்தான். பெண்கள் குளிக்கும் அறைகளில் கொண்டுபோய் வெந்நீர் ரொப்புவதும், சோப்புகளும் துவாலைகளைக் கொண்டு கொடுப்பதும் அவர்களுக்கு முதுகு தேய்த்து விடுவதுமாக வழக்கமான வேலைகளில் பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தான்.

சுலோவின் அண்ணன் ரகு பட்டணத்திலிருந்து இன்று மாலை லீவுக்கு வருகிறான். தன் அண்ணனைப்பற்றி சுலோ கோமதியிடம் பல சந்தர்ப்பங்களில் சொல்லக் கேட்டிருக்கிறான்... அவருக்கு என்னென்ன சமையல் வகைகள் பிடிக்கும் என்றெல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தான் கோமதி. போர்டிகோவுக்குள் கார் வந்து நின்றதும்

முன்பக்கம் பெண்களெல்லாம் வந்தார்கள். கோமதி மட்டும் கதவு இடுக்கு வழியே ஒளிந்துகொண்டு பார்த்தான்.

ஆண்அழகனான ரகு ஆஜானுபாகுவாக இறங்கி ஜம் என்று நின்றான். ரகுவைப் பார்த்த கோமதிக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. திடீரென்று எங்கேயும் இல்லாத வெட்கம் வந்து அவனைச் சூழ்ந்துகொண்டது. ஒருவரும் பார்ப்பதற்குள் உள்ளே ஒரே ஓட்டமாகப் போய் குளிப்பறைக்குள் போய்க் கதவை பூட்டிக் கொண்டான்! இரவு சாப்பாட்டின்போது ரகுவுக்கு சுலோவே பரிமாறினாள். கோமதி மறைவில் நின்று கொண்டு ரகு சுவைத்துச் சாப்பிடுவதையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

கோமதிக்கு உடம்பெல்லாம் வேர்த்து படபடவென்று வந்தது. தன்னைச் சிறிது ஆசுவாசப்படுத்திக்கொண்டு நிலைக் கண்ணாடியின் முன் போய் நின்று தன்னை நன்றாகப் பார்த்து, தலையிலுள்ள பூவை சரிப்படுத்திக்கொண்டான். பால் டம்ளரை ஒரு தட்டில் எடுத்துக் கொண்டு மாடியை நோக்கி இப்பொழுதுதான் புதுப்பெண் முதல் இரவுக்குப் போகிறதைபோல் அடிமேல் அடிவைத்து ஏறிச்சென்றான். தட்டோடு கை நடுங்கியதால் எங்கே பால் கொட்டி விடுமோ என்று நினைத்து தம்ளரை ஒரு கையால் பிடித்துக்கொண்டே போனான்.

ரகு திரும்பிப் பார்த்தான், முகத்தைச் சுழித்தான், இந்த ரஸவிஹாரத்தை அவன் ஆண்மை நிறைந்த உளத்தால் தாங்க முடியவில்லை. சுலோவை இதெல்லாம் என்ன என்ற முறையில் கோபத்தோடு பார்த்தான். சுலோ கலகலவென்று சிரித்தாள். கருங்கல் தரையில் கண்ணாடி வளையல்கள் தொடர்ந்து விழுந்து உடைவதுபோல் இருந்தது அவளுடைய சிரிப்பு. இந்த இக்கட்டான நிலையில் என்ன செய்வதென்றே தெரியவில்லை கோமதிக்கு, அவமானம் தாங்கவில்லை. தட்டை மேஜைமீது வைத்துவிட்டு கையால் முகத்தை மூடிக்கொண்டான். கோமதி துயரம் தாங்காமல் வெளியே ஓடுவதைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

"இரக்கப்படத் தகுந்த ஒரு ஜென்மத்திடம் இப்படிக் கொடுமையாக நடந்து கொள்ளலாமா?" என்று கேட்டாள். ரகுவுக்கும், 'பாவம்' நாம் ஏன் இப்படி நடந்துகொண்டோம் என்று பட்டது. "தான் இனிமேல் அவனிடம் சுமுகமாக நடந்து கொள்வதாகக்" கூறினான். அன்றிரவு தனக்குச் சாப்பாடே வேண்டாம் என்றுவிட்டு வெறும் தரையில் படுத்துகொண்டான் கோமதி. மறுநாள் சுலோ கோமதிக்கு எவ்வளவோ சமாதானம் சொல்லவேண்டி இருந்தது. என்ன சொல்லியும் கோமதிக்கு மனசு சமாதானப்படவில்லை. ரகு வந்து கோமதியிடம் சிரித்துப் பேசியதும் கோமதிக்கு எல்லாம் சரியாகப் போய்விட்டது; பழைய கோமதி ஆனான். குறிப்பறையில் ரகுவுக்கு தண்ணீர் எடுத்து வைத்தான். சோப்பும் துவாலையும் கொண்டு வைத்தான். ரகுவும் சந்தோஷமாகக் குளிக்க வந்தான்.

கோமதியை வெளியேறி கதவைப் பூட்டிக் கொண்டான் ரகு. அந்தக் கதவுக்குமேல் ஒரு சிறு பாட்டு ஜன்னல் ஒன்றிருந்தது. பக்கத்திலிருந்த பெரிய ஆட்டுரல்மேல் ஏறி அந்த ஜன்னல் வழியாய்க் குறிப்பறைக்குள் திருட்டுத்தனமாக வேறு எதையோ பார்ப்பதுபோல் பார்த்துக் கொண்டிருந்தான் கோமதி, சுலோ இந்த நாடகத்தையெல்லாம் ஒன்று விடாமல் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளால் சிரிப்பை அடக்க முடியவில்லை. கண்களில் பிதுங்கும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே அப்பால் போய்விட்டாள். இன்னுங்கொஞ்சம் வாங்கிக் கொள்ளுங்கள் என்று கோமதி பலமாக உபசரித்துக் கொண்டே ரகுவுக்குப் பரிமாறினான்.

தன் மனதுக்குப் பிடித்தவர்களை தான் சமைத்ததை தன் கையாலேயே பரிமாறி அவர்கள் உண்பதைக் காண்பதில் எப்பவுமே கோமதிக்கு பரம திருப்தி. எல்லோரும் சாப்பிட்டு மாடிக்குப் போனபின் கோமதி பெண்களின் குளிப்பறைக்குப் பக்கத்தில் தன்கென்று ஒதுக்கப்பட்டுள்ள தன்னுடைய தனித்த அறையில் வெற்றிலைப் பாக்கு, புகையிலைகளைப் போட்டு முழக்கிக் கொண்டிருந்தான். சந்தோஷத்தை அவனால் அடக்க முடியவில்லை. குரலெடுத்துப் பாடவேண்டும் போல் இருந்தது.

இரவு சாப்பாடு முடிந்தது, வழக்கம்போல் கோமதி ரகுவுக்கு பால் எடுத்துக்கொண்டு போனான். ரகு தனியாக உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தான். பக்கத்தில் கொண்டு வந்து வைத்துவிட்டு எதிரேயுள்ள கண்ணாடியில் தன் முகத்தை இப்படியும் அப்படியுமாக ஒரு தடைவ பார்த்துக்கொண்டான். ரகுவுக்கு படுக்கையைத் தட்டிப் போட்டான். மீண்டும் பக்கத்தில் வந்து உராய்ந்துகொண்டு "பாலைச் சாப்பிடுங்கோன்னா; ஆறிப்போகிறது" என்று கொஞ்சலாகச் சொன்னான். சொன்னதோடு அவன் நின்றிருந்தாலும் ரகுவிற்கு கோபம் வந்திருக்காது; நாடியை வேறு தொட்டுத் தாங்கினான். ரகு பேனாவை எறிந்துவிட்டு அப்படியே கோமதியின் செவிட்டில் ஓங்கி ஒரு அறை விட்டான். இதை கோமதி எதிர்பார்க்கவில்லை. கன்னத்தைக் கையால் பொத்திக்கொண்டு ரகுவைப் பார்த்து சிரிக்க முயன்றான்; சிரிக்கமுடியவில்லை. பீதியும் சிரிப்பும் மாறிமாறி முகத்தில் தோன்றி இறுதியில் பீதி முற்றி பயங்கரமாக முகம் மாறியது. இது ரகுவுக்கு இன்னும் ஆவேசத்தை உண்டு பண்ணியது, தன் வலது காலை உயர்த்தி ஓங்கி அவன் நெஞ்சில் உதைத்துத் தள்ளினான்.

அன்று இரவு மூன்று பேர்களும் தூங்கவில்லை. குளிப்பறைக்குப் பக்கத்திலிருந்த அறையிலிருந்து இரவு பூராவும் ஒப்பாரி வைத்து அழும் சோகக் குரல் கேட்டுக் கொண்டே இருந்தது. ரகு ஏதோ அவசர ஜோலியாக பட்டணத்துக்குப் புறப்பட்டுவிட்டான். கோமதி தன் அறையிலிருந்து வெளியே வரவே இல்லை. "அவனுக்கு உடம்புக்கு சரியில்லை போலிருக்கிறது. இன்று வெளியிலேயே காணோம்" என்று சொன்னார்கள். சுலோ ஒன்றுமே தெரியாதது போல் மௌனமாக இருந்தாள். ரகு கையில் ஒரு பொட்டலத்துடன் கோமதியின் இருப்பிடம் சென்றான். அந்தப் பொட்டலத்தை கோமதியிடம் கொடுத்தான் ரகு.

கோமதி பொட்டலத்தை அவிழ்த்தான் நிறைய செவந்தி பூக்களும், அருமையான கருவளைகளும் இருந்தன. பெண்களெல்லோரும் சிரித்தார்கள். கோமதியும் சிரித்தான்; அவன் கண்களில் கண்ணீர் வந்தது. ரகு ஊருக்குச் சென்று பல நாட்கள் ஆகிவிட்டது. கோமதி எல்லா வேலைகளையும் முன்போலவே செய்கிறானென்றாலும் அவன் முன்போல கலகலப்பாக இல்லை. தனியாக ஏதாவது ஓரிடத்தில் இருந்துகொண்டு எதையோ பறிகொடுத்தவன்போல் எதையாவது பார்த்துக் கொண்டிருப்பான். மனதை அறுக்கும் பெருமூச்சுக்களை அடிக்கடி விடுவான். உடம்பு மெலிந்து விட்டது. சுலோ இதையெல்லாம் மௌனமாக கவனித்துக்கொண்டு வந்தாள்.

ஒருநாள் இரவு இரண்டுமணி இருக்கும், சுலோ தற்செயலாகக் கண் விழித்தாள், கீழே கோமதியின் அறையில் இன்னும் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. பார்த்தாள், கோமதியைக் காணோம். உள்ளே ஒரு பெண் மட்டும் தனியாக உட்கார்ந்து கொண்டிருப்பது தெரிந்தது. திகிலும் ஆச்சரியமாகவும் இருந்தது. யார் இந்தப் பெண்; கோமதி எங்கே?

அரவமில்லாமல் சுலோ பக்கவசத்திலிருந்த ஜன்னல் வழியாகப் போய்ப் பார்த்தாள். அந்தப் பெண் முழங்காலைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். கைகள் நிறைய கருவளைகள் போட்டுக் கொண்டிருந்தாள். தலையில் ஜடைநிறைய செவ்வந்திப் பூக்கள். அவள் எதிரே ரகுவின் போட்டோ படம் இருந்தது! சுலோ முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். அந்த பெண்ணின் கண்களிலிருந்து கண்ணீர் தாரையாக இறங்கிக் கொண்டிருந்தது. முன்னால் குனிந்து வளையல்கள் மீது முகத்தைக் கவிழ்ந்து கொண்டாள் அந்தப் பெண். அவளுடைய கண்களின் நீர்பட்டு அந்தக் கருவளைகள் நனைந்து அதிலிருந்து பிரகாசமான வைரங்களைப்போல் கண்ணீர் சொட்டிக் கொண்டிருந்து.

எதிரேயுள்ள ஜன்னல் வழியாக இப்பொழுது நன்றாகப் பார்க்க முடிந்தது சுலோவால், அடையாளம் கண்டு கொண்டாள். சேலையுடுத்திக்கொண்டிருந்த அது வேறு யாருமில்லை... கோமதிதான்! சுலோ திடுக்கிட்டுப் போனாள். பீதியால் நிலைகொள்ள முடியவில்லை. திரும்பி மாடிப் படி ஏற காலைத் தூக்கி வைக்க முயன்றாள் முடியவில்லை, அப்படியே உட்கார்ந்துவிட்டாள்.

## பலாப்பழம்

சங்கரம்மாளுக்கு இது தலைப்பிரசவம். கல்யாணமாகி ஆறு வருஷங்களுக்கு அப்புறம் இப்பொழுதுதான் குழந்தை பிறந்திருக்கிறது. ஆண் குழந்தை. மருத்துவச்சி குழந்தையைக் குளிப்பாட்டி கை நாழிக்கு மூன்று படிக் கம்பம்புல்லை ஒரு சுளகில் போட்டுப் பரப்பி அதன்மேல் மெல்லிய ஒரு மஞ்சள் துணியை விரித்து குழந்தையைப்படுக்க வைத்துக் கொண்டு வந்தாள், சேனை வைக்க. குழந்தையை எல்லோரும் சுற்றிக்கொண்டார்கள்.

வாடை தாங்க முடியாமல் குழந்தை கிடுகிடுவென்று நடுங்கியது. கருப்பு நிறம். அப்பொழுதுதான் அறுத்து முடியப்பட்ட இரத்தம் கசியும் நீண்ட மாமிசக் கொப்பூழ். கைகளிலும் கால்களிலும் ஆறு ஆறு விரல்கள் இரண்டு காதுகளிலிருந்து வெண்மையான சீழ் வடிந்துகொண்டே இருந்தது.

பெண்கள் ஒருவருக்கொருவர் அர்த்த புஷ்டியுடன் பார்த்துக்கொண்டார்கள். சங்கரியின் அத்தையம்மாள் ஒரு வெண்கலக் கிண்ணத்தில் கருப்பட்டியும் விளக்கெண்ணெயும் குழைத்து அதில் ஒரு இருப்பு எழுத்தாணியை விரித்துப்போட்டுக் கொண்டு வந்தாள். குழந்தையின் தகப்பனாரையே சேனை வைக்கக் கூப்பிடுவது என்று தீர்மானமாயிற்று. வெளியே தொழுத்திண்ணையில் உட்கார்ந்து, பெருமிதத்தால் தரையைப் பார்த்துக்கொண்டிருந்த பொன்னுசாமியைத் தாயின் குரல் உள்ளே அழைத்தது.

உள்ளே அரங்கு வீட்டிற்குள் குனிந்துகொண்டே வந்து, கிழக்கு முகமாய்ப் பார்த்து நின்று, மேல்வேஷ்டியை பவ்யமாக இடுப்பிலே கட்டிக் கொண்டு பணிந்து, வலதுகையை இடது கையால் தாங்கி மூன்று முறை எழுத்தாணியின் நுனியால் தன் அருமை மகனின் நாக்கில் பதனமாகச் சேனை வைத்தார். அத்தையம்மாள் கோபமாக முகத்தை வைத்துக் கொண்டு சங்கரம்மாளப் பார்த்துக் கேட்டாள். "நீ மசக்கையோடு இருக்கும்போது உனக்கு என்ன குறை வைத்தோம்? அப்படி ஏதாவது வேண்டி இருந்தாலும் எங்களிடம் மனம்விட்டுச் சொல்லியிருந்தாலென்ன?" அத்தையம்மா அதே கோபத்தில் பேசினாள்.

சங்கரம்மாள் பரிதாபத்தோடு தன் கணவனின் முகத்தைப் பார்த்தாள். பொன்னுசாமி தலை குனிந்து கொண்டார். ஒருதடவை குழந்தையின் காதுகளையும் கைகால்களையும் பாாத்தார். மீண்டும் தலைகுனிந்து கொண்டார். மசக்கை சமயத்தில் சங்கரம்மாவின் வீட்டிலிருந்து பெட்டி பெட்டியாக பட்சஷணங்கள், பலகாரங்கள் எல்லாம் வந்தது. வாஸ்தவம்தான், புக்ககத்திலும் அவளுக்கு ஒரு குறையும் கிடையாது. இரண்டும் ஏழைக் குடும்பங்கள்தான். சங்கரம்மா பொன்னுக்கோ, வைரத்துக்கோ, பட்டாடைகளுக்கோ மசக்கையாக இருக்கும்போது ஆசைப்படவில்லை. அவள் கர்ப்பிணியான உடன் அவளுக்கு வந்ததெல்லாம் ஒரே ஒரு ஆசைதான். மிகமிக அற்ப ஆசை; ஒரு பலாச்சுளையாவது தின்ன வேண்டுமென்பதுதான்!

விசித்திரம் என்ற ஒன்று இருக்கத்தான் செய்கிறது. அந்தக் கரிசல் பூமியில் பலாப்பழத்துக்கு எங்கே போக? மேலும் அது பலாப்பழ சீசனும் இல்லை. 'கொறித்த' ஒரு பருக்கைகூட வயிற்றில் நில்லாது, ஆயாசம் மிகுந்து சதா நாக்கில் உமிழ்நீர் கொப்பளிக்க, வறட்டு வாந்தியே எடுத்துக்கொண்டிருந்த சமயம், எத்தனைவகை ஊறுகாய்களும், மண்வகைகளும், சாம்பல்களும் இருந்தென்ன? ஒரே ஒரு சுளை, ஒரு அருமையான

"கம்"மென்று மணம் வீசும் ஒரு பலாச்சுளை மட்டும் இருந்தால்.... சங்கரம்மாளின் அரைகுறை தூக்கத்திலும், பகல் கனவுகளிலுமெல்லாம் பலாப்பழம் வரும்.

அவன் சின்னப் பெண்ணாக இருக்கும்போது ஏழெட்டு வயசிருக்கும். சிகப்பாக, குண்டு குண்டென்று அழகாக இருப்பாள் அவர்கள் வீட்டுக்கு எதிர் வீட்டில் ஒரு வாத்தியாரம்மாள் வந்து குடியிருந்தாள். அந்த அம்மாளுக்கு சொந்த ஊர் தென்காசிக்குப் பக்கத்தில் உள்ள இலஞ்சி என்ற கிராமம். ஒரு தடைவ லீவில் தன் சொந்த ஊர் போகும்போது, அந்தச் சிறுமி சங்கரி மீது ஆசைப்பட்டு தன்னுடன் கூட்டிக்கொண்டு போனாள்.

அங்கே வைத்துத்தான் சங்கரி முதல் முதல் பலாப்பழம் தின்றது. நினைக்கும்போதெல்லாம் நாக்கில் ஜலம் ஊறும். தேனில் தோய்த்துத் தின்ற அந்தப் பலாப்பழத்தை இந்த ஜென்மத்துக்கெல்லாம் மறக்க முடியுமா? "எனக்குப் பலாப்பழம் திங்கணும்ணு ஆசையா இருக்கு" ஒரு நாள் மனம் விட்டுக் கேட்டேவிட்டாள், தன் கணவனிடம். "என்னது! பலாப்பழமா?" பொன்னுசாமிக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவருடைய நெற்றிப் பொருத்தின் நரம்புகள் புடைத்து தலைவலி வரும்போல் தோன்றியது.

பொன்னுசாமி பலாப்பழத்தைப் பார்த்திருக்கிறார். ஒரே தடைவ அதைச் சாப்பிட்டுத் தொலைத்திருக்கிறார். சின்னப்பிள்ளையாக இருக்கும்போது ஒரு தடைவ கழுகு மலைக்குத் திருவிழாப் பார்க்கப்போயிருந்தார். எல்லாரும் வாங்குகிறார்களே என்று அவரும் வாங்கி - வாங்கும் போதே அதன் வாடை அவருக்குக் குமட்டியது. அப்புறம் ரொம்பநேரம் வரைக்கும் மண்டைப் பொருத்தில் தாங்கமுடியாத தலைவலி, அதிலிருந்து தூரத்தில் பலாப்பழம் வருகிறது என்று சொன்னாலே போதும், ஓட்டம்தான்.

ஆனால் இப்பொழுதோ? மனைவி கர்ப்ப சங்கை; அவளது ஆசை; அவள் இதுவரை எதையும் மனம்விட்டுக் கேட்டவள் அல்ல. இப்பொழுது எப்படியாவது ஒரு பலாப்பழம் கொண்டு வந்துவிட வேண்டியதுதான். இப்பொழுது திருவிழாக்காலம் கூட இல்லையே. திருவிழாவில்தான் பலாப்பழம் கிடைக்கும் என்ற நினைப்பு அவருக்கு. அக்கபக்கம் விசாரித்துப் பார்த்தார். "திருநெல்வேலி போனால் கிடைக்கலாம்" இப்படிச் சிலர் சொன்னார்கள்.

நாசமாய்ப் போகிற அந்தப் பலாப்பழமத் எங்கேதான் கிடைக்குமோ. ஒரு ஐந்து ரூபாய் கடன் வாங்கிக்கொண்டு, பொன்னுசாமி திருநெல்வேலிக்குப் போனார். நல்லவேளை; அங்கே இருந்தது. ரொம்ப நேரம் பேரம் பேசி கடைசியில் ரெண்டு ரூபாய் என்று முடிவாகி ஒன்றை எடுத்துக் கொண்டார். புறப்படும்போது கடைக்காரர் அவரைக் கூப்பிட்டு, "வீட்டுக்குப் போனதும் ஒரு வேப்பங்குச்சியைச் செதுக்கி அதில்

அறைந்துவிடுங்கள். ரெண்டு மூன்று நாளில் பழுத்துக் கம்மென்று வாசைன வரும். அதுக்கப்புறம் உடைத்துச் சாப்பிடலாம்" என்று சொல்லி அனுப்பினான். அதன்படி வேப்பங்குச்சியை பழத்தில் செருகினார்.

மறுநாள், அதிகாலையில் எழுந்ததும் இருவரும் போட்டி போட்டுக் கொண்டு அரங்கு வீட்டிற்குள் நுழைந்தார்கள். விழுந்து விழுந்து முகர்ந்து பார்த்தார்கள். ஒரு வாடையும் காணோம். அறுத்துப் பார்ப்போமே என்றாள் சங்கரம்மாள். அவள் அவசரத்தைக் கண்டு புருஷன் குலுங்கிக் குலுங்கிச் சிரித்தான்; மூன்றாம் நாளும் இதே நடப்பு. இந்தச் சனியன் சீக்கிரம் பழுக்காதோ; பொன்னுச்சாமியும் சங்கரம்மாளும் மேலும் நாலைந்து வேப்பங்குச்சிகளைச் செதுக்கி மூலைக்கு மூலை அதில் அறைந்து இறக்கி வைத்தார்கள். ஊஹூம்! பழம் பழுக்கவே இல்லை. ஐந்தாவது நாள். அதை என்ன செய்வதென்றே தெரியவில்லை.

அரிவாள்மணை கொண்டு வந்து ரெண்டாக நறுக்கினார்கள். மணையிலும் கைகளிலும் பால் வடிந்து பிசுபிசுவென்று ஒட்டிக்கொண்டதுதான் மிச்சம்; சங்கரம்மாள் கோபமாக விசுக்கென்று அந்த இடத்தை விட்டு எழுந்து போய்விட்டாள். பொன்னுச்சாமிக்கு இன்னது செய்வது என்று விளங்கவில்லை. அவர்கள் ஊரில் தெற்கத்திச் சீமையிலிருந்து வந்த ஒரு வாத்தியார் இருந்தார். அவருக்கு ஒருவேலை இந்த விஷயங்கள் எல்லாம் தெரிந்திருக்கும். பொன்னுசாமி அவரிடம் போய் பலாப்பழச் சங்கதியை எல்லாம் சொன்னார். வாத்தியார் வந்து பார்த்துவிட்டு "ஓஹோ! அசல் காய் பிஞ்சுக்காய்; இது பழுக்கவே செய்யாது" என்று பைசலாக்கிவிட்டார்.

எத்தனை நாளைக்குத்தான் விஷயத்தை மறைக்க முடியும்? குழந்தையின் நலனை உத்தேசித்து மாமியார் ஒரு நாள் மிக மிக வற்புறுத்திக் கேட்டதன் பேரில், தான் பலாப்பழத்தின்மேல் ஆசைப்பட்டது உண்மை என்று சங்கரம்மா ஒப்புக்கொண்டாள். பொன்னுச்சாமியை தாயார் தனியாகக் கூப்பிட்டு "எப்படியாவது எங்கிருந்தாவது பலாப்பழம் வாங்கிக் கொண்டு வந்துவிடு. அப்போது தான் குழந்தைக்குச் சீழ் வடிவது நிற்கும், குழந்தையும் பிழைக்கும்" என்றாள். இரண்டு மூன்று நாள் கழித்து ஒருநாள் இரவு எட்டுமணி இருக்கும். கதவு தட்டும் ஓசைகேட்டு சங்கரம்மா விழித்துக்கொண்டாள்.

கைகால் அலம்பித் துடைத்துக்கொண்டு உள்ளே வந்து தன் மடியிலிருந்த, வாழை இலையால் மூடிக் கட்டப்பட்டிருந்த சின்ன பொட்டணத்தை அவிழ்த்து சங்கரம்மாவின் முன்னால் நீட்டினார். விளக்கொளியில், தங்கநிறத்தில் சுளைசுளையாக பலாப்பழச் சுளைகள் இருந்தன. கட்டிலில் உட்கார்ந்தவாறே சங்கரம்மா அதைக் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். பரிவோடு இரண்டு கைகளாலும் ஏந்தித் தன் மனைவியின் முகத்தருகே கொண்டு போனார்.

திரும்பவும் அதே மௌனம். பொன்னுச்சாமி அவன் முகத்தைக் கவனித்தபோது அவளுடைய சிவந்த மூக்கு உதடுகள் துடித்து அழுகை வரும்போலத் தெரிந்தது; ஆச்சரியத்தோடு "சங்கரம்மா" என்று அழைத்து தலையைத் தொட்டார் சங்கரம்மா அவர் கைகளை தூரத்தள்ளினாள். தள்ளிய வேகத்தில் பலாச்சுளைகள் கீழே சிதறி விழுந்து உருண்டன. கைகளால் முகத்தைக் மூடிக்கொண்டு சங்கரம்மா மௌனமாக அழுதாள்.

## கரண்டு

ராமசாமி நாயக்கருக்கு கோவம். அண்டகடாரம் முட்டியது. 'பம்ப்செட் ரூமை' சுற்றிச்சுற்றி வந்தார். இன்னதுதான் செய்வதென்று தெரியவில்லை. "சவத்துப் பயலுக்குப் பிறந்த பயல்கள்" என்று சொல்லி, பல்லை நெறுநெறுத்தார். கண்கள் கோவப் பழத்தைவிட நிறம் கொளும் கம்பியாக இருந்தது. மழுங்கச் சிரைத்திருந்ததால் உதடுகள் மட்டுமே துடித்தன. வானத்தை அண்ணாந்து பார்ப்பதும் பக்கத்தில் பார்ப்பதுமாக நிலைகொள்ளாமல் தவித்தார்.

விறுவிறு என்று ரெண்டே எட்டில் சமீபத்திலிருக்கும் 'டிரான்ஸ்பார்மருக்கு'ப் போய்.... பல தடைவ, அதில் கரண்ட் வரவழைக்கும் 'வித்தை' யைப் பார்த்திருக்கிறார். "படுபாவிப் பயல்கள்; இன்னும் கொஞ்சநேரம் கரண்டு கொடுத்தால் என்ன்; கொள்ளையா போகிறது" என்று சொல்லி மண்வெட்டியை நங்கென்று ஓசை எழ விட்டெறிந்தார்.

ராமசாமி நாயக்கர் என்ற பெயருள்ள அந்த விவசாயி தன்னுடைய நாலு ஏக்கர் தோட்டத்தில், சோளம் முளைக்கட்டி இருந்தார். தொடர்ந்து, தண்ணீர் பாய்ச்சினால்தான்; இல்லையென்றால் எறும்புகள் தானியத்தைக் கூட்டிவிடும். மேலும் நாட்கள் வித்தியாசத்தால் கதிர் ஒன்றுபோல் வந்து வாங்காது, உற்பத்தி பெருகாது, நாயக்கருக்குக் கோபம் வரத்தானே செய்யும் பின்னே? கரண்ட் வினியோகத்திற்கு இங்கே, 'ஷிப்ட்டு' முறை என்ற ஒன்றை ஏற்படுத்தியிருந்தார்கள். ஒரு வாரம் மத்தியானம்வரை கரண்ட், அடுத்த வாரம் மத்தியானத்துக்குமேல் கரண்ட், இடையில் வாரத்தில் ஒரு நாள் மின்சாரம் நின்றுவிடும்.

இரண்டாயிரம் ரூபாய் செலவழித்து, பம்புசெட் ரூமும் நிறுவினார் நாயக்கர். அந்த நாளை மறக்கவே முடியாது. பச்சை நிறத்தில் ஒரு பித்தான். அதை அமுக்கவேண்டும். இவர் பம்ப்செட்டை ஓட்டினாலும் சரி ஓட்டாவிட்டாலும் சரி வருஷத்துக்கு நூத்தி அறுபது ரூபாய் கட்டியாகவேண்டும். நாள் முழுவதும் கரண்ட் வேண்டும் - சோளம் முளைக்கட்ட தற்காலிகமாவது நாள்பூராவும் கரண்ட் வேண்டும் என்று ஒரு மனு எழுதிக்கொண்டு ராமசாமி நாயக்கர் கோவில்பட்டிக்கு வந்தார்.

ஏக்கம் நிறைந்த பெருமூச்சு ஒன்றை விட்டுவிட்டு நாயக்கர் பூனைபொல அடியெடுத்து வைத்துத் திரும்பினார். பத்திரிகையிலிருந்து தன் முகத்தை ஒரு பொம்மைபோல் திருப்பி, 'என்ன வேண்டும்?' என்று கேட்டார்; மனு நீட்டப்பட்டது. ராமசாமி நாயக்கரை யாரும் அவமானப்படுத்தவில்லை. அவமானப் படுத்தியிருந்தாலும் அவருக்கு ஒரு நிம்மதி பிறந்திருக்கும். தலை கவிழ்ந்து தரையைப் பார்க்க, மெதுவாகப் படியிறங்கி ரோட்டுக்கு வந்தார். நாயக்கர் நடந்தே திரும்பி ஊருக்கு வரவேண்டும். அவர் இன்னும் நகரத்தின் மையத்தைத்தான் தாண்டி இருக்கிறார். பையப் பைய இருள் பரவ ஆரம்பித்தது; ஜில்லென்று நகரமே மின்சார ஒளிவிளக்கில் மூழ்கிப் பிரகாசித்தது. எவ்வளவு பிரகாசம் வெளியில் இருந்ததோ, அவ்வளவு மன இருட்டில் புழுங்கித் தவித்தார் நாயக்கர்.

தண்ணீரில் விழுந்த கோழி, கரையேறி தன் இறக்கைகளை சடசடவென்று அடித்து உதறுவதுபோல், நாயக்கர் தன் மனத்தைக் கவ்வியிருந்த கோழைத்தனமான எண்ணங்களை உதறி எறிந்தார். வேஷ்டியை அவிழ்த்து இறுகக் கட்டித் தார் பாய்ச்சினார், கால்களை அகலப்பரப்பிக்கொண்டு மேல்த்துண்டை உதறி, அழுத்தமாகத் தலையில் லேஞ்சி கட்டிக்கொண்டு டிரான்ஸ்பார்மரை நோக்கிப் போனார்.

ஒன்றையும் தொடாமலேயே அவருக்கு ஒரு "ஷாக்" அடித்தது. செய்யவேண்டிய காரியம் இது அல்ல; அது இதைவிட முக்கியமானது என்று தோன்றியது. தன் சக விவசாயிகளை நோக்கி நடந்தார்.

## சிநேகம்

மார்கழி மாசத்து வாடைக்காற்று சில்லென்றடித்தது. ராமியின் தலைமயிர் கண்ணிலும், கன்னத்திலும் மறைத்தது. ராமி கவணை தலைக்குமேல் லாவகமாகச் சுற்றி எறிந்தாள். கூட்டிலிருந்து புறப்பட்ட சிட்டைப்போல் கல் இறைந்து சென்று தொலைவில் போய் விழுந்தது. நாலு திசைகளையும் பார்த்து சத்தம் போட்டுக் கத்தினாள். ராமிக்கு கொஞ்சம் பயம் வந்தது. கையில் கழியை எடுத்துக் கொண்டு, பறவைகளை விரட்ட அடிக்கும் தகரத்தில் ஓங்கி ஓங்கி அறைந்து, காடே அதிரும்படியான சத்தத்தை எழுப்பினாள்.

பனியில் வாடை அவளை நடுக்கியது துணிகள் நனைந்து போயின; குரல் தாடையின் வேகமான அடிகளால் ஒரு வினோத சத்தமாக மாறிவந்தது. 'பூனைக் கிழவி விளையாட்டு' வைத்து விளையாடும்போது இப்படிக் குரல் நடுங்கினால் ரொம்ப நன்றாக இருக்குமே என்று நினைத்தாள். பனி இப்பொழுது இன்னும் பலமாகக் கொட்ட ஆரம்பித்தது. ராமி பரணைவிட்டு இறங்கினாள். பரணுக்குக் கீழே தந்தரையில், அப்படியே ஒரு சின்ன அணில் குஞ்சுமாதிரி கொடுங்கிப்போய் உட்கார்ந்து, பாவாடையை அவிழ்த்து வெறும்மேல்

உடம்பையும் தலையையும் சேர்த்து போர்த்திக்கொண்டாள். குளிரினால் வயிற்றைப் பிசைந்து வலித்தது.

குளிருக்கு அடக்கமாக முடக்க ஒரு மடியோ, அடக்கமுடியாத துக்கத்தினால் முகத்தைப் புதைத்து அழ ஒரு மார்போ இல்லை அவளுக்கு, அவள் ஒரு அனாதை, தாயும், தந்தையும் அற்றவள். உடன்பிறந்த சகோதரப் பாசமே இன்னதென்று அறியாத பாவி. ஏதோ ஒரு தூரமான ஊர். அங்கோ பிறந்து வயிற்றுக்கஞ்சிக்காக இங்கே வந்து இருக்கிறாள். அதிகாலையிலேயே எழுந்து கம்பங்காட்டுக் காவலுக்கு வந்துவிட வேண்டும். ராத்திரி ஏழு மணிக்குத்தான் வீடு திரும்பவேண்டும். மத்தியானம் மட்டும் ஒருவேலை கஞ்சி வரும். ராத்திரி வீட்டுக்கு வந்து குளித்துவிட்டு, குதிரைவாலிச் சோறு சாப்பிடலாம்.

ராமியின் தகப்பன் ஒரு குடிகாரன். நன்றாகத் திருட்டுச் சாராயம் குடித்துவிட்டு வந்து ஒருநாள் தன் மனைவியை கடப்பாறைக் கம்பியால் ஒரே போடில் கொன்றுவிட்டு, தானும் ஆயுள் தண்டனையை அனுபவிக்க ஜெயிலுக்குப் போய்விட்டான். அப்போது ராமி நாலு வயசுக் குழந்தை. இப்போது அவளுக்கு எட்டு வயசாகிறது. இந்த நாலு வருஷமும் அவள் அனுபவித்த துன்பம் கடலைவிடப் பெரியது. எதால்ல அவள் அடி வாங்கவில்லை? எந்த இடத்தில் அடி விழாமலிருந்தது; துடுப்புக்கட்டையால், விளக்குமாற்றால் சட்டகப்பையால், களைசுரண்டியால், தலையில், முகத்தில், மணிக்கட்டில், மார்பில், வயிற்றில், நினைத்த இடமெல்லாம் கையில் கிடைத்ததையெல்லாம் கொண்டு எதிர்த்து பேசியதற்காக ஒரு தடைவ நாக்கில் சூடு போட்டார்கள். விளையாடப் போனதற்காக, காலையும், கையையும் கட்டிப்போட்டு கண்ணில் மிளகாய்ப் பழத்தை அரைத்துப் பூசி வெயிலில் உருட்டி விட்டார்கள்.

குளிரும் வயிற்றுவலியும் தாங்கமுடியவில்லை. தன்னுடைய அனாதை நிலையை நினைத்தவுடன் ராமிக்கு அழுகை வந்தது. மின்னல் வேகத்தில் அவளுக்குத் தன் அம்மாவின் முகமும், அவளுடைய பரிவும் ஞாபகம் வந்தது. குளிர்காய பரண்மேல் ஏறினாள். இளம் வெயிலில், அவளுடைய எண்ணெய் அறியாத செம்பட்டை மயிர் மினுமினுத்தது. முதுகிலும் கைகளிலும் அடர்த்தியான பூனை மயிர் வெயில் பட்டுப்பட்டு அவளுடைய "நல்ல சிகப்பு" நிறம் குங்குமமாக மாறி இருந்தது. அந்தக் கண்கள் பச்சை நிறமாக இருப்பது பூனையின் கண்கள் ஞாபகத்துக்கு வரும். "கண்ணாடிக் கண்" அல்லது 'பீங்கான் கண்' என்றும் சொல்வார்கள். கறுத்து அடர்ந்த புருவம், தேங்காய்ச் சில் மாதிரி வெளேர் என்ற பற்கள்; அதில் மேல்வரிசையிலுள்ள இரண்டு 'முன்னத்தம்' பற்களுக்கு; இடையில் அரிசி கனத்தில் ஒரு பல். எல்லோருக்கும் முப்பத்திரண்டு என்றால் ராமிக்கு முப்பத்திரெண்டே கால்! உதடுகள் சிகப்பாக இல்லாமல், கத்திாப்பூ நிறங்கலந்த ஒரு கருப்பு. இது ரொம்பவும்

அவளைக் கூறு கெடுத்தது. அவளைப் பார்க்கும் யாருக்குமே ஒரு அழகான மான்குட்டியின் ஞாபகம் வரும்.

ராமயின் "சேக்காளி" ராஜா பக்கத்துப் புஞ்சைக்காரன். ஊருக்கு முதலாளி மகன். கன்னங்கரேர் என்றிருப்பான். காதில் மூணு வெள்ளைக்கல் பதித்த கடுக்கன். பக்க வகுடுக் கிராப்பு. சிரித்த துறுதுறுக்கும் கருவண்டுக் கண்கள் கொழுகொழுவென்ற சதைப் படலம் நிறைந்த உடம்பு. அநேகமாக நீலநிற அரைக்கைச் சட்டையே விரும்பி அணிவான். பஜனைக் கோவிலிருந்து அவன் தினமும் அவளுக்காகக் கொஞ்சம் அவல் கொண்டு வருவது வழக்கம்.

இரண்டு பேரும் விளையாடத் தயாரானார்கள். ஒளிந்து பிடித்து விளையாடினார்கள். இப்பொழுது ராஜாவால் ராமியைக் கண்பிடிக்க முடியவில்லை. புழுமாதிரி தரையில் ஊர்ந்துகொண்டே போய் தட்டாம்பயிர்ப் பட்டங்களுக்கு அடியில் கிடந்துகொள்வாள். ராஜாவால் இது முடியாது. ஆட்டத்தில் தோல்வி கண்டதால், ராஜாவுக்கு ருசிக்கவில்லை. இரண்டு பேரும் பரண்மீது ஏறினார்கள். படை குருவிகள் எப்பவும், ஆயிரம் இரண்டாயிரம் என்று டீசர்ந்தே வரும். அவைகள் எங்கே இருந்து வருகின்றன, கதிர் தானியத்தைத் தின்றுவிட்டு எங்கே போகின்றன என்று யாருக்கும் தெரியாது.

களைத்துப்போய் இருவரும் கருவ மரத்தடி நிழலில் வந்து உட்கார்ந்தார்கள். ராஜா தன்னுடைய புஞ்சைக்குள் போய் நாலைந்து கம்பங் கதிர்களையும் பிடி நிறைய பாசிப் பயித்தங்காயும் பிடுங்கிக்கொண்டு வந்தான். ராமி கதிரை வாங்கி, கசக்கி ஊதி ஊதிக் கொடுத்து தானும் தின்றாள். ராமியை அவனுக்கு ரொம்பவும் பிடித்துப் போய்விட்டது. அதையெல்லாம் இந்தப் பதினான்கு வருடங்கள் கழித்து இப்பொழுது நினைத்துப் பார்த்தாலும்...... வந்தது போலவே, ராமி, ஒருநாள் திடீரென்று போய்விட்டாள்.

எங்கு போனாளோ யாரிடம் சென்றாளோ, வாழ்க்கையில் நடக்கும் விசித்திரங்கள்...... கதைகளில் நடக்கும் விசித்திரங்களெல்லாம் வாழக்கையின் விசித்திரங்களுக்கு உறைபோடக் காணாது. பதினான்கு வருஷங்களுக்குமுன் போனதுபோலவே திடீரென்று மீண்டும் ஒருநாள் வந்தாள் ராமி. வேப்பங்குச்சி வைத்துப் பல் தேய்த்துக் கொண்டிருந்தாள் ராஜா. அவனுக்கு முன்புறத்தில் இரண்டு பெரியாட்கள் ஒரு பெண் இடுப்பில் ஒரு குழந்தையோடு தங்களைக் கடந்து வீட்டினுள் போனாள், போகும்போது தன்னை நோக்கித் தயங்கி நின்ற மாதிரி இருந்தது.

பேசிக்கொண்டிருந்தவர்கள் விடைபெற்றுப் போன பிறகு ராஜா வீட்டினுள் புகுந்தான். அந்தப் பெண் தன் மனைவியோடு உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாள். 'புதிய பெண்' இவனைக் கண்டு சிரித்தாள். 'அல்லது பேச்சின் மத்தியில் எழுந்த சிரிப்பாகவும்

இருக்கலாம்' யாரென்று தெரியவில்லை. ராமி 'எத்தனை வருஷங்களாகிவிட்டன. உன்னைப் பார்த்து-என் வீடு தேடி வந்த உன்னை "வா" என்று கூட கேட்கவில்லையே நான்'.

ராமி, நீ என்னைப்பற்றி என்ன நினைத்துக் கொள்வாயோ, அவன் மனம் புலம்பிக்கொண்டே இருந்தது. ஒருவேளை, ராமி நேற்று இரவு இங்கே நடந்த கல்யாணத்துக்கு வந்திருப்பாளோ அப்படித்தானிருக்கும். ஆனால் அங்கே நாம் இப்பொழுது இந்நேரத்தில் எப்படிப் போவது. ராஜாவின் கால்கள் மெதுவாக கல்யாண வீட்டை நோக்கி நடந்தன. ராமியும் ஒரு காடி வண்டியில் உட்கார்ந்து தன் குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு எதிரே உட்கார்ந்திருந்த ஒரு பெண்ணிடம் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாள். தொலைவில் வரும்போதே ராமி மட்டும் ராஜாவைக் கண்டுவிட்டாள்.

ராஜா தன்னையே பார்த்துக்கொண்டிருக்கிறான் என்பது ராமிக்குத் தெரியும்; தன்னைப் பார்க்கவே வந்திருக்கிறான் என்பதும் ராமிக்குத் தெரியும். ஆனாலும், அவள் ராஜாவின் பக்கம் பார்க்கவே இல்லை. கலகலவென்று வாய்விட்டுச் சிரித்தாள். மற்ற எல்லாப் பக்கங்களிலும் திரும்பித் திரும்பிப் பார்த்தாள்! ராஜா இருந்த பக்கத்தைத் தவிர!

மணப்பெண் வண்டி, முன்னால் புறப்பட மற்ற வண்டிகளும் அதைத் தொடர்ந்து புறப்பட்டன. மணிகளின் ஓசைகளும், சதங்கை ஒலிகளும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துகொண்டே போனது. ராசாவால் ஒரு புன்னைகைகூட பூக்க முடியாமலே போய்விட்டது. அப்படியே அசையாமல் அவன் மேற்கே பார்த்து உட்காந்திருந்தான். குளிர்ந்த மேல்காற்று அவன் மூஞ்சியில் அடித்தது. வானத்தில் புறாக்கள் இஷ்டப்படி ஜோடி சேர்ந்து பேசிப் பறந்துகொண்டு போயின.

என்ன காரணம் என்று தெரியவில்லை; பக்கத்திலிருப்பவர்கள் பார்த்து விடுவார்களோ என்று பயந்து, கண்களைத் துடைத்துக் கொள்ளும்போது, கீழ்க்கண்டவாறு சொன்னான். 'சை' கண்ணில் தூசி விழுந்துவிட்டது. அவன் கண்களைத் துடைத்துகொண்டதையோ அவன் அப்படிச் சொன்னதையோ அங்கு உண்மையில் யாரும் பார்க்கவுமில்லை; அதைக் கேட்கவும் இல்லை.

## நெருப்பு

தீ கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. கிராம ஜனங்கள் ஆழ்ந்த தூக்கத்திலிருந்தார்கள். தூக்கத்திலிருந்து சட்டென விழித்தவர்கள் என்ன நடந்திருக்கிறது என்று அறியவே கொஞ்ச நாழிகையாகியது. இளவட்டங்கள் பாய்ந்து தங்களுடைய இடுப்பில் சொருகியிருந்த சூரியை உரையிலிருந்து உருவிக்கொண்டு, தொழுவங்களுக்குள்

நுழைந்தார்கள். தங்களுடையதோ தங்களுடைய ஜென்ம விரோதிகளுடையதோ யாருடைய ஆடுமாடுகளையும் கயிற்றை சூரியால் அறுத்து அவைகளை விடுதலை செய்தார்கள்.

எதிர்திசையிலிருந்து, திருமண உடையில் ஒரு பெண், இரண்டு கைகளையும் முன்னோக்கி விரித்துக்கொண்டு, அழுதுகொண்டே ஓடிவந்தாள். அந்தத் தாயும் மகளும் ஒருவரை ஒருவர் அந்தச் சந்தியில் ஆரத் தழுவிக்கொண்டார்கள். தெருவில் தண்ணீர்க் குடத்துடன் வந்தவர்களையும் கூரைமீது இருந்தவர்களையும் இக்காட்சி மனசைத் தொட்டு, ஒரு கணம் சிலைகளாக நின்றார்கள்.

பக்கத்துச் சேரியிலிருந்து ஹரிஜனங்கள் உதவிக்கு ஓடி வந்தார்கள். அவர்களோடு அவர்களைச் சேர்ந்த ஒரு பிச்சைக்காரியும் ஓடிவந்தாள். தாங்கள் இதுவரை அந்த வீடுகளுக்குள் எட்டிப் பார்க்காத இடங்களுக்கெல்லாம் போய், அவர்களுக்கு சாமான்கள் - தானியங்கள் - ஒதுங்க வைக்க ஒத்தாசனை செய்தார்கள். குழந்தைகளையும் தள்ளாத கிழவர்களையும் தொட்டுத் தூக்கிக்கொண்டு வந்து காப்பாற்றினார்கள்.

நாச்சியாரம்மாவும் அவளது புருஷன் பெருமாள் நாயக்கரும் தங்களுடைய வீடு நன்றாகத் தீப்பிடித்துக் கொண்ட பிறகுதான் விழித்தார்கள். ஆளுக்குக் கையில் இரண்டு குழந்தைகளைத்தான் தூக்கிக்கொண்டு வெளியே ஓடிவர முடிந்தது. தாயைக் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு உள்ளே பாய்ந்தார் நாயக்கர். பீதியோடு அழுதுகொண்டிருந்த இரண்டு குழந்தைகளை வெளியே கொண்டு வந்து விட்டுவிட்டுத் திரும்பவும் உள்ளே ஓடினார். மொத்தம் அவர்களுக்குப் பன்னிரெண்டு குழந்தைகள். இப்பொழுது இன்னும் இரண்டு குழந்தைகளை இடுக்கிக் கொண்டு தள்ளாடி வந்தார் நாயக்கர்.

அந்தச் சமயத்தில்தான் அந்தப் பிச்சைக்காரி குலவையிட்டுக் கொண்டே அங்கு ஓடிவந்தாள். மார்போடு சேர்த்து சட்டியை அணைத்துக்கொண்டே இவர்கள் இருந்த இடத்துக்கு ஓடி வந்தாள். ஓடி வந்தவள் நின்று நாயக்கரின் கால்களை பின்னிக்கொண்டிருந்த குழந்தைகளைப் பயமுறுத்தி பிடுங்கி எடுத்து அவர் உள்ளே போக உதவி செய்தாள். நாயக்கர் இப்பொழுது மூன்று குழந்தைகளுடன் குனிந்து கொண்டே வெளியே வந்தார்.

அரங்கு வீட்டுக்குள் இருந்த ஒன்பது வயதுடைய நான்காவது பையன் மாத்திரம் உள்ளே அகப்பட்டுக் கொண்டான். தாயானவள் இரண்டு கைகளையும் நீட்டி உள்ளே கிடந்த பையனின் பெயரைச் சொல்லி அழைத்தாள். நீண்ட தலைவாழைக் குருத்திலையில் நிறைய விளக்கெண்ணெயைத் தடவி அதில் பிறந்த மேனியாய்ப் படுக்க வைத்திருந்தார்கள்.

பிச்சைக்காரி, தன் சட்டியைக் கீழே போட்டதையும், அந்தப் பெரு நெருப்பில் தன் உயிரைத் திரணமாக நினைத்துப் புகுந்தாள். அரங்கு வீட்டின் வாசலுக்கு வெளியே, தலைமயிரும் ஆடையும் இல்லாமல் கரிக்கட்டையாய்க் கருகிப்போன இரண்டு பிரேதசங்கள் ஒன்றை ஒன்று ஆவி சேர்த்துக் கட்டிப் பின்னிக்கொண்டு கிடந்தன. அந்தக் காட்சி கண்டவர்களை நெக்குருக வைத்தது.

அம்மை விளையாண்டிருப்பதால் யாரும் அழக்கூடாது என்று சொல்லித் தடுத்து, ஈநச்சியாரம்மாவையும் குழந்தைகளையும், பெருமாள் நாயக்கரையும் அந்த இடத்திலிருந்து பிரித்து தனியிடத்திற்குக் கொண்டு போய் விட்டார்கள். பிரேதங்களை உடனே தகனம் பண்ண ஏற்பாடு செய்தார்கள். நீளமான ஒரு கம்பில், துணியால் தொட்டில் கட்டி அந்தத் தொட்டிலில் இரண்டு பிரேதங்களையும் போட்டு புஜங்களில் கம்பைத் தூக்கிக் கொண்டு போனார்கள்.

இறந்த கிடந்த பிரேதங்களில் இன்னொன்று யாருடையது என்று வெகுநேரம் கழித்துதான் எல்லோருக்கும் தெரிய வந்தது. காலையில் நாச்சியாரம்மாள் தன் எரிந்த கட்டை மண்ணான வீட்டிற்குள் நுழையுமுன், தன்னுடைய வீட்டு வாசல்முற்றத்தில், இரண்டாக உடைந்து கிடந்த பிச்சைக்காரியின் அழுக்கு நிறைந்த "சட்டி"யை எவ்வித நோக்கும் இல்லாமல் அழுதுகொண்டே கையில் எடுத்துப் பார்த்தாள்.

## மனிதம்

ராமய்யங்காரை இப்போதும் நினைக்கிறேன். அந்தி மயங்கும் நேரம். இடது ஆள்காட்டி விரலை தன் பெண் பிடித்துக்கொள்ள, வலது கையில் ஒரு அரிக்கேன் விளக்கைப் பிடித்துக்கொண்டு, மார்பில் பூணூல் அசைய கம்பீரமாய் நடந்தார். அவருடைய வரவு எங்களுக்கு, தாகவானுக்குத் தண்ணியைக் கண்டது போலிருந்தது. நாங்கள் நடுக்காட்டில் அகப்பட்டுக்கொண்டோம்.

என் மனைவியோ உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரைக்கும் நகைகளாய்ப் பூட்டித் தொங்கவிட்டிருந்தாள். டிரைவர் அவசர அவசரமாக ரிப்பேர் பார்த்துக்கொண்டிருந்தான். அப்போதுதான் ராம அய்யங்கார், நான் முதலில் சொன்னமாதிரி வந்து கொண்டிருந்தார். கட்டுக்குடுமி, ஒரு அசைப்பில் பார்க்கும்போது மாறு கண்ணோ என்று தோன்றும் முட்டைக் கண்கள். நெருக்கமான அரிசிப் பற்கள். உடம்பின் அந்த நிறம் இருக்கிறதே அதை எதோடு ஒப்பிட; மஞ்சளா வெண்மையா, ரெத்தச் சிவப்பா? எதைச் சொல்ல, உடம்பில் முகம் பார்க்கலாம்; அவ்வளவு பளபளப்பு; சிவந்த கீற்று உதடுகள் புன்சிரிக்க எம்மை நோக்கி நெருங்கி வந்தார். குரல் இனிமையால் முதலில் என்ன சொன்னார் என்று விளங்கவில்லை.

“அந்த வேளையில் இப்படித் தனியாக இந்த இடத்தில் நிற்க வேண்டாம்; நம் வீட்டிற்குப் போகலாம்; வாருங்கள்.....” டிரைவருக்கு லைட் தேவையாக இருந்தது. அறிந்த ராமய்யங்கார் அதை டிரைவரிடம் கொடுத்தார். அவன் வேலையில் மூழ்கினான். ஒத்தக்கடை என்று சொல்லுவார்கள். கடை விற்கிறது காரியம் இல்லை. கால்நடையாய் போவோர் வருவோர்களுக்கு தாகத்துக்கு தண்ணீர் கொடுத்து உதவுகிறேன். அதுதான் நான் செய்கிறதெல்லாம்” நான் அவரைப் பார்த்தேன். உயர்ந்த மனிதனாகத் தோன்றினார்.

அசிங்கருக்கு அழகைக் கண்டால் பிடிக்காது. அட்டைக் கருப்பி இவள். தேனீக்கு கருப்பு நிறத்தைக் கண்டால் பிடிக்காது; இவளுக்கு சிகப்பு நிறத்தைக் கண்டாலே எரிச்சல்! கடைவாசலுக்குமுன் போட்டிருந்த பலகையிலேயே உட்கார்ந்து கொண்டுவிட்டாள் என் மனைவி. முகச்சுளிப்புடன் வாயைக்குவித்து உள்ளுக்குமைந்த காற்றை ‘உஸ்’ என்ற சத்தத்துடன் வெளியேற்றினாள். அவளை எப்படி உள்னே போகச் சொல்ல என்று தெரியாமல் திகைத்தார் ராமய்யங்கார். உள்ளிருந்து ஒரு வயதான அம்மா வந்து இவளை “உள்ளே வாருங்கள்” என்றார். முகஜடையால் அது ராமய்யங்காரின் தாயார்தான் என்று நன்றாகத் தெரிநந்தது.

குழந்தைகள் இருவரும் உள்ளே இருந்தார்கள் இப்போது ராமய்யங்காரின் மனைவி - மனைவியாகத்தான் இருக்கவேண்டும்; நந்தினியின் முகஜாடையாலும் அழகின் பெருக்கத்தாலும் தெரியவில்லை - “மாமி! உள்ளே வாருங்களேன்” உள்ளே நகைகளைப்பற்றி சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது. ராமய்யங்கார் வெத்திலைச் செல்லத்தை என்பக்கம் தள்ளி, தான் வெற்றிலை போட ஆரம்பித்தார். புகையிலையை அள்ளிக் குதப்பிச் சிகரம் வைத்தார். பார்த்துக்கோண்டே இருந்த எனக்கும் போடுபோமா என்ற ஆசையால் செல்லத்தின் பக்கம் கையை நீட்டினேன். ராமய்யங்கார் தடுத்துவிட்டார்.

ரிப்பேர் முடிந்துவிட்டதென்று சொல்லி டிரைவர் கூப்பிட வந்து விட்டாள். நாங்கள் பிரியவேண்டிய நேலம் வந்துவிட்டது. விடை பெற்றுக்கொள்ள ஆரம்பித்தோம். குங்குமம், பழம், வெற்றிலை முதலியன என் மனைவிக்குக் கொடுத்தார்கள். சுமங்கல்யத்திற்குச் செய்யும் இந்த மரியாதை உள்ளத்தைக் கவர்ந்தது. அரியதான இவர்கள் பண்பாட்டை எண்ணி வியந்தேன்.

புறப்படும்போது ராமய்யங்கார் என் கைகளைப் பற்றி “சௌக்கியமாகப் போய் வாருங்கள். வரும்போது இந்த ஏழையின் குடிசையில் தங்கிப்போக வேணும்” என்றார். அவருடைய கைவிரல்கள் அல்லித் தண்டுபோல் ஜில் என்று இருந்தது. வணங்கிப் புறப்பட்டோம். உள்ளம் ஆனந்தத்தால் தத்தளித்தது. பயணத்தின் மூன்று நாளும் எங்களுக்கு சதா இவர்களைப்பற்றிய பேச்சுத்தான்.

பிரயாணம் முடிந்த மூன்றாவது நாள் திரும்பும்போது ராமய்யங்காருக்கு, பச்சைப் பாக்கும் தளிர் வெற்றிலையும் வாங்கிக் கொண்டோம்; நந்தினிக்கு சண்பகப்பூவும் பழங்களும் வாங்கிக்கொண்டேம். கயத்தாறை அடுத்து வரும்போது மேல்காற்று வந்து விட்டது. இன்னும் கொஞ்சநேரத்தில் ராமய்யங்காரைப் பார்த்துவிடுவோம் என்ற சந்தோஷம் எனக்கு. எங்கள் பையன் பூவையும் பழங்களையும் கையில் எடுத்துக் கொண்டான்.

அதே சாயங்கால நேரம். டிரைவர் காரை நிறுத்திவிட்டு எங்களைப் பார்த்தான். எனக்கு விளங்கவில்லை. "அந்தக் கடையைக் காணலையே?" வேகமாக அடித்த என் நெஞ்சின் சப்தம் எனக்கே கேட்டது. எங்கள் பக்கத்தில் நின்றிருந்தது நான்கு கருகிப்போன மண் சுவர்கள்! மடாரென்று காரின் கதவைத் திறந்து இறங்கினேன். காற்று ஓவென்று இரைந்தது விஷ்ஷ் என்று சீட்டி அடித்தது. சில சமயம் கெக்கலி கொட்டி நகைத்தது. காற்றின் எதிர்ப்புறம் சாய்ந்து நடந்து முன்னேறினேன். இது ராமய்யங்கார் வசித்த வீடுதான். என்முகத்தில் சாம்பல் வீசி அடித்தது, உள்ளம் விசித்தது, காரின் பக்கம் வந்து சேர்ந்து நின்றேன்.

தூரத்தில் ஆட்டு இடையர்கள் பாடும் குரல் கேட்டது. கைகளைக் குவித்து வாயருகே வைத்து நானும் டிரைவரும் சத்தம் கொடுத்து அவர்களைக் கூப்பிட்டோம். இரண்டு பையன்கள் ஓடிவந்தார்கள். "பாவிப்பயல்; எவனோ ராமய்யங்கார், கடைக்குத் தீ வைத்துவிட்டான்."

"எதுக்காக வச்சானோ; அவன் விளங்கமாட்டன்..... பாவம், அவர்கள் கட்டின வேட்டி துணிகளோடதான் வெளியே வரமுடிஞ்சது. அந்த வயசான ஆச்சியம்மா வீட்டுக்குள்ளரயே மயக்கம்போட்டு விழுந்திருச்சாம். அந்த அய்யருதான் அந்த அம்மாவையும் தோளில் தூக்கிப் போட்டுகிட்டு வெளியே வந்தாராம். உயிர் பிழைச்சதே பெரிய காரியம்". நிற்கவே முடியவிலர்லை. காரினுள் வந்து உட்கார்ந்தேன். நாங்கள் பேசிக்கொண்டதின் அர்த்தம் ஒன்றுமே எங்கள் பையனுக்கு விளங்கவில்லை என்பது அவனுடைய பீதி நிறைந்த முகம் காட்டியது. அவன் தன் தாயின் முந்தானையை பலமாகப் பற்றிக்கொண்டிருந்தான் அவன் காலடியில் பழங்களும் பூக்களும் சிதறிக் கிடந்தன. டிரைவர் காரின் கதவுகளை அறைந்து சாத்தினான். நான் என் மனைவியைக் கவனித்தேன். அந்தக் கறுப்பு முகத்திலிருந்து ஒன்றையும் அறிந்துகொள்ள முடியவில்லை.

## ஜடாயு

தாத்தைய நாயக்கரை, கிராமத்து ஜனங்கள் 'அப்பு ராணி நாயக்கர்' என்று சொல்லுவார்கள். அவர் ஒரு விவசாயி, தான் உண்ட தன்பாடு உண்டு என்றுதான் இருப்பார். விவசாயத்தில் அவ்வளவு 'கருக்கடை'. எதிலேயும் ஒரு ஒழுங்கு, முகத்தில்

கோபம் வந்து ஒருவரும் பார்த்ததில்லை. சதா சிரித்த முகமும் சீதேவியுமாக இருப்பார். அறுபதுவயது கிழவர் என்று யாராலும் சொல்லமுடியாது. யானையின் துதிக்கையைப் போன்ற பருத்த நீண்ட கைகள்; ஆஜானுபாகுவான உடல், நரைத்த தலை, அடிக்கடி வெற்றிலை போட்டுத் துப்புவதால் காலி ஏறிய நரைத்த கிருதா மீசை, எவ்வளவு தெலைப் பிரயாணமானாலும் நடந்தேதான் செல்லுவார்.

இந்த வேக்காட்டிலும் இந்த ஜனங்கள் எப்படித்தான் வீட்டை அடைத்து உள்ளே முடங்கிக்கொள்ளுகிறார்களோ; ஒரே ஆச்சரியம் நாய்க்கருக்கு. தனக்குள் சிரித்துக் கொண்டார். வெகுநேரம் புரண்டு கொண்டிருந்த நாயக்கர் அப்பொழுதுதான் கொஞ்சம் கண் அயர்ந்திருப்பார். எங்கிருந்தோ ஒரு பெண்ணின் அபயக்குரல் கேட்டுத் திடுக்கிட்டு விழித்தார். திண்ணையில் உட்கார்ந்திருந்த நாயக்கர் குபீரென்று பாய்ந்து தெருவில் குதித்து நின்றார்.

இவருடைய ஆவேசமான குரல் கேட்டு அந்த வீட்டுக்காரர் எழுந்து ஜன்னல் பக்கம் வந்தார்; ஆனால் கதவைத் திறக்கவில்லை. ஊருக்குள்ளே நூறு நடக்கும். எவன் எப்படிப் போனால் நமக்கென்ன? நம்மபாடு உண்டு, நாம உண்டு என்று இருக்கணும். எதுக்கு விருதா வாய்ப்போட்டு தூக்கத்தைக் கெடுத்துக் கொள்கிறீர்? பேசாமல் வந்து படும்." நாயக்கருக்கு இது சரியென்று தோன்றவில்லை. அச்சமயம் அவரைப்பார்த்து ஓர் இளம்பெண் தலைவிரி கோலமாக ஓடிவந்தாள். அவருடைய கால்களைக் கட்டிக்கொண்டாள்.

அவளைத் தொடர்ந்து நான்குபேர்கள் வேகமாக வந்தார்கள். "ஐயா நீங்க சும்மா இருங்க. இது புருஷன் மனைவி சண்டை; நீங்க ஒன்றும் இதில் தலையிடவேண்டாம்" ஆனால் நாயக்கர் அவளைச் சமாதானப்படுத்தி குழந்தையைத் தூக்குவது போல் தூக்கினார். அந்தப் பெண் நடந்ததை அப்படியே சொன்னாள். கோவில்பட்டிக்கு வடக்கே நாலுகல் தொலைவுள்ள ஓர் ஊரில் போம்மாளக் கட்டிக்கொடுத்திருந்தது.

அன்று மாலை அவளுக்கும் புருஷனுக்கும் சண்டை ஒரு நாளும் அடிக்காதவன் அன்று அவளைப் பிடித்து நன்றாக மொத்தி விட்டான். கோபித்துக்கொண்டு போலம்மாள் கோவில்பட்டிக்குத் தெற்கே உள்ள தாய் வீட்டுக்குப் புறப்பட்டு வந்தாள். இன்று வந்ததும் இருட்டிவிட்டது. தனக்குத் தெரிந்த தூரபந்து ஒருவரின் வீட்டில் இரவு தங்கலாம் என்று நினைத்து நடந்தாள். ஆனால் அவர்கள் வீடு மாறிவிட்டதால், முன்பு இருந்த இடத்தில் இல்லை. அவர்களைப்பற்றி விசாரித்துக்கொண்டு அலையும்போது தான் இந்த மனிதாப்களை அவள் சந்திக்க நேர்ந்தது.

"அந்த வீடு தங்களுக்கு தெரியும் என்றும் தாங்களும் அந்த வீட்டுக்குப் பக்கத்தில்தான் குடியிருக்கிறோம் என்றும், இப்பொழுது அங்கே தான் போய்க் கொண்டிருக்கிறோம் என்றும் இவர்கள் சொன்னார்கள். போலம்மாள் அதை நம்பிவிட்டாள். அவள் வீட்டில் கோபித்துக்கொண்டு வந்த விவரங்களையும், அவளுடைய பெயரையும்கூட அவர்கள் மெதுவாகக் கேட்டுத் தெரிந்துக் கொண்டார்கள். "சீக்கிரம் போகணும் நேரமாகிறதே" என்று துடித்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தாள். அவர்கள் ஊருக்கு ஒதுக்குப்புறமாகவே அவளை அழைத்துக் கொண்டு வந்தார்கள். வரும்போதே அவளிடம் கேலிபேசிக் கொண்டும், நையாண்டி வார்த்தைகளாடிக் கொண்டும் வந்தார்கள்.

ஒருவன் அவள் முதுகைத் தடவி பாவிப்பயல், இப்படி வீங்கும்படி அடித்திருக்கிறானே என்றான். போலம்மாள் விழித்துக்கொண்டாள். "என்னைத் தொட்டையானால், சத்தம் போட்டு ஊரைக் கூட்டி விடுவேன். உனக்குச் சரியான மரியாதை கிடைக்கும்" என்று சீறினாள். நேரம் ஆக ஆக அந்தப்பகுதியில் ஆள் நடமாட்டம் குறைந்து கொண்டே வந்தது. அவர்கள் இப்பொழுது தைரியமாக போலம்மாளின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டே சென்றார்கள். அவள் கதறாத சொற்கள் இல்லை; வையாத வசவு இல்லை. வேண்டாத தெய்வமும் இல்லை. அவளுக்கு அபயமளிக்கவோ, அவள் கண்ணீரைத் துடைக்கவோ யாரும் இல்லை.

தாத்தைய நாயக்கர் இந்த விவரம் கேட்டு உள்ளம் கொதித்தார். கோபம் கண்களைத் துருத்த அவர்களைப் பார்த்தார், ஆனால் அந்தச் சுருட்டைத் தலையன் நாயக்கரின் முன்பு பவ்யமாக வந்து வணங்கி நின்றான். "ஐயா! நான் சொல்கிறதையும் தயவுசெய்து கேட்கவேணும், நீங்கள் என்னுடைய தகப்பன் மாதிரி. இவள் என்னுடைய சொந்த மாமன் மகள். இவள் எனக்கு வாழக்கைப்பட்டு அஞ்சி வருஷமாகிறது. இந்த அஞ்சிவருஷமும் இவளோடு இந்தப் போராட்டம்தான். பகலெல்லாம் எலும்புமுறிய வேலை செய்துவிட்டு ராத்திரி வீட்டுக்கு வந்தால், வீட்டில் இருக்கமாட்டாள். விடியத்தான் வீட்டுக்கு வருவாள். இவளை நான் ராத்திரியெல்லாம் தேடிக்கொண்டு அலையவேண்டும். கட்டிய புருஷன் எத்தனை நாளைக்குத்தான் இதைச் சகித்துக்கொண்டு இருப்பான்?" இந்தச் சமயத்தில் கதவைத் திறந்துகொண்டு நாயக்கர் தங்கியிருந்த வீட்டுக்காரச் சுந்தரம் செட்டியர் வெளியே வந்தார். பக்கத்து வீட்டுக் காரர்களும் வந்தார்கள். தூரத்தில் நின்றிருந்த சுருட்டைத் தலையனின் ஆட்களில் ஒருவன் இவர்களை நோக்கி வந்தான்.

அவன் மூஞ்சியில் காறி 'தூ' என்று துப்பினாள், போலம்மாள் தாத்தைய நாயக்கரின் கையில் இருந்த கற்கள் தாமாகவே நழுவித் தரையை வந்து அடைந்தன; சோர்ந்து போய் திண்ணையில் உட்கார்ந்து விட்டார். கோழிக்குஞ்சைப் பருந்து தூக்கிக்கொண்டு போவதுபோல் அவளைத் தூக்கிக் கொண்டு போனார்கள். அந்தத் தெருவில் மழைபெய்து

ஓய்ந்தது போலிருந்தது. எல்லோரும் வீட்டினுள் சென்று சிறிது நேரம் கழித்து மீண்டும் அந்தப் பெண்ணின் அவலக் குரல் கேட்டது. பெண்ணை அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று வேண்டும் என்று எண்ணி நடந்தார்.

குரல் வந்த திக்கை வைத்துப் பார்த்தால் அவர்கள் ஊருக்குள் போவதாகத் தெரியவில்லை. தாத்தைய நாயக்கர் குனிந்து இரண்டு பெரிய கற்களை எடுத்தார். இடது காலைப் பிரித்து ஒரு எட்டு முன்வைத்து வலது கையைப் பின்வாங்கி கல்லை விட்டார் நாயக்கர். செத்தேன் என்று ஒருவன் கீழே விழுந்தான்.

பாலத்திலிருந்து எமதர்மனைப்போல் சுருட்டைத் தலையன் வெளியே வந்தான் அவன் போலம்மாளைப் பலமாகப் பற்றி இருந்தான். போலம்மாள் ஆடையின்றி பிறந்தமேனியையாக் காட்சி அளித்தாள். வாயினுள் திணித்திருந்த துணியின் ஒரு பகுதி வெளியே தொங்கிக் கொண்டிருந்தது. நாயக்கர் சுருட்டைத் தலையின்மீது ஆவேசத்துடன் பாய்ந்தார். ஓங்கி அவன் கன்னத்தில் ஓர் அறை கொடுத்து எட்டி உதைத்தார். அவற்றை அவனால் ஜீரணிக்க முடியவில்லை. மல்லாந்து விழுந்து கண்களை மூடித்திறந்தான். போலம்மாளின் வாய்த்துணி அகன்றது.

"அம்மா போய்விடு இங்கிருந்து" என்று சப்தம் கொடுத்தார். "போ, உடனே; ஓடு" கத்தினார். போலம்மாள் பின்வாங்கி ஓடினாள். அரிவாள்காரன் பின்னால் திரும்பிப் பார்த்தான். நாயக்கர் 'சடக்'கென்று அவனைக் குப்புறத் தள்ளி அவனுடைய கையை ஒரு கையாலும் தலையை ஒரு கையாலும், பிடித்துக்கொண்டு இடுப்பில் ஒரு காலை மிதித்து முறித்தார். அரிவாள் கிழே விழுந்தது. உயர்ந்து நின்ற தாத்தைய நாயக்கரின் வலதுகை துண்டாக அரையில்போய் சொத் என்று விழுந்தது. கீழே விழுவதும் எழுந்து பாய்ந்து முட்டவருவதுமாக இருந்தார் நாயக்கர்.

உனக்கு நான் உதவமுடியாமல் போய்விட்டதே, இவர்களைக் கொண்று உன்னை மீட்க வல்லமை இல்லாமல் போய்விட்டதே?........ கடவுளே, நீ இருக்கிறாயா? என்று விம்மி, அந்த சரள் தரையில் முகத்தைப் பல தடைவ பலமாக மோதிக்கொண்டார் தாத்தைய நாயக்கர். போலம்மாளின், தலைமயிரைப் பிடித்து இழுத்துக் கொண்டே முன்னால் சென்றான் ஒருவன். போலம்மாளின் அரற்றல் சிறிது நேரம் வரை கேட்டுக்கொண்டே இருந்தது; அப்புறம் அதுவும் இல்லை ஒரே அமைதி.

தாத்தைய நாயக்கர் அதிவேகமாகச் செத்துக்கொண்டே வந்தார். அவருக்குப் பிரக்ஞை இருந்தபோது முதலில் ஞாபகம் வந்தது அவருடைய வீட்டின் அரங்கு வீட்டிற்குள் தெற்கு மூலையில் சாத்தி வைக்கப்பட்டிருந்த கனமான வேல்கம்புதான். அதையடுத்து தன்னுடைய ஒரே மகளான வெங்கடம்மாளின் சிரித்த முகம் நினைவுக்கு வந்தது.

தன்னுடைய பேரன் சீனிவாசனின் பால்வடியும் முகமும் ஞாபகத்துக்கு வந்தது. நாயக்கர் புரண்டு கொடுத்தார் தன் சக்தியை எல்லாம் ஒருமித்துக் கூட்டி "சுந்தரஞ் செட்டியர், சுந்தரஞ் செட்டியார்" என்று சப்தமிட்டு அழைத்தார். அவருடைய குரலுக்கு பதிலுரைப்பார் அங்கு யாருமில்லை.

கீழ்வானம் வெள்ளென்று வெளுத்தது. காற்று அமைதியாகவும், சுகமாகவும் வீசிக்கொண்டிருந்தது. எங்கிருந்தோ ஒரு காகம் பறந்துவந்து அருகிலுள்ள மொட்டை மரத்தில் உட்கார்ந்து தன் தலையைச் சாய்த்து தாத்தைய நாயக்கரின் பிரேதத்தைப் பார்த்தது. நாயக்கரின் தலைமீது வட்டமிட்டு, 'கார்ர் கார்ர்..... கார்ர்...' என்று மூன்று தடைவ கத்தியது.

தரையில் தயிர்க்குடத்துடன் அவ்வழியே இரண்டு இடையர் குலப் பெண்கள் வந்தார்கள். கைகள் துண்டாடப்பட்டு இரத்த வெள்ளத்தில் மூழ்கிக்கிடந்த உருவத்தைக் கண்டு திடுக்கிட்டுக் கூக்குரலிட்டார்கள். தாத்தைய நாயக்கரின் சடலத்தைச் சுற்றி இருந்த கூட்டத்தில் தலையில் தயிர்க்குடத்துடன் இருந்த ஒரு வயோதிக அன்னை தன் முந்தானையால் கண்களைத் துடைத்துக்கொண்டு புறப்பட்டான். "பாவம் யார் பெற்ற பிள்ளையோ.... எந்தப் பாவி செய்த வேலையோ?...." என்று சொல்லிக்கொண்டே நடந்தாள்.

## பயிற்சி வினாக்கள்

### கட்டுரை வினா

1. புதுமைப்பித்தனின் கதைக்கருவின் வகைகளை விளக்குக.
2. புதுமைப்பித்தனின் கதைகளில் நையாண்டி (அங்கதம்) அமைவதை விளக்குக.
3. பின்வரும் கதையின் சிறப்பு யாவை?
    1. பொன்னகரம்
    2. காஞ்சனை
    3. கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்
    4. சாபவிமோசனம்
    5. சிற்பியின் நகரம்.
4. கதவு கதை சுருக்கத்தினை எழுதுக.
5. பலாப்பழம் கதையின் கதை வளர்ச்சியினை தொகுத்துரைக்க.
6. கி.ராஜநாராயணனின் சிறுகதை தொகுப்பில் இடம் பெறும் பெண் கதா மாந்தர்களின் வளர்ச்சி நிலையினை எடுத்துரைக்க.
7. கி.ராஜநாராயணனின் கதவு சிறுகதை தொகுப்பில் இடம் பெறும் சமூக நிலைகளை விவரிக்க.

# அலகு - 4

## நாடகம்:

கலையின் அருமை பெருமைகளை நன்குணர்ந்த நம் முன்னோர் காலத்தால் முதிர்ந்த தமது தேமதூரத் தமிழை இயல், இசை, நாடகம் எனப் பாகுபாடு செய்து "முத்தமிழ்" எனப் போற்றிப் பாராட்டினர். "வாய்க்கு ஒரு தமிழ் - இயல் தமிழ், காதுக்கு ஒரு தமிழ் இசைத்தமிழ். கண்ணுக்கு ஒரு தமிழ் - நாடகத்தமிழ்" என அவர்கள் கொண்டனர் என்பார் முத்தமிழ்க் காவலர் திரு.கி.ஆ.பெ.விசுவநாதம். நாடு + அகம் = நாடகம். அகத்தை நாடுதல் நாகடமாகும். "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்" எனத் தொல்காப்பியர் நாடகம் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

## நாடகக் கலை:

நாடகம் படித்துச் சுவைக்கும் இலக்கியமாக மட்டும் இல்லாமல் பார்த்து மகிழும் கலையாகவும் உள்ளது. படைப்பாளி, நடிப்போர், இயக்குவோர் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து படைக்கும் கூட்டு முயற்சியாய் அது திகழ்கிறது.

"முதிர்ந்து பக்குவப்பட்ட ஒரு கருப்பொருளைக் கொண்டதாய், படைத்துக் காட்டப்படும் நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப கூடிய முடிவை உடையதாய் அமைந்து துன்பியல், இன்பியலாக நடித்துக் காட்டும் பொருட்டு எழுதப்படுவது நாடகம்" என்று அறிஞர் மில்லர் கூறுகிறார்.

கண்ணுக்கும் செவிக்கும் விருந்தாய் அமையும் கலை நாடகம் ஆகும். மக்கள் மனதை எளிதாகத் திருப்பவல்லது. நீதி போதனையைத் தன் பண்பாகக் கொண்டது. எனவே, நாடகம் என்பது மக்களுக்கு மகிழ்ச்சி தரும் ஒரு கலை.

## நாடகம் - ஒரு காலக் கலை:

நாடகம் என்பது ஒரு காலக் கலை என்பர். நாடகம் எழுதுவோர் கதைப்பின்னலையும், பாத்திர வளர்ச்சியையும் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள்ளே அடக்கிக் கூற வேண்டும். நாடகங்கள் நடிப்பதற்காகவே எழுதப்படுகின்றன. நல்ல நாடகங்கள் நடித்தும் படித்தும் அனுபவிக்கத் தக்கதாக இருக்க வேண்டும். நல்ல நாடகங்கள் நல்ல இலக்கியங்கள் ஆகும்.

## கருத்தை நாடகத்திற்குள் அமைத்தல்:

கலையாக விளங்க வேண்டிய நாடகத்தில் கருத்துகள் திணிக்கப்படக் கூடாது. வாழ்வின் கூறுகளை, அதன் விளக்கத்தை, உண்மைகளை விளக்க விரும்பும் ஆசிரியர்

நாடகத்தின் இயல்பான போக்கில் அவற்றைப் புகுத்திட வேண்டும். நாடகத்தின் இனிமையான தன்மையை எக்காரணம் கொண்டும் மறந்துவிடக் கூடாது.

## நாடக உத்திகள்:

- நல்ல நாடகம் பல்வேறு உத்திகளைக் கொண்டதாக அமைக்கப்பட்டிருக்கும்.
- நேரடியாக ஒன்றை விளக்காமல் மறைமுகமாக, குறிப்பாக கருத்தைக் கூறுவதாக அமையும். அதில் ஒரு கலையும், கவர்ச்சியும், அழுத்தமும் காணப்படும்.
- மறை உத்திகள் மூலம் நாடகத்தை சிறப்பாக விளக்கலாம்.
- முன் நடந்தவற்றைப் பின்னர் திருப்பிக் காட்டும் காட்சியாக அமைப்பதும் உண்டு.
- ஆசிரியரின் பங்கு நாடகத்தில் எக்காரணம் கொண்டும் வெளிப்படக்கூடாது. பாத்திரத்தின் உரையாடலைக் கொண்டுதான் நாடகம் வளர்கிறது.
- நாடகமேடை இன்பத்தைக் கொடுப்பதுடன் அறிவையும் வளர்க்கும். அதே சமயம் பாத்திரங்களின் தகுதிக்கு ஏற்ப மொழி நடையை அமைத்துக் கொள்வதில் தவறு ஒன்றுமில்லை. பெரும்பாலும் பேச்சு நடையைப் பின்பற்றுவது நாடகத்தை முழுமையாக அறிந்து இன்பம் பெறச் செய்யும்.

## தமிழ் நாடக வரலாறு:

முத்தமிழில் நாடகம் தமிழும் ஒன்று. பழங்காலத்தில் நாடகக் கலை தமிழ்நாட்டில் சிறப்புடன் விளங்கியது. சங்க இலக்கியத்தில் கலித்தொகைக் காட்சிகள் அனைத்தும் ஒரு சிறு நாடகம் போல நினைக்கத் தக்கவை ஆகும். சிலப்பதிகாரம் தமிழில் தோன்றிய முத்தமிழ்க் காப்பியமாகும். காப்பியத் தலைவியருள் ஒருத்தியான மாதவி ஒரு நாட்டியப் பெண்ணாக தலைக்கோல் பட்டம் பெற்ற பெண்ணாகக் காட்டப்படுகிறாள். வேத்தியியல் - பொதுவியல் போன்ற கூத்து வகைகள் இந்நூலில் பேசப்படுகின்றன. நாடகமேடை பற்றிய குறிப்புகள், நாடக மாந்தர் செய்தி போன்றன சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் மூலம் அறியலாம்.

இடைக்காலத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்களுள் குறவஞ்சி, பள்ளு போன்றவை நாடகத்தன்மை பெற்றவை ஆகும். இருபதாம் நூற்றாண்டின் நாடக வளர்ச்சி அறிஞர் வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியாரோடு தொடங்குகிறது. எனினும் இவருக்கு முன்னே வாழ்ந்த சுந்தரம்பிள்ளை எழுதிய மனோன்மணீயம் என்னும் நாடகமே இன்றளவும் சிறந்த நாடகமாகப் போற்றப்படுகிறது.

வி.கோ.சூரியநாராயண சாஸ்திரியாரின் "நாடகவியல்" ஒரு சிறந்த நாடக இலக்கண நூலாகும். நாடகக்கலையின் தன்மைகள் அனைத்தும் வெளிப்படும்படி ஆசிரியர் இந்நூலை எழுதியுள்ளார். இவர் நாடக இலக்கணம் எழுதியது மட்டுமின்றி மானவிஜயம், கலாவதி, ரூபாவதி முதலிய நாடகங்களையும் எழுதி வெளியிட்டார். இவரைத் தொடர்ந்து சங்கரதாஸ் சுவாமிகள் நாடகக் கலைக்குப் பெரும் தொண்டு ஆற்றியுள்ளார். ஏறத்தாழ 40 நாடகங்கள் எழுதி மேடை ஏற்றினார்.

தமிழ் நாடக உலகில் மற்றொரு ஒளி விளக்காகத் திகழ்ந்தவர் பம்மல் சம்பந்த முதலியார் ஆவார். இவருடைய முதல் நாடகம் 1895 ஆம் ஆண்டு வெளிவந்து. இவர் ஏறத்தாழ 96 நாடகங்கள் எழுதியுள்ளார். இன்று சினிமா, தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் வந்துவிட்டதால் நாடகக்கலை தன்னுடைய வளர்ச்சியில் தேக்கநிலை அடைந்துள்ளது. எனினும் தொலைக்காட்சியில் காட்டப்படும் தொடர் நிகழ்ச்சிகளுக்கு நாடகம் உயிர் எனலாம்.

# வேலைக்காரி

## ஆசிரியர் - சி.என்.அண்ணாதுரை

### நாடகத்தில் இடம் பெறும் கதாபாத்திரங்கள்:

- வேதாசல முதலியார் - வட்டியூர் ஜமீன்தார்
- சரசா - வேதாசல முதலியாரின் மகள்
- மூர்த்தி - வேதாசல முதலியாரின் மகன்
- அமிர்தம் - வேதாசல முதலியார் வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரி
- சொக்கன் - வேதாசல முதலியார் வீட்டில் வேலை செய்யும் வேலைக்காரன்
- முருகேசன் - அமிர்தத்தின் தந்தை
- முத்தாயி - அமிர்தத்தின் தாய்
- சுந்தரம்பிள்ளை - அவ்வூரில் வாழ்பவர்
- ஆனந்தன் - சுந்தரம்பிள்ளையின் மகன்
- மணி - ஆனந்தனின் நண்பன்.

### கதைச்சுருக்கம்:

வேதாசல முதலியார் தன் வீட்டிற்கு ஒரு பார்சல் வந்துள்ளதன் காரணத்தை வேலைக்காரன் சொக்கனிடம் கேட்கிறார். சரசா அம்மா மாதர் சங்கத்தில் டான்ஸ் ஆடப் போகிறார்கள் அதற்கான உடைகள் தான் பார்சலில் தைக்கப்பட்டு வந்துள்ளது என்கிறான்.

உடனே, சரசாவை அழைத்து வரும்படி அமிர்தத்திடம் கூறுகிறார் முதலியார். வேலைக்காரி அமிர்தம் சரசாவை அழைக்கச் செல்கிறாள். அப்போது ஒரு வேலைக்காரிக்கு வேண்டிய அடக்கம், ஒடுக்கம், மட்டு மரியாதை ஒன்றுமே உன்கிட்டே கிடையாது என்று கண்டிக்கிறாள். அதற்கு சரசாவின் சகோதரன் மூர்த்தி, அமிர்தத்திடம் சாந்தமாகப் பேசு என்று கூறவும், "சம்பந்தம் இல்லாத விஷயத்தில் தலையிடாதே" என்று சரசா கூறுகிறாள்.

சரசா தன் தந்தையை பார்க்க வருகிறாள். சரசா! காப்பிச் செலவு, வண்டிச்செலவு, எல்லாம் சேர்த்து ரூ.400/- உன் மாதர் சங்கத்திலிருந்து இந்த உடைகளுக்கான செலவை வாங்கி கொடு என்று தந்தை கூற, வேலைக்காரன் சொக்கன், தையற்காரனுக்கு தனியாகக் கவனிச்ச ரூ.10/-ம் சேர்த்து கொடுங்க என்று கூறவும், சரசா வாங்கித் தருவதாக கூறி சென்றுவிடுகிறாள். பின்னர் வேதாசல முதலியார் பத்து மாதம் ஆகுதே அந்த சுந்தரம்பிள்ளை தரவேண்டிய பாக்கி என்னாச்சு? என்று கேட்கிறார். பணம் வர வழியைக் காணுமுங்க. அதனால அரஸ்ட்டுக்கு ஏற்பாடு பண்ணிவிட்டேனுங்க என்றான் சொக்கன்.

வேதாசல முதலியாரும், வேலைக்காரன் சொக்கனும் சுந்தரம்பிள்ளையின் வீட்டிற்கு பணம் கேட்பதற்காக செல்கின்றனர். "வேண்டாமுங்க ஜெயிலிலே மட்டும் தள்ளாதீங்க. எவ்வளவோ வேதனையை அனுபவிச்சியிருக்கிறேன். இழிவான பெயர் மட்டும் ஏற்பட்டதில்லீங்க ஜெயிலுக்குப் போனால் ..... ஆயுள் பூராவும் பழிப்பாங்க ஐயா! ஏழை மீது கொஞ்சம் இரக்கம் காட்டுங்க" என்று முதலியாரை பார்த்து சுந்தரம்பிள்ளை கெஞ்சி கேட்கிறார்.

"சொக்கா! இழுத்துப் பூட்டுடா கதவை! இந்த நாளை தெரு வழியாக இழுத்துக் கொண்டு போகச் சொல்லு ஜெயிலுக்கு என்று கூறியவாறே பதறுதாடா உன் மனசு! உன்னைப் போல திருட்டுப் பசங்க என் பணத்தை எடுத்து மோசம் செய்யும் போது மட்டும் என் மனசு குளிருதோ? போடா போக்கத்தவனே....! வாங்கின கடனைக் கொடுக்க வழியில்லையினா, குளத்திலே, குட்டையிலே விழுந்து சாகிறதுதானே!" என்று முதலியார் கூறுகிறார்.

"ஐயா! கொஞ்சம் பொறுங்க. உங்க கடனை இன்னும் கொஞ்ச நேரத்தில் பைசல் செய்து விடுகிறேன்" என்று கூறிய சுந்தரம்பிள்ளை உள்ளே போய் மரக்கிளையில் பிணமாகத் தொங்குகிறார். சுந்தரம் பிள்ளையின் மகன் ஆனந்தன், அயலூரில் உள்ள தேயிலைத் தோட்டத்தில் இரவும் பகலும் கஷ்டப்பட்டு ஒரு வேளை சாப்பிட்டு, தன் அப்பாவுக்கு தள்ளாத வயதில் ஒரு கடை வைத்து கொடுக்க வேண்டும் என்ற ஆசையோடுதான் சேமித்து வைத்துள்ள ரூ.200/-ஐ எடுத்துக் கொண்டு தன் சொந்த ஊருக்கு அப்பாவை காண வருகிறான். அப்போது, காளிகோயிலின் பாதையில் வைத்து பழைய நண்பன் மணியைச் சந்தித்து உரையாடுகிறான் ஆனந்தன். "நான் படித்தது..... இந்த

பரந்த உலகத்திலே, வாங்கின டிகிரி, போலீஸ் கேடி" என்று மணி தன்னை பற்றி ஆனந்தனிடம் கூறுகிறான். "நல்லவனுக்குத்தான் இந்த பொலலாத உலகில் நாணயமாகப் பிழைக்க வழியில்லையே: என்றும் மணி கூறுகிறான். ஆனந்தன் காளியை வணங்கிவிட்டு அப்பாவை காண விரைந்து பல ஆண்டு கழித்து பாசத்தோடு வருகிறான்.

மணியும், ஆனந்தனும் வீட்டிற்குள் வருகிறார்கள். தந்தை மரக்கிளையில் பிணமாகத் தொங்குவதைக் கண்ட ஆனந்தன், "அப்பா.... அய்யோ, அப்பா, அப்பா.. மணி என் கதியைப் பார்த்தாயா? அப்பா! வாயைத் திறந்து ஒரு வார்த்தை பேசமாட்டியா அப்பா! ஒரு தரம் 'ஆனந்தா வாடா, மகனே வாடா' என்று அழைக்க மாட்டாயா? அப்பா, நீ ஏன் தூக்குப் போட்டுச் சாகவேண்டும்? நான் எதுக்கும் உதவாதவன் அவன் முகத்திவே முழிக்கக் கூடாதென்று நினைத்தாயோ? அப்பா! நாலு வீடு பிச்சை எடுத்தாவது உன்னைக் காப்பாற்ற மாட்டேனா! கடவுளே! சண்டாளத் தெய்வமே! உனக்குக் கண்ணில்லையா? எனக்கிருந்த ஒரே ஆஸ்தி, ஒரே துணை, ஆதாரம் அவரை இக்கதிக்கு ஆளாக்கிவட்டாயே....." என்றவாறு புலம்பியபடி கதறி அழுதான் ஆனந்தன்.

சுந்தரம்பிள்ளையின் மடியிலிருந்த லெட்டரை எடுதர்துப் படித்துப் பார்த்துவிட்டு ஆனந்தனிடம் கொடுக்கிறான் மணி. அதை வாங்கிப் பார்க்கிறான் ஆனந்தன். ஊருக்கு முதலியாக இருக்கிற வேதாசல முதலியாரா நல்லவன்? என் குடும்பத்தைக் கெடுத்தவன். என் தந்தையை சாகடித்தவன் அவனா நல்லவன்? அய்யா! இவர் ஏன் பிணமானார் தெரியுமா? வேதாசலத்தினுடைய பணத்தாசையினால்தான் கடன் கொடுத்தாராம். கஷ்டப்படுத்தினராம் வீடு வாசல்களை ஏலத்தில் எடுத்தாராம் பத்தாக் குறைக்கு வாங்கிய கடனுக்கு ஏசினாராம் மானத்துக்குப் பயந்து மரக்கிளையில் பிணமானார் என் தந்தை என்று அருகில் உள்ளோரிடம் ஆனந்தன் அழுதுகொண்டே கூறுகிறான்.

"அடப்பாவி! ஒரு வயோதிகன் பிணம் வழியில் கிடந்தாலும் சரி, உன் பெட்டியில் பணம் குவிந்தால் போதுமென்றுதானே இருந்தாய்! அட, பாதகா! இந்தப் பாவம் உன்னைச் சும்மா விடுமா? நீ நல்லாயிருப்பாயா? உன் குடும்பம் நல்லாயிருக்குமா? உன் பிள்ளை குட்டிகள் நல்லா இருப்பார்களா?" என்று கூறியவாறே ஆனந்தன் அழுது புலம்புகிறான்.

மாதர் சங்கத்தில் சரசா நடனம் ஆடி முடித்தவுடன் ஒரு பெண் பேசுகிறாள். "தோழியர்களே! எங்கள் மாதர் சங்கத்திற்குத் தேவையாய் இருந்த நிதிக்காக ஸ்ரீமதி சராசாதேவி நடத்தி நடனம் மூலமாகக் கிடைத்த ரூ.4,400/-யும் அவர்கள் எங்களுக்குத் தந்தார்கள். இந்தப் பேருதவிக்காக சரசா அம்மையாரை வாழ்த்துகிறது இச்சங்கம்" என்று கூறுகிறாள்.

பெண்களின் விடுதலைக்காக நான் எப்பொழுதும் பாடுபடுவேன். நாம் எல்லோரும் சமம். எல்லோரும் ஒன்று என்ற முறைப்படி, தாழ்ந்த நிலையில் உள்ளவர்களைத் தகுந்த முறையில் உயர்த்துவதற்கு நான் எப்பொழுதும் தொண்டு செய்வேன்" என்று சரசாவும் உரையாற்றி அமர்கிறாள். சரசா வீட்டிற்குள் நுழைந்தவுடன் வேலைக்காரி அமிர்தம் தன் சேலையை மடித்து அழகு பார்த்துக் கொண்டிருப்பதைக் காண்கிறாள்.

ஆனந்தன் ஆத்திரத்தில் கத்தியை நன்றாக தீட்டிக் கொண்டிருக்கிறான். "ஆனந்தா! நீ சுத்தப் பைத்தியக்காரன். கோபம் கண்ணை மறைக்கும். ஆத்திரத்தில் எதையாவது செய்துவிடப் போகிறாய்! நானும் உன்னைப் போல ஒரு நாடோடி உன் இனம்.... நீ உலகமறியாதவன் சூதும் சூழ்ச்சியும் நிறைந் இந்த உலகத்திலே சிக்கிச் சிதைந்து, நான் கற்ற பாடங்களை நீயும் கற்றிருந்தால், இந்த மாதிரி கத்தியும் கையுமாகத் திரியமாட்டாய் வலி இருக்கிறதென்று கருங்கல்லில் முட்டினால் வலி தீராது. மண்டைதான் உடையும், வேதாசலத்தை வஞ்சம் தீர்க்க நினைக்கிறாய்! ஆனால் அது உன் கத்தியால் சாதிக்க முடியாதது" என்று ஆனந்தனை எச்சரிக்கிறான் மணி.

"எந்த வேதாசலத்தின் சதியால் என் தந்தை பிணமானாரோ. அந்த வேதாசலத்தின் தலை கீழே உருள வேண்டும். இரத்தம் தரையில் ஆறாக ஓடினாலன்றி என் ஆத்திரம் தீராது கொண்டு வந்த பணத்தை வக்கீலுக்கு இறைத்தேன். கேஸே போட முடியாதென்று சொல்லிவிட்டான். இந்த வாளே வழக்கு மன்றம். இனி இந்தக் கையே சட்டம்." என்று ஆனந்தன் கூறுகிறான்.

"கத்தியைத்தான் தீட்டினாயே ஒழிய உன் புத்தியைத் தீட்டவில்லை நீ. வேதாசலத்தைக் கொன்று விடுகிறாய் என்று வைத்துக்கொள். ஆனால் இறந்துபோன உன் தந்தை பிழைத்து விடுவாரா? ஊரார் உன்னைச் சும்மா விடுவார்களா? அல்லது நீ ஒரு காரியத்தைச் செய்துவிட்டாய் என்று போலீஸ்காரர்கள் உனக்கு மெடல் கொடுப்பார்களா? ஆனந்தா, வேண்டாம் இந்த விபரீத புத்தி" என்று மீண்டும் எச்சரிக்கிறான்.

மேலும், "ஆனந்தா! தர்மம், கர்மம் எல்லாம் தலை முழுகி நெடுநாளாகிவிட்டது. நான் சொல்வது யூகம். ஆனந்தா, உன் தகப்பனாரை அவன் எப்படிக் கொன்றான்? தடியால் அடித்தானா? கத்தியால் குத்தினானா? தற்கொலையைத் தவிர வேறு வழியில்லாமல் செய்தான். ஆகவே..... ஆனந்தா நீ உன் பழிவாங்கும் திட்டத்தை விட்டுவிடு. இதைக் கொண்டு அவனைக் கொஞ்சம் கொஞ்சமாக வாட்டி வாட்டி வதைக்க வேண்டும். ஊரார் இப்பொழுது அவனைப் பற்றி எவ்வளவு மதிப்பாகப் பேசுகிறார்களோ, அதே ஊரார் அவன் யோக்கியதை வெளிப்பட்டபின் அவனை ஏச வேண்டும். அதற்கான வழிகளை நாம் செய்ய வேண்டும்." என்று சாதுரியமாக ஆனந்தனிடம் மணி பேசுகிறான்.

"மணி நீ சொல்வது அவ்வளவும் உண்மை. வேதாசலத்தைப் பழி தீர்ப்பதற்கு இந்தக் கத்தி தீட்டிப் பயனில்லை. என்று கூறியவாறு கத்தியைத் தூக்கி எறிகிறான்" ஆனந்தன். "சந்தோஷம்..... குழியில் விழ இருந்தாய் தப்பித்துக் கொண்டாய்." என்று மணி கூறுகிறான். காளிதேவியை வணங்கிவிட்டு, வேதாசலத்தின் வேஷத்தைக் கலைப்பதற்கு ஆனந்தனும், மணியும் திட்டம் தீட்டுகின்றனர்.

வேதாசல முதலியார் தன் கணக்கு வழக்குகளை எல்லாம் வேலைக்காரன் சொக்கனோடும், முருகேசனோடும் பார்த்துக்கொண்டிருக்கிறார். அப்போது "முருகேசா! உன் மகள் கல்யாணம் என்னாச்சு?" என்று முதலியார் கேட்க, அதற்கு "என் மகள் அமிர்தம் மாப்பிள்ளைக்கு வயசு - (60) ஆயிட்டுதுன்னு சொல்லி கல்யாணத்தை மறுக்கிறாள்" என்று முருகேசன் கூறுகிறான்.

## வேதாசல முதலியாரும் அமிர்தமும்:

முருகேசனின் மகள் அமிர்தத்தை அழைத்து வேதாசல முதலியார் புத்திமதி கூறுகிறார். பின்னர், வேதாசல முதலியார் மகன் மூர்த்தி, அமிர்தத்தை பெண் பார்க்க வரும் கல்யாண மாப்பிள்ளையை விரட்டுவதற்காக அமிர்தத்திற்கு ஒரு யோசனை கூறுகிறான். அவளும் அதன்படியே செய்ய, அமிர்தத்தின் தாய் முத்தாயி, பெண் பார்க்க வந்தவர்களை விரட்டியடிக்கிறாள். நந்தவனத்தில் இருக்கும் மூர்த்தியிடம் அமிர்தம் நடந்ததை எடுத்துக் கூறுகிறாள். வேதாசல முதலியார் ஜமீன்தார் ஆனதுக்கு ஊர் மக்கள மரியாதை செய்ய அவர் வீட்டுக்கு வந்து எஜமான் தாங்கள் அப்படி கொஞ்சம் ஜமீன் பக்கம் வரணும் என்று மக்களுக்கெல்லாம் ஒரே ஆசையா.... இருக்குங்க! என்று கூறவும், வேதாசல முதலியாரும் ஜமீனுக்கு போகிறார்.

## ஆனந்தன், மணி:

ஆனந்தன் ஊரில் உள்ள ஒருவனிடம் கடன் வாங்கி திருப்பி கொடுக்க முடியாமல் திண்டாடுகிறான். கடன் கொடுத்தவன், "மனுஷனாடா நீ? மானமில்லை? வாங்கின கடனைக் கொடுக்க வழியில்லேன்னா... எங்கேயாவது திருடப் போகிறது தானடா..... அட, அதுதான் இல்லேன்னா.... எங்கேயாவது தூக்குப்போட்டு உங்க அப்பனை மாதிரி சாகிறது தானடா! "என்று கூறியபடி ஆனந்தனை அடிக்கிறான்.

மனம் உடைந்துபோன ஆனந்தன் விரைவாக தூக்குப் போட்டுக் கொள்வதற்காக ஒரு மரத்தினடியில் போகிறான். "உன் தந்தைக்காக நீ வாழத்தான் வேண்டும். நயவஞ்சகர்களுக்கு நீ பாடம் கற்பிக்க நீ வாழத்தான் வேண்டும்" என்று ஆனந்தனின் மனசாட்சி அவனைத் தடுத்து நிறுத்துகிறது. அதே நேரத்தில் மணியும் சைக்கிளில் அங்கு

வந்து சேர்கிறான். நடந்தவற்றை ஆனந்தன், மணியிடம் கூறுகின்றான். பின்னர் மணி ஆனந்தனின் மனதை சமாதானப்படுகிறான்.

"காளியின் அருளால் உயர்திரு வட்டியூர் ஜமீன்தாரராக வேதாசலமுதலியார் ஆகிவிட்டார். அந்த சந்தோஷத்தினால் தான் இன்று காளிகோவிலில் அமர்க்களமாய் பூஜை நடக்கிறது" என்று மணி கூறியதை கேட்டவுடன் ஆனந்தன் மிகவும் கோபத்தோடு காளிகோவிலுக்குச் செல்கின்றான். பூஜை முடிந்து அனைவரும் சென்ற பின்னர் ஆனந்தன் அங்கே வருகிறான்.

"பூஜை வேளை தவறி, ஏன் வந்திருக்கிறேன் என்று பார்த்தாயா? ஏ, காளி! உன்னையே நம்பித் தவம் கிடந்த என்னை, நீ கைவிடலாமா? என் தகப்பனைக் கொன்ற பாவி வேதாசல முதலியாருக்கா நீ அருள்புரிவது? நான் உன்னைப் பக்தியோடு பூஜை செய்து கண்ட பலன் என்ன? நீ நயவஞ்கர்களுக்கு தானே அருள்புரிகிறாய்." என்று ஆனந்தன் புலம்பி கொண்டிருக்கும் போது ஆட்கள் வந்து ஆனந்தனை விரட்டுகிறார்கள். ஆனந்தன் ஓடுகிறான். அங்கு, மணி சைக்கிளில் வருகிறான். ஆனந்தன் மணி மீது மோதுகிறான். மணி என்னைக் காப்பாற்று என்கிறான் ஆனந்தன்.

**ஆனந்தன் பரமானந்தனாக மாறுதல்:**

"பயப்படாதே அதோ தெரியும் கொல்லையைத் தாண்டிப் போனால் அதற்குப் பக்கத்தில் ஒரு பாழுங்கிணறு இருக்கிறது. அதில் போய் பதுங்கிக் கொள் வர்ர ஆட்களை நான் பார்த்துக் கொள்கிறேன் நீ போப்பா...." என்று மணி கூறுகிறான். ஆனந்தனை விரட்டி வந்தவர்களை திசைமாற்றி அனுப்பிவிட்டு மணி, ஆனந்தன் மறைந்துள்ள இடத்திற்கு வந்தான். அங்கு ஒரு மூட்டை இருக்கிறது. அதை அவிழ்த்தால் பிணம் உள்ளது. அவன் பையிலிருந்த டைரியில் என்ன எழுதியிருக்கு என்று ஆனந்தன் பார்த்து அவனைப் பற்றி மணியிடம் கூற, "ஆனந்தா, ஒரு பிணம் உன்னை நடைப்பிணமாக்கிவிட்டது. இந்தப் பிணம் உன்னை லட்சாதிபதி ஆக்கப் போகிறது" என்ற மணி, ஆனந்தனிடம் கூறுகிறான்.

"பரமானந்தன் கொலை செய்யப்பட்டது நமக்குத்தானே தெரியும்? அதனால்...... நீ பரமானந்தனாக ஊரில் உலவ வேண்டும். நான் உனக்குப் பிரைவேட் செக்ரட்டரி உன் வாழ்க்கை மாறப் போகிறது. பொருள் இல்லாமல் புலமினாய் இனி, போக போகத்தில் புரள போகிறாய். முன்பு வேதாசலத்தால் வேதனை அடைந்தாய். இனி அவனை நீ வெல்லலாம். பரமானந்தனின் தாயாருக்கு இரண்டு கண்களும் குருடு அதனால் நீ இதற்கு சம்மதிக்க வேண்டும்" என்று மணி கூறவும் ஆனந்தனும் சம்மதிக்கிறான்.

ஆனந்தன், மணி இருவரும் புதிய உடைகள் வாங்கிப் போட்டுக் கொண்டு வருகிறார்கள். "ஆனந்தா! டைரியில் உள்ள விஷயங்கள் நன்றாக ஞாபகமிருக்கட்டும்.

கிழவியின் ஒரே மகன் நீ. 10 வருஷ காலமாக சொந்த வீட்டை விட்டுப் புறப்பட்டு, லண்டன், பாரீஸ் முதலிய இடங்களைச் சுற்றி இருக்கிறாய். தாயாருக்குக் கண் ஆப்பேரஷன் என்று தெரிந்ததும் சொந்த ஊருக்குத் திரும்பி இருக்கிறாய். ஹூம்......ஞாபகத்தில் வைத்துக்கொள்" என்று மணி கூறுகிறான்.

மணி, ஆனந்தன் இருவரும் மேவார் விலாசத்தில் பரமானந்தனின் தாயாரை சந்திக்க செல்கின்றனர். "பரமானந்தா! இத்தனை வருஷம் கழித்தாகிலும் வந்து சேர்ந்தாயே, அதுவே போதும் பரமானந்தா! இந்தப் பத்து வருஷம் நான் கஷ்டப்பட்டது போதும்! இனிமே இந்தப் பாரத்தை என்னால தாங்க முடியாது" என்று பரமானந்தனின் தாயார் தன் மகனை கண்டு அன்போடு கூறுகிறார்.

"பரமு! நீ நல்லபடியாக வந்து சேர்ந்ததுக்கு, காளி கோவிலுக்கு அபிஷேகம் செய்யலாம்னு இருக்கேன்" என்று பரமானந்தனின் தாயார் கூற, அதற்கு மணி, "அம்மா! அபிஷேகம் எதற்கு? ஒரு பஸ்ட் கிளாஸ் டீ பார்ட்டி வைப்போம். நாலு பெரிய மனுஷ்ங்க வந்து நம்ம பரமானந்தனைப் பார்க்கட்டுமே!" என்கிறான்.

"என் காலத்திலேயே பரமானந்தனுக்கு ஒரு கல்யாணம் செய்து விடுவோம். பரமானந்தனுக்குப் பொருத்தமான பெண் வட்டியூர் வேதாசலத்தின் மகள் சரசா" என்று பரமானந்தனின் தாயார் கூறியதும், மணியும் இந்த கல்யாணத்தை நாம் நடத்திடுவோம் என்கிறான். டீ பார்ட்டிக்கான அழைப்பிதழையும் மணி எழுதுகிறான்.

### பரமானந்தன், சரசா திருமணம்:

பரமானந்தனிடமிருந்து வந்த தேனீர் விருந்துக்கான அழைப்பிதழைப் படித்த வேதாசல முதலியார் "பரமானந்த முதலியாரு இந்த ஊருக்கே பெரிய பணக்காரர் நல்ல சொத்து பூர்வீகக் குடும்பம். ஒரே மகன் அவரை தன் மகள் சரசாவிற்கு திருமணம் செய்து வைக்க வேண்டும்" என்று எண்ணுகிறார்.

பரமானந்தன் பார்ட்டிக்கு வந்தவர்களிடம், "நான் பல வருஷ காலமாய் ஐரோப்பா தேசத்திலே சுற்றிக் கொண்டிருந்துவிட்டேன். இப்போதுதான் திரும்பி இருக்கிறேன். ஆதலால் இனி என் தாயாரைகும், வீட்டையும் விட்டுப் போகிறதில்லை என்று தீர்மானித்து விட்டேன். உங்களை எல்லாம் சந்திப்பதற்காகவே இந்த பார்ட்டி ஏற்பாடு செய்தேன். அழைப்பை ஏற்று என்னை கௌரப்படுத்தியதற்காக வந்தனம்" என்று கூறுகிறான். பார்ட்டியில் நடனமாடியதற்காக சரசாவை மணி வாழ்த்துகிறான்.

வேதாசல முதலியார், பரமானந்தனை மிகவும் புகழ்ந்து பேசுகிறார். பின் தன் மனதில் தன் மகள் சரசாவை அவருக்கு திருமணம் செய்து வைக்க எண்ணியதையும்

மறைமுகமாக கூறுகிறார். மணியும் இவர்கள் இருவரின் திருமணத்தை நடத்தி விடுவோம் என்கிறான்.

பரமானந்தனுக்கும், சரசாவிற்கும் கல்யாணம் நடக்கிறது. பரமானந்தனுக்கு பணக்காரனாக நடிக்க பிடிக்கவே இல்லை என்று மணியிடம் கூறுகிறான். அதற்கு மணி, "வெறும் ஆனந்தன், வேதாசல முதலியாரை நெருங்க முடியாது. ஆனால் பரம விரோதியான பரமானந்தனை மேளதாளங்களோடு விருந்து வைபவத்தோடு, நாள் நட்சத்திரம் பார்த்து, தன் ஒரே மகள் சரசாவைக் காணிக்கையாகக் கொடுத்து தன் மாளிகைக்கு அழைத்துக்கொண்டார். இனி அவரை நீ நன்றாக பழி வாங்கலாம்" என்று கூறியதுடன் அடுத்து முதலியாரை கெடுப்பதற்காக தான் வகுத்துள்ள திட்டத்தையும் ஆனந்தனிடம் கூறுகிறான்.

மணியும், பரமானந்தனும் காரில் வரும் கார்ன் சத்தம் கேட்டதும், "வாங்க மாப்பிள்ளை..... வாங்க செக்ரட்டரி சார்....." என்று வேதாசல முதலியார் வரவேற்கிறார். சரசா, தனக்கு நாடகத்தில் கிடைத்த பரிசுகளை பரமானந்தனை பார்க்கச் சொல்கிறாள். அதற்கு அவன் உங்க அப்பனை..... பார்க்கச் சொல்லடி.... என்கிறான்.

"ஆருயிரே! என்மேல் உங்களுக்கு என்ன கோபம்? ஏன் இந்த கடுகடுப்பு? நான் செய்த பிழை என்ன?" என்று சரசா அவன் கால்களைப் பிடித்துக் கொள்கிறாள். ஆனந்தனுக்கு இரக்கம் வரும் சமயம், தன் தகப்பனாரின் ஞாபகம் வரவே காலால் உதைத்துத் தள்ளுகிறான். "என் சிநேகிதர்களுக்கு டீ பார்ட்டி வைக்க வேண்டும். அதற்காக ஐயாயிரம் ரூபாய் செலவாகும். உங்க அப்பாகிட்ட சொல்லி வாங்கிக் கொடு" என்கிறான். "நாளை வாங்கித் தருகிறேன்" என்கிறாள் சரசா.

பரமானந்தன் கேட்ட ஐயாயிரம் ரூபாயை வேதாசல முதலியார் மணியிடம் கொடுக்கிறார். அவரிடம் வாங்கிய பணத்தை ஒரே நாளில் நாசம் செய்கின்றனர். "பார்த்தாயா, பரமானந்த முதுலியார் போகிற போக்கை! வேதாசலத்தின் மருமகனா! வெறிபிடித்தவன் போல திரிகிறான்? பெரிய இடத்துப் பிள்ளை என்று இந்தப் பரமானந்தனுடைய யோக்கியதை கொஞ்சம் கூட நல்லாயில்லை. சதா குடி..... கண்ட கூத்திக்காரிகளுடன் சுற்றுவதே வேலையாய்ப் போய்விட்டது. கருமம்!" என்று ஊர் மகிகள் பரமானந்தனை திட்ட, இது தங்கள் திட்டத்திற்கு கிடைத்த வெற்றியாக மணி எண்ணுகிறான்.

"ஆட வருவாயோ கண்ணா" என்று சரசா பாடிக்கொண்டிருக்க, அப்போது வந்த பரமானந்தன், "அது எவனைப் பற்றிய பாட்டுடி? யாரடி அவன்?" என்று கேட்க, அதற்கு சரசா, "கடவுளே! ஒரு புருஷன் தன் மனைவியிடம் பேசும் பேச்சா இது? என்னை ஏன்

இப்படிச் சித்திரவதை செய்ய வேண்டும்? கல்யாணம் செய்துகொண்டு நான் கண்ட பலன் என்ன?" என்று புலம்ப, பரமானந்தன் சரசாவை அடிக்கிறான். சரசா அலறுகிறாள். இதனை கண்ட வேதாசல முதலியார் மனம் வேதனை அடைகிறார்.

## மூர்த்தி வெளியேறுதல்:

தோட்டத்தில் சந்தித்து மூர்த்தியம், அமிர்தமும் கால் செய்கின்றனர். பெற்றோர்கள் சம்மதிக்காவிட்டாலும் நாம் நிச்சயம் ஒன்று சேர்ந்து வாழ்வோம் என்று கூறியபடி மூர்த்தி சொல்கிறான். அப்போது, அங்கே வந்த பரமானந்தன், அமிர்தத்திடம் தவறாக நடக்க முயற்சி செய்வது போல் நடிக்கிறான். அப்போது சரவாவும் வந்துவிடுகிறாள். அமிர்தம் அங்கே நிகழ்ந்ததை சரசாவிடம் கூற, அவள் அமிர்தத்தைத் திட்டி அனுப்புகிறாள்.

"பரமானந்தா! நீ அமிர்தத்திடம் வாலாட்டினால் நாம் சும்மா இருக்கமாட்டேன்" என்று கூறிய மூர்த்தி பரமானந்தனை உருட்டிவிட்டுப் போய்விடுகிறான். பரமானந்தன், மூர்த்தி - அமிர்தத்தின் காதல் விவகாரத்தை வேதாசல முதலியாரிடம் கூற, அவர் அதை நம்ப மறுக்கவே, பரமானந்தன், மூர்த்தியும் - அமிர்தமும் சந்தித்து காதல் கொள்வதை நேரடியாகவே காட்டியதும், வேதாசல முதலியார், அமிர்தத்தைத் திட்டி அனுப்புகிறார். பின்னர், மூர்த்தியையும் திட்டுகிறார்.

"நான் அமிர்தத்துக்குத் துரோகம் செய் முடியாதப்பா. இதோ நான் போகிறேன் அமிாதத்தோடு கூலி வேலை செய்தாவது பிழைப்பேன். உங்கள் குலப்பெருமை குன்றாமலிருக்கட்டும்" என்று கூறிய மூர்த்தி வீட்டை விட்டு வெளியேறிவிடுகிறான்.

## அமிர்தம் வீட்டைவிட்டு வெளியேறுதல்:

வேதாசல முதலியார், அமிர்தத்தின் தந்தை முருகேசனைப் பார்த்து உன் பெண்ணை அடக்கி வை என்று எச்சரிக்கிறார். மூர்த்தி, "அமிர்தத்தை சந்தித்து, நான் சென்னை சென்று நண்பன் உதவி பெற்று உன்னை விரைவில் வந்து திருமணம் செய்வேன்" என்று கூறிச் செல்கிறான்.

அமிர்தத்தின் தந்தை முருகேசன், அமிர்தத்துக்கு ஒரு மாப்பிள்ளை பார்த்து நாளைக்கே திருமணம் செய்து வைக்க எண்ணுவதை நண்பனிடம் கூறுகிறார். பின்னர், முருகேசன் பற்றவைத்த சுருட்டை வீசி எறிய, அதன் காரணமாக அவன் வீடு தீப்பற்றி எரிகிறது. அனைவரும் எரிந்து சாம்பலாகின்றனர்.

சென்னைக்கு சென்ற மூர்த்திக்கு நண்பர்களின் உதவி கிடைக்கவில்லை. இருப்பினும் தன் செயினை விற்று, வந்த பணத்தில் அமிர்தத்துடன் வாழ்க்கை நடத்த வந்த மூர்த்திக்கு அமிர்தத்தின் முடிவையறிந்ததும் தன் ஆவியின் துடிப்பை அடக்க

முடியாதவனாகி, சாந்தி வேண்டி ஒரு ஆஸ்ரமத்தில் சேருகிறான். அந்த ஆஸ்ரமத்துக்கு குரு ஹரிஹரதாஸ்.

பரமானந்தன், சரசாவை வேதாசல முதலியார் வீட்டிலிருந்து வெளியேற்றி ஒரு குடிசைக்கு அழைத்து வந்து இனிமே இதுதான் நம்ம வீடு, பங்களா இல்லை, மாடி இல்லை வீட்டு வேலைகளையெல்லாம் செய். மார்க்கெட்டுக்குச் சென்று சமையலுக்குத் தேவையான காய்கறிகள் வாங்கி வா. எனக்கு வேலைக் கிடைக்கும் வரை நீ பக்கத்த மார்க்கெட்டில் காய்கறிகள் விற்று வர வேண்டும் என்கிறான்.

எரியும் வீட்டிலிருந்து தப்பி வந்த அமிர்தம், ஒரு லாரியில் யாருக்கும் தெரியாமல் ஏறிக் கொண்டு வரும்போது லாரி டிரைவர் பார்த்து கீழே இறக்கி விடுகிறான். பின்னர், தெருவிலே பழம் விற்கிறாள் அமிர்தம். அமிர்தம் பழக்கடையிலிருந்து ஒரு கூடையில் பழம் எடுத்துக் கொண்டு வீதி வழியே வரும்பொழுது அவளைக் கண்ட பாலு முதலியார் "இவள் என் மகள் சுகிர்தம்" என்று ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்கிறார்.

## மூர்த்தி கைது செய்யப்படல்:

மணியும், பரமானந்தனும் சந்திக்கின்றனர். மணி மதுராபுரி ஆஸ்மரத்திற்கு சென்று அங்கு "சுந்தரி" என்ற ஒருத்தி, வேதாசலத்தின் கொடுமை தாங்க முடியாமே... ஊரைவிட்டு ஓடிப்போய் இப்போது "சுந்தரகோஷாக" இருக்கிறாள் என்பதை கண்டவற்றை கூறுகிறான்.

பரமானந்தனும் சென்னைக்குப் போய் அங்கே நம்ம வேலைக்காரி அமிர்தம், பணக்காரியாக இருப்பதைப் பார்த்ததையும் பாலு முதலியாரின் மகளாக தற்போது இருக்கிறாள் என்றும் கூறுகிறான். அப்போது பத்திரிக்கை செய்தியைப் படித்து ஹரிஹரதாஸ் கொலை வழக்கில் மூர்த்தி கைது செய்யப்பட்டதை அறிந்த இருவரும் பழிவாங்க மீண்டும் வாய்ப்பு என்று எண்ணுகின்றனர்.

வேதாசல முதலியார், என் மகன் மூர்த்தியை இந்த கொலைக்குற்றத்திலிருந்து நீங்க தான் செக்ரட்டரி சார்.....! காப்பாற்றணும் என்று மணியிடம் கூற, அவரும் நீங்க நான் சொன்ன வக்கீலையே ஏற்பாடு செய்யுங்கள் என்று கூறுகிறான். நீதிமன்றத்தில் பழைய ஆனந்தனாகிய பரமானந்தன் வடநாட்டு வக்கீலாகவும், மணி அவன் வேலைக்காரனாகவம் மாறுகிறார்கள்.

வேதாசல முதலியாரின் மகன் மூர்த்தியை, கொலைக் குற்றத்திலிருந்து தப்பிக்க செய்து சுகிர்தத்தை திருமணம் செய்து வைக்கின்றனர். பரமானந்தன் ஆனந்தனாக மாறுகிறான் இதனைத் தாங்கமுடியாத மூர்த்தி ஆனந்தனை அடக்க முயலுகிறான்.

## பரமானந்தன் ஆனந்தனாக மாறி உண்மையைக் கூறுதல்:

உடனே ஆனந்தன் "துள்ளாதே மூர்த்தி! உன் கள்ளக் காதல் கைகூடிவிட்ட சந்தோஷத்தில் துள்ளுகிறாய். மூர்த்தி! என்னைப் போல் துன்பத்தைக் கண்டிருந்தால் தெரியும், நீ சீமானின் மகன் சொகுசாக வாழ்ந்தாய். என் சஞ்சலத்தை நீ அறிவாயா? பசி உனக்குத் தெரியுமா? பட்டினி கிடந்தது உண்டா? மூர்த்தி நீ புத்தி உள்ளவன். என் கதையைக் கேட்டபின் யோசித்துப் பதில் சொல் நான் யார்? மேவார் விலாச மைனர் சரசாவின் புருஷன். ஜமீன் வேதாசலத்தின் மருமகன் என்றுதானே நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? ஊருக்குள் எனக்கு பெயர்?....... குடியன், வெறியன், கூத்திக் கள்ளன், மனைவியைக் கொடுமை செய்தவன், மாமனாரின் மனதை நோகச் செய்த மகா பாதகன். இவ்வளவும் ஏன் செய்தேன் தெரியுமா? வேதாசலத்திற்கு வேதனை தருவதற்காகத்தான். ஏன் திகைக்கிறீர்கள்! உண்மையின் உருவம் பார்ப்பதற்குப் பயமாயிருக்கிறதோ? அன்று கோர்ட்டிலேயும் எப்படித்தான் சகித்துக் கொண்டிருந்தீர்களோ?" என்று ஆனந்தன் கேட்டான்.

"ஆனந்த்! நீயா என்னைத் தூக்கு மேடையிலிருந்து காப்பாற்றினாய்? நீயா வடநாட்டு வக்கீல்? உனக்கா.... என் மீது இரக்கம் பிறந்தது?" என்று மூர்த்தி ஆனந்தனிடம் கேட்கிறான்.

"படித்த முட்டாளே கேள். உன்னைப் போல் நான் சரசாவை காதலுக்காகவா? திருமணம் செய்து கொண்டேன். இல்லை என் வேதனையை வெளிப்படுத்துவதற்கு! உன் தகப்பனார் பணத்தாசை பிடித்து பல ஏழைகளைக் கசக்கிப் பிழிந்தார். அப்படி அவதிப்பட்டவர்களில் என் தந்தையும் ஒருவர்." என்று தன் கதை அனைத்தையும் ஒன்றுவிடாமல் சுந்தரம் பிள்ளை பிணமாக மரத்தில் தொங்கியது உட்பட எல்லாவற்றையும் கூறுகிறான். சரசா! மூர்த்தி! நீங்கள் இருவரும் இப்போது கூறுங்கள் உங்கள் தந்தையை நான் கொடுமைப்படுத்தியது குற்றமா? வேதாசல முதலியாரே! நீர் சொல்லும், நான் கொடுமைப்படுத்தியது குற்றமா?" என்று ஆனந்தன் கேட்கிறான்.

## வேதாசல முதலியார் மனம் திரும்புதல்:

"ஆனந்தா! போதும், போதும் எனக்கு இந்தத் தண்டனை, என்னை மன்னித்து விடு. என்னால் உன்னைப் போல் எத்தனை பேர் கஷ்டப்பட்டார்களா? எனக்குத் தெரியாது பாழும் பணத்தாசையினால், பணத்திமிரினால் நான் பல ஏழைகளைக் கொடுமைப்படுத்தி வந்தேன். உண்மைதான்! ஆனால் உன்னை இதுவரை பெரிய துஷ்டன் என்றே எண்ணியிருந்தேன். உண்மை இப்போது தான் தெரிகிறது. நீ எவ்வளபு நல்லபிள்ளை என்றும் எனக்கு புரிகிறது.

பணத்தாசையால் பல கொடுமைகள் புரிந்த வேதாசலம் மாண்டே போனான். நான் புத்தி வந்த வேதாசலம் தவறை உணர்ந்து கொண்டவன்." என்று வேதாசல முதலியார் கூறுகிறார்.

"வேதாசல முதலியாரே! மற்றொன்றும் நீர் உணர வேண்டும். பணத்திமிர் மட்டுமல்ல உமக்கு! ஜாதித்திமிரும் அமோகம். ஆனால் நடந்ததென்ன? பஞ்சை சுந்தரம்பிள்ளையின் மகன் ஆனந்தன். வேதாசல முதலியாரின் மருமகன். அதுமட்டுமா! இதோ வீற்றிருக்கும் மணமகள் பேங்கர் பர்மா பாலு முதலியாரின் மகள் என்பது உமது எண்ணம் அல்லவா? இதோ பாருங்கள் அவளது பெற்றோரை!" என்று திரையைத் தள்ளிக் காண்பிக்கிறான் ஆனந்தன். "என் அமிர்தமா சுகிர்தம்?" என்று ஆச்சரியப்படுகிறான் மூர்த்தி.

"ஆம் உமது மருமகள் யார்? வேலைக்காரி அமிர்தம். வேற்று ஜாதிப் பெண் எங்கே உம் ஜாதித் திமிர்? பணம் பத்து நாளில் ஜாதியைப் பட்சணமாக்கிவிட்டது. பார்த்தீரா? பணத்திமிர் ஒழிந்தது. ஜாதித் திமிரும் ஒழிந்தது. என் வேலையும் முடிந்தது. நான் வருகிறேன்" என்று கூறியவாறு ஆனந்தன் புறப்படுகிறான்.

"பணத்திமிரும், ஜாதித்திமிரும் ஒழிய வேண்டும் என்றும், "ஒன்றே குலம்; ஒருவனே தெய்வம்" என்பதனை நாட்டு மக்களுக்கு உரைப்போம்" என்று வேதாசலமுதலியார் கூறுவதுடன் அறிஞர் அண்ணா "வேலைக்காரி" என்ற நாடகத்தினை நிறைவு செய்துள்ளார்.

# ஆதிரை

## ஆசிரியர் - சிற்பி

### நாடகத்தில் இடம்பெறும் கதாபாத்திரங்கள்:

1. திருவிக்கிரம சோழர் - இரட்ட குல மன்னர்
2. சிம்மநந்தி ஆச்சாரியர் - சமணத் துறவி
3. நரசிம்மபட்டர் - சைவப் பெரியார்
4. சித்திரமேழியார் - மருதூர்த் தலைவர், அரசரின் ஆலோசகர்
5. மாதவன், தாடிகன் - கங்க இளவரசர்கள்
6. பூந்துறையார் - அமைச்சர்
7. திருநீலன் - சிம்மநந்தியாரின் ஒற்றன்
8. குமரன் - திருவிக்கிரமரின் மெய்க்காப்பாளன்
9. ஆதிரை - திருவீக்கிரமர் மனைவி
10. அருகர்மணி - திருவிக்கிரமர் அன்னை
11. சங்கமித்திரை - கங்க இளவரசி
12. சிலம்புச் செல்வி
13. மலர் வல்லி
14. பவளநங்கை

(12–14) ஆதிரையின் தோழியர் மற்றும் அலுவலர், படைவீரர் முதலியோர்.

## கதைச் சுருக்கம்:

"எருமை நாடு" என அழைக்கப் பெற்ற மைசூருக்கு அருகில் உள்ள சமணர் வெள்ளைக்குளம் (சிரவண பெல்கோலா) அங்குள்ள பழம்பெரும் சமணப்பள்ளியில் வழிபாட்டுப் பாடல் ஒலி எழுகிறது.

**"பொன்னார் பூம்பிண்டி**
**பொழிநிழற்கீழ் அமர்ந்தாயால்!**
**மன்னும் உலகனைத்தும்**
**மகிழ்ந்தேத்தும் பேரொளியாய்!**
**பின்னும் வினைப்பகையைப்**
**பெருமனத்தால் வென்றாயால்!**
**உன்னோடு சூழ்ந்திலங்கும்**
**ஒளிவட்டம் பூண்டாயால்!**
**முத்தும் மணியும் சேர்**
**முக்குடைக்கீழ் உறைவாயால்!**
**எத்திசையும் வணங்குகின்ற**
**இந்திரற்கும் இந்திரனே!**
**வித்தாகி முளைக்கின்ற**
**வினைகளுக்கு நெருப்பாவாய்!**
**சித்திர நல் லறவாழி**
**சீர்பெறவே சுழற்றுவாய்**
**மாமலர் அசோகத்தின்**
**மணிநிழற்கீழ் இருந்தாயால்!**
**பூமிசை நடந்தேகும்**
**பொன்னார்ந்த திருவடியாய்!**
**தேமதுரம் செறியும்**
**திரு நாமம் போற்றியே**
**தாமரை வடிவேத்தும்**
**தவமெங்கள் தவமதே!"**

என்ற பாடல் முடிந்ததும் தனியறையில் சாந்தி முனிவரும் சிம்மநந்தியாரும் உரையாடுகின்றனர். சாந்தி முனிவர் கேட்கின்றார். அதற்கு சிம்மநந்தியார்,

**"முதுமை உறக்கத்துக் கெதிரி யன்றோ?**

**கதிரவன் முதுமையில் கணையிருள் சூழ்தல்**

**கண்டதும் இலையோ?**

என்று பதிலளிக்கிறார். வண்டுகள் தேன் அருந்தி துயில்கையில் பாடுவதில்லை. உறக்கம் உங்கள் விழிகளுக்கு ஏறினால் என்ன செய்வீர்கள். என்ற சாந்தி முனிவர் கூற, சிம்மநந்தியாரும் "ஏறினால் என்ன?" என்று கேட்கிறார்.

இருவிழியை சற்றே ஆறுதலாக அயர்ந்து மூடினால் மந்திரம்போல வாய்முணுமுணுத்துக் கொண்டே இருக்கும் எவ்வாறெனில்......

**"என்திரு நாடே! என்திரு நாடே!**

**என்னா குவையோ என்திரு நாடே!"**

என்னும் சொற்களே இடறி ஒலிக்கும் என சாந்தி முனிவர் கூறுகிறார்.

என் உள்ளத்தின் அடியில் பாதுகாப்போடு பதுங்கிய உண்மையை நான் கூறுகிறேன் என்று சிம்மநந்தியார் கூறுகிறார்.

மேலும், பிஞ்சு வயது முதலாகவே என் மனக்கிடங்கில் மூன்று கடமை உணர்வுகள் சுழன்று வருகின்றன. அவை,

**"எனைப்பெற் றெடுத்த இனிய கொங்குமண்**

**பாலோடு உண்ட பழந்தமிழ்த் திருமொழி**

**காலில் நகங்கள் முளைத்தநாள் முதலாய்**

**உயிரின் உறவாய் ஒன்றிய சமணம்"**

இயன்ற வரைக்கும் இவை தழைத்து ஓங்க உழைப்பதே என் வாழ்வின் ஓங்கிய குறிக்கோள் என்று சிம்மநந்தியார் கூறுகின்றார்.

## வளர் தமிழின் உயிர்:

துறவு மேற்கொண்ட பின்னர் மொழியும், நாடும் முதலாக உள்ளவற்றின் மேல் பற்று வைப்பது முறையோ? என்று சாந்தி முனிவர் கேட்கிறார்.

**"தனக்கென முயலாப் பிறர்க்கென வாழ்நர்**

**இனத்தால் இயங்கும் இவ்வுலகம் என்று**

சங்கச் சான்றோர் சாற்றினார் அன்றோ?
இங்குள மக்கட்கு இனியது எதுவோ
அதுவெலாம் எமக்கும் அமுதமே அன்றோ?
எதனையும் துறக்கும் இதயஉம் அறிவை
ஊட்டிய தாய்மொழி உயர்வை மறக்குமோ?
பாட்டும் உரையும் பயின்றதைத் துறக்குமோ?
உரித்தாழ் கரகமும் ஒளிமயிற் பீலியும்
தரித்த தன்றி வே றெதனையும் தரியேன்
நாடெலாம் சுற்றி நடந்த காலையும்
நாடகக் காப்பியம் நல்கிய சமண்முனி
இளங்கோ சிலம்பின் ஏட்டுச் சுவடிகள்
விளங்கும் பொதியினை விட்டதே இல்லை!
வஞ்சி இளவல் வடித்த காப்பியக்
கொஞ்சு தமிழ்கெனைக் கொள்ளை கொடுத்தேன்
மலையும் காடும் மயிலாடு சோலையும்
குலாவும் இனிய கொங்கினில் பிறந்தேன்
பாலைப் பொழியும் அருவிகள்; அவற்றைப்
போலப் பொழியும் பசுக்கள்; தோட்டம்
துரவெலாம் வாழைக் கன்றுகள்; பசும்புல்
தரையெலாம் துள்ளும் புள்ளிமான் கன்றுகள்!
கொம்பினில் தாவும் குரங்குக் குட்டிபோல்
தம் கிளைப் பழங்கள் சுமந்த பலாக்கள்!
எட்டிப் பார்க்கும் குழந்தை முகம்போல்
நெட்டை மலைமேல் தெரியும் நிலாக்கள்
மயிலுக்குப் பேகன் போர்த்தபட் டுப்போல்
நயமுற விரித்த பழைமே கங்கள்
குமணன் புலவர்க்குக் கொடுத்த காசுகள் போல்
அமைவுறப்  பொழியும் ஐப்பசி அடைமழை
உறைகளில் பதுங்கும் கூர்வாள் போன்று

**இரையுணப் பதுங்கும் புலிகளின் வனங்கள்**

**பெருமலை நடுவே பிஞ்சு மலைகளாய்த்**

**திரியும் யானைகள்; தேக்கு மரங்கள்போல்**

**உழைத்துரம் ஏறிய உடலும் அன்பில்**

**தழைத்தழ கேறிய தமிழும் கொண்டே**

**இனிய மக்கள் - இவையெல்லாம் நிரம்பிய**

**தனிப்பெரும் நாடென் தாயடநா டன்றோ?**

**மண்ணில் பிறந்து மண்ணால் வாழ்ந்து**

**மண்ணில் மறைவோம் மண்மறப் போமோ?"**

என்று தன் மனதில் உள்ளதை சிம்மநந்தியார் கூறுகிறார். என் உள்ளத்தில் உறங்கிய உயர்வுகள் துள்ளி எழும்படித் தூண்டிவிட்டீர் முனிவரே! இருப்பினும் நம் அருமைச் சமணம் இத்தரணியில் உயர்கதியை அடைய நான் ஒரு பொன் ஏணியாய் இயங்கவும், வளர்தமிழுக்கு உயிராகவும் உழைப்பதில் நானொரு தொண்டன்.

## விசயக் கந்தபுரம்:

கொங்கில் இரட்டர் ஆட்சியில் சூரியநிலை விளக்காக வர்த்தமானர் தம் வளர்நெறி ஓங்கி கருத்தெல்லாம் கரகம் ஆடிற்று. அங்கு மாமன்னனாக ஆட்சி செய்தது என் (கன்னர தேவன்) சதுர்ப்புய கன்னர தேவன். அதாவது என் அருமையான நண்பன் என உருக்கமாக சிம்மந்தியார் மேலும் தொடர்ந்து ஆனால் அந்த மன்னன் இன்று உயிருடன் இல்லை. அதனால் தான் சமண் மாணிக்கம் சாக்கடலில் வீழ்ந்தது எனவும், தற்போது அந்நாட்டின் நிலவரம் பற்றி என் தொண்டன் கூறுவதை கேட்பதற்காக "கண்டதும் கேட்டதும் வண்டுபோல் தேடுவார் நன்டு பேர்ல பற்றுவார் காற்றினும் விரைவாய்க் கடுமத்கிடும் செய்திக்காக நேற்று முதலாய்க் காத்துக் கிடக்கிறேன். ஆனால் அவன் இன்னும் வரவில்லை" என்று கூறி வருத்தப்படும் வேளையில், கலைமான் பாய்ச்சலில் வெண்ணிறப் புரவி (குதிரை)யில் ஒருவன் வருவதைக் கண்ட இருவரும் ஆர்வத்தோடு அவனை நெருங்கி தனி அறைக்கு அழைத்துச் சென்று செய்தியைக் கேட்க, "இன்று இப்பொழுது எம்தலைநகரில் (விசயக் கந்தபுரம்) கன்னரர் புதல்வன் கண்மணி விக்கிரமர் மன்னவரான பின் மகிழ்வுடன் கூட்டும் அரசவைக்கு எழும்நாள்!" என்று ஒற்றனாக உள்ள திருநீலன் கூறுகின்றான். இதனை கேட்ட சிம்மநந்தியார் மிகவும் மகிழ்ச்சி அடைகிறார்.

கொங்கு நாட்டில் விசயக் கந்தபுர அரண்மனையில் அரசர் திருவிக்கிரம தேவர் பட்டம் சூடியபின் முதன் முதலாகக் அரசவை கூடுகிறது. அரசரைக் காணும் பொருட்டு ஆவலில் பெருந்திரளாகக் கூடியுள்ளனர் பொதுமக்கள். ஒரு முதியவரும், அவரது பேரனும்

கூட்டத்தில் ஒரு புறம் நெருங்கி வந்து நின்று கொண்டு உரையாடுகின்றனர். தன் ஆயுளில் பாயும் கடலெனப் பரவசம் கொண்டு தேன் உண்ட வண்டாய்த் திளைக்கும் மக்களை இதுவரை நான் பார்த்ததே இல்லை என்று தன் பேரனிடம் கூறுகின்றார்.

பொழில் வாய்ச்சி நகர்ப் பொன்னன் என்ற பெயரினை உடையள அந்த முதியவர் இதற்கு முன்பு மன்னர் கன்னர தேவரின் மெய்க்காப்பாளாராகத் திகழ்ந்தவர். அம்மமன்னரின் போாக்கள வெற்றிக் காட்சியை மனதில் எண்ணியபடியே, மன்னா! நீர் தற்போது இவ்வுலகில் இல்லாமல் போனாலும் உம் திருமகன் திருவிக்கரம தேவரின் மெய்க்காப்பாளனாக பணியில் அமர்த்துவதாகவே நான் இங்கு வந்துள்ளேன் என்று மனதில் கூறியபடியே, பேரனிடமும் கூறுகிறார்.

தந்தையைப் பிரிந்த துயரில் இருப்பதால் வெற்றி விழாவை திருவிக்கிரமர் மறுக்கவே செய்தார். முடிசூட்டும் விழாவும் முழக்கங்கள் இன்றியே நடைபெற்றன. தற்போதும், அதுபோலவே அரசவை கூடும் முதல்நாள் என்பதால் நான்கு திசைகளிலும் இருந்து வந்த மக்கள் மிகவும் மகிழ்ச்சியோடு படையென திரண்டு மன்னரை காண வந்துள்ளனர். மகிழ்ச்சி பெருக்கால் முழக்கங்களும், வாழ்த்துகளும் ஒலித்தன.

"கன்னர தேவர் கண்மணி! வாழ்க!" என்ற அம்முதியரின் குரல் கேட்டு மன்னர் வியப்புற்று திரும்பி பார்க்கிறார். முதியவரைக் கண்டதும் அடையாளம் தெரிந்துகொண்டு பொன்னரை அழைத்து நலம் விசாரிக்கிறார். கூட்டத்தில் உள்ளவர்கள் அதிசயிக்கின்றனர். இன்று மாலை அரண்மனைக்கு வரும்படி கூறிச் செல்கிறார்.

தற்போது, மன்னர் விசயக்கந்தபுர அரசவைக்குள் சென்றவுடன் மீண்டும் வாழ்த்து முழக்கங்கள் ஒலிக்கின்றன. அவையினர் எழுந்து நிற்கின்றனர். அரசர் அரியணையில் அமர்கிறார். அனைவரும் இருக்கையில் அமர, அமைச்சர் பூந்துரையார் எழுந்து பேச ஆரம்பிக்கிறார். "முறை செய்து காக்கும் மன்னவன் நமக்கெலாம் இறையென விளங்குதல் எவர்தாம் அறியார்? தலைவனைப் பெறும் தவம் உடையோம் நாம்.... சிகர இமயமாய்ச் சீர்பெறும் அரசரை வாழ்த்த வருகைபுரிந்துள்ள சமயச் சான்றோர்களை அன்போடு வரவேற்கிறார்" அமைச்சர் பூந்துரையார்.

## மன்னரை வாழ்த்துதல்:

சமணப் பெரியார் குணசேனர், பொன்மனத்தாசான் புகழ்ச் சிம்மநைந்தியார் நல்லுரை அனுப்பி அருளினார்.

**"கனியொன்று வீழ மலரொன்று பூத்தது!**

**அரும்புக! அரும்புக! அருள் வர்த்த மானர்**

**திருமொழி நாடெலாம் அரும்புக! அரும்புக!**

**ஆருகத நெறியின் மாரி முகில்களால்**

**ஈரம் செழிக்க இயம்புவேன் வாழ்த்து"**

என்று வாழ்த்தி உரையாற்றினார்.

பின்னர், பௌத்தத் துறவி தருமபாலர்,

**"போதி சத்துவப் புனிதர் திருநெறி**

**நீதி ஓங்குக! நிலவுக சாந்தி!**

**மன்னவ உனது மதிக்குடை நீழல்**

**இந்நெடு வையத்துக் கெடுத்துக்காட்டாகுக!"**

என்று பேசுகின்றார். மன்னரும் அதற்கு அடிபணிகிறேன் என்கிறார். குணசேனருக்கு இது கோபத்தைத் தூண்டுகிறது.

**சைவச்சான்றோர் நரசிம்மபட்டர்**

**"....... சங்கரா போற்றி!**

**பிறைமதி போல் நீ பெருமதி சூடுக!**

**அரசெனும் நங்கையோ டமர்ந்தினி துறைக!**

**வாழிய மாமன்னா! வாழி பல்லாண்டு!"**

என்று கூறவே, மன்னர் தங்களின் நல்வழியில் நடப்பேன் என்கிறார்.

இதை கேட்டதும் சற்று கூடுதலாகவே குணசேனர் கோபம் கொண்டு எழுந்து பின்பு அமர்கிறார். இவை அறியாத மன்னர் அவையை வணங்கி உரைநிகழ்த்துகிறார்.

**மன்னர் உரை:**

**"ஆன்ற குடியீர்! அன்புக்கு நன்றி .....**

**சான்றோர் பலர்யான் வாழும் ஊரென**

**ஆந்தைப் பெரியோன் அன்றுரைத்தது போல்**

**மாந்தருள் தெய்வங்கள் வாழ்வதிந் நாடு!**

**என்பெருந் தந்தை கன்னர தேவர்**

**தன்வழி மணிமுடி தரித்தேன்; இன்றுமை**

**ஆள்வது தனியோர் அரசன் அல்லன்**

**நீளும் அன்பே நிலைத்த என் செங்கோல்!**

**சமயங்கள் விரல்கள் - ஒன்றுடன் ஒன்றாய்**

**அமைவுறப் பின்னினால் ஆக்கங்கள் பெறலாம்.**

**சினைத்த முகில்கள் சிந்துபொன் மழைபோல்**

**அனைத்து மதங்களும் அன்பையே பொழிவன"**

என்று மன்னர் கூறவே, சித்திரமேழியார் தடுத்தும் குணசேனர் வெளியேறி விடுகிறார். மேலும், மன்னர் எங்கள் அருமை குலகுரு சிம்மநந்தியாரை நேரில் கண்டு உரையாட எண்ணுவதாய் கூறிக்கொண்டே, குணசேனரை பார்க்க அவர் அங்கில்லாததை அறிந்தும் கொள்கிறார். பின்னர் அரசவை நிறைவு பெற்று அனைவரும் செல்கின்றனர்.

## தோழியருடன் ஆதிரை நீராடல்:

கருவூருக்க அருகில் உள்ள மருதூர் என்ற சிற்றூர். ஆன்பொருநை ஆற்றுத்துறையில் புதுப்புனல் விழா நடைபெறுகிறது. பெண்கள் படித்துறையில் நீராடுவோர், நீந்திக்களிப்போர், புதுப்புனலை வரவேற்றுப் பாடுவோர், ஆடுவோர் என்று பல நிலைகளில் காட்சி தருகின்றனர். மருதூர் தலைவன் சித்திர மேழியார் மகள் ஆதிரை மட்டும் தனித்துக் காணப்படுகிறாள். நெற்றியில் நீறு, குங்குமம். பக்திக் கனிவுடன் காணப்படுகிறாள். புதுப்புனலை வரவேற்று பாடல்கள் ஒலிக்கின்றன.

**"மணிச் சிலம்படி தாளமிட**

**மரகதப் பட்டு மினு மினுங்க**

**அணியும் ஆரமும் கோலமிட**

**ஆடி வருகிறாள் ஆன்பொருநை**

**மாமலை மன்னவன் காதலினால்**

**மண்ணுக்குச் சூட்டிய மாலையெனப்**

**பாமழை வண்டுகள் பாடிவரப்**

**பாய்ந்து வருகிறாள் ஆன்பொருநை**

**சந்தனக் காடுகள் விட்டிறங்கிச்**

**சண்பக வாசம் மணந்துவர**

**திந்திமித் தோமென நாட்டியங்கள்**

**செய்து வருகிறாள் ஆன்பொருநை"**

என்ற பாடல் ஒலிக்க, ஆடலும் தொடர நீர்த்துறையில் ஆதிரை நீராடிக் கொண்டிருக்கிறாள். அப்போது அவளுடைய தோழிகளான மலர்வல்லி, சிலம்புச் செல்வி, பவளநங்கை ஆதிரையின் அழகை வர்ணிக்கின்றனர்.

பின்னர், ஆதிரை நீராடி முடித்துவிட்டு வெளியில் வருகிறாள். தோழிகளிடம் நீங்களும் விரைவில் குளித்து வாருங்கள். இறையனார் கோவிலுக்குச் செல்ல வேண்டும் என்றதும் தோழியரும் நீராடச் செல்கின்றனர். அங்கு நீர்த்துறைக்குச் சற்றுத் தள்ளி ஒரு வீரன் குதிரைக்குத் தண்ணீர் காட்டிக் கொண்டிருக்கும் போது தவறி விழுந்த வீரன் ஆற்றில் தத்தளிக்க, ஆதிரையின் தோழி சிலம்புச் செல்வி அவ்வீரனைக் காப்பாற்றி கரையேற்றி விடுகிறாள். வீரனும் நீங்கி விடுகிறான். ஆதிரை தன் தோழிகளுடன் சிவன் கோவிலுக்குச் சென்றாள்.

மலர்க் கூடையிலிருந்து ஒவ்வொரு மலராக எடுத்து அருச்சித்துப் பாடல் பாடுகிறாள்.

**"திங்களணி செஞ்கடை வானவ னேயோ**
**பொங்கனல் ஏந்திடும் நாயக னேயோ**
**கங்கையைத் தலைமீது காப்பவன் நீயோ**
**எங்களின் குலம் காக்கும் இறைவனே வாழி**
**மாதுளம் பூமேனி மலரன்ன கண்ணாள்**
**மாதொரு பாகமாய் அமர்நதவ னேயோ**
**யாதொரு தெய்வமாய் யார்தொழுதாலும்**
**நாதனாய் நாடியே நாணுவாய் வாழி!"**

என்று பாடல் பாடி முடித்து ஆதிரை தியானத்தில் ஆழ்கிறாள். பின் பூசாரி அழைத்து விழிக்கிறாள். "மறுமுறை வரும்போது மாலை மணத்துடன் வரச்சொல்கின்றார்" பூசாரி என்று கேலி செய்தபடி ஆதிரையின் தந்தை அழைப்பு வரவே அங்கிருந்து செல்கின்றனர்.

## சமணமும், சிம்மநந்தியாரும்:

புகலூர் சமணப்பள்ளியில் முன்னிரவுப் பொழுதில் மெல்லிய நிலா வெளிச்சம் வீசும் பள்ளியின் திண்ணையில் சிம்மநந்தியாரும் குணசேனரும் உரையாடி இருக்கின்றனர். சமணப் பள்ளியில் இரவு விளக்கு ஏற்றப்படுவதில்லை. அரசவையில் நிகழ்ந்தவைகளை எல்லாம் குணசேனர் சிம்மநந்தியாரிடம் கூறுகிறார். அதற்கு சிம்மநந்தியார் அவை நாகரிகம் கருதி அவ்வாறு மன்னர் கூறியிருக்கலாம் என்கிறார்.

சிம்மநந்தியார் ஒற்றனான திருநீலன், அரசவையில் நடந்தவை அனைத்தையும் கூறுகிறார். இப்போது புரிகிறதா! நான் கூறுவது உண்மையென குணசேனர் கூறுகிறார்.

இவர்கள் ஓர் அறைக்குச் சென்று மாதவன், தாட்டிகன் எனும் கங்குல இளவரசர்களை சந்தித்து உரையாடுகின்றனர். கொங்கு நாட்டின் மீது எங்கள் கவனம் அதிகம் உள்ளது அதனை ஆடுசி செய்ய வேண்டுமென்று தம் எண்ணத்தினை கூறுகின்றனர்.

எங்கள் சகோதரி சங்கமித்திரையை வைத்து கொங்கு நாட்டை அடைய திட்டமிட்டுள்ளதாகவும், அதற்கு தாங்கள் உதவி செய்தால், நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் சமண சமய நெறியை கொங்குநாட்டில் பரவ உங்களுக்கு உறுதுணையாக இருப்போம் என்று வாக்களிக்கின்றனர். மாதவன், தாடிகன் என்ற கங்ககுல இளவரசர்கள்.

**"இளவல் காள்! இனி எனக்கும் உமக்கும்**
**உளதோர் இலக்கே. ஒரு மூன்று திங்கள்**
**அடங்கி இருமின் அதற்குள் உங்கள்**
**உடன்பிறப்பைப் பெறத் திருவிக் கிரமன்**
**பேறு செய்தவனா? அன்றித் தனக்கே**
**ஊறு செய்தவனா? உண்மையைக் காணலாம்"**

என்று சிம்மநந்தியார், கங்க குல இளவரசர்களுக்கு உறுதுணையாக இருப்பதாகக் கூறுகின்றார்.

## மன்னரும் ஆதிரையும்:

நரசிம்ம பட்டர் நிறுவியுள்ள சங்கரர் ஆலத்திற்கு திருவிக்கிரம மன்னர் சென்று அவருடன் உரையாடுகிறார். சித்திமேழியாரும் உடன் இருக்கின்றார். மன்னர், நரசிம்மபட்டரிடம்

**"பிரானே! தங்கள் பெருவிளக் கங்களால்**
**அறாத ஐயங்கள் அற்றன.... சைவம்**
**அருவம் உருவம் அருவுரு வடிவென**
**இறைவனை இனிய இலிங்கமாய் வணங்கும்**
**பெருமை அறிந்து பேரின் புற்றேன்......**
**பற்றுக பற்றற்றான் பற்றினை என்னும்**
**முற்றிய தத்துவ முழுப்பொரு ளறிந்தேன்"**

என்று கூறுகின்றார். சித்திர சிற்ப வித்தக் கோவிலில் உள்ள கலைநயம் கண்டு வயக்கிறார் மன்னர். பின்னர், பேசியவாறு கருவறை அடையப் பூசை நிகழ்கின்ற வேளையில் ஆதிரையை பாடுமாறு நரசிம்மபட்டர் பணிக்க அவளும் பாடல் பாட ஆரம்பிக்கின்றாள்.

"ஆதி இறையவர் பாதிமதியணி

நாதர் அழகிய பரமேசா!

காதல் மலைமகள் ஓதுமலர் மொழி

வேதம் அதுவென அருளீசா!

மோதும் அவுணர்கள் தீது கருதிட

மீது கனல்பொழி பெருமானே!

ஏதும் உணர்விலி பேதை மனதினில்

போது மலரடி தருவாயே!"

என்று கண்களில் கண்ணீர் பெருக ஆதிரை பாடல் பாடுகிறாள். அந்த குரல் கேட்டு மன்னர் திரும்பி பார்க்க, ஆதிரையின் அழகிலும், குரலிலும் தன் மனதை பறிகொடுக்கிறார். பின்னர், இருவரின் காதல் உணர்வினால் உள்ளங்கள் தடுமாறுகின்றன, மனம் கரைகின்றன, நரசிம்மபட்டர் திருநீறு கொடுக்கவும் மன்னர் அதனை அணிகிறார்.

நரசிம்மபட்டர், திருவிக்கிரம மன்னரிடம் சித்திர மேழியாரின் திருமகள் ஆதிரை, "மெத்தக் கற்றவளாயினும் நிறைகுடம்!" என்று கூறுகின்றார். அதற்கு மன்னர், ஆதிரையைப் பார்த்து "நிறைகுடம் இன்னிசை நிகழ்த்துவதுண்டோ?" "வான்மழை தோற்கும் தேன்மழை"யென இனிமையாகப் பாடினாள் என்று கூற ஆதிரை நாணுகிறாள். அப்போது மன்னனின் மெய்க்காப்பாளன் குமரன் விரைவாக கோவில் வரவே, சித்திரமேழியார் அதனை மன்னருக்கு தெரிவித்ததும் மன்னர், குமரனிடம் அரண்மனையில் உடனே சந்திப்போம் என்று கூறிவிட்டு நரசிம்மபட்டரிடமும், கண்களால் ஆதிரையிடமிருந்து விடைபெற்று செல்கிறார் மன்னர்.

## மன்னன் அன்னையைக் காணச் செல்லுதல்:

விசயக் கந்தபுர அரண்மனையின் அரசருடன் குமரன் உரையாடுகிறான். சிம்மநந்தியார், கங்ககுல இளவரசர்களுடன் தீட்டியுள்ள திட்டத்தைப் பற்றி எடுத்துரைத்து இதனை தன் இரு விழிகளால் பார்த்தாக கூறவே, மன்னரும் பொன்னர் பேரனான குமரனே! உன் பேச்சில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது என்கிறார்.

"என்னைச் சைவம் ஈர்த்தது எனினும்

அன்னைச் சமணம் அழிவுறப் பொறேன்

என்னும் உண்மை எடுத்தியம் புதற்கு

நன்கு கனியும் நாள்பார்த் திருந்தேன்....."

என்று மன்னர் கூறுகிறார்.

மெய்க்காப்பாளன் குமரன் தன் மனத்தில் உள்ளதை உரைக்க மன்னரிடம் அனுமதி கேட்கவே, மன்னரும் அனுமதி கொடுத்தவுடன் குமரன்,

**"சமணப் பள்ளிகள் பலவும் இன்று**
**குமையும் அரசியல் கூடங்கள் ஆயின**
**தத்துவ விளக்கமும் தர்க்கமும் கணிதமும்**
**வித்தகமாக விளங்கிய இடங்களில்**
**சைவ எதிர்ப்பும் அரசியல் நெருப்பும்**
**கைகோர்த்துக் கொள்ள காண்கிறேன். இதனை**
**இரு கோணங்களில் எதிர்கொள்ளக் கருதலாம்**
**ஒருசார் நம்மின் உறவுகள் வலுப்படத்**
**திட்டம் தீட்டலாம்; தேயத்தை அழிக்க**
**வட்ட மிடுகின்ற கங்க வல்லூறைப்**
**புறப்படும் இடத்தே போய் நாம் அழிப்பதை**
**இரண்டாம் திட்டமாய் இணைத்துக் கொள்ளலாம்"**

என்று மன்னனிடம் கூறுகிறான்.

மக்களை அமைதிப்படுத்த முதலில் ஆவன முடிப்பதே சரி. ஆகவே, ஊர்த்தலைவர்களை ஒருங்கே திரட்டி சிற்றூர் ஒன்றில் ஓர் நாள் கூடுக. குமரா! படைத்தளபதியை காண வரும்படி உடனே கட்டளை உணர்த்து என்கிறார். திருவிக்கிரம மன்னரை, தன் அன்னை அழைத்ததாக காவலன் கூறவே மன்னர் அன்னையை காண செல்கிறார்.

## அன்னை மன்னரை மணம்முடிக்கச் சொல்லுதல்:

திருவிக்கரம மன்னனின் தாயார் பேரரசி அருகர்மணி, தன் மகனைப் பார்த்து அரசருக்கு வேலை மிகவும் அதிகமாகி விட்டதோ! பெற்ற அன்னையை காண நேரமே இல்லையோ? என்று கேட்கிறாள், "அரசியல் நேரத்தை ஆட்கொண்டாலும் ஒரு கணம் இதயம் உங்களை மறக்குமோ" என்று கூறி காலில் விழுந்து வணங்குகிறான். தங்கள் தந்தை பின்பற்றிய சமண சமயத்தையே நீ நாடு முழுவதும் பரப்ப வேண்டுமென அன்னை கூறவே, அது மக்களின் மனவிருப்பம் என்கிறார் மன்னர், பிறகு, சிம்ம நந்தியார் விருப்பப்படி கங்க குலத்துச் சங்கமித்திரையை உனக்கு மணம் முடிக்க ஆசைப்படுகிறேன் என்று

அன்னை கூறவே, மன்னரோ! என் மனதில் ஏற்கனவே சித்திரமேழியார் மகள் ஆதிரை உள்ளாள். அவளையே மணப்பேன் என்றதும் அன்னை கோபம் கொள்கிறாள்.

சங்கமித்திரையை மணக்க மறுத்தால் நொடியில் பகைத்தீ மூளவும் கூடும் என்று அன்னை கூறுகிறாள். மன்னர் மீண்டும் மறுக்கிறார். "வற்றாத கண்ணீர் பெருகிடப் பிள்ளையே விதியாக நின்றால் இருவேறு பக்கம் இனி நீஒம் நானும்" என்று அன்னை தன் மகன் மீது கோபம் கொண்டு செல்கிறாள்.

மன்னருக்கு எதிராக சிம்மநந்தியார் சதித்திட்டம் தீட்ட ஆலோசனை கூட்டம் நிகழ்த்துகிறார். இதற்கு, தமிழ்நாட்டில் உள்ள சமணத்துறவிகள் பலரையும் ஒருங்கே வரவழைத்து தன் திட்டத்தை எடுத்துரைத்து அவர்களையும் தனக்கு ஒத்துழைத்து சமணசமயம் இந்த மாநிலம் முழுவதும் நெடுநாள் வாழ வேண்டும் என்று கூற அனைவரும் சம்மதம் தெரிவிக்கின்றனர்.

சமணசமயம் பாதகர்களால் வெட்டுண்டு கீழே விழும் முன்னரே மதுரை வென்ற திருவிக்கிரம மன்னரை வீழ்த்த வேண்டும். அதற்கு அலைகடலென பொங்கும் இளைஞரை போருக்கு அனுப்ப வேண்டும். தங்களின் படைகளை கொடுத்து சமண நெறி தழைக்க உதவி செய்யுங்கள் என்றதும், அனைவரும் உதவி செய்வதாக வாக்களித்தனர்.

### மன்னர் ஆதிரையைக் காணுதல்:

ஆதிரை தன் பிறந்தநாளை தோழிகளுடன் ஆடிப்பாடி கொண்டாடும் வேளையில் ..... சாலையில் வரிசையாக குதிரைகள் பறக்கிறது. கடைசியாக சென்ற மன்னரின் குதிரை ஆதிரையைக் கண்டதும் சட்டென்று நின்று மெல்ல நகர்கிறது. இருவரும் ஒருவரையொருவர் கண்டு மகிழ்கின்றனர். உடனே மன்னர் குதிரையில் பறந்து விடுகிறார். தோழிகள் ஆதிரையை கேலி செய்கின்றனர். ஏதோ! படையெடுப்பு அனைவரும் விரைந்து இல்லத்திற்கு வாருங்கள் என்று பணிப்பெண் பொன்னாள் வீட்டிற்கு அழைத்து சென்று விடுகிறார்.

தலைக்காட்டின் அருகில் உள்ள காட்டில் நிகழ்ந்த போரில் ஒரு சொட்டு ரத்தம் கூட வாளில் உராய்ந்திடாமல் திருவீக்கிரம மன்னரின் மெய்க்காப்பாளன் குமரனின் பலத்த உதவியால் மன்னருக்கு பெரும் வெற்றி கிட்டடியது. போர் நடைபெற்ற இடத்திலிருந்து கங்க குல இளவரசர்கள் மாதவன், தாடிகன் என்ற இருவரும் தப்பித்து ஓடிவிட்டனர். அவர்கள் சகோதரி சங்கமித்திரையும் எங்கோ மறைவாய் மறைந்துவிட்டாள் என்றும் வீரர்கள் கூறினர்.

தலைக்காட்டுப் போரில் வெற்றி பெற்று திரும்பும் வழியில் சித்திரமேழியார் கருவூரிலளித்த கண்பறித்திடுமோர் வரவேற்பு விழா ஒன்றில் வைத்து தங்கள் மகள்

ஆதிரையை எனக்கு மணமுடித்துத் தாருங்கள் என்று முறைப்படி பெண் கேட்டார் மன்னர். மன்னரின் திருமண நாளில் மக்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு விருந்துண்டு மணவிழாவை கண்களிக்கின்றனர். திருமணம் முடிந்து மன்னரும், ஆதிரையும் பரிசுகள் பெற்ற பின்னர் நரசிம்மபட்டர் ஆசி பெறுவதற்கு செல்கின்றனர்.

பேரூர் சமணத் திருமடத்தில் சிம்மநந்தியார், கங்க சகோதரர்கள் மாதவன், தாடிகன் மற்றும் குணசேனர், திருநீலன் ஆகியோருடன் புதுத்திட்டம் தீட்ட கூட்டம் கூடுகின்றனர். சிம்மநந்தியாரிடம், மாதவன் கருங்கல் தூண்மேல் வாளை வீசி இரண்டு துண்டாக விழச்செய்து தன் வீரத்தைக் காண்பிக்கிறான். மாதவனின் பெயரை ‘கொங்கனி வர்மன்’ என்று சிம்மநந்தியார் பெயர் மாற்றம் செய்து வைக்கிறார், சிம்மநந்தியார். நம் ஒப்பந்தப்படி, உனக்கு அரசுரிமை கிடைத்ததும், அரசின் சமயமாக சமணசமயத்தை அறிவிக்க வேண்டும். நாளையே நாட்டை வளைக்க அனைவரும் தயாராக இருங்கள் என்றார்.

## மன்னர், ஆதிரை உயிர் நீங்குதல்:

பல்வேறு சிவாலயங்களுக்கு சென்று வழிபாடு செய்து மன்னரும், ஆதிரையும் திரும்பி வரும் வழியில் தன் மனதில் ஏதோ உணர்வு எழ, பேரூருக்கு பல்லக்கில் ஆதிரையை அனுப்பிவிட்டு அங்கு எனக்காக காத்திரு விரைந்து வருவேன் என்று மன்னர் கூறினார். ஆண்பொருநை ஆற்றின் கரையோரம் குமரன் குரல் கேட்டு (குமரன் வரவேண்டாம் என்று கூறியும்) மன்னர் விரைகிறார். பின்பு, மரக்கிளையில் பதுங்கியிருந்த வீரர்கள் பலர் சட்டென்று வேல், வாள் வீசி மன்னர் வாள் வீச முற்படும் முன்னரே அவரை மண்ணில் சாய்த்துவிட்டனர். மன்னர் தன் அன்னையும் தன்னை கொல்ல உடந்தையாக இருந்ததை அறிகிறார். பிறகு அவர், "என்தாய் மண்ணில் என்னை எதிரியுடன் சேர்ந்து என்னை கொல்லும் கொடுமை நிகழ்ந்தது." எதிர்காலத்தில் இந்த நாட்டில் சமயங்கள் ஒழிந்து பகைமை நீங்க வேண்டும் என்று கூறிய மன்னர், ஆதிரையை எண்ணியபடி தன் உயிரை விடுகின்றாள்.

மன்னருக்காக பேரூர் நொய்யலாற்றங்கரையில் காத்திருந்த ஆதிரையை, கங்ககுல இளவரசி ஒரு குறுவாளால் நெஞ்சில் பாய்ச்சி கொலை செய்கிறாள். இதனை அறிந்த சிம்மநந்தியார் விரைந்து அங்கு வரவே, உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் ஆதிரை "ஒரு பெண்ணால் நான் இந்த நிலைமைக்கு ஆளானேன். வாழ்க சமயங்கள்" என்று கூறியபடியே உயிர்விட்டதை கண்ட, சிம்மநந்தியார் "நான் தோற்றேன்..... தோற்றேன்...... என் தவறை உணர்ந்தேன்" என்று கூறி வடக்கிருந்து உயிர்விட துணிகிறார். அப்போது அவரை காண வந்த கொங்கணிவர்மனிடம், திருநீலன் மூலமாக அரசர் பொறுப்பு கொடுக்கப்பட்டு "மதத்தை விட மனிதம் தான் பெரியது" என்று கூறி அவர் வடக்கிருந்து உயிர் விடத்

துணிந்ததும், அவருடன் திருநீலனும் உடன் உள்ள அனைவரும் வடக்கிருந்தனர். ஒற்றை மனிதனாய் கொங்கணிவர்மன் மெல்ல நடந்து செல்கிறான்.

# ஒத்திகை

## அ.ராமசாமி

"ஒத்திகை" என்ற நாடகத்தின் ஆசிரியர் அ.ராமசாமி ஆவார்.

### ஒத்திகை நாடகத்தில் இடம் பெறும் கதாபாத்திரங்கள்:

- இயக்குநர் - நாடகத்தை இயக்கும் இயக்குநர்
- ரவி - நாடகத்தின் உதவி இயக்குநர்
- லதா - வெங்கடேஷ் - பால சரஸ்வதி என்ற தம்பதியினரின் மகள் (வயது 24)
- வெங்கடேஷ் - லதாவின் அப்பா (வயது - 56)
- பால சரஸ்வதி - லதாவின் அம்மா (வயது - 50)
- சுப்பையா - லதாவின் கணவர் (வயது - 27)
- ரவிச்சந்தர் - லதாவின் இளைய சகோதரன் (வயது - 30) அப்பாவிடம் கோபம் கொண்டு வீட்டைவிட்டுப் போனவன். கலப்புத் திருமணம் புரிந்தவன்.
- வேலாயுதம் - லதாவின் மூத்த சகோதரன் (வயது - 33) பெற்றோர் சொல் தட்டாத பிள்ளை
- அமுதா - லதாவின் டம்மி அம்மாவாக வருபவர்.

### கதைச் சுருக்கம்:

ஒரு நாடக ஒத்திகைக் கூடத்தில் "ஒத்திசை" என்ற நாடகத்தின் கதை தொடங்குகிறது. அந்த நாடக ஒத்திகைக் கூடத்தின் சுவர்களில் நடன முத்திரை கொண்ட அதை உருவங்கள், புகைப்படங்கள் உள்ளன. நாட்டுப்புறக்கலைகளின் பாணியும் கூட சிற்பங்களாகவும், திரைச்சீலைகளாகவும் சுவர்களை ஒட்டி இருக்கின்றன. மையத்தில் சிறியதும், பெரியதுமான சதுர, செவ்வக மேடைகள் கிடக்கின்றன. அவற்றில் இருவர் மூவராக அமர்ந்துள்ளனர். அவாக்ளின் உடைகளில் விசேஷமாக குறிப்பிட எதுவும் இல்லை. மொத்தம் 10 பேர் அங்குள்ளனர்.

ஓரத்திலிருக்கும் ஸ்டீரியோ பெட்டியிலிருந்து இசையின் ஒலி மெல்லியதாக கேட்கிறது. உள்ளே நுழைந்த உதவி இயக்குநர் ரவி, இசை எழுப்பும் சாவியை நிறுத்திவிட்டு கையில் கொண்டுவந்த நாடகத்தின் பிரதிகளைப் பெயர்சொல்லிக் கொடுக்கிறார்.

கொடுத்து முடிக்கும் முன் இயக்குநர் அங்கு வந்துவிடுகிறார். "ரவி ஸ்கிரிப்ட் கொடுத்து முடித்துவிட்டு நீங்களோ, பிராக்கெட்ஸ் படிங்க, யாருக்கு என்ன கேரக்டர்ஸ்ன்னு ஒரு தடைவ சொல்லிடுங்க" என்று உதவி இயக்குநரை பார்த்து இயக்குநர் கூறுகிறார். உதவி இயக்குநர் ரவியும் அனைவரின் கேரக்டர்ஸை ஒரு முறை படிக்கிறார்.

லதா, வெங்கடேஷ் இருவரையும் மேலே போகச் சொல்லிவிட்டு, லதாவிடம், "உங்கம்மா எங்கம்மா" என்று இயக்குநர் கேட்கிறார். அதற்கு லதா, "அம்மா ஆபீஸ் போயிருக்காங்க சார்" என்று கூற அனைவரும் சிரிக்கின்றனர். இயக்குநர் தன் தலையில் அடித்துக்கொண்டு "உண்மையான அம்மாவே நான் கேட்கலே நாடக அம்மா...... பாலா -- பாலசரஸ்வதி எங்கேன்னு கேட்டேன்" என்று கூறுகிறார். அவங்க...... இதுவரைக்கும் வரலீங்க சார். ஒரு வேளை பஸ்ஸ மிஸ் பண்ணியிருப்பாங்கன்னு நெனக்கிறேன் சார் என்று லதா கூறுகிறார். உடனே, இயக்குநர் "சரி அமுதா..... அம்மாவா டம்மி பண்ணுங்க ...." என்று கூறுகிறார். அந்த மூவரும் உயரமான தளம் ஒன்றில் நினற்படி வாசிக்கின்றனர்.

திரும்ப திரும்ப இதையே சொல்லிக்கிட்டு இருந்தா எப்படி? நடந்தது என்னன்னு புரியும்படியா சொன்னால்தானே.... சரி. என்னிடம் சொல்ல முடியாத விஷயமாக இருந்தால் உங்க அம்மாகிட்டே சொல்லு லதா என்று வெங்கடேஷ் கூறுகிறார். "முடிவு எடுக்கிற அதிகாரம் உங்ககிட்டத்தானே இருக்கு? அம்மா எதுக்குமே பார்வையாளர் மட்டும் தான்." என்கிறாள் லதா. எங்கள் உறவைக் குறித்து உனது விமர்சனம் சரியாக இருக்கலாம். ஆனால் ரசிக்கும்படியாக இல்லை என்கிறார் வெங்கடேஷ். விமர்சனங்கள் ரசிக்கும்படியாக இருக்க வேண்டிய கட்டாயம் இல்லையே என வெங்கடேஷ் கூறுகிறார்.

"அப்பா, என் விஷயத்தில் சரியான முடிவை நீங்கள் எடுக்க வேண்டும் என்பது தான் நான் கேட்டது" என லதா கூற, "எனக்குச் சரியின்னு தோணுகிற முடிவைச் சொல்றதுக்கோ... செயல்படுத்துறதுக்கோ எனக்கு எந்தத் தயக்கமும் கிடையாது" என்கிறார் வெங்கடேஷ். இது தான் என்னோட அடிப்படைப் பிரச்சனை என்கிறாள் லதா எது? விஷயம் என்னன்னு சொல்லாமலேயே என்னுடைய முடிவைத் தெரிஞ்சுக்கணும்னு எதிர்பார்க்கிறதா? என்று லதாவின் அப்பா கூறுகிறார். அப்பா விளையாட்டுக்கும் வேடிக்கைக்கும் இது நேரமில்லை. என்னுடைய வாழ்க்கையின் எதிர்காலமும் சுய கௌரவமும் வேடிக்கையாகப் பேசிச் சிரிக்கக்கூடிய செய்திகள் அல்ல என்று லதா கூறவும், பேசிச் சிரிக்கக்கூடிய செய்திகள் அல்ல என்று லதா கூறவும் "அம்மா .... என்னம்மா சொல்றே .... ஏந்தலையில் நெருப்பள்ளிக் கொட்டுற மாதிரி ...." என்று லதாவின் அம்மா கூறுகிறாள்.

"நான் அவரோ சண்டை போட்டு வீட்டை விட்டுவிட்டு வந்துட்டேன்" என்று லதா கூற, "நீ சொல்றது நிஜமத்தானா லதா? உன் புருஷன் உன்னே வீட்டைவிட்டு

அனுப்பிட்டாரா? என்று அப்பா கேட்க, "அவர் என்ன என்னை அனுப்புறது? நானே வந்துட்டேன். எல்லா ஆண்களும் ஒன்றுபோலத்தான் இருக்காங்க. பெரிசா வித்தியாசங்கள் இல்மல" என்று லதா கூறுகிறாள்.

பின்னர், லதாவின் அம்மா, அப்பா, இருவருமே மாப்பிள்ளையோட எதிர்பார்ப்பு என்னன்னு தெரிந்தால் நாங்க செய்ய வேண்டிய நகைநட்டு ரொக்கம் தட்டுமுட்டுச் சாமான்கள், இப்படி ஏதாவது லிஸ்ட் இருக்கிறதா? என்று கேட்கின்றனர். "என் கணவரைப் பத்தி இவ்வளவு கொச்சையாகப் பேசுறது சரியில்ல. அம்மா ... திரும்பவும் சொல்றேன். அவர் அனுப்பல நானே வந்துட்டேன்" என்கிறார் லதா. "அது தான் ஏன்? உங்களுக்குள்ளே என்ன பிரச்சினை?" என்று லதாவின் அப்பா வெங்கடேஷ் மீண்டும் கேட்கிறார்.

"ஒவ்வொரு ஆணுக்குள்ளேயும்தான் ஒரு ஆண் என்கிற சுயமோகம் நிலையில்லாம அலைஞ்சுக்கிட்டே இருக்கு" என்று லதா கூறுகிறாள். "அலைதலின் வெளிப்பாடு ஒவ்வொருத்தருக்கும் வித்தியாசம் இருக்கே. இப்போ என்னையே எடுத்துக்கோ, நான் ஒரு ஆண் என்பதை எல்லா நேரமும் உணர்த்திக்கிட்டே இரக்கிறவன். ஆனால், மாப்பிள்ளை அப்படி வெளிப்படுத்துகிறவர் இல்லையே. "பெண் மதிக்கப்பட வேண்டியவள். ஆண்கள் விட்டுத்தர வேண்டியவர்கள் என்கிற நம்பிக்கைகளை வெளிப்படுத்துகிறவர் ஆயிற்றே. வரதட்சணை எதிர்ப்பு என்று பேசுவது மட்டுமல்லாமல் செயலில் காட்டியவரும் ஆயிற்றே" என்று லதாவின் அப்பா தன் மாப்பிள்ளை பற்றி கூறுகிறார்.

"இதைத்தான் என்னாலே ஒத்துக்கொள்ள முடியல. நான் மதிக்கப்படவேண்டியவள் என்கிற அவரின் நினைப்பிலேயே, தான் ஒரு ஆண், பெண்ணைவிட உயர்ந்தவள் என்கிற அகம்பாவம் வெளிப்படுது. என்னோட உரிமைகள் என்னன்னு எனக்குத் தெரியாதா?" என்று லதா கூறுகிறாள். மாப்பிள்ளைக்கும் உனக்கும் என்ன பிரச்சினை என்பதை சற்று தெளிவாக சொல்லும்மா... என்று பெற்றோர்கள் கேட்கின்றனர். லதா தனக்கும் தன் கணவனுக்கும் நடந்த அந்த உரையாடலைத் திரும்பவும் நினைத்துக் கொள்கிறாள். அவை காட்சியாக மாறுகிறது?

"உன்னோட வாதங்கள் நியாயமற்றவையின்னு சொல் வரல. நம்முடைய தேவைகளுக்குப் போதுமான பணத்தை என்னால் சம்பாதிக்க முடிகிறது. உ னக்கு விருப்பம்னா நீயும் வேலைக்குப் போறதில் எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்ல. இப்படி யோசிக்கிறதே விட்டுவிடு, பல பெண்களுக்கு நிம்மதியும் வாழக்கையும் தொலைந்து போனதற்கு வரதட்சணை ஒரு முக்கிய காரணமாக இருக்கிது." என்று லதாவின் கணவர் சுப்பையா லதாவிடம் கூறுகிறார். "நான் கேட்கப்பபோவது வரதட்சணை அல்ல. என்னுடைய பாகம். அப்பாவின் சம்பாத்தியத்தில் என் சகோதரர்களுக்கு இருப்பதுபோல எனக்கும் ஒரு பங்கு உண்டு. அது எனக்கு வேண்டும்" என்கிறாள் லதா.

"நீ கேட்கப்போவது உன்னோட பாகமாக இருக்கலாம் ஆனா நான் வரதட்சணை கேட்டு உன்னத் துரத்திட்டதாதன் அது உணரப்படும். பொருள் - பணம் என்கிற ரீதியில் ஏன் நாம் விஷயங்களை அணுகணும். அன்பு, பாசம், விட்டுக்கொடுத்தல் என்கிற ரீதியில் பிரச்சினைகளை ஏன் அணுகக்கூடாது என்கிறார் சுப்பையா. இது எல்லாமே பிரமைதான். எல்லாத்துக்கும் எல்லாரும் ஒத்துக்கொள்ளக்கூடிய வரையறைகள் இருக்க முடியாதுதான் என்கிறார் சுப்பையா. வரையறைகளை அவங்க அவங்க கோணத்தில் இருந்து "சரியா"ன்னு பார்க்கிறதுக்கான உரிமைகள் ஒவ்வொருத்தருக்கும் உண்டுதானே. இந்த உரிமையைக்கூட நீங்கதான் தரணுமோ என்கிறாள் லதா.

"நீ எல்லாவற்றையும் உன்னோட கோணத்திலிருந்துதான் பார்க்கிற. உனக்குப் புரிய வைக்கிறது அவ்வளவு சுலபமில்லை" என்கிறார் சுப்பையா. "எல்லா ஆண்களும் எல்லாப் பிரச்சினைகளையும் அவங்க கோணத்திலிருந்துதான் பார்த்திருக்காங்க" என்கிறாள் லதா. "இதை ஏன் ஆண் - பெண் பிரச்சினையா பார்க்கணும். ஒரு குடும்பத்தின் பொதுப்பிரச்சினையா ஏன் பார்க்கக்கூடாது?" என்கிறார் சுப்பையா. "குடும்பம்கிறதே பெரும்பாலும் ஆண்களின் கோணத்திலிருந்து உருவாக்கப்பட்டது தான்னு நீங்களே எனக்கு சொல்லியிருக்கீங்க" என்று லதா கூற, "உண்மைதான். ஆனால் விதிவிலக்குகளா காட்டிக்கிறவங்களும் புதிய விதிகளை உருவாக்குகிறவர்களாக மாறத்தான் முயற்சி செய்றாங்க. விதிகளின் தன்மைகளில்தான் வித்தியாசம் இருக்குமேயொழிய விதிகள் இல்லாமல் போகிறதில்லை" என்று லதா கூறுகிறாள். "இனியும் உன்னைத் தடுத்தால் நானோரு ஆணாதிக்க வெறியனுன்னு பட்டத்தைச் சுமக்க வேண்டியதிருக்கும். ஒரேயொரு விஷயத்தை மட்டும் யோசிச்சுப்பாரு. உங்க வீட்டில் உண்டாகப் போற புயல். உங்க அப்பா எதிர்கொள்ள வேண்டிய மனோ தைரியம். அவருக்கு நீ தரப் போற வலியோட அளவு. அதைத்தான் நீ யோசிச்சுப் பார்க்கணும். சொல்ல விரும்பியதை சொல்லிட்டேன். முடிவு பண்ண வேண்டியதும், செயல்பட வேண்டியதும் நீதான்" என்று கூறிவிட்டு லதாவின் கணவர் சுப்பையா காட்சியை விட்டு விலகு சென்றுவிடுகிறார். லதாவின் அம்மா, அப்பா இருவருக்கும் லதாவின் பிரச்சினை என்ன? என்பது இப்போது தான் புரிகிறது.

"பலருடைய உரிமைகளை மறுக்கிறதிலதான் ஒருவருடைய கௌரவம் அடங்கியிருக்குன்னா அந்த ஒருத்திக்காக வருத்தப்படுறதுல அர்த்தமில்ல" என்று லதா கூறுகிறாபள். ஒருவர் - பலர் என்கிற எண்ணிக்கை அடிப்படையில் எல்லாவற்றையும் முடிவு செஞ்சிட முடியாது. "அந்த ஒருவர் உன்னோட மூலம் .... உன் அப்பா - அவர்தான் உன் உடம்பின் ஆதாரம். இயக்கத்தின் சக்தி" என்கிறாள் லதாவின் அம்மா. இனி, அவளிடம் பேசுவதில் பிரயோசனம் இல்லை. அவளுடைய தேவை என்னான்னு கேளு. நகை, ரொக்கம், சாமான்களை வரதட்சணையா வாங்கிட்டுப் போகச் சொல்" என்கிறார் வெங்கடேஷ்.

“வரதட்சணையாகத் தர்றதா இருந்தா எதுவுமே வேணாம். எனக்குத் தேவை உங்களோட சொத்தில் பங்கு. என் சகோதரர்களுக்கு என்ன கிடைக்குமோ அதே அளவு எனக்கும் வேண்டும். பாகப்பிரிவினை செய்தாகணும்னு நான் சொல்றதில் என்னோட சுயநலம் மட்டுமில்ல என்னோட சகோதரர்களின் நலனும் இருக்கு” என்று கூறிய லதா, “ஒங்ககிட்டே கோவிச்சுக்கிட்டுப்போன என்னோட அண்ணனுக்குச் சேர வேண்டிய சொத்தை அன்னைக்கே கொடுத்திருந்தா இவ்வளவு கஷ்டப்பட்டிருக்கமாட்டான் அவன். இப்போ சம்பாதிச்சதைவிட இன்னும் கூடுதலா சம்பாதிச்சிருப்பான். பெரியண்ணனுக்கும் சுயமாத் தொழல் செய்றது எப்படின்னு புரிஞ்சிருக்கும். அவரை உலகமே தெரியாத அப்பாவியாகத்தான் வளர்த்திருக்கீங்க. உங்க பிள்ளையும் நீங்க செய்த தொழிலையே செய்யணும்னு நினைக்கிறதிலே உங்களோட அதிகாம் தங்கியிருக்கு” என்றும் கூறுகிறாள்.

இதை கேட்ட லதாவின் அப்பா “இப்படியெல்லாம் பேசக் கத்துக் கொடுத்தது யாரு? உன்னோட புருஷன்தானே” என்று கூற, அதற்கு லதா, “புத்திசாலித்தனமா நம்ம பொண்ணு பேசுறாளேன்னு சந்தோஷப்படக்கூட நீங்க தயாராயில்ல. அதையும் ஒரு ஆண்தான் கற்றுத் தந்திருப்பான்னு நினைக்கிறதே முதல்ல விடுங்க” என்கிறாள்.

மறுநாள் அதே ஒத்திகைக்களம் நடிகர்கள் தனித்தனியாகவும், குழுவாகவும் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். பால சரஸ்வதி, அமுதா, வெங்கடேஷ், ரவிச்சந்தர், சுப்பையா, வேலாயுதம் ஆகியோரும் பயற்சி செய்கின்றனர். உதவி இயக்குநர் ரவி தனியாக யோகாசனப் பயிற்சி ஒன்றில் லயித்துள்ளார். மேற்கத்திய இசை சப்தமாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. இயக்குநர் உள்ளே வர, பயிற்சிகள் நிறுத்தப்பட்டு அங்கிருந்தவர்கள் பல்வேறு இடங்கிளல் அமர்கின்றனர். உதவி இயக்குநர் ரவி, அடுக்கப்பட்டிருந்த பிரதிகளை அவர்களிடமே விநியோக்கிறார். “இன்னைக்கு ஒன்னும் பிரச்சனை இல்லையே எல்லோரும் வந்தாச்சுதானே” என்று இயக்குநர் கேட்க, “லதா மட்டும் வரலீங்க சார்” என்று உதவி இயக்குநர் பதிலளிக்கிறார். நேற்றைக்கு அம்மாவுக்கு டம்மி. இன்றைக்கு மகளுக்கு டம்மியா?” என்று கூறிய இயக்குநர் முந்தைய நாள் ஒத்திகைக்கு வருகை தராத பாலசரஸ்வதி மற்றும் ரவிச்சந்தரிடம் அதற்கான காரணம் என்னவென்றும் விசாரிக்கிறார்.

“சரி அமுதா இன்னைக்கு மகளா டம்மி பண்ணுங்க” என்று இயக்குநர் கூற, “சார் வந்து ஒரு யோசனை” என்று சற்று தயக்கத்துடன் உதவி இயக்குநர் ரவி, “அமுதா அம்மாவாகவே நடிக்கட்டும் சார். பாலசரஸ்வதி “மகள்” கேரக்டர் செய்யலாம் சார்” என்று கூறுகிறார். “எப்போ நாடகத்தோட இயக்குநரா மாறினீங்க ரவி” என்று இயக்குநர் கேட்க, அதற்க உதவி இயக்குநர் ரவி, “அப்படிச் சொன்னது அதிகப் பிரசங்கித்தனம்னு தெரியும் சார். லதா இந்த நாடகத்தில் நடிக்க வரமாட்டாங்களாம் சார். ஒரு லெட்டர் கொடுத்து அனுப்பியிருக்காங்க” என்று பதிலளித்துவிட்டு கடிதத்தைக் கொடுக்க எழுந்திருக்கிறார். பாலசரஸ்வதி அவரிடமிருந்து வாங்கி இயக்குநரிடம் தருவதற்காக முன்னேறுகிறார்.

ஆனால் இயக்குநர், "பாலா, நீங்களே சத்தமாக படிங்கம்மா. எல்லாரும் கவனிங்க" என்று கூற கடிதத்தை எடுத்து வாசித்து சத்தமாகப் படிக்கிறார் பாலசரஸ்வதி.

மதிப்பிற்குரிய இயக்குநர் அவர்களுக்கு .... நேரில் வந்து எனது இயலாமையைத் தெரிவித்திருக்க வேண்டும். என்னை நீங்கள் மன்னிக்க வேண்டும் (இங்கிருந்து லதாவாக மாறி) நேரில் வருவதில் எனக்குத் தயக்கம் கிடையாது. நேரில் வந்தால் இதை உங்களிடம் சொல்ல முடியுமா என்று தெரியவில்லை. இந்த நாடகத்தில் "மகளாக" என்னால் நடிக்க இயலாது. ஆயிரம் ஒத்திகைள் நடத்தினாலும் அது சாத்தியமில்லை. (கண்களில் நீர் நிரம்பி நிற்கிறது).

எது பொய்? எது உண்மை? அன்றாட வாழ்க்கையில் எனது இயக்கங்கள் உண்மை என்று நம்பிக்கொண்டிருக்கிறேன். மேடையில் நான் ஏற்ற பாத்திரங்களைப் பொய்யென்று உணர்ந்திருந்தேன். இந்தப் பெண் எனது நம்பிக்கைகளைத் தலைகீழாகக் கவிழ்த்துப் போடப் பார்க்கிறாள். நடிப்பதற்குத்தான் ஒத்திகைகள் தேவை. வாழ்வதற்கு அல்ல. உண்மையில் அந்தப் பெண்ணாகவே வாழவே நான் விரும்புகிறேன். நடிப்பதற்கு அல்ல. (பாத்திரத்திலிருந்து விடுபட்டவளாய்) வெற்றிகரமாக நாடகம் மேடையேறும் பொழுது நான் வருகிறேன். பார்வையாளர்களில் ஒருத்தியாக...... திரும்பவும் மன்னிப்புக் கோருகிறேன். உங்கள் உண்மையுள்ள லதா.

-என்று கடிதத்தை பாலா வாசித்து முடித்ததும், "ஆக, லதாவைப் பொறுத்தவரையில் நாடகம் முடிந்துவிட்டது" என்று இயக்குநர் கூற, "லதாவுக்குப் பதிலாக, பாலசரஸ்வதி நடிக்கத் தயாரா இருக்காங்க சார்" என்று உதவி இயக்குநர் ரவி கூறுகிறார். "பாலா நடிக்கிறாங்களா? அமுதா செய்றாங்களாங்கிறது இருக்கட்டும். லதாவோட முடிவைப்பத்தி நாம் கொஞ்சம் பேசலாமே. அவரோட கடிதத்தை எல்லோரும் கேட்டிருக்கீங்க. எல்லாரும் அவங்க அவங்க கருத்துகளைச்சொல்லலாம்" என்று இயக்குநர் கூறுகிறார்.

"லதாவோட கடிதம் அடிப்படையான ஒரு பிரச்சினையை எழுப்புறதாத் தோணுது. நாடகம், வாழக்கை.... இரண்டையும் பிரிக்கிற எல்லைக்கோடு எங்கே இருக்கிறது. லதாவைப் பொறுத்தவரையிலும் அப்படியொரு கோடு இல்லை. ஆனால என்னைப் பொறுத்தவரைக்கும் நிச்சயமா ஒரு கோடு இருக்கிறதா நம்பறேன். நான் ஒரு கலைஞன். என் மூலம் வெளிப்படும் செய்திகள் இந்தச் சமூகத்திற்குப் பயன்படும். பயன்பட வேண்டும். அவை எனக்கும் போதிக்கின்றன என்பது இரண்டாம்பட்சம்தான் நான் நடிகனாக - ஒரு கலைஞனாக இருப்பதே இப்படி என்னை உணர்ந்ததினால்தான்" என்று வேலாயுதம் தன்னுடைய கருத்தை பதிவு செய்கிறார்.

"வேலாயுதம் அவரை உணர்ந்து கொண்டதால் கலைஞனாக இருக்கிறேன் என்கிறார். லதா தன்னை உணர்ந்து கொண்டதால் கலைஞனாக இருக்க முடியாது

என்கிறார். இது எனக்கு முரண்பாடா தோணல. விநோதமான விளையாட்டா தோணுது" என்று தன்னுடைய கருத்தை வெங்கடேஷ் பதிவு செய்கிறார். "உண்மை - பொய் என்ற வார்த்தைகளின் மேல் கட்டப்பட்ட அபிப்பிராயங்கள்தான் லதாவை குழப்பத்திற்கு இட்டுச் சென்றுள்ளான். எல்லா வார்த்தைகளுக்குமத் எல்லா நேரஙகளிலும் ஒரேவிதமான அர்த்தங்கள் தானா இருக்கின்றன?" என்று தன் கருத்தை பதிவு செய்கிறார் சுப்பையா.

"நிச்சயமா அர்த்தங்கள் மாறிக்கொண்டிருக்கின்றன. வார்த்தைகள் உச்சரிக்கப்படும் சூழ்நிலைதான் அர்த்தங்களை உருவாக்கின்றன. இதுரு நடிகர்களாகிய நாம் அறிந்திருக்கின்ற பாலபாடம்தானே" என்று ரவிச்சந்தர் தன்னுடைய கருத்தை வெளிப்படுத்துகிறார். "வார்த்தைகளின் அர்த்தங்கள் தானாக மாறுவது மட்டுமல்ல. அதிகாரத்தின் துணையோடு மாற்றவும்படுகின்றன. "அவள் நிர்வாணமாக்கப்பட்டவள்; மானபங்கப்படுத்தப்பட்டவள் ; ஆனால் கற்பழிக்கப்படவில்லை" என்று அதிகாரம் தனது தீர்ப்பை வழங்குவதன் மூலம் "கற்பழிப்பு" என்பதற்கான அகராதி அர்த்தமும், நடைமுறை அர்த்தமும் துடைத்தெறியப்படுகின்றன. எல்லா நேரங்களிலும் அதிகாரம் வன்மையானதாகச் செயல்படுகிறது" என்று அமுதா தன் கருத்தை தெளிவுபடக் கூறுகிறார்.

உதவி இயக்குநர் ரவி, "நாம் நம் நாடகத்தின் ஒத்திகையைத் தொடருவதே சரியெனப்படுகிறது" என்கிறார். "எனக்கு இன்னொரு கேள்வி லதாவோட முடிவுக்கும் இந்தக் கேள்விக்கும் நேரடியான தொடர்பு இக்கிறதா? இல்லையா? என்பது கூட எனக்குத் தெரியவில்லை. ஆனால் கேட்கத் தோன்றுகிறது. "நிகழ்வுங்கிறது - அதாவது பெர்பார்மன்ஸ் மேடையில்தான் நடக்கணுமா? கற்பிதமான இடங்கள்தான். மேடைத்தளங்களா?" என்று கேள்வி எழுப்புகிறார்.

"ஒத்திகையைத் தொடரப்போறமா... இல்லையா... அதை முதல்ல முடிவு பண்ணுங்க..." என்று இதற்கிடையே கேட்கிறார் பாலசரஸ்வதி. "சுப்பையாவோட கேள்வியில் அர்தமிருக்கிறதா தோணுது. அர்த்தமில்லாததக்கூட அர்தப்படுத்திற நாமெ... நம்மளோட நம்பிக்கைகள் கேள்விக்குள்ளாக்கப்படும் போது, அதை எதிர்கொள்ளப் பயப்படுற மாதிரி தெரியுது" என்று மீண்டும் கூறுகிறார். வெங்கடேஷ். "இயக்குநரின் யோசனைகள் என்னுடைய ஆளுமையை சிதைப்பதாக நினைப்பதில்லை" என்று கூறுகிறார் பாலசரஸ்வதி.

"இயக்குநர் சொன்னதை மாற்றிச் செய்வதில் நடிகரின் தனித்தன்மை வெளிப்பட வாய்ப்புள்ளது. தேடுதலற்ற நபர்களே நகல்களை உற்பத்தி செய்வார்கள். இந்தக் கணத்திற்கும் அடுத்த கணத்திற்கும் வித்தியாசங்கள் உண்டு என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு" என்று வெங்கடேஷ் மீண்டும் தன்னுடைய கருத்தை பதிவு செய்கிறார். புதிய புதி பதில்களும் நாடகக் கலையின் சாராம்சமான தர்க்கங்களை உலுக்கிப் பார்ப்பவையாக ஆகிவிட வாய்ப்புகள் உண்டு. யோசித்துப் பார்த்தால், நான் எல்லா நேரமும் எதையாவது

நிகழ்த்திக் கொண்டேதான் இருக்கிறேன்” என்று ரவிச்சந்தர் தன்னுடைய கருத்தை மீண்டும் பதிவு செய்கிறார்.

“ரதங்களின் ஊர்வலங்களும், கார்களின் பவனிகளும் தேர்த்திருவிழாக்களை இடம் பெயர்த்துக் கொண்டிருக்கின்றன. உற்சவமூர்த்திகள் வைப்பாட்டிகளோடும் காவல் தெய்வங்களோடும் நடத்தும் பவனிகள் கற்பிதவெளியையும் உண்மைவெளியையும் குழப்பித் தர்க்கங்களைச் சிதைக்கின்றன. பாதபூஜைகள், நாமகரணம் சூட்டல் என நடக்கும் நிகழ்வுகளோடு நம் நிகழ்வுகள் போட்டியிடத் திராணியற்றவை என்பதைக் கூட நாம் உணரத் தயாராயில்லை” என்று அமுதா தன் கருத்தை மீண்டும் பதிவு செய்கிறாள்.

“உங்கள் பேச்சுகள் எனக்கு ஒன்றை மட்டும் உணர்த்துகின்றன. ஒத்திகையை ஆரம்பிக்க நமக்கு கால அவகாசம் தேவை இன்னும் நாம் யோசிக்க வேண்டும். தீவிரமாக யோசிக்க வேண்டும். மூன்று நாள் இடைவெளிக்குப் பின் மீண்டும் நாடக ஒத்திகையைத் தொட வேண்டுமென்பவர்கள் இங்கு வரலாம். அப்பொழுது மற்றவற்றை முடிவு செய்வோம்.” என்று இயக்குநர் பதிலளிக்கிறார்.

மீண்டும் அதே ஒத்திகைக் களத்தில் கால இடைவெளிக்குப்பின் இயக்குநர் தனியாக... பின்னணியில் துரிதகதியில் மேற்கத்திய இசை ஒலித்துக் கொண்டிருக்கிறது. அதற்கேற்ப தன் உடலைப் பலமாக அசைந்து ஆடத் தொடங்கி ஓய்கிறார். இசை நிற்கிறது. கடிகாரம் சத்தமாக ஒலிக்கிறது. இயக்குநர் கடிகாரத்தைப் பார்க்கிறார். கேசட்டை மாற்றுகிறார். சாஸ்திரீய நடனமொன்றிற்கான தாள ஒலி. அதற்கேற்ற நடனம். கடிகாரத்தின் மீது இயக்குநர் பார்வை திரும்பவும் கேசட் மாற்றம் மென்மையான இசைக்கோலம்.

தரையில் அதற்கேற்ப அசைந்து, மல்லாக்கப் படுத்துக் கிடக்கிறார். அவரது தலையருகில் கிடக்கும் கடிதங்களை ஒவ்வொன்றாக வாசிக்கிறார். சுவரருகில் ஒருவர் யோகாசனப் பயிற்சிகள் செய்யும் நிழல் தெரிகிறது. ஒவ்வொரு கடிதங்களை வாசித்த பின்னும் சிரிக்கிறார். ஒளி அவர் மீதும் நிழல் உருவத்தின் மீதும் மாறிமாறி விழுகிறது. இயக்குநர் நிழல் உருவமாக மாற நிஜ உருவமாக இருந்த ரவி வெளித்தெரிகிறார்.

**ஒத்திகைகள் தொடரும் - தினம்**

**ஒத்திகைகள் தொடரும்**

என்று குரல் மட்டும் ஒலிக்க ... ரவி முன்வர... இயக்குநர், ரவியின் இடத்திற்கு இடம் பெயர்வதோடு இதன் கதையை நிறைவு செய்யப்படுகிறது.

# மூடதேசத்து முட்டாள் ராஜா

## ஆசிரியர் - அ.ராமசாமி

### நாடகத்தில் இடம்பெறும் கதாபாத்திரங்கள்:

- கட்டியங்காரன் -1
- கட்டியங்காரன் -2
- ஒளி அமைப்பாளன்
- ஒலி அமைப்பாளன்
- அரசன்
- அமைச்சன்
- திருடன்
- கொத்தன்
- தாசி (ஏழிசை வல்லபி)
- அறிவிப்பாளர்கள் மற்றும்
- காவலர்கள், பொதுமக்கள்

### கதைச் சுருக்கம்:

குறிப்பிட்ட இடம் இதுவென்று எதையும் வெளிப்படுத்தாத காட்சி அமைப்பு. காலத்தைக் குறிக்கும் ஓர் அமைப்பு வடிவம். காலக்கடிகை - கடிகாரத்தின் பழைய வடிவம் அல்லது மணிக்கூண்டு. இதில் செய்யப்படும் சிறு மாற்றமே அரங்க வெளியை நீதி விசாரணைக் களமாகவும், தண்டனை நிறைவேற்றப்படும் களமாகவும் மாற்றுவதற்கு ஏதுவாக இருக்க வேண்டும்.

மேடையில் இருவர் நிற்கின்றனர். அவர்களது முகங்கள் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடியான ஒளியமைப்பு அவர்களுக்குப் பின்னால் இருவருக்கும் இடையில் மேடையின் மையத்தில் அந்தக் காலங்குறிக்கும் அமைப்பு தெளிவின்றித் தெரிகிறது. மேடையில் நிற்கும் இருவரும் ஒரே நேரத்தில் "சபையோர்களே! உங்கள் அனைவருக்கும் வணக்கம். தன் குரலோடு இன்னொரு குரலும் ஒலிப்பதை அறிந்து ஒருவரையொருவர் பார்த்துவிட்டு மீண்டும் சபையோருக்கு வணக்கம் தெரிவிக்கின்றனர். நான்தான் இந்த நாடகத்தின் கட்டியங்காரன்" என்று இருவரும் ஒருசேர கூறுகின்றனர்.

"அட... இதென்ன சோதனை... எங்கய்யா நாடகத்தோட இயக்குநர். ஒரே நேரத்தில் ரெண்டு பேரை அனுப்பி வச்சிருக்காரு. இரண்டு பேரும் நான்தான் கட்டியங்காரன்னு

சொல்றாங்க.  முதல்ல யாரு கட்டியங்காரன்னு சொல்றாங்க. முதல்ல யாரு கட்டியங்காரன்னு முடிவு பண்ணுங்க விளக்கப் போட்டா எல்லாம் வெட்ட வெளிச்சம் ஆயிடும்.  அப்புறம் யாரு கட்டியங்காரனா இருக்கலாம்னு பார்வையாளர்களும் யோசனை சொல்வாங்க.  யோவ் ஸ்டேஜ் மானேஜர் கூப்பிடய்யா இயக்குநரே யாருக்குன்னுய்யா நான் விளக்குப் பிடிக்கிறது. முதல்ல... யாரு கட்டியங்காரன்னு முடிவு பண்ணுங்க”.  என்று ஒளி அமைப்பாளன் கூறுகிறான்.

“ஐயா பெரியோர்களே! தாய்மார்களே! கட்டிளஞ்சிங்கங்கள்! இந்த நாடகத்தின் இயக்குநரும் நான்தான்” என்று இருவரும் ஒருசேர மீண்டும் கூறுகின்றனர்.  “இது நல்ல வேடிக்கைதான்.  இரண்டு பேரும் முதல்ல கட்டிங்காரன்னு சொன்னாங்க.  இப்போ இயக்குநரே நான்தான்னு சொல்றாங்க.  இன்னைக்கு நாடகம் நடந்தாப்லதான், யோவ்... ஸ்டேஜ் மானேஜர்... என்னய்யா இதெல்லாம் என்னால் இந்த நாடகத்திற்கு விளக்குப் பிடிக்க முடியாது.  ஒரு கட்டியங்காரன்னு நெனச்சு ஒரு ஸ்பாட்டுத்தான் வச்சேன்.  இப்போ ரெண்டு பேருன்னா... என்னோட டிஸைனே குழப்பமாயிடுமே.  ஏன்ப்பா ஏந்தொழில கெடுக்கிறீங்க. இரண்டு பேர்ல யாராவது அந்த வெளிச்சத்தில் வந்து பேசுங்க.” என்று ஒளி அமைப்பாளன் மீண்டும் கூறுகிறான்.

“எனக்கும் அதே பிரச்சினைதான்.  இரண்டு பேரும் ஒரே நேரத்தில் ஒரே வசனத்தைப் பேசினா என்னோட “மைக்செட்”-ல தான் கோளாறுன்னு நெனச்சுக்குவாங்க. ஒருத்தர் ஒருத்தரா பேசுங்க... அதுதான் சரிப்பட்டுவரும்” என்று ஒலி அமைப்பாளன் கூறுகிறான்.  “இவ்வளவுதான் உங்க பிரச்சினையா? இதுக்கு உடனே தீர்வு கண்டிடலாம்” என்று கூறிய இரு கட்டியங்காரர்களும் தங்கள் வசம் உள்ள துணியைக் கயிறாக நினைத்து யார் பலசாலி என முடிவு செய்ய முயல்கின்றனர்.  சம பலமுள்ளவர்களாதலால் முடிவு இல்லை.  ஒளி அமைப்பாளன் இடையில் வந்து பூவா? தலையா? போட்டு ஒருவனை வென்றவனாகக் கையைத் தூக்கி அறிவித்துவிட்டு இறங்கிக் கொண்டிருந்தான்.

“நான் கேட்ட தலை விழுந்து அதிர்ஷ்டம் என்னைத் தேடி வந்துள்ளது.  அதனால் உங்கள் முன்னால் நானே முதலில் பேசப் போகிறேன்.” என்று கட்டியங்காரன் - 1 என்பவன் கூறுகிறான்.  எனது நாடகமே முதலில் நடக்கப் போகிறது.  இதற்காக முதலில் ஜோரா ஒரு தடைவ கை தட்.டலாமா... எங்கே தட்டுங்க பார்க்கலாம் என்றதும் கைதட்டல் ஒலி பலமாக கேட்கிறது.  பெரியோர்களே! தாய்மார்களே! நானொரு கட்டியங்காரன்.  கட்டியங்காரனின் காரியங்கள் உங்களுக்குத் தெரியும்தானே.  மூன்று காலமும் முழுதும் உணர்ந்தவன் இன்றைய பொழுதை நேற்றாய் மாற்றுவான்.  நேற்றைய பொழுதை நாளைய பொழுதாக்குவான்.  கட்டுக்குள் இருக்கும் கால எல்லையை கற்பனைகள் கொண்டு விரித்துப் பெருக்குவான்.

"நானொரு கட்டியங்காரன். நேரத்தைக் கட்டவிழ்ப்பவன் நானொரு கட்டியங்காரன்" என்கிறான். மேலும், இப்போது உங்கள் முன் என் நாடகத்தை நடத்தப்போகிறேன். நாடகம் நல்லதொரு நாடகம். "ஏ... விளக்கைப் போடு ... இடத்தைப் பார்க்கணும் எனக்கான இடமான்னு பார்க்கணும்" என்கிறான். வெளிச்சமும் பரவுகிறது. அவன் எல்லா இடங்களிலும் பரவி வந்து... "பார்வையாளர்களே! மன்னிக்க வேண்டும். இந்த இடம் என் நாகடத்திற்குத் தோதானதாகத் தோன்றவில்லை. என் நாடகம் நடைபெற உள்ளேயும் இல்லாத ... வெளியேயும் இல்லாத ... அகத்திலும் இல்லாத புறத்திலும் இல்லாத இடம் தான் வேண்டும்" என்று கட்டியங்காரன் - 1 என்பவன் கூறியதும், "அப்போ... உன் நாடகம் நடந்த மாதிரிதான்" என்று கட்டியங்காரன் - 2 என்பவன் கூறுகிறான்.

"ஏன் ... நிச்சயம் என் நாடகம் நடந்தே தீரும் இந்தப் பூமியில் எங்காவது அதற்கான வெளி.... உள்ளும் அல்லாத புறத்தும் அல்லாத வெளி கிடைக்கும். அங்கே தான் என் நாடகத்தை நடத்துவேன்" என்று கட்டியங்காரன் - 1 என்பவன் கூறியதும், கட்டியங்காரன் - 2 என்பவன், "அது சரி .... கொஞ்சம் இருந்து அப்ப நான் நடத்தப் போற நாடகத்தைப் பார்த்துட்டுப் போ... அப்படி உட்கார்" என்று கூறியபடியே கட்டியங்காரன் - 1 என்பவனை மேடையின் ஒரு ஓரத்தில் உட்கார வைக்கிறான்.

தற்போது கட்டியங்காரன் - 2 என்பவன் மேடையில் தோன்றுகிறான். நல்லவர்களே! வல்லவர்களே! நானொரு கட்டியங்காரன் கட்டியங்காரனின் வித்தைகள் எல்லாம் தெரியும்தானே. ஆக்கவும் செய்வான், காக்கவும் செய்வான். பின்னர் அழிக்கவும் செய்வான். அவை கோட்டைகள் என்றால்அவை கோட்டைகளாகும். கொத்தளம் என்றால் அவை கொத்தளம் ஆகும். "கட்டியங்காரன் அவன். இடத்தை கட்டியமைப்பவன் கட்டியங்காரன் நாடகத்தின் கட்டியங்காரன் என்றான்.

கோணய நாட்டில் செய்தி ஒன்றினை அறிவிப்பதற்கான முரசின் ஒலி கேட்கிறது. அதாவது கோணய நாட்டு கேணய மகாராஜா அந்நாட்டில் "கால ஒழுங்கு" மாற்றம் செய்துள்ளார் என்பதனை முரசு அறைந்து அறிவிப்பாளன் அந்நாட்டு மக்களுக்கு செய்தியினை அறிவிக்கின்றான். "அதாவது இனி இரவெல்லாம் பகலாகவும், பகலெல்லாம் இரவாகவும் கருதப்படும்!" பெயர் மாற்றல் உத்தரவுகளை ஏற்றுக் கொண்டது போலவே இந்த ஆணையையும் ஒவ்வொரு குடிமகனும் சிரமேற்கொண்டு செயல்படுத்த வேண்டும். "கால ஒழுங்குமுறை மாற்றம் செய்யப்படுகிறது. தவறுபவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படும்" என்றும் அறிவிக்கின்றான் அறிவிப்பாளன்.

கோணய நாட்டு மக்கள் பகலில் செய்யும் வேலைகளை இரவைப் பகலாகக் கருதி செய்கின்றனர். தூக்கமும் விழிப்பும் பெரும் சிக்கலாக மாறுகின்றன. இருட்டும் வெளிச்சமும் மக்களை குழப்பத்தில் ஆழ்த்துகின்றன. அந்தரங்க விஷயங்கள்

வெளிச்சத்தில் நடைபெறுகின்றன. அதே நேரத்தில் கோணய மகாராஜாவும், அமைச்சரும் நாட்டில் சட்டம் ஒழுங்கு காக்கப்படுகிறதா என்று விவாதித்தப்பின் மாறுவேடத்தில் நகர்வலம் செல்ல முடிவு செய்கின்றனர்.

கோணய நாட்டில் சூரியன் கிழக்கே உதிக்கிறது. அரசர் ஆணைப்படி "வீடுகளில் மக்கள் விளக்கு ஏற்றுகின்றனர். ராப்பாடியும் திருடனும் ஒரு சத்திரத்தில் தூங்கிக்கொண்டிருந்தனர் வீடுகளில் பாய்களை விரித்துப் படுக்க ஆரம்பிக்கின்றனர். தன் மனைவியை நெருங்கிப் படுக்க ஒருவன் முயல்கிறான். திடுக்கிட்டு விழித்த அவள் பக்கத்தில் மற்றவர்கள் இருப்பதைப் பார்த்து அவனை அண்டவிடவில்லை. மற்றொரு புறத்தில் திருடனும் பதுங்கிப் பதுங்கி வருகிறான்.

"பெய்யு மழையம்மா இங்கே பெய்யு மழையம்மா பேயா மழையொன்னு இங்கு பெய்யு மழையம்மா நல்ல மழையொன்னு பெய்யு மாலம்மா.

**ஊசி போல மின்னி மின்னி**

**ஊர் செழிக்கப் பெய்யு மாலம்மா**

**நாடு காடானாலும் காடு நாடானாலும்**

**நல்ல மழை மாறாது**

**ராத்திரியைப் பகலென்றால் பகல்**

**கோபங்கொள்ளாது**

**பகலை இரவென்றால் பகல் குளிர்ந்து போகாது**

**இயற்கை வழி மாறாது**

**இன்னுமென்ன சேதி யம்மா..."**

என்றவாறு ராப்படி பாடல் பாடுகிறான்.

கள்ளக் காதலர்கள் தனியாகச் சந்தித்துக் கொள்கின்றனர். இன்னும் எத்தனை நாள் இப்படி யாருக்கும் தெரியாமல் சந்திப்பது. விரைவில் நாம் இருவரும் கணவன் மனைவியாவோம் என்று பேசிக்கொள்கின்றனர். மாறு வேடத்தில் அரசனும் அமைச்சனும் நகர்வலம் வருகின்றனர். அப்போது ஏதோ குரல் கேட்கிறது. "காதலர்கள் ரகசியமாகச் சந்தித்துக் கொள்கிறார்கள் அரசே, பெற்றோர்களுக்குத் தெரியாமல்..." என்று அமைச்சர் கூறுகிறார். கோணய நாட்டு மக்கள் புதிய முறை மாற்றத்திற்குப் பழகிவிட்டனர். என்பதை,

அங்கும் இங்கும் தேடி அலைந்து திரிந்த கட்டியங்காரர்கள் இருவரும் கோணய நாட்டு எல்லையைக் கடந்து நகருக்குள் நுழையும் பொழுது வியர்த்துக் கொட்டுகிறது. வெயிலின் தகிப்பில் நடந்து வருவதற்கு இருவரும் மிகவும் சிரமப்படுகின்றனர் ஆள் அரவமே இல்லாத வெறிச்சோடிய தெருக்கள் இருவருக்குமே ஆச்சரியத்தை தருகின்றனர்.

மரத்தடி நிழல்களில் பலரும் உறங்குகின்றனர். வீட்டிற்குள் புழுக்கத்தில் விசிறியபடியே சிலர் உறங்குகின்றனர். "இதென்ன ஆச்சரியம். இந்த ஊரே இப்படி உச்சி வெயிலில் உறங்குகிறார்களே. எனன மாயம். புல்லாங்குழலுக்கு மயங்கிய மாட்டு மந்தைகளைப் போல, என்ன மந்திரத்தில் இப்படிக் கட்டுண்டு கிடக்கிறார்கள் இவர்கள்" என்று கட்டியங்காரன் - 2 என்பவன் ஆச்சரியப்படுகிறான்.

பின்னர், அரசரும் அமைச்சரும் தங்களின் பயணக் களைப்புத் தீர ஓய்வெடுப்பதற்கு சத்திரம் ஒன்றில் (பார்ப்பதற்கு சோம்பேறிகள் மடமாக காட்சியளிக்கிறது) தங்கி தூங்குகின்றனர். இருவரும் நன்றாக கண் அயர்ந்து விடுகின்றனர். திடீரென ஊர் மக்கள் விழித்துக் கொள்கிறார்கள். கட்டியங்காரர்களும் விழித்துப் பார்க்கின்றனர். பெண்கள் வாசல் தெளித்துக் கோலம் போடுகின்றனர். ஆடுமாடுகள் மேய்ப்பதற்காக ஓட்டிச் செல்லப்படும் ஒலிகள் கேட்கின்றன. பல் துலக்கியபடி சிலர் காலைக் கடன் கழிக்கச் செல்கின்றனர்.

எனக்கு இந்த ஊரில் ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது மிகவும் பயமாக இருக்கிறது. இப்பவே நாம் இங்கிருந்து கிளம்பணும் என்று கட்டியங்காரன் - 1 என்பவன் கூறுகிறான். எனக்கு இந்த ஊர் மிகவும் பிடிச்சிருக்கு. இரண்டு, மூணு நாட்கள் இங்கு தங்கி பார்க்கலாம். இந்த ஊரு என்னுடைய தேடுதலின் முடிவு கிடைக்கக் கூடிய ஊராகத் தோன்றுகிறது.

**"ஆமாம் ... என் தேடல்...**
**நீண்ட நெடிய தேடல்...**
**என் நாடகத்திற்கான தேடல்...**
**காலத்தைத் தேடிய தேடல்...**
**ராத்திரியும் அல்லாத பகலும் அல்லாத**
**காலநிலை அது**
**இங்கே வசப்படும் சூழ்நிலை**
**நானொரு கட்டியங்காரன்**
**நல்லதொரு நாடகத்தின் கட்டியங்காரன்"**

என்று கட்டியங்காரன் - 2 என்பவன் கூறுகிறான்.

"ஐயோ... இது வேறெ மாதிரி ஊரு ராத்திரியைப் பகலாகவும் பகலை ராத்திரியாகவும் குழப்பும் பூமி உனக்கான பூமியல்ல" என்றும், "உன் காலத்தை முடிப்பார்கள்" என்றம் கட்டியங்காரன் - 1 என்பவன் கூறுகிறான். "எனக்கான காலம் ராவுமல்லாத பகலுமல்லாத காலம். அது நிச்சயம் கிடைக்குமிங்கே... கால ஒழுங்கை உருவாக்குவார்கள். வெறும்

தேடலில் பயன் என்ன விளையும். பரீட்சைகள்தான் முடிவைக் கொடுக்கும். சோதனைகள் இன்றிச் சாதனைக்ள ஏது? சோதனைகள் தந்த இப்பூமி புதிய ஒளியைப் பாய்ச்சிவிட்டது எனக்குள்" என்று கட்டியங்காரன் - 2 என்பவன் கூறுகிறான்.

"கட்டியங்காரன் இருவரின் பயணக் களைப்புத் தீர எங்கள் இல்லர்தில் விருந்துண்ண வேண்டும். வந்தவரை வரவேற்பது எங்கள் பண்பாடு. காலைக் கடன்களை முடித்துவிட்டு வாருங்கள்" என்று ஊரில் உள்ள ஒருவர் அழைக்கிறார். கட்டியங்காரன் ஒருவன் இந்த ஊர் பிடிக்கவில்லை என ஊரைவிட்டு வெளியேறுகிறான். கோணய நாட்டு கேணய அரசனின் விசாரணை மன்றத்தில் மரண தண்டனையை நிறைவேற்றும் அமைப்பு உள்ளது. அமைச்சர்கள். காவலாளிகள், மக்கள் உள்ளனர். மேல்முறையீடு உள்ள வழக்கு ஒன்றில் கிராமசபை வழங்கிய தீர்ப்பை, பின்வருமாறு அமைச்சர் அரசருக்கு படித்துக்காட்டுகிறார்.

"அவனி புகழ் கேண மகாராஜாவின் ஆளுகைக்குட்பட்ட மண்பாதி மங்கலம் கிராமம் வேதவல்லி அம்மன் சந்நிதி தெருவில் எழுபத்தியெட்டாம் இலக்குமனையில் கன்னம் வைத்துத் திருடிய கள்வன் கையுங்களவுமாய்ப் பிடிபடட்டான். கன்னம் வைத்து மதிலவ் விழுந்ததில் இரண்டு ஆநிரைகளும், இரண்டு பிராமாணர்களும் உயிரிழந்துவிட்டனர்.

நீதிநெறி வழுவா கேணய மகாராஜாவின் ஆக்ஞைகள்படி திருட்டுக்குத் தண்டனை ஆறுமாதச் சிறைவாசம். ஆனால் உயிர்பலிக்குத் தண்டனை உயிர்பலிதான். இரண்டு பிராமணர்கள் மூன்று உயிர்களுக்குச் சமம். எனவே, 5 உயிர்கள் பலியாகக் காரணமான இத்திருடனுக்கு மரண தண்டனைக்குக் குறைவான தண்டனை கிடையாது. சர்வ அமாவாசை நாளாம் எதிர்வரும் புதன்கிழமை சூரியன் மேருமலையில் கால் பதிக்கும் நேரத்தில் அதாவது இரவுமல்லாத பகலுமல்லாத வேளையில் அவனைத் தூக்கிலிட வேண்டும் என்பது பஞ்சாயத்தின் முடிவு. இம்முடிவு கோணய நாட்டின் கேணங மகாராஜா நாமம் உள்ளளவும் நின்று நிலவும்" என்று அமைச்சர் தீர்ப்பை படித்து முடிக்கிறார்.

"இந்தத் தீர்ப்பில் குறை ஏதும் இருப்பதாகத் தெரியவில்லையே" (காவலர்களே அத்திருடனை இழுத்துவந்து நிறுத்துகிறார்கள்) என்று அரசர் கூறுகிறார். பின்னர் அத்திருடனிடம் மேல்முறையீடு செய்ய காரணம் என்ன? என்று கேட்கிறார் அரசர். "அரசே செய்யாத குற்த்திற்காக ஒருவன் தண்டிக்கப்பட்டால், அந்தப் பாவம் உங்களைத்தானே சாரும். நான் கன்னம் வைத்து திருடியது உண்மைதான். ஆனால் எனக்குத் தண்டனை நான் திருடியதற்காகத் தரப்படவில்லை. அரசே... 5 உயிர்களைப் பலிவாங்கியதற்காக மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது அரசே" என்று திருடன் கூறுகிறான்.

மேலும் "5 உயிர்கள் பலியானதற்கு நான் காரணமல்ல. மதில்தான் காரணம் மதிலைக் கட்டிய கொத்தனார்கள்தான் காரணம். ஆகவே... திருட்டுக் குற்த்திற்கான ஆறுமாத சிறைத்தண்டனையை மாத்திரம் எனக்கு வழங்குவதே நீதி வழுவா உங்கள்

ஆட்சியின் சிறப்பு” என்று திருடன் கூறுகிறான். “அமைச்சரரே! அவன் சொல்வது சரிதான் இவளை ஆறுமாதச் சிறைத் தண்டனைக்கு அனுப்புங்கள். நாளை விசாரணைக்கு அந்தக் கொத்தனாரைக் கொண்டு வந்து நிறுத்துங்கள்” என்கிறார் அரசர்.

இவற்றையெல்லாம் மிகவும் ஆர்வத்துடன் கட்டியங்காரன் - 2 என்பவன் பார்த்துக்கொண்டிருக்கிறான். மறுநாள் வந்த கொத்தனார் தனக்கு தூக்குத் தண்டனை என்பதை அறிந்ததும், ”அரசே... என்னை மன்னிக்க வேண்டும். உண்மையைச் சொல்லிவிடுகிறேன். அந்த இடத்தில் வேலை செய்யும்பொழுது கோயில் தாசி ஏழிசை வல்லபி அந்த வழியே போனாள். என் கவனம் சிதறிவிட்டது” என்று கூறியதும், “கவனத்தைச் சிதறவிட்ட கொத்தனாருக்குத் தண்டனை ஆறுமாத சிறைவாசம். கவனத்தைச் சிதறவைத்த தாசியே உயிர்கள் பலியானதற்குப் பொறுப்பு. அவளை அழைத்து வாருங்கள்” என்று அரசர் கட்டளையிடுகிறார்.

தனக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டதை அறிந்த தாசி, “அரசே! இதென்ன அநியாயம். எய்தவனிருக்க அம்பை நோகும் கதையாக இருக்கிறது. நான் அந்த நேரத்தில் அங்கே வந்தது உண்மைதான். ஆனால், அமைச்சர் வரச்சொல்லி தான் நான் அதன் வழியே வந்தேன்” என்கிறாள். “அமைச்சரே! நீ தான் பொறுப்பு கோணய நாட்டில் சட்டத்தின் முன் அமைச்சர் - சாதரண மனிதன் என்ற பேதம் கிடையாது. அனைவரும் சமமே. தண்டனையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருங்கள்” என்கிறார் அரசர்.

“அப்படியே ஆகட்டும் அரசே... நான் வரச்சொன்னது என்னவோ உண்மைதான். ஆனால் எனக்காக வரச்சொல்லவில்லை. அரசே அரசியார் கோபமாக இருப்பதைச் சொல்லி, நீங்கள் தான் “ஏழிசை வல்லபி”யை அனுப்பு என்று சொன்னீர்கள்” என்றும், “அரசியாரின் கோபம் தீர்ந்துவிட்டது என்று திருப்பி அனுப்பிவிடும்படி நீங்கள்தான் சொல்லிவிட்டீர்கள் அரசே” என்று அமைச்சர் கூறுகிறார்.

“அமைச்சரே! ஏழிசை வல்லபியை அன்று வெறுங்கையோடு அனுப்பியதற்குப் பதிலாக இன்று 500 வெள்ளிக்காசுகளை கொடுத்து அனுப்புங்கள். இந்த வழக்கை இத்தோடு முடித்துக் கொள்ளலாம்” என்று அரசர் கூற, அதற்கு கிராம பஞ்சாத்தார், “அரசே மன்னிக்க வேண்டும். ஒண்டிக் கருப்பன் முன்னால் தூக்குமரம் தயாராகிவிட்டது. கிராமத் தெய்வம் துடியான தெய்வம் அதனால்... குற்றவாளி ஒருவனைத் தூக்கில் போடாவிட்டால் பல்வேறு அசம்பாவிதங்கள் நடக்கும் கிராமம் தாங்காது. நாடு சுடுகாடாகும்” என்று கூறுகின்றனர்.

“ஆமாம். தெய்வக்குற்றம். அதனை நாடு தாங்காது. இப்பொழுது என்ன செய்யலாம். அமைச்சரே! வரும் புதன்கிழமையில் யாராவது ஒரு குற்றவாளியைத் தயார்

செய்யுங்கள். தூக்கில் ஏற்றியாக வேண்டும். இது என் உத்தரவு” என்று அரசர் அமைச்சரிடம் கூறுகிறார். குறிக்கப்பட்ட நாளில் தூக்குமரத்தின் கீழ் கட்டியங்காரன் - 2 நிற்கிறான். தூக்குக்கயிறு தொங்குகிறது. அரசன், அமைச்சன் மற்றும் பொதுமக்கள் உள்ளனர்.

“கோணய நாட்டு மக்களே! நம் கேணய மகாராஜா நீதிநெறி வழுவாதவர். ஒரு புழுவிற்குத் தண்டனை வழங்கினாலும் தீர விசாரித்தே முடிவு செய்வார். இந்த ஆள் நம் பகைநாட்டைச் சேர்ந்த ஒற்றன். நாடகக் கலைஞன் என்று சொல்லி ரகசியங்களை தெரிந்து கொண்டுள்ளான். இவனோடு வந்த இன்னொருவன் ஓடிவிட்டான். உங்கள் மக்கள் விருப்பப்படி நம் அரசர் இவனைத் தூக்கிலிட்டு நம் தேச ரகசியங்களைக் காக்க முடிவு செய்துள்ளார்” என்று அமைச்சர் கூறுகிறார்.

“அவனைத் தூக்கிலிடும் முன்பு அவளது கடைசி ஆசையை கேளுங்கள் அமைச்சரே!” என்று அரசர் கூறுகிறார். “என்னுடைய ஆசை கடைசி ஆசையாகப் போகிறது. இரவும் அல்லாத பகலும் அல்லாத வேளையில் என் நாடகம் நடக்கப் போகிறது. அதற்கு முன் என் குருநாதரைச் சந்திக்க வேண்டும். அவரை எங்கும் தேடவேண்டாம். என் நாடகத்திற்கு அவர்தான் கங்காணி. இன்னும் சிறிதுநேரத்தில் வந்துவிடுவார். இதோ வந்துவிட்டார். வந்துவிட்டீர்களா… என் நாடகத்தின் அரங்கேற்றத்தைப் பாருங்கள். அன்றே நீங்கள் சொன்னீர்கள். இங்கே ஆபத்து காத்துக்கொண்டிருக்கிறது என்று நான்தான் கேட்கவில்லை” என்று கட்டியங்காரன் - 2 மிகவும் வருந்துகிறான்.

“சரி … பொறுமையாக இரு… அரசே! உங்களிடம் ஒரு வேண்டுகோள். இவன் எனது சிஷ்யன். அவன் செய்த எல்லாத் தவறுகளுக்கும் நான்தான் பொறுப்பு. எனவே, அவனுக்கு வழங்க வேண்டிய தண்டனையை எனக்கு வழங்குங்கள்” என்று கட்டியங்காரன் - 1 கூறுகிறான். “யாராயிருந்தால் என்ன? தயாரான தூக்குமரத்திற்கு ஓர் ஆள் பலியாக வேண்டும் அவ்வளவுதான்” என்று அமைச்சர் கூறுகிறார்.

“என்னைத்தான் தூக்கிலிட வேண்டும்” என்று இருவரும் மாறி மாறி கூறுகின்றனர். அதற்கான காரணத்தை மன்னர் கேட்கிறார். உடனே கட்டியங்காரன் - 1 என்பவன் நான் காரணத்தை கூறிய பின்னர் அப்படியே அடுத்தடுத்து தூக்கில் போடணும். தண்டனையை மாற்றிவிடக்கூடாது என்றும், தன்னைத்தான் முதலில் போடணும் என்றும் அரசரிடம் கேட்டுக்கொள்ள, அரசரும் “நீங்கள் விரும்பினால் 2 பேரையும் தூக்கில் போடலாம்” என்கிறார்.

“அரசே அது வந்து… அரசே… இந்த வருடம் சர்வ அமாவாசை தினமான இந்தப் புதன் கிழமையன்று ராத்திரியும் அல்லாத பகலும் அல்லாத வேளையில் தூக்கில் தொங்கி

இறந்தால்… முதலில் இறப்பவன்தான் இந்த நாட்டின் அடுத்த அரசன். இரண்டாவதாக இறந்தால்… இந்த நாட்டின் அடுத்த அமைச்சன்'' என்று கட்டியங்காரன் - 1 என்பவன் கூறியதும், ''யாரங்கே காவலர்களே! இவ்விருவரையும் பிடித்துத் தூணில் கட்டிப்போடுங்கள்'' என்று அரசர் கூறியதும், காவலர்கள் அவ்வீருவரையும் பிடித்து இழுத்துச் செல்கின்றனர்.

''அமைச்சரே! அடுத்த பிறவியிலும் நீதான் எனக்கு அமைச்சராக வரவேண்டும். நான்தான் இந்த நாட்டின் அரசன். இதில் எந்த மாற்றமும் இருக்கக்கூடாது. நான் முதலில் தூக்கில் தொங்குகிறேன். நீங்கள் என்னைப் பின்தொடரவேண்டும் புரிந்ததா?'' அன்று கூறியபடி முதலில் அரசர் தன் கழுத்தில் கயிரை மாட்டுகிறார். பின்னர் அமைச்சரும் அதையே பின்பற்ற, அரசனும் அமைச்சனும் பிணமாகக் கிடக்கின்றனர். கட்டியங்காரர்கள் இருவரும் உயர்வான் பீடத்தில் நிற்கின்றனர்.

''உண்மையிலேயே நீங்கள்தான் என் குரு. என் உயிரை மீட்டுத் தந்துவிட்டீர்கள்'' என்று கட்டியங்காரன் - 2 கூற, ''என் புத்திசாலித்தனத்தைப் புரிந்து கொண்டால் சரி ''என்று கட்டியங்காரன் - 1 கூறுகிறான். கட்டியங்காரன் - 1 என்பவன் கோணய நாட்டு மக்களைப் பார்த்து ''முட்டாள் ராஜாவை சகித்துக் கொண்டிருந்த மூடதேசத்து மக்களே! இனி உங்களுக்கு விடிவுகாலம்தான். புத்திசாலிகளான நாங்கள் ஆளும் பொறுப்பை எடுத்துக் கொள்ளப் போகிறோம். நான்தான் இனி இந்த நாட்டின் மகாராஜா. எனது சிஷ்யந்தான் அமைச்சன். எங்கள் உத்தரவுபடி நடந்தால் நாடு நலம்பெறம் காடு வளம்பெறும். மாதம் மும்மாரி பொழியும். எங்கள் முதல் உத்தரவு இதோ… நம் தேசத்தில் இதுவரை பின்பற்றப்பட்டு வந்த ''கால ஒழுங்குமுறை மாற்றம்'' செய்யப்படுகிறது. அதாவது பகலாகக் கருதப்பட்டது இனி இரவாகக் கருதப்படும்'' என்கிறார். ''சட்டத்தை மீறுபவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும்'' என்ற அறிவிப்பு ஒலியும் கேட்கிறது.

## அலகு - 5

## பெருஞ்சித்திரனார் - பள்ளிப்பறவைகள்

### பெருஞ்சித்திரனார்:

**"என்மொழி, என்னினம், என்நாடு நலிகையில்**
**எதனையும் பெரிதென எண்ணமாட்டேன் - வேறு**
**எவரையும் புகழ்ந்துரை சொல்ல மாட்டேன்! - வரும்**
**புன்மொழி, பழியுரை, துன்பங்கள் யாவையும்**
**பொருட்டென மதித்துளம் கொள்ள மாட்டேன்! - இந்த (ப்)**
**பூட்கையில் ஓரடி தள்ள மாட்டேன்!"**

என்று எழுதி அதன்வழி வாழ்ந்துகாட்டியவர் பாவலரேறு பெருஞ்சித்தரனார் ஆவார்.

தமிழில் பிறமொழிச் சொற்களைவ கை தொகையின்றிக் கலந்து எழுதும் போக்கை இருபதாம் நூற்றாண்டில் தடுத்துநிறுத்தியவர் தனித்தமிழ்த் தந்தை மறைமலை அடிகளார் என்றால், தமிழைத் தூய தமிழாக வழக்கில் கொண்டுவர முனைந்து நின்றவர்கள் மொழிஞாயிறு பாவாணரும், அவர்தம் தலைமாணாக்கர் பாவலரேறு பெருஞ்சித்திரனாரும் ஆவார்கள்.

இரண்டாயிரம் ஆண்டுகளாக நிகழ்ந்த பாதிப்புகளைவிட இருபதாம் நூற்றாண்டில்தான் தமிழுக்கும், தமிழர்களுக்கும் அதிகப் பாதிப்புகள் ஏற்பட்டன. சமற்கிருதச் செல்வாக்கு, இந்தி எதிர்ப்பு, வடபுல ஆதிக்கம், ஆங்கிலவழிக்கல்வி, ஈழத்தமிழர் போராட்டம் என்று பலமுனைகளில் தமிழும், தமிழர்களும் தாக்கப்பட்டனர். இவற்றைத் துணிவுடன் எதிர்கொண்டவர்களுள் பாவலரேறு பெருஞ்சித்தரனார் குறிப்பிடத்தக்கவர்.

தமிழ்த்தேசியப் பாவலர்களுள் குறிப்பிடத்தகுந்த பெருமைக்கு உரியவர் பெருஞ்சித்திரனார் ஆவார். பாவேந்தருக்குப்பின் தமிழர்கள் எழுச்சிபெறத்தக்கப் பாட்டுகளைப் பல்வேறு வடிவங்களில் வழங்கியவர். இளைஞர்களும், பெரியோர்களும், அறிஞர்களும் விரும்பும் வகையில் பாடல் பல இயற்றியுள்ளார். பெருஞ்சித்திரனார் அவர்கள் மழலைச்செல்வங்கள் கற்றும் ஆடியும் பாடியும் மகிழத்தக்க வகையில் பல பாடல்களை வழங்கியுள்ளார் இளைஞர்களுக்கும் பெரியவர்களுக்கும் உணர்ச்சி ததும்பும் பாடல்களை வரைந்த இவர்தம் குழந்தைப் பாடல்களைப் படிக்கும் பொழுது இவர்தம் குழந்தை உள்ளம் புலப்படும் இவர் தம் படைப்புகளில் குறிப்பிட்டு ஆராயவேண்டிய பகுதிகளில் குழந்தைப்பாடல்கள் வரிசை ஒன்றாக உள்ளது.

பாரதியார், கவிமணி, பாவேந்தர் மழலைப்பாடல்கள் இயற்றியுள்ளனர். எனினும் அழ.வள்ளியப்பா, பெருஞ்சித்திரனார், தங்கப்பா, மரசு, நெடுமாறன், குழ.கதிரேசன் முதலான பாவலர்களின் பாடல்களே மழலையர் உள்ளம் உணர்ந்து எழுதப்பட்டதாக அறிஞர் உலகம் குறிப்பிடுகின்றது. தமிழ்ச்சிட்டு என்னும் இதழைத் தொடங்கி நடத்திய பெருஞ்சித்திரனார் அட்டைப் பாடல்களாகவும், பிற வகையிலும் எழுதிய பாடல்களைத் தொகுத்துப் பள்ளிப்பறவைகள் என்னும் தொகுப்பை வெளியிட்டார்.

## பெருஞ்சித்திரனார் படைப்புகள்:

1. கொய்யாக்கனி, 2 ஐயை, 3. பாவியக்கொத்து, 4. எண்சுவை எண்பது, 5. மகபுகுவஞ்சி, 6 அறுபருவத்திருக்கூத்து, 7. கனிச்சாறு, 8. நூறாசிரியம், 9. கற்பனை ஊற்று, 10. உலகியல் நூறு, 11. பள்ளிப்பறவைகள். இதழ் - 1. தென்மொழி, 2. தமிழ்ச்சிட்டு, 3. தமிழ் நிலம்.

## பள்ளிப்பறவைகள் நூல் அறிமுகம்:

பள்ளிப்பறவைகள் நூலின் பாடல்கள் மூன்று பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. 1. முதல் பகுதி (குஞ்சுகளுக்கு), 2. பறவைகளுக்கு, 3.மணி மொழிமாலை, பாடல்கள் இடம்பெற்றுள்ளன. சிறுவர்கள் படித்துமகிழும் வண்ணமும், பார்த்துமகிழும் வண்ணமும் சிறு சிறு படங்கள் வனப்புடன் வரையப்பட்டுள்ளன.

பள்ளிக்குப் பறக்காத குஞ்சுகளுக்கும், பள்ளிக்குப் பறந்து செல்லும் பறவைகளுக்கும் அவ்வப்பொழுது வடித்த பாடல்கள் இவை என ஆசிரியர் குறிப்பிடுவது போல் இளம் மழலைக்கான பாடல்களும், ஓரளவு படிக்கத் தெரியும், சிந்திக்கத் தெரியும் குழந்தைகளுக்குமான பாடல்கள் இந்நூலில் உள்ளன. நிறைவுப்பகுதியில் அமையும் மணிமொழிமாலை என்னும் பகுதியில் அறவியல் செய்திகள், நற்பண்புகளைப் புகட்டும் செய்திகள் பாடல்களாக்கப்பட்டுள்ளன.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் மழலைப்பாடல்களின் முற்பகுதியில் பள்ளிக்குச் செல்லாத குழந்தைகளுக்குப் புரியும் வண்ணமும், மனத்தில் பதிக்கும் வண்ணமும் பாடல்கள் உள்ளன. அம்மாவை அறிமுகம் செய்வது, தாய் கொஞ்சுவது, பாதையில் நடப்பது, காக்கை, இயற்கை நாள் கடமை, நிறம், பறவை, விலங்கு, கோழி, பூனை, மீன்கள், கதிரவன், காற்று, வானூர்தி, கடிகாரம், குடை, செருப்பு, மாட்டுவண்டி, விளையாட்டு, பாட்டி, பாப்பா முதலான அன்றாடம் நம் கண்ணில் காணும் பொருளைகளைக் குழந்தைகளுக்கு நினைவூட்டிப் பாடல்களை எழுதியுள்ளார்.

பாவலரேறு அவர்கள் எழுதியுள்ள மழலைப் பாடல்களில் பொருத்தமான யாப்பமைப்புகளைப் பயன்படுத்தியுள்ளார். சிறுவர்கள் விரும்பும் ஓசை அவர்தம் பாடல்களில் எங்கும் ஒலிக்கின்றன. வகையுளிகள் இல்லாமல் இருப்பது பெருஞ்சிறப்பு, கடுஞ்சொற்களைக் காண முடியவில்லை. பிள்ளைகளுக்கு அறிமுகமான சொற்களே பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**அம்மா மிகவும் நல்லவள்!**

**ஆட்டித் தூங்கச் செய்தவள்!**

**இளைக்கக் கண்டு அழுதவள்!**

**ஈயை ஓட்டி நின்றவள்!**

**உழக்கு நெய்யைச் சோற்றிலே,**

**ஊற்றிப் பிசைந்து கொடுத்தவள்!**

**எடுத்துத் தூக்கி அணைத்தவள்!**

**ஏணை கட்டிப் போட்டவள்!**

**ஐயன் அப்பன் என்றவள்!**

**ஔவைக் கதையைச் சொன்னவள்!**

**ஒப்பனைகள் செய்தவள்!**

**ஓயா தென்னைக் காப்பவள்! (பள்ளி.ப11)**

என்னும் பாடலில் தாயின் பாசம் நன்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒரே பொருளை முதன்மைப்படுத்தி, பிற செய்திகளை நுழைக்காமல் பெருஞ்சித்திரனார் பாடியுள்ளமை அவர்தம் கற்பனையாற்றலையும், நினைவாற்றலையும் நுண்ணோர்க்குத் திறனையும் மெய்ப்பிக்கும்.

## குழந்தை:

குழந்தை என்னும் தலைப்பில் பாடல்களை இயற்றியுள்ளார். குழந்தை இலக்கியம் கழகக் காலத்திலும் உண்டு ஊழி ஊழியாய் வளரும் மாந்தர் சமுதாயத்தின் அடியூற்றாகக் கிளர்ந்தெழும் குழந்தை உணர்வுகள் என்றும் அழிந்து போகாமல் ஒவ்வொரு மாந்த உள்ளத்தின் அடித்தளத்திலும் படர்ந்து கிடக்கின்றன. அவை அவனைச் செழுசெழுப்பாக்கி வளரச் செய்கின்றன; வாழச் செய்கின்றன; மகிழச் செய்கின்றன; மங்காமல் என்றென்றும் நிலைநிற்கச் செய்கின்றன, குழந்தை மனந்தான் கொழுமை மனம்! மாந்தத்திற்கு வேண்டிய கரு மனம்! ஆனால் உலக வினைவெப்பத்தில் அம்மனம் காய்ந்து, கருகி, உலந்து, உதிர்ந்து விடுகின்றது! அதை அப்பொழுதைக்கப்பொழுது உணர்வு நீருற்றி உலராமல்

மைவத்துக்கொள்ள இலக்கியங்கள் உதவுகின்றன. குழந்தை இலக்கியங்களோ, முளையையும் சாம்பிவிடாமல் இலையையும் கருவிடாமல் காத்து நிற்கப் பயன்படுபவை. பள்ளிக்குப் பறக்காத குஞ்சுகளுக்கும், பள்ளிக்குப் பறந்து செல்லும் பறவைகளுக்கும் பள்ளிப்பறவைகள் என்ற பாடலை எழுதியுள்ளது சிறப்பிற்குரியது.

**குழந்தை இங்கே வா!**

**கொஞ்சி முத்தம் தா!**

**பாலுஞ்சோறு உண்ணு!**

**பத்து வரையில் எண்ணு!**

**அ ஆ இ ஈ என்றே**

**அப்பா வந்தால் சொல்லு!**

**பட்டுச் சட்டை தைப்பார்வ!**

**பதக்கம் வாங்கி வைப்பார்!**

**முத்துப் பல்லைக் காட்டு!**

**முன்னங் கையை நீட்டு!**

**சோற்றை வாயில் போடு!**

**சுவையாய்ப் பாடி ஆடு!**

என்று அமைந்து குழந்தைகளின் செயல்களான முத்தும் தருவது, பால்சோறு உண்ணுவது, ஒன்று, இரண்டு என்னும் எண் வரிசை அறிமுகம். அகரவரிவை அறிமுகம், பட்டாடை அணிதல் பல்காட்டி நகைப்பது என்று இவற்றை ஒரே கோர்வைப்படத் தொடர்புப்படுத்திப் பாடியுள்ளமை அவரின் தாயுள்ளம் காட்டும் பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழ்க்குழந்தைகள் நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் வளரவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர். எனவே அறிவுரை சொல்லும் போக்கில் சில பாடல்களை அமைத்துள்ளார்.

## திருக்குறள் பற்றிக் கூறும் செய்திகள்:

**பெரிய வர்க்குப் பெரிய நூல்!**

**சிறிய வர்க்கோர் அரியநூல்!**

**உரிய வர்க்கும் உரியநூல்!**

**உலகில் யார்க்கும் உயர்ந்த நூல்!**

என்று திருக்குறளை குறிப்பிடுகிறார். கல்வி, சொல்வன்மை, பணிவு, விருந்து, பொறையுடைமை, தெரிந்து செயல்வகை, ஒழுக்கமுடைமை என்னும் பத்து அதிகாரங்களின் செய்திகளைச் சுருக்கமாக

**கற்க! கற்க! கற்க!**

**கற்பன வற்றைக் கற்ற வழியில்**

**நிற்க! நிற்க! நிற்க!**

**சொல்க! சொல்க! சொல்க!**

**சொல்லுஞ் சொல்லால் மற்றவர் சொல்லை**

**வெல்க! வெல்க! வெல்க!**

என்று பாடியுள்ளமை அவர்தம் திருக்குறள் பற்றைக் காட்டுகிறது.

## பெருஞ்சித்திரனாரின் பாடல்களில் உள்ள நுட்பங்கள்:

பெருஞ்சித்திரனார் தம் பாடல்கள் சிறப்புடன் அமையப் பல்வேறு நுட்பங்களைப் பயன்படுத்தியுள்ளார். உவமை காட்டல், வினாவிடை அமைப்பில் தருவது, உரையாடல் முறை, கதைசொல்லி விளக்கல், கும்மி, காவடிசிந்து அமைப்புகளைப் பயன்படுத்தல் என்ற முறைகளைப் பயன்படுத்தித் தம் மழலைப்பாடல்களை உருவாக்கியுள்ளார். அன்னையின் சிறப்பை வினாவிடை அமைப்பில் பாவலரேறு சிறப்பாகப் பாடியுள்ளார். அவ்வாறு பாடும் பொழுது அழகிய உவமைகளைப் பயன்படுத்துவது அவரின் இயல்பாகும். மேலும் வினாவிடை அமைப்பில் செய்திகளைச் சொல்லும்பொழுது குழந்தைகள் விரும்பிக் கேட்கும் பாடல் வெற்றிபெறும் மழலையுள்ளம் ரொண்ட மழலையுணர்வு புரிந்த பெருஞ்சித்திரனார் இவ்வுத்தியை அன்னை என்னும் தலைப்பில் பாடியுள்ள பாடலில் பயன்படுத்தியுள்ளார்.

## வினா விடை அமைப்பு:

**உன்னைக்கொண்டு வந்தே, இவ்**

**உலகில் விட்டது யார் சொல்?**

**அன்னை! அன்னை! அன்னை!-என்**

**அன்னை! அன்னை! அன்னை!**

**கண்ணைப்போல உன்னையே**

**காத்து வருவது யார் சொல்?**

**அன்னை! அன்னை! அன்னை!-என்**

**அன்னை! அன்னை! அன்னை!**

பெருஞ்சித்திரனார் வினாவிடை அமைப்பைப் பயன்படுத்தியுள்ளார்.

**உவமை:**

பெருஞ்சித்திரனார் அழகிய உவமைகளைப் பயன்படுத்தியுள்ளார். சிறுவர்பாடல்களில் உவமைகள் உறுத்தாமல் இருக்க வேண்டும். அவ்வுமையும் காட்சிப்புரிதலுக்குத் துணை செய்ய வேண்டும். தம் கற்பனையைக் காட்டுவதைவிட மழலை நெஞ்சம் காட்சியைப் புரிந்துகொள்ளத்தக்க எளிய உவமைகளைப் பெருஞ்சித்திரனார் பயன்படுத்தியுள்ளார்.

**'கண்ணைப் போல உன்னையே**

**காத்துவருவது யார்சொல்?' எனவும்**

**'எண்ணெய் இட்ட விளக்குப்போல்**

**இரவில் காத்தது யார்சொல்?'**

எனவும் வரும் பாடலடிகள் இதனைக் காட்டும்.

உரையாடும் அமைப்பிலும் பல பாடல்கள் பற்றிப்பறவைகள் நூலில் இடம்பெற்றுள்ளன. குடையும், செருப்பும், சிற்றெரும்பு, உடல் உறுப்புக்களின் சண்டை என்னும் தலைப்பில் வரைந்துள்ள பாடல்கள் இதற்குச் சான்றாகும்.

**உடல் உறுப்பு:**

உரையாடல் அமைப்பில் உடல் உறுப்புகள் ஒன்றையொன்று சண்டையிட்டுக்கொள்ளுவது போன்ற பெருஞ்சித்திரனாரின் பாடல் சிறந்த பாடலாகும். உடல் உறுப்புகள் பேச முடியுமா? என வினவிக் கேட்க முடியாதபடி குழந்தைகளின் உள்ளத்தில் மகிழ்ச்சியுண்டாகும்படி இப்பாடலை எழுதியுள்ளார். ஒவ்வொரு உறுப்புகளும் தாமே பெரியவர் என்று வாதிடுவதாக இப்பாடல் உள்ளது. ஒவ்வொரு உறுப்புகளும் தாமே பெரியவர் என்று வாதிடுவதாக எடுத்துரைப்பதாக இப்பாடல் உள்ள. அவ்வகையில் கால், கை, கண், வாய், மூக்கு, மூளை ஆகியன தாமே பெருமைகளை நிலைநாட்ட முனைந்து தொடர்ந்து குரல்கொடுத்தன என்று சுவைப்பட எழுதும் ஆசிரியர் கடைசியாகக் கற்பனையின் விளிம்பிற்கே சென்று பாட்டைப் பின்வருமாறு சுவையுடையதாக்கியுள்ளார்.

**கால் கை தளர்ந்தது! வறண்டது வாய்!**

**கண் இருண்டது! உயிர் திணறியது!**

**மூளை கலங்கும் வகையாக**

**மூண்டது தீப்பசி வயிற்றுள்ளே!**

**பசியால் வயிறு பேசியது;**

**'பசி' எனக் கேட்டால் அன்போடு**

**'புசி' என்பானே பெரியவனாம்!**

**'போ' என்பானே சிறியவனாம்!**

என உடல் உறுப்புகளைப் பற்றி பேசியுள்ளார்.

## அறிவியல் செய்தி:

அறிவியல் செய்திகளை எளியநடையில் படிப்பவர் உள்ளம் கொள்ளும் வகையில் பாடுவதில் பெருஞ்சித்திரனார் வல்லவர். 'நிலவில் மாந்தர்' மாந்தர் என்னும் தலைப்பில் இவர் வரைந்த பாடல் குறிக்கத்தக்க ஒன்றாகும். பெரிய, விரிந்த செய்திகளை எளிய சொற்களைக்கொண்டு நீரோட்டமாகச் சொல்லும் போக்கைப் பின்வரும் பாடலில் காணலாம்.

**மாந்தர் மூவர் பறந்தனர்**

**வானம் நோக்கிச் சென்றனர்**

**காந்தப் பரப்பைக் கடந்தனர்;**

**கவின்நிலாவில் குதித்தனர்! ....**

**குதித்து நடந்து சென்றனர்,**

**குனிந்து நிமிர்ந்து பார்த்தனர்;**

**புதிய தரையில் உலவினர்!**

**புகைப்படங்கள் பிடித்தனர்!**

**காற்றில் லாத பைகளில்**

**கல்லும் மண்ணும் நிரப்பினர்!**

**வேற்றோர் உலகத் தரையிலே**

**வெற்றிக் கொடியை நாட்டினர்!....**

**வானில் பறந்த மூவரும்**

**வந்து கடலில் குதித்தனர்!**

**நானும் நீயும் இருக்கிறோம்;**

**நாட்டுக்கென்ன செய்கிறோம்?**

நிலவில் கால் பதித்த மாந்தனின் செயல்களை குறிப்பிடுகிறார்.

## தமிழ்ப்பற்று:

பள்ளி செல்லும் பருவம் கொண்ட மழலைச் செல்வங்களுக்குப் பயன்படும் வண்ணம் பள்ளிப்பறவையின் இரண்டாம் பகுதியில் அமைந்துள்ள பாடல்கள் உள்ளன. பெருஞ்சித்திரனார் தமிழ்மொழி, இனம், நாடு காக்கும் இளைஞர்களுக்குப் பயன்படும் வண்ணம் இப்பாடல்களைப் புனைந்துள்ளார். பல்வேறு சூழல்களில் எழுதப் பெற்றுத் தொகுக்கப்பட்டாலும் இப்பாடல்களுக்கு இடையே ஓர் ஒற்றுமை உணர்வு ஊடு பாவாக உள்ளமை புலனாகின்றது. உணர்வற்றுத் தூங்கும் தமிழினத்தை அடித்து எழுப்பும்வண்ணம் ‘எழு தம்பி’ என்னும் பாடலைப் பாடியுள்ளார். இப்பாடலில் இதுவரை அமைதியாக இருந்தது போதும் எனவும் தமிழ்நலம் காக்க எழுக எனவும் வேண்டுகிறார்.

அவ்வாறு தட்டியெழுப்பும் பாடலில் பழம்பெருமையைப் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். தமிழர்கள் உணர்வுபெற அவர்தம் பண்டைய நூல்கள் கற்கப்பட வேண்டும் என்பது பெருஞ்சித்திரனாரின் வேட்கை. இதுவரை பயனற்ற வெட்டிப் பேச்சிலும் வீண் ஆரவாரச் செயல்களிலும் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் அறிவியல், விண்ணியல் துறைகளில் கவனம் செலுத்தவேண்டும் எனவும் சாதிவேறுபாடுகள் கூடாது எனவும் கண்டிக்கின்றார். சாதிய வேறுபாடுகளால் தமிழினம் சிதைந்ததை நினைவூட்டித் தமிழ் மக்களை ஒன்றுகூட்டி - வழிகாட்டித் தமிழனத்திற்குத் தலைமை ஏற்கும்படி இளைஞர்களை வேண்டுகிறார்.

பள்ளிப்பறவைகள் நூலில் பெருஞ்சித்திரனார் புகழ்பெற்ற தமிழ்த்தாய் வாழ்த்துப்பாடல் இடம்பெற்றுள்ளது. தமிழைப் பல்வேறு அடைமொழிகளில் விளித்துப் போற்றும் பாவலரேறு அவர்கள் பண்டைய வரலாற்றுப் பெருமைகளை எடுத்துரைக்கிறார். கடற்கோளுக்கு முந்தியிருந்த தமிழக நிலையினை, தமிழ் இலக்கிய செழுமையை,

**அன்னை மொழியே!**

**அழகார்ந்த செந்தமிழே!**

**முன்னைக்கும் முன்னை**

**முகிழ்த்த நறுங்கனியே!**

**கன்னிக் குமரிக்**

**கடல்கொண்ட நாட்டிடையில்**

**மன்னி அரசிருந்த**

**மண்ணுலகப் பேரரசே!....**

எனத் தொடங்கும் இப்பாடல் தமிழ்த்தாய் வாழ்த்தாகக் கொண்டு ஒவ்வொரு மேடையிலும் போற்றிப் பாடும் பெருமைக்கு உரியதாக உள்ளது.

தமிழ்க்கும்பி என்னும் தலைப்பில் கும்மியமைப்பில் பெருங்சித்திரனார் தமிழ்ச் சிறப்பைப் பெண்கள் கும்மியடித்துப் பாடுவதாகப் பாடியுள்ளார். இதில் தமிழின் தொன்மைச் சிறப்பு, இலக்கணச்சிறப்பு, அறநூல் சிறப்பு, காப்பியச் சிறப்பு இவற்றைப் பெண்கள் பாடுவதாகப் பாடப்பட்டுள்ளது.

பறவை, விலங்குகளைக் காட்டிப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் மாணவர்களுக்கு நற்பண்புகளை ஊட்டும்படி பல பாடல்களை இயற்றியுள்ளார். பறவை, விலங்குகளைப் பார் என்னும் தலைப்பில் எழுதிய பாடலில் ஒவ்வொரு விலங்குகள், பறவைகளிடம் இருக்கம் நற்பண்புகளையும் தீய பண்புகளையும் நினைவூட்டிப் பாடுகிறார். நல்லவற்றை எடுத்துக்கொண்டு அல்லவற்றை விடுக்கவேண்டும் என்கிறார். இப்பாடலில் அழகிய கற்பனை நயமும் நுண்ணோக்கு உள்ளமும் உலகியல் அறிவும் வெளிப்பட்டு நிற்கின்றன.

தமிழ்மொழியின் சிறப்பினைப் பலபடப் புகழ்ந்து பேசும் பெருஞ்சித்திரனார் மாணவர்கள் ஆங்கில மொழியையும் கற்கவேண்டும் என்கின்றார். தமிழும் ஆங்கிலமும் தவறாது கற்பாய் எனத் தலைப்பிட்டு எழுதிய பாடலில்,

**‘ஆங்கில மொழியால் அறிவியல் தேரலாம்**

**வீங்குநீர் உலகில் யாங்கணும் உலவலாம்’**

எனப்பாடுவதால் இதனை அறியலாம்.

எந்த நூல்களைப் படிக்கவேண்டும் எவர் பேச்சைக் கேட்கவேண்டும் என்று எச்சரிக்கை செய்து பாடியுள்ளார். உலகில் காணப்படும் போலிகளை அடையாளம் கண்டு உண்மையின் பெருமையை இப்பாடலில் உரக்கப் பாடியுள்ளார். பள்ளிப் பிள்ளைகளுக்குப் பயன்படும் நூலாக இது அமைவதோடு நில்லாமல் பல்வே மெய்ம்மவியல் வரிகளும் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

**‘தேறியோர் யாவரும் திறலோர் அல்லர்;**

**தோற்றோர் யாவரும் அறிவிலார் அல்லர்’**

**‘விடியப் படித்தவன் வெற்றியைப் பெற்றான்**

**விடிந்தும் தூங்கியோன் தேர்வினில் விழித்தான்’**

**‘வென்றார் யாவரும் செருக்கவும் வேண்டா**

**தோற்றார் யாவரும் துவளவும் வேண்டா’**

தமிழ் உணர்வூட்டும் பாடல்களைப் பல்லாயிரக்கணக்கில் படைத்த பெருஞ்சித்திரனார் பள்ளிப்பிள்ளைகள் பயன்பெறும் வண்ணமும் பல்வேறு பாடல்களைப் படைத்துள்ளார்.

# கானல் வரியா? கண்ணீர் வரியா?

இக்கால இலக்கிய வளர்ச்சியில் திறனாய்வும் ஓர் இலக்கிய வகையாகக் கொள்ளப்படுகிறது. இவ்வகையில் பாவலர் மணி ஆ.பழனி என்பார் எழுதிய 'கானல் வரியா? கண்ணீர் வரியா?' பாடமாக அமைக்கப்பட்டுள்ளது. திறனாய்வு நுட்பமாகச் செய்யப்பட்டுள்ளது. நூலைப் படிக்க தேவையில்லாதவாறு பாடம் விளக்கமாக எழுதப்பட்டுள்ளது.

## கோவலன் இயல்பு

### முன்னுரை:

ஆராய்ச்சி என்பது ஒரு கைவிளக்கு போகப் போகத்தான் அது வழிகாட்டிக் கொண்டே செல்லும். முதலேயே அனைத்தும் புலப்பட்டு விடாது என்பது ஆய்வுத்துறையினர். பாவலர் மணி ஆ.பழனி அவர்கள் கானல் வரி எனச் சிலம்பில் வரும் கருத்துச் சுரங்கத்திற்கு, இந்நூலை அத்தகையதொரு கைவிளக்காகப் படைத்துள்ளார். படிப்படியாக விவாதப் போக்கில் அமைந்துள்ள இவ் ஆய்வுரை, இதுவரைப் புலனாகாதிருந்த பல உண்மைகளைப் புலப்படுத்த முயல்கிறது.

### 1. சூழலும் இயல்பும்

#### கோவலனின் சூழல்

கோவலன் புகார் நகரத்தில் பெருவணிகன் மாசாத்துவானின் ஒதே மகன். கலைகளின் கரை கண்டவன்; இளமையும் அழகும் ஒருங்கு கூடிய தோற்றப் பொ-வினன்; ஈடில்லாச் செல்வ வளம், அளவிலாக் கலை உணர்வு, முருகனை ஒத்த அழகு, ஒரே மகன் என்ற மதர்ப்பு ஆகிய இந்நான்கும் ஒன்று கூடினால் ஒருவன் என்ன ஆவான்? என்ன ஆவான் கோவலன் ஆவான் என்று சொல்லத்தக்க அளவுக்குக் காவிரிப் பூம்பட்டினம் களியாட்டக் களமாக அவனுக்கு இருந்தது. செல்வர் இல்லத்துப் பிள்ளைகளும், குரல்வாய்ப் பாணரும், நகரப் பரத்தரும், நகையாடிச் சங்கமிக்கும் கடலாகப் பூம்புகார் விளங்கியுள்ளது. பரத்தையர் வாழும் தெருக்களில் இரவு என்பதே இல்லை. அங்கே மன்மதனின் ஆணைச்சக்கரம் வீரோடு சுழன்று கொண்டிருந்தது.

## வண்டு மரபினன் கோவலன்

கலையும், காமமும் கைகோத்துக்கிடந்த அத்தெருக்களிலே, அலையில் துரும்புப் போலப் புகார் நகரத்து இளைஞர்கள் தன்னிலை இழந்து தடுமாறிக் கொண்டிருந்தார்கள். அங்கே வட்டமிட்டுத் திரியும் வண்டாகக் கோவலனின் அன்றாட நிகழ்ச்சிகள் எவ்வாறு அமைந்திருந்தன? "முல்லை, மல்-கை, மயிலை, குவளை, செங்கழுநீர் இவற்றால் தொடுக்கப்பட்ட பிணையளைச் சூடித் தன்னழகக்கு மேலும் அழகேற்றிக் கொள்கிறான். காமத்தையே கள்ளாக உண்டு களிக்கின்றான்; இனிய பொழ-லே ஆட்டயர்கின்றான் (புணர்ந்து மகிழ்கின்றான்); பூக்கள் ம-ந்த இனிய மனம் நிரம்பிய சூழ-ல், அகில், சந்தனம் ஆகிய இவற்றின் மணம் சிறக்கப் பாணரோடும் கூத்தரோடும், காமக் குறிப்புள்ள மொழிகளைப் பேசித் திளைத்து எங்கும் சுற்றித் திரியும் மரபை உடையவனாக இருக்கின்றான் கோவலன் என்று கட்டாயப்படுகிறது. மரபு என்பது என்ன? மாறா நிலையையுடையது; மீற முடியாதது; இங்கே கோவலன் எத்தகைய மீற முடியாத மரபைக் கொண்டிருக்கின்றான் பார்த்தீர்களா?

## முரண்பாடுகள் கொண்டவன் கோவலன்:

கோவலன் முரண்பாடுகளின் மூடையாக விளங்குவதனைக் கற்பவர்கள் அறிவார்கள். உயரிய பின்பற்றத்தக்க குணங்களும் அவனிடம் உள்ளன. உதறித் தற்றி வெறுக்கத்தக்க குணங்களும் அவனிடம் உள்ளன. அதனால்தான் அவன் முரண்பாடுகளின் சங்கமமாக விளங்குகின்றான் என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார். உயரிய குணுங்களைக் குறிப்பிடும்பொழுது இளங்கோவடிகள் வெளிப்படையாக விரித்தோதுகிறார். இழிந்த குணங்களை வெளிப்படையாக எடுத்துக்காட்டாக இலைமறைகாயாக எடுத்தோதுகின்றார். இந்த நுணுக்கத்தை மனத்துட் கொண்டு கோவ-ன் குணமாண்பைக் காணவேண்டும்.

## 2. பா-யல் வேட்கை:

## அடங்காக் காம உணர்வினள்:

ஏனைய துறைகளில் அவனுக்குப் போதுமென்ற மனம் இருந்திருக்கலாம். ஆனால் பெண்ணோடு ஆடிப்பெறும் இன்பத்தில் அவன் போதாது என்று கூறும் இயல்புடையவனாகவே உள்ளான். 'தொலையாத இன்பமெலாம் துன்னினானர் மன்மேல் நிலையாமை கண்டவர் போல்' என்று கூறும் மொழிகள் நூற்றுக்கு நூறு உண்மை மொழிகளே. இதனை வேறொரு வாய்பாட்டில் கூறுவது என்றால், 'அவசரப்பட்டுத் துய்க்கத்

துடிப்பவன்' எனலாம். கோவலனின் அவசரப்படும் காம உணர்வு உடையவன் மட்டுமல்லன், அடங்காக் காம உணர்வும் உடையவன் ஆவான்.

## பெருங்காமத்தன்

கோவலன் அடங்காப் பெருங்காமத்தன் என்பதனைக் கண்ணகியோடு வாழ்ந்த காலத்திலும் அறிய முடிகிறது. நிலவுப் பயன் கொள்ளும் நெடுநிலை முற்றத்தில் கோவலனும், மாதவியும் கூடியிருந்ததனை, இளங்கோ,

"**கலவியும் புலவியும் காதலற்களித்து**" என்றும்

கடலாடுகாதையுள்,

"கூடலும் ஊடலும் கோவற்களித்து" என்றும் காட்டுகின்றார். இத்தொடர்களில் "புலவியும் கலவியும்", "ஊடலும் கூடலும்" என முறையாகக் கூறாது மாற்றிக் கூறியுள்ளார்.

"**ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்**
**ஊடியார்பெற்ற பயன்**"

என்பதன்றோ வள்ளுவர் வாக்கு, முறையான புணர்ச்சியாக இருப்பின், ஒத்த உணர்ச்சியுடைய தலைமக்களாக இருப்பின், குறளில் கூறிய வண்ணம் ஊடல் முன்னும், புணர்தல் பின்னுமாகத் தான் வந்திருக்கம். அடிகள் முறைமாற்றிக் கூறியிருப்பதனை எண்ணினால், கண்ணகி, மாதவி ஆகிய இருவரிடத்துமே அவன் உணர்ச்சி யொத்தவனாக இல்லை என்றே எண்ண வேண்டியுள்ளது. இத்தொடர்களுக்கு நேரே பொருள் கூறினால் முத-ற் கூடுதலும், பின்னர் ஊடுதலும், ஊடல் உணர்ந்து அதன் பின்னர்க்கூடுதலும் என ஒரே நாளில் பலமுறை கூடி இன்புறும் பெருங்காமத்தனாகக் கோவலன் இருந்தான் என்றுதான் கூற வேண்டும்.

## தீராக் காதலன்

கண்ணகியைக் கூடுவதற்கு முன்னர் அவள் உறுப்பு நலன்களைப் பாராட்டினால் அது இயல்பானது. கூடி மகிழ்ந்த பின்னர், ஏன் உறுப்பு அழகையே பாராட்ட வேண்டும்; மீண்டும் கூடுவதற்குத்தான் இங்கேயும் கூட உறுப்புப் பாராட்டல் முன்னும், தாரும் மாலையும் மயங்குதல் பின்னுமாகக் கூறாமல் முறைமாற்றி அமைத்த அடிகளின் திறத்தினை அறிய வேண்டும்.

"தீராக் காத-ன் திருமுகம் நோக்கி" குறியாக் கட்டுரை கூறியதாக இளங்கோ கூறுகின்றார். அவனுடைய காதல் எத்தகையது? தீராக்காதல், மயங்கிய பின்னரும் தீராக் காதல், எனவேதான் மீண்டும் உறுப்புக்களைப் பாராட்டிப் பேசத் தொடங்குகின்றான்.

இதனை வெளிப்படுத்தவே, அடிகள் 'தீராக்காத-ன்' என்று குறிப்பிடுகின்றார். இவற்றி-ருந்து நாம் கோவலனைப் பற்றி அறிவது என்ன? கண்டதும் கூட வேண்டும். ஊடல் கொண்டு மீண்டும் கூட வேண்டும் என்ற பா-யல் வேட்கை மிகுந்தவன் என்பதைத் தான்.

## 3. கோவலன் பரத்தமை

எல்லை கடந்த புணர்ச்சி வேட்கை தான் கோவலன் கண்ணகியைப் பிரிந்து மாதவியை வந்து அடைந்ததற்கான காரணம் போலும். கண்ணகி மாதவி ஆகிய இருவரோடு மட்டுமே உடல் உறவுடையவன் என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாத அளவிற்கு அவன் வாழ்க்கை அமைந்துள்ளது.

### மலய மாருதம் போன்றாள்

கோவலன் சுற்றித் திரிவது போல மலயமாருதம் சுற்றித் திரிந்தது என்று இளங்கோ சொல்வதனைச் சிந்தித்துப் பார்த்தால் அவன் பரத்தமை வாழ்வு பளிச்செனத் துலங்கும். காற்று நுழையாத வீடுகள் எங்காவது உண்டா? இல்லை கோவலன் காலடி படாத பரத்தையர் வீடுகள் எங்காவது உண்டா? அதுவும் இல்லை. காற்றுப்போல எல்லா வீடுகளிலும் நுழைந்து ஆண்டுறையும் மகளிரை எல்லாம் தழுவித் திரிந்தவன் என்று கொள்ளுமாறு அமைந்துள்ளது.

### காலை வருபவன்:

இன்னும் கோவலனுடைய காமத்தீயின் வெப்பக்கடுமையை மற்றொரு சான்றும் எடுத்துக் காட்டுகிறது. கானல் வரிப்பாடலுக்குப் பின் பிரிந்து சென்ற கோவலனுக்கு முடங்கல் ஒன்றை வயந்தமாலையிடம் கொடுத்தனுப்புகிறாள் மாதவி கோவலன் இம்முடங்கலை மறுத்து செய்தியை வயந்த மாலை கூறியபோது

**"மாலை வாரார் ஆயினும் மாணிழை**
**காலை காண்குவம்"**

என்று மாதவி நம்பிக்கையோடு கூறுகிறாள். அவனுக்குப் புணர்ச்சியில் உள்ள மிதமிஞ்சிய விருப்பத்தை அறிந்த நம்பிக்கையே அதற்குக் காரணம். அவன் பலவீனத்தை அறிந்ததால்தான், அவள், "மாலை வாரார் ஆயினும் காலை காண்குவம்" என்கிறாள்.

### உணர்ச்சித் தூண்டல் உடையோன்:

மாதவி அந்தக் கடிதத்தை எப்படி எழுதினாள்? என்ன எழுதினாள்? தாழை மட-ல் பித்திகை முகையால், செம்பஞ்சுக் குழம்பு கொண்டு எழுதுகிறாள். உயிர்களை எல்லாம்

இன்பத்தில் ஆழ்த்தும் இளவேனில் இளவரசனாக உள்ளான். அந்திப்போதிலே வரும் திங்கட் செல்வனும் தீமை செய்பவனாகவே உள்ளன். இக்காலத்தில் கூடி இருந்தவர்கள் சிறிது பிரிந்திருக்க நேரினும், பிரிந்தவர் தம் துணையை மறந்தாலும் மலர்க்கணைகளால் அவ்வுயிர்கள் பறிக்கப்படுவது வியப்பன்று. இதனை நீ அறிக என்கிறாள். இம்முடங்க-ல் அன்பு பற்றியோ, குழந்தை மணிமேகலை பறியோ, குடும்ப வாழ்வு பறிறியோ, பிரிந்தால் ஊர் என்ன பேசும் என்பது பற்றியோ அவள் ஏதும் கூறவில்லை. அவனுக்கு உணர்ச்சித் தூண்டலை உண்டாக்கவே இம்முடங்கல் எழுதப்படுகின்றது. இம்முடங்கலைப் படித்துப் பார்த்திருப்பானேயானால் கோவலன் ஓடோடி வந்திருப்பான். இந்நம்பிக்கை மாதவிக்கு இருந்ததனால் தான், "மாலை வாரர் ஆயினும் காலை காண்குவம்" என்கிறார்.

## வயந்தமாலையிடம் நயந்த காதலன்:

பரத்தையர் இல்லங்களில் இன்பம் நுகர்ந்தது மட்டுமன்று: தன் (மாதவி) இல்லத்தில் உறையும் பணிப்பெண்களையும் கோவலன் விட்டு வைப்பதில்லை போலும் என்று எண்ணுமாறுள்ளது. மாதவி வீட்டிலுள்ள வயந்த மாலையோடு தொடர்பு கொண்டொழுகியுள்ளான் கோவலன். இதனை ஒரு நிகழ்ச்சி நமக்கு எடுத்துக் காட்டுகிறன்றது.

கோவலன் கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் மதுரை செல்லும் வழியில் அவர்களை தனியிடத்தில் விட்டுவிட்டு நீர்வேட்கையால் ஒரு பொய்கை நோக்கிப் போகின்றான் கோவலன்; அக்காட்லுள்ள ஒரு வனசாரிணி, வயந்த மாலை வடிவம் கொண்டு வருகின்றாள்.

**"நயந்த காத-ன் நல்குவன் இலானை**
**வயந்தமாலை வடிவில் தோன்றி"**

என்கிறார் இளங்கோ. நயக்கும் காதலால் என்று எதிர் காலத்தால் கூறவில்லை. நயந்த காத-ன் என்று இறந்த காலத்தால் கூறுகின்றார். ஆகவே, முன்னரே வயந்தமாலையின்பால் கோவலன் நயந்த காதலை உடையவன் எனத் தெரிகின்றது.

## அரண் செய்யும் மறு காரணம்

மற்றொரு செய்தியும் இதனை உறுதி செய்கின்றது. 'மாதவி என்னை விலக்கிவிட்டாள், நின் பணிமொழி யாது' என்று வினவுகின்றாள் வயந்தமாலை வடிவி-ருக்கும் வனசாரிணி, கோவலனுக்கும், வயந்தமாலைக்கும் உடல் தொடர்பான உறவேதும் இல்லையென்றால் கோவலன் என்ன கூறியிருப்பான்? 'வயந்தமாலை உனக்கு என்ன

நேர்ந்தது. ஏன் தகாத மொழிகளில் பேசுகின்றாய் நீ இவ்வாறு கூறுதல் முறையன்று' என்று கூறியிருக்க வேண்டும் ஆனால் கோவலன் அவ்வாறு கூறவில்லை.

### என்னையும் துறந்தான் - வயந்தமாலைக் கூற்று:

இன்னும், இவ்வனதேவதை வேறொரு செய்தியையும் எடுத்து மொழிகன்றது; அவன் அடியில் வீழ்ந்து அழுது புலம்பிய அவ்வனதேவதை

**"வாச மாலையின் எழுதிய மாற்றம்**
**தீதிலேன்; பிழைமொழி செப்பினை யாத-ன்**
**கோவலன் செய்தான் கொடுமை"**

என்று மாதவி கூறியதாகவும் பின்னர் மயங்கி, அழுது, முத்து மாலையை அறத்தெறிந்து பிறகு, 'துணியுற்றென்னையும் துறந்தான்' என்றும் கூறுகின்றது.

நான் தீமையற்ற சொற்களைத் தான் முடங்க-ல் எழுதியிருந்தேன். நீ தவறான சொற்களைக் கோவலனிடம் கூறியதால்தான், கோவலன் வராது போய்விட்டான் என்று மாதவி கூறியதாக வயந்தமாலை வடிவி-ருக்கும் வனதேவதை கூறியதைப் பார்த்தால், உண்மை பளிச்சென்று புரியும். 'தவறான சொற்களைக் கூறினாய்' என்றும் மாதவி கூறியதாக வனசாரணி கூறியதால், கோவலனும், வயந்தமாலையும் தனியே சந்திக்கும்போது, தவறான செய்திகளைக் கூறுவது உண்டு என்பது தெளிவாகின்றது. மாதவி சொல்லாத சொற்களை மாதவிக்குத் தெரியாமல் கோவலனிடம் அவள் ஏன் சொல்ல வேண்டும்? அவ்வாறு கூறுவதற்கு அமைந்த உறவு என்ன? உடலால் ஏற்பட்ட உறவல்லாமல் வேறு என்ன உறவு இருக்க முடியும்?

## 4. நகர் வலம் வந்த கோவலன்:

## உணர்ச்சிகள் கொந்தளிப்பில் முடிவெடுப்பவன்

புகார் நகரத்தில் கோவலன் ஆடாத ஆட்டம் இல்லை. கூடாத கூட்டமில்லை. மாதவியோடு அவனுக்கு மனமுறிவு அவன் வாழ்க்கையின் போக்கையே திருப்பி விடுகின்றது. அவன் மதுரை செல்ல முடிவெடுத்து விடுகிறான். இந்த முடிவு கூட ஆய்ந்து தெளிந்து எடுத்த முடிவு அன்று. உணர்ச்சிக் கொந்தளிப்பில் எடுத்த முடிவு தான். இதனைப் பெற்றோரிடமோ மனைவியிடமோ கலந்து முடிவு செய்யவில்லை. அப்படியானால் மதுரை செல்ல அவன் அவசரப்பட்டு ஏன் முடிவு எடுக்க வேண்டும்?

## தன் மன உறுதியில் நம்பிக்கை அற்றவன்

விடுதல் அறியா விருப்பத்தையுடை ய மாதவியைப் பிரிந்து ஒரு நாள் தாக்குப் பிடித்து விட்டான். மாதவி அனுப்பிய கடிதத்தை வாங்கிப் பார்த்தால் எங்கே தன் மனவ-மை குறைந்து போய்விடுமோ என்று அஞ்சி, அதனைக் கையில் வாங்காமலேயே மாதவியைப் பழித்துப் பேசி வயந்த மாலையை அனுப்பிவிடுகின்றான். இனி, மாதவி, தானே கோவலனை நேரிற்கண்டு தன்னை மன்னிக்குமாறு வேண்டலாம். அப்படி வேண்டினால், தன்னுடைய உறுதி தகர்ந்து போய்விடும் என்பதை அவன் அறிவான். ஆகவே, மாதவி தன்னைச் சந்திக்கும் முன்பே, புகாரை விட்டுப் போய்விட முடிவு செய்கின்றான். இதனால் தான் அன்று இரவே மதுரைக்குச் சென்றுவிட் அவசரக் கோல முடிவை எடுக்கின்றான். தன் மன உறுதியின் மீது தனக்கே நம்பிக்கை இல்லை என்பது தான் கோவலன் நிலை.

## கவுந்தி அடிகள் காணும் காமுகன்:

மதுரைக்குச் செல்லும் நீண்ட வழிநடைப் பயணத்தின்போது மாதவியோடும், மற்றவரோடும் வாழ்ந்த வாழ்க்கை பற்றிய செய்திகளைக் கூறினாலும் கூறி இருக்கலாம் அல்லது அவனோடு உரையாடிய காலத்தில் இந்த மறைகளை எல்லாம் கவுந்தியடிகள் உய்த்துணர்ந்தும் இருக்கலாம். எப்படியோ, கோவலன் காமத்தால் கெட்டழிந்தவன் என்பதைக் கவுந்தியடிகள் நன்றாகவே உணர்ந்துள்ளார் என்று தெரிகின்றது.

## கோவலனின் அந்தரங்க வாழக்கையும் அறிவுரையும்:

புறஞ்சேரியில் நெறியின் நீங்கியோர் நீர்மையேனாகி, நறுமலர் மேனி நடுங்க துயர் எய்த நடந்துவிட்டாள் என்று கோவலன் கூறியதும், கவுந்தியடிகள் ஒரு நீண்ட அறிவுரை கூறுகின்றார். அவ்வறிவுரையில் பல செய்திகள் கூறப்படுகின்றன. அவற்றுட் சில பகுதிகள், அவன் காமத்தால் கெட்டழிந்ததை அவர் அறிந்துள்ளார் என்பதைக் காட்டுகிறார்.

**"பிரிதல் துன்பமும், புணர்தல் துன்பமும்**
**உருவி லாளன் ஒறுக்கும் துன்பமும்**
**புரிகுழல் மாதர்ப் புணர்ந்தோர்க் கல்லது**
**ஒருதனி வாழ்க்கை உரவோர்க் கில்லை**
**பெண்டிரும் உண்டியும் இன்பமென் றுலகில்**
**கொண்டோர் உறூஉம் கொள்ளாத் துன்பம்**
**கண்டனர் ஆகிக் கடவுளர் வரைந்த**
**காமம் சார்பாக் காத-ல் உழந்து**

**ஏமம் சாரா இடும்பை எய்தினர்**

**இன்றே அல்லால் இறந்தோர் பலரால்”**

மேலே காட்டியுள்ள பாட-ல் வரும் சில பகுதிகள், கோவலனின் அந்தரங்க வாழ்க்கையைக் கவுந்தியடிகள் அறிந்திருத்தலைக் காட்டும்.

மதுரை நகருக்குச் சென்று வருகிறேன் என்று கோவலன் கூறியதும், கவுந்தியடிகள் 35 அடிகளில் நீண்ட அறிவுரை கூறுகின்றார். அந்த அறிவுரையில், அறத்தின் தன்மையும், வினையின் வ-மையும், காமத்தின் இயல்பும் காட்டப்படுகினற்ன. இம்மூன்றிலும், காமத்தின் குற்றமே மிகுதியாகவும், வ-யுறுத்தியும் கூறப்படுகின்றது. இத்தனை அறிவுரைகளையும் காதாரக் கேட்டுக் கொண்ட கோவலன், மதுரை நகருட் சென்று மிகுதியாக எதனைக் காணுகின்றான்?

## கோவலன் மதுரையில் காண்பன்

கடைகழி மகளிரின் களியாட்டங்களை, பதியிலாரின் இருபெரும் வீதிகளைப் பார்த்துச் செல்லுகின்றான். அருங்கலச் செப்பின் வாய் திறந்தது போல அமைந்திருந்தது அகமதிலுக்குள் நுழைந்தும் அவன் கண்ட முதற்காட்சி பொதுமகளிரின் புனலாட்டுக் காட்சிதான். பருவ காலங்களுக்கேற்ப உடையணிந்து, அப்பரத்தையா் ஆடும் ஆட்டம் விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது. பின்னர் வேனிற்காலக் கடை நாளில் அவர்களின் பொழுதுபோக்குக் காட்சிகள் தெளிவாக எடுத்து மொழியப்படுகின்றன. பின்னாப் பதியிலாரின் இரு பெரு வீதிகளின் இயல்பும் எடுத்தோதப்படுகின்றன. அங்கேயிருந்த பரத்தையரின் இல்லத்துள் அவன் நுழைந்து விடவில்லை தான்; என்றாவும் அவற்றைக் கண்டு செல்லுவதிலே ஒரு விருப்பம் அவனுக்கு இருந்திருக்கும் போதிலும், கவுந்தியடிகளின் 37 அடி அறிவுரைகளைக் கேட்ட பிறகு தான், கோவலன் மதுரையின் பொது மகளிா் பகுதிகளில் (89 அடிகளில்) சுற்றித் திரிகின்றான் என்றால் கோவலனின் காம விருப்பம் எத்தகையது என்பதை அறியலாம். வாழ்க்கையில் அடிபட்டு நொந்து போய் வந்திருப்பதாக அவன் கூறியதெல்லாம் உண்மைதான். ஆனால் பரத்தையரைப் பார்க்க நேர்ந்ததும், அவன் சலனப்பட்டு விடுகின்றான்.

## 5. ஊடலும் கோவலனும்:

## கோவலன் தான் ஊடினான்:

கோவலனுடைய பா-யல் வக்கிரம் பற்றிய இன்னொரு செய்தி இன்னும் வியப்பூட்டுகின்றது. ஊடல் தான் இன்பத்தை மிகுவிப்பதும்; ஊடலற்ற துய்ப்பு உப்புச் சப்பற்றது என்பார் திருவள்ளுவர். ஆனால் கோவலனுக்கு ஊடலே பிடிக்காது. மகளிர்

ஊடுவது அறவே அவனுக்குப் பிடிக்காது. அவன் வேண்டுமானால் ஊடுவான். அப்பொழுது அவள் ஊடலைத் தணித்துக் கூட வேண்டும். ஆனால், அவள் ஊடுருவதற்கு அவன் அனுமதிப்பது இல்லை என்று தெரிகிறது. இதனை கண்ணகி, மாதவி ஆகிய இருவரிடத்துமே அவன் கைக் கொண்டு வாழ்ந்தான் என்பது அறியப்படுகின்றது.

## கண்ணகியோடு ஊடல் இல்லை:

கண்ணகி கோவலன் வாழ்க்கையில் ஊடல் நிகழ்ந்ததாக அடிகள் எங்குமே கூறவில்லை. ஆனால் மாதவியுடன் வாழ்ந்த வாழ்வில் ஊடல் நிகழ்ச்சி இடம் பெறுகின்றது. கண்ணகியைத் திருமணம் செய்து கொண்ட அண்மைக்காலங்களில் அவன் இழுத்த இழுப்பிற்கு அவள் உடன்பட்டு நடந்திருக்க வேண்டும். ஆனால் நாளாக நாளாக,

**"அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்தலும் தொல்வோர் சிறப்பின்**
**விருந்தெதிர் கோடலும்"**

ஆகிய இல்லறக் கடமைகளால், கோவலன் நினைத்த போதெல்லாம் கூடிக்கலவிக்கு இயலாது போயிருக்கும். இன்பம் நுகரத் தடையிருக்குமானால் வருத்தம் கொள்வது கோவலன் இயல்பு. இந்த வருத்தம் ஊடலாக உருவெடுத்திருக்கலாம். கண்ணகி, அவள் ஊடலைத் தணிக்கம் முயற்சியில் ஈடுபடாது இல்லாறத் கடமைகளில் ஈடுபட்டிருப்பாள் போலும்.

## மாதவி ஊடினாள்:

மாதவிக்கு இல்லறக் கடமைகள் ஏதும் இல்லை ஆகவே, கோவலன் வேட்கைக்கு ஓரளவு ஈடு கொடுக்கிறாள். கோவலனை மிகத் தெளிவாகப் புரிந்து கொண்டவளும் அவள் தான், ஊடினால் ஓடிவிடுவான் என்பதை பட்டுத் தெளிந்தவள் அவள்.

**"நாகிள முத்தின் நகைநலம் காட்டி**
**வருகென வந்து போகெனப் போகிய**
**கடுநெடுங் கண்ணி காண்வரிக் கோலமும்"**

என்னும் பகுதி கோவலனும், மாதவியும் மகிழ்ச்சியாக வாழ்ந்த செய்தியைக் குறிக்கின்றது. அவன் வருக என்றழைத்தபோது வந்தாளாம்; போ எனச் சொன்னபோது போனாளாம். இப்படிக் கொஞ்சகாலம் கழிந்திருக்கும் போலும் விரைவில் மாதவியின் ஊடல் வருகிறது. வருக என வந்து, போ எனப் போகியவளாக அவள் நடவாமல், கிளி போன்ற இனிய மொழி பேசாமல் அன்னநடை நடவாமல், மயில் போன்ற சாயலைக் காட்டாமல் அனைத்தையும் மறைத்துக் கொண்டு ஊடினாள் என்கிறாள்.

**ஊடல் உணரவில்லையே:**

திருவள்ளுவர், 'ஊடியவரை உணராமை வாடிய வள்ளி முதலரிந்தற்று' என்பர். ஊடியவரின் ஊடலைத் தணிவித்துக் கூடாது செல்வது, நீரின்றி வாடிக் கிடக்கும் வள்ளிக் கொடியை அடியோடு அறுப்பது போன்றதாம், ஊட-ன் உச்சநிலையில் இருந்த மாதவியின் ஊடலைத் தணிக்காது, வள்ளிக்கொடியை முதலோரிவது போல, மாதவியின் அன்பாம் கொடியை அடியோடு அறுத்துச் செல்கின்றான். பின்னர்தான் மாதவிக்குப் புரிகின்றது கோவலன் கிளைகட்குத் தன்னுடைய துயரத்தை எல்லாம் எடுத்துக் கூறி அவனைத் தன்னிலத்திற்கு அழைத்து வருமாறு வேண்டினாள். மேலும் பலமுறை வேண்டியதன் பயனாக இடையாளரின் உதவியோடு கோவலன் மாதவியின் இல்லத்தை வந்தடைந்தான்.

**மாதவி ஊடுவதில்லை என முடிவு செய்தாள்:**

வாழ்க்கையில் ஒரேயொருமுறை கொண்ட ஊடல் மாதவியின் வாழ்க்கையையே நரகமாக்கிவிடும் போல் ஆகிவிட்டது. ஆகவே, அன்றே அவள் ஒரு முடிவிற்கு வந்து விட்டாள். "இனிமேல் இன்பத்தை மிகுவிக்கும் பொருட்டு கோவலனோடு ஊடுவதில்லை" என்பதே அது.

**"கூடலும் ஊடலும் கோவலற்களித்து"**

**"கலவியும் புலவியும் காதலற்களித்து"**

என்ற தொடர்களால் இதனை அறியலாம். கூடுகின்ற உரிமையையும் ஊடுகின்ற உரிஜமையையும் கோவலனுக்கே அளித்து விட்டாள்.

## 6. அறிமுகத்தில் ஒரு செய்தி:

## மகளிர் ஆயத்தில் கோவலன்:

குறையா உடற்பசி; இயல்பலா ஒழுக்கம், உள்ளவனே கோவலன் என்பதை அவனைத் தொடக்கத்தில் அறிமுகம் செய்யும் பொழுது சுட்டிக் காட்டி விடுகின்றனர் இளங்கோ.

**"மண்தேய்த்த புகழினாள், மதிமுக மடவார்தம்**

**பண்தேய்த்த மொழியினர் ஆயத்தப் பாராட்டி"**

கோவலனைச் சுற்றிலும் இளம்பெண்களின் கூட்டம் இருந்துக் கொண்டே இருக்கின்றது. அக்கூட்டம், அவனை எப்போதும் பாராட்டிக் கொண்டே இருந்தது. அவ்வாறு ஏத்திக் கூறுவதற்கு அவன் உரிமையுடையவனாக விளங்கினான். எப்பொழுதும் மகளிர் கூட்டத்தோடு கூற்றித்திரியும் இயல்புள்ளவன் கோவலன்.

## கட்டுப்பாடற்ற வாழக்கையன்:

திருமணத்திற்க முன்பே கட்டுப்பாடற்ற வாழ்க்கை வாழ்ந்திருக்கிறான் என்பது தெரிகின்றது. இப்படிச் சுறற்றித்திரிந்த சுதந்திரனை இல்லறம் என்ற கண்ணகியின் கட்டுக்குள்ளும் அடைக்க முடியவில்லை. கலைவாழ்வு என்ற மாதவியின் கட்டுக்குள்ளும் அடைக்க முடியவில்லை. ஆணுக்கு முதன்மையும், பெண்ணடிமைத் தனமும் மிகுந்த சமுதாயத்தில் கண்ணகிக்கு முதன்மை கொடுத்து முதலாவதாக அவளை அறிமுகப்படுத்துவது கூடக் கோவலனுடைய குறைபாடு கருதித் தான் போலும்.

## 7. சலம்புணர் கொள்கைச் சலதி:

## பழியை பிறர் மேல் சுமத்துபவன்:

சினம் வந்து விட்டால் எந்தப் பழியையும் யார் மீதும் சுமத்திவிட்டுத் தப்பித்துக் கொள்ளும் இயல்பினன் அவன். கானல் வரிப்பாடலுக்குப் பின் மாதவியை விட்டு வெளியேறி வந்தபோது இருந்த சிறுகோபம் நேரம் செல்லச் செல்ல அதிகமாகிக் கொண்டே போகின்றது. இந்நிலையில் மாதவியின் முடங்கலை வயந்தமாலை கொண்டு வருகின்றாள். மாதவியை மனம் போனவாறு பழித்துப் பேசி முடங்கலை வாங்கிக் கொள்ளாமலேயே திருப்பி அனுப்பி விடுகின்றான்.

## வறியவனானான்:

வயந்த மாலையைத் திருப்பியனுப்பிய பிறகு அவனுடைய சினம் இன்னும் வளர்ந்திருக்கும் போலும், கண்ணகியை நாடி வருகின்றான். வ்நதவன் கண்ணகியின் வாடிய மேனியைக் கண்டு வருத்தம் கொள்கிறான். அந்த வருத்தம் அவனுடைய சினத்தை மேலும் வளர்த்தது போலும்.

**"சலம்புணர் கொள்கைச் சலதியோ டாடிக்**
**குலம்தரு வான்பொருள் குன்றம் தொலைந்த**
**இலம்பாடு நாணுத்தரும் எனக்கு"**

என்று பேசுகின்றான். பொய்யையே மெய்யாகக் கொண்டொழுகும் அப்பொய் மகளோடு (மாதவி) ஆடியதனால், குலத்தினர் தொகுத்துத் தந்த பெருஞ்செல்வம் தொலைந்தது; இதனால் வந்த வறுமை எனக்கு நாணத்தைத் தருகின்றது என்கிறான். கோவலன் உண்மையில் மாவிக்காகவே எல்லாப் பொருளையும் செலவழித்தானா? இது உண்மையில்லை என்பதே பதில்.

## கோவலன் வறுமைக்கு மாதவி காரணமா?

ஒருவன் வறுமையடைவதற்க இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று பொருளீட்டாதிருப்பது. இன்னொன்று வருவாய்க்கு மேல் செலவு செய்து கொண்டே இருப்பது. கோவலன் பொருளீட்டினான் என்று இளங்கோ எங்குமே கூறவில்லை. பொருளீட்டாதவன் வறியனாவது ஒன்றும் புதுமையில்லை. ஆக இவன் வறுமையில் சரிபாதி பொருளீட்டாமையால் வந்தது என்பதே உண்மை. எஞ்சிய இன்னொரு பாதி வறுமை, செலவழித்துக் கொண்டே இருந்ததனால் வந்தது. செலவழித்ததனால் வந்த வறுமை முழுவதுமாவது மாதவியால் நிகழ்ந்ததா? அதையும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

## கோவலன் செய்த செலவுகள் பல:

1. கண்டேத்தும் செவ்வேள் என்று பாராட்டித் திரியும் ஒரு மகளிர்கூட்டம் அவனை எப்பொழுதும் சுற்றி வந்து கொண்டிருந்ததே, அக்கூட்டத்திற்கு இவன் செலவு செய்யாமல் இருந்திருப்பானோ?
2. நகையாடு ஆயத்தார், குரல்வாய்ப்பாணர், நகர மாந்தர் இவரோடெல்லாம் நாள்தோறும் கூற்றித் திரிபவன் கோவலன், இவன் மட்டும் அவர்களுக்கெல்லாம் பொருள் வழங்காதிருப்பின், மறுநாறே இவன் தன்னந்தனியாக ஆகியிருப்பான். அப்படியென்றால், அவர்களுக்காக அவன் எவ்வளவு பொருள் செலவு செய்திருப்பான்?
3. மணிமேகலை பிறந்த அணி மேகலையார் ஆயிரம் கணிகையர் மணிமேகலை எனப் பெயரிட்டு வாழ்த்தியபோது,

   **"மங்கலம் சந்தை மாதவி தன்னோடு**
   **செம்பொன் மாரி செங்கையின் பொழிந்தான்"**

மழை போல அல்லவா பொன்னைப் பொழிந்திருக்கிறான். அன்று எவ்வளவு பொருள் செலவாயிற்றோ? கீரியைக் கொன்ற பார்ப்பனியின் துயரத்தைத் தீர்ப்பதற்காகத் தானம் செய்துள்ளான். காடு சென்ற அவன் கணவனை அழைத்து வந்த தொலையாத பெரும் பொருளைக் கொடுத்தது, அவர்கள் வாழ்க்கையை வளப்படுத்தியுள்ளான். இதற்குச் செலவிடப்பட்ட தொகை எவ்வளவு?

பொய்க்காரி சொன்ன ஒருவனைப் பூதம் அறைந்து கொல்ல; அவனுடைய சுற்றத்தாரையம், அவர்களோடு தொடர்புடையவர்களையும் அழைத்து ஓராண்டுக்கு அல்ல, பல ஆண்டுகாலம் பாதுகாத்துள்ளான். பல ஆண்டுகாலம் சுற்றத்தாரையெல்லாம் புரக்க, எவ்வளவு செலவாயிற்றோ?

4. கோவலனுடைய இல்லம் மிகப்பெரிய வளமனை, ஏராளமாக ஏவலர்கள், பணிப்பெண்கள், காவலர்கள் என ஒரு பெரிய கூட்டமே அங்கு இருந்தது; இவை தவிரக் கோவலனின் நியாயமான வேறு பொருட் செலவுகள். இவை செலவென்றால், வறுமை வந்ததற்கான காரணங்களில் இவையும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியவை தாம்.
5. மாதவியின் பொருட்டும், அவளுடைய விருப்பங்களை நிறைவேற்ற வேண்டும் என்று வேட்கையினாலும் பொருட்செலவு நிகழ்ந்தே இருக்கும். அந்தச் செலவு மாதவியால் உண்டாக்கப்பட்டதா? கோவலனே விரும்பிச் செய்ததா? என்றால் கோவலனே விரும்பிச் செய்ததே ஆகும். ஏனெனில் மாதவி தன்னுடைய பெருஞ்செல்வத்தைப் போதியின் கீழ் மாதவர் முன் புண்ணியம் செய்தவள் ஆகிறாள். ஆகவே, செல்வத்தைப் பறிக்கும் எண்ணம் மாதவிக்கு இருந்திருக்க முடியாது.

### மாவிக்குச் செல்வம் தேவையில்லை:

மற்றும் ஒரு செய்தி மாதவி, பொருள் வருவாய்க்காகக் கோவலையே நம்பியிருக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் நாள்தோறும் ஆயிரத்தெட்டுக் கழஞ்சு பொன் வருவாயுடைய தலைக்கோல் அரிவை என்ற தகுதியையும் பெற்றவள். அவளுக்கே பெருஞ்செல்வம் இருக்கின்ற போது, கோவலனுடைய செல்வத்தைப் பறித்துக் கொள்ள வேண்டிய தேவையில்லை.

மாதவியைச் ‘சலம் புணர் கொள்கைச்சலதி’ என்று துணிந்து, அதனால் வந்த சினத்தினால் தான் வேறு வழிகளில் செலவு செய்து வறுமையுற்றதை எல்லாம் மாதவியின் தலையிலே சுமத்துகின்றான். எனவே சினம் வந்தால், தன் பழியையும் பிறர் மீது சுமத்தத் தயங்காத மனம் உடையவள் கோவலன் என்பது தெளிவாகும்.

### 8. பழம் பிறப்புச் செய்தி:

க-ங்கநாட்டில் சிங்கபுரம், கபிலபுரம் என்று இரண்டு நாடுகள். இரு நாட்டையும் தாயவேந்தர் இருவர் ஆண்டு வந்தனர். சிங்கபுரத்தை வசு என்பவனும், கபிலபுரத்தைக் குமரன் என்பவனும் ஆண்டு வந்தனர். இருவருக்கும் பகை மூளவே, போர் நிகழ்ந்தது. எனவே, இரு நாட்டிற்கும் இடையிலுள்ள ஆறு காவதப்பரப்பிற்கு யாரும் செல்வதில்லை.

கபிலபுரத்திலுள்ள சங்கமன் என்ற வாணிகன் பொருளீட்டும் பொருட்டு அணிகலன்கள் பல சுமந்து கொண்டு, தன் மனைவி நீ-யையும் உடனழைத்துக் கொண்டு, சிங்கபுரத்திற்குச் சென்றான். கடைவீதியில் சென்று பொருளை விற்க முயன்றான். அப்பொழுது அரச கருமம் செய்பவனாகிய பரதன் என்பவன் விரதம் நீங்கிய வெறுப்பினன்.

ஆத-ன் சங்கமனை அரசனிடம் அழைத்துச் சென்று, கபிலபுரத்து ஒற்றன் என்று பொய் சொல்லுகின்றான். இதனால் சங்கமன் கொலைத் தண்டனை அழைந்தான். கணவனை இழந்த நீ-, அழுது திரிந்து அவைந்தான். கணவனை இழந்த நீ-, அழுது திரிந்து பதினான்காம் நாள் ஒரு மலை மீது ஏறி நின்று எனக்கு இத்துன்பத்தைச் செய்வித்தோர் இத்துன்பத்தை அடைவார்கள் எனச் சொல்-ச் சாபமிட்டு மலைமீதிருந்து விழுந்து உயிர் துறந்தாள். பொய்ச் சொல்-ச் சங்கமனைக் கொல்வித்த பரதனே, இப்பிறப்பில் கோவலனாகப் பிறந்துள்ளான். நீ- இட்ட சாபத்தின்படி கோவலன் பொற் கொல்லனால் கொல்விக்கப்பட்டான் என்று பழைய சாப வரலாறு கூறுகிறது.

## அனுமானிக்கக் கூடியவை:

இப்பகுதிகள் விளக்கமாக அமையவில்லை. பரதன் சங்கமனுக்கும் கொலைத் தண்டனை வாங்கிக் கொடுக்க என்ன காரணம் என்பது விளக்கப்படவில்லை. பரதன் என்று குறிப்பிடப்படுவதனால் அவன் அரசகருமம் செய்பவனாகவும், வணிகனாகவும் இருந்திருப்பான் போலும். வணிகனாகிய பரதனிடம், அணிகலன்களை விற்கச் சங்கமன் வந்திருக்கலாம். வந்தவன், பகைநாட்டைச் சேர்ந்தவன் என்று பரதன் அறிந்திருக்கலாம். எனவே, அணிகலன்களைக் குறைந்த விலைக்குக் கேட்டிருக்கலாம். விலைக்குத்தர அவன் இசையாமையால், மன்னனிடம் சென்று இவன் ஒற்றன் எனக்கூறி, அவனுக்குக் கொலை தண்டனை பெற்றுக் கொடுத்திருக்கலாம். நாம் இதனை அனுமானித்துத் தான் அறிகிறோம்.

## விரதம் நீங்கிய வெறுப்பினன்:

பரதனின் குண இயல்பை விளக்கிக் காட்டும் தொடர் விரதம் நீங்கிய வெறுப்பினன் என்பது தான். விருப்பம் நிறைவேறாத போது வெறுப்பும், வெறுப்பு மிகும்பொழுது கொல்வித்தலும் பரதனின் புதுப்பிறவி எடுத்த கோவலனின் குண இயல்பு என்ன? தன் இன்ப நுகர்ச்சிக்குத்தடை ஏற்பட்ட பொழுது கண்ணகியைப் பிரிந்தான். மாதவி தன் விருப்பத்திற்கு மாறாக, ஊடல் கொண்ட போது அவளையும் பிரிந்தான். விருப்பமும், அவ்விருப்பம் நிறைவேறாத போது வெறுப்பும் கொண்ட நிலையில் கண்ணகி, மாதவி ஆகியோரைப் பிரிந்தவன் தான் கோவலன்.

பரதனுக்கு வெறுப்பு வந்தபோது சங்கமனைக் கொவித்தான். கோவலனுக்கு வெறுப்பு வந்தபோது, கண்ணகி மாதவி ஆகியோர் வாழ்வு கொல்லப்பட்டு விட்டது. சங்கமன் பரதனால் பிணமாக்கப்பட்டான். கண்ணகியும், மாதவியும் நடைப்பிணமாக்கப்பட்டனர். இது தான் வேறுபாடு.

## கோவலனின் இயல்புகளின் தொகுப்பு:

## கோவலனின் இயல்புகளை தொகுத்துக் காணலாம்.

1. கோவலன் மிகுந்த புணர்ச்சி வேட்கையன்.
2. திருமணத்திற்கு முன்பே கெட்டழிந்தவன்.
3. பரத்தையர் சேரியில் எப்பொழுதும் சுற்றித் திரிபவன்
4. வயந்தமாலை போன்ற பணிப்பெண்களிடத்தும் உறவுடையவன்
5. காமத்தைத் தூண்டும் மாலைப்பொழுது வந்தால், மனம் மயங்கிச் சிறுமையற்றத் தளருபவன்
6. கவுந்தியடிகள் போன்றோர் கூறும் அறிவுரையையும் புறக்கணிக்கும் அளவிற்குக் காமச்சிறுமையுடையவன்
7. கூடுதற்குத் தடையான ஊடலை வெறுப்பவன்.
8. ஊடலைத் தணிக்காது வெறுத் தொக்கும் இயல்பினன்.
9. வெறுப்பு வந்தால், எப்பழியையும் யார் மீதும் சுமத்தத் தயங்காதவன்
10. பழம் பிறப்பும், இப்பிறப்பும் எடுத்துக்காட்டும் விருப்புக்குத் தடை வந்தால் வெறுக்கம் இயல்புடைமை. எல்லை மீறிய விருப்பம் ; அதற்குத் தடைவந்த போது எல்லை மீறிய வெறுப்பு இதுதான் கோவலனின் குணப்பிழிவு.

## 9. கால்வரிக்கு முந்தைய மனநிலை:

## இந்திரவிழாவின் போது வாய்ப்பற்ற கோவலன்:

கானல்வரி தொடங்குமுன், கோவலன் மனநிலை எவ்வாறிந்தது? இந்திரவிழா இருபத்தெட்டு நாட்கள் நடந்தோறும் வழக்கினை உடையது. நாள்தோறும் அவன் நடனம் நடந்துள்ளதாகக் கொள்வதில் தவறில்லை. இருபத்தெட்டு நாள் அவள் தொடர்ந்து ஆடவேண்டிய நிலை இருந்திருக்கமானால், அதற்கான ஒத்திகை போன்றவற்றில் அவள் நீண்ட நேரம் செலவிட்டிருக்கலாம். இதனால் கோவலனோடு சேர்ந்திருக்கும் வாய்ப்பு மாதவிக்குக் குறைந்து போயிருக்கலாம் தனித்து விடப்பட்ட கோவலன் ஊர் சுற்றக் கிளம்பியிருப்பான்.

## கோவலன் ஊடலுக்கு முன் சினம்:

இந்திர விழாவின் கடைசி நாள் ஆட்டத்தை முடித்து, அரங்கி-ருந்து இறங்கிவரும் மாதவி, கோவலன் ஊடற்கோலமோடு இருப்பதை அறிந்தாள், அவன் ஊடலை வளர விடுவது தீது என்று நன்கறிவாள். எனவே, பத்துத்துவரினும், ஐந்து விரையினும் முப்பத்திருவகை ஓமா-கையினும் ஊரிய நன்னீரில் குறித்து அணிபல பூண்டு அவன்

ஊடலைத் தணிக்கிறாள் மாதவி எத்திசையிலும், பலர் பார்க்க ஆடும் ஆட்டத்திலும் மூழ்கியிருந்ததால், கோவலன் எரிச்சலுற்றிருக்க வேண்டும். தனக்குரியவள் தனக்கே உரியவளாக இல்லாமல், விலகி இருக்க நேர்ந்து விடுகின்றதே என்ற சினம் மனத்துள் கால் கொண்டிருத்தல் கூடும். அவ்வினம் மாதவி கையி-ருந்த யாழை வாங்கும் வரை இருந்திருக்கக் கூடும்.

## மாதவி கடிந்தாளோ? :

மாதவி ஒத்திகையிலும், ஆட்த்திலும் ஈடுபட்டிருந்த நேரத்தில் இவன் ஊர் சுற்றித்திருந்த செய்தியைக் கேள்விபட்டு, மாதவி அவனைக் கடிந்து கொண்டிருக்கலாம். அது, அவன் நெஞ்சில் கனன்று கொண்டிருந்தது; யாழை வாங்கியதும் கானல் வரிப்பாடலாக வெளிப்போயிருந்திருக்கலாம்.

## வயந்தமாலையோடு தொடர்போ?

வயந்தமாலைக்கும், கோவலனுக்கும் உறவு உண்டு எண்பதை முன்னறே கண்டோம். இவர்கள் உறவு முதன் முதலாக அரும்பி வளர்ந்தது இவ்விந்திர விழாவில் தானோ? என எண்ணுமாறு உள்ளது. நடன நிகழ்ச்சியால் மாதவிக்கும், கோவலனுக்கும் ஏற்பட்ட இடைவெளி, வயந்தமாலையால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும். இப்போது, கோவலனும், மாதவியும் தாழை வே- சூழ்ந்த புது மணற்பரப்பில், புன்னைமர நிழி-ல், யானைத்தந்தத்தால் கால்கள் அமைக்கப்பட்ட கட்டி-ல் அமர்ந்திருந்தனர். இந்திர விழாக் காலத்தில் கோவலனோடு கூடி மகிழ்ந்தவள் வயந்தமாலை. இப்போது, கட்டி-ல் மாதவியும் கோவலனும் உட்கார்ந்திருக்கின்றனர். இது, அவன் கண்களை உறுத்தியிருக்க வேண்டும். இதனால், அவள் வருந்தி நின்றிருக்கலாம்.

**"வருந்துபு நின்ற வயந்த மாலைகை**
**திருந்துகோல் நல்யாழ் செவ்வனம் வாங்கி"**

என்பதில் இதனைக் காணலாம். இவ்வருத்தத்தை உணர்ந்து கொண்ட கோவலன் யாழை வாங்கியதும் அவ்வுணர்ச்சியால் உந்தப்பட்டு, ஆற்றுவரிப்பாடலைப் பாடியிருக்கலாம்.

## காரணத்தி -ருந்து காரிணம்:

கோவலனின் ஊர் சுற்றி வாழ்க்கையை மாதவி கடிந்து கொண்டதால் அவ் ஊர் சுற்றி வாழ்க்கையை நீ ஏன் கடிந்து கொள்கிறாய் என்று கேட்பதற்காகவும், வயந்தமாலை என் விருப்பத்திற்குரியவள் அவளோடு ஆடி மகிழ நீ ஏன் தடை போடுகிறாய் என்று

கேட்பதற்காகவும், கானல் வரியுள் ஆற்றுவரிப் பாடலை அவன் பயன்படுத்தியிருக்கிறான் என்று கூறலாம். இது காரணத்தி-ருந்து காரியத்திற்குப் போகும் நெறி.

## காரியத்தி -ருந்து காரணத்துக்கு:

இனிக் காரியத்திலிருந்து காரணத்தைக் கண்டறியலாம். காவிரிக்கு உரிமையுடையவனாகிய சோழன், கங்கையைப் புணர்ந்தாலும், கன்னியைப் புணாந்தாலும் காவிரி சோழனைப் புலப்பதில்லை. கோவலன் தன்னைச் சோழனாகவும், மாதவியைக் காவிரியாகவும் எண்ணிப் பேசுகின்றான். அப்படியென்றால், கங்கையும், கன்னியும், பிற பரத்தையரும் வயந்தமாலையும் ஆகத்தாம் இருக்க முடியும்.

## கானல் வரிப் பாடல் பொருள்:

எனவே, 'வருந்துபுநின்ற வயந்தமாலை' யின் முகத்தைப் பார்த்தவுடன் தான், யாழைத்தானே வாங்கிக் கொண்டு மாதவி மீது தாக்குதல் தொடுக்கின்றான். 'இதனை நீ கண்டு கொள்ளாதே; இது தான் மங்கைமாதர் பெரும் கற்பு' என்று உபதேசம் செய்கின்றான், இந்த மனநிலை, கோவலன் பாடும் கானல்வரிப்பாடலுக்கும், மாதவி பாடும் கானல்வரிப் பாடலுக்கும் உரிய பொருளை நமக்குத் தருகின்றது.

கோவலனின் இந்த உண்மை உருவத்தை, நாம் மறந்து விட்டாலோ, மறைத்து விட்டாலோ கானல்வரியின் உண்மையான மறைபொருளை நாம் கண்டறிய முடியாது.

# கோவலன் பாடிய கானற்பாணி

## கோவலன் மனநிலைச்சூழல்:

இருபத்தெட்டு நாள்கள் இந்திரவிழா ஆரவாரம் - அந்நாளில் ஓய்வின்றிச் சுற்றியலைந்தமை - விழாக்காலங்களில் மாதவியை நெருங்கி முன்போலக் கலந்து மகிழ முடியாமை - இன்ன காரணங்களால் மனத்தில் தளர்வும், வெறுப்பும் மிக்கு நின்றன. கோவலனைச் சுற்றிலும் காது செவிடுபடும்படியான ஆரவாரம். பொதுவாக இந்த ஆரவாரச் சூழ-ல் இருந்தால், மனிதனுக்கு எரிச்சல் தோன்றுவது இயற்கை, இவனோ இருபத்தெட்டு நாள் விழா நிகழ்ச்சிகளால் எரிச்சல் அடைந்திருந்தான். இந்நிலையில் வயந்தமாலையின் வருத்தம் வேறு. குழப்பமும், எரிச்சலும் நிரம்பிய நிலையில் அவனை மாதவியிடமிருந்து யாழை வாங்குகின்றான். குழப்பமும், எரிச்சலும் நிரம்பிய மனத்தில் தெளியுமஅ் அமைதியும் எப்படி இருக்க முடியும்? அந்நிலையிலுள்ள மனிதனிடம் யாராவது பேச்சுக் கொடுத்தால் சீறி விழுவதும், சினந்து பேசுவதும் மனித இயல்பு, இதனைத்தான் கோவலனிடம் காண்கிறோம்.

எரிச்சலும், குழப்பம் பெருகிய நிலையில் மாதவி யாழைச் சுதி கூட்டி, 'ஏவலன், பின்பாணி யாது' என்று தானே பொய் வம்பை விலைக்கு வாங்குகின்றாள். அவ்வளவு தான், கோவலன் சீறத் தொடங்கி விடுகின்றான். கோவலன் இயல்பான நிலையில் இருந்திருந்தால், அவன் பாடிய ஆற்றுவரிப்பாடல் இந்த வடிவத்தில் இருக்காது.

## 1. 'ஆற்றுவரிப்பாடல்கள்'

## காவிரியை நோக்கியதா மாதவியை நோக்கியதா?

சோழன் கங்கைக் கன்னியைக் கூடிய போதும் புலவாதிருக்கின்ற காவிரியின் கற்பு மாண்பை எடுத்துக் கூறுகின்றான் கோவலன். சோழன் கங்கையைக் கூடவும், கன்னியைக் கூடவும் காவிரி தடையாக இல்லையே என்ற கருத்தை எடுத்துக்கூறித் தடை விதிக்கா இயல்பு தான் காவிரியின் கற்பு மாண்பு என்று எடுத்துக்காட்டி, அக்கற்பு மாண்பினை நீயும் பெறு என வ-யுறுத்துகின்றான். இப்பாடல்கள் காவிரியை நோக்கிப் பாடியன என்று குறிக்கப்பட்டிருந்தாலும், இதன் பொருளமைதியைக் கொண்டு பார்த்தால் மாதவியை நோக்கிப் பாடியவன் என்றே கொள்ள வேண்டும்.

## ஆற்றுவரிப் பாடல்கள் இரண்டு

1. மாலையணிந்த, திங்கள் போன்ற வெண்கொற்றக்குடையை உடையவனாகிய சோழன் தன் ஆட்சியை விரிவுபடுத்தும் பொருட்டுக் கங்கையைக் கூடினாலும் (கங்கை பாயும் நாடுகளை அடிமைப்படுத்தினாலும்) காவிரியே நின் கணவனாகிய சோழனை வெறுக்க மாட்டாய். அவன் கங்கையைக் கூடுகின்ற பொழுது, வெறுக்காதிருத்தல் பெண்டிரின் பெருங்கற்பென்று அறிந்தேன்; காவேரி நீ வாழ்க.
2. மாலையையும், பெருமை பொருந்திய வெண்கொற்றைக் குடையையும் உடைய சோழன் ஆட்சிப் பரப்பை விரிவுப்படுத்தக் கன்னியைக் கூடினாலும் (குமரித்துரை) நீ வெறுக்க மாட்டாய். அக்கன்னியைப் புணர்ந்தாலும், வெறுப்புத் தோன்றாதிருத்தல் பெருமை மிகு மாதரின் பெருங்கற்பு என்று அறிந்து கொண்டேன். காவிரியே வாழ்க.

## சோழனும் கோவலனும்:

இவ்விருபாடல்களும் ஒரே கருத்தை வ-யறுத்தும் பொருள் அமைதியைக் கொண்டவை. இப்பாடல்களில் சோழன் வெண்குடையான் என்றும், செங்கோலன் என்றும், கோவலன் கூறுகிறான். இங்குச் சோழன் என்பது கோவலனையே குறிக்கும் ஏன்? வெண் கொற்றக் குடை எல்லோருக்கும் நிழல் தரும்; பிற பரத்தையர்க்கும், வயந்த மாலைக்கும் மாதவிக்கும் அங்கே இடமுண்டு. அக்குடை நிழல் தனக்கு வாய்க்காதோ என மாதவி அஞ்ச வேண்டா என வெளிப்படுத்துவதனை அறியலாம்.

## புலவாமையே பெருங்கற்பு:

தான் வளையாச் செங்கோலன். என்னால் விரும்பப்படும் வயந்தமாலைக்குச் சிறப்புத் தந்து நின்ன இரண்டாமிடத்திற்கு உரியவளாக்கி விடுவோனோ என அஞ்ச வேண்டா. ஏனெனில் நான் வளையாச் செங்கோலன். ஆகவே, என்னைப் புலவது மங்கை மாதர் பெருங்கற்பினுக்கேற்ப நடந்து கொள்வாயாக என்று கோவலன் குறிப்பால் உணர்த்துகிறான். வாழி காவேரி என்பதிலும் ஓர் எச்சரிக்கை விடப்படுகிறன்றது. காவிரியே நீ புலந்திலை; புலவாமையே பெருங்கற்பு, அக்கற்பினையுடைய ஆத-ன் நீ வாழ்க் என்கின்றான். இதன் மறுதலைக் கருத்து யாது. நீ புலப்பின் பெருங்கற்பினையுடைய ஆகாய். ஆகவே, நான் உன்னை வாழ்த்தேன் என வரும். வாழ்க என்ற சொல்-ன் எதிர்மறை யாது? ஒழிக என்பதல்லவா? என் விருப்பத்திற்கு நீ உடன்படவில்லை என்றால் உன்னை ஒழிவேன் என்று கோவலன் எச்சிரிப்பதாகவும் அமைந்துள்ளது.

## பாடல் மூன்று:

3. புதுப்புனலை வரவேற்ற உழவர்களின் ஆரவாரமும், தண்ணீர் மதகுகளில் தேங்கிச் செல்லுதால் விளைந்த ஆரவாரமும், கரைகளை உடைத்துக் கொண்டு பாயும் நீரிந் ஆரவாரமும், புதுப்புனல் விளையாட்டில் ஈடுபட்டிருக்கும் மக்களின் ஆரவாரமும் மிக்கொ-க்கக் காவிரியே ந ீநடந்தாய். இவ்வாறு ஓ- சிறக்க நடந்த செயலெல்லாம் வஞ்சினம் கூறி ஆர்ப்பரிப்பதில் தப்பாத வீரர்களையுடைய சோழனின் வளமே காரணம் என்பதனை அறிந்து கொண்டேன். காவிரியே, நீ வாழ்வாயாக.

## அமைதி நடை மாதவிக்குத் தேவை:

இப்பாடல் தான் இயல்பான ஆற்றுவரிப் பாடலாக அமைகின்றது. இப்பாட.ல் ஆற்றுவரியின் முதல் பாடலை இல்லாமல் மூன்றாம் பாடலாக வந்திருப்பதே கோவலனின் உள்ளத்தில் தடுமாற்றமும், தடமாற்றமும் இருப்பதனை நன்கு காட்டுகின்றது. உழவர் ஓதை, மதகுகளால் ஏற்படும் ஓதை, உடைநீரு ஓதை, விழவர் ஓதை என்று சுற்றிலும் ஒரே ஆரவாரன். இந்த ஆரவாரத்திற்கு நடுவே காவிரி அமைதியாக நடந்து செல்கிறது. தன்னைச் சுற்றி நடக்கும் எந்த ஆரவாரமும் காவிரியைப் பாதிக்கவில்லை. சுற்றிலுமிருப்பவர்களின் மகிழ்ச்சி ஒட்டஇத்தைப்பற்றிக் கவலைப்படாமல் அமைதி நடை நடக்கிறது காவிரி. மாதவி உன்னைச் சுற்றிலும் நடக்கும் சில ஆரவாரங்களைப் பற்றிக் கவலைப்படாமல் காவிரியைப் போல அமைதியாக இருக்கக் கூடாதா? நடை என்பது ஒழுக்கம் தானே. காவிரிக்கு அந்த நடை நடக்க முடிகிறது. உன்னால் அந்த நடை நடக்க முடியாதா? என்று கோவலன் மறைமுகமாகக் கேட்கிறான்.

## 2. கானல் வரிப்பாடல்களின் முப்பிரிவுகள்:

கோவலன் பாடிய கானல்வரிப் பாடல்களைப் பொருளமைதி நோக்கி, மூன்று பிரிவாகப் பிர்த்துக் கொள்ளலாம். முதல் பிரிவு, முதலாவதாக வரும் ஆற்றுவரிப்பாடல்கள்; இதில் கோவலன் தன்னுடைய விருப்பத்தை மாதவிக்குக் குறிப்பால் உணர்த்துகின்றான். இரண்டாவது பகுதி, சாரத்துவரி முதலாக நிலைவரி ஈறாக உள்ள பதினைந்து பாடல்கள்; இப்பாடல்களில் தன்னுள்ளம் கவர்ந்தாளின் நலமும், கவரப்பட்ட திறமும் கூறப்படுகின்றன. மூன்றாவது பகுதி, பவள உலக்கை முதலாகச் சேரல் மடவன்னம் ஈறாக உள்ள நான்கு பாடல்கள்; இப்பாடல்களில் மாதவியின் இயல்பைப் பழித்துப் பேசுகிறான் கோவலன். பின்னால் மாதவியை அளவிறந்து பழித்துப் பேசும் பகுதிக்கான உள்ளம் அவனிடம் உள்ளது என்பதனைக் காட்டும் கண்ணாடியாக இந்நான்கு பாடல்களும் விளங்குகின்றன.

### சார்த்துவரிப்பாடல்:

ஆற்றுவரியை அடுத்து வருவது சார்த்துவரி, புகார் நகரைச் சார்த்திச் சில செய்திகள் கூறுகின்றன. மண்ணின் இயல்பு, மக்களின் இயல்பல்லவா? இதனை அடிப்படையாகக் கொண்டு இப்பகுதி அமைந்துள்ளது. இது தோழி, தலைமகன் முன்னின்று வரைவு கடாவுத் துறையாகக் கூறப்பட்டுள்ளது.

### முதல் பாடல் கருத்து:

1. ஐங் கருங்குவளை மலர் போன்ற நெடிய கண்களையுடைய எம் தலைவியைக் கடல் தெய்வத்தின் முன்னிறுத்தி, அத்தெய்வத்தைச் சுட்டிக்காட்டி விரைவில் நின்னை மணப்பேன், என்று சூளுரை மொழிந்தனர் அறினில்லாதவர் என்பதனை நாங்கள் எவ்வாறு அறிய முடியும்? ஏனென்றால், நாங்கள் இப்புகார் நரத்தில் அல்லவா பிறந்து விட்டோம். இப்புகாரில் கடற்கழியிடத்தில் தோன்றியுள்ள அல்-மொட்டுக்கள் கடற்கரையில் கிடக்கின்ற வெண்மையான சங்கைக் கண்டு, விண்ணிலே வெண்மதி வந்து விட்டதே என்றும், சிதறிக் கிடக்கின்ற முத்துக்களைக் கண்டு விண்மீன்கள் தோன்றி விட்டனவே என்றும் மயங்கி மலர்ந்து விடுகின்றன. இத்தகைய இயல்படையது புகார் நகர்.

### வயந்த மாலை இதில் தலைவியா?

இப்பாட-ல் வரும் ‘கரிய மலர் நெடுங்கண் காரிகை’ வயந்த மாலையாக இருத்தல் கூடும். வயந்தமாலை பற்றி இளங்கோவடிகள் ‘மாலை வாங்கிய வேலரி நெடுங்கண்’ என்றும் குறிப்பிடுகின்றார். மேலும், கோவலன் பாடும் கானல் வரிப் பாடல்களில் ‘கொலைவேல் நெடுங்கண் கூற்றம்’ என்றும், ‘நெடுங்கண் வலையால் உயில் கொல்வை’

என்றும் இந்நெடுங்கண் சுட்டிக்காட்டப்படுகின்றது. எனவே, இந்நெடுங் கண்ணிற்குரியவள் வயந்தமாலையாக இருக்கலாம்.

## 2.இரண்டாம் பாடற் கருத்து:

எம்மேல் காதல் உடையவராகிக் கடற் கான-டத்தே எமக்குத்தருவதற்காகக் கையுறை (பரிசு) ஒன்றைக் கையில் ஏந்தியவாறு நாங்கள் செல்லுமிடமெல்லாம் சுற்றி சுற்றி வந்தார். இது அன்று; இன்றோ, அவர் நமக்குத் தொடர்பில்லாதவர் போல் ‘எம்மை மணந்து கொள்க’ என்று அவரை நாங்கள் இறந்து பின்நிற்க நேரும் என்பதை நாங்கள் அறிந்தோம். கற்கான-ல் சுற்றிப் பறந்து திரியும் வண்டுகள் கழியில் நிலவின் நிழல் விழும் இடத்தில் இரண்டு நீல மலர்கள் பூத்திருப்பதையும் அய-ல் நிற்கும் பெண்ணின் முகத்தையும், அதி-ருக்கும் மலர் போன்ற கண்களையும் பார்க்கின்றன. எது மலர்? எது கண்? என்று அறிய மாட்டாமல் கண்ணுக்கும், மலருக்குமாகப் பறந்து ஊசலாடுகின்ற புகார் அல்லவா நாங்கள் பிறந்த நகரம்.

## சூளுரைக்கும் பொய்யுரைக்கும் வேறுபாடு அறியோம்:

கண்ணுக்கும் மலருக்கும் வேறுபாடு தெரியாமல் ஊசலாடிய வண்டு போல், சூளுரைக்கும், பொய்யுரைக்கும் வேறுபாடு தெரியாமல் போய்விட்டோம். அறனுடையான் எவன்? அறனில்லான் எவன்? என்று அறியும் திறனில்லாது போய்விட்டோம்.

## சார்த்துவரிப் பாடல் மூன்று - பொருள்:

3. கட-ல் உள்ள பெரிய அலைகள் மோதுவதனால் தாக்கப்பட்ட சங்கு, ஒ-க்கும் வாயினை உடையதாகி, அசைந்து வந்து கான-ல் சிறுமியர் இழைத்துள்ள சிற்றில் முத-யவற்றை உழுது அழிக்கின்றது. இதனால் மனம் வருந்திய சிறுமியர், அச்சங்கினை விரட்டத் தாம் அணிந்துள்ள மாலையை அறுத்து எறிய அம்மாலையி-ருந்து சிதறிய குவளை மலர் அரைக்கண்ணிட்ட கண் போலத் தோன்ற, அவ்வழிச் செல்வோர் இது கண்ணோ? மலரோ? என ஐயுற்றுத் தம் பார்வையை விலக்க முடியாதவராக நிற்கும் புகார் அல்லவா எம் ஊர்?

## மாதவி உடன்படுவாளா:

இங்கே கோவலன் மாதவியிடம், இப்பாடலைப் பாடுவதன் வாயிலாக வெளிப்படுத்துவது, தான் ஒரு பெண்ணைக் கண்டதும், அவளைக் கலந்ததும் ஆகிய செய்திகளை மட்டுமல்ல; இதோ தோழி வரைவு கடாவுகின்றாள். நான் அவளை வரைந்து கொள்ளவா? என்ற வினாவையும் வெளிப்படுத்துகின்றான். மாதவி, இதற்கு உடன்பட்டால் தானே, புலவாக்காவிரி போன்ற பெருங்கற்பினளாக விங்க முடியும்.

## சாத்துவரிப் பாடல் நான்கு:

4. குறியிடத்துச் சென்ற பாங்கன் தலைமகனின் காதல் மிகுதியைக் குறிப்பினால் அறிந்து கூறியது என்ற துறையாகும் இப்பாடல். தலைவனின் காதல் மிகுதியைப் பாங்கன் அறிவான். இதனால், தலைவன் உற்ற நோயின் தன்மையையும் அறிவான். இவனது காதல் மிகதியைத் தலைவியிடம் எடுத்துக் கூறச்சென்ற பாங்கள் தலைவியின் காதலையும் அழகையும் கூறுகின்றான். தலைவன் உற்ற காதல் நோய்க்கு மருந்து வேறில்லை. இவளோ மருந்து எனக் கூறுகின்றான்.

## பாடற் பொருள்:

கடல்துறையில் வலம்புரிச்சங்குகள் அங்கும் இங்கும் அலைந்து இரைதே மேய்கின்றன. இதனால் மணற்பரப்பில் அவை ஊர்ந்து சென்ற அடையாளம் உழுத சால் போலத் தோற்றமளிக்கின்றது. புன்னை மரக்கொம்புகளில் பூத்துள்ள மலர்கள் உதிர்ந்து தலைமீது வீழ்வதனாலும், நுண்ணிய பூந்தாது சிந்துவதனாலும் உழுத சால் போன்ற தோற்றம் மலர்ப்பரப்பாக மாறி விடுகின்றது. இத்தகைய கான-ல் முழுமதி போன்ற முகத்தினையுடையவளாகிய இத்தலைவியின் உடன்பாடு காட்டிய கயல்போலும் கண்கள் செய்த மருந்துகளால் தீராத என் தலைவனின் நோயை இவளுடைய கணங்கு படரும் மார்புகள் தரம் தீர்த்து வைக்கும்.

## (ii) மாதவியின் உடன்பாடு தேவை:

எது நோய் செய்ததோ அது தான் நோயைத் தீர்க்க வேண்டும். ‘பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை தன் நோய்க்குத் தானே மருந்து’ என்பது குறள். இதுதான் காதல் உலகத்தின் இயற்கை. ஆனால், கோவலன் இந்த இயற்கையி-ருந்து மாறுபடுகின்றான். கண்கள் செய்த நோயைச் சுணங்கு படர்ந்த மெல்-ய மார்புகள் தாம் தீர்க்க வேண்டும் என்கின்றான் கோவலன். இந்த வாய்ப்பாடு மாற்றம் ஏன்? யானுற்ற நோய் வேறொருத்தியால் விளைந்தது. இந்த நோயை அவளையும் வரைந்து கொள்க என்னும் நின் உடன்பாடுதான் போக்கும் என்று வெளிப்படுத்துகின்றான். இங்கேயும், கோவலன் தன் உள்ளக்குறிப்பைத் தவறாமல் வெளிப்படுத்தவே செய்கின்றான்.

இங்கு பல பாடலைத் தான் கோவலன் பாடுகின்றான். ஒரே பாடல் என்றாலும் தன் உள்ளக்குறிப்பை மிகத் திறமையக வெளிப்படுத்த அவன் தவற வில்லை.

## (ii) கழற்றெதிர் மறைப்பாடல் ஒன்று:

இனிவரும், இரண்டு பாடல்களும், 'கழற்றெதிர் மறை' என்னும் துறையினைச் சார்ந்தவை. பாங்கன் சொல்-யதற்குத் தலைவன் மறுத்துக் கூறுதல் என்பது இதன் பொருள். "வெயி-ல் காயப்போட்டுள்ள கொழுப்புப் படிந்த புலால் துண்டுகளைக் கவர வரும் காக்கை போன்ற பறவைகளை விரட்டுதலைக் காரணமாகக் கொண்டு வண்டுகள் தொகுதியாகச் சுற்றி வந்து ஆரவாரம் செய்யும் சூழ-ன் பூங்கொத்தைக் கையில் ஏந்தி மணம் கமழும் அழகிய கான-டத்தே கண்டாரை வருத்தும் ஓர் அணங்கு நிலையாகத் தங்கியிருக்கும் என்பதை நான் அறியேன். அறிந்திருந்தால் அக்கான-டத்தே நான் செற்றிருக்க மாட்டேன் என்று புலால் உணங்கலை கவர வரும் புட்களை அவள் விரட்டுகிறாள். ஞாழல் மலரில் உள்ள தேனைக் கவர வரும் வண்டுகளை வேள் விரட்டவில்லை. புள் அன்னையார் பலரை அவள் விரட்டினாலும், வண்டனையேனாகிய என்னை அவள் விரட்டமாட்டாள். ஆத-ன் பாங்க! அவள் பாங்காச் சென்று என்பால் சேர்ப்பிப்பாயாக என்று தலைவன் கூறுகின்றார்.

### மற்றது:

இனி, அடுத்த பாடல். வலை தரும் வருவாயால் வாழ்க்கை நடத்துவோர்! சேரியில் வலைகள் காயப்போட்டுள்ள வீட்டின் முன் பகுதியில் விலைக்கு விற்கும் மீன் உணங்கலைப்பாதுகாக்கும் பொருட்டாகக் கொடுங்கூற்றம் ஒன்று, கொலைவேல் போன்ற நெடிய கண்களையுடைய பெண்ணுருவம் கொண்டு அலைவீசும் குளிர்ந்து கான-ல் வாழ்வதனை நான் முன்னர் அறியேன். அறிந்திருந்தால், ஆண்டுச் சென்றிருக்க மாட்டேன். வேண்டுருவம், யாவரும் விரும்பும் உருவம். யாவரும் விரும்பும் எனவே, தான் விரும்பியதில் வியப்பொன்றும் இல்லை என்கின்றான். கண்களையே வலையாகக் கொண்டு என்னைக் கவர்ந்த அவர் நான் காமத்தீயால் வணங்குவதும் கண்டு வலைபோல் அமைதியாக இருக்கின்றானே என்கின்றாள் தலைவன்.

### பா அமைப்பால் பொருள்:

இம்மூன்று பாடல்களும், தன் கருத்தைக் குறிப்பால் வெளிப்படுத்துவதிலும், அவற்றுள் காணப்படும் ஒத்த கருத்தினாலும் ஒற்றுமையுடையவனாக உள்ளன. இவை துறையால் வேறுபட்டுப் பாவகையால் ஒன்று பட்டிருப்பதைப் போலக் கூற்றால் வேறுபட்டிருந்தாலும், கோவலன் உள்ளக் குறிப்பை வெளிப்படுத்துவதில் ஒன்றுப்பட்டே உள்ளன.

## தலைமகன், தலைமகளை முதல் முதலாகச் சந்திக்கும் இடம்:

1. "கயல்போலக் கண்ணை எழுதி, வில் போலப் புருவத்தை எழுதி, மேகத்தைப் போலக் கூந்தலை எழுதி, காமன் செயலாகிய காதல் விருப்பத்தையும் எழுதி, முற்ற முடிந்த முகம், திங்கள் தானே பாருங்கள். அத்திங்கள் அழகிய வானத்தி-ருந்தால் அரவங்கள் விழுங்கி விடுமோ என அஞ்சிப் படகினால் வாழ்க்கை நடத்தும் பரதவர் வாழும் இச்சிற்றூரில் தங்கி வாழ்கின்றதையும் பாருங்கள்".
2. அறுத்தெடுக்கப்பட்ட வளையல்கள் ஆரவாரம் செய்ய. இரண்டு பக்கத்தும் ஓடுகின்ற குருதிக்கறை படிந்த வேல்களையே கண்ணாகக் கொண்ட கொடிய கூற்றத்தைப் பாருங்கள். அக்கொடுங்கூற்றந்தான் கடலால் வாழ்க்கை நடத்தும் மீனவர் சிற்றூரில் இளமை பொருந்தி மென்மையான சாயலையுடைய மகளாக வாழ்வதையும் பாருங்கள்.
3. உலர்த்தப்பட்டுள்ள மீன் உணங்கலைக் கவர வரும் பறவையை விரட்டிக் கண்டவர்களின் மனம் தடுமாறச் செய்யும் அணங்குதான் இதுவோ, பாருங்கள். அடும்பங் கொடிகள் நிரம்பிய குளிர்ந்த கான-ல் அவ்வணங்குதான், பெண்ணுருவம் கொண்டு வந்துள்ளதையும் பாருங்கள்.

தான் கண்டது. திங்களோ? கூற்றமோ?அணங்கோ? என்று ஐயுற்றாலும் இறுதியிலும் அது கேளாயது; "பெண் கொண்டது" என்று கூறி, மானிடப் பெண்ணே என்று துணிகின்றான். அம்மகளை விரும்பும் தன் உள்ளக்குறிப்பையும் வெளிப்படுத்திவிட்டான். மாதவி உடன்பாடு தெரிவிக்க வேண்டும் என்பதற்காகத் தன் இக்கூற்று.

## ஆறு அகத்துறைப் பாடல்கள்:

'கரிய மலர் நெடுங்கண்' முதலாக 'ஓடும் திமில் கொண்டு' ஈறாக உள்ள பாடல்கள் 15. இப்பாடல்கள் ஆறு துறைகளாக வகுக்கப்பட்டன. இவற்றைக் களவியல் அடிப்படையில் ஒருமுறைப்படுத்தினால், கீழ்க்கண்டவாறு.

1. தமியளாக எதிர்ப்பட்ட தலைவியை நோக்கித் தலைவன் கூறுதல் இதில் காட்சி, ஐயம், தெளிவு முத-யன அமைந்துள்ளன, முத-ல் வரவேண்டிய இத்துறை நான்காவதாக வந்துள்ளது.
2. புணர்ச்சி நீட, இடந்தலைப்பாட்டில் புணர்தலுறுவான் ஆற்றாமையால் கூறுதல், இரண்டாவதாக வரவேண்டிய இது, ஆறாவதாக வருகின்றது.
3. பாங்கன் கேட்பத் தலைமகன் உற்றுதுரைத்தல், மூன்றாவதாக வந்துள்ளது.
4. கழற்றெதிர் மறை - நான்காவதாக வரவேண்டிய இத்துறை மூன்றாவதாக வந்துள்ளது.

5. குறியிடத்துச் சென்ற பாங்கன், தலைமகளின் காதல் மிகுதியைக் குறிப்பால் அறிந்து கூறியது. ஐந்தாவதாக வரவேண்டிய இத்துறை இரண்டாவதாக வந்தது.
6. தோழி, தலைமகன் முன்னின்று வரைவு கூடாதல், ஆறாவதாக வரவேண்டிய இத்துறை, முதலாவதாக வந்துள்ளது.

இத்துறைகள் முறையே நிரல்பட அமையாது தடுமாறி வந்துள்ளமைக்கும் காரணம், கோவலனின் மனத் தடுமாற்றம் தான்.

## தலைமகள் உற்றது உரைத்தல் துறைப்பாடல்கள்:

அடுத்து வரும் துறை, 'பாங்கன் கேட்பத் தலைமகன் உற்று துரைத்தல்' என்பதாகும். தலைவனின் தோற்றத்தில், நடத்தையில் மாற்றம் கண்ட பாங்கன், இடருற்றாய்போல் இருக்கின்றாயே என்ன என்று வினவத் தலைமகன் உரிய விடையிறுப்பதாகும்.

## தலைவன் விடையாக வருவன:

1. நறுமலர் நிரம்பிய பொழில்; அம்மலர்களின் மணம் வீசும் மணற்பரப்பு; குற்றமற்ற பெருமை பொருந்தி சொற்கள்; அழகும் இளமையும் பொருந்திய திரண்ட மார்பகங்கள்; முழுமதி போன்ற முகம், வளைந்த வில் போன்ற புருவங்கள்; எழுதுதற்கரிய மின்னல் போன்ற இடை இவையே என்னைக் கட்டுறச் செய்தவை.
2. அலைகள் பரந்த நீர்த்துறை; அழகிய மணல் பரந்த இடம்; மணம் பரப்பும் இனிய மலர்கள்; மரங்கள் செறிந்த சோலை; மணம் நிரம்பிய சுருண்ட கூந்தல்; மதியை ஒத்த திருமுகம்; கயல் போன்ற இருவிழிகள் - இவை தாம் என்னை இடறுறச் செய்தவை.
3. சங்குகள் வளரும் துறை; மணம் விரிந்து பரவும் சோலை; முறுக்கவிழ்ந்த நறிய மலர்கள்; அவன் தனியே உலவிய இடம், மூங்கில் முறை போல் வளரும் பற்கள்; இளமையுடையாளின் இரண்டு மார்பகங்கள்; இவையே என்னை இடறுறச் செய்தவை.

எனக்கு இடந்தந்தவனையும், தந்தவள் உறையும் இடத்தையும் தலைமகன் (கோவலன்) கூறிவிட்டான். இனிப் பாங்கன் (மாதவி) பாங்கற் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டியது தான். கோவலன் இரண்டு குறிப்புகளை இலைமறை காயாக மாதவிக்கு வெளிப்படுத்துகின்றான். ஒன்று, அவள் இக்கான-டத்தே உள்ளவள். இரண்டு (உனக்கு) இனியவள். இக்கான-டத்தே உள்ள (மாதவிக்கு) இளையவன், வயந்தமாலையாக இருக்கலாம் அல்லவா?

## இடந்தலைப்பாட்டில் ஆற்றாமையால் கூறுவது:

அடுத்த துறையாக வருவது, புணர்ச்சி நீட இடந்தலைப்பாட்டில் புணர்தலுறுவான் ஆற்றாமையால் கூறுவது. புணர்ச்சிக்குரிய வாய்ப்பின்றிக் காலம் வறிதே கழிய, அதனால் ஆற்றாமை மிகுந்த தலைவன் புணர்ச்சி விருப்பத்தால் இப்பாடலைப் பாடுகின்றான்.

1. நின் தந்தையும், தமையன்மாரும் கட-ல் சென்று. உயிர்களைக் கொன்று வாழ்வார்கள். நீயும், என் உட-னுள்ளே புகுந்து, உயிரைக் கொன்று வாழ்வாயோ? அவ்வாறாயின் நின் குலவொழுக்கம் நன்று; அடங்காத உம் வெம்மையுடைய முலைகள் வ-யோடு பொருந்தி அழுத்துவதால் நின் இடை சுமை தாங்காமல் இடர்ப்பட்டு வருந்தும். இவ்விடையை இழந்து விடாதே.
2. வளைந்த கண்கள் அமைந்த வலையை வீசி, உன் தந்தை உயர்களைக் கொல்வான். நீயும், நெடிய கண் ஆகிய வலையால் என்னுயிரைக் கொல்லத் துணிந்து விட்டாய். முத்துவடம் ஏந்திய உன் முலையின் பரத்தைத் தாங்க மாட்டாமல் மேகத்தில் தோன்றும் மின்னலைப் போன்று நின் மெல்-ய இடை அசைந்து தளர்கின்றது. இவ்விடையை இழந்து விடாதே.
3. ஓடும் படகினைக் கொண்டு கடல் வாழ் உயிர்களை உன் மூத்தோர் கொல்வார். நீயும் வளைந்த புருவத்தினால் என் உயிரைக் கொல்லத் துணிந்துவிட்டாய். என் பெருமை, என் துன்பம் இவற்றை எல்லாம் பாராதிருக்கின்றாய். உன் முலையைச் சுமந்து பாடும் சிறிய மெல்-ய இடையை இழந்து விடாதே.

## பீடும் பிறர் எவ்வமும் பாராய்:

‘பீடும் பிறர் எவ்வமும் பாராய்’ என்பது கோவலன் தலைவிக்கு மட்டும் செய்தியன்று; மாதவிக்குக் கூறியது தான். என் பெருமை நிலைக்கவும், என் துன்பம் அகலவும் ஆவன செய். இது தான் அவன் மாதவிக்கு விடுக்கும் செய்தி.

### இவை கோவலனுக்கு எரிச்சல் ஊட்டினேவோ?

இனிமேல் மாதவியைப் பழித்துப் பாடும் பாடல்கள் தொடங்குகின்றன. கோவலன் தன்னுள்ளக் குறிப்பைப் பாடிக் கொண்டு வரும்போதே, மாதவி அதனை உணர்ந்துள்ளான். இதனை,

**“மன்னுமோர் குறிப்புண்டு, இவன் தன்னிலை**
**மயங்கினான்”**

என்பதனாலும்

"கலவியால் மகிழ்ந்தான் போல்

புலவியால் யாழ் வாங்கி"

என்பதனாலும்

"தானும் ஓர் குறிப்பினாள் போல்

பாடியதனாலும்"

அறிந்து கொள்கிறோம். அவன் பாடிக்கொண்டே இருந்திருப்பான். இவள் அதன் உட்பொருளைச் சிந்தித்துக் கொண்டே இருந்திருப்பாள். துணுக்குற வேண்டிய நேரத்தில், சிரித்துக் கொண்டிருக்கும் மாதவியின் போக்கு, தன்னை இவள் ஏளனம் செய்கிறாள் என்ற கருத்தைத் தோற்றுவிக்க, அவன் எரிச்சலுற்றிருக்கலாம். அந்த எரிச்ச-ன் விளைவு, கொடுமையை உமிழ்ந்து கொண்டு, பாடல் வடிவில் புறப்படுகின்றது.

## பாங்கன் வாயிலாக மாதவியைத் திட்டுகிறானோ?

இப்பாடல், குறியிடத்துத் தலைமகளைக் கண்ட பாங்கன் கூற்றாக அமைந்துள்ளது. மாதவி தானே திட்டாமல் பாங்கன் வாயிலாகத் திட்டுவது கூட அவன், அவளிடமிருந்து அயன்மைப்பட்டிருப்பதனை நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

1. பவளத்தால் செய்யப்பட்ட உலக்கையைக் கையினால் பற்றி, வெண்மையான முத்துக்களை உர-ல் பெய்து, அவற்றைக் குற்றுகின்றவனுக்குச் சிவந்த கண்கள் வடிவத்தாலும், நிறத்தாலும் குவளை மலர்கள் போ-ப்பினும் அவற்றின் செயல்கள் கொடுமையானவை.

## பொருந்தாச் செயலை விட்டொழி:

குவளை மலர்கள் மணத்தையும், தேனையும் நல்குவன. இவள் கண்களோ கொடுமையை உமிழ்வன. ஆகவே, பொருந்தமாட்டா என்கின்றான். பவள உலக்கையைக் கையாற்பற்றித் தவள முத்துக்களைக் குற்றுதல் இயல்பன்று. அரிசியை, நெல்லை உர-லே இட்டுக் குற்றுதல் தான் இயல்பு முத்தைக் குற்றுதல் பொருந்தாச் செயல், இவன் தன் சிவந்த கண்களால் என் நெஞ்சத்தைக் குற்றி வருத்துவதும் பொருந்தாத செயல் என்கிறான் கோவலன். பவள உலக்கைக்கும், செங்கண்ணுக்கும் ஒரு தொடர்பு இருப்பதனை அறிய வேண்டுகிறேன. சிவந்த உலக்கை, வெண்முத்தைக் குற்றுகிறது. சிவந்தகண், வெண்மையான (வஞ்சனையற்ற) என் மனத்தை குற்றுகிறது. ஆகவே, பொருந்தாத செயலை விட்டொழி என்கின்றான் அவன்.

## அன்ன நடையும் கண்ணும் உணர்த்துவன:

### பாடல் இரண்டு:

புன்னை மரத்தின் நிழ-ல், புலால் நாறும் அலைவாயி-ல், அன்னப்பறவை நடப்பது போன்று அசைந்து அசைந்து செல்வின்றாளே, அவளுடைய சிவந்த கண்கள் கண்களல்ல; மிகவும் கொடிய கூற்றமேயாகும். நடையினால் தனக்கு உறவுடையவள் என எண்ணி அருகணைந்த அன்னம் வெருவி நடக்குமாறு அவள் செய்தது போலத் தனக்கு உறவுடையவள் என எண்ணி, என் விருப்பத்தை அவளிடம் வெளிப்படுத்த அவள் யான் விலகுமாறு நடந்து கொள்கிறாள் எனக் கோவலன் குறிப்பிடுகிறான்.

அன்னம் அவள் பின் சென்று, அவமானப்பட்டது போல, நெஞ்சே அவள் பின் சென்று அவமானப்படாதே என்கின்றான் கோவலன். கூற்றும் எப்பயனையும் கருதி, உயிர்களைக் கவர்வதில்லை. பயனின்றியே உயிர்களைக் கவர்ந்து வருத்துகின்றது. இவளது சிவந்த கண்களும், பயனின்றியே (என் விருப்பத்திற்கு எதிரான குறிப்பைக்காட்டுவதன் வாயிலாக) என்னை வருத்திக் கொல்கின்றன.

## கண் உணர்த்தும் குறிப்புகள்:

தேன் வடியும் நீலமலரைக்கையில் ஏந்தி, உணங்கலை உண்ண வரும் பறவைகளை விரட்டுபவளுக்குச் சிவந்த கண்கள் வெண்ணிற வேல்கள் அல்ல. அவற்றின் கொடியன; கொடியன. கையிலுள்ள நீலமலரி - ரந்து தேன் வெளிப்படுகின்றது. அவளுடைய கண்ணி-ருந்து வெப்பம் வெளிப்படுகின்றது. பறவை தனக்குரிய உணங்களை உண்ணவிடாது மட்டும் அவள் விரட்டவில்லை. யான் விரும்பும் பெண்ணின் நலம் உண்ணவும் விடாது விரட்டுகின்றாளே எனச் சினத்தை வெளிப்படுத்துகின்றான். அவளுடைய கண்கள் வெள்ளிய வேல்கள் அல்ல. செந்நிற வேல்கள். என் ஆசை நெஞ்சத்தைக் குத்திக் கிழித்துக் குருதிக் கறை படிந்ததால் அவை செந்நிறம் பெற்றன என்றும் பேசுகிறான். இம்மூன்று பாடல்களிலும் வரும் செங்கண் மாதவிக்குரியன. இந்திர விழவூர் எடுத்த காதையில் இறுதியில், "கண்ணகி கருங்கனும், மாதவி செங்கனும்" என்று வரையறுத்துக் குறிப்பிடுகிறார். கண்ணகியின் கண்சிவப்பைப் பாடுவதற்குரிய காரணம், மயக்கத்தால் விளைந்த சிவப்பே ஆகும். எனவே கண்ணகி கண்ணின் இயற்கைத் தன்மை சிவப்பு அன்று என்பது தெளிவாகும்.

## கைக்கிளைப் பாடல்கள்:

இனி அடுத்த வரும் பா-ல் கோவலனின் சினம் வருத்தமாக மாறுகின்றது. என்றாலும் அக்கழிவிரக்கத்திலும் சினக்கனல் வெளிப்படவே செய்கின்றது. இது

காமஞ்சாலா இளமையோள் வயின் ஏமஞ்சாலா இடும்பை எய்தியோன் கூற்றாக வருகின்றது. பருவம் முதிராப் பெண்ணிடம் பருவ வேட்கையைத் தணித்துக் கொள்ள எண்ணிய தன்னெஞ்சைக் கடிந்து கூறுவது போல இப்பாடலைப் பாடுகின்றான் கோவலன். இளைய அன்னமே இவளைச் சேராதே. இவள் நடையும் நின்னடையும் ஒப்பாக மாட்டா. இளைய அன்னமே இவளைச் சேராதே. ஏனெனில் இவளுடைய நடையும், நின்னடையும் ஒப்பாக மாட்டா. இவள் ஊர்ந்து வரும் நீரலைகளை வே-யாகக் கொண்ட இக்கான-ல் உள்ள ஆடவர் உள்ளத்தைக் கலக்கி அங்கும் இங்கும் அலைந்து திரிபவள். ஆத-ன் இளைய அன்னமே இவளைச் சேராதே. ஏனெனில் இவள் நடையும், நின்னடையும் ஒப்பாக மாட்டா.

### மட அன்னம் - மட நெஞ்சம்:

இப்பாடல், புறத்தோற்றத்தில் அன்னத்தை நோக்கிக் கூறப்பட்டிருந்தாலும், ஆழ்ந்து பார்த்தால் கோவலன் தன்னெஞ்சிற்குக் கூறியது என்பது தெரியவரும், 'மட அன்னம்' என வரும் இடங்களில் 'மட நெஞ்சே' எனப் போட்டு விட்டால் கோவலனின் மனநிலை தெளிவாகத் தெரியும். அன்னமும் அவனால் விரட்டப்பட்டது. அவன் நெஞ்சமும் அவளால் விரட்டப்பட்டது. இரண்டும் ஒன்றாகி அன்னத்தில் உருவில் காட்சியளிக்கின்றன. முன்னால் பார்த்தால் அன்னப்பறவை; பின்னால் பார்த்தால் கோவலன் நெஞ்சம். இந்த நெஞ்சத்துக்கு (அன்னம்) என்ன செய்தி சொல்கிறான் கோவலன்? "அன்னமே நீ அவளை சேராதே. ஏனெனில் உன் நடை (ஒழுக்கம்) வேறு; அவள் நடை (ஒழுக்கம்) வேறு, இரண்டும் ஒத்துவரா. அவள் பிறரை உழக்கித் (வருத்தி) திரிபவள். நீயோ இவள் நடைக்கு ஒப்பாகேம் என வருந்தி இருக்கிறாய் இரண்டும் ஒத்துப் போகாதவை என்பதை உணர்ந்து கொள் என்கின்றான்.

## இரு வேறு நடைகள்:

பொதுவாகக் கணிகையர்க்கென்று சில ஒழுக்கங்கள், நடைமுறைகள் உள்ளன. பொருள் தருவாரைச் சார்வதும், பொருளில்லாரை விலக்குவதும், தன்னை விட்டு ஒருவன் பிரிந்து சென்றால் வருந்தாமையும் அவர் தம் இயல்புகளாம். இங்கு, மாதவி கோவலனைப் புறஞ்செல்லாது தடுக்கின்றாள். இது குல மகளிர் மரபைச் சார்ந்த ஒழுக்க நெறியை மீறி என்னைக் கட்டுப்படுத்த முனைகிறாள் என்பதனை, 'நீர் வே-யை உழக்கின்றாள்' என்ற தொடர் வெளிப்படுத்துகிறது.

### சேரல் மட அன்னம் - பிரிந்து செல்லும் முடிவு:

நெஞ்சே அவள் உழக்கியது மட்டுமல்லாமல் நடன அரங்கமென்றும், ஒத்திகை என்றும், இசைவாணரோடு ஆய்வென்றும் திரிபவள். ஆகவே, நெஞ்சே அவளைச் சேராதே

என்று மொழிகின்றான். பிரிந்து செல்ல வேண்டும் என்ற வித்து மாதவி பாடிய பிறகு போடப்படவில்லை. இங்கேயே போடப்பட்டு விடுகிறது. வாய் திறந்து அவள் சொல்வதற்கு முன்பே, அவளது கண் தெரிவித்த கருத்தை வைத்தே, பிரிந்து செல்லும் முடிவு அவனுள் அரும்பி விட்டது என்பதைச் 'சேரல் மட அன்னம்' என்ற தொடர் மும்முறை அடுக்கி வந்ததனால் அறியலாகும்.

## மாதவியைப் பழிக்கும் நான்கு பாடல்கள் தரும் குறிப்பு:

இந்நான்கு பாடல்களும் மாதவியை மனத்துட்கொண்டு பாடியவையே என்பதைக் குறிக்கும் செய்திகளாவன:

1. அகத்துறைப் பாடலைத் தொடங்கிய கோவலன் அக்காத-யைக் 'கரிய மலர் நெடுங்கண்' என்று அடையாளம் காட்டியவள் - இப்பாடல்களில் 'செங்கண்' என்று வேறு அடையாளம் காட்டுதல்.
2. ஏனைய பாடல்கள் எல்லாம் விருப்பத்தை வெளிப்படுத்தியும், விருப்பு, வெறுப்புக் கலந்து வெளிப்படுத்தியும் காணப்பட, கடைவி நான்கு பாடல்கள் வெறுப்பை மட்டுமே வெளிப்படுத்துகின்றன.
3. இந்திர விழவூர் எடுத்த காதையின் இறுதியில் 'மாதவி செங்கணும்' என்று காட்டப்பட்ட கண் அடையாளம், மூன்று பாடல்களில் ஆறு இடங்களில் சுட்டிக்காட்டப்படும் இயல்பில்லா நிலை.
4. கோவலன் பாடும் கானல்வரிப் பாடல்கள் பிறவற்றில் நெடுங்கண், வேற்கண், நேர்கயற்கண் முத-ய கூறப்படுகின்றன. 'பவள உலக்கை' என்று தொடங்கும் மூன்று பாடல்களைத் தவிர வேறு எங்கும் செங்கண் குறிக்கப்படாமை.
5. அச்செங்கண் வெய்ய, கொடிய கொடிய, கூற்றம் என்ற அடுக்குகள் காட்டும் செய்தி.
6. 'சேரல் மடவன்னம்' என்ற ஒரே பாட-ல் 'சேரல்' (சேராதே) ஆறு இடங்களில் இடம் பெற்றுள்ளமை.

இக்காரணங்களால், இந்நான்கு பாடல்களும், ஏனைய பாடல்களி-ருந்து வேறுபட்டவை என்பதும், இவை மாதவியின் இயல்பைப் பழித்துக் கூறுபவை என்பதும் தெளிவாக விளங்குகின்றன.

"விருப்பு : அதற்குத் தடைவ ந்தால் வெறுப்பு" என்ற கோவலின் வாய்பாடு இக்கானல்வரியிலும் தெளிவாகவே வெளிப்படுகின்றன.

# மாதவி பாடிய கானல் வரி

கோவலன் தன்னுள்ளக் குறிப்பையெல்லாம் துறைப்பாடல்களில் அமைத்துக் கூறியதனை மாதவி நன்கு கேட்டறிந்தாள்.

கானல் வரிப் பாடல் கேட்ட மான் நெடுங்கண் மாதவி என்பது இதனை விளக்கும் குறிப்புகளை உணர்ந்து கொண்ட மாதவி, ஒரு முடிவிற்கு வருகின்றாள். கோவலன் பாடிய பாட-ல் 'மன்னும் ஓர் குறிப்புண்டு; இவன் தன்னிலை மயங்கினான்' என்பதே இம்முடிவு. வெறுப்புக்குரியவர்கள் கூறும் நியாயங்கள் எடுபடுவதில்லை என்ற உலகியற்கை நன்கு தெரிந்தவள் அவள். தன் வெறுப்பைக் காட்டிக் கொள்ளாமல் மறைத்துக் கொள்கின்றாள். ஆனாலும் அவளுள்ளத்தில் புலவி கால் கொண்டு நின்றது. புலவியால் யாழ் வாங்கியவள் 'தானும் ஒரு குறிப்பினள் போல்' கானல் வரி பாடத் தொடங்குகின்றாள். அக்குறிப்பு, கோவலன் மயக்கத்தை அகற்றும் குறிப்பு; நீ இவ்வாறு அயலொருத்தியை விரும்புதல் முறையற்றது என்று எடுத்துக்காட்டி அறிவு ஊட்டும் குறிப்பு. ஆனால், அவள் வேறொருவனை விரும்பினாள் என்ற குறிப்பு இல்லை. இந்த வேறொருவன் போல வருபவன் கோவலனே. நான் உன்னைத் தான் நினைத்து உருகின்றேன் என்பதனை ஆங்காங்கே சிறு சிறு குறிப்புக்களால் எடுத்துக்காட்டவும் செய்கின்றாள். இறுதியில் 'ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு' என்ற முதுமொழி தான் வெல்கின்றது.

மாதவி பாடியபோது 'நிலத்தெய்வம் வியப்பெய்த நீணிலத்தோர் மனமகிழ' என்பார் அடிகள். யாழின் ஒ-யையும், அவள் சூழ-ன் ஒ-யையும் பிரித்தறிய முடியாதபடி இரண்டும் ஒன்றே என்னம் படியாக அமைந்திருந்தது. அவன் குரல் இங்கே கூட யாழொடு அவள் குரல் ஒத்துப் போய்விட்டது கோவலனோடு அவள் வாழ்வு ஒத்துப் போகவில்லையே என்பதைக் குறிப்பால் காட்டுகிறார் அடிகள். இப்பாட-ன் முடிவில் இவர்கள் பிரியவேண்டிய நிலை ஏற்பட்டு விடும் என்பதனால் நிலத் தெய்வம் வியப்பெய்தியதாம்.

## ஐவகைக் குறிப்பு:

கோவலன் பாடிய பாடல்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கொண்டு பார்த்தது போல, மாதவியின் பாடலையும் நாம் பிரித்துக் கொள்ளலாம்.

1. ஆற்றுவரிப்பாடல் முதல்பகுதி
2. கையுறை மறுத்தல் முதலாக அவர் அறிவுறுத்தி வரைவு கடாதல் ஈறாக உள்ள பன்னிரண்டு பாடல்கள் இரண்டாம் பகுதி.
3. பொழுதுகண்டு ஆற்றாளாகிய தலைமகள் தோழிக்கு உரைத்தல் முதலாகக் காமமிக்க கழிபடர் கிழவி ஆறாக உள்ள ஏழு பாடல்கள் மூன்றாம் பகுதி.

4. ‘ஆங்கமை பாடிய ஆய் இழை’ எனத் தொடங்கும் கட்டுரையும், தலைவி மாலைப்பொழுது கண்டு கூறுதலும் ஆகிய நான்கு பாடல்கள் நான்காம் பகுதி.
5. வரைவு நீட்டித்தவிடத்துத் தலைமகன் சிறைப்புறத்தானாகத் தோழி கூறுதல் ஐந்தாம் பகுதி.

### ஐவகைப் பகுப்புணர்த்தும் குறிப்பு:

முதற்பகுதி, கோவலனின் ஆற்றுவரிப்பாடலுக்கு மறுதலையாகப் பாடியது மட்டுமல்ல; அவன் கருத்தை மறுத்துப் பாடியதாகும்.

இரண்டாம் பகுதி, வயந்தமாலையிடம் கோவலன் கொண்ட விருப்பம் இழுக்கைத்தரும் என்பதை எடுத்துக்காட்டி மறுத்துரைப்பது.

மூன்றாம் பகுதி, கோவலனுக்கு அறிவுரை கூறுதல் பயனற்றது என்பதனைக் கண்டு கொண்ட பின்னர், மாதவி ‘அவன் அன்பின்றித் தனக்கு வாழ்வில்லை’ என்பதை உள்ளம் உருக எடுத்துக் கூளும் பகுதி.

நான்காம் பகுதி, கோவலனைப் பற்றிய எல்லாம் நம்பிக்கைகளும் இற்றொழிய அறிவிழந்து மயங்கிப் புலம்புவது.

ஐந்தாம் பகுதி, கோவலன் தனக்கு நல்கான் என்பது தெளிவாகவே, தனக்கு அவன் நல்கவில்லை என்றாலும், அவனாவது வாழட்டும் என்று கடல் தெய்வத்தை வேண்டுதல் வாயிலாக உணர்ச்சிப் புய-ல் இருந்து விடுபட்டு அறிவுச் சமனிலைக்கு வந்து விட்டதை மாதவி தெளிவாகக் காட்டும் பகுதி.

## முதற்பகுதி

மாதவி ஆற்றுவரிப்பாடலை ‘அவன் போக்கிலே’ தான் பாடுகின்றாள். மாற்றிப் பாடவில்லை. அவன் கருத்திற்கு மட்டுமே பதிலளிக்கிறாள். அவன், நான் உன்னோடு வேறுபட்டுப் பாடுகின்றேனேயன்றி மாறுபட்டுப் பாடவில்லை என்பதை வெளிப்படுத்துகின்றான். அதாவது ஏட்டிக்குப் போட்டியாகப் பாடவில்லை.

### பாடல் - 1:

காவேரி அழகிய பூக்களை ஆடையாகப் போர்த்துக் கொண்டு வருகின்றாள். அப்பூவாடையின் தேனை நுகரப் பக்கத்தில் வண்டுகள் ஆரவாரிக்கின்றன. பசிய கயல் கண்களால் விழித்துப் பார்த்தவாறு அசைந்து நடக்கின்ற காவிரியே நீ வாழ்க. கயற் கண்களால் நோக்கியவாறு அசைந்து நடப்பதற்கெல்லாமன் நின் கணவனாகிய சோழனின்

செங்கோல் வளையாமையே காரணம் என்பதனை அறிந்து கொண்டேன். காவிரியே நீ வாழ்க!

## மனைவியின் பிறழா, விழிப்பு நடை:

பூவாடையை இழுத்துப் போர்த்திக் கொண்டு கயற்கண்களால் காவிரி நடக்கும் நடையில் ஒரு குலமகள் நடக்கின்ற நடையைக் காட்டுகின்றாள் மாதவி. அக்குல மகளிரின் நடை (ஒழுக்கம்) சிதைவின்றி நடப்பதற்குச் சோழனின் செங்கோன்மையே காரணம் என்பதை எடுத்துக் காட்டுகின்றாள். எனவே, காவிரி குலமகள் நடையினைக் கொண்டு போற்றச் சோழனின் செங்கோன்மையே காரணம் என்று காட்டுவதன் வாயிலாக, உன் நடுநிலை பிறழா நெறியே என் வாழ்வு சிதையாமல் காப்பது என்பதனைத் தெளிவுப்படுத்துகின்றாள்.

சோழனைக் கணவன் என்றும், காவிரியை மனைவி என்றும் சொன்னமையால், கோவலனைக் கணவன் என்றும், தன்னை மனைவி என்றும் மாதவி நிலைநிறுத்திக் கொள்கின்றாள். இதன் வாயிலாகத் தான் பொருள்பெண்டு இல்லை என்பதனையும் தெளிவுபடுத்துகின்றாள். ‘காவிரி கருங்கண் விழித்து’ நடந்தாள் என்பதால், தான் விழிப்போடு நடப்பதையும், தான் கண்மூடிக் கிடக்கவில்லை என்பதையும், இவ்விழிப்புத்தான் சோழனை (கோவலனை) நடுவுநிலைமை பிறழாதிருக்கச் செய்வது என்றும், ஆகவே விழிப்புடைய காவிரியும் வாழ்க இவ்விழிப்பால் காக்கப்படும் துணையாகச் செங்கோனும் வாழ்க என வாழ்த்துகின்றாள்.

## பாடல் - 2:

மலர்கள் நிரம்பிய சோலைகளில் மயில்கள் அகவி ஆடவும், அச்சோலைகளில் குயில்கள் விருப்பத்தோடு இசைபாடவும், கண்ணையும் கருத்தையும் கவரவல்ல மாலைகள் இருபுறத்தும் அசையவும், காவிரியே நீ நடந்தாய், அழகிய மாலைகள் அசைய, நீ நடந்ததற்கு நின் கணவனாகிய சோழனின் அச்சம் தரும் வே-ன் திறமே காரணம் என்று அறிந்து கொண்டேன். காவிரியே நீ வாழ்க.

## நாமவேல் அருள் வேண்டும்:

வே-யின் திறம், தன் மண்ணைப் பிறர் கவராதபடி காப்பது தான். வேல், அதனைக் காவாதொழியின் காவிரி இந்த இனிய நடைநடக்க முடியாது. கோவலன் பிறரால் கவரப்படாதிருக்கும் வரையில்தான் யான் இனிய வாழ்வு வாழ முடியும் என்கிறாள் மாதவி. வே-ன் திறம் என்றது ‘நாமவே-ன் திறம்’ என்றதால், வே-யின் திறம் பகைவரை அச்சுறுத்துவது என்பது போதரும், (நாம-அச்சம்) வே-ன் திறம் கண்டறிந்த பின்னர்

மண்ணை நெருங்க அஞ்சுகின்றனர். இதுபோலவே கோவலின் இயல்பு, பிறமகளிர் நெருங்குவதற்கு அஞ்சுவதாக இருக்க வேண்டும். நின் இயல்பு அவ்வாறில்லையே, ஏன் என்று வினவுகின்றாள் மாதவி.

சோலையில் மயில் ஆடுவது கார்காலத்தில்; குயில்கள் பாடுவது இளவேனிற்காலத்தில் இரண்டும் ஒரே நேரத்தில் நடக்க முடியாதவை. எல்லாக் காலத்திலும் காவிரி காமர் மாலை அருகசைய நடக்கின்றாள். நானும் எல்லாக் காலத்திலும் அத்தகைய வாழ்வினைப் பெற நின் நாம வேல் (பிற மகளிர் அஞ்சி விகும்படியான ஒழுக்கம்) அருள் செய்யக்கூடாதா என்று கேட்கிறாள்.

## பாடல் 3:

சோழனின் வளநாட்டு உயிர்களை எல்லாம் மகவாய்க் கருதி அவற்றையெல்லாம் வளர்க்கும் தாயாகி, ஊழிக்காலம் முடியும் மட்டும் அவ்வுயிர்களை உண்பித்து வளர்க்கும் பெரிய உதவியி-ருந்து விலகாத காவிரியே நீ வாழ்க. அப்பெயரிய உதவியி-ருந்து விலகாது நடப்பதற்குக் கடலை ஆள்பவனும், பக-ல் வெப்பத்தைச் செய்பவனும் ஆகிய ஞாயிற்றின் அருளே காரணம் என்பதை, அறிந்து கொண்டேன். காவிரியே வாழ்க.

## வெய்யோன் அருள் வேண்டும்:

ஞாயிறு கட-ன் மீது தன் ஆட்சியைச் செலுத்தி மழையைத் தருகின்றது. அம்மழை தரும் வளத்தால், காவிரி தாயாகி நின்று வளநாட்டு உயிர்களுக்கு ஊட்டகின்றது. அஞ்ஞாயிற்றின் அருள் இல்லையென்றால், காவிரி தாயாக முடியாது என்பது தெளிவாகிறது. ஆகவே கோவலன் நின்னருளால் தான் தாயாக வாழ்கின்றேன். என் தாயாகும் தன்மையும், அது தொடர்பான வாழ்வும் நின்னருளால் உண்டாயிற்று அவ்வருள் என்றும் தொடர அருள் செய் என்கின்றாள் மாதவி.

நின்னருள் கிடைக்கவில்லை என்றால், எனக்குக் கணவனின் தலையளி கிடைக்காது. மணிமேகலைக்குத் தந்தையின் தலையளி கிடைக்காது. இவற்றையெல்லாம் நினைவில் கொல் என்பதனை, 'ஆழி ஆள்வாள் பகல் வெய்யோன் அருளே' என்ற தொடரால் வெளிப்படுத்துகின்றான்.

வெய்யோன் என்ற சொல் ஞாயிற்றையும் குறிக்கும்; விருப்பத்திற்குரியவன் என்றும் பொருள்பட்டுக் கோவலனையும் குறிக்கும். அவ்வெய்யோனின் அருள்தான் காவிரிக்கு நீரை அருளுகின்றது என்று குறிப்பால் வெளிப்படுத்துகின்றாள் மாதவி.

# இரண்டாம் பகுதி

## கையுறை மறுப்புப்பாடல்:

அடுத்து வருவது ‘தோழி கையுறை மறுத்தது’ என்னும் துறை, தலைவனின் கையுறையை மறுப்பது போலக் கோவலனின் விருப்பத்தை மறுக்கின்றாள் மாதவி.

இனிய கதிர்களையுடைய திங்கள் போன்ற முகத்தையுடைய எம் தலைவியின் சிவந்த வாயின் பற்களுக்கு நீர் தரும் முத்துக்கள் ஒப்பாக மாட்டா. எனினும் இக்கையுறையை வாங்குக என்று கூறி இம்முகத்தைச் சுமந்து மயக்கமுற்றாற் போல் ஒவ்வொரு நாளும் வருகின்றீர். ஐய பெரிய மலைகளால் கடலானது முத்துக்களை வீசி, அதற்கு விலையாகக் கரையில் கிடக்கும் மாலைகளைப் பெற்றுக்கொண்டு விலைஞர் போல் செல்லும் புகார் தாம் எங்கள் ஊர்.

## முத்துக்குப் பதில் மாலையா:

இதில் கோவலன் விருப்பத்தை மாதவி எவ்வளவு திறமையாகவும், மனம் கொள்ளுமாறு மறுக்கின்றாள் என்பது தெளிவாகும். நின் தகுதிக்கும், என் தகுதிக்கும் நீ இன்னொருத்தியை நயக்கும் விருப்பும் ஒவ்வாது; எனினும் மயக்க முற்றவன் போல, மீண்டும் மீண்டும் அதனையே கூறிக்கொள்வாய். கடலானது முத்தைக் கொடுத்து விட்டு, மாலையை அதுவும் பிறர் பயன்படுத்திய மாலையைப் பெற்றுச் செல்வது எவ்வளவு பொருத்தமற்ற செயல். இச்செயலையா நீ விரும்புகின்றாய். முத்தை (என்னை) இழந்து மாலையனையாளைப் பெறுவது அறிவுடைமை ஆகுமோ? ஆகவே இவ்வாசையை ஒழி என்று மறுக்கின்றாள்.

அடுத்து வரும் பாடல், தோழியுற் கூட்டம் கூடிப் பின்பு வந்து வரைவல் என்ற தலைவனுக்குத் தோழி கூறியது. களவில் புணர்ந்து சென்ற தலைவர் வரைவோடும் வராமையால், அப்பாக்கத்திலுள்ள பெண்ணின் சிவந்த முன் கையில் அணிந்துள்ள வளையல்கள் சுழன்று வீழ்ந்து தூற்றுவதை அறிவிலேம் ஆகிய யாம் எங்ஙனம் அறிவேம். நியைப் பூத்துள்ள புன்னை மரத்தின் நீண்ட கொம்புகளில் அன்னப் பறவை ஏறி அமர, அன்னப்பறவையை நிலவாகவும், பூக்களை வீண்மீன்களாகவும் கருதி வண்டகள் ஆம்படத்துச் சென்று ஊதும் எம்மூர்.

## அலரா ஆம்பலை ஊதும் வண்டு:

புன்னைக் கொம்பல் ஏறியிருந்த அன்னம் நிலவாகத் தோன்றுவதும், புன்னை மலர்கள் விண்மீன்களாகத் தோன்றுவதும் போ-த் தோற்றம் தான். இப்போ-த் தோற்றத்தை

உண்மை என மயங்கி வண்டு எவ்வளு பேதைமையடையது; நின்மாட்டு உண்மை அன்புடையார் யார் என அறியாது, போ-த் தோற்றம் கண்டு மயங்கும் நின் பேதைமை எத்தகையது? போ-த்தோற்றம் தந்த மயக்கத்தால் வண்டு அலராத ஆம்பலைக் கண்டு ஊதுவது போல, அயலொருத்தியின் போ-த் தோற்றம் தந்த மயக்கத்தினால் என்பால் நின் விருப்பை ஓதி நிற்கின்றாய். வண்டு ஊதினாலும் மலர் இதழ்கள் திறக்கப் போவதில்லை. நீ என்ன கூறினாலும் என் நெஞ்சம் திறக்கப் போவதில்லை என்கின்றாள் மாதவி.

## மணலை அள்ளிக் கடலைத் தூர்த்தல் போல:

"உண்டவர்கள் தோற்க உண்ணப்பட்ட கள் வெற்றி பெறும் பாக்கத்துள், மருந்தொன்றும் இல்லா காமநோயைத் தலைவிக்குத் தருவாய் என்பதனை எவ்வாறு அறிவோம். கடலானது தன் அலைகளால் சிறுமியின் வண்டலம் பாவையை அழிக்க, அச்சிறுமியின் மதி போன்ற முகத்தில் நீண்டு சிவந்த கண்களில் நீர் ததும்பி நிற்கக் கடல் மீது சினம் கொண்டமையால் மணலை அள்ளிக் கடலைத் தூர்த்துவிட முனையும் புகார் அல்லவா எம்முடைய ஊர்.

## வருத்தம் சொல் - அழுகின்றாள் மாதவி:

உண்ணப்பட்ட கள் மண்பாரை வென்று தன் வயமாக்கி விடுகின்றது. அதுபோலக் கொள்ளப்பட்ட காமம் கொண்டாரை வென்று தன்வயமாக்கிக் கொள்கிறது. தலைவி தன்வயமாக இருக்கும் வரையில் எந்நோயும் உற்றாளில்லைவ; காமத்தின் வயப்பட்டதும் மருந்தில் தீரா நோயை அடைந்து துன்புறுகின்றாள். இக்காமமும், இக்காமம் தந்த தலைவனும் இப்பெரிய நோயைத் தருவான் என்பதைப் பேதையேம் எவ்வாறு அறிவோம் என்கின்றாள்.

கோவல நின் வயமாகிய நான், நீ கொடுத்த நோயால் துன்புறுகின்றேன் என்றும், நீ இத்தகைய துன்பத்தைத் தருவாய் என்பதை அன்றே நான் அறிந்தேனில்லையே என்றும் மாதவி கூறி வருந்துகின்றாள். தன் வண்டலை அழித்த கடலைச் சிறுமியர் மணலை அள்ளிப் போட்டுத் தூர்க்க முனைந்தாலும் அது முடியாது என்பதுதான் உண்மை. அதுபோல, என் இன்பத்தையெல்லாம் அழிக்கின்ற நின் விருப்பமாகிய கடலை, என் அறிவுரைகளாகிய மணல்களால் தூர்த்து விட முடியாது என்பதையும் அறிவேன்.

மாதவி இங்கே கண்களில் நீர் மல்க நிற்பது வேறு யாருமில்லை; யானே என்பதை நீண்ட புண்நோய் வேல் நீர் மல்க என்ற தொடரால் வெளிப்படுத்துகிறாள். புண் தோய்ந்த வேல், செந்நிறமாக இருக்கும். இங்கே வேல் என்பது கண்ணை உணர்த்தும். நீண்ட சிவந்த கண்கள் மாவிக்கே உரியன. ஆகவே, மாதவி கோவலனிடம் தன்வருத்தம் சொல்-அழுகின்றாள் என்பதன்றி வேறொருவனை விரும்புவதாகக் கூறி வருந்தவில்லை.

## வ-தாகச் சொல்-க் குறை நயப்பித்தல் துறை:

குறை நயப்பித்ல் என்ற துறையில் அமைந்த பாடல் அடுத்து வருவது "தன் துணையோடு புணர்ந்து ஆடுகின்ற, புள்ளிகளையுடைய நண்டையும் நோக்கிப், பூங்கொத்துக்கள் நிரம்பிய அழகிய காலையில் என்னையும் நோக்கி உணர்வு அழிந்து திரும்பிச் சென்ற நெய்தல் நிலத்தலைவன் என்ன ஆனான் என்பதை அறியேன்" கூடி வாழும் நண்டுகளைக் கண்டதும், தலைவியோடு தானும் கூடி மகிழ அளாவிய தலைவன், அது நிறைவேறாமையால் நண்டையும் நோக்கி, என்னையும் (தோழி) நோக்கி உணர்வொழிந்து சென்றான். அவன் உயிரோடு உள்ளானா? அலனோ? என்று வன்மையாகக் கூறித் தலைவன் விருப்பத்திற்கு இணங்குமாறு தோழி கேட்பதானல் இது வ-தாகச் சொல்-க் குறை நயப்பிக்கும் துறை ஆயிற்று

இதற்கு ஆதாரம் உள்ளது கலமறுகில் வயந்தமாலை கொடுத்த மாதவியின் முடங்கலை வாங்க மறுத்த கோவலன், மாதவியைப் பழித்துப் பல செய்திகள் கூறுகின்றான்.

**'அந்திமாலை வந்ததற்கிரங்கி**

**சிந்தை நோய்கூரும் என்சிறுமை நோக்கி'**

என்பது அவன் கூற்று.

மாலை நேரம் வந்தால், அவனுக்கு ஒரு மயக்கம் வந்து விடுமாம். கூடி மகிழ வேண்டும் என்ற மயக்கம் தான் அது. ஒன்றைப் பார்த்து வேட்கை கொள்ளும் தன்னியல்பைச் சிறுமை என்று கூட பேசுகின்றான்.

ஒன்றைப் பார்த்ததும் அதன் வயமாகிப் புலனழியும் இயல்பு அவனுக்கே உரிய ஒன்று. மாலையைப் பார்த்தே அவன் மயங்குவான் என்றால், துணையோடு புணர்ந்தாடும் அலவனைப் பார்த்தபோது அவன் எத்தகைய உணர்ச்சி வயப்பட்டிருப்பான். ஆக, இந்நிகழ்ச்சிகளை அவனுக்கு நினைவூட்டுவதன் மூலம், யான் வேறோரு ஆடவனை எண்ணிப் பாடினேன் அல்லேன்; நின்னையே பாடுகின்றேன் என்பதைத் தெளிவாக வெளிப்படுத்துகிறாள்.

நான் உன்னைத்தான் (கோவலன்) பாடுகின்றேன் என்ற குறிப்பை வெளிப்படுத்தி விட்டதால், மாதவி அவன் பிரிந்ததால், தான் அடையப் போகும் பெருந்துயரத்தைக் 'காமம் மிக்க கழிபடர் கிளவி' என்ற துறைப்பாடல்களால் சொல்-ச் சொல்-அழுகிறான்; பாடிப்பாடி அரற்றுகிறாள்.

## காமம் மிக்க கழிபடர் கிளவி:

காமம் மிக்க கழிபடர் கிளவியாக வரும் பாடல்கள் ஐந்து. இவற்றில் முத-ரண்டு பாடல்களை ஒரு தொகுப்பாகவும், பின் மூன்று பாடல்களை ஒரு தொகுப்பாகவும், உள்ளதனை உற்று நோக்க வேண்டும்.

1. "நம்மை மறந்தாரை நாம் மறக்கமாட்டேமால்" என்பது காதல் உலகின் வேதம் என்று கூற வேண்டும். "என் தலைவர் தாமும், தம்முடைய தண்ணளியும், தடுமாறி வந்து சேரும், அத் தேரில் பூட்டப்பட்ட குதிரையும் என்னை விட்டு விலகினார் என்றால் விலகுக. அழகிய பூங்கொத்துக்களையுடைய அடும்பங் கொடிகளை அன்னங்களே நம்மை மறந்தாரை நம்மால் மறக்க முடியவில்லையே என்று மாதவி கூறும்போது, கலங்காத கண்களும் கலங்கி விடுகின்றன.

'அன்னம் துணையோடு ஆடக்கண்டு' காமுற்று அவளோடு கூடி அன்புற்றவன் ஆதலால் அதனை நினைவு கூர்வாள். அன்னங்கள் நம்மை மறந்தாரை, நாம் மறக்கமாட்டோம் என்கின்றாள்.

## நெய்தல் மலரே கோவலன் கனவில் வரக் கண்டாயா?

2. வருத்தத்தை மிகுவிக்கும், இம்மாலைப் பொழுதில் தனிமையுற்று வருந்தும் என் கண்ணைப்போல் துன்பம் உழவாமல், உறக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றாய். இனிய கள்ளையுடைய நெய்தல் மலரே நீ எய்தும் கனவினுள், அன்பற்ற என் தலைவர் இக்காலையிடத்தே வரக் கண்டாயோ?

நிறத்தால் என் கண்ணை ஒத்திருந்தும், செய்கையால் அதனோடு மாறுபடுகின்றாள். மாலைப் பொழுதில் நெய்தல், இதழ் குவியும், அதனைத்துயில்வதாகக் கருதி, என் கண் துயி-ன்றி வருந்தவும் நீ துயி-ன்றி வரந்தவும் நீ துயில்கின்றாய் என்றாள். உறங்குவார்க்குக் கனவும் உண்டு. 'எனவே நீ உய்தும் கனவினுள்' என்றார் என் கண் துயிலாமையால், யான் கனவிலும் காணப் பெறவில்லை. நீ கனவில் கண்டிருக்க வேண்டும்; எனவே கூறுவாயாக. அவனைப் பிரிந்து, அவள் எத்தகைய துயரமுற்றாள் என்பதனை வயந்தமாலையிடம் அவன் கூறிய பழிப்புரைகளி-ருந்து முன்பே நாம் அறிந்துள்ளோம். இவ்விரண்டு பாடல்களும் உள்ளார்ந்து குறிப்பு எதனையும் கொண்டிருக்கவில்லை. உடலே யாழாக உள்ளமே நரம்பாக அவல இசையை எழுப்பிக் கொண்டிருக்கிறாள்.

## கடலை நோக்கிக் கூறும் பாடல்கள் மூன்று:

அடுத்து வரும் மூன்று பாடல்களம் துயரத்தைத் தான் வெளிப்படுத்துகின்றன. இவை மூன்றும் கடலை நோக்கிக் கூறப்படுகின்றன. கடல் ஒரு குறியீடாகப் பயன்படுத்தப்படுகின்றது.

3. "என் காதலர் என்னைக் கூடிக்கலந்த பின்னர், ஏறிச்சென்ற தேர்ச் சக்கரத்தின் கவடுகளை எல்லாம் கடலையே நீ அழித்துவிட்டார். எல்லாச் சுவடுகளையும் நீ அழித்துவிட்டால், நான் என்ன செய்வேன். கடலையே அவற்றை எல்லாம் சிதைந்த பின்னர், இங்கு இருக்கின்றாய்; பக்கத்திலே இருக்கின்றாய். இது தவறென உணராய் இன்னும் என்ன செய்வாயோ",

தேர் ஆழி போன சுவடுகளை எல்லாம் அழித்துச் சிதைத்த கடல். தனக்கும் கோவலுக்கும் உள்ள காதல் உறவை சிதைக்கத் தோன்றிய ஒருத்தியே என்பதை மாதவி திறமையாக வெளிப்படுத்துகின்றாள். அலையே (வயந்தமாலை) நீ எம்மோடும் உள்ளாய்; எமக்குத் தோழியாகவும் உள்ளாய். எம்மோடு உள்ளோரோடும் உள்ளாய். எம்மை நினையாதவராகிய - மறந்தவராகிய கோவனோடும் உள்ளாய் இது தவறு என உணராய். உடனிருந்த அலையே இவ்வாறு செய்தால் நான் என்ன செய்வது?

4. கூடி மகிழ்ந்த நம் காதலின் பெரிய தேர்ச்சக்கரங்கள் ஊர்ந்து நின்ற வழி சிதையுமாறு புரண்டு வருகின்றன அலைகள். அழகிய சோலைகளே, கூடியாடும் அன்னங்களே குளிர்ந்த கடல்துறையே நீங்கள் ஓதமே (வயந்தமாலையே நின் செயல் தக்கதன்று என்று சொல்ல மாட்டீர்களா?

அவையே சிதைக்காதே, சிதைக்காதே என்று கூறும் மாதவியின் குரல், அடியே சிதைக்காதே என்பது போல் தான் ஒ-க்கின்றது. அழகிய பொழிலே இங்குத்தானே நாங்கள் கூடி மகிழ்ந்தோம். நீயேனும் இதுதகாது என்று கூறக்கூடாதா, புணர்ந்தாடும் அன்னங்களே நீங்கள் புணர்ந்தாடியது கண்டபோதெல்லாம் என்னோடு கூடிமகிந்தாரே, அவற்றையெல்லாம் நீங்கள் அறிவீர்களே. அறிந்த நீங்களாவது, இது தகாது என்று கூறக்கூடாதா? ஈரமிக்க துறையே உன்னிடம் ஈரம் (அன்பு) இருப்பது உண்மையானால், இது தகாது என அவரிடம் கூறாதிருப்பது ஏன்? அவரிடம் மட்டுமன்று; இது தகாது என்பதை அந்த அலையிடத்தும் (வயந்தமாலை) கூறக்கூடாதோ?

பொழிலே நீ பூத்திருக்கின்றாய்; யானோ துயரத்தில் கூம்பி இருக்கின்றேன். அன்னங்களே நீங்கள் புணர்ந்து மகிழ்கின்றீர்கள். தனிமைத் துயரத்தால் வாடிக் கிடக்கின்றேன். துறையே நீ ஈரம் மிகுந்து இருக்கின்றாய். என் வாழ்வோ வறண்டு

போயுள்ளது. உடனிருக்கும் நீங்களே. என் நிலைக்கு இரங்கி, 'இது தகாது' எள்று அலையிடம் (வயந்தமாலை) கூறமாட்டீர்களா?

இத்துடன், தன்னுள்ளக் கருத்து முழுமையாக வெளிப்படுத்தப்படவில்லை என்று மாதவி கருதினாள். ஒரே செய்தியை வைத்துக் கொண்டே மூன்று பாடல்களை அவள் பாடுவதால். அவள் கருத்தெல்லாம் ஒன்றிலேயே நிலைத்து நிற்பதை உணரலாம். மூன்று பாடல்களிலும் தேர்ச்சக்கரத்தின் அடையாளம் சிதைக்கப்படுவது தான் பேசப்படுகின்றது.

5. என்னோடு கூடிக்கலந்த காதலரின் திண் தேர், ஊர்ந்து சென்ற வழி சிதைந்து போகுமாறு கடல் அலையே நீ ஊர்ந்து வந்தாய்; நீ வாழி, அது சிதையுமாறு ஊர்ந்து வந்த நீ எம்மோடு தேர்ந்து தெளிந்த உறவுடையாய் போ-ருந்து இப்போது உறவு நிலை தீர்த்தாற்போலப் பகையை ஆனாய்; நீ வாழ்க.

தேர்ந்து தெளியப்பட்ட உறவைப் பெற்றிருந்து, இப்போது உறவில்லாது போனது கடல் அலையா? வயந்தமாலையா? உறவுடையார் போல் நடந்துக் கொண்டே உறவின்றி வாழவேண்டிய இன்றியாமையாமை கடல் அலைக்கு இல்லை. ஆகவே, சுவடு அழிக்கும் கடல் அலையின் செயல், ஒரு குறியீடாகப் பயன்படுத்தப்படுகின்றதேயன்றி, இயல்பாக நிகழ்ச்சியாகக் கூறப்படவில்லை. மூன்று பாடல்களிலும் கடல் அலையே அழிப்பதாகக் காட்டுவதனாலும், மூன்று இடங்களிலும் அழித்து வி.ட்டு என்னோடுதான் இருக்கின்றாய் என்று கட்டிக் காட்டுவதாலும், என்னை நினையாதவரோடு உறவு கொண்டே உறவை அறுக்கின்ற வேலை செய்கின்றாய் என்று குற்றம் சாட்டுவதாலும், இப்பாட-ல் கடல் அலை வயந்தமாலைக்குக் குறியீடாகப் பயன்படுத்தப்படுவதை அறியலாம்.ஷ

## அலர் அறிவுறுத்தி வரைவு கடாதல்:

அடுத்து வரும் துறை, 'தோழி அலர் அறிவுறுத்தி வரைவு கடாதல்' என்னும் துறையாகும். மாதவி, தோழியின் நிலையில் இருந்து சிலவற்றை எடுத்துக் கூறி 'வரைக' (கட்டுப்படுத்துக) என வேண்டுகிறாள். இங்குக் கோவலன் மாதவி ஆகிய இருவரிடையே எழுந்துள்ள இலக்கியப் போராட்டத்தில் 'உன் ஆசைகளைக் கட்டுப்படுத்துக' என்ற பொருளில் ஆளப்படுகிறது.

கடல் அலைகள் முத்துக்களாகிய அணிகளை அணிந்தும், பவளமாகிய உடையை உடுத்தும் செந்நெல் விளையும் கழனிகள் தோறும் சென்று உலவி வரும் கடற்சேர்ப்பனே! புன்னை மரங்கள் செறிந்த சோலையில் மன்மதன் மலர்க்கணையால் எய்த புதுப்புண்களைத்

தலைவி யான் அறியாதவாறு மறைக்கின்றாள். இப்புண்களை அன்னை அறிய நேர்ந்தால் நான் என்ன செய்ய முடியும்.

தலைவன் வரைந்து கொள்ளாமையால் தலைவிக்கு ஏற்பட்ட வருத்தமும் உடல்மெ-வும் மன்மதன் எய்த புதுப்புண்களாகக் கூறப்படுகின்றன. நித்தில அணியும், பவள ஆடையும் உடுத்துத் தன்னை ஒப்பனை செய்து கொண்ட அலை, செந்நெல் பழன வயல்களில் சென்று உலவுகிறதாம். நன்றாகச் செழித்த செந்நெல் வய-ல் கடல்நீர் புகுந்தால், கானி அழியும், விளைவு குன்றும், கோவலா! நீயும் உலவித்தான் வருகிறாய். நின் உலவுதலால் அழிவைத் தவிர வேறு என்ன விளையும் என்று மாதவி கேட்கின்றாள். கழனிகளில் கடல் நீர் புகுவது முறையன். நீயும் வேறிடத்தில் புக நினைப்பது முறையன்று என்று எடுத்துக்காட்டுகின்றாள்.

மன்மதன் எய்த புதுப்புண்கள் தோழிக்குத் தோன்றாதவாறு மறைக்கலாம். ஆயினும் அன்னை ஒரு நாள் அறியவே செய்வாள். கோவலன், வேறொருத்தியை விரும்பிய இந்த ஒழுக்கம் இன்று குறைவாக இருக்கலாம். சிலருக்கு மட்டுமே தெரிந்த இந்த ஒழுக்கம், ஊருக்கும் (அன்னைக்கும்) தெரியலாம். தெரிந்தால் பெருமைக் குலைவு நேரும். அப்போது உன் பெருமையைக் காப்பாற்ற என்னால் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே வேறொருத்தியை விரும்பும் இவ்வெண்ணத்தை வரைந்து (கட்டுப்படுத்தி) கொள்க என்கின்றால் மாதவி.

"செம்பவளவாய் மலர்ந்தது. தரள நகை செய்து (சிரித்து) பரதர் வலைகாயும் முன்றி-ல் கடல் அலை வந்து உலவும் சேர்ப்பனே கார் காலத்தில் மலர்ந்த பீர்க்கமலர் போலும் வண்ணத்தை எம் தலைவி கொள்ள, இதனைக் கண்ட எம் அன்னை வேலனை அழைத்து, 'என் மகளுக்கு இக்கொடுமை இழைத்தவர் யார்?' என்று கேட்டு அறிந்து கொள்வாளாயின் நான் என்ன செய்ய முடியும்".

"கடல் அலை நகை செய்தும், வாய் மலர்ந்தும் மகிழ்ச்சியாகத்தான் உலவி வருகின்றது. நீயும் கூட, சிரித்தும் உரையாடியும் உலவி வருகின்றாய். அலை தாளமும், பவளமும் கொண்டு உலவுகின்றது. அங்குக் கவர்ந்து கொள்ளும் வலை முன்றி-ல் விரித்து வைக்கப்பட்டிருக்கின்றது. அலை மகிழ்ச்சியாக வந்தாலும் தாளத்தையும், பவளத்தையும் வலையிடம் இழந்துவிட்டு வருத்தத்தோடு செல்லுதல் இழப்பாய்; என்ன ஆனேன் என்று அழுவாய்" என்கின்றாள்.

3. "புலால் நாற்றத்தைப் பெற்று அந்நாற்றம் பெற்றதற்காக வருந்தி, அந்நாற்றத்தைப் போக்கிக் கொள்வதற்காகச் சோலைகளுக்கிடையே புகுந்து சென்று, ஆண்டு உதிர்ந்து கிடக்கும் பழம்பூக்களின் கலவை மணத்தைப் பெற்றுக் கொண்டு அலை வந்து உலாவுகின்ற

சேர்ப்பனே பலவாறு சிந்தித்தும் இது என்ன நோயால் விளைந்தது என்று பிறர் க்ணடறிய முடியாத துக்கத்தில் தலைவி வருந்த, அதனால் வருத்தமுற்ற அன்னை, தலைவியின் நோய் தலைவனால் வந்தது என்று பிறர் அறியாதவை அறிந்து கொள்ள நேருமாயின் நான் என் செய்வேன். ஆகவே, அன்னை அறியுமுன் வரைந்து கொள்க.

'அலையானது தன்னிடம் இயல்பாக உள்ள புலால் நாற்றத்தைச் சோலைகளில் சிந்தியுள்ள பழம்பூக்களைக் கொண்டு மாற்றிக் கொண்டு உலாவுகின்றாற் போலக் கோவல! உன்னிடம் இயல்பாக உள்ள பெருங்காம வேட்கையை மறைத்துக் கொண்டு, காதல், அன்பு என்று பேசித் திரிகின்றாய். இம்மூன்று பாடல்களிலும் அலை அணிகளும், ஆடையும் புனைந்து உலாவுவதற்காகவும், நகை செய்தும் (சிரித்தும்), வாய் மலர்ந்தும் (உரையாடியும்) திரிவதாகவும், தன் தீய நாற்றத்தை (ஒழுக்கத்தை) நன்னாற்றத்தால் மறைத்துக் கொள்வதாகவும் கூறுவதனைக் கோவலன் இயல்புகளோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இதன் வாயிலாகக் கோவலனையே குறிப்பிடுகின்றாள் என்பது தெளிவாகும்.

## மூன்றாம் பகுதி

இத்தனை ஆண்டுகள் அன்பு பூண்டு ஒழுகிய கோவலன் இப்போது மாறிவிட்டானே தன் புதிய உறவுக்கு என்னுடைய ஒப்புதலை வேறு கேட்கின்றானே இதற்கு ஒப்புவது தான் கற்பு என்று பேசுகின்றானே என்று மன அமைதி இழந்த மாதவி, நம்பிக்கை இழந்து புலம்புவதனை அடுத்த துறையில் பார்க்கப்ப போகிறோம். பொழுது (மாலை) கண்டு ஆற்றாது அலமரும் இயல்பு கோவலலுடையது என்பது முன்னர்க் காட்டப்பட்டது. கோவலனின் இவ்வியல்பைத் தன்னியல்பாக மாற்றிக் கொண்டு மாதவி பாடுகின்றாள் இதனால் கோவலன் உள்ளம் சற்றேனும் கனியாதா என்று எண்ணியிருப்பாள். அவளுடைய பாட-ல் நம்பிக்கை அழிவு தான் காணப்படுகின்றது. தன்னுடைய தருக்க வாதத்திறமைகள் கோவலன் முகத்தில் எந்த மாறுதலையும் ஏற்படுத்தவில்லை என்பதை அறிந்தாள், எனவே இனி உள்ளம் கரைய வேண்டுவதுதான் பயன்தரும் என்று முடிவெடுக்கிறாள். கல்லையும் பிசைந்து கனியாக்கும் தன்மையன அவள் பாடல்கள்.

1. "முறுக்கவிழ்ந்த மலர்களைக் கூந்த-ல் அணிந்தவளே இளைய இருள் எங்கும் கவிந்து விட்டது. பகலைச் செய்யும் ஞாயிறு மறைந்து விட்டான். நிக்குதற்கரிய தனிமைத் துயரால் கண்கள் நீரைப் பொழிந்தன. பிரிவுத்துயரால் என் வளையல்கள் கழல, நெருப்பைச் சிந்திக் கொண்டு வந்த இம்மாலைப் பொழுது நம்மைப் பிரிந்து சென்ற தலைவரின் நாட்டிலும் உண்டோ?

மருள் மாலை நேரம் நெருப்பைச் சிந்தும் ஞாயிறு மறைந்தபின், இருள் எவ்வாறு நெருப்பைச் சிந்த முடியும்? அது தான் காதல். அவளுடைய துயரவெப்பம் படிக்கும் நம்மையும் கூடச் சுடுகின்றது.

2. ‘கதிரவன் மறைந்து விட்டான். கரிய இருள் எங்கும் பரவி விட்டது. மலர் போன்ற மையுண்ட கண்கள் துன்பக் கண்ணீரைச் சொரிந்தன. புதிய மதி போன்ற முகத்தினையுடையளே வெண்ணிலலை உமிழ்ந்து ஞாயிற்றை விழுங்கி வந்த இம்மயக்கம் தரும் மாலப்பொழுது நம்மை விட்டுப் பிரிந்து சென்ற தலைவனின் நாட்டிலும் உண்டோ?

விழுங்கி உமிழ்வது தான் இயல்பான நடைமுறை, அதற்கு மாறாக மதியை உமிழ்ந்து, கதிரை விழுங்கியதாகக் கூறுவதில் மீண்டும் ஒரு மனக்குழப்பத்தைக் காண்கிறோம். சிறிது தெளிவுற்றது போல மாதவி விளங்கினாலும் மீண்டும் குழப்பமடைகிறாள் என்பதனையே இது காட்டுகிறது. இப்பாட-ல் முதற்பாட-ல் சொல்லப்பட்ட செய்திகள்தாம் மீண்டும் கூறப்படுகின்றன. உணர்ச்சி வயப்பட்ட ஒரு மனிதன் ஒரே செய்தியைத் திரும்பத்திரும்பக் கூறுதல் தவிர்க்க முடியாதது, இந்த உளவியல் நுட்பத்தைத்தான் இரண்டாவது பாடல் எடுத்துக் காட்டுகிறது.

3. ‘பறவைகள் தத்தம் கூடுகளை அடைந்து ஒ-அவிந்தன. சூரியனும் மறைந்தான். நிறுத்த நில்லாத தனிமைத் துன்பம் அதிகரித்தது; நெடிய கண்கள் நீரைச் சொரிந்தன. மலர் சூடிய குழலாய்! மறத்தினையுடையதாகி என் உயிரைக் கவர வந்த அம்மருள்மாலை நம்மைத் துறந்து சென்ற தலைவரின் நாட்டிலும் உளது கொல்’.

இந்த மருள் மாலை மதியை உமிழ்ந்த, கதிரை விழுங்கிக் கண்ணீர் பொழிய வைத்தது. இப்பொழுது என் உயிரைக் கவர என் மேல் பாய்கிறது என்கிறாள் மாதவி. மாலைப் பொழுது கோவலனுக்கு மயக்கம் தரும் பொழுது என்பதை மாதவி அறிவாள். ஆகவே, அம்மாலை தரும் துயரத்தை எடுத்துக் கூறினால், கோவலன் உள்ளம் கரையும் என்பதால் இவ்வாறு பாடுகின்றாள். தலைவி மாலைப்பொழுது கண்டு கூறல், என்ற துறையிலும், அதற்கு துறையிலும், இதைத்தான் கூறுகிறாள். ஆக, இம்மூன்று துறைகளிலும் இம்மாலைத் துயரத்தைத்தான் பாடுகிறாள்? ஏன்? கோவலின் பலவீனத்தைத் தன் பலமாக ஆக்கிக்கொள்ள மாதவி படாதபாடு படுகின்றாள்.

இனி, அடுத்த துறையாக வரும் ‘தோழி இயற்பழிக்கத் தலைவி இயல்பட மொழிந்தது’ என்ற துறையில் ஓரளவு நம்பிக்கையோடு பேசுகின்றாள் மாதவி. தான் மாலைத்துயரம் கோவலன் உள்ளத்தை அசைத்தே இருக்கும் என்ற எண்ணத்தால் புதிய

நம்பிக்கை பிறக்கிறது. இயற்படமொழிந்தது என்ற துறையே தலைவன் மாட்டுத் தனக்குள்ள நம்பிக்கையைத் தலைவி வெளிப்படுத்துவதுதான்.

1. "தாழைகளையே வே-யாகக் கொண்ட கடற்கழியில் வந்து நம் விளையாட்டு இயல்பை அழித்துப் போனார் ஒருவர். அவ்வாறு அழித்துப் போன அவர் மயக்கம் கொண்ட நம் மனத்தை விட்டு நீங்கமாட்டார். இதற்கு முந்திய பாடல்களில், 'தணந்தார்' 'போனார்' 'துறந்தார்' என்றெல்லாம் கூறியவள் நம்மைவிட்டு அகலமாட்டார் என்று கூறுவது நம்பிக்கைதானே.

வாய்மொழி காவா அவன் ஒரு பொய்யன் என்று தோழி பழித் திருக்க வேண்டும். இந்தப் பழிப்புக்குத்தான். தலைவி மேற்கண்டவாறு பதிலளித்து, நம்மைவிட்டு 'அகல்வார் அல்லர்' என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றாள்.

2. "கானற் சோலைகளை வே-யாகக் கொண்ட கழியிடத்து வந்து, நீ நல்கு என்று நம்பின் நின்றார் ஒருவர். அவ்வாறு நின்ற அவர், நாம் மான் போல மருண்டு பார்த்த பார்வையை மறக்க மாட்டார்".

இப்பாட-ல் மாதவி, கோவலனுக்கும், தனக்கும் களவு நெறி உண்டு என்பதைக் காட்டுவது போல உள்ளது. அவன் மாலையை வாங்கி மணவாளன் ஆகுமுன்பே இவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்திருப்பார்கள் போலும், கூனி, மாலையைக் கையில் ஏந்தி, விலைகூறி நிற்கவில்லை. கோவலன் அந்த இடத்திற்கு வரும் வரைக் கூனி நின்றுவிட்டு, அவன் வந்ததும். மாலையை வாங்கிக் கொண்டு அவளை உரிமையாக்கி உள்ளான் என்று கொள்வது பொருத்தமாக இருக்கும்.

கோவலன் மாலையை வாங்குமுன் மாதவியைக் கான-ல் கண்ட நிகழ்ச்சியை இப்பாட-ல் கூறுகின்றாள் என்று கொள்வது முறைதான். அவ்வாறு அவன் அவளைக் கண்டபோது 'நீ நல்கு' என நின்றிருக்கக் கூடும். அப்போது அவள் கொண்ட மருண்ட நோக்கைப் பின்னர் அவளிடம் கூறியிருத்தலும் கூடும். அதனை இப்போது நினைவூட்டும் பொருட்டு, "மானோர் நோக்கம் மறப்பார் அல்லர்" என்று அவள் கூறி இருக்கலாம்.

3. "நேற்று அன்னம், தன் துணையோடு ஆடுவதனைக் கண்டு அதனையும் நோக்கி என்னையும் காமக் குறிப்பேடு நோக்கியவாறு ஒருவர் நின்றார். நேற்று அவ்வாறு நின்ற அவர் பொன்னை ஒத்த நம் சுணங்கை விட்டுப் பிரிந்து போகமாட்டார்".

இப்பாட-லும் ஒரு பழைய நிகழ்ச்சியை உட்கொண்டு மாதவி பாடுகின்றாள். சுணங்கை விட்டுப் பிரியவில்லை என்றால் பசலை தோன்றாது. மேலும், சுணங்கும், அதன் அழகும் அவர்க்குப் பிடித்த ஒன்று. இப்பேச்சைப் பார்த்தால் பொழுது கண்டு ஆற்றாது

பாடியபோது இருந்த அவநம்பிக்கை, இப்பொழுது நம்பிக்கையாக மாறியிருக்கிறது என்று அறியலாம்.

## கழிபடர் கிளவி:

அடுத்து வரும் துறை, இந்த நம்பிக்கை நிலைபெறவில்லை என்பதை எடுத்துக்காட்டும். இப்பாட-ன் முடிவில், கோவலன் முகத்தில் ஏதாவது மாற்றம் தெரிகிறதா என்று பார்த்திருப்பாள். அங்கு எந்த மாற்றமும் தோன்றவில்லை. இடையில் அவள் கொண்ட நம்பிக்கை, அவநம்பிக்கை ஆகிறது. அந்தத் துறை, காமமிக்க கழிபடர் கிளவி, எல்லை கடந்த காமத்தால் விளையும் அளவிறந்த துயரை வெளிப்படுத்தும் சொல் என்பதாகும்.

## குருகு - வயந்தமாலை வாராதே:

"குருகே வாராதே எனம் கான-டத்தே வாராதே. குருகே வாராதே. எம் கான-டத்தே வாராதே. அலை உடைந்து நீர்த் திவலைகளாகச் சிதறும் சேர்ப்பனுக்கு என்னை வருத்தும் இந்நோயை எடுத்துக் கூறாத குருகே வாராதே எம் கான-டத்தும் வாராதே". தனக்கும் கோவலனுக்கும் உள்ள உறவை நன்குணர்ந்த குருகே உண்மையே உணர்த்திக் கோவலன் மனம் மாறச் செய்யவில்லை என்ற எரிச்சல் இங்குப் பளிச்சிடுகின்றது.

**"அடையல் குருகே அடையல் எம் கானல்"**

இங்குக்குருகுக்கு உணர்த்துவது போலக் கூட இருந்த வயந்தமாலைக்கும் ஓர் எச்சரிக்கையை விடுகின்றாள் மாதவி. சேர்ப்பனுக்கு யானுற்ற நோயை எடுத்துக்கூறி எம்பால் சேர்க்கவில்லையென்றால், எம்பால் வாராதே; எம் இல்லத்திற்கு வாராதே என்கின்றாள் மாதவி. வயந்தமாலை இதன் காரணமாக வீட்டி-ருந்து விரட்டப்பட்டிருக்க வேண்டும்,

ஒரு முனைப்பட்டு வந்த அலை உடைந்து சிதறுவதனை, ஒருமனப்பட்டு வாழ்ந்த கோவலன் இன்று மனஞ் சிதறி உள்ளான் என்பதாகக் கொள்ளலாம். வயந்தமாலையே நீ தடுத்து மீண்டும் ஒருமனப்படுத்துக என்று வேண்டிக் கொள்கிறாள். அவ்வாறு ஒருமனப்பட்டு வாழ உதவவில்லையேல், அடையல் எம் கானல் (இல்லம்) என்று அச்சுறுத்துகிறாள்.

## நான்காம் பகுதி

## கட்டுரை : இளங்கோ கூற்று:

இப்போதும், கோவலன் மத்தில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. தன் நம்பிக்கை முற்றும் அழிந்துவிட்டதாக அவள் எண்ணுகிறாள். இந்நிலையில் இளங்கோ அடிகள்

தோன்றி, 'கட்டுரை' என்ற பெயரில் ஒரு விளக்கம் தருகிறார். கோவலன் பாடினாற் போலவே, மாதவி தன் காந்தன் போலும் மெல்-ய விரலால் கைக்கிளைக் குரலாக இன்னிசையுடைய செவ்வழிப்பாலை என்ற இசையை முறையாகப் பாடிப் பின் வேறொரு பண்ணைப் பாடின. இதுவரைப் பாடி வந்த பண்ணை மாற்றிச் செவ்வழிப்பாலையை யாழில் இசை எழுப்பி, அதன்பின்னர்த்தான் பாட இருக்கும் வேறொரு பாட-ன் பொருளுக்கு ஏற்ப, வேறொரு பண்ணுக்கு மாறினாள் என்பது இளங்கோ கூற்று. இரங்கல் உணர்ச்சிக்கு ஏற்ப, விளரிப்பாலைக்கு மாறினாள். வேறு பண்ணி-ருந்து செவ்வழிப் பாலைக்கு வந்து அதன் பின்னர் விளரிப்பாலையைப் பாடினாள் என்று கொள்க.

## பொழுது கண்டு கூறுதல்:

'தலைவி மாலைப்பொழுது கண்டு கூறுதல்' அடுத்த துறையாகும். இரங்கி நிற்கும் மாதவி, இரங்கலுக்குரிய மாலைப் பொழுதில், இரங்கலுக்குரியார் பாடும் விளரிப்பாலையை இசைக்கின்றாள். இரங்கலும், அதனால் தோன்றும் அவலமும் அவள் பாடும் பாட-ன் ஒவ்வொரு அசைவிலும், ஏன் ஒவ்வொரு எழுத்திலுமன் பொங்கிப் பரந்து வருகின்றது.

1. "நெய்தல் நில மக்கள் பாடும் விளரிப் பாலையினை நான் பாடும் பொழுது மாலைப்பொழுதே! என்னை மயங்கச் செய்து இளி என்ற நரம்புக்குப் பகை நரம்பான கிளை என்ற நரம்பில் விரல் படுமாறு செய்து இன்னா இசை எழுமாறு செய்திவிட்டாய். இவ்வாறு என் உயிரினும் மேலான இசையில் இன்னா இசை தோன்றுமாறு செய்தது நீதான் என்றால் நீ என் உயிரைப் பறித்துக் கொள்ள வல்லாய். மாலைப்பொழுதே வாழி. என் ஆவியைப் பறித்துக் கொள்".

இதில், மாதவி கொண்ட துயரம், அவளுடைய சுயநினைவையே அழிக்கும் அளவிற்குச் சென்றுள்ளதைப் பார்க்கின்றோம். மாதவிக்கு ஏற்பட்டுள்ள மனக்குழப்பம், நீண்ட காலப் பயிற்சியால் வந்த பழக்கத்தையே மாற்றிவிடுகின்றது. மிகச் சிறந்த பயிற்சியுடைய மாதவியே அபசுரம்படுமாறு பகை நரம்பிலே விரல் வைத்தாள் என்றால் அவளுக்கிருந்த மனக்குழப்பம் எத்தகையது என்பதை நாம் அறியலாம். இத்தகைய மனக்குழப்பித்திற்குக் காரணம் கோவலன் தான். ஆனால் கோவலனை நேரிடையாகக் குற்றஞ்சாட்டாது, மாலை தந்த மயக்கம் தான் இசையில் குற்றம் இழைத்து விட்டது என்று கூறுகின்றாள்.

2. "பிரிந்து செல்லும் காலத்தில், காதலர் அன்போடு குறிய அருள்கனிற் உறுதி மொழிகளாகிய சோலை நிழ-ல் தங்கப்பிரிவினால் ஏற்பட்ட வெப்பத்தை மாற்றி, என்று வருவார் என்ற ஏக்கத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கும் என் உயிரின் புறத்தே, ஏ மாலைக்காலமே நீ முற்றுகை இட்டுள்ளாய். என் உயிரின் புறத்தே

முற்றுகையிட்டுள்ளது நீ தான் என்றால் உள்ளிருக்கும் வ-மையற்ற வேந்தனாகிய என் மதிற்புறத்தே முற்றுகையிட்டிருக்கும் வேந்தனோடு (கோவலன்) மாலையே நீ என்ன உறவுடையை?”

பிரிவு பெப்பத்தைத் தணித்துக் கொள்ளக் காதலரின் பேரருள் நிழல் துணை செய்யும். ஆனால் எனக்கோ நிழல், நெருப்பாக மாறி விட்டது. இந்நிலையில் மாலைப்பொழுதே நீ என் உயிரை முஐற்றுகை இடுகின்றாய் இது நியாயமா? ஒரு பேதைப் பெண்ணை அழிப்பதற்கு உயிரின் புறத்தே ஒருவரும், கோட்டை மதி-ன் புறத்தே ஒருவரும் முற்றுமை இடவேண்டுமா?

ஒரு பக்கம் மாலைப்பொழுது, மறுபக்கம் சினம் கொண்ட கோவலன். இரண்டு பக்கத்தி-ருக்கம் தாககுதல் முற்றுகை. இருபுறத்தும் பெருங்களிறு பற்றி இழுத்த தேய்புரிப் பழங்கயிறு போல அல்லவா என் நிலை ஆகிவிட்டது. கயிறு ஆறுதல் ஒரு தலை; என் உயிர் இறுதலும் ஒரு தலை என்கின்றாள் மாதவி.

3. “துன்பம் தரும் நோய் எல்லையின்றி வளரவும், பகற்பொழுதைச் செய்த ஞாயிறு போய் மறையவும், இவ்வையகம் அச்சத்தால் கண்ணை மூடிக் கொள்ளவும் மருள் மாலையே நீ என்றால், துன்பம் தரும் நோயை மிகுவிப்பவரே என்னை மணந்தவர். ஏ மாலைப் பொழுதே இவ்வுலகமே வறுமையுற்று விட்டது”.

மருள் மாலையில் நான் மட்டும் அஞ்சினேன் அல்லேன் வையகமே அஞ்சிக் கண் புதைத்துக் கொள்கின்றது. அதனால் தான் இந்த உலகமே (காதல் வறுமையுற்று விட்டது என்கிறாள் மாதவி. மாலையின் இயல்பும், மணந்தாரின் இயல்பும் இவ்வாறு இருந்தால் இந்த உலகம் எப்படி உய்யும்? உள்ள முடியாது என்கின்றாள்.

தான் துன்புற்றால் உலகமே துன்பமுறுவதாகவும், தான் மகிழ்நதால் உலகமே மகிழ்வதாகவும் எண்ணிக் கொள்வது மனித இயற்கை. இதன்படியே மாதவி, தானுற்ற காதல் வறுமையை உலகமும் எய்தியதாகக் கூறினாள்.

ஏழ்மைப்பட்டார் இரந்து பின்னிற்றல் இயற்கை. இங்கே மாதவி, கோவலன் தனக்குக் கொடுத்துள்ள அன்பு வறுமையைத் தாங்காதவளாகிக் கோவலனுற்ற காதல் வறுமையைக் களைவாயாக என்று வேண்டுவது இப்பாட-ன் அவாய் நிலைக் கருத்தாகும். வறுமைக்கும் மேலும் ஒரு வறுமையை - அதாவது இரண்டுக்கும் வறுமையை ஏற்றும், மாலையே நின் செயல் தக்கதன்று என்பதன் வாயிலாக, மாலை தந்த துயரமே பெரிதாகும். இந்நிலையில், நின் அன்பு வறுமை தரும் துயரம், மேலும் ஒரு சுமையாக மாறுமேயானால் யான் உயிர் வாழ்தல் எங்ஙனம்? என்பது அவாய் நிலையாகப் பெறும் கருத்தாகும்.

முன்னர், கடலோதமும், குருகும் வயந்தமாலைக்குக் குறியீடாக்கப் பட்டன போல, இப்பாட-ல் வரும் மாலையும் வயந்த மாலைக்குக் குறியீடாக்கப்பட்டுள்ளதனை உற்று நோக்கி அறியலாம்.

**'மாலை நீ ஆயின் மணந்தார் அவராயின்**

**ஞாலமோ நல்கூர்ந்தது'**

எனவரும் மூன்றாம் பாட-ன் அடிகள் இக்கருத்தை நன்றாகத் துலக்குகின்றன. மாலை என்ற சொல்லுக்கு மயக்கம் என்னும் பொருள் உண்டு. நீ மயக்குத-ல் வல்லை. மணந்தவரோ எளியவர். இவ்வாறாயின் ஞாலம் நல்கூர்தல் ஒருதலை என்கின்றாள் மாதவி. மாலை நீ என்றால் - மணந்தார் அவர் என்றால் என்னும்போதே மாலையின் வன்மையும், மணந்தாரின் மென்மையும் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டப்பட்டு விடுகின்றன.

மாதவி பாடும் கானல் வரிப் பாடல்களில் மூன்று துறைகள் தாம், முன்னிறுத்திப் பாடியவனாகவும், முன்னிலை வாய்பாட்டிலும் அமைந்தவை. ெ பாழுதுகண்டு ஆற்றாளாகிய தலைமைமகள், தோழிக்கு உரைத்தல் என்னும் வாய்பாட்டில் துறையும், இயற்பட மொழிதல் என்னும் துறையும் கூட முன்னிலை வாய்பாட்டில் அமைந்தனவே, முன்னிறுத்திப் பாடியன காமமிக்க கழிபடர் கிளவியும், முகமில் வரியாக வரும் காமமிக்க கிளவியும், தலைவி மாலைப் பொழுது கண்டு கூறுதலும் ஆகிய மூன்றுதாம் முன்னிறுத்தி பாடியனவாகவும், முன்னிலை வாய்ப்பாட்டில் அமைந்தனவாகவும் உள்ளன. முதல் துறையில் கடலோதம் முன்னிறுத்தப்பட்டு, வாய்ந்த மாலையைக் குறிக்கின்றது. இரண்டாவதில் குருகு முன்னிறுத்தப்பட்டு, வயந்தமாலையைக் குறிக்கின்றது. மூன்றாவதில் மாலை நிறுத்தப்பட்டு, வயந்தமாலையைக் குறிக்கின்றது. ஆகக் கடலோதம், குருகு மாலை ஆகியன முன்னிறுத்திப் பாடிய பாடல்கள் வயந்தமாலையை உணர்த்தும் குறியீடகளாக கூறப்படுகின்றன.

துயர்க்கட-ல் மூழ்கிக் கொண்டிருக்கும் தன்னைக் காப்பாற்றத் துரும்பனையை அன்பையேனும் வெளிப்படுத்தமாட்டானா என்று அவன் முகத்தையே முற்றுகையிட்டிருந்த அவள் கண்களில் ஒளி குன்றியதேன்றி உருப்படியான பலன் ஒன்றும் கிட்டவில்லை. எல்லாம் முடிந்து விட்டது. இனி முடிவதற்கு ஒன்றுமில்லை என்ற நிலையில் திடீரென்று ஒரு மின்னல் கீற்று அவன் மனத்தில் தோன்றுகிறது.

ஆற்று வரிக்குப் பின், கோவலன் பாடிய முதல் பாடல் நினைவில் மோதுகின்றது. "கரியமலர் நெடுங்கண் காரிகை முன் கடல் தெய்வம் காட்டி அரிய சூன் பொய்த்தார் அறனிலர்" என்ற பாடல்தான் அது தானும் அவனும் புகார்க் கடற்கரையில் சந்தித்தபோது, இப்படித்தானே அவன் சூளுரைத்தான். கடல் தெய்வத்தைக் காட்டி அல்லவா உறுதி மொழி

கூறினான். இன்று இம்மொழிகள் உறுதிமொழிகள் ஆயின. சூளுரை பொய்த்தால், கடல் தெய்வம் அவனுக்குத் தண்டனை வழங்கிடுமோ? என்று அஞ்சுகின்றாள்.

அல்லல் கொடுத்தவன் அவதியுறட்டும் என்று எண்ணும் கீழ்மை இயல்பு மாதவியிடம் இல்லை. அவள் உள்ளம் பேருள்ளம்; "நம்மை மறந்தாரை நாம் மறக்கமாட்டோம்" என்று கூறும் வானளாவிய உயர்ச்சியை உடையது. எனவே, மாழ்கி நின்ற தன் மனத்தைத் தேற்றிக் கொண்டு சமநிலைக்கு வந்து விடுகின்றாள்.

## ஐந்தாம் பகுதி

அந்தச் சமநிலை உள்ளம், "வரைவு நீட்டித்த இடத்துத் தலைமகள் நிறைப்புறத்தானாகத் தோழி கூறுதல்" என்று துறையமைந்த பாடலைப் பாடுகின்றது. "தீயைத் துழாவிக் கொண்டு வந்த துன்பம் தரும் இம்மாலைப் பொழுதில் பூக்கள் கமழும், கான-ல் நாம் ஆருமறியாது ஏற்றுக் கொண்ட நன்மை தரும் சொற்களால் அமைந்த, என் தலைவன் (கோவலன்) கூறிய பொய்ச்சூளுரையைப் பொறுத்துக் கொள் என்று கரிய கடல் தெய்வமே நின் மலரடிகளை வணங்குகின்றோம்". தலைமகன் சிறைப்புறமாக நிற்கின்றாளன். அகத்தே இருந்த கோவலன் புறமாகி நிற்கின்றான். இருவருக்கும் இடையே நின்று பிரிப்பது (சிறை) வே-. அந்த வே- வயந்தமாலை என்ற வே-தான். மாதவிக்கும், கோவலனுக்கும் இடையே வயந்தமாலை தடுத்து நிற்கின்றாள். அதனால் தான், அவன் புறத்தானாகி விட்டான் என்பதை இத்துறையைத் தேர்ந்தொடுத்துப் பாடுவதில் மாதவி வெளிப்படுத்துகிறாள். அவள் புறமாகிப் போனாலும், தான் புறமாகிப் போகவில்லை என்பதைத் தெளிவாகக் கூறுகிறாள்.

என் தலைவர் கூறிய பொய்ச்சூளைப் பொறுத்துக் கொள்க என்று கூறியதும், அச்சொற்கள் கோவலன் முகத்தில் அறைந்தாற்போல இருந்திருக்க வேண்டும். தன்னலம் கருதாமல் கோவலன் நலத்தையே பெரிதும் கருதி, மாதவி கடல் தெய்வத்திடம் வேண்டுவது அவன் மனத்தை நெகிழச் செய்திருக்க வேண்டும் என்றாலும் தன் கருத்துக்கு எதிர் கருத்து மொழிகின்றாளே என்ற எரிச்சல் அவனை விட்டு அகலவில்லை. யாராயினும், தன்னோடு உடன்பட்டு வருவதைத்தான் அவன் விரும்புவான். இதனைத்தான் கோவலன் வாய்பாடு என்கிறோம். விருப்பு: தடை வந்தால், வெறுப்பு.

## கானல் வரியின் புறவாயி-ல்

### 1. கோவலன் கால்களைத் தளைத்த காதல் பாடல்கள்:

மாதவியின் நெஞ்சுருக்கும் பாடல்கள் கோவலனைப் பெரிதும் தளரச் செய்தன. என் விருப்பத்திற்கு எதிர்ப்பு என்பதை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மறுப்பை

மட்டும் கோவலன் வெளிப்படுத்தியிருந்தால், எப்பொழுதோ அவன் இந்த இடம் விட்டுப் போயிருப்பான். கல்லும் கரைய அவள் பாடிய காதல் பாடல்கள் தாம் ஓடும் கால்களைச் சிறிதே தளைத்துள்ளன.

## 2. மாதவியின் கற்பு மேம்பாடு உணர்ந்தவன் கோவலன்:

கோவலன் மாதவியை வெறுத்துப் பேசுவது உண்மைதான்; பொய்த்தி, உண்மை பேசாதவள் என்றெல்லாம் ஏசுகிறான். ஆனால் அவன் மாதவியைக் கற்பி- என்று பேசியதில்லை. "கானல் வரி யான்பாடத்தான் ஒன்றின் மேல் மனம் வைத்து மாயப்பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினாள்" என்று தான் பேசுகின்றானோ தவிர ஒருவன் மேல் மனம் வைத்து பாடினாள் என்று கூறவில்லை. கோலன், பழி சொல்ல அஞ்சாதவன் தான். ஆனாலும், 'தான் ஒருவன் மேல் மனம் வைத்துப் பாடினாள்' என்று சொல்ல அவனுக்கே துணிவில்லை என்றால் மாதவியின் கற்பு மேம்பாடு எத்தகையது என்பதை அறியலாம்.

## கோவலன் கானல் வரி பாடினான்:

'கானல் வரி யான் பாட' என்று கோவலன், தான் பாடியது கானல் வரித்துறைப் பாடல்களேயன்றி வேறொன்றும் இல்லை என்று பேசுகின்றான். உறுதியாக இது உண்மையில்லை. இவன் மனதில் கள்ளம் குடி கொண்டிருந்தது என்பதை ஆற்றுவரிப் பாடல் தெளிவாகக் காட்டுகிறது. பின்னர், அவன் பாடிய எல்லாப் பாடங்களிலும் உள்ளுறைப் பொருளாக அவன் கள்ளம் வெளிப்படவே செய்தது என்றாலும் அவன் கூறுகின்றான் 'கானல் வரி யான் பாட' என்று.

## 3. மனம் வைத்த அந்த ஒன்று வயந்தமாலையே:

இனித் தான் ஒன்றின் மேல் வைத்துப் பாடினாள் என்கிறானோ கோவலன், அந்த ஒன்று எது? அந்த ஒன்று, கோவலன் வெளிப்படுத்திய வயந்தமாலைமேற் கொண்ட ஆசைக்கு அவள் மறுப்பு உரைத்தது தான். தான் ஒன்றின்மேல் மனம் வைத்துப் பாடாதபொழுது இவள் ஏன் தான் ஒன்றின்மேல் மனம் வைத்துப் பாட வேண்டும்? இல்லாத ஒன்றை இவள் இட்டுக்கட்டிப்பாடுவதனால் "இவள் மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாளே" என்கிறான் கோவலன்.

## 4. ஊடிப் பாடியவள் உருகிப்பாடுகிறாளே:

தன்னுடைய உள்ளக்குறிப்பை மறுத்துப் பேசியதால், அவபன் அவள் மீது சினம் கொண்டது உண்மைதான். ஆனால், அவள் பாடிய மாலைக் காலைப் பாடல்களைக் கேட்டபின் அவனுடைய சினம் ஓரளவு குறைந்து போய்விட்டது. தன்னுடைய காதல்

குறிப்பைக் கண்டு ஊடிப்பாடியவள், இப்போது உருகிப் பாடுகின்றாறே இது உண்மை தானா? என்று கண்டறிய ஒரு சோதனையை மேற்கொள்கின்றான் கோவலன்.

## 5. எழுதும் என்றவுடன் எழவில்லை மாதவி:

வெண்கால் அமளிமிசை அமைதியாக அமர்ந்திருந்த கோவலன் திடீரென்று, எழுந்து " பொழுது ஈங்குக் கழிந்தது ஆத-ன் எழுதும்" என்றுளூ கூறுகின்றான். "காலம் கடந்து விட்டது; ஆகவே இல்லம் ஏகுவோம் வா என்று அவன் அழைத்ததை மாதவி உடனே பற்றிக்கொண்டு எழுந்து செல்லவில்லை. அவள் எழுந்து சென்றிருந்தால் சிலப்பதிகாரத்தைக் கானல்வரியோடு முடிந்திருக்கும். உண்மையில் யாழிசை மேல் வைத்து ஊழ்வினை உருத்து வரவில்லை. அவள் உடன் எழாமை தான் கோவலன் பிரிந்து செல்லக் காரணம் ஆயிற்று. அவனுக்குப் பெருஞ்சினத்தையும் உண்டாக்குகின்றது. இந்தப் பெருஞ்சினத்தினால் தான் மாதவியைத் துறந்து செல்கின்றான். மாதவியின் முடங்கலை மறுத்து மனம்போனபடி எல்லாம் பேசுகின்றான். கண்ணிகியிடம், மாதவியைக் கண்டபோது பேசுவதெல்லாமல் அவள் ஒருத்தியே தன்னுடைய பெஞ்செல்வப் பேரழிவிற்குக் காரணம் என்று நாக்கூசாது வசைபாடுகின்றான். மாதவி தன்னுடன் எழுந்து வரவேண்டும் என்பது கோவலன் விருப்பம். அவ்விருப்பம் மாதவியால் மறுக்கப்படுகின்றது. விருப்பு அதற்குத் தடை வந்தால் ‘வெறுப்பு’ என்பது கோவலனின் இயல்பு அன்றோ?

## 6. ஊழ்வினையால் பிரித்தான் என்னும் பழிபோடும் உத்தி:

மாதவி மேல் எழுந்த ஊடலால் கோவலன் மாதவியைப் பிரிந்தான் என்றால், ஒரு பெண்ணின் ஊடலைத் தணித்து அவளைக் கூட வேண்டும் என்ற அன்புணர்ச்சி சிறிதும் இல்லாதவன் என்ற குற்றச் சாட்டிற்கு ஆளாக நேரும். கோவலன் மேல் எழுந்த ஊடலால் தான் அவனுடன் எழாது மாதவி கோவலனைப் பிரிந்தாள் என்றால் ஊடும் உரிமையைக் கோவலனுக்கு விட்டுக் கொடுத்துவிட்ட மாதவி - அவனோடு ஊடுவதில்லை என்பதில் உறுதியாக இருந்த மாதவி, இன்று ஊடியது ஏன்? இந்த அறிவுக் குறைபாடு அவளுக்கு வரலாமா? என்ற கேள்வியும், உணர்ச்சி வயப்பட்டு அறிவை இழப்பவள் என்ற பழியும் அவளுக்கு வரும், கோவலன் இறப்பும், மாதவி துறவும் நமக்கு மிகுந்த வருத்தத்தைத் தர வேண்டுமானால் அவர்கள் இக்குறைகள் இல்லாதவர்களாக இருக்க வேண்டும். குற்றம் புரிந்தான் துன்புறும்போது நமக்குப் பிரிவு ஏற்படுவதில்லை. குற்றம் செய்யாதவர் துன்புறும்போது தான் பரிவு ஏற்படும். இதனால்தான் கோவலன், மாதவி குறைபாட்டை மறைத்து ஊடலால் பிரிந்ததை ஊழ்வினையால் பிரிந்ததாகக் காட்டித் தலைமக்கள் சுமக்க வேண்டிய பழியை ஊழ்வினை சுமக்குமாறு செய்கின்றார் இளற்கோவடிகள், இளங்கோ கையாளும் மிகச்சிறந்த உத்திகளில் இதுவும் ஒன்று.

## 7. மாதவி கண்ணிகி வேறுபாடு:

மாதவி உடன் எழாமையே கோவலன் பிரிவிற்குக் காரணம் என்பதை மற்றொரு ஆதாரத்துடன் பார்க்கலாம். மாதவி உடன் ஏழாமை அவன் நெஞ்சத்தில் ஒரு நீங்காத வடுவாகவே இருக்கின்றது. 'தன் தீது இலள், என் தீது' என்று கோசிகமணியிடம் கூறிய பிறகும் கூட அந்த வடு மறையவில்லை என்பதை ஒரு செய்தி நமக்கு எடுத்துரைக்கின்றது. மதுரையில் மாதவியின் வீட்டில் தங்கியிருந்த போது, கோவலன் கண்ணகியை நோக்கிக் கழிந்ததற்கு இரங்குகிறான். "எழுகென எழுந்தாய் என் செய்தனை" என்று வியக்கின்றான், எழுக எனக் சொன்னபோது மாதவி எழவில்லை. ஆனால் கண்ணகியோ, 'ஏடலர் கோதாய் எழுக' என்றவுடன் எழுந்து வந்துவிட்டாள். மாதவியை வீட்டுக்குத் தான் அழைத்தான். கண்ணகியை வேற்று நாட்டுக்கு அழைத்தான். மாதவி மறுத்ததைக் கண்ணகி உடனே உடன்பட்டு எழுந்து வந்தது அவன் உள்ளத்தில் நெகிழ்ச்சியை மட்டும் உண்டாக்கவில்லை. மாதவி உடன் எழாத நிகழ்ச்சி, கோவலன் மனதில் வடுவாகவும் பதியுமாறு செய்தது.

## 8. மாதவி வயந்தமாலையை அனுப்பியது ஏன்? வயந்தமாலையால்தான் அழைத்து வர முடியும்:

வயந்தமாலையைக் கோவலன் விரும்பியதை மாதவி வெறுத்தாள் என்றால், கோவலனை அழைத்துவர மாதவி, வயந்தமாலையை ஏன் அனுப்ப வேண்டும்? இன்று நிகழ்ந்த பிரிவு ஒருத்தியை (வயந்தமாலையை) அவன் விரும்பியதால் எழுந்த ஊடலால் தோன்றிய பிரிவு இன்றைய பிரிவிற்கான காரணம் கோவலனைச் சினத்தின் உச்சிக்கே கொண்டு செல்லும் இயல்பினது. புணர்ச்சியில் மிகுந்த நாட்டமுள்ள கோவலன் இரண்டு நாள் வராமையே அவன் சினத்தின் எல்லையையும், மனத்தின் உறுதியையும் தெளிவாகக் காட்டிவிட்டன. இந்நிலையில் அவனை, அவனால் விரும்பப்பட்ட வயந்தமாலையால் தான் அழைத்து வரமுடியும் என்று எண்ணிகிறாள் மாதவி.

## 9. வயந்தமாலை மறைந்திருந்தாள்:

கோவலன் பிரிந்து சென்ற பிறகு வயந்தமாலை மாதவியுடன் தான் வந்தாள். ஆனாலும் வீட்டிற்கு வந்த பிறகு மாதவி வயந்தமாலை உறவு அவ்வளவு நன்றாக இல்லை. கோவலன் பிரிவால் வாடிய மாதவிக்கு ஆறுதல் வறி வயந்தமாலை ஒரு சொல் கூடக் கூறவில்லை. தாழை மட-ல் பித்திகை கொழு முகையைச் செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து மாதவி கோவலனுக்கு மடல் எழுதுகின்றாள். அப்பொழுது வயந்தமாலை அங்கில்லை. பிறகு மாதவி, 'வயந்தமாலை வருகெனக் கூஉய்' ஆள்விட்டுக் கூப்பிடு முடங்கலைக் கொடுத்தனுப்புகின்றான். இங்கே, வயந்தமாலை மறைவாக, மாதவியின் கண்படா

மறைந்திருந்த காரணம் என்ன? இதுவும் ஏதோ நடந்திருப்பதனை மறைவாகச் சுட்டிக் காட்டுகின்றது.

## 10. வயந்தமாலையின் வாட்டத்திற்கு முக்காரணம்:

முடங்கலை எடுத்துச் சென்ற வயந்தமாலை கோவலனிடம் கொடுக்கிறாள். அவன் ஒரு வசைபுராணம் பாடி முடிக்கின்றான். வயந்தமாலை, வாய் திறக்கவே இல்லை. முடங்கலையும் கோவலன் மறுத்து விடுகின்றான். அப்பொது "வாடிய உள்ளத்து வயந்தமாலை" என்ற நிலையில் காணப்படுகின்றான். அவன் வாட்டம் எதனால் விளைந்தது.

1. மாதவியின் விருப்பத்தை நிறைவேற்றக் கோவலன் அழைத்து வர முடியவில்லையே என்பது
2. மாதவிக்குத் தவறு இழைத்துவிட்டோமே என்பது
3. தனக்கும் பயனின்றி, மாதவிக்கும் பயனின்றிக் கோவலன் போய்விட்டானே என்பது. இம்மூன்றும் காரணங்களால் வாட்டம் தோன்றியிருக்கலாம்.

## 11. மடலை மறுத்த செய்தி கூறினாள் வயந்தமாலை:

வயந்தமாலை - கோவலன் உறவை மாதவி ஒப்புக்கொண்ட பின்னரும், கோவலன் மாதவி வீட்டிற்கு வராமை ஓர் ஐயத்தைத் தோற்றுவித்திருக்கக் கூடும். வயந்தமாலை, மாதவியின் முடங்கலைக் கோவலனிடம் கொண்டு சென்ற போது, அவர்களுக்குள் என்ன உரையாடல் நடந்தது என்பது மாதவிக்குத் தெரியாது. தனக்குத் துணையாகப் பேசினாளா? பகையாகப் பேசினாளா? என்பதை எல்லாம் அறியமாட்டாள். மாதவியின் நம்பிக்கை, வயந்தமாலை சென்று அழைத்தால் கோவலன் வந்து விடுவான் என்பது. ஆனால் வயந்த மாலையோ வெறுங்கையோடு வருகிறாள். கோவலன் முடங்கலை மறுத்த செய்தியைக் கூறுகின்றாள் வயந்தமாலை.

## 12.தனிக் குடித்தனம் நடத்தத் திட்டமோ என்ற ஐயம்:

கோவலனைக் கண்டு பேசித் 'தனிக்குடித்தனம்' நடத்த வழி செய்து விட்டாள் போலும், அதனால் தான் வயந்தமாலையிடம் விருப்பமிருந்தும் கோவலன் வரவில்லை என்று மாதவி எண்ணியிருக்கலாம். இந்த அனுமானத்திற்கு இசைவானதாக, வனசாரிணியின் கூற்று அமைகிறது.

**'வாசமாலையின் எழுதிய மாற்றம்**
**தீதிலேன், பிழைமொழி செப்பினை ஆத-ன்**
**கோவலன் செய்தான் கொடுமை'**

‘தீதிலேன், பிழைமொழி செப்பினாய்’ என்பதி-ருந்தே, வயந்தமாலை தனக்கு இரண்டகம் செய்கின்றாள் என எண்ணிக் கொண்டிருக்கிறாள் என்பது தெரிகிறது.

## 13.வயந்தமாலை பிழைமொழி செப்பினாளாம்:

யான் தீது இலேன்; நீதான் திரித்துப் பேசிக் கோவலன் மனத்தைக் கெடுத்துவிட்டாய் என்று வயந்தமாலையிடம் கூறியதோடு, மாதவி அமைந்து விடவில்லை. கோவலன் செய்த கொடுமைக்கெல்லாம் நீயே காரணம் என்று வயந்தமாலை மீது குற்றமும் சுமத்துகிறாள். கணிகையார், வாழ்க்கை கடைப்பட்ட வாழ்க்கை என்று கூறிக் கண்ணீர் சொரிந்து, அணிந்திருந்த முத்துமாலையை அறுத்து வீசி, வயந்தமாலை மீது சினம் கொண்டு வெளியேற்றிவிட்டாள்.

## 14.சில தடைகளும் விடைகளும்

### கோவலன் வயந்தமாலையுடன் வாழாதது ஏன்?

மாதவியைப் பிரிந்த கோவலன், வயந்தமாலையுடன் வாழாது, கண்ணகியை அழைத்துக் கொண்டு மதுரை சென்றது ஏன்? எனவே, கோவலனுக்கு வயந்தமாலையிடம் மயக்கம் இல்லை என்பர் சிலர்.

வயந்தமாலையோடு, மாதவி வீட்டில் வாழ்வது என்பது வேறு; தனியே வாழ்வது வேறு, வயந்தமாலையோடு ‘தனிக்குடித்தனம்’ நடத்த வேண்டுமானால் அதற்குப் பொருள் தேவை. அந்தப் பொருள் கோவலனிடம் இல்லை. மாதவியை விட்டுக் கண்ணகியிடம் வந்தபின், அவன் வாழ்க்கை இறுதி காலத்தில், மாதவியின் பொருள் வளத்தில்தான் வாழ்ந்திருக்கிறான். ‘வயந்தமாலையுடன் நிறைவேற்றியவை’ என்று மாதவியிடம் கானல் வரிப் பாடல்களில் இதனையே வற்புறுத்தினான். பொருளிலா வறுமையாளனுக்கு இன்பநுகர்ச்சி இப்படித்தான் அமையும். எனவே, பொருள் இல்லாமையால் தான் வயந்தமாலையோடு வாழ்வு நடத்தாமல் போகின்றானே தவிர, ஆசை இல்லாமல் இல்லை.

### மறைவான பாத்திற்குத் தனியிடம் ஏன்?

இளங்கோவடிகள் வயந்தமாலை பாத்திரத்தை மறைவான நிகழ்ச்சிகளால் அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சுட்டிக் காட்டுகிறார். அவள் நேரடியாகப் பேசுவது காப்பியத்தில் இல்லை; பிறரால் பேசப்படுவது மிகு. இருந்தும் கதை அமைப்பில் அவளுக்கு ஒரு தனியிடம் தருகிறார் இளங்கோ அடிகள். வாய் திறந்து பேசாத ஒருத்திக்குக் காப்பியத்தில் இவ்வளவு இடம் தருவது ஏன்?

வனசாரணி வடிவு, கதை வளர்ச்சிக்கும் தேவையில்லை. கோவலனின் பெருமைக்கும் துணை செய்யாது என்றறிந்த பின்னும் இளங்கோவடிகள் வனசாரணி

மூலமாக வயந்தமாலையைக் கொண்டு வருவதற்கு ஏதேனும் நோக்கம் இருக்க வேண்டும். கோவலனுக்கும், வயந்தமாலைக்கும் தொடர்பிருந்தது என்பதை வெளிப்படுத்த அவள் கரந்து நிற்கிறாள் என்பதைக் காட்டத்தான் வனசாரணி, தன் உருவம் கரந்து, வயந்தமாலை உருவில் வருவதாக இளங்கோவடிகள் காட்டுகின்றார் போலும்.

கோவலனின் கானல்வரிப்பாட-ல் ஒரு கெண் சுட்டிக் காட்டப்படுகிறாள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அவள் கண்ணகியோ, மாதவியோ இல்லை. யாரோ ஒருத்தி என்பதைவிட இளங்கோவடிகள் இலைமறையாகவும், இனங்காட்டியும் வெளிப்படுத்தும் வயந்த மாலைதான் கோவலனின் கானல் வரிப்பாட்டுள் மறைந்திருப்பவள் என்று கூறுவதில் எத்தவறு இல்லை. நமக்கு ஐயம் தருகின்ற காரணங்களைப் பார்க்கலாம்.

1. கதை வளர்ச்சிக்குத் தேவையற்ற வனசாரணியை வயந்தமாலை வடிவில் கொண்டு வருதல்.
2. ‘நயந்த காத-ன்’ நல்குவன் இவன் என வனசாரணி எண்ணுதல்
3. ‘தீதிலேன்’; ‘பிழைமொழிபெயர்ப்பினாய்’ என்று மாதவி வயந்தமாலையைக் கடிந்து கொள்ளுதல்
4. முத்துமாலையை அறுத்தெறிந்து, மாதவி வெறுப்புக்கூடும்.
5. சிறமுற்ற மாதவி, வயந்தமாலையை வீட்டை விட்டுத் துரத்தல்
6. மாதவியின் முடங்கல் கொண்டு சென்ற வயந்தமாலை வாய் திறந்து பேசாமை
7. மதுரகீதம் பாடிய மாதவி மயங்கிய காலத்தில் எல்லாம் வயந்தமாலை தலைமறைவாக இருத்தல்.

இக்காரணங்களால், கோவலன் மாதவி பிரிவிற்கு, வயந்தமாலை காரணம் என்பதும், இப்பிரிவிற்குக் களமாக அமைந்த கானல் வரிப்பாடலுக்குள் மறைந்து நிற்பவளும் அவளே என்பதும் அறியாகும்.

கோவலன் பலவீனம், அவனை வயந்தமாலையின் விருப்பத்தில் தள்ளியது. வயந்தமாலையிடம் கொண்ட விருப்பத்திற்கு மாதவி தடை எழுப்பினாள். தடை வந்தால், தாங்குவோர் மீது வெறுப்புக் கொள்ளும் கோவலனின் இயல்பு மாதவியையும், கோவலனையும் பிரித்தது. இதுதான் உண்மை. கானல்வரிப்பாடல் பிரிக்கவில்லை. கானல்வரிப்பாடல், பிரிவுக்கு ஒரு துணைக்காரணமேயன்றி, முதற்காரணம் அன்று. முதற்காரணம், ‘விருப்பு-தடை வந்தால் வெறுப்பு’ என்று கோவலனின் குண வாய்பாடு தான்.

## பயிற்சி வினாக்கள்:

1. ‘கோவலன் பரத்தமை’ எனும் தலைப்பில் ஆசிரியர் பழனி அவர்கள் கூறுவன யாவை?

2. "கோவலனும், வயந்தமாலையும்" - குறிப்பு வரைக.
3. 'உடலும், கோவலனும்' - இது பற்றி ஆசிரியர் வழங்கும் கருத்துக்களை தொகுத்து எழுதுக.
4. "பழம்பிறப்புச் செய்தி" குறித்து ஆசிரியர் கூறுவது யாது?
5. "கோவலன் இயல்பு" எனும் தலைப்பில் ஆசிரியர் பழனி கூறும் புதுமைச் செய்திகளைத் தொகுத்து வரைக.
6. 'கோவலன் பாடிய கானற்பாணி' - திறனாய்வு செய்க.
7. "நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்" பொருள் விளக்கம் தருக.
8. "மாதவி பாடிய கானல் வரி" - பற்றி ஆசிரியர் கூறும் கருத்துக்களைத் தொகுக்க.
9. கோவலன் மாதவிக்கு வைத்த சோதனை - யாது?
10. மாதவி வயந்தமாலையை அனுப்பியது ஏன்? காரணத்தை விளக்குக.
11. 'வயந்தமாலை இரண்டகம் செய்தவளே' - என்று ஆசிரியர் கூறக்காரணம் யாது?
12. பெருஞ்சித்தரனார் பள்ளிப்பறவைகள் குறிப்பிடும் திருக்குறளின் சிறப்புகளை குறிப்பிடுக.
13. குழந்தைகளின் பெருமைகளாக பள்ளிப்பறவைகள் குறிப்பிடுவன யாவை?

## B.Lit I Year Examination

## மாதிரி வினாத்தாள்

## தாள் - 4 இக்கால இலக்கியம்

**நேரம்: 3.00 மணி** **மதிப்பெண்கள் - 100**

### பகுதி - அ ( 5x5 = 25 மதிப்பெண்கள்)

**எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.**

1. **பாரதியார் குயில்பாட்டில் இடம்பெறும் வேதாந்த கருத்துக்களை தொகுத்து எழுதுக.**
2. **குடும்ப விளக்கில் இடம் பெறும் விருந்தோம்பல் பண்பினை எடுத்துரைக்க.**
3. **சுஜாதையின் கதை நிகழ்வினை ஆசிய ஜோதி வழி விரித்துரைக்க.**
4. **வேதநாயகம் பிள்ளையின் பிராதாப முதலியார் சரித்திரத்தின் கதைக் கருவினை எழுதுக.**
5. **வேலைக்கரி நாடகத்தின் பெண் கதாபாத்திரத்தினை எழுதுக.**
6. **ஒத்திகை நாடக அமைப்பு - கருத்துரைக்க.**

7. பெருஞ்சித்திரனார் சமுதாய மறுமலர்ச்சி குறித்து பள்ளிப்பறவையில் இடம் பெறுபவனற்றை குறிப்பிடுக.
8. கானல் வரியா? கண்ணீர் வரியா? இடம் பெறும் பழம் பிறப்பு செய்திகளை எழுதுக.

## பகுதி - ஆ ( 5x15 = 75 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு கட்டுரை வடிவில் விடை தருக:

1. பாரதிதாசன் குடும்ப விளக்கில் இடம்பெறும் கதாபாத்திரங்கள் மூலம் வெளிப்படும் செய்திகளை கட்டுரைக்க.
2. கவிமணியின் ஆசிய ஜோதியின் புத்தர் அவதார நிகழ்வினை தொகுத்துரைக்க.
3. பிரதாப முதலியார் சரித்திரத்தில் இடம் பெறும் பெண்ணடிமை குறித்த கருத்துக்களை விவரிக்க.
4. ஜானகிராமனின் அம்மா வந்தாள் புலப்படுத்தும் பாத்திரப்படைப்புகளை விவரிக்க.
5. புதுமைப்பித்தனின் கதைகளில் நையாண்டி அமைவதினை விவரி.
6. கி.ராஜநாராயணின் கதை கருவின் வகைகளை விளக்குக.
7. சிற்பி ஆதிரையின் நாடகத்தினை ஆராய்க.
8. பெருஞ்சித்தரனாரின் சொல்லாற்றல் திறம் குறித்து கட்டுரை வரைக.

**Prepared by**
**Dr. I. SAHAYAMARY**
Associate Proessor, Department of Tamil
Rani Anna Government College for Women, Tirunelveli – 627 008.